துறையின் வெளியீடு

விலை ரூ.10/-






# தமிழரசு

செய்தி-மக்கள்தொடர்புத் துறையின் வெளியீடு

திருவள்ளுவர் ஆண்டு 2039

ஆனி - ஆடி / ஜூலை 2008

மலர் : 40 இதழ் : 1

**ஆசிரியர் குழு**

ஆசிரியர் மற்றும் வெளியிடுபவர் :

முனைவர் **ஆ.சி.மோகன்தாஸ்,** இ.ஆ.ப.,
இயக்குநர் மற்றும்
அலுவலால் அரசு கூடுதல் செயலாளர்
செய்தி-மக்கள் தொடர்புததுறை

நிருவாக ஆசிரியர்

**துரை. தாமரைச்செல்வம்**
துணை இயக்குநர் (வெளியீடுகள்)

முதன்மை பொறுப்பாசிரியர்

**மு.ஸ்ரீநாகேஷ்**
உதவி இயக்குநர்

பொறுப்பாசிரியர்களான
செய்தி-மக்கள் தொடர்பு அலுவலர்கள்

**க. குமாரவேலு**
**டி.ஆர். ஜெயஸ்ரீ**
**ஆர்.சேகர்**

உதவி ஆசிரியர்கள்

**க. இராஜராஜேஸ்வரி**
**இரா. சுரேஷ்**
**வீ.இரா. நவநீதகிருஷ்ணகுமார்**
**இரா.இளவரசி**

நிருபர்கள்

**கோ. சண்முகம்**
**மாய குமரேசன்**

இதழ் உதவியாளர்கள்

**தி.பெரியார் சாக்ரடீசு**
**ஜெ. ஜெயசிம்ஹன்**

புகைப்படக்காரர்

**வி.இராதாகிருஷ்ணன்**

கணினி வடிவமைப்பு

**அ. மதன்,** உதவி ஒளியச்சுக்கோர்வையாளர்
**ஆர். பாலாஜி**
(ஒப்பந்த தொகுப்பூதிய கணினி இயக்குபவர்)

சென்னை - தமிழரசு அச்சகத்தில்
அச்சிடப்பட்டது.



தமிழரசு அலுவலகம்,
ஓமந்தூரார் அரசினர் தோட்டம்,
அண்ணாசாலை, சென்னை-600 002.
தொலைபேசி : 25368926/25364906
தொலைநகல் : 25364906
மின் அஞ்சல் : tamilarasu@tn.gov.in
இணையதளம் : www.tn.gov.in




**வெள்ளத் தனைய மலர்நீட்டம் மாந்தர்தம்**
**உள்ளத் தனைய துயர்வு**

தண்ணீரின் அளவுதான் அதில் மலர்ந்துள்ள தாமரைத் தண்டின் அளவும் இருக்கும். அதுபோல மனிதரின் வாழ்க்கையின் உயர்வு அவர் மனத்தில் கொண்டுள்ள ஊக்கத்தின் அளவே இருக்கும்.

**கலைஞர்** திருக்குறள் உரையிலிருந்து...

## இந்த இதழில்...

**மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் கலைஞர் மு. கருணாநிதி அவர்களின் நிகழ்ச்சிகள்**


- செம்மொழித் தமிழாய்வு நிறுவனத்தின் மூலம் ஆண்டுதோறும் விருதுகள் ........ 2
- சத்துணவில் முட்டை சாப்பிடாத குழந்தைகளுக்கு வாழைப்பழம் வழங்கப்படும் ........ 12
- மாவட்ட ஆட்சித் தலைவர்கள் மற்றும் காவல்துறை அதிகாரிகள் மாநாடு ........ 15
- இந்தியாவிலேயே முதன்முறையாக தமிழக அரசு ஊழியர்களின் நலனுக்காகப் புதிய மருத்துவக் காப்பீட்டுத் திட்டம் ........ 30
- நீதியைக் காப்பாற்றுகின்ற வகையில் நீதிமன்றங்களுக்குத் துணையிருப்போம் ........ 32
- தூத்துக்குடி துறைமுகத்தின் மூலம் சமூகப் பொருளாதார நிலைகளில் தமிழகம் முன்னேற்றமடையும் ........ 36
- மக்களுக்கும் கேபிள் ஆப்பரேட்டர்களுக்கும் உதவிடும் நல்ல எண்ணத்தோடு அரசு கேபிள் டி.வி. நிறுவனத்தைத் தொடங்கியுள்ளது ........ 38
- ஒரு தாயின் தாலாட்டு (கலைஞரின் சங்கத்தமிழ்) ........ 41
- மாநிலத் திட்டக் குழு தயாரித்துள்ள தமிழகத்திற்கான 11ஆவது ஐந்தாண்டுத் திட்ட அறிக்கையை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் வெளியிட்டார். ... 57


**மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை அமைச்சர்**

**திரு. மு.க.ஸ்டாலின் அவர்களின் நிகழ்ச்சிகள்**


- நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளில் நீடித்த கட்டமைப்பு வசதிகளுக்காக ஜெர்மன் நாட்டு வங்கியின் நிதியுதவி பெற முடிவு........ 64


முதலாம் பக்க அட்டை : மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
**கலைஞர் மு. கருணாநிதி** அவர்கள்.
சென்னை காமராசர் சாலையில் அமைந்துள்ள பாலாறு இல்லத்தில் செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவன அலுவலகத்தைத் திறந்துவைத்தார். (30.6.2008)

2ஆம் பக்க அட்டை : மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
**கலைஞர் மு. கருணாநிதி** அவர்கள்,
சத்துணவில் முட்டை சாப்பிடாத குழந்தைகளுக்கு வாழைப்பழம் அளிக்கும் திட்டத்தைத் தொடங்கிவைத்தார். (15.7.2008)

4ஆம் பக்க அட்டை : மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
**கலைஞர் மு. கருணாநிதி** அவர்கள்,
தமிழகத்திற்குள் நதிகளை இணைக்கும் திட்டத்தின் முதல் கட்டமாக - மாயனூரில் கதவணை கட்டும் பணிகள், காவிரி - கொள்ளிடக் கரைகளைப் பலப்படுத்தும் பணிகளைத் தொடங்கிவைத்தார். (24.6.2008)



# செம்மொழித் தமிழாய்வு நிறுவனத்தின் மூலம் ஆண்டுதோறும் விருதுகள்

**சென்னையில் செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவன அலுவலகத்தை மாண்புமிகு தமிழக முதலமைச்சர் கலைஞர் மு.கருணாநிதி அவர்கள் திறந்து வைத்தார்**

சென்னையில் 30.6.2008 அன்று செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவன அலுவலகத்தைத் திறந்து வைத்து மாண்புமிகு தமிழக முதலமைச்சர் கலைஞர் மு. கருணாநிதி அவர்கள் ஆற்றிய உரை :

உங்கள் அனைவரையும் முதற்கண் இந்த விழாவின் சார்பாக நானும் வரவேற்கின்ற கடமையினை ஆற்ற முன்வந்துள்ளேன். தமிழுக்குச் செம்மொழி என்கின்ற தகுதி உண்டு. அது மறுக்கப்பட்டதாகச் சொல்ல முடியா விட்டாலும், அது அனுமதிக்கப்படாத ஒரு சூழல் இருந்ததை மாற்றி செம்மொழித் தமிழ் என்ற அந்த அடையாளத்தை, அந்தப் பெருமையை, எங்கள் மொழிக்கு உரிய பெருமையை வழங்க வேண்டுமென்று மத்திய அரசோடு வாதிட்டுப் போரிட வேண்டிய அவசியம் இல்லாத காரணத்தால் நம்முடைய வாதத்திலே உள்ள உண்மையை—வாய்மையைப் புரிந்து கொண்ட மத்திய அரசு, குறிப்பாக திருமதி சோனியா காந்தி அம்மையார், மாண்புமிகு இந்தியப் பிரதமர் டாக்டர் மன்மோகன் சிங், மாண்புமிகு மனித வள மேம்பாட்டுத் துறை அமைச்சர் திரு. அர்ஜுன் சிங் ஆகியோர் தந்த ஒப்புதலின் காரணமாக பரிதிமாற்கலைஞருடைய முதல் குரல்—நூற்று ஐம்பது ஆண்டுகளுக்கு முன்பு ஒலித்த அந்தக் குரல் இன்றைக்கு வெற்றி வாகை சூடியிருக்கிறது என்றால் அதற்கான நன்றியினை மத்திய அரசுக்கு நான் தெரிவிக்கக் கடமைப் பட்டிருக்கின்றேன்.

## பரிதிமாற்கலைஞரின் கனவு

பரிதிமாற்கலைஞர் அவர்கள் சூரியநாராயண சாஸ்திரி என்றிருந்த அவருடைய இயற்பெயரை பரிதிமாற்கலைஞர் என்று தனித் தமிழில், தூய தமிழில் மாற்றிக் கொண்டவர். தமிழ்மொழியின்பால் எவ்வளவு ஆர்வமும், அக்கறையும், பற்றும், பாசமும்—தமிழுக்குப் பெருமை சேர்க்க வேண்டும், இருக்கின்ற

228767





பெருமையை இன்னும் உயர்த்திக் காட்ட வேண்டுமென்ற நல்லெண்ணமும் வாய்ந்தவர் என்பதை எளிதில் நாம் புரிந்து கொள்ள முடியும். "தமிழ்மொழியினுடைய வரலாறு" என்கின்ற அவர் எழுதிய அருமையான நூலில் 122, 123ஆம் பக்கங்களில் "தமிழ்மொழியைச் செம்மொழி என்று கூறுவதே பொருத்தமாகும்" என்று அழுத்தந்திருத்தமாகக் குறிப்பிட்டு அதற்குரிய ஆதாரங்களையெல்லாம் அள்ளி வீசியிருக்கின்றார் அந்த நூல் முழுவதும்.

அவருடைய கனவை நனவாக்கி அவருடைய ஆசையை நிறைவேற்றி செம்மொழி என்ற அந்த நிலையை ஏற்படுத்திய பிறகு மத்திய அரசுக்கு நம்முடைய பாராட்டுக்களையும், நன்றியையும் தெரிவித்து பரிதிமாற்கலைஞருக்கு நாம் காட்ட வேண்டிய நன்றி ஒன்று உளதே என்று எண்ணிப் பார்த்து அவருடைய குடும்பத்தாருக்கு—மற்ற எழுத்தாளர்களுக்கு, புலவர்களுக்கு வழங்கியதைப் போல ஒரு நிதி வழங்குவது என்று முடிவு செய்து தமிழக அரசின் சார்பாக அந்த நிதியை வழங்கியபோது அந்தக் குடும்பத்திலிருந்து 19 உறுப்பினர்கள் தலைமைச் செயலகத்திற்கு வந்து அதைப் பெற்றுச் சென்றார்கள். அந்த 19 உறுப்பினர்களிலே 10 பேராவது கவி புனையும் ஆற்றல் வாய்ந்தவர்களாக இருந்தார்கள். என்னைப் பற்றி, அரசைப் பற்றி, தமிழைப் பற்றி, தமிழகத்தைப் பற்றி அவர்கள் எழுதிய கவிதைகளையெல்லாம் அங்கே படித்துக்காட்டிவிட்டு அவர்களுக்கு அரசின் சார்பில் தரப்பட்ட பதினைந்து இலட்சம் ரூபாய் பொற்கிழியைப் பெற்றுச் சென்றார்கள். அப்பொழுதே அவர்களுக்கு பரிதிமாற்கலைஞர் பிறந்த வீட்டை நினைவுச் சின்னமாக ஆக்குவோம் என்று வாக்களித்து அந்த வாக்கினையும் நிறைவேற்றி வைத்தேன்.

நானும் நம்முடைய அமைச்சர் பெருமக்களும் மதுரை மாநகர் சென்று—மதுரை நகரத்திற்குப் பக்கத்திலே உள்ள ஒரு கிராமத்தில்—பரிதிமாற்கலைஞர் பிறந்த ஊரில்—சொல்லப் போனால் ஒரு பெரிய அக்ரஹாரம்—அங்கே பிரமாண்டமான வரவேற்பு அன்றைக்கு எனக்கு வழங்கப்பட்டது. என்னுடைய வாழ்க்கையில் முதல் தடவையாகக் கிடைத்த வரவேற்பு—இன் முகத்தோடு அளிக்கப்பட்ட வரவேற்பு—அன்புபொழிய கிடைத்த வரவேற்பு—அந்த வரவேற்பைப் பெற்றுக் கொண்டு, வீட்டைச் சென்று பார்த்தால், மிக மிகச் சிறிய இல்லம்—நீளவாக்கில் கட்டப்பட்ட ஒரு இல்லம்—அந்த இல்லத்தை நினைவுச் சின்னமாக ஆக்கி விட்டு அங்கே பரிதிமாற்கலைஞருடைய சிலையையும் முகப்பிலே அமைத்து விட்டு—அங்கிருந்து மதுரை பொதுக்கூட்டத்திற்கு நாங்கள் புறப்படவே இயலாத அளவிற்கு அவ்வளவு பெரிய கூட்டம் அங்கே கூடி விட்டது. அக்கூட்டம் எங்களையெல்லாம் வாழ்த்தி வழியனுப்பி வைத்தது.

அன்றைய தினம் அங்கே எடுக்கப்பட்ட புகைப்படங்கள் எல்லாம் கூட இந்தப் பந்தலிலே மாட்டப்பட்டு, நீங்கள் காண்பதற்குரிய காட்சிகளாக விளங்குகின்றன. பரிதிமாற் கலைஞர்—சூரியநாராயண சாஸ்திரியாகவே இருந்து தனித் தமிழைப் போற்றி—ஏறத்தாழ 150 ஆண்டுகளுக்கு முன்பு—இந்தப் புரட்சிக்கு வித்திட்டார், என் மொழிக்கு செம்மொழி என்று

பெயர் சூட்டப்பட வேண்டுமென்ற புரட்சிக்கு வித்திட்டார் என்றாலும்கூட – அதற்கு அடுத்து ஒரு தொடர் முயற்சியாக சொல்ல வேண்டுமேயானால்—நேற்றைய தினம் "விடுதலை" பத்திரிகையிலே வந்த செய்தியை உங்களுக்குப் படித்துக் காட்டுகிறேன்.

**நீதிக்கட்சியின் தீர்மானம்**

"1918ஆம் ஆண்டு "தமிழைச் செம்மொழி என அறிவித்திடுக" என்ற ஒரு தீர்மானத்தை நீதிக்கட்சி மாநாட்டிலே நிறைவேற்றியிருக் கிறார்கள். 1918 மார்ச் 30, 31 நாட்களில்—தொண்ணூறு ஆண்டுகளுக்கு முன்பு தஞ்சை, திருச்சி மாநாட்டில் நிறைவேற்றியிருக்கிறார்கள். அந்தத் தீர்மானத்தின் தலைப்பே "தமிழைச் செம்மொழி என அறிவித்திடுக" என்பதாகும். தீர்மான எண் 8 (ஆ) தீர்மான வாசகம்—எல்லாப் பழைமையான மொழிகளைப் போல, பழைமை யான, வளமான, உயர்தரமாக உருவாக்கப்பட்ட, பல தரப்பட்ட இலக்கியங்களைக் கொண்டது தமிழ் மொழி. இது பல்கலைக்கழகத்தால் பாரசீக, அரேபிய, சமஸ்கிருத மொழிகளுக்கு ஈடாக மதிப்பிடப்பட்டு "செம்மொழி" என ஏற்றுக்கொள்ளப்பட வேண்டும்".

முன் மொழிந்தவர்:– திரு. ஜே.பி. நல்லுசாமி பிள்ளை, பி.ஏ., பி.எல்., வழக்கறிஞர், மதுரை.

வழிமொழிந்தவர்:– திரு. ந.மு. வேங்கடசாமி நாட்டார், தமிழ்ப் பண்டிதர், திரு. எஸ்.பி.ஜி. கல்லூரி, திருச்சிராப்பள்ளி.

இப்படி 1918ஆம் ஆண்டிலேயே 90 ஆண்டுகளுக்கு முன்பே இதற்கான முயற்சி தொடர்ந்து—படிப்படியாக பலவகையான கோரிக்கைகள், அழுத்தந்திருத்தமாக வைக்கப்பட்ட கோரிக்கைகள், அதற்காக நடைபெற்ற சிறு போராட்டங்கள்—தமிழக அரசு கொடுத்த குரல்—தமிழ் மக்கள் எழுப்பிய முழக்கம் ஆகியவற்றின் தொடர்ச்சியாகத்தான் இந்த முறை நம்முடைய கூட்டணி தமிழகத்திலே தி.மு.கழகத்தின் தலைமையிலே அமைந்த இந்தக் கூட்டணி சார்பாக மத்திய சர்க்காரிடம் இந்தப் பிரச்சினையை எடுத்து வைத்து எங்களுக்கு இந்தத் தகுதியை எங்கள் மொழிக்கு நீங்கள் தந்தாக வேண்டும் என்று கேட்டுக்கொண்டோம்.

அதற்கிடையே பல நிகழ்ச்சிகளில் தமிழகத்திலே நடைபெற்ற பல மாநாடுகளில் இந்தக் கோரிக்கை வலியுறுத்தப்பட்டு, அதன் தொகுப்பையும் நான் டெல்லியிலே பிரதமரிடத்தில், திருமதி. சோனியா காந்தி அம்மையாரிடத்தில், மாண்புமிகு மத்திய அமைச்சர் திரு. அர்ஜுன் சிங் இடத்தில் எடுத்துச் சொன்னபோது—இதிலே நமக்குள்ள பொறுப்பை திருமதி. சோனியா காந்தி போன்றவர்கள் எந்த அளவிற்கு மதித்தார்கள், மகிழ்ந்தார்கள், பெருமையோடு பாராட்டினார்கள் என்பதற்கு திருமதி. சோனியா காந்தி அவர்கள் 8–11–2005இல் எனக்கு எழுதிய ஒரு கடிதத்தின் மூலம் தெரிந்து கொள்ளலாம். அந்தக் கடிதத்தின் ஒரு பகுதியை மாத்திரம் படித்துக்காட்டுகிறேன்.

"I am glad that all the formalities for declaring Tamil as a Classical Language have now been completed. This is an achievement for all the constituents of the UPA Government, but particular credit goes to you and your Party" என்று திருமதி. சோனியா காந்தி அவர்கள் எழுதிய கடிதம் காலாகாலத்திற்கும் நான் பத்திரப்படுத்தி வைக்கப்பட வேண்டிய—நான் என்று தவறாகச் சொல்லிவிட்டேன்—நாம் பத்திரப்படுத்தி வைக்க வேண்டிய ஒரு மடல் என்பதை இங்கே தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

**தமிழர்களின் முயற்சி**

இந்த அமைப்பு முதலில் மைசூரில்தான் இருந்தது. மைசூரில் இடம் பெற்றிருந்த இந்த அமைப்பு எல்லா மொழிகளையும் ஆராய்ந்து, எந்தெந்த மொழிக்கு உயர்வு அளிக்கலாம், எந்தெந்த மொழிக்கு உரிமைகளை அளிக்கலாம், சலுகைகளை அளிக்கலாம், வாய்ப்பு வசதிகளை அளிக்கலாம் என்பதை ஆராய்ந்து கொண்டிருந்த அமைப்புதான். அது தமிழ்நாட்டிற்கு வந்தாக வேண்டும் என்ற முயற்சியிலே ஈடுபட்டு, நம்முடைய நாடாளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் நம்முடைய அமைச்சர்கள், அஃதன்னியில், கூட்டணியிலே



உள்ள நண்பர்கள்—இவர்கள் மூலமாகவும் முயற்சி செய்து—மைசூரிலிருந்து இது தமிழ்நாட்டிற்கு, சென்னை தலைநகரத்திற்கு வர வேண்டுமேயானால், இதற்கு முதல் முயற்சி செய்ய வேண்டியவர் அர்ஜுன் சிங் என்பதை அறிந்து, அவரிடத்திலே இதை எடுத்துச் சொன்னபோது, நான் உங்களுக்குச் சொல்ல விரும்புகிறேன்—நான் டெல்லியிலே தமிழ்நாடு இல்லத்தில் தங்கியிருந்தபோது—அர்ஜுன் சிங் அவர்கள் தமிழ்நாடு இல்லத்திற்கே வந்து ஒரு தாளைக் கொடுத்து, சென்னையிலே இந்தத் தமிழ் மையத்தினை நடத்திக்கொள்ள அனுமதி என்று கொடுத்துவிட்டுச் சென்றார் என்றால் எந்த அளவிற்கு தமிழர்களுடைய முயற்சியை நிறைவு செய்வதிலே மத்தியிலே உள்ளவர்கள் ஆவலாக இருந்தார்கள், கடமை ஆற்றினார்கள் என்பதற்கு இதைவிட வேறு எதையும் நான் சான்றாகச் சொல்ல முடியாது.

**நாம் பெற்ற வெற்றி**

தமிழ் மொழி செம்மொழியாக ஆகிவிட்ட காரணத்தால்—கேட்கிறார்கள் சில பேர்—விலைவாசி குறையுமா ? தமிழ் செம்மொழியாக ஆகிவிட்டதால் காவேரி தண்ணீர் வந்து விடுமோ ? தமிழ் செம்மொழியாக ஆகிவிட்டதால் பட்டினி, பசி நீங்கி விடுமா என்றெல்லாம், நாம் அதையும் செய்துவிட்டு, தமிழைச் செம்மொழியாகவும் ஆக்குவோம், ஆக்கிக் கொண்டிருக்கிறோம் என்பதை மறந்துவிடக்கூடாது. இதையெல்லாம் மறந்துவிட்டு தமிழ் செம்மொழி ஆனால் போதும்—பசி நீங்கிவிடும், பட்டினி நீங்கிவிடும் என்று நாங்கள் சொல்லவில்லை. இவைகளைவிட அவைகள் முக்கியம் என்பதை நாங்கள் மறப்பவர்கள் அல்ல. ஏனென்றால் நமக்கு உயிர் வேண்டுமா ? உடல் வேண்டுமா ? என்று கேட்டால் இரண்டும் சேர்ந்து இருந்தால்தான் வாழ முடியும் உயிர் மாத்திரம் இருந்தால், புராணக் காலத்திலே அதைப் பேய் என்பார்கள். உயிரும் உடலும் சேர்ந்து அமைந்தால்தான் மனிதன் என்ற பெயர் உண்டு. அந்த உயிரும் உடலுமாக வாழ வேண்டுமென்பது நம்முடைய கருத்து. அந்தக் கருத்தைத்தான் அழுத்தந்திருத்தமாகச் சொல்லி, இதிலே நாம் வெற்றி பெற்றிருக்கிறோம்.

**வாளாக மாறி ஆற்றும் பணி**

இங்கே இந்த விருதைப் பற்றி செம்மொழியாக நம்முடைய மொழி ஆனதால் என்னென்ன காரியங்கள், செயல்கள் நடைபெறவிருக்கின்றன என்பதைச் சுருக்கமாகச் சொல்ல விரும்புகிறேன். தேசிய அளவில் சிறந்து விளங்கும் தமிழறிஞர் ஒருவருக்கு ஐந்து இலட்ச ரூபாய் விருதுத் தொகை கொண்ட "தொல்காப்பியர் விருது" ஒன்று வழங்கப்படும். அயல்நாட்டுத் தமிழறிஞர்களில் ஒருவருக்கும், அயல்நாடுகளில் வாழும் இந்தியத் தமிழ் அறிஞர்களில் ஒருவருக்கும் தலா ஐந்து இலட்ச ரூபாய் விருதுத் தொகை கொண்ட இரண்டு குறள் பீட விருதுகள் வழங்கப்படும். தலா ஒரு இலட்ச ரூபாய் விருதுத் தொகை கொண்ட இளம் தமிழறிஞர்களுக்கான ஐந்து விருதுகள் வழங்கப்படும். செம்மொழித் தமிழாய்வு நிறுவனத்தின் மூலம் ஆண்டுதோறும் நமது குடியரசுத் தலைவரால் இவைகள் வழங்கப்படும் என்பதையும் நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

இந்த விருதுகள் 2005–2006, 2006–2007, 2007–2008 ஆகிய மூன்று ஆண்டுகளுக்கும் சேர்த்து வழங்கிடவிருக்கிறோம். ஆக மூன்று தொல்காப்பியர் விருது.

அயல்நாட்டுத் தமிழஞர்களுக்கான மூன்று குறள் பீட விருதுகள்,

அயல்நாடுகளில் வாழும் இந்தியத் தமிழ் அறிஞர்களுக்கான மூன்று குறள் பீட விருதுகள், இளம் தமிழ் அறிஞர்களுக்கான 15 விருதுகள்.

மூன்றாண்டுகள் மௌனமாக இருந்து விட்ட காரணத்தால் வாளாயிருந்து விட்ட காரணத்தால் வாளாயிருந்து, சும்மா இருந்து விட்ட காரணத்தால் இப்போது வாளாக மாறி நாம் இந்தப் பணியினை வேகமாக ஆற்ற இருக்கின்றோம். தகுதி வாய்ந்த தமிழ்ப் பெருமக்களைத் தேர்வு செய்வதற்குரிய பணிகள்—செம்மொழித் தமிழ் ஆய்வு நிறுவனத்தில்

இன்று மாலை தொடங்குகிறது என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

விருது பெறுவோரைத் தேர்ந்தெடுக்கும் குழுவில் முனைவர் வா.செ. குழந்தைசாமி, எழுத்தாளர் திரு.ஜெயகாந்தன், பேராசிரியர் முனைவர் மா. நன்னன் ஆகியோர் உறுப்பினர்களாக இடம் பெற்றுள்ளனர். ஒருவர், இருவர் இன்றைக்கு வெளியூர் சென்றிருந்தாலும் கூட அவர்களுக்குப் பதிலாக வேறு தமிழ் அறிஞர்களை இணைத்துக் கொண்டு அந்த விருதுக்குரியவர்களைத் தேர்ந்தெடுத்து அறிவிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**கலைஞர் கருணாநிதி செம்மொழி அறக்கட்டளை**

இதைத் தவிர இன்னொரு அறிவிப்பு— என்னுடைய சொந்தப் பொறுப்பில், நான் பெற்றுள்ள அளவிலா மகிழ்ச்சியின் காரணமாக— இங்கே சொல்ல விரும்புகிறேன். செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனம் தமிழகத்தில் காலூன்றுகின்ற நாள், பரிதிமாற்கலைஞர் அவர்கள் 150 ஆண்டுகளுக்கு முன்பு கண்ட கனவு—அந்தக் கனவு நனவாக வேண்டுமென்று 50 ஆண்டுகளுக்கு முன்பே நான் கொண்ட நினைவு இன்று செயலாக்கம் பெறுகின்றது. இதையொட்டி எனக்கென்று உள்ள சொந்தப் பணத்திலிருந்து ஒரு கோடி ரூபாயை—இந்த நிறுவனத்தின் பொறுப்பில்— "கலைஞர் கருணாநிதி செம்மொழி அறக்கட்டளை" ஒன்றினை நிறுவிட வழங்குகின்றேன்.

இந்த ஒரு கோடி ரூபாயை நிரந்தர வைப்புத் தொகையில் அறக்கட்டளையின் பெயரால் "டெபாசிட்" செய்யப்பட்டு—ஆண்டுதோறும் அந்தத் தொகைக்குக் கிடைக்கும் வட்டித் தொகையைக் கொண்டு—ஒவ்வொரு ஆண்டும் இந்த மையத்தில் சிறப்பாக தமிழக வரலாற்றுப் பயன்மிக்க கல்வெட்டுகளை ஆய்வு செய்வோருக்கும்—கல்லை வெட்டினால் போதாது, கல்வெட்டில் வரலாற்று உண்மைகள் பதிந்திருக்க வேண்டும். அந்தக் கல்வெட்டு பழமையானதாக இருக்க வேண்டும். அந்தக் கல்வெட்டு பயன்மிக்கதாக அமைய வேண்டும். அவர்களுக்கு அறக்கட்டளையின் சார்பில் விருதுகள் மற்றும் பொற்கிழிகள் வழங்கப்படும். அரசின் சார்பில் வழங்கப்படுகின்ற விருதுகளைத் தவிர இந்த விருதுகளும் தனியாக ஆண்டுதோறும் வழங்கப்படும்.

எனவே இந்த இனிய நிகழ்ச்சிக்கு அழைப்பைபேற்று வருகைதந்து உங்கள் அன்பான வாழ்த்துகளையெல்லாம் வழங்கியமைக்கு இந்த அமைப்பின் சார்பாக என்னுடைய நன்றியையும் வணக்கத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன். மேலும் மேலும் இந்த அமைப்பின் சார்பில் தமிழை வளர்க்க—தமிழ்க் கலாச்சாரத்தை, பண்பாட்டை வளர்க்க தமிழர்களுடைய வரலாற்றை உலகெங்கும் பரப்ப—என்னென்ன வழி முறைகளைக் கையாள வேண்டும் என்ற நுணுக்கமான பாதையை நீங்கள் எங்களுக்கு அமைத்துத் தரவேண்டுமென்று இந்தக் கூட்டத்தின் மூலமாக உங்களையெல்லாம் கேட்டுக்கொள்ள நான் கடமைப்பட்டிருக்கிறேன்.

இந்த விழாவிலே வந்து தலைமையேற்ற நம்முடைய பேராசிரியர் அவர்கள் "பூவோடு சேர்ந்த நார்" என்று தன்னை வர்ணித்துக் கொண்டார்கள். நார் இல்லாவிட்டால் பூ நிற்காது. இந்த நார்— என்னை மாலையாக்கிடப் பயன்படுகின்ற நார். நார் என்று அலட்சியப்படுத்திட வேண்டாம். அதைக் குறைவாக நினைக்க வேண்டாமென்று பேராசிரியரைக் கேட்டுக்கொண்டு—என்ன இருந்தாலும் நீங்கள் எனக்கு அண்ணன்— அண்ணன்தான் என்பதை நான் என்றைக்கும் மறக்காமல் என்னுடைய பணியைத் தொடருவேன். தொடருவதற்கு நம்முடைய தமிழ் மக்களுடைய ஆதரவெல்லாம் எனக்கு நிரம்பத் தேவை என்பதை எடுத்துக்காட்டி இந்த விழாவிலே வந்து கலந்து கொண்ட கலைஞர் பெருமக்கள், கவிஞர் பெருமக்கள், அறிஞர் பெருமக்கள், தமிழ்ப் பெருமக்கள், அனைத்துக் கட்சிகளின் தலைவர்கள் அனைவருக்கும் நன்றியைத் தெரிவித்து என் உரையை நிறைவு செய்கிறேன். ★



# இந்தியாவிலேயே முதன்முதலாக, தமிழகத்திற்குள் பாயும் நதிகளை இணைக்கும் மாபெரும் திட்டம்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் **கலைஞர்** அவர்கள் தொடங்கிவைத்தார்

இந்தியாவிலேயே முதன்முதலாக தமிழகத்திற்குள் பாயும் நதிகளை இணைக்கும் திட்டத்தின் முதல் கட்டத்தை 24.6.2008 அன்று திருச்சியில் தொடங்கி வைத்து மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் ஆற்றிய உரை :



காலையில் இருந்து இதுவரையில் தஞ்சை தொடங்கி திருச்சி வரையில் மக்கள் வெள்ளத்திலே நீந்தி வருகின்ற ஒரு நிலையைப் பெற்று இப்பொழுதும் உங்களையெல்லாம் மிகுந்த மகிழ்ச்சிக்கிடையே சந்திக்கின்ற வாய்ப்பையும் பெற்றிருக்கின்றேன்.

இங்கே நடைபெறுகின்ற இந்த நிகழ்ச்சி இந்தியாவிலேயே நாம் நீண்ட காலமாக எடுத்துச்சொல்லி முதன் முதலாக நிறைவேற்றப்படுகின்ற ஒரு வரலாற்றுப் புகழ்மிக்க தொடக்க விழா நிகழ்ச்சியாகும்.

இன்றைக்கு நடைபெறுகின்ற இந்த விழாவினுடைய சிறப்புக்களை எனக்கு முன்னால் பேசிய பொதுப்பணித்துறை அமைச்சர் துரைமுருகன் அவர்களும் மற்ற நண்பர்களும் இங்கே எடுத்துச் சொல்லியிருக்கின்றார்கள்.

பொதுவாக, தமிழகத்தில் தண்ணீர்ப் பஞ்சம் – தண்ணீர்ப் பற்றாக்குறைப் பிரச்சினை நாளுக்குநாள் மோசமாகி வருகிறது என்பதை நான் சொல்லாமலேயே நீங்கள் புரிந்து கொண்டிருக்கின்றீர்கள். தமிழகத்திற்குள்ளாகவே உற்பத்தியாகின்ற நதிகளில் வற்றாத ஜீவநதி என்று ஒன்றுகூட இல்லை.

தமிழகத்திலே பாய்கின்ற காவிரியானாலும் தென்பெண்ணை, பெரியாறு, பாலாறு முதலிய ஆறுகளானாலும் – கர்நாடகம், கேரளம், ஆந்திரம் ஆகிய அண்டை மாநிலங்கள் அருள் கூர்ந்து நமக்குத் தந்தால்தான் – விடுவித்தால்தான் அந்த நீரைக் கொண்டுதான் நம்முடைய வாழ்வாதாரத்தை வலுப்படுத்திக் கொள்ள முடியும் என்ற நிலையில், தமிழ்நாட்டில் உள்ள வேளாண் பெருங்குடிமக்கள், இன்று நேற்றல்ல, பல்லாண்டு காலமாக பல துயரங்களுக்கு ஆட்பட்டிருக்கிறார்கள் என்பதையும், அதற்காக உச்சநீதிமன்றம்வரையில் பல முறை சென்றும் பயனற்றுப்போய் இன்னும் முற்றாக எதுவும் முடியவில்லை என்பதையும் நீங்கள் மிகத் தெளிவாக அறிவீர்கள்.

காலங்காலமாக இந்த ஆறுகளின்மூலம் தமிழகம் தண்ணீரைப் பெறுவதற்கு முழு உரிமையும் கொண்டுள்ள போதிலும்கூட, அண்டை மாநிலங்கள் எழுப்பி வரும் பிரச்சினைகளின் காரணமாகக் கிடைக்கவேண்டிய தண்ணீரும் கிடைக்காத நிலை தொடர்ந்துகொண்டே இருக்கின்றது.

**காவேரிப் பிரச்சினை**

தம்பி துரைமுருகன் எடுத்துக்காட்டியதைப்போல், காவேரிப் பிரச்சினை **1924**–ஆம் ஆண்டு, நான் என்றைக்குப் பிறந்தேனோ, அன்றைக்கே பிறந்தது பிரச்சினையாகும். என்னோடு சேர்ந்து பிறந்த பிரச்சினைதான் காவேரிப் பிரச்சினை. அதுமுதல் இந்தப் பிரச்சினையில் நான் கர்நாடகத்தில் உள்ள அமைச்சர் பெருமக்களிடத்திலே பேசாத அமைச்சரில்லை.

பேரறிஞர் அண்ணா அவர்கள் முதலமைச்சராகப் பொறுப்பேற்றிருந்த அந்தக் காலகட்டத்தில், **1968**–ஆம் ஆண்டு என்னை அனுப்பி, ``காவேரிப் பிரச்சினை – ஹேமாவதி என்கின்ற ஒரு அணையை மைசூர் பக்கத்தில் (அன்றைக்கு இருந்த) முதலமைச்சர் வீரேந்திர பாட்டீல் கட்டுவதற்கான ஆயத்தங்களைச் செய்து வருகிறார். அவரோடு பேச்சுவார்த்தைக்குச் சென்று வா!`` என்று அனுப்பினார்கள்.

திரு. வீரேந்திர பாட்டீல் அவர்களோடு நான் பேச்சு வார்த்தையிலே ஈடுபட்டேன். டெல்லிப் பட்டணத்தில் **1968**–ஆம் ஆண்டு தொடங்கிய அந்தப் பேச்சுவார்த்தை – வீரேந்திர பாட்டீலுக்குப் பிறகு, கர்நாடகத்தில் பல முதலமைச்சர்கள் வந்து வந்து போய்விட்டார்கள். ஆட்சி வீழ்ந்து, ஆட்சி வீழ்ந்து அவர்கள் மாறியும் விட்டார்கள். ஆனால் இந்தப் பிரச்சினையில் ஏற்பட்ட நெருக்கடி மாறவில்லை. அதற்கு ஒரு முடிவும் ஏற்படவில்லை. ஒவ்வொரு முறையும் நானேதான் தமிழகத்தின் சார்பாகத் தலைமையேற்று அந்தப் பேச்சுவார்த்தையில் ஈடுபட்டு, இடையிடையே பொதுப்பணித்துறை அமைச்சர் போன்றவரை அழைத்துச் சென்று பேச்சுவார்த்தை நடத்தியும், இடைக்காலத்திற்கு உச்சநீதிமன்றம் வரையிலே வழக்காடியும், எதுவும் பயன்படாத ஒரு சூழ்நிலை காவேரியிலே நமக்கு ஏற்பட்டது.

பின்னர் அதற்காக ஒரு குழு, அந்த ஆற்றுப் பிரச்சினையை ஒரு முடிவுக்குக் கொண்டு வர அமைக்கப்பட்டு, அந்தக் குழுவினுடைய முடிவிற்காகக் காத்திருந்தபோதுகூட, அந்த முடிவு ஓரளவு நமக்குச் சாதகமாக வந்த நேரத்தில், அதை நிறைவேற்றுவதிலே கர்நாடக அரசு காட்டுகின்ற தயக்கத்தின் காரணமாக இன்னும் முழுப்பயனையும் நாம் அடைய முடியாமல் தவித்துக் கொண்டிருக்கிறோம்.

இது கர்நாடகத்திலே இருந்து புறப்பட்டு வருகின்ற காவேரி ஆற்றில் நமக்கு ஏற்பட்டுள்ள பிரச்சினை. அதைப்போலவேதான் நம்மைச் சுற்றியுள்ள மாநிலங்கள் – கேரளாவானாலும், அல்லது ஆந்திராவானாலும் – அங்கிருக்கின்ற நீர் ஆதாரங்கள் நமக்கு உரிய நேரத்தில் உரிய வகையில், உரிய அளவு கிடைக்க முடியாத சூழ்நிலை இருப்பதையும், அதற்காக நாம் கொடி தூக்கிப் போராட வேண்டிய நிலைமையும் – நீதிமன்றங்களுக்குச் சென்று சட்டப்படி வாதாட வேண்டிய நிலைமையும், மத்திய சர்க்காரிடத்திலே முறையிட வேண்டிய நிலைமையும், இன்னும் நமக்கு இருந்து கொண்டிருக்கின்றது.

பொறுத்துப் பொறுத்துப் பார்த்து வேறு வழியில்லாமல், நான் கடந்த ஐக்கிய முற்போக்குக் கூட்டணி அரசினுடைய குறைந்தபட்சத் திட்டத்தை இந்த அரசுக்கு – மத்திய அரசுக்கு நினைவுபடுத்தினோம்.

இப்பொழுதுள்ள சூழ்நிலையில் உச்சநீதிமன்றமும் நடுவர் மன்றமும் தமிழகத்திற்கு உரிய நியாயத்தை உணர்ந்து தீர்ப்புகள் வழங்கியுள்ளபோதிலும், அந்தத் தீர்ப்புகளின் அடிப்படையில், அண்டை மாநிலங்கள் – கர்நாடகம் உட்பட – தமிழகத்திற்குத் தண்ணீர் தருவதை மறுத்து வருகின்றன.

**மத்திய அரசின் ஏற்பு**

மத்திய அரசுக்குக் கடிதங்கள் மூலமும், நேரிலும் கோரிக்கைகள் விடுத்தும், நீதிமன்றங்கள் மூலமாக அணுகியும்கூட பிரச்சினை இன்னமும் தீர்ந்தபாடில்லை.

எனவே, இந்தத் தண்ணீர்ப் பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வு காணும் வகையில் தேசிய அளவில் நதிகள் இணைக்கப்பட வேண்டும் எனும் கருத்து இப்பொழுது நாடு முழுவதும் எழுந்துள்ளது.

ஐக்கிய முற்போக்குக் கூட்டணி அரசின் குறைந்தபட்ச செயல் திட்டத்தில்,

"The UPA Government will make a comprehensive assessment of the feasibility of linking the rivers of the country starting with the south-bound rivers. This assessment will be done in a fully consultative manner.........."

என்று ஐக்கிய முற்போக்குக் கூட்டணியினுடைய குறைந்தபட்ச செயல்திட்டத்தில் குறிப்பிடப்பட்டிருப்பதைச் சுட்டிக் காட்டி, இதற்கான முயற்சிகளை மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொண்டேன்.

எங்கே கேட்டுக்கொண்டேன் தெரியுமா? பதினோராவது ஐந்தாண்டுத் திட்டத்தில் – நதிநீர் இணைப்புத் திட்டத்தைச் சேர்க்க வேண்டுமென மத்திய அரசுக்கு பலமுறை வேண்டுகோள் விடுத்தோம். அது கவனிக்கப்படாமல் இருந்த சூழ்நிலையில் **29.5.2007** அன்று நடைபெற்ற **53**–ஆவது தேசிய வளர்ச்சிக் குழுக்கூட்டத்தில் – என்.டி.சி. –

``பதினோராவது திட்டத்தில் வேளாண்மைத் துறைக்கான அணுகுமுறைகளில், தீபகற்ப நதிகளை இணைப்பதற்கான செயல்திட்டம் சேர்க்கப்பட்டு அதற்குத் தேவையான நிதியும் வழங்க வேண்டும்``



என நான் தமிழக அரசின் சார்பில் கலந்து கொண்டபோது இதை முன்வைத்துப் பேசினேன்.

அதனை மத்திய அரசு அன்றைய தினம் ஏற்றுக் கொண்டது. ஏற்றுக்கொண்டு,

``மாநிலங்களுக்குள் பாயும் நதிகள் இணைப்புத் திட்டத்திற்கு விரைவுபடுத்தப்பட்ட பாசனப் பயன்கள் திட்டத்தின் கீழ் (Accelerated irrigation Benefits Programme) நிதியுதவி அளிக்கப்படும்``

என அக்கூட்டத்திலேயே தீர்மானத்தையும் நிறைவேற்ற மத்திய அரசு முன்வந்தது. அந்தத் தீர்மானமும் நிறைவேற்றப்பட்டது.

என்ன தீர்மானம் என்றால்,

``மாநிலங்களுக்குள் பாயும் நதிகளை – நீங்கள் மாநிலத்திற்கு மாநிலம் பாய்கிற நதிகளை இணைப்பது பிறகு இருக்கட்டும். முதலில், எங்கள் மாநிலத்திற்குள்ளே பாய்ந்துகொண்டிருக்கின்ற நதிகளையாவது ஒன்றோடு ஒன்று இணைத்து எங்களுக்குத் தேவையான தண்ணீரை – தேவையான நிலத்தில் பயன்படுத்திக்கொள்ள வசதியும் வாய்ப்பும் வழங்குங்கள்!`` என்று கேட்ட இந்தக் கோரிக்கையை, அதற்கு நிதியும் வழங்குங்கள் என்று கேட்ட தமிழக அரசின் இந்த வேண்டுகோளை, மத்திய சர்க்கார் ஏற்றுக் கொண்டது.

**தமிழகத்திற்கு நிதி ஒதுக்கீடு**

அதற்குப் பிறகு **19.12.2007**இல் புதுடெல்லியில் **54**–ஆவது தேசிய வளர்ச்சிக் குழுக் கூட்டத்தில், அதிலும் நான் பேசும்போது குறிப்பிட்டேன்.

``மாநிலத்திற்குள் பாயும் ஆறுகள் இணைக்கப் படுவதைப் பொறுத்தவரை, தேசிய வளர்ச்சிக் குழுவின் **53**–ஆவது கூட்டத்தில் ஏற்கெனவே முடிவு செய்யப்பட்ட திட்டங்களுக்கு மத்திய அரசு உடனடியாக நிதியுதவி வழங்க வேண்டுமென வலியுறுத்துகிறேன்.``

என்றும் மீண்டும் வற்புறுத்திக் கேட்டுக்கொண்டேன்.

பின்னர், புதுடெல்லியில் **11. 2. 2008**–அன்று **2008 – 2009**–ஆம் ஆண்டுக்கான ஆண்டுத் திட்டத்திற்கு நிதி ஒதுக்கீடு செய்வது குறித்து, மத்தியத் திட்டக் குழுவின் துணைத் தலைவர் திரு. மான்டேக்சிங் அலுவாலியா அவர்களுடன் நான் விவாதித்த போது, **53**–ஆவது தேசிய வளர்ச்சிக் குழுக் கூட்டத்தில் மேற்கொள்ளப்பட்ட முடிவின்படி மாநிலங்களுக்கு இடையில் நதிகளை இணைக்கும் திட்டத்திற்கு அதிக அளவில் நிதி தேவைப்படும் என்பதால், விரைவுபடுத்தப்பட்ட பாசனப் பயன்கள் திட்டத்தின்கீழ் தமிழகத்திற்கு நிதி ஒதுக்கீடு செய்திட வேண்டுமென மீண்டும் எடுத்துரைக்கப்பட்டது.

எத்தனை `மீண்டும்` பாருங்கள்! எத்தனை `மறுபடியும்` பாருங்கள்! எத்தனை `தேதிகள்` பாருங்கள்! அதனால்தான், ``மாநிலத்திலே சுயாட்சி; மத்தியிலே கூட்டாட்சி`` என்கின்ற அந்த வாதத்தை பேரறிஞர் அண்ணா அவர்கள் நமக்கெல்லாம் ஆரம்பப் பாடமாகவே அரசியலிலே எடுத்துச் சொன்னார்கள்.

அதை வலியுறுத்தி வருகின்ற நாம், **22 . 2 . 2008** அன்று மத்திய நீர்வள ஆதாரத்துறை அமைச்சர் பேராசிரியர் சைபுதீன் சோஸ் அவர்கள் தமிழக அரசுக்கு ஒரு கடிதம் எழுதினார். இவ்வளவுக்கும் பிறகு, மத்திய நீர்வள ஆதாரத்துறை அமைச்சர் பேராசிரியர் சைபுதீன் சோஸ் அவர்கள் கடிதம் எழுதினார்.

அதில்,

``மாநிலத்திற்குள் பாயும் நதிகள் இணைப்புத் திட்டங்கள், வேளாண்மை மற்றும் பல்நோக்குத் திட்டங்களாக இருப்பதால், அவைகளுக்கு விரைவுபடுத்தப்பட்ட பாசனப் பயன்கள் திட்டத்திற்கு, நீர்வள ஆதார அமைச்சகம் வகுத்துள்ள வழிமுறைகளின்படி மத்தியத் திட்டக் குழுவின் ஒப்புதலோடு நிதியுதவி வழங்கப்படும்``

என்று, கடைசியாக நாம் ஒரு பெருமூச்சு விட்டுக்கொள்கிற வகையில், ``நிதியுதவி வழங்கப்படும்`` என்று மெல்லச் சொன்னார்கள்.

**நிதி நிலை அறிக்கையில் அறிவிப்பு**

பின்னர் **20.3.2008** அன்று நம்முடைய தமிழக சட்டப் பேரவையில் அளிக்கப்பட்ட **2008 – 2009** ஆம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கையில் பின்வருமாறு சொன்னோம்.

``மத்திய அரசின் விரைவுபடுத்தப்பட்ட பாசன உதவித் திட்டத்தின் கீழ் இத்தகையப் பணிகளுக்கு நிதியுதவி வழங்க தேசிய வளர்ச்சிக் குழு ஒப்புதல் அளித்துள்ள நிலையில், அந்த நிதியுதவியை எதிர் நோக்கி (அப்போதும் – பெற்று – அல்ல) மாநில அரசின் நிதியில் இருந்து தமிழ்நாட்டிலே பாயும் பின்வரும் நதி இணைப்புகளுக்கான பணிகள் வரும் **2008–2009** ஆம் நிதியாண்டில் தொடங்கப்படும்``

என்று நமது வரவு செலவுத் திட்டத்தில் – நிதிநிலை அறிக்கையிலே தெரிவித்தோம்.

என்னென்ன திட்டங்கள்?

``வெள்ளக் காலங்களில் காவிரி ஆற்றில் பெருகும் உபரி நீரை, வறண்ட மாவட்டங்களுக்குக் கொண்டு செல்வதற்கான காவிரி – அக்னியாறு – கோரையாறு – பாம்பாறு – வைகை – குண்டாறு இணைப்புத் திட்டத்தின் முதற்கட்டமாக; காவிரி ஆற்றின் குறுக்கே கட்டளைப் பகுதியில் கதவணை அமைக்கும் திட்டம் **165** கோடி ரூபாய் மதிப்பீட்டில் செயல்படுத்தப்படும்``

என்றும் அறிவிக்கப்பட்டது.

அதுதான் இன்றைக்குச் செயல்படுத்தப்படுகின்ற தொடக்க விழாவாக நடைபெறுகிறது என்பதை உங்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இந்த அறிவிப்புகளைச் செயல்படுத்தும் வகையில், இத்திட்டத்திற்கு மத்திய அரசின் நிதியுதவியை எதிர்நோக்கி, 165 கோடி ரூபாய் மதிப்பீட்டில் இத்திட்டத்தை நிறைவேற்ற 9.5.2008 அன்று இந்த அரசு ஆணையும் பிறப்பித்துள்ளது.

அதன் தொடர்ச்சியாகக் காவிரி ஆற்றின் குறுக்கே கட்டளைப் பகுதியில் கதவணை அமைக்கும் திட்டத்திற்கு இன்று அடிக்கல் நாட்டப்படுகிறது.

இத்திட்டத்தின் கீழ் 71 கோடி ரூபாய் செலவில் கதவணையும்,

47 கோடி ரூபாய் செலவில் கதவணை ஷட்டர்களும்,

36 கோடி ரூபாய் செலவில், காவிரி ஆற்றின் வலக்கரையையும், இடக்கரையையும் இணைக்கும் வகையிலும், இருபுறமும் உள்ள கிராமங்களின் போக்குவரத்துகளில் மொத்தம் 45 கிலோ மீட்டர் தூரத்தைக் குறைக்கும் வகையில் இருவழிப் போக்குவரத்துகளுக்குப் பயன்படும் பாலமும்,

11 கோடி ரூபாய் செலவில் நில எடுப்பு முதலிய இதரப் பணிகளும்.

– ஆக மொத்தம் 165 கோடி ரூபாய் மதிப்பீட்டில் இத்திட்டம் நிறைவேற்றப்படும் என்று அறிவித்து, உங்களுடைய வாழ்த்துகளோடு இந்தப் பணியிலே இறங்குகிறோம்.

## நீங்கள் கேட்காததையும் கொடுத்திருக்கிறோம்

இது என்னுடைய தம்பிமார்கள் மற்றும் நண்பர்கள் எல்லாம் இங்கே எடுத்துக்காட்டியதைப் போல், முதல் முதலாக மாநிலங்களுக்குள்ளே ஓடும் நதிகளை எல்லாம் இணைத்து, இந்த நதிகளினுடைய இணைப்பு விழாவை இந்தியாவிலேயே முதன் முதலாக நடத்துகிற மாநிலம் தமிழகம் ஆகும். அத்தகையதோர் மாபெரும் செயலாகும் இது.

நான் நதிகளை இணைக்கத்தான் இங்கு வந்திருக்கிறேன். திருச்சியிலே சில நண்பர்களையும் இணைக்கவேண்டும். இருந்தாலுங்கூட, நதிகளையும் இணைப்பது – நலிவுற்ற மக்களைக் காப்பாற்றுவதற்காக – நஞ்சை புஞ்சைகளெல்லாம் வளம் பெறுவதற்காக – இங்கே சொன்னார்களே, ''வாழையையும் சேர்த்துக் கொள்ளுங்கள், நாங்கள் அதனாலும் வாடுகிறோம். இங்கே பயிர் பச்சைகளின் சேதாரத்திற்கு மட்டும் இழப்பீடு கொடுத்தால் போதாது. வாழைக்கும் தரவேண்டும்'' என்றெல்லாம் கேட்டார்கள் அல்லவா, வாழையிலேயே வாழ்வு இருக்கிறது. வாழை என்றாலே, வாழ்வின் அடிப்படையிலே உருவானதுதான்! ஆகவே, வாழைக்கு எதுவும் தருவதைப் பற்றியும் இந்த அரசு ஆலோசிக்கும் என்பதை இங்கே பேசிய நண்பர்களுக்கெல்லாம் நான் எடுத்துக்காட்ட விரும்புகிறேன்.

வரிசையாக நீங்கள் கேட்பதையெல்லாம் கொடுத்திருக்கிறோம். நீங்கள் கேட்காததையும் கொடுத்திருக்கிறோம். அப்படித்தான் நெல்லுக்கு விலை, நீங்கள் கேட்காமலேயே அறிவித்தோம். கடலூரில் நடைபெற்ற மாநாட்டில் முடிவெடுத்து, பெண்களுக்குச் சாதகமாக, கேஸ் சிலிண்டரின் விலையையும் குறைத்துக் கொடுத்தால் போதுமென்று, அவர்களுக்கும் முகத்திலே புன்னகையை வரவழைத்தோம்.

இப்பொழுது இந்த வட்டாரத்திலே உள்ள வாழைத் தோட்ட வியாபாரிகள் பலரை எனக்குத் தெரியும். வாழைத் தோட்டம் வைத்திருப்பவர்கள் எல்லாம் எவ்வளவு சம்பாதிக்கிறார்கள், ஒரு வாழைத்தோட்டம் ஒரு மழையிலோ, ஒரு புயலிலோ அழிந்தால் எவ்வளவு நஷ்டத்திற்கு ஆளாகிறார்கள் என்பதிலிருந்து, அது ஒழுங்காக இருந்தால் எவ்வளவு சம்பாதிப்பார்கள் என்பதையெல்லாம் நான் ஏற்கெனவே தெரிந்து கொண்டிருக்கின்றேன். இருந்தாலும் அவர்களுடைய இழப்புக்களை ஈடுகட்ட இந்த அரசு முன்வரும் என்ற உறுதியையும் உங்களுக்கு இங்கே நான் தெரிவித்துக் கொள்கின்றேன்.

## நெருக்கடியை உணர்ந்து செயல்படுகிறோம்

தமிழக அரசு – திராவிட முன்னேற்றக் கழக அரசு மக்கள் அரசாக செயல்படுவதையெல்லாம் இங்கே தம்பி துரைமுருகனும், பொருளாளர் ஆர்க்காட்டாரும் அதற்கு முன்னால் பேசிய நாடாளுமன்ற – சட்டமன்ற உறுப்பினர்களும், அரசு அலுவலர்களும் எடுத்துச் சொல்லியிருக்கின்றார்கள். நான் அதையே திரும்பத் திரும்ப உங்களுக்கு நினைவுபடுத்த வேண்டிய அவசியம் இல்லை என்று கருதுகின்றேன்.

இன்று உள்ள நெருக்கடியான சூழலில், தமிழகத்திலே நெருக்கடியை உணர்ந்து நாம் செயல்படுகிறோம். மற்ற மாநிலங்கள் எப்படியோ, எனக்குத் தெரியாது. ஆனால் தமிழகத்தைப் பொறுத்தவரையில், நெருக்கடியை உணர்ந்து, அந்த நெருக்கடியை எப்படிச் சமாளிப்பது என்ற வழிவகைகளை ஆராய்ந்து அதற்கேற்ப செயல்பட்டுக் கொண்டிருக்கிறோம்.

விலைவாசி ஏறுகிறதா? எந்த அளவுக்கு ஏறியிருக்கிறது? எந்த அளவுக்குக் குறைத்தால் மக்கள் ஓரளவுக்கு நிம்மதியாக வாழ முடியும் என்பதை யோசித்துப்பார்த்து; அதற்கேற்ப பணியாற்றுகிறோம், நிருவாகத்தை நடத்துகிறோம். அப்படி மக்களின் துயரங்களையும் அறிந்து, மக்களுடைய



கஷ்டங்களையும் அளந்து பார்த்து அதற்கேற்ப நிருவாகத்தை நடத்துகின்ற ஒரு அரசாக இந்த அரசு இருக்கின்றது. அதற்கிடையிலேதான் இப்படிப்பட்ட மாபெரும் திட்டங்களையெல்லாம் நிறைவேற்றிக் கொண்டிருக்கின்றோம்.

யாராலாவது எதிர்பார்க்க முடியுமா? இன்றைக்குக் காலையிலே உயர்கல்வித்துறை அமைச்சர் தம்பி பொன்முடியும், அதிகாரிகளும் சென்று திருவாரூரிலே இடம் பார்த்துவிட்டு வந்திருக்கிறார்கள். எதற்கு? பல்கலைக்கழகத்திற்கு! திருவாரூரில் பல்கலைக்கழகம் வருகிறது. திருவாரூர் வட்டாரத்தில் பல்கலைக்கழகம் வரவேண்டிய அவசியம் என்ன? அவசியம் என்ன என்பது, தேவையில்லை என்ற பொருளிலே நான் கேட்கவில்லை. அதை நீங்கள் உணர வேண்டும் என்பதற்காக கேட்கின்றேன்.

திருவாரூர் மாவட்டத்தைச் சுற்றித்தான் நாகப்பட்டினம் மாவட்டம், திருத்துறைப்பூண்டி ஆகியன அமைந்திருக்கின்றன. ஏழைபாழைகள், இல்லாதோர் இவர்களெல்லாம் வாழுகின்ற மாவட்டம் – அந்த மாவட்டத்தில் வாழுகின்ற கிராமப்புறத்து மக்கள் இவர்களெல்லாம் பல்கலைக்கழகம் என்று பெயரை கேள்விப்பட்டதுகூட கிடையாது. அவர்களெல்லாம் பல்கலைக்கழகத்திலே படிக்கப்போகிறார்கள். அது வெகுவிரைவிலே, இந்த ஆண்டே தொடங்கப்படவிருக்கிறது.

நமக்கு டெல்லியில் இருந்து தகவல் கிடைத்திருக்கிறது. ''நாங்கள் அறிவித்திருக்கின்ற பல்கலைக்கழகங்கள் ஒன்றன்பின் ஒன்றாக – கோயம்புத்தூரில், திருச்சியில் இங்கெல்லாம் ஏற்படட்டும். ஆனால் முதன் முதலில் திருவாரூரில்தான் இந்த ஆண்டு ஆரம்பிக்கிறோம். இடம் பார்த்து வையுங்கள்'' என்று மத்திய அரசின் கல்வித்துறையிலிருந்து செய்தி அனுப்பியிருக்கிறார்கள் என்றால், ஒவ்வொருநாளும், அணுப்பொழுதும் வீணாகாமல், ஆக்கப்பூர்வமான திட்டங்களை நிறைவேற்ற அங்குள்ள அரசு நமக்கு உதவிகளைச் செய்து வருகின்றது.

இதுவரையிலே அந்த அரசால் நமக்குக் கிடைத்திருக்கின்ற உதவிகள், சாதகங்கள் எவையெவை என்பதையெல்லாம் நான் இங்கே அடுக்கிக்காட்ட நேரமில்லை.

நாம் பேசுகின்ற தாய் மொழி, தமிழ் மொழி. அது செம்மொழியாக ஆவதற்கு அம்மையார் சோனியா காந்தி அவர்கள் தலையசைத்து, பிரதமர் மன்மோகன் சிங் அவர்கள் ஏற்றுக்கொண்டு, அர்ஜுன்சிங் அவர்கள் அதற்கான ஆதரவினை நல்கி, நம்முடைய பழம்பெரும் புலவர் சூரியநாராயண சாஸ்திரி அவர்கள் – பரிதிமாற் கலைஞர் அவர்கள் கண்ட கனவு – ''தமிழ், செம்மொழி! உலகத்திலே உள்ள மொழிகளிலே முதுமொழி, அமுதமொழி தமிழ்மொழி. அது ''செம்மொழி'' என்ற பெயரைப் பெற வேண்டும்'' என்று அவர் கண்ட கனவை – அவர் கண்ட நூறாண்டுகளுக்குப் பிறகு இன்றைக்கு நாம் நிறைவேற்றுகிறோம் – சென்னையிலே காமராஜர் பெயரால் அமைந்துள்ள கடற்கரைச் சாலையிலே இன்னும் நான்கைந்து நாட்களிலே அந்த அமைப்பு செயல்படத் தொடங்குகிறது. அந்த அமைப்பின் பெயரால் விருதுகள் வழங்கப்படவிருக்கின்றன. இதையெல்லாம் சொல்வதற்குக் காரணம், நாம் மொழியைப் பாதுகாக்க, மொழியை வளப்படுத்த, மொழியை வளமுள்ளதாக ஆக்க, நமது திட்டங்களை நிறைவேற்ற, இன்னும் நம்முடைய எண்ணம் நிறைவேறுமேயானால், நிறைவேறுவதற்கு நாங்கள் நடத்துகின்ற போராட்டம் வெற்றி பெறுமேயானால், சேதுசமுத்திரத் திட்டத்தையும் நிறைவேற்றுவதற்குத் தயங்கமாட்டோம் – நிறைவேற்றியே தீருவோம் என்ற உறுதி மொழியை உங்களுக்கு அளித்து, இந்த அருமையான நேரத்தில் உங்களையெல்லாம் சந்திக்கின்ற இனிய வாய்ப்பு எனக்குக் கிட்டியமைக்காக, இந்த வாய்ப்பை அளித்த நண்பர்கள் அத்தனைபேருக்கும் – குறிப்பாகப் பொதுப்பணித்துறைக்கும் என்னுடைய நன்றியை, வணக்கத்தை, வாழ்த்துக்களைக் கூறி விடைபெறுகிறேன்.

❖ ❖ ❖

# விவசாயிகளின் கோரிக்கையை ஏற்று நெல் கொள்முதல் விலையை உயர்த்தி வழங்க மாண்புமிகு தமிழக முதலமைச்சர் கலைஞர் அவர்கள் அறிவிப்பு

2008–2009ஆம் ஆண்டு காரீப் பருவத்திற்கு மத்திய அரசு நெல் கொள்முதல் விலையை சாதாரண ரகம் குவிண்டால் ஒன்றுக்கு 850 ரூபாய் என்றும்; சன்ன ரகம் குவிண்டால் ஒன்றுக்கு 880 ரூபாய் என்றும் நிர்ணயித்துள்ளது. எனினும், விவசாயிகளின் நீண்டநாள் கோரிக்கையை ஏற்று – உணவுப் பாதுகாப்பை உறுதி செய்யவும், நெல் உற்பத்தியை அதிகரிக்கவும், விவசாயிகளுக்கு நல்ல விலை கொடுத்து ஊக்குவிக்கவும், 2008–2009ஆம் ஆண்டு குறுவைப் பருவத்தில் இருந்து கொள்முதல் செய்யப்படும் சாதாரண ரக நெல், குவிண்டால் ஒன்றுக்கு 1,000 ரூபாய் என்றும்; சன்ன ரக நெல் குவிண்டால் ஒன்றுக்கு 1,050 ரூபாய் என்றும் வழங்கிட தமிழக அரசு முடிவு செய்துள்ளது.

★ ★ ★

# சத்துணவில் முட்டை சாப்பிடாத குழந்தைகளுக்கு வாழைப்பழம் வழங்கப்படும்

**சென்னை, ஆயிரம் விளக்கில் 15.07.2008 அன்று நடைபெற்ற காமராஜர் பிறந்தநாள் – கல்வி வளர்ச்சி நாள் விழாவில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் கலைஞர் மு. கருணாநிதி அவர்கள் ஆற்றிய உரை**



**கா**மராஜர் அவர்களுடைய பிறந்த நாளைக் கல்வி வளர்ச்சி நாளாகக் கொண்டாடுவோம் என்று கடந்த இரண்டு மூன்று ஆண்டுகளுக்கு முன்பு திராவிட முன்னேற்றக் கழக அரசின் சார்பில் அறிவித்து அந்த அறிவிப்பு தொடர்ந்து நிரந்தரமாகச் செயல்பட குறுக்கே அறிக்கை விட்டு அதை மாற்றிவிடலாம். ஆனால் சட்டமாகச் செய்தால், அதைத் திரும்பப் பெற, மாற்றுவதற்கு, சட்டசபையைக் கூட்டியாக வேண்டும். சட்டமன்றத்தைக் கூட்டி, இப்படி கழக ஆட்சிக் காலத்தில் கருணாநிதி முதல் அமைச்சராக இருந்தபோது வருகின்ற அரசு எப்படியிருக்குமோ என்ற சந்தேகத்தினால் – நான் சந்தேகப்பட்டது உண்மை தான் என்பதற்கேற்ப – இடையிலே வந்த அரசு காமராஜர் பிறந்த நாளை கல்வி வளர்ச்சி நாள் என்று அறிவித்ததைக் கண்டு கொள்ளாமலே போய்விட்டதை நீங்கள் அறிவீர்கள். அதனால்தான் மீண்டும் ஆட்சிப் பொறுப்புக்கு தி.மு. கழகம் வந்த பிறகு, இதை வெறும் அறிவிப்பாக வைத்தால்தான், அவரவர்கள் இஷ்டத்திற்குக் கொண்டாடுகிறார்கள், சில நேரங்களில் கொண்டாடாமல் விட்டு விடுகிறார்கள் என்பதற்காக, இந்த முறை நாங்கள் ஆட்சிப் பொறுப்புக்கு வந்தவுடன் இதை ஒரு சட்டமாகவே ஆக்கி, ஜூலை 15 என்றால் அன்றைய தினம் காமராஜருடைய பிறந்த நாளை சட்டப்படி பள்ளிகளில் கொண்டாட வேண்டுமென்று – சட்டப் பேரவையிலேயே சட்டம் நிறைவேற்றி, அதை உறுதிப்படுத்தியிருக்கிறோம்.

ஏன் சட்டத்தை மாற்ற முடியாதா என்று கேட்கக் கூடும். மாற்றலாம் ஆனால் ஒரு அறிவிப்பை மாற்றுவது சுலபம். அதைக் கண்டுகொள்ளாமலே இருந்து விட்டால் தானாகவே மாறி விடும். அல்லது வேண்டுமென்றேகூட



காமராஜருடைய பிறந்த நாளைக் கல்வி வளர்ச்சி நாள் என்று குறிப்பிட்டுக் கொண்டாடினார். அதற்காக ஒரு சட்டம் செய்தார், அந்தச் சட்டத்தை நாங்கள் இப்போது விலக்கிக் கொள்கிறோம், ரத்து செய்கிறோம் என்று சொல்ல வேண்டும். ஆனால் அப்படிப்பட்ட சட்டத்தை ரத்து செய்து விட்டு வெளியிலே நடமாட முடியுமா என்பது வேறு விஷயம். அதனால் தான் இதைச் சட்டமாகவே இன்றைக்கு ஆக்கியிருக்கிறோம்.

### மதிய உணவுத் திட்டம்

சட்டமாக ஆக்கியது மாத்திரமல்ல, இங்கே தம்பி ஸ்டாலினும், அரசுத்துறை செயலாளரும் சுட்டிக் காட்டியதைப் போல இந்த மதிய உணவுத் திட்டம்,



சத்துணவுத் திட்டமாக மாறியது ஒரு வரலாறு. ஏற்கெனவே 1925ஆம் ஆண்டுதான் மாணவர்களுக்கு பள்ளிக் கூடம் வருவதற்கு ஆர்வம் ஏற்படுத்த, பள்ளிக் கூடத்திற்கு வந்து படித்து விட்டுச் செல்கிறவர்கள் பசியோடு செல்லக்கூடாது என்பதற்காக சர். பிட்டி. தியாகராயர் மாநகராட்சியின் தலைவராக இருந்த காலத்தில் மதிய உணவுத் திட்டம் என்ற ஒரு திட்டத்தைக் கொண்டு வந்தார். அது சென்னை மாநகரத்தைப் பொறுத்து ஒரேயொரு பகுதியிலே நடைமுறைப்படுத்தப்பட்ட ஒரு திட்டம். அதை மனதிலே வைத்து – அன்றைக்கிருந்த நீதிக் கட்சியின்பால் தொடர்பு கொண்ட கல்வி அதிகாரிகள் – அதன் பிறகு பெருந்தலைவர் காமராஜர் முதலமைச்சராக ஆனபோது – அவருக்கு 25ஆம் ஆண்டு தியாகராயர் செய்த – அந்தச் செயலை எடுத்துக்காட்டி – இதை நாம் பின்பற்ற வேண்டுமென்று சுந்தரவடிவேலு போன்ற அதிகாரிகள் சொன்னபோது – அதைப் பெருந்தலைவர் காமராஜர் உடனடியாக தயக்கமின்றி, தாமதமின்றி ஏற்றுக் கொண்டார்கள். ஏனென்றால் அவர் பயணம் செய்கின்ற ஊர்களில் – பாதைகளில் – ஏழையெளியவர்கள், கிராமப்புறத்து மக்கள் – தாழ்த்தப்பட்ட மக்கள் – இவர்கள் மாடு மேய்ப்பவர்களாக, ஆடு மேய்ப்பவர்களாக இருக்கின்ற அந்தப் பிள்ளைகளையெல்லாம் பார்த்து விட்டு – "இவர்கள் எல்லாம் ஏன் பள்ளிக்குச் செல்லவில்லை ?" என்ற கேள்வியை எழுப்பி, பள்ளிக்குச் சென்றால், அவர்களுக்கு உணவு கிடைக்காது, வீட்டிலே வேலை செய்ய ஆள்கிடைக்காது, அதற்காகத்தான் அவர்கள் வீட்டு வேலைகளைக் கவனிக்கிறார்கள் என்று சொன்னபோது அவர்கள் பள்ளிக்கும் செல்ல வேண்டும், பசியாறி படிக்கவும் வேண்டும் என்ற நல்ல நினைப்போடு பெருந்தலைவர் காமராஜர் அன்றைக்குத் தமிழ்நாட்டிலே உள்ள பெற்றோர்கள் – இந்தப் பிள்ளைகளைப் பள்ளிகளுக்கு அனுப்புகின்ற பெற்றோர்கள், நல்ல

உள்ளத்தோடு தருகின்ற நன்கொடைகளையெல்லாம் பெற்று, அவைகளைக் கொண்டு அந்தப் பிள்ளைகளுக்கு மதிய உணவை வழங்கினார்.

இந்தத் திட்டத்தை மதிய உணவு என்கிற பெயரால் ஆரம்பித்தவர் பெருந்தலைவர் காமராஜர் அவர்கள் – ஆட்சிப் பொறுப்பிலே முதல் அமைச்சராக இருந்த அந்தக் காலக்கட்டத்தில்! அதற்குப் பிறகு ஆட்சி மாறி, தி.மு. கழகத்தின் ஆட்சி வந்து, அதன் தொடர்ச்சியாக எம்.ஜி.ஆர். அவர்கள் முதலமைச்சராகப் பொறுப்பேற்றபோது, அவர் இந்தத் திட்டத்தை மதிய உணவுத் திட்டம் என்று இல்லாமல், சத்துணவுத் திட்டம் என்ற பெயரால் மாநில சர்க்காரின் பணத்திலேயே – யாரிடமும் நன்கொடை பெறாமல் – மாநில அரசின் செலவிலேயே இதைப் பள்ளிக்கூடங்களில் மதிய உணவுத் திட்டத்தை சத்துணவுத் திட்டம் என்ற பெயரிலே வழங்க ஆணை பிறப்பித்தார்.

### மகிழ்ச்சியோடு கல்வி கற்கின்ற வாய்ப்பு

இந்தச் சத்துணவு திட்டம்தான் இன்றைக்கு எத்தனை முட்டைகளோடு என்ற எண்ணிக்கையிலே பெருகியிருக்கிறது. ஏன் இதிலே முட்டைகளை நாம் சேர்த்திருக்கிறோம் என்றால் – இப்போது குழந்தைகளுக்கு வழங்குகின்ற உணவு, சத்து நிறைந்ததல்ல, ஆகவேதான் முட்டையும் சேர்க்க வேண்டுமென்று முட்டையையும் சேர்த்தோம். முதலில் ஒரு முட்டை, பிறகு இரண்டு முட்டை, இப்போது மூன்று முட்டை என்ற அளவிற்கு குழந்தைகளுக்குப் பள்ளிக் கூடத்திலே அவர்களுக்குப் பரிமாறப்படுகிறது. இதுதான் உண்மையான சத்துணவு என்று அவர்களுக்கு வழங்கப்படுகிறது. அவர்களும், அவர்களைப் பெற்றெடுத்த தாய்மார்களும் அதனால் மகிழ்ச்சியோடு அதைப் பெற்று, அதே மகிழ்ச்சியோடு கல்வியும் கற்கின்ற அந்த வாய்ப்பு அந்தக் குழந்தைகளுக்கெல்லாம் ஏற்பட்டிருக்கின்றது.

இதிலே ஒரு பிரச்சினை. சைவப்பிள்ளைகள் இருக்கிறார்கள். அவர்கள் முட்டை சாப்பிடுவதில்லை. இந்தப் பிரச்சினை இரண்டாண்டு காலமாக விவாதத்திலே இருக்கிறது. முட்டை சாப்பிடாத பிள்ளைகளுக்கு என்ன செய்யப்போகிறீர்கள் என்று. அதைத்தான் யோசித்து – முட்டை வேண்டாமென்று சொல்கின்ற குழந்தைகளுக்கு ஆளுக்கொரு வாழைப்பழம் நிச்சயமாக வழங்கப்படும் என்று இந்த ஆண்டிலிருந்து வாழைப்பழம் வழங்குவதாக இருக்கிறோம். அந்த வாழைப்பழத்திற்கு ஆகின்ற செலவு கிட்டத்தட்ட ஒன்னேகால் கோடி ரூபாய் அல்லது ஒன்றரைக் கோடி ரூபாய்தான் அதிகச் செலவாகும், அந்த ஒன்னேகால் கோடி ரூபாய் அதிகம் செலவாவதைப் பொருட்படுத்தாமல் இந்த அரசு முட்டை சாப்பிடாத சைவக் குழந்தைகளுக்கு வாழைப்பழம் வழங்கும் என்பதை எடுத்துச் சொல்லி, வாழைப்பழம் தனித்தனியாக வருவதாலேயே முட்டையைப்போல என்று அதிலே ஏதாவது தவறு செய்யலாம் என்று வழங்குபவர்கள் ஆரம்பித்தால், அது அந்தக் குழந்தைகளுக்கு செய்கின்ற துரோகமாக ஆகிவிடும் என்பதை மாத்திரம் நான் அப்படிப்பட்ட நண்பர்களுக்கு எடுத்துக்காட்டி – இந்தத் திட்டத்தை எந்த அளவிற்கு நல்ல எண்ணத்தோடு இந்த அரசு கொண்டு வருகிறதோ அந்த நல்ல எண்ணம், ஈடேறுகின்ற அளவிற்கு வெற்றி பெறுகின்ற அளவிற்கு நம்முடைய அரசு அலுவலர்களும் – ஆசிரியர்களும் – குழந்தைகளைத் தங்கள் வீட்டுக் குழந்தைகளாகக் கருதி அவர்களையெல்லாம் வாழ வைக்க வேண்டும்.

ஏனென்றால் பழத்தின் பெயரே "வாழ"ப்பழம் தான். வாழைப்பழத்தைக் கொடுத்துவிட்டு அவர்களை வாழச்செய்யுங்கள் என்பதற்காக அவர்களுக்கு வாழைப்பழம் கொடுக்கப்படுகின்றது. அந்தத் திட்டத்தை இன்றைக்கு ஆயிரம் விளக்கிலே நான் அறிவித்திருக்கின்றேன். ஏதோ ஸ்டாலின் தொகுதியிலேதான் அறிவிக்க வேண்டுமென்றல்ல. இதை அறிவிப்பதற்கு நான் தயாராக இருந்தேன். ஆனால் இந்தத் தொகுதியிலே அறிவிக்க வேண்டிய சந்தர்ப்பம் வாய்த்திருக்கின்றது. ஸ்டாலின் இந்தத் தொகுதியைத் தன்னுடைய தொகுதியென்றே குறிப்பிட்டார். அதைப்போல தமிழ்நாட்டிலே நாம் வெற்றி பெற்ற தொகுதியெல்லாம் நம்முடைய தொகுதிதான், என்னுடைய தொகுதிதான், ஸ்டாலின் தொகுதிதான். இங்கேயிருக்கின்ற நம்முடைய கழக முன்னோடிகளின் தொகுதிதான் என்ற அந்த முறையில் அந்தத் தொகுதிகளிலே நாம் மேலும் மேலும் ஏழையெளிய மக்களுக்கு, மாணவர்களுக்கு, இளைஞர்களுக்கு நன்மைகளைச் செய்யக் கூடிய வாய்ப்பை நீங்கள் வழங்குங்கள் என்று கேட்டு இந்த இனிய விழாவிலே கலந்து கொண்டு காமராஜருடைய பெருமையை எடுத்துச் சொல்வதிலும், காமராஜர் எந்தக் கல்விக்காகப் பாடுபட்டாரோ, அந்தக் கல்வியை வளர்ப்பதிலும், கழக அரசு கங்கணம் கட்டிக் கொண்டு கடமையை ஆற்றும் என்ற உறுதிமொழியைத் தெரிவித்து விடைபெறுகிறேன்.

❖ ❖ ❖



# மாவட்ட ஆட்சித் தலைவர்கள் மற்றும் காவல்துறை அதிகாரிகள் மாநாடு

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் **கலைஞர் மு. கருணாநிதி** அவர்கள்

2008 ஜூன் 19,20 ஆகிய நாட்களில் ஆற்றிய உரை மற்றும் எடுக்கப்பட்ட முடிவுகள்.




மாண்புமிகு அமைச்சர் பெருமக்களே !

தலைமைச் செயலாளர் அவர்களே !

காவல்துறைத் தலைமை இயக்குநர் அவர்களே !

அரசு உயர் அலுவலர்களே !

மாவட்ட ஆட்சித் தலைவர்களே !

காவல்துறை அலுவலர்களே ! நண்பர்களே !

உங்கள் அனைவருக்கும்
எனது அன்பு கலந்த வணக்கங்கள்.

தமிழக மக்களுக்கு வழங்கிய வாக்குறுதிகளை நிறைவேற்றி, சொன்னதைச் செய்ததோடு மட்டுமல்லாமல் சொல்லாததையும் செய்து மிகச்சிறந்த மனித நேய அரசாகத் திகழ்கிறது தமிழக அரசு. இந்த அரசின் மக்கள் நலத் திட்டங்களின் பயன்கள் அனைத்தையும் உரிய பயனாளிகளுக்குக் கொண்டு சேர்க்கும் பணியில் அல்லும் பகலும் அயராது பாடுபடும் மாவட்ட ஆட்சித் தலைவர்களையும், மக்களிடம் நட்பு பூண்டு, அவர்களைப் பாதுகாத்திடும் பெரும்பணியில் தங்களை ஈடுபடுத்திக் கொண்டுள்ள காவல்துறை அதிகாரிகளையும் ஒருசேர சந்தித்து உரையாடுவதில் மிகுந்த மகிழ்ச்சி அடைகின்றேன்.

இந்த அரசு கொண்டு வந்த மக்கள் நலத் திட்டங்கள் சிலவற்றை முன்மாதிரியாக எடுத்துக் கொண்டு சில மாநிலங்கள் செயல்படுத்தி வருவதை அண்மையில் நீங்கள் ஏடுகளில் படித்திருக்கலாம். குறிப்பாக ஒரு கிலோ அரிசி 2 ரூபாய்க்கு வழங்கும் திட்டத்தை ஆந்திர மாநில அரசு அண்மையில் தொடங்கியிருக்கிறது; இப்படி நம்மை, நம் மாநிலத்தைப் பிற மாநிலங்கள் பின்பற்றுவதற்குக் காரணம், அத்திட்டங்களை வகுத்துத் தந்த இந்த அரசு மட்டுமல்ல; அதனை முறையாக, சரியாக, செம்மையாக நிறைவேற்றி வரும் அரசு அதிகாரிகளான நீங்களும்தான் என்பதை நான் மிக நன்றாக அறிவேன்.

அரசுத் திட்டங்கள், பல துறைகளின் கூட்டு முயற்சியின் மூலம் செயல்படுத்தப்பட வேண்டிய ஒன்றாகும். பாதாளச் சாக்கடைத் திட்டத்தை எடுத்துக்கொண்டால், இதில் நிலம் வழங்குவதற்கு வருவாய்த்துறை, திட்ட அறிக்கை வழங்குவதற்கு குடிநீர்



வடிகால் வாரியம், மாசுக் கட்டுப்பாட்டுச் சான்று வழங்குவதற்கு மாசுக் கட்டுப்பாட்டு வாரியம் என்று பல துறைகள் சம்பந்தப்பட்டுள்ளன. இது போன்ற பெரும் திட்டங்களில் ஒவ்வொரு துறையும் தனித் தனியாகச் செயல்படாமல், அனைத்துத் துறைகளும் ஒருங்கிணைந்து செயல்பட்டால் இத்திட்டங்கள் தாமதப்படாமல், விரைந்து நிறைவேறி மக்களுக்கு நன்மை பயக்கும். இந்த ஒருங்கிணைக்கும் பொறுப்பை நிறைவேற்ற மாவட்ட ஆட்சித் தலைவர்கள் தங்களது மாவட்டங்களில் நடைபெறும் பெரும் திட்டங்கள் குறித்து சம்பந்தப்பட்ட துறைகளுடன் ஆய்வுக் கூட்டங்கள் நடத்தி, தேவைப்பட்டால் அரசுடன் தொடர்பு கொண்டு தடைகளை விரைவில் தீர்த்து வைத்து முன்னேற்றம் காண வேண்டும். தீர்க்க முடியாத சிக்கல்கள் என நீங்கள் கருதும்பட்சத்தில், எந்த நேரத்திலும் என்னையே நேரடியாகத் தொடர்பு கொண்டு தகுந்த அறிவுரைகளைப் பெறுவதற்கும் தயங்க வேண்டிய அவசியமில்லை.

**சட்டம் ஒழுங்கு நிலை**

தமிழ்நாட்டில் சட்டம் மற்றும் ஒழுங்கு செம்மையாகப் பேணப்பட்டு தமிழகம் அமைதியின் தொட்டிலாகத் திகழ்கிறது என அனைவரும் பாராட்டுகின்றனர். இப்பாராட்டு மேலும் பொலிவுபெற வேண்டுமெனில், கடுங்குற்றம் புரிவோர், கூலிப் படையாகிக் கொடுங் குற்றங்களில் ஈடுபடுவோர், பொதுமக்களை அச்சுறுத்தும் சமூக விரோதிகள் ஆகியோரின் போக்கிற்கு நிரந்தரமாக முற்றுப்புள்ளி வைத்திட காவல்துறையினர் காலதாமதமின்றிச் சட்டப்பூர்வமான நடவடிக்கைகள் அனைத்தையும் மேற்கொண்டு, பொதுமக்களிடையே நம்பிக்கையை வளர்க்க வேண்டும் என இத் தருணத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

மாநிலத்தில் நிலவும் பொது அமைதியைக் குலைத்திடும் தீய நோக்கத்துடன் சில சமூக விரோதிகள், நாடு போற்றும் தலைவர்களின் சிலைகளை அவ்வப்போது சேதப்படுத்தியும் சிதைத்தும் தேவையற்ற சட்டம் ஒழுங்குப் பிரச்சினைகளை உருவாக்கி வருகின்றனர். பொதுமக்களின் அமைதியான வாழ்விற்கு எதிராக, இவ்வாறு செயல்படுபவர்களை இனங்கண்டு, விரைவாகவும் உடனடியாகவும் செயல்பட்டு, அவர்கள் மீது குண்டர்கள் தடுப்புச் சட்டத்தின்கீழ், சட்டப்படியான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் எனக் கேட்டுக் கொள்கிறேன்.

கள்ளச்சாராயம் மற்றும் போலி மதுபானங்களைத் தயாரிப்பவர்கள், விற்பவர்கள் மீது தயவு தாட்சண்யமின்றிக் கடும்நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் வலியுறுத்திட விரும்புகிறேன்.

பெருகிவரும் சாலை விபத்துகளைக் குறைக்கவும், விபத்துகள் நேராவண்ணம் உரிய பாதுகாப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளவும் சம்பந்தப்பட்ட



துறைகள் அனைத்தும் ஒருங்கிணைந்து செயல்பட்டு உயிரிழப்புகள் நிகழ்வதைத் தடுத்திடச் சிறப்பு நடவடிக்கைகளை எடுத்திட வேண்டும்.

காவல் நிலையங்களுக்குப் புகார் அளிக்க வரும் பொதுமக்களைக் கண்ணியமாகவும், மரியாதையுடனும் நடத்திட வேண்டுமென நான் ஏற்கெனவே காவல் துறைக்கு அறிவுரைகள் வழங்கியுள்ளேன். மேலும், முதல் தகவல் அறிக்கையைப் பதிவு செய்வதில் காலதாமதமோ அலைக்கழித்தலோ கூடாது எனவும், அறிவுறுத்தியுள்ளேன். இந்த அறிவுரைகளின்படி, காவல்துறை பொதுமக்களின் உண்மையான நண்பனாகத் திகழ வேண்டும் என்ற எனது அவாவை நிறைவேற்றுவதில் அக்கறையுடனும், ஆர்வத்துடனும் செயலாற்ற வேண்டுமெனக் காவல்துறை அதிகாரிகளிடம் வலியுறுத்திட விரும்புகிறேன்.

சொத்துத் தகராறு, விலை மதிப்பு உயர்ந்துவரும் நில பேரங்கள், நிலமாற்றம் போன்ற உரிமையியல் வழக்குகளிலும், கட்டப்பஞ்சாயத்து போன்ற சட்டத்திற்குப் புறம்பான செயல்களிலும் காவல்துறையினர் எக்காரணம் கொண்டும் ஈடுபடவே கூடாது எனக் கடந்த காலங்களில் காவல் துறையினரின் உயர் அலுவலர்களின் கூட்டத்தில் கூறியவற்றை நினைவுபடுத்திட விரும்புகிறேன்.

**காவல் கைதி மரணங்கள்**

சட்டத்தின் ஆட்சியும், ஒவ்வொரு தனி மனிதனின் சுதந்திரமும், உரிமைகளும் மக்களாட்சித் தத்துவத்தின் அடிப்படைகளாகும். இவை வலுப்பெற மனித உரிமைகள் எவ்வகையிலும் மீறப்படாமல் காவல் துறையினர் தம்முடைய பணிகளைச் செம்மையாகச் செய்திட வேண்டும். அரசால் வழங்கப்பட்ட அறிவுரைகளைக் காவல் துறையினர் பின்பற்றி ஒவ்வொருவரும் கடமை உணர்வுடனும், மனித நேய உணர்வுடனும் செயல்பட வேண்டுமெனக் கேட்டுக் கொள்கிறேன்.

**வகுப்புவாதக் கலவரங்கள்/சாதிக்கலவரங்கள்**

வகுப்புவாதமும் சாதிய உணர்வும் தமிழ் மண்ணிலிருந்து வேரோடு ஒழிக்கப்பட வேண்டும் என்ற கொள்கை உணர்வுடன் இந்த அரசு பல்வேறு நடவடிக்கைகளை எடுத்துவருகிறது. பிரச்சினை ஏற்படும் போது தொடர்புடைய அனைவரையும் அழைத்துப் பேசி தீர்வு காண்பது, நல்லிணக்கத்தை நிரந்தரமாக உருவாக்கும்.

**அடிப்படைவாதம் மற்றும் தீவிரவாதம்**

வேலையில்லாத் திண்டாட்டம், போதிய கல்வித் தகுதியின்மை ஆகிய காரணங்களால், தடுமாறும் குணம் உடைய, எளிதில் வயப்படத்தக்க இளைஞர்களையும், பழங்குடி மக்களையும் குறிவைத்து மக்களாட்சியில் நம்பிக்கையில்லாத சில தீவிரவாத அமைப்புகள் தீவிரவாதத்தைத் தமிழ்நாட்டில் வேரூன்ற வைத்து அமைதியைக் குலைக்க முயல்வதாகத் தெரிகிறது. இத்தகைய தீவிரவாத அமைப்புகள் தமிழகத்தில் காலூன்ற எவ்வகையிலும் இடம் கொடுத்திடாமல், காவல்துறை இதனை இரும்புக் கரம் கொண்டு ஒடுக்கிட வேண்டும்.

**இலங்கை அகதிகள்**

கடந்த பல ஆண்டுகளாக இலங்கையில் நிலவிவரும் இனக்கலவரம் காரணமாகத் தமிழ்நாட்டிற்கு இலங்கைத் தமிழர்கள் அகதிகளாக வரும் நிலை தொடர்கிறது. 31.5.2008 அன்றைய நிலவரப்படி தமிழ்நாட்டிலுள்ள 117 இலங்கை அகதிகள் முகாம்களில் 73 ஆயிரத்து 433 இலங்கைத் தமிழர்கள் அகதிகளாகத் தங்கியுள்ளனர். முகாம்களில் உள்ள அடிப்படை வசதிகளைத் தொடர்ந்து நல்ல நிலையில் பராமரிப்பதுடன், சுகாதார வசதிகளை மேம்படுத்திடவும், தங்குமிடங்கள், சாலைகள், மின் வசதி ஆகியவற்றை அவ்வப்பொழுது ஆய்வு செய்து பழுதுகளை நீக்கி முகாம்களை நல்ல நிலையில் பராமரிக்க வேண்டும் எனவும் கேட்டுக் கொள்கின்றேன்.

அகதிகளாக வாழும் இலங்கைத் தமிழர்களில் சிலர், பல்வேறு ஆவணங்களைச் சட்டத்திற்கெதிரான வழிகள் மூலம் பெற்று தமிழகத்தில் சொத்து வாங்குவதில் ஈடுபடுவதாகத் தகவல்கள் அரசின் கவனத்திற்கு வந்துள்ளன. இவைகளைப் பரிசீலித்து, இந்தியக் குடிமகனாக அல்லாதவர் இவ்வுரிமைகளைத் துய்க்க வழி இல்லை என்பதை நீங்கள் உறுதி செய்திட வேண்டும். இலங்கைத் தமிழர்களிடம் நாம் பரிவு காட்டும் அதே வேளையில், அகதிகள் என்ற போர்வையில் இந்திய இறையாண்மைக்கு ஊறு விளைவிப்போரைத் தமிழகத்தில் ஊடுருவ அனுமதிக்கக் கூடாது என்பதில் காவல்துறை மிகவும் விழிப்புடன் செயல்பட வேண்டும்.

**மீனவர்கள் சர்வதேச எல்லையினைக் கடப்பதால் ஏற்படும் பிரச்சினைகள்**

இலங்கைக் கடற்பகுதியை ஒட்டிய வடக்குக் கடல் எல்லையான மன்னார்வளைகுடா, பாக் நீரிணையிலிருந்து திரிகோணமலை வரை உள்ள பகுதி இராணுவம் சார்ந்த பிரச்சினைக்குரிய மண்டலமாக அறிவிக்கப்பட்டுள்ளதாலும், தமிழக மீனவர்கள் இலங்கைக் கடற்படையால் தாக்குதலுக்கு உள்ளாவதாலும், இது மாநிலத்தில் தொடர்ந்து நிலவும் சிக்கலாகக் கருதப்படுகிறது. இப்பிரச்சினை குறித்து இந்திய அரசின் வெளியுறவுத் துறை அமைச்சகம் மற்றும் பாதுகாப்பு அமைச்சகத்திடமிருந்து பல்வேறு தகவல்கள் பெறப்பட்டுள்ளன. அவற்றின் அடிப்படையில், நம் மீனவர்களை இலங்கைக் கடற்பகுதிக்குச் செல்ல வேண்டாம் என்று அறிவுறுத்தி வருகிறோம்.

சர்வதேசக் கடல் எல்லையைத் தாண்டுவதால் ஏற்படும் அபாயங்கள் குறித்த விழிப்புணர்வுப் பிரச்சாரங்கள் மீனவர்களிடையே அடிக்கடி மேற்கொள்வதோடு, படகுகளில் செல்லும் மீனவர்கள் அனைவரும் அனைத்து ஆவணங்களையும் எடுத்துச் செல்ல வேண்டும் என அறிவுறுத்தப்பட வேண்டும்.

**முப்படை வீரர்களின் நலன்**

முப்படை வீரர்களின் நிலம், வீடு மற்றும் உற்றார் உறவினரின் நலம் முதலிய தொடர்பான பல்வேறு கோரிக்கைகளை மாவட்ட ஆட்சியர்களும், காவல்துறை கண்காணிப்பாளர்களும், கனிவோடு முன்னுரிமை வழங்கி நிறைவேற்ற வேண்டுமெனக் கேட்டுக் கொள்கிறேன்.

**பொது விநியோகத் திட்டம் மற்றும்**
**சிறப்புப் பொது விநியோகத் திட்டம்**

ஏழை எளிய மக்கள் பயன்பெறத்தக்க வகையில் தமிழக அரசு **3.6.2006** முதல் பொதுவிநியோகத் திட்டத்தில் கிலோ அரிசி ஒன்றுக்கு 2 ரூபாய்க்கு வழங்கி வருகிறது. அத்தியாவசியப் பொருள்களின் விலைவாசியைக் கட்டுப்படுத்த 14.4.2007 முதல் சிறப்புப் பொது விநியோகத் திட்டத்தைத் தமிழக அரசு தொடங்கி செயல்படுத்தி வருகிறது. அத்தியாவசியப் பொருள்களைக் கடத்தும் செயல்களில் ஈடுபடுவோர் மீதும், அதற்கு உறுதுணையாகச் செயல்படும் அலுவலர்கள் மீதும் கடுமையான நடவடிக்கைகள் எடுத்து மாவட்ட நிர்வாகமும், காவல் துறையும் ஒருங்கிணைந்து செயல்பட்டுத் தவறுகள் நிகழாமல் தடுத்திட வேண்டும்.

மேலும், போலி குடும்ப அட்டைகளைக் கண்டுபிடித்து அகற்றிடும் பணியில் மாவட்ட நிர்வாகம் ஈடுபட்டு அவற்றை நீக்கிட தீவிர நடவடிக்கை எடுக்க வேண்டும்.

**இலவச எரிவாயு இணைப்பு மற்றும்**
**எரிவாயு அடுப்பு வழங்குதல்**

எரிவாயு இணைப்பு இல்லாத குடும்பங்கள் பயனடையும் வகையில் இரட்டை அடுப்புகளுடன் கூடிய இலவச எரிவாயு இணைப்பு வழங்கும் திட்டம் 2006–2007–ல் தொடங்கப்பட்டது. இத்திட்டத்தின்கீழ் ஒதுக்கீடு செய்யப்படும் இணைப்புகளை உடனுக்குடன் வழங்கிட மாவட்ட ஆட்சித் தலைவர்கள் நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்.

**நிலமற்ற ஏழை விவசாயக் குடும்பங்களுக்கு**
**தரிசு நிலம் வழங்கும் திட்டம்**

நிலமற்ற ஏழை விவசாயக் குடும்பங்களுக்கு இலவச நிலம் வழங்கும் திட்டத்தின் கீழ், 31.5.2008 முடிய ஒரு இலட்சத்து 84 ஆயிரத்து 890 ஏக்கர் நிலம், ஒரு இலட்சத்து 56 ஆயிரத்து 974 ஏழை விவசாயக் குடும்பங்களுக்கு வழங்கப்பட்டுள்ளது. இவ்வாறு வழங்கப்பட்ட இலவச நிலத்தினை மேம்படுத்துவதற்காக மே 2008 வரை 13 கோடியே 67 இலட்ச ரூபாய் வேளாண்மைத்துறை மூலமாகச் செலவிடப்பட்டுள்ளது. இத்திட்டத்தின்கீழ், வழங்கப்பட்ட நிலங்களைப் பயன்பாட்டுக்குக் கொண்டுவர மாவட்ட ஆட்சியர்கள் தொடர் நடவடிக்கைகளை மேற்கொள்ளவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

**வீடற்ற ஏழைகளுக்கு வீட்டுமனை ஒப்படை**

கடந்த ஆண்டு ஜூலைத் திங்கள் 30 மற்றும் 31 ஆகிய நாட்களில் நடைபெற்ற மாவட்ட ஆட்சியர்கள் மாநாட்டில் 31.3.2008–க்குள் 3 இலட்சம் வீட்டுமனைப் பட்டாக்கள் வழங்கிட நிர்ணயிக்கப்பட்ட இலக்கினை மூன்று மாதங்களுக்கு முன்பாகவே நிறைவேற்றிச் சாதனை படைத்த வருவாய்த்துறை அலுவலர்களுக்கும், குறிப்பாக மாவட்ட ஆட்சியர்களுக்கும் எனது பாராட்டுகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

2006இல் இந்த அரசு பொறுப்பேற்றபின் 5 இலட்சத்து 40 ஆயிரத்து 421 ஏழைகளுக்கு இலவச வீட்டுமனைப் பட்டாக்கள் வழங்கப்பட்டுள்ளன. எனினும், பல இடங்களில் பட்டா மாறுதல், நில உடைமைச் சான்றுகள், பிறப்பு இறப்புச் சான்றுகள் போன்ற பல சான்றுகள் வழங்குவதில் ஏற்படும் தாமதங்கள் அரசின் கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டுள்ளதால், இவை தவிர்க்கப்பட வேண்டும்.

பல துறைகளில் தீட்டப்படும் திட்டங்களுக்கு நிலம் அடிப்படைத் தேவையாக உள்ளது. இந்த நிலத்தை நில எடுப்பு செய்து முடிப்பது வருவாய்த் துறையினரின் முக்கிய பணியாகும். நில எடுப்புப் பணிகள் சரியான நேரத்தில் செய்யப்படாத காரணத்தால் பல பெருந்திட்டங்கள் தாமதப்படுகின்றன. எனவே, மாவட்ட ஆட்சித் தலைவர்கள் இவை குறித்துத் தனிக் கவனம் செலுத்த வேண்டும்.

**தேசிய ஊரக வேலை உறுதித் திட்டம்**

தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தை தமிழகம் மிகச் சிறப்பான முறையில் செயல்படுத்தி உள்ளதற்காகப் பாராட்டைப் பெற்றதோடு, தமிழகத்தின் ஊரகப் பகுதிகளில் வேலைகளுக்கான கூலியாக 712 கோடி ரூபாய்க்கு மேல் செலவினம் மேற்கொள்ளப்பட்டுள்ளது. ஒரு குடும்பத்திற்கு 100 நாட்கள் வேலை வழங்க வேண்டும் என்ற மத்திய அரசின் முன்னோடித் திட்டத்தின்கீழ், இதுவரை 42 இலட்சத்திற்கும் அதிகமான குடும்பங்கள் பதிவு செய்யப்பட்டுள்ளன. இத்திட்டத்தின்கீழ், 82 சதவீதத்திற்கும் மேலாக பெண்களும், 56 சதவீதத்திற்கும் மேலாகத் தாழ்த்தப்பட்ட மற்றும் பழங்குடியினரும் பயன் பெற்றுள்ளது, இத்திட்டத்தின் வெற்றிக்குச் சான்றாகும். மாவட்ட



ஆட்சித்தலைவர்கள், வருங்காலங்களிலும் இத்திட்டத்திற்கு அதிக முன்னுரிமை அளித்திட வேண்டும்.

**சமத்துவபுரம்**

சமூக நீதியை மேம்படுத்தவும், தந்தை பெரியார் அவர்களின் சமூக, சமத்துவக் கொள்கைகளைச் செயல்படுத்திடவும் "பெரியார் நினைவு சமத்துவபுரம்" என்ற முன்னோடித் திட்டத்தினைத் தமிழ்நாடு அரசு 1997–1998–ஆம் ஆண்டில் அறிமுகப்படுத்தி, 2001–ஆம் ஆண்டு வரை மாநில அளவில் 145 சமத்துவபுரங்களை அமைத்துள்ளது. பின்னர் வந்த அரசால் இத்திட்டம் கைவிடப்பட்டது. தற்பொழுது, மேலும் 95 புதிய சமத்துவபுரங்கள் அமைக்க முடிவு செய்யப்பட்டுள்ளது. சமத்துவபுரங்களை அமைப்பதற்கு உகந்த இடத்தைத் தேர்வு செய்வதிலும், கட்டுமானப் பணிகளிலும், பயனாளிகளைத் தேர்வு செய்வதிலும் தங்களை முழுமையாக ஈடுபடுத்திக் கொள்ள வேண்டுமென மாவட்ட ஆட்சித் தலைவர்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

**மகளிர் சுய உதவிக் குழுக்கள்**

தமிழக அரசால் 1989 ஆம் ஆண்டு தொலைநோக்குப் பார்வையோடு தொடங்கப்பட்ட மகளிர் திட்டத்தின் கீழ் தற்போது 3 இலட்சத்து 67 ஆயிரத்து 256 மகளிர் சுய உதவிக் குழுக்களில் 59 இலட்சம் பெண்கள் உறுப்பினர்களாக உள்ளனர். 2006–2007 ஆம் ஆண்டு முதல் சுய உதவிக் குழுக்களை வலுப்படுத்துவதற்காக அரசு பல்வேறு நடவடிக்கைகளை எடுத்து வருகிறது.

தமிழக அரசு 2008–2009 நிதிநிலை அறிக்கையில் தகுதிவாய்ந்த 1 இலட்சத்து 50 ஆயிரம் மகளிர் சுய உதவிக் குழுக்களுக்குச் சுழல் நிதி மானியம் வழங்கிட 150 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்துள்ளது. தகுதிவாய்ந்த அனைத்துக் குழுக்களும் இத்திட்டத்தின்மூலம் சுழல் நிதி பெற மாவட்ட ஆட்சியர்கள் ஆவன செய்திட வேண்டும்.

மாநில அளவில் சுய உதவிக் குழுக்களின் வங்கிக் கடன் இணைப்பிற்கு இவ்வாண்டு 1,600 கோடி ரூபாய் இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. அனைத்து மாவட்ட ஆட்சியர்களும், வங்கியாளர்களுடன் ஆய்வுக் கூட்டங்கள் நடத்தி, இந்த இலக்கை எய்துவதோடு குழுக்களுக்குத் தொடர் கடன்கள் கிடைப்பதையும் உறுதி செய்திட வேண்டும்.

நடப்பாண்டில், மகளிர் திட்டம் மூலம் ஏழைகள் மற்றும் தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தின் கீழ் பணிபெறும் பெண் தொழிலாளர்களுக்கு முன்னுரிமை அளித்து 25 ஆயிரம் புதிய சுயஉதவிக் குழுக்களை உருவாக்கிட அரசு திட்டமிட்டுள்ளது. குழுக்கள் அதிகம் அமைக்கப்படாத பகுதிகளைக் கண்டறிந்து புதிய குழுக்களை அமைத்திடவும் நடவடிக்கை எடுத்திட வேண்டும்.

**வேலை வாய்ப்பற்ற இளைஞர்களுக்குத் தொழிற்பயிற்சி**

வேலை வாய்ப்பற்ற 25 ஆயிரம் இளைஞர்கள் வேலை வாய்ப்புப்பெற ஏதுவாக அவர்களுக்குத் தொழிற்பயிற்சி அளிப்பதற்காக 20 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இப்பயிற்சியை நல்ல முறையில் வழங்கிட, சிறந்த தொழில் நிறுவனங்களை அடையாளம் கண்டு இளைஞர்களுக்குத் தொழிற்பயிற்சி வழங்கிட மாவட்ட ஆட்சியர்கள் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்.

**வாழ்ந்து காட்டுவோம் திட்டம்**

ஏழை எளியோர் மற்றும் நலிவுற்றோரின் வாழ்வை மேம்படுத்திட உலக வங்கி நிதி உதவியுடன் "வாழ்ந்து காட்டுவோம்" திட்டம் 15 மாவட்டங்களில் உள்ள 2,480 ஊராட்சிகளில் செயல்படுத்தப்படுகிறது. திட்டப் பணிகளை மாவட்ட ஆட்சியர்கள் தீவிரமாகக் கண்காணித்துத் தரத்திலும், நடைமுறைகளிலும் எவ்விதக் குறைபாடும் இன்றித் திட்டத்தைச் செயல்படுத்திட உரிய நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்.

**அனைத்துக் கிராம அண்ணா மறுமலர்ச்சித் திட்டம்**

தமிழகத்தில் உள்ள 12 ஆயிரத்து 618 கிராம ஊராட்சிகளிலும் ஐந்து ஆண்டுகளில் அடிப்படை வசதிகளை உருவாக்கிட, அனைத்துக் கிராம அண்ணா மறுமலர்ச்சித் திட்டம் 2,500 கோடி ரூபாய் செலவில் செயல்படுத்தப்படுகிறது. இத்திட்டத்தின் கீழ், கடந்த இரண்டு ஆண்டுகளில் 5 ஆயிரத்து 74 கிராம ஊராட்சிகளில் 1,025 கோடி ரூபாய் செலவில் 79 ஆயிரத்து 253 பணிகள் எடுத்துக் கொள்ளப்பட்டு நிறைவேற்றப்பட்டுள்ளன. மேலும், 2,521 கிராம ஊராட்சிகளில் 509 கோடி ரூபாய் செலவில், அனைத்துக் கிராம அண்ணா மறுமலர்ச்சித் திட்டம், நடப்பாண்டில் செயல்படுத்தப்படுகிறது.

**அனைத்துப் பேரூராட்சி அண்ணா மறுமலர்ச்சித் திட்டம்**

அனைத்துப் பேரூராட்சி அண்ணா மறுமலர்ச்சித் திட்டம் 2007–2008 முதல் 2010–2011 வரையிலான 4 ஆண்டுகளில் மொத்தம் 561 பேரூராட்சிகளில் செயல்படுத்திட திட்டமிடப்பட்டு, முதல் ஆண்டில் 40 கோடி ரூபாய் செலவில் 140 பேரூராட்சிகளிலும், இரண்டாம் கட்டமாக நடப்பு ஆண்டில் மேலும் 70 கோடி ரூபாய் செலவில் 140 பேரூராட்சிகளிலும் செயல்படுத்தப்பட்டுவருகிறது.

இத்திட்டத்தை, நிதிநிலையில் நலிந்த 30 நகராட்சிகளில் நடப்பு 2008–2009ஆம் ஆண்டில் செயல்படுத்திட முடிவெடுக்கப்பட்டுள்ளது.

எனவே, கிராம ஊராட்சிகள், பேரூராட்சிகள், நகராட்சிகளில் அனைத்து அடிப்படை வசதிகளையும் அளிக்க முனையும் இத்திட்டத்தின்கீழ் நிர்ணயிக்கப்பட்ட கால அளவுக்குள் அனைத்துப் பணிகளையும் முடித்திடத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்.

**இலவச வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டி வழங்கல்**

கடந்த இரண்டு ஆண்டுகளில் 694 கோடி ரூபாய் செலவில் 25 இலட்சத்து 30 ஆயிரம் இலவச வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகள் வழங்கப்பட்டு, மூன்றாம் கட்டமாக 750 கோடி ரூபாய் செலவில் 34 இலட்சத்து 25 ஆயிரம் இலவச வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகள் வழங்கும் பணி 16.2.2008–முதல் தொடங்கி இதுவரை 13 இலட்சத்து 90 ஆயிரம் குடும்பங்களுக்கு வழங்கப்பட்டுள்ளன.

இத்திட்டத்தின்கீழ் மாவட்ட ஆட்சித் தலைவர்கள் இலவச வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகளை எவ்வித புகாருக்கும் இடந்தராமல் விரைந்து விநியோகம் செய்திட ஆவன செய்ய வேண்டும்.

**பள்ளிகளில் கழிப்பறை வசதி**

18.9.2006 அன்று நடைபெற்ற மாவட்ட ஆட்சித் தலைவர்கள் மாநாட்டின் தலைமை உரையில் "அடுத்த இரண்டு ஆண்டுகளில் கழிப்பறை வசதி இல்லாத பள்ளிகள் தமிழ்நாட்டில் எங்கும் இல்லை என்ற நிலையை ஏற்படுத்துவோம்" என்று தெரிவித்திருந்தேன். அந்த அறிவிப்பினைச் செயல்படுத்துவது தொடர்பாக பல்வேறு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இப்பணிகளை 2008–2009ஆம் ஆண்டிற்குள் முடித்திட அனைத்து மாவட்ட ஆட்சித் தலைவர்கள் ஆவன செய்திட வேண்டும்.

**தேசிய வேளாண்மை அபிவிருத்தித் திட்டம்**

வேளாண்மை உற்பத்தியில் 4 விழுக்காடு வளர்ச்சி விகிதத்தை அடையவும், விவசாயிகளின் வருமானத்தை உயர்த்தவும், தேசிய வேளாண் அபிவிருத்தித் திட்டத்தை 185.31 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீட்டில் மேற்கொள்ள மத்திய அரசு ஒப்புதல் வழங்கியுள்ளது. மாவட்ட ஆட்சியர்கள் இந்த நிதியை முழுமையாகப் பயன்படுத்தி மாநிலத்தின் வேளாண் உற்பத்தியையும், விவசாயிகளின் நலத்தையும் பெருக்க வேண்டும்.

**உழவர் சந்தைகள்**

2007–2008ல் 50 உழவர் சந்தைகள் புதிதாக அமைக்கப்படும் என்று அரசு அறிவித்து அவற்றைப் புதிதாகத் தொடங்கிட ஆணைகள் வெளியிடப்பட்டன.

இந்த புதிய உழவர் சந்தைகளை விரைவில் அமைத்திட எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் குறித்தும், உழவர் சந்தைகளின் செயல்பாட்டை மேலும் எவ்வாறெல்லாம் சிறப்புற மேம்படுத்திடலாம் என்பது பற்றியும் உரிய ஆலோசனைகளை மாவட்ட ஆட்சியர்களிடமிருந்து எதிர்பார்க்கிறேன்.

**நிலத்தடி நீர் செறிவூட்டுத் திட்டம்**

நிலத்தடி நீர் செறிவூட்டுத் திட்டத்தினைத் திறம்படச் செயல்படுத்திட, தகுதியுள்ள அரசுசாரா தொண்டு நிறுவனங்களைத் தெரிவு செய்து, பணிகள் தரம் உள்ளதாகவும், உரிய காலத்தில் செய்து முடிக்கவும் ஏதுவாக, தொடர்ந்து கண்காணித்திட வேண்டும். மேலும், மாநிலங்களுக்குள் ஓடும் நதிகளை இணைக்கும் திட்டத்தின்கீழ் நிலம் கையகப்படுத்த வேண்டிய இனங்களில் சம்பந்தப்பட்ட நில உரிமையாளர்களை மாவட்ட ஆட்சியர்கள் அழைத்துப் பேசி எந்தவித இடையூறும் இல்லாமல் நிலங்களை கையகப்படுத்துவதற்கும், திட்டங்களை விரைந்து நிறைவேற்றுவதற்கும் நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறும் கேட்டுக் கொள்கிறேன்.

**வருமுன் காப்போம் திட்டம்**

"வருமுன் காப்போம் திட்டம்" மிகச் சிறப்பாக நடைபெற்று வருகிறது. மூன்று ஆண்டுகளில் 9,000 முகாம்கள் நடத்தத் திட்டமிடப்பட்டு இதுவரை 6,773 முகாம்கள் நடைபெற்று உள்ளன. இம்முகாம்களில் ஏறத்தாழ 69 இலட்சம் மக்கள் கலந்து கொண்டு பயனடைந்துள்ளனர். எஞ்சிய இலக்கையும் அடைய தனிக் கவனம் செலுத்துமாறு மாவட்ட ஆட்சித் தலைவர்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

**மருத்துவமனைகளில் ஆய்வு**

மாவட்ட ஆட்சித் தலைவர்கள் மருத்துவ மனைகளில் அவ்வப்போது ஆய்வுகளை மேற்கொண்டு மருத்துவர்கள் பணியில் இருப்பதையும், உயிர்காக்கும் மருந்துகள் போதுமான அளவில் இருப்பு உள்ளதையும் உறுதி செய்து கொள்ள வேண்டும்.

**டாக்டர் முத்துலட்சுமி ரெட்டி மகப்பேறு நிதியுதவித் திட்டம்**

டாக்டர் முத்துலட்சுமி ரெட்டி மகப்பேறு நிதியுதவித் திட்டம் சிறப்பாகச் செயல்பட்டு அனைவரின் பாராட்டையும் பெற்றுவருகிறது. இந்நிதியுதவித் திட்டத்தின் கீழ் நிதியுதவி பெற கர்ப்பிணிப் பெண்கள் வருமானச் சான்றிதழ் கொண்டு வரவேண்டும் என்ற நடைமுறை இருந்து வந்தது. இந்த நடைமுறையினால் கர்ப்பிணிப் பெண்களுக்கு ஏற்படும் சிரமத்தைத் தடுத்திட வருமானச் சான்றிதழ் கொண்டுவர வேண்டும் என்பதை நீக்கி, கிராம சுகாதார செவிலியர்களின் சான்றுகளின் அடிப்படையிலேயே நிதியுதவியினை வழங்கலாம் என அரசு ஏற்கெனவே அறிவித்துள்ளது. எனவே, இந்தத் திட்டத்தின்கீழ், தாமதமின்றி நிதியுதவி வழங்கிட நடவடிக்கைகள் மேற்கொள்ளுமாறு மாவட்ட ஆட்சித் தலைவர்களைக் கேட்டுக் கொள்கின்றேன்.



**சத்துணவுடன் வாரம் மூன்று முட்டைகள் வழங்கும் திட்டம்**

பள்ளிகளில் குழந்தைகளுக்குச் சத்துணவுடன் வாரம் மூன்று முறை முட்டை வழங்கும் திட்டத்தில் முட்டைகள் முறையாக வழங்கப்படுகிறதா என்று மாவட்ட ஆட்சித் தலைவர்கள் மற்றும் சார்நிலை அலுவலர்கள் நேரடியாக ஆய்வு செய்ய வேண்டும்.

**மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் நினைவு திருமண நிதியுதவித் திட்டம்**

வறுமையில் வாடும் பெற்றோர்கள் தங்கள் பெண்களின் திருமணத்திற்கென நிதியுதவி பெறவும், பெண்களின் கல்வி நிலையினை மேம்படுத்து வதற்காகவும் இவ்வரசால் 3.6.1989ல் மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் நினைவு திருமண நிதியுதவித் திட்டம் தொடங்கப்பட்டது.

ஏழைப் பெண்கள் 10 ஆம் வகுப்பு வரை கல்வி பயில்வதை ஊக்குவிக்கவும், வறிய நிலையில் உள்ள பெற்றோர்களுக்கு உதவிடும் வகையிலும், 3.6.2006 முதல் இத்திட்டத்தை மீண்டும் செயல்படுத்தி, நிதியுதவி 20.3.2008லிருந்து 20 ஆயிரம் ரூபாயாக உயர்த்தப்பட்டுள்ளது. இத்திட்டத்தில் நிதியுதவி பெற குடும்ப ஆண்டு வருமானம் 12 ஆயிரம் ரூபாய் என்பது 24 ஆயிரம் ரூபாயாகவும் உயர்த்தப்பட்டுள்ளது.

இத்திட்டத்தின்கீழ் பயனாளிகளுக்கு நிதியுதவி தங்குதடையின்றிக் கிடைத்திட மாவட்ட ஆட்சியர்கள் தனிக் கவனம் செலுத்திட வேண்டும்.

**ஆதிதிராவிடர், பழங்குடியினர், சிறுபான்மையினர் உள்ளிட்ட பிற்படுத்தப்பட்ட வகுப்பு மக்களுக்கான நலத்திட்டங்கள்**

சமுதாயத்தின் அடித்தளத்தில் உள்ள மக்களுக்கு சமூக நீதி வழங்குவது மற்றும் அதிகாரமளிப்பது ஆகியவற்றில் இந்த அரசு எப்பொழுதும் கவனம் செலுத்தி வந்துள்ளது. ஆதிதிராவிடர், பழங்குடியினர், சிறுபான்மையினர் உள்ளிட்ட பிற்படுத்தப்பட்ட வகுப்பு மக்களின் சமூக, கல்வி மற்றும் பொருளாதார முன்னேற்றத்திற்கான பல்வேறு நலத் திட்டங்களின் பயன்கள், குறிப்பாக கல்வி உதவித் தொகை, இலவசப் பாடப் புத்தகங்கள், சீருடைகள் மற்றும் இலவச மிதிவண்டிகள் உரிய காலத்தில் மாணவ, மாணவியருக்கு வழங்கப்படுவதை மாவட்ட ஆட்சித் தலைவர்கள் கண்காணிக்க வேண்டும்.

அரசு மாணவர் விடுதிகளில் தங்கிப் பயில்வோருக்கான உணவுக் கட்டணம் கடந்த இரண்டு ஆண்டுகளில் கணிசமாக உயர்த்தப்பட்டுள்ளது. மாணவ, மாணவியருக்குத் தரமான உணவு வழங்கப்படுவதை மாவட்ட ஆட்சித் தலைவர்கள் உறுதி செய்திட வேண்டும். அரசு மாணவர் விடுதிகளை அடிக்கடி மாவட்ட ஆட்சித் தலைவர்கள் நேரில் ஆய்வு செய்து விடுதி மற்றும் பள்ளிக் கட்டடங்களின் உறுதித் தன்மையைச் சரிபார்த்துப் பழுதுபார்ப்பு மற்றும் பராமரிப்புப் பணிகளை மேற்கொள்ளவேண்டும். அதே போன்று புதிய விடுதிகளைக் கட்டுவதற்குத் தேவைப்படும் நிலத்தைக் கையகப்படுத்தும் பணிகளையும் துரிதப்படுத்திட வேண்டும்.

**நல வாரியங்கள்**

விவசாயத் தொழிலாளர் நல வாரியம், கட்டுமானத் தொழிலாளர் நலவாரியம், உடலுழைப்புத் தொழிலாளர் நலவாரியம் உட்பட 23 அமைப்புசாராத் தொழிலாளர் நல வாரியங்களில் உறுப்பினர்கள் சேர்க்கப்படுவதுடன், இந்த வாரியங்கள் மூலம் தொழிலாளர்களுக்குக் கிடைக்க வேண்டிய பயன்கள் உடனுக்குடன் கிடைக்க ஆவன செய்வதிலும் மாவட்ட ஆட்சியர்கள் தனிக்கவனம் செலுத்திட வேண்டும்.

**பெரும்பரப்பு வலையமைப்பு (TNSWAN)**

தமிழக அரசு மைய அரசுடன் இணைந்து தமிழ்நாடு பெரும்பரப்பு வலையமைப்பு (TNSWAN) என்ற முக்கிய இணைப்பை (Backbone Connectivity) உருவாக்கி, அதன்மூலம் அனைத்து மாவட்டங்கள், வட்டத் தலைமையிடங்கள், வட்டாரத் தலைமையிடங்கள் ஆகியவை இணைக்கப்பட்டுள்ளன. இந்தியாவிலேயே முதன்முறையாக இத்திட்டத்தினைச் செயல்படுத்திய மாநிலம் தமிழ்நாடுதான் என்பதை அறிவிப்பதில் மகிழ்ச்சி அடையும் அதே தருணத்தில் தமிழகத்தின் கிராமப்புறச் சேவைகள் கணினிமயமாவதை விரைவுபடுத்துவது உங்கள் கடமை என்பதையும் கருத்தில் கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

**சாலைகள் பராமரிப்பு**

இந்த அரசு பொறுப்பேற்றபின் சாலை மேம்பாட்டிற்காக ஒவ்வொரு ஆண்டும் நிதி ஒதுக்கீட்டினை அதிகரித்து வருகிறது. நடப்பு நிதியாண்டில் சாலைப் பராமரிப்புக்காக 849 கோடி ரூபாய்க்குமேல் ஒதுக்கீடு செய்து, அதில் நெடுஞ்சாலைத் துறைக்கு 746 கோடி ரூபாயும், ஊரக வளர்ச்சித் துறைக்கு 104 கோடி ரூபாயும் அனுமதிக்கப்பட்டுள்ளது.

மேலும், திட்டப் பணிகளுக்கும், சாலை பராமரிப்புப் பணிகளுக்குமான ஒதுக்கீட்டினை அதிகரித்ததன் மூலம் தமிழ்நாட்டிலுள்ள அரசுச் சாலைகளைச் சுழற்சி முறையில் 5 ஆண்டுகளுக்கு ஒரு முறை புதுப்பிக்கும் வாய்ப்பினை இவ்வரசு உருவாக்கியுள்ளது. இதனைப் பயன்படுத்திச் சாலைகளை நன்கு பராமரிக்க நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்.

**அரசின் நலத் திட்டங்கள் பற்றிய விழிப்புணர்வு**

தமிழக அரசு நாட்டிற்கே முன்னோடியாக உருவாக்கியுள்ள திட்டங்களினால் விளைந்துள்ள நன்மைகளைப் பயனாளிகள் தாமே முன்வந்து விவரிப்பது போன்ற செய்திக் கட்டுரைகளை முக்கிய செய்தித்தாள்களில் வெளிவரச் செய்வதற்கு, மாவட்டந்தோறும் இயங்கும் மக்கள் தொடர்பு அலுவலகத்தை மாவட்ட ஆட்சித் தலைவர்கள் பயன்படுத்திக் கொள்ளவேண்டும்.

**தமிழ் ஆட்சி மொழித் திட்டம்**

எங்கும் தமிழ், எதிலும் தமிழ் என்பதை மொழிக் கொள்கையாகக் கொண்டுள்ள இந்த அரசின் ஆட்சி மொழித் திட்டச் செயலாக்கத்திற்கு ஒத்துழைப்பு நல்கும் வகையில் நடத்தும் ஆய்வுக் கூட்டங்களிலும் கடிதப் போக்குவரத்துகளிலும் தமிழையே பயன்படுத்த வேண்டும்.

**பால் கொள்முதல்**

கடந்த ஆண்டு மே திங்களுடன் ஒப்பிடுகையில், 11 மாவட்ட ஒன்றியங்களில் பால் கொள்முதலில் மிகுந்த பின்னடைவு ஏற்பட்டுள்ளது. தனி அலுவலர் என்ற முறையில் மாவட்ட ஆட்சியர்கள் இந்தக் குறைகளைப்பட தனிக்கவனம் செலுத்துதல் வேண்டும். பால் ஒன்றியத்தால் பால் கொள்முதல் வழித்தடங்களை மற்ற மாவட்டங்களுக்கு விரிவாக்கும் பொருட்டு மாவட்ட ஆட்சியர்கள் பிற மாவட்ட ஆட்சியர்களின் ஒத்துழைப்பினைப் பெறவேண்டும்.

**கால்நடைப் பாதுகாப்புத் திட்டம்**

நடப்பு ஆண்டில் 5,500 கால்நடைப் பாதுகாப்புத் திட்ட முகாம்கள் 2.49 கோடி ரூபாய் திட்ட ஒதுக்கீட்டில் நடத்தப்படத் திட்டமிடப்பட்டுள்ளது. இத்திட்டத்தை வெற்றிகரமாகச் செயல்படுத்திட ஏதுவாக முகாம் நடைபெறும் கிராமங்களை மாவட்ட ஆட்சியர்கள் தேர்வு செய்திட வேண்டும்; சில முகாம்களுக்குச் சென்று முகாம்கள் சரிவர நடைபெறுகிறதா என்பதையும் உறுதி செய்திட வேண்டும்.

திட்டப் பணிகளின் பயன்கள் மக்களை முழுமையாகச் சென்றடைய வேண்டுமெனில் அனைத்து மாவட்ட ஆட்சித் தலைவர்களும் அதிக அளவில் களப்பணிகளை ஆய்வு செய்து, தீவிரமாகக் கண்காணித்திட வேண்டும். அப்போதுதான் அரசுப் பணிகள் செம்மையாக நடைபெறும்.

அதுமட்டுமல்லாமல், மாவட்ட ஆட்சியர்கள் மற்றும் காவல்துறைக் கண்காணிப்பாளர்கள் மக்களால் எளிதில்





அணுகத்தக்கவர்களாகவும், மக்களுடைய குறைகளை, பிரச்சினைகளை கனிவுடன் அணுகி உடனுக்குடன் தீர்க்கும் தன்மை உடையவர்களாகவும் இருக்க வேண்டும். ஏழை எளிய மக்களுக்கும், அரசுக்கும் இடையே ஒரு நல்லுறவுப் பாலமாக நீங்கள் திகழ வேண்டும் என்பதே என்னுடைய அவா.

பேரறிஞர் அண்ணா அவர்களின் பொன்மொழி ஒன்றை இங்கே குறிப்பிட்டு எனது உரையை நிறைவு செய்வது பொருத்தமாக இருக்கும் என்று கருதுகிறேன்.

"கடலுக்காக அல்ல; கடற்கரையிலே இருக்கின்ற மக்களுக்காக காற்றடிக்கின்றது. விளக்கு ஏற்றினால், தன் எதிரிலே இருக்கின்ற இருட்டைப் போக்க ஒளி பயன்படுமே தவிர அதன் அடியில் இருக்கின்ற நிழலைப் போக்கமுடியாது! அது போல, நம்மிடத்திலே இருக்கின்ற திறமை நமக்காக அல்ல; நாட்டு மக்களுக்காக! அந்த மக்களுக்காக! அந்த வகையில் நாம் ஒவ்வொருவரும் பணியாற்றுவோம்!"

எனவே, துறைச் செயலாளர்கள், காவல்துறை உயர் அலுவலர்கள், துறைத் தலைவர்கள், மாவட்ட ஆட்சியர்கள், காவல்துறைக் கண்காணிப்பாளர்கள் மற்றும் ஏனைய அரசுப் பணியாளர்கள் அனைவரும் நாட்டு மக்களுக்குப் பயன்படும் வகையில் தங்கள் பணியை ஆற்றிட வேண்டுமென கேட்டுக்கொண்டு, இந்த மாநாட்டைத் தொடங்கி வைத்து, உங்கள் கருத்துகளை வரவேற்று அமைகிறேன்.

★ ★ ★

**மாண்புமிகு முதலமைச்சர்**
**கலைஞர் மு.கருணாநிதி அவர்களின் தலைமையில் 19.6.2008 அன்று நடைபெற்ற மாவட்ட ஆட்சித் தலைவர்கள் மற்றும் காவல்துறை அதிகாரிகளின் முதல்நாள் மாநாட்டில் கலந்தாலோசனைக்குப் பின்னர் மேற்கொள்ளப்பட்ட முடிவுகள் :**

முதலில் தமிழக அரசு செயல்படுத்திவரும் மிகப்பெரிய திட்டங்கள் அதாவது "மெகா" திட்டங்கள் குறித்த ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. ஒகேனக்கல் கூட்டுக் குடிநீர்த் திட்டத்தைப் பொறுத்தவரை, ஏற்கெனவே தருமபுரியில் 'திட்ட அலுவலகம்' தொடங்கப்பட்டுள்ள நிலையில், ஜப்பான் வங்கியின் ஒப்புதலுடன் இறுதி செய்யப்பட்டுள்ள கால அட்டவணைப்படி மற்ற அனைத்துச் செயல்பாடுகளையும் மேற்கொண்டு திட்டத்தை நிறைவேற்றுவதெனவும்;

இராமநாதபுரம் கூட்டுக் குடிநீர்த் திட்டத்தை, 2009 ஏப்ரல் மாதத்திற்குள் நிறைவேற்றி புதுக்கோட்டை, சிவகங்கை, இராமநாதபுரம் மாவட்ட மக்களின் பயன்பாட்டுக்கு அர்ப்பணிப்பதென்றும்;

கோவையில் அமையவுள்ள உலகத் தரத்திலான மத்தியப் பல்கலைக்கழகத்திற்குத் தேவையான நிலத்தையும்; திருச்சியில் அமையவுள்ள மேலாண்மைக்கான மத்திய நிறுவனத்திற்கு (I.I.M.) தேவையான நிலத்தையும் மிக விரைவாகத் தேர்வு செய்து மத்திய அரசுக்குத் தெரிவிப்பதென்றும்;

திருவாரூரில் அமையவுள்ள மத்தியப் பல்கலைக் கழகத்தை இந்த ஆண்டே தொடங்கி நடத்துவதற்கு மத்திய அரசு முன்வந்துள்ள நிலையில், நிரந்தரக் கட்டடங்கள் கட்டப்படுவதற்கு முன்பு தற்காலிகமாகக் கட்டட வசதிகளை உடனடியாக ஆய்வு செய்து மத்திய அரசுக்கு அறிவிப்பதென்றும்;

பெரம்பலூர், விழுப்புரம், திருவாரூர், சிவகங்கை ஆகிய மாவட்டங்களில் அமையவுள்ள மருத்துவக் கல்லூரிகளுக்கான நிலங்களை உடனடியாக ஒப்படைக்க உரிய நடவடிக்கைகளை மாவட்ட ஆட்சியர்கள் மேற்கொள்வதென்றும்;

சென்னை அரசுப் பொது மருத்துவமனையில் நெரிசலைக் குறைக்கும் வகையில், பெண்களுக்கான சிறப்பு மருத்துவமனை, முதியோர்களுக்கான சிறப்பு மருத்துவமனை, வெளிநோயாளிகளுக்கான சிறப்புப் பிரிவு, சூப்பர் ஸ்பெஷாலிட்டி மருத்துவமனை ஆகிய மருத்துவமனைகளை பழைய மத்திய சிறை இருந்த இடத்தில் 10 ஏக்கர் பரப்பளவில் அமைப்பதற்கான நடவடிக்கைகளை விரைவு படுத்துவதென்றும்; ஸ்டான்லி மருத்துவக் கல்லூரிக்கான புதிய கட்டட வசதிகளைப் பொதுப்பணித்துறைக்குரிய நிலத்தில் விரைவாக செய்து முடிப்பதென்றும்;

ஓமந்தூரார் அரசினர் தோட்டத்தில் அமையவுள்ள புதிய சட்டப்பேரவை – தலைமைச் செயலக வளாகத்திற்கான கட்டடப் பணிகளை 2008, அக்டோபர் மாதத்தில் தொடங்கி, 2010 மார்ச்சுக்குள் நிறைவு செய்வதென்றும்;

சென்னை – கோட்டூர்புரத்தில் 8 ஏக்கர் நிலப்பரப்பில் 100 கோடி ரூபாய் செலவில் அமையவுள்ள உலகத் தரத்திலான மாநில நூலகத்திற்குரிய கட்டடப் பணிகளை 2008, அக்டோபர் மாதத்தில் தொடங்கி, 2010 ஏப்ரல் மாதத்திற்குள் முழுமை செய்வதென்றும்;

சென்னையில் 100 கோடி ரூபாய் செலவில், 358 ஏக்கர் பரப்பளவில் அமையவுள்ள சுற்றுச் சூழல் அம்சங்களை அடிப்படையாகக் கொண்ட உலகத் தரத்திலான 'அடையாறு பூங்கா' அமைப்புப் பணிகளை 2010, டிசம்பர் மாதத்திற்குள் நிறைவு செய்வதென்றும்;

சென்னை, அண்ணா மேம்பாலத்திற்கு அருகில் 20 ஏக்கர் நிலப்பரப்பில் உலகத் தரம் வாய்ந்த தாவரவியல் பூங்கா அமைப்பதற்கான தொடக்கநிலைப் பணிகளை உடனடியாக மேற்கொள்வதென்றும்;

மெரினா கடற்கரை அழகுபடுத்தும் திட்டத்தையும், எலியட்ஸ் கடற்கரை அழகுபடுத்தும் திட்டத்தையும் 2009 ஜனவரி மாதத்திற்குள் நிறைவேற்றுவதென்றும்;

சென்னை விமான நிலைய விரிவாக்கப் பணிகளையும், சென்னை மெட்ரோ இரயில் திட்டத்திற்கான பணிகளையும் குறிப்பிட்ட காலத்திற்குள் நிறைவு செய்வதற்கேற்றபடி விரைவுபடுத்துவதென்றும்; முடிவுகள் மேற்கொள்ளப் பட்டுள்ளன.

சட்டம் - ஒழுங்கு சீராகப் பராமரிக்கப்பட்ட போதிலும், இதுவரை கண்டுபிடிக்கப்படாத கொடுங்குற்றங்களின் எண்ணிக்கையை வெகுவாகக் குறைத்திட - காவல் துறை கண்காணிப்பாளர்கள் புலனாய்வு நடவடிக்கைகளை நேரடியாக மேற்பார்வையிட்டு, குற்றவாளிகளை சட்டத்தின் பிடிக்குள் கொண்டுவருவதற்கான நடவடிக்கைகளை விரைந்து மேற்கொள்ள வேண்டுமென்றும்;

சென்னை மற்றும் புறநகர் பகுதிகளில் நில ஆக்கிரமிப்புகள் மற்றும் சொத்து சம்பந்தப்பட்ட வழக்குகளில், காவல்துறை எந்த அளவுக்குத் தலையிட வேண்டுமென்று வரையறை செய்திடவும், அந்த வழக்குகளைப் பாரபட்சமின்றி கையாளும் முறை பற்றியும், அவை தொடர்பான விசாரணைகளைக் காலதாமதமின்றி முடித்திடவும் கூடுதல் காவல்துறைத் தலைவர் ஒருவர் தலைமையில் குழு ஒன்றினை அமைத்து, அக்குழுவின் பரிந்துரைகளின்படி தொடர் நடவடிக்கைகளை எடுப்பதென்றும்;

தீவிரவாத சக்திகளின் செயல்பாடுகளை முளையிலேயே கிள்ளியெறியத் தேவையான சட்டரீதியான நடவடிக்கைகளை மேற்கொள்வதோடு, இதனை ஒரு சமூக பொருளாதார பிரச்சினையாக அணுகி, அதனடிப்படையில் சிறப்பு வளர்ச்சித் திட்டங்களைத் தீட்டி நடைமுறைப்படுத்துவதென்றும்;

தமிழ்நாட்டிற்கு அகதிகளாக வந்து அரசு ஆதரவில் வாழ்ந்து வருபவர்களைத் தவிர; சட்டரீதியான ஆவணங்கள் எதுவுமின்றி இருக்கும் வெளிநாட்டினரை ஒரு குறிப்பிட்ட காலக்கெடுவுக்குள் வெளியேற வேண்டுமென்று விளம்பரப்படுத்தி, அதற்குப் பிறகும் வெளியேறாமல் இங்கே இருப்பவர்கள்மீது சட்டப்படி கடுமையான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமென்றும்;

சாதி மற்றும் மதத்தின் பெயரால் கலகம் விளைவிப் பவர்கள் மீதும், கலகத்தைத் தூண்டுபவர்கள் மீதும் குண்டர் தடுப்புச் சட்டத்தின்கீழ் தயவுதாட்சண்யமின்றி நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமென்றும்;

கடலோர மாவட்டங்களின் மாவட்ட ஆட்சியர்களும், காவல்துறை கண்காணிப்பாளர்களும் தங்கள் பகுதியில் உள்ள மீனவர்கள் சர்வதேச எல்லையைக் கடந்து சென்று மீன்பிடிப்பதால் ஏற்படும் ஆபத்துகளை விளக்கி, அவர்கள் அப்படிச் செய்யாதவாறு எச்சரிக்க வேண்டுமென்றும்; படகுகள் பதிவு செய்வதை விரைவில் முடிக்க வேண்டுமென்றும்; தனியார் டீசல் பங்க்குகள் மூலமாக வழங்கப்படும் மான்ய விலை டீசல் குறித்து பங்க்குகளைத் தொடர்ந்து கண்காணிக்க வேண்டுமென்றும்;

வாகனங்களின் எண்ணிக்கை ஆண்டுதோறும் அதிகரித்து வருவதைக் கருத்தில் கொண்டு, பாதுகாப்பான சாலைப் பயணத்திற்குத் தேவையான அனைத்து நடவடிக்கைகளையும் மாவட்ட ஆட்சியர்களும், காவல்துறை அலுவலர்களும் இணைந்து மேற்கொள்ள வேண்டுமென்றும், குடித்துவிட்டு வாகனம் ஓட்டுவோர், வேகக் கட்டுப்பாட்டை மீறுவோர் ஆகியோர்மீது கடுமையான குற்ற நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டுமென்றும்; சாலை விபத்துகளைக் குறைக்கும் நோக்கத்தில் மாவட்டங்களில் உள்ள சாலைச் சந்திப்புகளிலும் மற்றும் மக்கள் அதிகமாக நடமாடும் பகுதிகளிலும் தேவையான அளவுக்கு விளக்குகளை அமைப்பது, வேகத் தடைகளை ஏற்படுத்துவது, சாலை விதிகளைப் பின்பற்றுவதற்கான எச்சரிக்கைப் பலகைகளை அமைப்பது போன்ற நடவடிக்கைகளை மாவட்ட ஆட்சியர்கள் சம்பந்தப்பட்ட துறைகளோடு இணைந்து மேற்கொள்ள வேண்டுமென்றும்; போக்குவரத்துக்குப் பயன்படும் சாலை ஓரங்களிலுள்ள ஆக்கிரமிப்புகளைப் பாகுபாடின்றி அகற்றிட வேண்டு மென்றும்;

பள்ளிக் குழந்தைகளை ஏற்றிச் செல்லும் வாகனங்கள் முறையாகப் பராமரிக்கப்படுகின்றனவா என்றும், வாகன ஓட்டுநர்கள் முறையாகப் பயிற்சி பெற்றவர்களாகவும் உரிமம் பெற்றவர்களாகவும் உள்ளனரா என்றும், வாகனங்களில் அனுமதிக்கப்பட்ட எண்ணிக்கைக்குள் குழந்தைகளை ஏற்றிச் செல்கின்றனரா என்றும் காவல்துறை கண்காணிப்பாளர்கள் பார்த்துக் கொள்ள வேண்டும்.

மாநிலத்தின் எல்லையோர மாவட்டங்களில் அமைக்கப்பட்டுள்ள சோதனைச் சாவடிகள் மூலமாக உணவுப் பொருள்களின் போக்குவரத்தைத் தீவிரமாகக் கண்காணித்து, உணவுப் பொருள்களைக் கடத்துவோர்மீது கடுமையான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமென்றும் - முடிவுகள் மேற்கொள்ளப்பட்டன.

★ ★ ★



**மாண்புமிகு முதலமைச்சர்**
**கலைஞர் மு.கருணாநிதி அவர்களின் தலைமையில்**
**20.6.2008 அன்று நடைபெற்ற**
**மாவட்ட ஆட்சித் தலைவர்கள் மற்றும்**
**காவல்துறை அதிகாரிகளின் இரண்டாம் நாள்**
**மாநாட்டில் கலந்தாலோசனைக்குப் பின்னர்**
**மேற்கொள்ளப்பட்ட முடிவுகள்:**

அரிசி போன்ற அத்தியாவசியப் பொருள்களையும், சிறப்புப் பொது விநியோகத் திட்டத்தில் வழங்கப்படும் துவரம்பருப்பு, உளுத்தம்பருப்பு, பாமாயில், செறிவூட்டப்பட்ட கோதுமை மாவு போன்ற பொருட்கள் எல்லா நியாய விலைக் கடைகளிலும் தொடர்ந்து முழுமையாகக் கிடைப்பதை உறுதி செய்வதென்றும்; சிறப்புப் பொது விநியோகத் திட்டத்தின்கீழ் வழங்கப்படும் பொருள்களைப் பற்றி பொதுமக்கள் தெரிந்து கொள்ளும் வண்ணம் விளம்பரப்படுத்துவதென்றும்; கிடங்குகளிலிருந்து உணவுப் பொருள்களை நியாய விலைக் கடைகளுக்கு எடுத்துச் செல்லும் பணியைப் பிற்பகல் இரண்டு மணிக்குள் செய்து முடிப்பதென்றும்; உணவுப் பொருள் வழங்குதுறையில் உள்ள 275 காலிப் பணியிடங்களை இன்னும் இரண்டு வார காலங்களுக்குள் நிரப்புவதென்றும்; எரிவாயு இணைப்புகள் வழங்குவதில் தாமதம் ஏற்பட்டுள்ள ஒருசில மாவட்டங்களில் அவற்றை உடனடியாக வழங்குவதற்கான ஏற்பாடுகளைச் செய்வதென்றும் முடிவு செய்யப்பட்டது.

மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் நினைவு திருமண நிதி உதவித் திட்டத்தின்கீழ் காலாண்டு நிதிக் கட்டுப்பாட்டினை அரசு தளர்த்தி உள்ளதால் - தேர்ந்தெடுக்கப்படும் பயனாளிகளுக்கு நிதிஉதவி கால தாமதமின்றி கிடைத்திடச் செய்வதென்றும்; பெருந்தலைவர் காமராஜர் பிறந்த நாளான ஜூலை 15ஆம் நாளை 'கல்வி வளர்ச்சி நாளாகக்' கொண்டாட அரசு சட்டம் நிறைவேற்றியுள்ளதைத் தொடர்ந்து, அன்றைய தினம் தமிழகத்தில் உள்ள அனைத்துப் பள்ளிகளிலும் விழாக்களுக்கு ஏற்பாடு செய்வதென்றும்; சத்துணவுத் திட்டத்திற்கான முட்டைகளை வாங்குவதில் விலை மற்றும் தரக்கட்டுப்பாட்டினை உறுதி செய்வதென்றும் முடிவு செய்யப்பட்டது.

இலவச வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகள் வழங்கும் திட்டத்தின்கீழ் தொலைக்காட்சிப் பெட்டிகள் மாவட்டங்களுக்கு வந்தவுடனேயே, பொதுமக்களுக்கு வழங்கப்பட வேண்டுமென்றும்; தொலைக்காட்சிப் பெட்டிகளின் செயல்பாடுகள் குறித்து பொய்ப் பிரச்சாரங்கள் வெளிவரும்போது அவைபற்றி உடனடியாகத் தீர விசாரித்து, வதந்திகள் பரவாதவண்ணம் அவற்றை முளையிலேயே கிள்ளி எறியத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்வ தென்றும்; இலவச வண்ணத் தொலைக் காட்சிப் பெட்டிகள் வெளிச்சந்தையில் விற்கப்படுவதாக புகார்கள் வரும்போது அவற்றின்மீது உடனடியாக தீவிரமான நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமென்றும்; கோவை, மதுரை-இலந்தைகுளம், மதுரை-வடபழஞ்சி, சேலம், திருச்சி, நெல்லை, ஒசூர் ஆகிய இடங்களில் அமையவுள்ள தகவல் தொழில்நுட்பவியல் பூங்காக்களுக்கான ஏற்பாடுகளைச் செய்வதில் மாவட்ட ஆட்சித் தலைவர்கள் முழு ஒத்துழைப்போடு ஈடுபாடு காட்டுவதென்றும்; ஆதிதிராவிடர், பழங்குடியினர், பிற்படுத்தப்பட்டோர், மிகப் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் மாணவர்களுக்குத் தகவல் தொழில்நுட்பப் பயிற்சி அளிக்கும் திட்டத்தில் மாவட்ட ஆட்சியர்கள் தம்மை முழுமையாக ஈடுபடுத்திக் கொண்டு, அதனை வெற்றிபெறச் செய்வதென்றும்; ஜூலை 15ஆம் நாள் முதல் மாவட்டங்களில் பணி தொடங்கவுள்ள அரசு கேபிள் டி.வி. கார்ப்பரேஷன் செயல்பாடுகளுக்கு மாவட்ட ஆட்சித் தலைவர்கள் தேவையான உதவிகளைச் செய்து முழுமையான ஒத்துழைப்பை வழங்குவதென்றும் முடிவு செய்யப்பட்டது.

செலவைக் குறைத்து, உற்பத்தியை அதிகரிக்கும் 'செம்மை நெல்' சாகுபடித் திட்டத்தை ஒவ்வொரு மாவட்டத்திலும் வெற்றிகரமாக நிறைவேற்றுவதென்றும்; விவசாயிகளுக்குத் தேவையான உரம், சான்றிதழ் செய்யப்பட்ட விதைகள், கூட்டுறவுக் கடன் வசதிகள் ஆகியவற்றை உரிய நேரத்தில் தேவையான அளவுக்கு வழங்குவதில் சிறப்புக் கவனம் செலுத்துவதென்றும்; கழக ஆட்சியில் ஏற்கெனவே உருவாக்கப்பட்ட 103 உழவர் சந்தைகளை குறிப்பிட்ட காலக்கெடுவுக்குள் புதுப்பித்து முழுமையாகச் செயல்பட ஏற்பாடு செய்வதென்றும்; புதிதாக அறிவிக்கப்பட்டுள்ள 50 உழவர் சந்தைகளைக் குறிப்பிட்ட காலக்கெடுவுக்குள் தொடங்கி செயல்பாட்டுக்குக் கொண்டு வருவதென்றும் முடிவு செய்யப்பட்டது.

கழக அரசின் திருப்புமுனைத் திட்டமான அனைத்துக் கிராம அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தின்கீழ், (அ) நிர்ணயிக்கப்பட்டுள்ள கட்டாயப் பணிகளில் ஒருசில மாவட்டங்களில் பின்னடைவு காணப்படுவதால் அவற்றை விரைவாகத் தவிர்த்து, இலக்கினை முழுமையாக அடைவ தென்றும்; (ஆ) ஒதுக்கப்பட்டுள்ள நிதியினை முழுமையாகச் செலவு செய்வதென்றும்; தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தின்கீழ் 13.5.2006 வரை, அதாவது கழக அரசு பொறுப்பேற்கும்வரை 3 கோடி ரூபாய் மட்டுமே செலவழிக் கப்பட்டிருந்த நிலையில், கழக அரசு பொறுப்பேற்றதற்குப் பிறகு ஜனவரி 2007இல் செலவழிக்கப்பட்ட தொகை 110 கோடி ரூபாயாகவும், ஜனவரி 2008இல் 562 கோடி ரூபாயாகவும், 31.5.2008 இல் 711 கோடி ரூபாயாகவும் உயர்ந்து வருவதை கருத்தில்கொண்டு, அனைத்து மாவட்ட ஆட்சித் தலைவர்களும் நிர்ணயிக்கப்பட்ட இலக்கை கூடுதல் முனைப்புடன் செயல்பட்டு எய்துவதென்றும்; 1989ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம்

தருமபுரி மாவட்டத்தில் கழக ஆட்சியில் தொடங்கப்பட்ட சுயஉதவிக் குழு இயக்கத்தின் கீழ், 30.4.2008 வரை 51 இலட்சம் மகளிரை உறுப்பினர்களாகக் கொண்ட 3 இலட்சத்து 68 ஆயிரம் சுயஉதவிக் குழுக்கள் இயங்கிவரும் நிலையில், அனைத்துத் தகுதி வாய்ந்த சுயஉதவிக் குழுக்களுக்கும் இவ்வாண்டு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள 150 கோடி ரூபாய் சுழல் நிதியை வழங்குவதை மாவட்ட ஆட்சியர்கள் தீவிரமாகக் கண்காணிப்பதென்றும்; மகளிர் சுயஉதவிக் குழுக்களுக்கு வங்கிகள் வழங்கும் மறுகடன் அளவினைக் கண்காணித்து, வங்கிக் கடன் இலக்கினை முழுமையாக அடைவதென்றும்; புதியதாக அமைக்கத் திட்டமிடப்பட்டுள்ள பெரியார் நினைவு சமத்துவபுரங்களை இதுவரை சமத்துவபுரம் அமைக்கப்படாத வட்டாரங்களில் இடம் தேர்வு செய்து உருவாக்கிட மாவட்ட ஆட்சித் தலைவர்கள் அனைத்து முயற்சிகளையும் மேற்கொள்ள வேண்டுமென்றும் முடிவு செய்யப்பட்டது.

அனைத்து மாவட்டத் தலைநகரங்களிலும், மாவட்டத் தலைநகரங்கள் அல்லாத 22 பிற நகரங்களிலும் செயல்படுத்தப்பட்டுவரும் பாதாளச் சாக்கடைத் திட்டங்களுக்கான கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்களை அமைப்பதற்குத் தேவையான நிலங்களை விரைவாகத் தேர்வு செய்வதென்றும்; பாதாளச் சாக்கடைத் திட்டங்கள் முடிக்கப்பெற்று பயன்பாட்டில் இருக்கும் நகரங்களில் வீட்டு இணைப்புகள் வழங்கப்படுவதை விரைவுபடுத்துவதென்றும் முடிவு செய்யப்பட்டது.

நிலமற்ற ஏழை விவசாயக் குடும்பங்களுக்கு தரிசு நிலம் வழங்கும் திட்டத்தின் கீழ் 30.5.2008 வரையில் 1 இலட்சத்து 56 ஆயிரத்து 974 ஏழை விவசாயக் குடும்பங்களுக்கு 1 இலட்சத்து 84 ஆயிரத்து 890 ஏக்கர் நிலம் வழங்கப்பட்டுள்ளது. வழங்கப்பட்டுள்ள இந்த நிலங்கள் தொடர்பாக வருவாய் ஆவணங்களில் உரிய மாற்றம் செய்வது, பயனாளிகள் தொடர்ந்து ஒப்படை செய்யப்பட்ட நிலங்களை அவர்கள் வசமே வைத்திருப்பதை உறுதி செய்வது மற்றும் அந்நிலங்களை முழுமையாகப் பயன்படுத்த ஏதுவாக விவசாயத்திற்கேற்றவாறு மேம்படுத்தி விளைச்சலைப் பெருக்குவது போன்றவற்றிற்கு மாவட்ட ஆட்சித் தலைவர்கள் தேவையான ஏற்பாடுகளைச் செய்வதென்று முடிவு செய்யப்பட்டது. கழக அரசு பொறுப்பேற்ற பின்னர், இது வரை 5 இலட்சத்து 40 ஆயிரத்து 421 ஏழைகளுக்கு இலவச வீட்டுமனைப் பட்டாக்கள் வழங்கப்பட்டுள்ளன. இந்தப் பணியினைத் தொடர்ந்து மேற்கொள்வதற்குத் தற்போது நடைபெற்று வரும் நத்தம் நில அளவை, நகர்ப்புற நில அளவை மற்றும் மறு நில அளவைத் திட்டங்களை விரைவுபடுத்தி வீட்டுமனை வழங்கத் தகுதியான நிலங்களை கண்டறிவதென்று முடிவு செய்யப்பட்டது. தமிழ்நாடு விவசாயத் தொழிலாளர்கள் – விவசாயிகள் சமூகப் பாதுகாப்புத் திட்டத்தின் கீழ் இதுவரை 1 கோடியே 67 இலட்சத்து 52 ஆயிரத்து 26 பேர் உறுப்பினர்களாகச் சேர்க்கப்பட்டுள்ளனர். அவர்களுள் 2 இலட்சத்து 84 ஆயிரத்து 102 பேருக்கு 155 கோடியே 30 இலட்சத்து 44 ஆயிரத்து 499 ரூபாய் உதவித் தொகையாக வழங்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தின்கீழ் நிதியுதவி கோரி வரும் மனுக்களின் மீது 30 நாட்களுக்குள் உரிய நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமென்றும்; தகுதியான பயனாளிகளுக்கு எந்தவிதத் தடையுமின்றி உடனடியாக நிதியுதவி வழங்க வேண்டுமென்றும் முடிவு செய்யப்பட்டது.

நிலத்தடி நீர் இருப்பினை அதிகப்படுத்துவதற்காக அரசு அறிவித்துள்ள நீரோடைகளில் தடுப்பணைகள் அமைக்கும் திட்டத்தினை விரைந்து முடித்திட ஏதுவாக சம்பந்தப்பட்ட துறை அலுவலர்களுடன் கலந்தாலோசித்துத் தேவையான தகவல்களைத் திரட்டி இதற்கான நிதியைப் பெற்று இத்திட்டத்தை மாவட்ட ஆட்சியர்கள் செம்மையாக நிறைவேற்றிட வேண்டுமென்று முடிவு செய்யப்பட்டது.

ஏழை எளிய மக்களுக்குத் தரமான மருத்துவ சிகிச்சை அளிக்கும் சிறப்புத் திட்டமான "வருமுன் காப்போம்" திட்டத்தின் கீழ் 9,000 முகாம்கள் நடத்தத் திட்டமிடப்பட்டு இதுவரை 6,773 முகாம்கள் நடத்தப்பட்டுள்ள நிலையில், எஞ்சிய 2,227 முகாம்களையும் இந்த ஆண்டு இறுதிக்குள் நடத்துவதென்றும்; இந்த முகாம்களுக்கு சிறப்பு மருத்துவர்கள் வந்து பொதுமக்களைப் பரிசோதனை செய்வதை உறுதி செய்வதென்றும்; ஊனமுற்றவர்களுக்கு முகாம்களிலேயே சான்றிதழ்கள் வழங்குவதென்றும்; குறிப்பிட்ட சில காலங்களில் பரவிடும் சில நோய்களைத் தடுப்பதற்கு எல்லாவித முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளையும் மேற்கொள்வதென்றும்; டாக்டர் முத்துலட்சுமிரெட்டி மகப்பேறு நிதியுதவித் திட்டத்தின் கீழ் கிராம சுகாதார செவிலியர்களின் பரிந்துரையின் அடிப்படையில் வருமானச் சான்றிதழ் இன்றி காலதாமதத்தைத் தவிர்த்து நிதியுதவியை வழங்குவதென்றும் முடிவு செய்யப்பட்டது.

கிராமப் பகுதி மக்களிடையே பெரும் வரவேற்பைப் பெற்றுள்ள கால்நடைப் பாதுகாப்புத் திட்டம் நடப்பாண்டிலும் தொடர்ந்து சிறப்பாக நடைபெற, மாவட்ட ஆட்சியர்கள் முகாம்கள் நடத்த தகுந்த கிராமங்களைக் கவனமாகத் தேர்வு செய்ய வேண்டுமென்றும்; முகாம்களுக்குத் தேவையான மருந்துகள் இருப்பில் உள்ளதா என்று சரிபார்க்க வேண்டுமென்றும் முடிவு செய்யப்பட்டது.

ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியின மாணவ மாணவியர்க்கும், பிற்படுத்தப்பட்ட, மிகப்பிற்படுத்தப்பட்ட மற்றும் சிறுபான்மையின மாணவ மாணவியர்க்கும் கல்வி உதவித் தொகை, பள்ளி மேற்படிப்பு உதவித் தொகை, இலவச பாடப் புத்தகங்கள், இலவச சீருடைகள், பஸ் ;



பயிலுவோருக்கு இலவச மிதிவண்டிகள் ஆகியவற்றை காலத்தே வழங்க உரிய நடவடிக்கைகளை மாவட்ட ஆட்சியர்கள் மேற்கொள்ள வேண்டுமென்று முடிவு செய்யப்பட்டது.

"அனைவருக்கும் கல்வி" திட்டத்தின் கீழ் மாவட்டங்களில் நடைபெறும் பள்ளி வகுப்பறைகள், கட்டடங்கள் உள்ளிட்ட கட்டுமானப் பணிகளைத் தரமாகவும், விரைவாகவும் நிறைவேற்றிட வேண்டுமென்றும்; செயல்வழிக் கற்றல் நடைபெறும் பள்ளிகளை மாவட்ட ஆட்சியர்கள் ஆய்வு செய்ய வேண்டுமென்றும் முடிவு செய்யப்பட்டது.

சாலை, பாலங்கள் பராமரிப்புப் பணிகளைத் துரிதமாகவும், தரமாகவும் செய்வதை மாவட்ட ஆட்சியர்கள் கண்காணிக்க வேண்டுமென்று முடிவு செய்யப்பட்டது. நில எடுப்புப் பணிகள் மற்றும் சாலை அகலப்படுத்தும் பணிகளில் காலதாமதம் தவிர்க்கப்பட வேண்டுமென்றும் முடிவு செய்யப்பட்டது.

அமைப்புச்சாரா தொழிலாளர்களுக்கான நல வாரியங்கள் நடைமுறைப்படுத்தி வரும் நலத் திட்டங்களை மாவட்ட ஆட்சியர்கள் காலமுறைப்படி மாவட்ட குழுக் கூட்டங்களில் ஆய்வு செய்வதென்றும்; ஒரே நல உதவியைப் பல்வேறு வாரியங்களில் வழங்குதல், ஒருவரைப் பல்வேறு வாரியங்களில் பதிவு செய்தல் போன்ற குறைபாடுகளைத் தவிர்ப்பதென்றும் முடிவு செய்யப்பட்டது.

தமிழ் ஆட்சி மொழிச் செயலாக்கத்தை மேலும் முனைப்புடன் நடைமுறைப்படுத்துவதென்றும்; பொது மக்கள் அரசின் திட்டங்களையும், ஆணைகளையும் அறியும் வண்ணம் பதிவு செய்யப்படும் அனைத்தையும் தமிழிலேயே அமைப்பதென்றும் முடிவு செய்யப்பட்டது.

மாவட்ட ஆட்சித் தலைவர்களின் பரிந்துரையினை ஏற்று – வாய்ப்பு வசதியற்று திருமணம் ஆகாமலே ஐம்பது வயதை எட்டி – உழைத்து சம்பாதித்து வாழ்க்கை நடத்த இயலாத ஏழையெளிய மகளிருக்கு – முதியோர், விதவைகள், கணவனால் கை விடப்பட்ட பெண்களுக்கு வழங்குவதைப் போல – மாதந்தோறும் உதவித் தொகையாக 400 ரூபாய் வழங்கப்படும் என்று முதலமைச்சர் கலைஞர் அவர்கள் மாவட்ட ஆட்சித் தலைவர்கள் மாநாட்டிலேயே ஆணையிட்டார்.

★ ★ ★

**மாண்புமிகு முதலமைச்சர்**
**கலைஞர் மு. கருணாநிதி அவர்கள்**
**19, 20–6–2008 ஆகிய நாட்களில்**
**நடைபெற்ற மாவட்ட ஆட்சித்தலைவர்கள் மற்றும்**
**காவல்துறை அதிகாரிகள் மாநாட்டின்**
**இறுதியில் ஆற்றிய உரை வருமாறு :**

இரண்டு நாட்களாக உங்களையெல்லாம் சந்திக்கின்ற நல்ல வாய்ப்பினைப் பெற்று – நீங்கள் வழங்கிய அரிய ஆலோசனைகள் – அரசின் சார்பாக நிறைவேற்றப்படுகின்ற வளர்ச்சித் திட்டங்கள் ஆகியவைகளைப் பற்றி நீங்கள் அளித்த ஆய்வுரைகள் – நடைபெற்றுள்ள பணிகள் இன்னும் எப்படியெல்லாம் அந்தப் பணிகள் நடைபெற வேண்டுமென்ற முறைகள் – இவைகள் அனைத்தையும் விரிவாக, விளக்கமாகப் பேசியிருக்கின்றோம். ஏதோ ஆண்டுக்கு ஒரு முறை அல்லது இடையிலே கூட இது போன்ற மாநாடுகள், மாவட்ட ஆட்சித் தலைவர்கள் மற்றும் காவல் துறை அதிகாரிகள் கூடி நடத்துவதும் – அதிலே எடுக்கின்ற முடிவுகள், மாநாட்டுக் கூடத்தை விட்டு வெளியேறியதும் மறந்து போவதுமான ஒரு நிலை இருத்தல் ஆகாது என்பதை நான் ஒவ்வொரு முறையும் இந்த மாநாடு நடைபெறும்போதெல்லாம் வலியுறுத்தி நினைவுபடுத்தியிருக்கிறேன்.

என்னைப் பொறுத்தவரையில் மாவட்ட ஆட்சித் தலைவர்கள் – காவல் துறை அதிகாரிகளை என்னுடைய ஆட்சிக் காலத்தில் ஒரு முறை, இரு முறை சந்தித்தவன் அல்ல, பலமுறை உங்களையெல்லாம் சந்தித்துக் கொண்டிருப்பவன். அதனால் தான் நாம் இன்றைக்கு தீர்மானிக்கின்றவைகளை – திட்டமிட்டவைகளை நிறைவேற்றிட வேண்டுமென்ற அக்கறையோடு இந்த நாமக்கல்லார் மாளிகையை விட்டு வெளியேற வேண்டுமென்றும் – அதன் பிறகு நாட்டு மக்களுக்கு அளித்த வாக்குறுதிகளின் அடிப்படையில் தீட்டப்பட்டுள்ள வளர்ச்சித் திட்டங்களோடு ஒன்றிக் கலந்து ஓய்வின்றி உழைத்திட வேண்டுமென்பதும் – நம்முடைய இலட்சியங்களாக இருக்க வேண்டும்.

இந்த அரசு மிகச் சாதாரணமானவர்களால் – சாமான்ய மானவர்களால் நடத்தப்படும் அரசு என்பதால்; விவசாயிகளின் நலன், ஆசிரியர்களின் நலன், அரசு ஊழியர்களின் நலன், மகளிர் நலன், முதியோர் நலன், உடல்ஊனமுற்றோர் நலன், அமைப்புச் சாரா தொழிலாளர் நலன் ஏன், நரிக்குறவர் நலன், அரவாணிகள் நலன் என்றெல்லாம் எல்லா திசைகளிலும் கவனத்தைச் செலுத்தி அவர்களுடைய நல்வாழ்வுக்கான திட்டங்களைத் தீட்டுவதற்கு முற்படுகின்ற ஓர் அரசாக இருக்கின்றது என்பதை நீங்கள் அறிவீர்கள். தமிழகத்தின் எல்லாத் திசைகளிலும் அரசு எவ்வளவு அக்கறையோடு நான் குறிப்பிட்ட இந்தப் பட்டியலிலே உள்ள மக்களை, பாட்டாளிகளை பரிவோடு கவனிக்கிறது என்பதைப் புரிந்து கொண்டிருக் கிறீர்கள்.

உங்களையெல்லாம் இங்கே அழைத்து – நாங்கள் இன்னின்ன திட்டங்களைச் செயல்படுத்த விரும்புகிறோம் என்று சொல்வது மாத்திரமல்ல –

அந்தத் திட்டங்கள் நேரடியாக ஒவ்வொரு மாவட்டத்திலும், ஒவ்வொரு வட்டாரத்திலும் நீங்கள் எந்த மக்களோடு பழகிக் கொண்டிருக்கின்றீர்களோ – எந்த மக்களோடு இணைந்து வாழ்கிறீர்களோ – அந்த மக்கள் இந்தத் திட்டத்தின் பலனைத் துய்த்திட வேண்டும், அதற்கு நீங்கள் உழைத்திட வேண்டுமென்பதை எடுத்துச் சொல்லவே – வேண்டிக் கொள்ளவே உங்களையெல்லாம் இங்கே அழைத்து, சில கருத்துகளை வெளியிட வேண்டிய அவசியம் ஏற்பட்டிருக்கின்றது.

திட்டங்களைச் செயல்படுத்தி – அதன்மூலம் திட்டங்களின் அடிப்படை நோக்கங்களை நிறைவேற்றி – பலன்களை உரியவர்களுக்கு நேரடியாக வழங்கிடும் அரிய பொறுப்பை மாவட்ட ஆட்சித் தலைவர்களாகிய நீங்கள் ஏற்றிருக்கிறீர்கள். ஏற்று தொடர்ந்து நிறைவேற்றியும் வருகிறீர்கள் என்பதை நான் மிக்க மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கு உள்ள நிறைய பொறுப்புகள் – வழங்கப்பட்டுள்ள புதிய பொறுப்புகள் அவைகளை அதிகாரங்கள் என்று கூடச் சொல்லலாம் – அந்த அதிகாரங்களை – அதிகாரத் தோரணையில் மக்கள்மீது செலுத்துவதில் மகிழ்ச்சி கொள்ளாமல் – அவற்றை மக்களுடைய வாழ்வைச் செம்மைப்படுத்திட, மக்களுக்குக் கைகொடுத்து உதவிட – பயன்படுத்திட வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன். அப்போதுதான் மக்களாட்சியின் மாண்பு சாதாரண பொதுமக்களுக்கும் தெரியும். அவர்களால் அந்த மாண்பினை உணரவும் முடியும்.

ஆட்சி எனும் தேருக்கு அச்சாணியாகவும், சக்கரங்களாகவும் திகழ்பவர்கள் அதிகாரிகள்தான். அவர்கள் முழுமையாக இயங்காவிட்டால் மன நிறைவாக இயங்கா விட்டால், ஆட்சித் தேர் ஒரு அங்குலம் கூட நகராது என்பதை நான் மிக நன்றாக அறிவேன். என்னுடைய அரசியல் அனுபவத்திலும், ஆட்சி அனுபவத்திலும் இதை நான் மிகத் தெளிவாக உணர்ந்து கொண்டிருப்பவன். உங்களுடைய வாழ்க்கையில் மாவட்ட ஆட்சித் தலைவர் பொறுப்பு என்பது மகத்தானது என்பதை நான் விளக்கிட வேண்டிய அவசியமில்லை. ஏனெனில், மாவட்ட ஆட்சித் தலைவர் பொறுப்பை வகிக்கும் போதுதான் நேரடியாக மக்களுக்கு நன்மைகளைச் செய்து, அந்த நன்மைகளின் காரணமாக அந்த மக்கள் மன நிறைவடைவதைக் கண்டுகளித்திட முடியும்.

அன்னசத்திரம் ஆயிரம் கட்டுவதைக் காட்டிலும், ஆலயங்களை நிர்மாணிப்பதைக் காட்டிலும், ஓர் ஏழைக்கு எழுத்தறிவைப் புகட்டுவது உயர்ந்தது, புனிதமானது என்று மகாகவி பாரதியார் சொன்னார். அதைப்போல, ஒவ்வொரு நாளும் ஒரு ஏழைக்காவது உருப்படியான ஓர் உதவியைச் செய்திட வேண்டும் என்ற இலக்கை உங்களுக்கு நீங்களே நிர்ணயம் செய்துகொண்டால் அது எவ்வளவு நலன் பயக்கும் என்பதை நான் சொல்லி, புதிதாக விளக்க வேண்டிய அவசியமில்லை.

**30.7.2007** மற்றும் **31.7.2007** ஆகிய இரு நாட்களில் நடைபெற்ற மாவட்ட ஆட்சியர்கள் மாநாட்டில் மொத்தம் 27 முடிவுகள் மேற்கொள்ளப்பட்டு, அவற்றில் 18 முடிவுகள் நிறைவேற்றப்பட்டு; 9 முடிவுகள் செயலாக்கத்தில் இருந்து வருவதாக எனக்குப் புள்ளி விவரம் தரப்பட்டுள்ளது. நான் இந்த 18 முடிவுகள் நிறைவேற்றப்பட்டதைப் பற்றி மகிழ்ச்சியடையவில்லை. இன்னும் 9 முடிவுகள் செயலாக்கத்தில் இருக்கிறதே, நிறைவேற்றப்படாமல் என்ற கவலை – அந்த 18 முடிவுகள் நிறைவேற்றப்பட்டதால் ஏற்படுகின்ற மகிழ்ச்சியைப் பின்னுக்குத் தள்ளிவிட்டது என்பதை சொல்லாமல் இருக்க முடியாது.

இந்த மாநாட்டிலும் பல முடிவுகள் – நீங்கள் வழங்கிய அரிய ஆலோசனைகளுக்குப் பின்னர் – மேற்கொள்ளப்பட்டுள்ளன. அந்த முடிவுகளையும் எவ்வளவு விரைவாக முடியுமோ அவ்வளவு விரைவாக நீங்கள் நிறைவேற்றித் தரவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

சட்டம்–ஒழுங்கைப் பாதுகாப்பதில் மாவட்ட ஆட்சியர்களும், காவல் கண்காணிப்பாளர்களும் ஒருங்கிணைந்து செயல்பட்டு வரவேண்டும். செயல்படுவது இப்போது பாராட்டுக்குரியதாகத் திகழ்கிறது என்பதை நான் மறைப்பதற்கில்லை. இந்த ஒருங்கிணைப்பு மேலும் வலுப்பட வேண்டும். இருவருக்குமிடையே உள்ள தகவல் பரிமாற்றம் தங்குதடை யின்றி நடைபெறுதல் வேண்டும்.

அன்றாடம் நடக்கும் ஒவ்வொரு சாலை விபத்தும் என்னைப் பெரிதும் பாதிக்கின்ற காரணத்தினால் சாலை விபத்துகளைக் குறைப்பதிலும், அவற்றைத் தவிர்ப்பதிலும் தனிக்கவனமும் தொடர் முயற்சியும் தேவை என்பதை நேற்றைக்கு நீண்ட நேரம் உங்களிடம் விளக்கியிருக்கிறேன். வேண்டுகோளாகவும் வைத்திருக்கிறேன். ஆங்காங்கு ஒவ்வொரு பகுதியிலும் மாவட்டத்திலே உள்ள அதிகாரிகள், பொறுப்பு வாய்ந்தவர்கள், இவர்களையெல்லாம் அழைத்து, அங்கே எப்படியெல்லாம் சாலைகளில் விபத்துகள் ஏற்படாமல் தவிர்க்க முடியும், மக்களுடைய உயிரைப் பாதுகாக்க முடியும் என்பதற்கேற்ப பணிகளை நிறைவேற்றவும், அதற்கு அரசின் துணை, அதிகாரிகளின் துணை வேண்டுமானால், எப்படிப்பட்ட துணை என்பதைக் கேட்டுப் பெறவும் நீங்கள் முயற்சிகளை மேற்கொள்ள வேண்டுமென்று ஒவ்வொரு மாவட்ட ஆட்சித் தலைவரையும் நான் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.



சமூக விரோதிகள், அத்தியாவசிய உணவுப் பொருள்களைக் கடத்துபவர்கள், கள்ளச் சந்தைக்காரர்கள், சட்டம்–ஒழுங்கைக் கெடுப்பவர்கள் யாராக இருந்தாலும் பாரபட்சமின்றி துணிச்சலோடு நடவடிக்கை மேற்கொண்டு, அத்தகையவர்கள் கொட்டத்தை அடக்கியே தீர வேண்டும்.

அண்ணா மறுமலர்ச்சித் திட்டம், பெரியார் நினைவு சமத்துவபுரம் திட்டம், உழவர் சந்தைத் திட்டம், மகளிர் சுயஉதவிக் குழுக்கள் திட்டம், ஆதிதிராவிடர், பழங்குடியினர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் பிற்படுத்தப்பட்டோர்க்கான திட்டங்கள் மற்றும் நலிந்த பிரிவினர்க்கான நலத் திட்டங்கள் அனைத்திலும் மாவட்ட ஆட்சியர்கள் மிகுந்த ஈடுபாடு காட்டி, அந்தத் திட்டங்கள் முழுமையாக வெற்றி பெறுவதற்கு, சலியாது உழைத்திட வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

இத்தகைய பணிகளைச் செய்வதில் மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்குள் ஆரோக்கியமான போட்டி மனப்பான்மை வேண்டும். இதை நீங்கள் கோடிட்டு உங்கள் உள்ளங்களில் பதிய வைத்துக் கொள்வீர்கள் என்று நான் நம்புகிறேன்.

தினமும் பத்திரிகைகளைப் படிப்பதிலும்; மாவட்ட நிர்வாகத்தைப் பற்றி வெளிவரும் செய்திகளைப் படித்து – நடவடிக்கை எடுக்க வேண்டிய செய்திகள் இருந்தால் உடனடியாக நடவடிக்கை எடுத்து – மேற்கொண்ட நடவடிக்கை பற்றிய குறிப்பினைப் பத்திரிகைகளுக்கு அறிவிப்பதிலும் – மாவட்ட ஆட்சியர்கள் தொடர்ந்து தங்களுடைய பணிகளை ஆற்ற வேண்டும்.

காலையில் பேசிய மதுரை மாவட்ட ஆட்சித் தலைவர் குறிப்பிட்டார் – அங்கே மதுரை மாவட்டத்தில் வைக்கப்பட்ட தீண்டாமை சுவர் காரணமாக எழுந்த பிரச்சினை – இரு சாராரிடையே மோதல் உருவாகுமோ என்ற கலக்கம், அச்சம், பீதி அதனால் ஏற்பட்ட பதற்றம் – இந்தச் சூழலில் என்ன செய்வது என்று அவரும் திகைத்துக் கொண்டிருந்தபோது நான் எத்தனை முறை அவரோடு தொடர்பு கொண்டேன் தொலைபேசியிலே என்பதும் – நான் தொலைபேசியிலே தொடர்பு கொண்ட நேரத்தில் எல்லாம் நான் கூறிய அறிவுரைகளையேற்று அவர் அங்கே பணியாற்றியதும், அதன் காரணமாக அங்கே ஒரு சுமூகமான சூழ்நிலை ஏற்பட்டிருப்பதும் நீங்கள் எல்லாம் அறியாத ஒன்றல்ல.

அப்படி ஒவ்வொரு பிரச்சினை உருவாகின்ற நேரத்திலும் அதை உடனடியாகத் தெரிவிக்க வேண்டியவர்களுக்கு தெரிவித்து – அதை உடனடியாக சுமூகமாகத் தீர்த்து வைக்கின்ற அந்தக் காரியத்திலே மாவட்ட ஆட்சித் தலைவர்கள் மேலும் மேலும் அக்கறை காட்டவேண்டும். தொடர்ந்து அக்கறை காட்டவேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

இங்கே மாவட்ட ஆட்சித் தலைவர்கள் தெரிவித்துள்ள கருத்துகள் எல்லாம் தலைமைச் செயலாளர் மூலமாக – முடிவாக இதைக் குறித்து என்ன செய்யலாம், எப்படி அணுகலாம் என்ற வகையிலே பதிவு செய்யப்பட்டிருக்கின்றன, ஒவ்வொரு துறையின் செயலாளரும், அதைப் பதிவு செய்திருக்கிறார்கள். அவைகளை எல்லாம் அமைச்சர்கள் பார்த்து – நானும் பார்த்து ஏற்ற வகையிலே நடவடிக்கைகள் எடுக்கப் படும்.

மாவட்ட ஆட்சித் தலைவர்கள் கலந்து கொண்ட இந்தக் கூட்டத்தில் கன்னியாகுமரி மாவட்டத்தின் சார்பாகச் சொல்லப்பட்ட அந்தக் கருத்து அலட்சியப்படுத்தக் கூடியதல்ல. அந்த மாவட்டத்தின் ஆட்சித் தலைவர் – பெண்களுக்கு மாதந்தோறும் தரப்படுகின்ற உதவித்தொகை இவர்களுக்கும் தரப்பட வேண்டும் என்று கோரிக்கை வைத்தார் – அந்தக் கோரிக்கை உங்கள் முன்னிலையிலேதான் ஆராயப்பட்டது. அது பற்றி நான் நிதித்துறை செயலாளரை அழைத்து, விளக்கத்தை மாவட்ட ஆட்சித் தலைவரிடம் கேட்டு, அதை ஓர் அறிவிப்பாக செய்யவுள்ளேன். இந்தக் கூட்டத்திலும் ஏதோ ஓர் அறிவிப்பு வந்தது என்று இல்லாமல் ஒரு முக்கியமான அறிவிப்பு, சமுதாயத்திலே ஒரு பாகமாக இருக்கின்ற பெண்களைப் பற்றிய அறிவிப்பாக அது அமைந்திருக்கின்றது. அதைப் படிக்கின்றேன்.

மாவட்ட ஆட்சித் தலைவர்களின் பரிந்துரையினை யேற்று – வாய்ப்பு வசதியற்று திருமணம் ஆகாமலே ஐம்பது வயதை எட்டி – உழைத்துச் சம்பாதித்து வாழ்க்கை நடத்த இயலாத ஏழையெளிய மகளிருக்கு முதியோர், விதவைகள், கணவனால் கைவிடப்பட்ட பெண்களுக்கு இப்போது வழங்கப்படுவதைப் போல – இவர்களுக்கும் மாதந்தோறும் உதவித் தொகையாக 400 ரூபாய் வழங்கப்படும் என்ற அறிவிப்பை இங்கே நான் தெரிவித்து இரண்டு நாட்கள் இந்தச் சிறப்பான மாநாட்டிலே கலந்து கொண்டு நாம் ஆற்ற வேண்டிய பணிகளைப் பற்றி ஆய்வு செய்து நல்ல முடிவுகளை எடுத்து ஒத்துழைத்த உங்கள் அனைவருக்கும் என்னுடைய அன்பார்ந்த இதயமார்ந்த நன்றியினைத் தெரிவித்து இந்த அளவில் என் உரையை நிறைவு செய்கிறேன்.

★ ★ ★

# இந்தியாவிலேயே
# முதன்முறையாக தமிழக அரசு ஊழியர்களின் நலனுக்காகப் புதிய மருத்துவக் காப்பீட்டுத் திட்டம்

மாண்புமிகு
தமிழ்நாடு முதலமைச்சர் **கலைஞர்** அவர்கள்
தொடங்கி வைத்தார்.



**த**மிழ்நாடு அரசுப் பணியாளர் சங்கத்தின் வெள்ளி விழா 15.7.2007 அன்று நடைபெற்ற பொழுது தமிழ்நாடு அரசு அலுவலர்களின் நலனுக்காக, ஒவ்வொரு நான்கு ஆண்டு காலத்திற்கும் ரூபாய் இரண்டு இலட்சம் வரை மருத்துவ சிகிச்சைக்காக நிதியுதவி வழங்க வகைசெய்யும் புதிய மருத்துவக் காப்பீட்டுத் திட்டம் ஒன்று அரசு அலுவலர்கள் மற்றும் அரசின் பங்களிப்புடன் காப்பீட்டுக் கழகங்களுடன் இணைந்து தமிழக அரசால் செயல்படுத்தப்படும் என மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் அறிவித்தார்.

அந்த அறிவிப்பினைத் தொடர்ந்து அரசு அலுவலர்கள் மட்டுமன்றி அரசுப் பொதுத் துறை நிறுவனங்கள், சட்டப்படியான வாரியங்கள், உள்ளாட்சி அமைப்புகள், பல்கலைக்கழகங்கள் ஆகியவற்றில் பணிபுரிவோரும் பயனடையும் புதிய மருத்துவக் காப்பீட்டுத் திட்டத்தைச் செயல்படுத்துவதற்கு உரிய அரசாணைகள் வெளியிடப் பட்டுள்ளன.

அரசுப் பணியாளரின் கணவர் அல்லது மனைவி, மகன், மகள் எனில் அவர்கள் வேலையில் சேரும் வரையில், அல்லது திருமணம் ஆகும் வரையில் அல்லது 25 வயது நிறைவடையும் வரையில்; திருமணமாகாத அரசுப் பணியாளர் எனில் அவர்களுக்குத் திருமணமாகும்வரை அவர்களுடைய பெற்றோர் இத்திட்டத்தின்கீழ் பயன்பெற தகுதி படைத்தவர்கள் ஆவர்.

இத்திட்டத்தில் உறுப்பினர்களாகச் சேரும் பணியாளர்கள் சிகிச்சை பெறும்போது, அவர்களுக்கு மருந்துச் செலவினங்கள்; லெப்ராஸ்கோபிக் அல்லது திறந்த அறுவைச் சிகிச்சைச் செலவினங்கள்; மருத்துவர்கள் மற்றும் உதவியாளர் தொடர்பான கட்டணங்கள்; தங்கும் அறைக் கட்டணம்; பரிசோதனைகள்; மற்றும் உணவுக் கட்டணம் ஆகியவற்றைப் பெறுவர்.

இந்த மருத்துவக் காப்பீட்டுத் திட்டத்தின்கீழ் நான்கு ஆண்டுகளைக் கொண்ட ஒரு தொகுப்புக் கால அளவிற்கு இரண்டு இலட்சம் ரூபாய் வரை அரசுப் பணியாளர் தனக்கு மட்டுமோ அல்லது அவரது குடும்ப உறுப்பினர்களுக்கும் சேர்த்தோ பணச் செலவின்றிச் சிகிச்சைகள் பெறலாம்.

இத்திட்டத்தின்கீழ் ஒவ்வொரு அரசுப் பணியாளருக்கும் மாதம் 25 ரூபாய் வீதம் ஆண்டுக்கு 300 ரூபாய் என அவரது 2008 ஜூன் மாத ஊதியத்திலிருந்து பிடித்தம் செய்யப்படுகிறது.

இத்திட்டத்தின்கீழ் ஒரு பணியாளருக்கு ஆண்டுக் காப்பீட்டுத் தொகையாக 495 ரூபாயும், 12.5 சதவீதம் சேவை வரியும் காப்பீட்டு நிறுவனத்திற்கு வழங்கப்பட வேண்டும். இத்தொகையில் அரசுப் பணியாளர் தனது பங்காக மாதம் 25 ரூபாய் வீதம் 12 மாதங்களுக்குச் செலுத்தும் 300 ரூபாய் போக, மீதத் தொகையாகிய 195 ரூபாயுடன், 12.5 சதவீத சேவை வரி முழுவதையும் தமிழக அரசே அரசுப் பணியாளர்களுக்காகக் காப்பீட்டு நிறுவனத்திற்கு வழங்கும்.

இத்திட்டத்தின் மூலம் தமிழகத்தின் பல்வேறு பகுதிகளிலுள்ள ஏறத்தாழ 300 மருத்துவமனைகளில் 52 வகையான நோய்களுக்குச் சிகிச்சைகளும், அறுவைச் சிகிக்சைகளும் செய்து கொள்ள முடியும்.

இத்திட்டம் தொடர்பாக அரசுப் பணியாளர்களுக்கு ஏதேனும் குறைபாடுகளோ சிரமங்களோ நேர்ந்தால் அவற்றைக் களைந்திட உதவுவதற்காக மாவட்ட அளவிலும், மாநில அளவிலும் அமைக்கப்பட்டுள்ள குழுக்களுடன் உயர்நிலைக் குழு ஒன்றும் அமைக்கப்பட்டுள்ளது.



இத்திட்டத்தைச் செயல்படுத்துவதற்காக விதிமுறைகள் அனைத்தும் பின்பற்றப்பட்டுச் சென்னையைச் சேர்ந்த "ஸ்டார் ஹெல்த் ஆண்டு அலைடு இன்சூரன்ஸ் நிறுவனம்" தேர்வு செய்யப்பட்டுள்ளது.

இப்புதிய மருத்துவக் காப்பீட்டுத் திட்டம் அனைத்து வகையிலும் சிறந்த முறையில் பயனளிக்கக் கூடியதாக இருப்பதைக் கருத்தில் கொண்டு இதுவரை ஏறத்தாழ 8 இலட்சம் அரசு அலுவலர்கள், ஆசிரியர்கள் மற்றும் அரசு நிறுவனங்கள் மற்றும் வாரியங்களில் பணிபுரிவோர் இத்திட்டத்தில் பங்கேற்க விருப்பம் தெரிவித்துத் தேவையான விவரங்களையும், புகைப்படங்களையும் அளித்துள்ளனர்.

இந்தியாவிலேயே முதன்முறையாக தமிழகத்தில் செயல்படுத்தப்படவுள்ளதும், அரசுப் பணியாளர்களால் பெரிதும் வரவேற்கப்பட்டுள்ளதுமான இத்திட்டத்திற்கான அடையாள அட்டைகளைத் தலைமைச் செயலகத்தில் 10 அரசுப் பணியாளர்களுக்கு வழங்கி மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் இத்திட்டத்தை 11.6.2008 அன்று தொடங்கி வைத்தார்.

இந்நிகழ்வின்போது, மாண்புமிகு நிதி அமைச்சர் பேராசிரியர் க. அன்பழகன், தலைமைச் செயலாளர் திரு. எல்.கே. திரிபாதி, இ.ஆ.ப., நிதித்துறைச் செயலாளர் திரு. கு. ஞானதேசிகன், இ.ஆ.ப., கருவூலக் கணக்குத் துறை இயக்குநர் திரு.எம். முத்தையா கலைவாணன், இ.ஆ.ப., மற்றும் இத்திட்டத்தைச் செயல்படுத்துவதற்காகத் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கும் திருவாளர்கள் ஸ்டார் மருத்துவக் காப்பீட்டு நிறுவனத்தின் தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குநர் திரு.ஜெகநாதன், ஐ.சி.ஐ.சி.ஐ.லம்பார்டு காப்பீட்டு நிறுவனத்தின் பிரதிநிதி, இத்திட்டத்தின் இணைக் காப்பீட்டு நிறுவனங்களாகப் (Co-insurers) பங்கேற்கும் பொதுத்துறை காப்பீட்டு நிறுவனங்களான யுனைடெட் இந்தியா காப்பீட்டு நிறுவனம், ஓரியண்டல் காப்பீட்டு நிறுவனம், நேஷனல் காப்பீட்டு நிறுவனம், நியூ இந்தியா காப்பீட்டு நிறுவனம் ஆகியவற்றின் பிரதிநிதிகள் உடனிருந்தனர்.

* * *

# தமிழ்நாடு அரவாணிகள் நல வாரியம் அமைத்து அரசு ஆணை

**2**008–ஆம் ஆண்டின் பதின்மூன்றாவது சட்டமன்றப் பேரவையின் ஏழாவது கூட்டத்தொடரில் மேதகு தமிழக ஆளுநர் அவர்கள் உரையில் அரவாணிகளுக்கான புதிய நல வாரியம் ஒன்று அமைக்கப்படும் என மேதகு ஆளுநர் அவர்கள் அறிவித்ததன் அடிப்படையில், அரவாணிகளுக்கு முழுமையான சமூகப் பாதுகாப்பு அளிக்கத் தேவையான திட்டங்களை வகுத்துச் சிறப்பான முறையில் செயல்படுத்த அரவாணிகள் நல வாரியம் அமைத்து அரசு ஆணை வெளியிட்டுள்ளது.

அரவாணிகள் நல வாரிய அலுவல்சார் உறுப்பினர்களாக மாண்புமிகு சமூக நலத்துறை அமைச்சர் அவர்கள், சமூக நலம் மற்றும் சத்துணவுத் திட்டத்துறைச் செயலர், சமூக நலத்துறை ஆணையர், நிதித்துறைச் செயலர், சட்டத்துறைச் செயலர், தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டுத்துறை இயக்குநர், கல்லூரிக் கல்வித்துறை இயக்குநர், மருத்துவக் கல்வித்துறை இயக்குநர் மற்றும் வேலை வாய்ப்பு மற்றும் பயிற்சித்துறை இயக்குநர் ஆகிய 11 உறுப்பினர்கள் அலுவல்சார் உறுப்பினர்களாகவும் எஸ்.நூரி–சென்னை, பிரியா பாபு–சென்னை, A.J. ஹரிஹரன்–சென்னை, ஆர். ஜீவா–சென்னை, வி.சலிமா–விழுப்புரம், எஸ்.கே. கங்கா–வேலூர், மோகனா–திருச்சி, எஸ். காதர்மைதீன் என்ற கனிமொழி–மதுரை ஆகிய 8 உறுப்பினர்கள் அலுவல்சாரா உறுப்பினர்களாகவும் நியமிக்கப் பட்டுள்ளனர்.

அரவாணிகள் நல வாரியத்தின் முதல் கட்ட கூட்டமானது, மாண்புமிகு சமூக நலத்துறை அமைச்சர் திருமதி. பெ. கீதாஜீவன் அவர்களின் தலைமையில் 26.5.2008 அன்று சமூக நல ஆணையரகக் கூட்டரங்கில் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் அரவாணிகள் பற்றிய கணக்கெடுப்பு, அடையாள அட்டை வழங்குவது, இவர்களுக்கென கணினி வகுப்புகள், நூலகம் மற்றும் கவுன்சிலிங் அடங்கிய இடைக்காலத் தங்கும் மையம் அமைத்துக் கொடுப்பது மற்றும் மூன்று மாதங்களுக்கு ஒரு முறை அந்தந்த மாவட்டங்களிலுள்ள மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் அரவாணியர் குறை தீர்க்கும் நாள் நடத்துவது போன்ற முடிவுகள் எடுக்கப்பட்டுள்ளன.

இதன் தொடர்ச்சியாக அரவாணிகளின் நலனுக்காகச் செயல்பட்டுவரும் தொண்டு நிறுவனங்கள் அந்தந்த மாவட்டங்களில் தங்களுடைய நிறுவனங்களைப் பதிவு செய்து கொள்ளும் வகையில் பதிவுச் சான்றிதழ்களைப் பெற்றுக்கொள்ள ஏதுவாக படிவங்கள் மாவட்ட சமூக நல அலுவலர்களுக்கு அனுப்பப்பட்டுள்ளது.

எனவே, அரவாணிகளின் நலனுக்காகச் செயல்பட்டுவரும் சங்கங்கள், தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள் தங்களுடைய சங்கங்களைப் பதிவு செய்து கொள்வதற்காக பதிவுச் சான்றிதழ்களைப் பெற அந்தந்த மாவட்டத்திலுள்ள மாவட்ட சமூக நல அலுவலர்களைத் தொடர்பு கொள்ள இதன்மூலம் அறிவுறுத்தப்படுகிறார்கள். ❖

# நீதியைக் காப்பாற்றுகின்ற வகையில் நீதிமன்றங்களுக்குத் துணையிருப்போம்!

தஞ்சாவூரில் 24.6.2008 அன்று நடைபெற்ற தஞ்சை மாவட்ட நீதிமன்றத்தின் 200–ஆவது ஆண்டு விழாவில், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் **கலைஞர் மு. கருணாநிதி** அவர்கள் ஆற்றிய உரை வருமாறு:–



இன்று தஞ்சை மாவட்ட நீதிமன்ற 200ஆம் ஆண்டு விழாக் கொண்டாடுகின்ற நேரத்தில் நானும் கலந்து கொண்டு இந்த மேடையில் வாழ்த்துகளைப் பெறவும் வழங்கவும் வாய்ப்புப் பெற்றமைக்காகப் பெரும் மகிழ்ச்சி கொள்கின்றேன். பெருமிதம் அடைகின்றேன். இந்த விழா இவ்வளவு சீரும், சிறப்புமாக நடைபெறுவதற்கு வித்திட்டு காரணகர்த்தாக்களாக விளங்குகின்ற தஞ்சை வழக்கறிஞர் சங்கத்து நண்பர்களுக்கெல்லாம் என்னுடைய பாராட்டுக்களை, நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

**ஊக்கப்படுத்தும் மாமருந்து**

நம்முடைய இந்திய உச்சநீதிமன்றத்தின் தலைமை நீதிபதி மாண்புமிகு கே.ஜி.பாலகிருஷ்ணன் அவர்கள் நேற்றைய தினம் மதுரையிலே ஆற்றிய உரையில் நீதித்துறையிலே தமிழக அரசு, தி.மு.கழக அரசு காட்டுகின்ற அக்கறையையும் செலுத்துகின்ற ஆதரவையும் கோடிட்டுக்காட்டி பாராட்டி தம்பி துரைமுருகன் வாயிலாக வெளிப்படுத்தியிருக்கிறார்கள். நான் அதற்காக நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன். அது எங்களை ஊக்கப்படுத்துகின்ற மாமருந்தாக அமையும் என்பதை உச்சநீதிமன்றத்தின் தலைமை நீதிபதி அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

அவர்இன்றைக்கு உச்சநீதிமன்றத்தினுடைய நீதிபதியாக வீற்றிருப்பது நாமெல்லாம் மகிழத்தக்க ஒன்று. நாமெல்லாம் உணர்ந்து பாராட்டத்தக்க ஒன்று. நம்மிலே ஒருவர் ஏன், நாமே அந்த உருவத்திலே அங்கே அமர்ந்திருப்பதைப் போன்ற ஒரு உணர்வை நமக்கெல்லாம் ஏற்படுத்துகின்ற நிலையாகும்.







நம்முடைய தம்பி துரைமுருகன் பேசும்போது எப்படியும் உச்சநீதிமன்ற நீதிபதியாக ஆகிவிடலாம் என்று சொன்னார். அப்படி அல்ல. எப்படியும் ஆளவரிலே ஒருவர் அல்ல அவர். இப்படித்தான் ஆகவேண்டும் என்ற நிலைமையிலே உச்சநீதிமன்றத்தின் நீதிபதியாக இன்றைக்கு விளங்கிக் கொண்டிருப்பவர் அவர். அவருடைய காலத்திலேதான் இந்தியாவை எதிர்காலத்திலே இருளடைந்து விடுமோ என்று ஏக்கத்தோடு பெருமூச்சு விட்டுக் கொண்டிருந்த நமக்கெல்லாம் ஆறுதலாக 27 சதவிகிதம் இடஒதுக்கீட்டில் வெற்றியினை நாம் பெற முடிந்தது என்றால் தலைமுறை தலைமுறைக்கும் ஏன், இந்திய நாட்டு வரலாற்றில், தமிழ்நாட்டு வரலாற்றில், சமூகநீதி வரலாற்றில் இடம்பெறத்தக்க ஒரு தீர்ப்பு, அந்தத் தீர்ப்பை அவர்கள் நமக்கு வழங்கி இருக்கின்றார்கள். நமக்கு வழங்கப்பட்ட தீர்ப்பல்ல, சமுதாயத்திற்கு–ஏழை எளியோருக்கு–அடக்கப்பட்ட ஒடுக்கப்பட்ட அடங்கிக் கிடந்த மக்களுக்கு எழு விழி என்கிற உற்சாகத்தைத் தரக்கூடியதன் மூலமாக, அந்தத் தீர்ப்புக்கு மூலகர்த்தாவாக விளங்குகின்ற நம்முடைய மாண்புமிகு தலைமை நீதிபதி திரு.கே.ஜி.பாலகிருஷ்ணன் அவர்களை இந்த நீதிமன்றத்தின் 200ஆவது ஆண்டு விழாவில் அந்த விழா சார்பாக நான் வாழ்த்துகின்றேன். நன்றி கூறுகின்றேன். இந்தக் காலத் தமிழர்கள் சார்பாக மாத்திரமல்ல எதிர்காலத் தமிழர்கள் சார்பாகவும் என்னுடைய பேரன், பேத்திகளின் சார்பாகவும் நான் அவரை வாழ்த்தக் கடமைப்பட்டிருக்கின்றேன். ஏனென்றால் ஒரு சமுதாய மாற்றத்துக்காக சமுதாய விழிப்புக்காக நடைபெற்றிருக்கின்ற ஒரு பெரிய காரியம் அது. அந்தக் காரியத்தில் அவர்கள், தான் யார் என்பதை எத்தகைய நீதியை நிலைநாட்டுவார் என்பதை விளக்கிய பெருமைக்குரியவர் அவர். நீதிபதிகளைக் குறிப்பாக நீதிமன்றங்களைத் தமிழக அரசு நல்ல முறையிலே உற்சாகப்படுத்துகிறது என்பதை அவர்கள் நேற்று கோடிட்டுக்காட்டி நீதிமன்றங்களுக்குக் கட்டடங்கள் கட்டிக் கொடுப்பது மாத்திரம் நீதியைக் காப்பாற்றியது ஆகாது. நேர்மையான நீதியும் அங்கே வழங்கப்பட வேண்டும் என்று ஒரு வாக்கியத்தை அவர் சொல்லியிருக்கிறார். அதை "இந்து" பத்திரிகையிலே இன்றைக்குப் படித்துப் பார்த்தேன். கட்டடங்களை மாத்திரமல்ல; அந்தக் கட்டடத்துக் குள்ளேயிருந்து வெளி வருகின்ற தீர்ப்புகள் எந்த அளவிற்கு நீதியின் சாயலுடையதாக நீதியைக் காப்பாற்றுவதாக நீதியை அடிப்படையாகக் கொண்டிருக்க வேண்டும் என்பதையும் அவர் எடுத்துச் சொல்லியிருக்கின்றார். அவர்களுக்குத் தெரியும்; எங்களுடைய தி.மு.கழக ஆட்சியே 50, 60 ஆண்டுகளுக்குப் பின்னோக்கிச் சென்றால் நீதிக்கட்சியின் ஆட்சிதான். நீதிக்கட்சியாகத் தொடங்கியதுதான் இன்றைக்கு திராவிட முன்னேற்றக் கழகமாகப் பரிணமித்திருக்கிறது என்பதை அவர்களுக்கு நான் நினைவுபடுத்துகின்றேன். நீதிக்கட்சியாக இருந்த இந்த இயக்கத்தை தந்தை பெரியார் அவர்களும், பேரறிஞர் அண்ணா அவர்களும் திராவிட இயக்கமாக மாற்றிய பெருமையைச் சேர்த்தார்கள். எனவே நீதிக்குப் புறம்பாக நாங்கள் நடைபோட மாட்டோம். நீதிக்குச் சிறு காயம் ஏற்பட்டாலும் அதற்கு ஆறுதல் கூறுகின்ற வகையில் நீதியைக் காப்பாற்றுகின்ற வகையில், நீதியைப் பாதுகாக்கின்ற வகையில் நீதிபதிகளுக்கு, நீதிமன்றங்களுக்கு எப்படி நாங்கள் துணையிருக்க வேண்டுமோ அப்படித் துணையிருப்போம் என்பதை இங்கே நான் சுட்டிக்காட்ட விரும்புகின்றேன்.

**கொடுப்போம் என்ற நம்பிக்கை**

நேற்றைக்கு மதுரையிலே இன்னும்கூட நீதிமன்றத்திலே உள்ளவர்களுக்கு நீதிபதிகளுக்கு இடங்கள் ஒதுக்குவதில் அரசு சார்பில் பணமும் ஒதுக்க வேண்டும் என்று நேற்றைக்குக்கூட கேட்டதாகத் தம்பி துரைமுருகன் என்னிடத்திலே ஒரு சீட்டு எழுதிக்காட்டினார். அவர்கள் கேட்பதற்குக் காரணம் நாம் கொடுத்துக்கொண்டே இருக்கிறோம். மேலும் கொடுப்போம் என்ற நம்பிக்கையோடுதான் கேட்டிருக்கின்றார்கள். இப்போது நான் கொடுக்க





இயலவில்லை என்று சொன்னால் நம் மீது வைத்திருக்கின்ற நம்பிக்கைக்கு ஊனம் ஏற்பட்டுவிடும் என்ற காரணத்தால் நான் துரைமுருகன் அவர்களிடத்திலே சொன்னேன். நிச்சயமாக அதை அளிக்கலாம். நிச்சயமாக நாம் அவர்களுடைய கோரிக்கையை நிறைவேற்றலாம் என்று குறிப்பிட்டிருக்கிறேன். அதை விழாவிலே சொல்ல சந்தர்ப்பம் இல்லாவிட்டாலும் இந்த விழாவிலே உச்சநீதிமன்ற நீதிபதி அவர்களிடத்திலே நான் இப்போது சொல்லிக் கொள்ள கடமைப்பட்டிருக்கின்றேன். இந்த நீதிமன்றத்தைப் பொறுத்தவரையில் இங்கே உரையாற்றியவர்கள் எல்லாம் எடுத்துக் காட்டியதைப் போல் 200 ஆண்டுகாலமாகச் சிறப்போடு தஞ்சைத் தரணியிலே விளங்கிக் கொண்டிருக்கிறது. அதிலே நான் பெருமையடைகிறேன். காரணம், இங்கே சிலபேர் தங்களை மண்ணின் மைந்தர்கள் என்று சொல்லிக் கொண்டார்கள். மண்ணின் மைந்தன் என்ற முறையில் தஞ்சைத் தரணியிலே ஒரு நீதிமன்றம் 200 ஆண்டு காலமாகத் தழைத்தோங்கி இருக்கிறது என்பதும், அந்த நீதிமன்ற விழாவிலே நான் கலந்து கொள்கின்ற வாய்ப்பு எனக்கு ஏற்பட்டிருக்கின்றது என்பதும் சாதாரணமானதல்ல.

**அறங்கூறு அவையம்**

தஞ்சாவூரில் பொற்கால ஆட்சி படைத்தவன் ஐராஜசோழன். அவன் ஆட்சி புரிந்த தஞ்சைத் ரியில் நாம் நீதித்துறை தொடர்பான விழாவைக் ண்டாடிக் கொண்டிருக்கின்றோம். தமிழ் வேந்தர்கள் டைப் பாதுகாக்கும் பணிகளிலும். மக்களின் ாழ்வைப் போற்றுகின்ற பணிகளிலும் மிகுந்த கவனம் த்தி வந்தார்கள் என்று வரலாறு கூறுகின்றது. ளிடையே வழக்கு ஏற்பட்டாலும், பிரச்சினைகள் ானாலும், சிறு சிறு போராட்டங்கள் ஏற்பட்டாலும் ாதெல்லாம் பழந்தமிழகத்தில் அதை விசாரித்து நீதி துகின்ற இடத்திற்கு பழந்தமிழர்களுடைய காலத்திலே ர "அறங்கூறு அவையம்" என்பதுதான், நீதிமன்றம் ால் ஒரு பொதுப் பெயர். அதை அன்றைக்குத் தமிழன் கூறு அவையம் என்று அழைத்தான். அதை நீங்கள் ரிப்பாகக் கவனித்தால் இரு சாராருக்கும் வயான அறங்கூறும் மனப்பான்மை–அதை விளக்குவதுதான் அந்தப் பெயர். எதிரிக்காக வாதாடுகின்றவர்களானாலும் சரி, அல்லது அரசுத் தரப்பிலேஉள்ளவர்களுக்காக வாதாடுகின்றவர் களானாலும் சரி, அந்த வழக்கறிஞர்கள் அறங்கூறு அவையத்திலிருக்கிறோம்– அறங்கூறுபவர்களாக இருக்கவேண்டும் என்ற அந்தத் தன்மையைக் காட்டுகின்ற வகையிலேதான் அந்தக் காலத்திலே நீதிமன்றங்களிலே அறங்கூறு அவையம் என்று பெயரிடப்பட்டிருக்கிறது. சங்க இலக்கியங்களில் புறநானூறு போன்ற இலக்கியங்களில் கவின்மிகு புலவர்கள் "மறங்கெழு சோழர் உறந்தை அவையத்து அறம் நின்று நிலையிற்று" என்றும் (இது புறநானூறு) "மறங்கெழு சோழர் உறந்தை அவையத்து அறங்கெட அறியா தாங்கு" என்றும் (இது நற்றிணை) "ஆரங்கண்ணி அடுபோர்ச் சோழன் அறங்கெழு நல்லவை உறந்தை" என்றும் (இது அகநானூறு) சொல்லப் பட்டிருக்கின்றன. சோழர் காலத்திலே உறையூரிலே இருந்த அறங்கூறு அவையத்தின் மூலம் அறங்கெடாமல் நீதி கெடாமல் நியாயங்கள் பாதிக்கப்படாமல் நிலைநாட்டப்பட்டது என்பதை இந்தச் செய்யுள் வரிகள் நமக்கு எடுத்துக்காட்டுகின்றன. அப்படிப்பட்ட தஞ்சைத் திருநகரில் சோழமண்டலத்தில் 8.10.1807இல் தொடங்கப்பட்ட மாவட்ட நீதிமன்றம் 200 ஆண்டு கால வரலாற்றைக் கொண்ட நீதிமன்றம். இங்கே சிலர் எடுத்துக்காட்டியதைப்போல 141 நீதிபதிகள் அமர்ந்து நீதி வழங்கியிருக்கின்றார்கள். அப்படி நீதி வழங்கிய 141 பேரில் எனக்கு நீதி வழங்கிய ஒருவரும் உண்டு. இங்கே நான் 1962ஆம் ஆண்டு சட்டமன்றத் தேர்தலில் நின்று வெற்றி பெற்றபோது அந்த வெற்றி செல்லாது என்று எதிர்தரப்பிலே இருந்து வழக்குப் போட்டபோது, அது செல்லும் என்று தீர்ப்பளித்த நீதிமன்றமும் தஞ்சை நீதிமன்றம்தான் என்பதை நான் மகிழ்ச்சியோடு இங்கே குறிப்பிட விரும்புகின்றேன்.

கீழ்வெண்மணி கிராமத்தில் உயிரோடு 30பேர், ஆதிதிராவிட மக்கள் எரிக்கப்பட்டார்கள். அப்படி அந்தச் சமுதாயத்தைச் சார்ந்த கண்மணிகள் கீழ்வெண்மணியிலே பிறந்தவர்கள், அதற்காக ஒரு விசாரணை நடைபெற்றபோது எரியுண்ட அந்தத் தோழர்களுக்காக அந்தப் பழங்குடி மக்களுக்காக அரசின் சார்பில் நடத்தப்பட்ட அந்தவழக்கில், குற்றவாளிகளுக்கெல்லாம் கடும் தண்டனை





விதிக்கப்பட்டதும், அதிலே மேல்முறையீடு செய்யப்பட்டும் கூட அவர்கள் தப்பிக்க முடியவில்லை என்பதும் தஞ்சையிலே வழங்கப்பட்ட அந்த நீதிமன்றத் தீர்ப்புக்குரிய பெருமையாகும் என்பதை நான் கம்பீரத்தோடு சொல்லிக்கொள்ளக் கடமைப் பட்டிருக்கிறேன்.

**நாகரிகமான அரசியல்**

ஒன்றை நினைவுபடுத்த விரும்புகின்றேன். இன்றைக்கு ஆளுங்கட்சியாக இருக்கின்ற நான், 1978ஆம் ஆண்டு எதிர்க்கட்சித் தலைவராக இருந்தபோது, தஞ்சை நீதிமன்றத்தினுடைய வழக்கறிஞர்கள் சங்கம் என்னை அழைத்து ஒரு வரவேற்பு விழா நடத்தியது. வழக்கறிஞர் சங்கத்திற்கு தலைவர் யார் தெரியுமா ? கோபால் ஐயர்–வரவேற்புரையாற்றியவர் யார் தெரியுமா ? பாலசுப்பிரமணிய ஐயர். கோபால ஐயர் தலைமையில் பாலசுப்பிரமணிய ஐயர் வரவேற்க எதிர்க்கட்சித் தலைவராக இருந்த நான் இங்கே பாராட்டப்பட்டேன். ஒரு படத்தைத் திறந்து வைத்தேன். என்ன படம் தெரியுமா ? தந்தை பெரியாருடைய படம். ஒரு ஐயர் தலைமை வகிக்க, ஒரு ஐயர் வரவேற்க, பெரியாருடைய படத்தை இங்கே நான் திறந்து வைத்தேன் என்று சொன்னால் தஞ்சாவூர் எவ்வளவு நாகரிகமான அரசியலுக்கு, கண்ணியமான அரசியலுக்கு, பண்பாட்டு அரசியலுக்குப் பெயர் பெற்ற இடம் என்பதை நான் சொல்லி யாருக்கும் விளங்க வேண்டிய அவசியமில்லை. அத்தகைய தஞ்சையம்பதியில் இன்றைக்கு நடைபெறுகின்ற இந்த விழாவிலே நம்முடைய மாண்பமை உச்சநீதிமன்றத்தினுடைய தலைமை நீதிபதி அவர்களும், மற்ற நீதியரசர்களும் கலந்து கொண்டிருப்பதும், அதிலும் குறிப்பாக நம்முடைய முன்னாள் நீதிபதி, நீதியரசர் ஏ.ஆர்.லட்சுமணன் அவர்கள் என்னைச் சேக்கிழாரோடு ஒப்பிட்டதும், நம்முடைய நீதியரசர் சதாசிவம் அவர்கள் அதைவிடப் பன்மடங்கு என்னைப் பாராட்டி நான் கூறிய வாக்கியங்களை இளைய தலைமுறை எப்படிப் பின்பற்ற வேண்டும் என்று அறிவுரைத்ததும் நான் உள்ளபடியே நன்றியோடு பாராட்டக்கூடிய விஷயங்களாகும் என்பதைத் தெரிவித்து, இந்த அளவிற்கு என்னிடத்திலே மதிப்பு வைத்திருக்கின்ற, மரியாதை வைத்திருக்கின்ற, அன்பு வைத்திருக்கின்ற நீதியரசர்களுக்கும் மற்றும் வழக்கறிஞர் பெருமக்களுக்கும், தஞ்சைப் பெருமக்களுக்கும் என்னுடைய நன்றியை, வணக்கத்தை, வாழ்த்துகளைத் தெரிவித்து வாழ்க நீதி! வெல்க நீதி! என்று கூறி இந்த அளவோடு என்னுடைய உரையை நிறைவு செய்கின்றேன். ★

# தூத்துக்குடி துறைமுகத்தின் மூலம் சமூகப் பொருளாதார நிலைகளில் தமிழகம் முன்னேற்றமடையும்

சென்னை, தலைமைச் செயலகத்தில் 14.07.2008 அன்று நடந்த நிகழ்ச்சியில்
மின் ஊடக தொலைத் தொடர்பு மூலமாக தூத்துக்குடி துறைமுகம் –
9ஆம் சரக்குத் தளத்தினைத் தொடங்கி வைத்து
மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் **கலைஞர் மு. கருணாநிதி** அவர்கள்
ஆற்றிய உரை



**எ**ந்த இயக்கத்தின் சார்பாகத் தமிழக முதலமைச்சராக தற்போது இருக்கிறேனோ. அந்த இயக்கத்தை 1949ஆம் ஆண்டு தொடங்கி வைத்த பெருமை தூத்துக்குடிக்கு உண்டு. அதிலும் குறிப்பாக தூத்துக்குடிக்குச் சென்று திராவிட முன்னேற்றக் கழகத்தின் கிளைக்கழகத்தை தொடங்கிவை என்று எனக்கு ஆணையிட்ட அறிஞர் அண்ணா அவர்களை நினைத்து அவர் அடி தொழுது என்னுடைய உரையைத் தொடங்குகின்றேன்.

தூத்துக்குடி துறைமுகம், வரலாற்றுச் சிறப்பு மிகுந்த துறைமுகம். இங்கு நடைபெற்ற முத்துக் குளியல் தொழில் உலகப் புகழ் வாய்ந்தது. உலகப் பேரழகியாகத் திகழ்ந்த கிளியோபாத்ராவின் அழகுக்கு அழகு சேர்த்த முத்துமாலை, தூத்துக்குடி கொற்கைத் துறைமுகப் பகுதிகளில் எடுக்கப்பட்ட முத்துக்களால் தொடுக்கப்பட்டது என வரலாறு கூறுகிறது.

இந்திய சுதந்திரப்போர் நடைபெற்ற காலத்தில், ஆங்கிலேயரை எதிர்த்துக் கப்பல் விட்ட, கப்பலோட்டிய தமிழன் வ.உ.சி. அவர்களால் 1906, 1907 ஆம் ஆண்டுகளில் தூத்துக்குடியின் புகழ் இந்தியா முழுவதிலும் பரவியது.

இத்தகைய பல வரலாற்றுப் பின்னணிகளும் பெருமைகளும் கொண்டது இந்தத் தூத்துக்குடி துறைமுகம்.

1967இல் பேரறிஞர் அண்ணா அவர்களின் தலைமையில் திராவிட முன்னேற்றக் கழக அரசு அமைந்தபின்–சேலம் இரும்பாலை, சேதுசமுத்திரத் திட்டம் ஆகியவற்றுடன் பெரிய கப்பல்கள் வந்து செல்லக் கூடிய வகையில் தூத்துக்குடி ஆழ்கடல் துறைமுகத் திட்டத்தை நிறைவேற்றிட வேண்டுமெனக் கோரி, 23.7.1967 அன்று கழக ஆட்சி நடைபெற்ற போது "எழுச்சி நாள்" கடைப்பிடிக்கப்பட்டது.



இந்திய சுதந்திர தின வெள்ளி விழாக் கொண்டாட்டத்தையொட்டி, 5.9.1972 அன்று, தூத்துக்குடியில் நடைபெற்ற கப்பலோட்டிய தமிழன் வ.உ. சிதம்பரனாரின் சிலை திறப்பு விழாவில் கலந்து கொண்ட அப்போதைய பிரதமர் இந்திராகாந்தி அவர்களிடம், சேதுசமுத்திரத் திட்டம் நிறைவேற்றப்பட வேண்டும் என்னும் கோரிக்கையை வைத்தேன். அத்துடன், தூத்துக்குடி துறைமுகத்திற்கு வ.உ. சிதம்பரனார் அவர்களின் பெயர் சூட்டப்பட வேண்டுமென்றும் தமிழக அரசின் சார்பில் பிரதமர் இந்திரா காந்தி அவர்களைக் கேட்டுக் கொண்டேன்.

அடுத்து உரையாற்றிய பிரதமர் இந்திராகாந்தி அவர்கள், தூத்துக்குடி துறைமுகக் கட்டுமானப் பணிகள் முடிவடைந்து, முதல் கப்பல் வந்து நிற்கும் இடம் கட்டி முடிக்கப்பட்டது, அந்த இடத்திற்கு வ.உ.சி.யின் பெயர் வைக்கப்படும் என்று அறிவித்து நான் விடுத்த கோரிக்கையை உடனடியாக ஏற்றுக் கொண்டார்கள்.

தொடர்ந்து, தமிழக அரசு மத்திய அரசை வலியுறுத்தியதன் பயனாகப் படிப்படியாக வளர்ந்த தூத்துக்குடி துறைமுகம், 11.7.1974 அன்று தொடங்கி வைக்கப்பட்டு, இந்தியாவின் பெரிய துறைமுகங்களில் தூத்துக்குடி துறைமுகம் பத்தாவது பெரிய துறைமுகமாக அறிவிக்கப்பட்டது.

வ.உ.சி. சிலை திறப்பு விழாவில் பிரதமர் இந்திராகாந்தி அவர்கள் தூத்துக்குடி துறைமுகத்தில் கப்பல் வந்து நிற்குமிடத்திற்கு சிதம்பரனார் பெயர் சூட்டப்படும் என அறிவித்ததற்கு ஏற்ப, 2.12.1975இல் புதிதாகக் கட்டி முடிக்கப்பட்ட இரண்டு கப்பல் தளங்களுக்கும், 31.12.1976 அன்று கட்டி முடிக்கப்பட்ட மேலும் இரண்டு கப்பல் தளங்களுக்குமாக நான்கு கப்பல் தளங்களுக்கு வ.உ.சி. அவர்களின் பெயர் சூட்டப்பட்டு, அவை செயல்பட்டு வருகின்றன.

அதன்பின்னர் கட்டப்பட்ட புதிய சரக்குத் தளங்களுடன் இதுவரை மொத்தம் 8 கப்பல் தளங்களைக் கொண்டுள்ள இத்துறைமுகத்தில் தற்பொழுது 9ஆவது சரக்குத் தளம் அமைக்கப்பட்டு, 14.7.2008 அன்று திறந்து வைக்கப்படுகிறது.

மொத்தம் 57 கோடி ரூபாய் செலவில் 6 ஹெக்டேர் நிலப்பரப்புக் கொண்டதாகக் கட்டப்பட்டுள்ள இந்த 9ஆவது தளத்தின் கட்டுமானப் பணிகள் 2006ஆம் ஆண்டு டிசம்பரில் தொடங்கப்பட்டு தற்பொழுது முடிவடைந்துள்ளது.

335 மீட்டர் நீளமுள்ள, 65 ஆயிரம் டன் கொள்ளளவு கொண்ட சரக்குப் பெட்டகக் கப்பல்களையும். 70 ஆயிரம் டன் கொள்ளளவு கொண்ட பிற கப்பல்களையும் கையாளுவதற்கேற்ப 12.8 மீட்டர் மிதவை ஆழத்துடன் இத்தளம் வடிவமைக்கப்பட்டுள்ளது.

இந்த 9ஆவது சரக்குத் தளம், சரக்குப் பெட்டகங்களைக் கையாளுவதற்குத் தேவையான பளு தூக்கிகளையும், கரையில் சரக்குகளைக் கையாளும் இயந்திரங்களையும், நிறுவுவதற்கு ஏற்ப வடிவமைக்கப்பட்டுள்ளது.

11ஆவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் இந்தத் துறைமுகத்தின் உள்துறைமுக மேம்பாட்டிற்கு 1,050 கோடியே 45 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டிலான வளர்ச்சித் திட்டங்களுக்கும், வெளித்துறைமுக மேம்பாட்டிற்காக 4,350 கோடியே 60 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டிலான வளர்ச்சித் திட்டங்களுக்கும், ஆக மொத்தம் 5,401 கோடியே 5 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டிலான வளர்ச்சித் திட்டங்களுக்கு மத்திய அரசு ஒப்புதல் அளித்துள்ளது.

இத்திட்டங்கள் அனைத்தும் முடிவடையும் போது தூத்துக்குடி மட்டுமல்ல; தென்தமிழகம் மட்டுமல்ல; ஒட்டு மொத்த தமிழகமும் தூத்துக்குடி துறைமுகத்தின் மூலம் சமூகப் பொருளாதார நிலைகளில் நாட்டின் பிற பகுதிகளின் கவனத்தை ஈர்க்கும் அளவுக்கு முன்னேற்றம் அடையும் என்பதில் ஐயமில்லை.

தமிழகத்தின் நலன்களைக் காப்பதில் மிகுந்த அக்கறை கொண்டு, நாம் கோரும் திட்டங்களுக்கெல்லாம் தாராளமாக அனுமதி வழங்கி உதவி வருவதுடன், இந்தத் தூத்துக்குடி துறைமுகத்தின் வளர்ச்சிக்காகவும் உதவிகளையும் ஒத்துழைப்புகளையும் நல்கி வரும் நமது மதிப்பிற்குரிய ஐக்கிய முற்போக்குக் கூட்டணி அரசின் வழிகாட்டும் தலைவர் திருமதி சோனியாகாந்தி அவர்களுக்கும், பிரதமர் மன்மோகன்சிங் அவர்களுக்கும், தமிழகத்தின் சார்பில் நன்றியையும் பாராட்டுகளையும் தெரிவித்துக் கொண்டு, மத்திய அமைச்சர் தம்பி டி.ஆர். பாலு அவர்கள் தமிழகத்தின் மேன்மைக்காகத் தனக்குத் தரப்பட்டுள்ள பணிகளைச் செவ்வனே ஆற்றி நம்முடைய சிந்தையையெல்லாம் குளிரச் செய்கின்ற தன்மையிலே நடத்துகின்ற விழாக்களில் ஒன்றாக இன்றைய விழா அமைந்திருக்கிறது என்பதையும் கூறி தூத்துக்குடி துறைமுகப் பணிகள் மேன்மேலும் சிறக்க என் நல்வாழ்த்துகளைத் தெரிவித்துக்கொள்கிறேன். ★

# மக்களுக்கும் கேபிள் ஆப்பரேட்டர்களுக்கும் உதவிடும் நல்ல எண்ணத்தோடு அரசு கேபிள் டி.வி. நிறுவனத்தைத் தொடங்கியுள்ளது

**சென்னை, தலைமைச் செயலகத்தில் 15.7.2008 அன்று அரசு கேபிள் டி.வி. நிறுவனத்தின் கேபிள் இணைப்பு சேவையைத் தொடங்கிவைத்து மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் கலைஞர் மு. கருணாநிதி அவர்கள் ஆற்றிய உரை**

"சொன்னதைச் செய்வோம் செய்வதைச் சொல்வோம்" என்பதுதான் இவ்வரசின் தாரக மந்திரம். இந்த ஆண்டு ஜூலை 15–ஆம் நாள், அரசு கேபிள் டி.வி நிறுவனம் தன் சேவைகளைத் தொடங்கும் என்று ஏற்கெனவே அறிவித்திருந்தேன்.

பல சவால்களை எதிர்கொள்ள நேர்ந்திருந்தாலும் சொன்னபடி சொன்ன நாளில் அப்பணிகள் இன்று தொடங்கப்படுகின்றன என்பது குறிப்பிடத்தக்கது.



கேபிள் டி.வி சேவைகள் வழங்க வேண்டுமென்றால் அதற்கு மத்திய அரசின் அனுமதி பெற வேண்டும். மத்திய அரசின் அனுமதி 2.4.2008 அன்றுதான் கிடைக்கப் பெற்றது. அனுமதி பெற்றபின், 4 மாத குறுகிய காலத்திற்குள் உலகளாவிய ஒப்பந்தப் புள்ளிகள் கோரப்பட்டு, உலகப் புகழ் பெற்ற நிறுவனங்களைத் தேர்ந்தெடுத்து, தரம்வாய்ந்த இயந்திரங்களைக் கொள்முதல் செய்து அவைகளைப் பன்னாட்டு நிபுணர்கள் அடங்கிய குழுவைக் கொண்டு நிறுவி இன்று அதன் சேவைகள் மக்கள் பயனுக்காகத் தொடங்கப்படுகிறது. இது உண்மையில் ஒரு பெரும் சாதனையாகும்.

### இது ஒரு புதிய திட்டம்

அரசு எதற்காக இந்த நிறுவனத்தை ஏற்படுத்தி உள்ளது என்று பல தரப்பில் சர்ச்சைகள் எழுந்துள்ளன. அண்மையில் இது சம்பந்தமாக ஓர் அறிக்கை வெளியிட்டிருந்தேன். அதில், அரசு கேபிள் டி.வி நிறுவனத்தைத் தொடங்குவது என்பது அதன் மூலம் அரசு வருமானத்தைப் பெருக்கிடும் நோக்கத்திற்காக அல்ல; உண்மையில், கேபிள் டி.வி நடத்துகிறவர்கள் மூலம் பயனாளிகளான பொதுமக்களுக்கு நியாயமான கட்டணத்தில், தரமான சேவைகளை வழங்கிடும் நோக்கத்தோடு தான் இந்நிறுவனம் தொடங்கப்பட்டுள்ளது. இதுவரை, தொலைக்காட்சியின் சேவைகளைப் பெற பொதுமக்கள் உள்ளூர் கேபிள் ஆப்பரேட்டர்களுக்கு குறைந்தபட்சம் 150 ரூபாய் கட்டணம் செலுத்தி வந்தனர். ஒவ்வொரு ஊருக்கும் தனித் தனி விகிதத்தில் கட்டணம் வசூலிக்கப்பட்டு வந்தது. உள்ளூர் கேபிள் ஆப்பரேட்டர்களுக்கு தொலைக்காட்சி நிறுவனத்திடமிருந்து





சேனல்களைப் பெற்றுத் தருவதாகச் சொல்லி, பல MSO நிறுவனங்கள் செயல்பட்டு வந்தன. இவற்றில், சில MSO–க்கள் உள்ளூர் கேபிள் ஆப்பரேட்டர்களிடமிருந்து கணிசமான தொகையை வசூல் செய்து பெரும் லாபம் சம்பாதித்து வந்தன. இதில், ஏராளமான முரண்பாடுகளும், புகார்களும் தொடர்ந்து கூறப்பட்டு வந்த நிலையில்தான், அரசே மக்களுக்கும் கேபிள் ஆப்பரேட்டர்களுக்கும் உதவிட வேண்டுமென்ற நல்ல எண்ணத்தோடு அரசு கேபிள் டி.வி நிறுவனத்தைத் தொடங்கியுள்ளது.

இது ஒரு புதிய திட்டம். எந்த ஒரு மாநிலத்திலும் இது போன்ற ஒரு திட்டத்தைச் செயல்படுத்தியுள்ளதாகச் செய்திகள் கிடையாது. உலக அளவிலேயே இது போன்ற ஒரு திட்டம் அரசால் செயல்படுத்தப்படுகிறதா என்பதும் ஒரு கேள்விக்குறியாகவே உள்ளது.

புதிய திட்டம் ஒன்று தொடங்கப்படும்போது, அதைத் தொடங்கி ஒரு சில மாதங்கள் ஆகின்ற வரையில் நடைமுறைப் பிரச்சினைகள் ஏற்படுவது இயல்பு. அதை ஒவ்வொன்றாகக் களைந்து, இத்திட்டத்தை வெற்றி பெறச் செய்ய அரசு தொடர்ந்து முயற்சிகள் எடுத்து வருகிறது.

அண்மையில் மக்களிடமிருந்து எவ்வளவு கட்டணம் வசூலிப்பது என்ற ஒரு பிரச்சினை எழுந்தது. தற்போது அவர்கள் 150 ரூபாய்க்குக் குறையாமல் கட்டணம் செலுத்தி வருகிறார்கள் என்ற செய்தியை நான் அறிந்தேன்.

அக்கட்டணத்தைக் குறைத்து மாநிலம் எங்கும் ஒரே கட்டணமாக 100 ரூபாய்க்கு மிகாமல் இருக்கவேண்டுமென்ற முடிவை எடுத்து அது அறிவிக்கப்பட்டது.

இதுபற்றியும் சில பத்திரிகைகளில் விமர்சனம் வந்துள்ளது. மத்திய அரசு 77 ரூபாய்தான் வசூலிக்க வேண்டும் என்ற நிலை இருக்கும் போது, தமிழக அரசு 100 ரூபாய் ஏன் வசூலிக்க வேண்டும் என்பதுதான் அவர்களின் புகார். மத்திய அரசின் "டிராய்" அறிவித்த கட்டணமான 77 ரூபாய் "Free to Air" என்ற இலவச சேனல்களுக்கு மட்டுமே பொருந்தும். அரசு கேபிள் டி.வி நிறுவனமோ இலவச சேனல்களைத் தவிர, கட்டணச் சேனல்களும் கொடுப்பதால் 100 ரூபாய் வரை வசூலிக்கலாம் என எடுத்துள்ள முடிவு சரியானதே எனக் கருதலாம். இவ்வேளையில் தற்போது, இதே அளவு சேனல்களைக் கொடுப்பதற்கு 150 ரூபாயிலிருந்து 300 ரூபாய் வரை வசூலிக்கப்படுகிறது என்பதையும் சுட்டிக்காட்டிட விரும்புகிறேன்.

### பாரபட்சமின்றி இணைப்புகள் வழங்கப்படும்

சென்னையில், இதே கட்டணத்தில் சேவைகளைக் கொடுப்பீர்களா என்ற அடுத்த கேள்வி எழுந்துள்ளது. சென்னையில் Conditional Access System என்ற முறை நடைமுறையில் உள்ளது. இங்கு இரண்டு வகை இணைப்புகள் வழங்கும் முறை உள்ளது. ஒன்று, செட் ஆப் பாக்ஸ் இல்லாமல், கேபிள் இணைப்பு மட்டுமே பெற்று குறிப்பிட்ட சில சேனல்கள் மட்டும் காண்பதாகும். இந்த

முறைதான் சென்னையில் அதிக அளவில் நடைமுறையில் உள்ளது. இதுபோன்ற இணைப்புகளை கேபிள் டி.வி நிறுவனம் மற்ற மாவட்டங்களில் உள்ளதுபோல் மாதம் ஒன்றுக்கு 100 ரூபாய்க்கு மிகாமல் வழங்கும். இரண்டாவது முறையில், செட் ஆப் பாக்ஸ் மூலமாக இணைப்புகள் பெறுவோர், தாங்கள் பார்க்க விரும்பும் சேனல்களின் எண்ணிக்கைக்கு ஏற்ப, மத்திய அரசின் "டிராய்" விதிமுறைகளுக்கு உட்பட்டு கட்டணம் நிர்ணயிக்கப்படும். எது எப்படி இருந்தாலும் அரசு கேபிள் டி.வி நிறுவனம், தற்போது பொதுமக்கள் செலுத்திவரும் கட்டணத்தைவிட அதிகக் கட்டணத்தை நிச்சயமாக வசூலிக்கவே வசூலிக்காது.

அரசு கேபிள் டி.வி நிறுவனம், தற்போது இயங்கி வரும் MSO-க்கள் மூலம்தான் இணைப்புகளைக் கொடுக்கும் என்ற இன்னொரு பிரச்சினை எழுந்துள்ளது. இதற்கு நான் கூறும் ஒரே பதில், அரசு கேபிள் டி.வி நிறுவனம் பாரபட்சமின்றி இணைப்புகளை வழங்கும். முதல் கட்டமாக, அரசு கேபிள் டி.வி நிறுவனத்திடம் முன்பதிவு செய்திருக்கும் கேபிள் டி.வி ஆப்பரேட்டர்களுக்கு இணைப்புகள் வழங்கப்படும். முன்பதிவு செய்யாத கேபிள் டி.வி ஆப்பரேட்டர்களுக்கு, விரைவில் இன்னொரு வாய்ப்பு கொடுக்கப்படும். அரசின் நிபந்தனைகளுக்கு உட்பட்டு செயல்பட முன்வரும் அனைவருக்கும் அரசு கேபிள் டி.வி நிறுவனம் இணைப்புகள் வழங்கும். தற்போது இயங்கி வரும் MSO நிறுவனங்களும் இவ்வாய்ப்பினைப் பயன்படுத்திக் கொள்ளலாம்.

இன்னொரு முக்கியமான பிரச்சினையைப் பற்றிக் குறிப்பிட விரும்புகிறேன். அனைத்துக் கட்டணச் சேனல்களையும் அரசு கேபிள் டி.வி நிறுவனம் அளிக்குமா என்று சில தரப்பில் கேள்விகள் கேட்கப்பட்டன. தற்போது, 300-க்கு மேற்பட்ட கட்டணச் சேனல்கள் இயங்கி வருகின்றன. அவை அனைத்தையும் அரசு கேபிள் டி.வி நிறுவனம் அளிப்பது சாத்தியமாகாது. மக்களிடையே செல்வாக்குப் பெற்ற 70-லிருந்து 80 முக்கிய சேனல்களை அளிக்க அரசு கேபிள் டி.வி நிறுவனம் முடிவு செய்துள்ளது. இச்சேனல்களின் பிரதிநிதிகளை அழைத்து அவர்களுடைய சேவைகளை வழங்குமாறு அரசு கேட்டுக் கொண்டது. அதற்குப் பெரும்பாலான கட்டணச் சேனல்கள், அரசு கேபிள் டி.வி நிறுவனத்திற்குத் தங்கள் சேவைகளை வழங்க இசைவு தெரிவித்துள்ளன. சில கட்டணச் சேனல்கள் அரசு கேபிள் டி.வி நிறுவனத்திற்குச் சேவைகள் வழங்க இதுவரையில் இசைவைத் தெரிவிக்கவில்லை. அவர்களிடமிருந்து சேவைகள் பெற சட்டப்படி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்று இத்தருணத்தில் தெளிவுபடுத்த விரும்புகிறேன். இதுபோன்று தினமும் ஒரு புதிய பிரச்சினை எழுந்தவண்ணம் உள்ளது. இந்தப் பிரச்சினைகள் அனைத்தையும் எதிர்நோக்கி அவைகளைக் களைந்து மக்களுக்குத் தொடர்ந்து இந்நிறுவனத்தின் மூலம் தமிழக அரசு சேவைகளை வழங்கும் என்று தெரிவித்து என் உரையை நிறைவு செய்கிறேன். வருகை தந்து வாழ்த்திய உங்கள் அனைவருக்கும் நன்றியும் வணக்கமும், உரியதாகுக!

❖

## ஆசிய நீச்சல் விளையாட்டுப் போட்டியில் தங்கப்பதக்கம் வென்ற தமிழக வீரர் **அக்னீஸ்வர்க்கு** ரூ. ஒரு இலட்சம் ஊக்கப்பரிசு

### மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஆணை

தமிழகத்தைச் சேர்ந்த நீச்சல் வீரர் ஜெ.அக்னீஸ்வர் உலக அளவிலும் தேசிய அளவிலும், மாநில அளவிலும் நீச்சல் போட்டிகளில் கலந்து கொண்டு இதுவரை மொத்தம் 126 தங்கப் பதக்கங்களும், 49 வெள்ளிப்பதக்கங்களும், 28 வெண்கலப்பதக்கங்களும் பெற்று மகத்தான சாதனைகள் படைத்துத் தமிழகத்திற்குப் பெருமை தேடித்தந்துள்ளார். பாகிஸ்தானில் நடைபெற்ற நீச்சல் போட்டிகளில் மட்டும் 6 தங்கப்பதக்கங்கள் பெற்றுள்ளார் என்பது இவரது பெருமைக்குச் சான்றாகும். அண்மையில், இந்தோனேசியாவின் தலைநகர் ஜாகர்தாவில் நடைபெற்ற ஐந்தாவது ஆசிய நீச்சல் விளையாட்டுப் போட்டியில் வெற்றிபெற்றுத் தங்கப்பதக்கம் பரிசு பெற்றுள்ளார்.

அவரது இந்தச் சாதனையையும், நீச்சல் போட்டிகளில் இதுவரை அவர் படைத்துள்ள சாதனைகளையும் பாராட்டும் வகையில் அவருக்கு ஒரு இலட்சம் ரூபாய் ஊக்கப் பரிசு வழங்கிட மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் கலைஞர் மு. கருணாநிதி அவர்கள் ஆணையிட்டுள்ளார்.

❖



**சங்கத்தமிழ்**

# ஒரு தாயின் தாலாட்டு

**முதல்வர் கலைஞர்**



பகைவெல்லச் சென்றிருக்கும் கணவனது
மனைவியாய் நெஞ்சத்தின் வீரத்தை நினைத்தவாறு

பகல் முழுதும் குடும்பத்துப் பணிமுடித்துச் சற்றுப்
படுத்துறக்கம் கொள்வதற்குச் செல்லும் முன்னர்

பாசமுடன் மகனைக் கூவியழைத்துக் "கண்ணா!
பாலமுதம் இதோ பருகிட வாடா," என்பேன்!

"வரமாட்டேன் போ" என்று நிலாவெள்ளி ஒளியினிலே
வட்டமிட்டு விளையாட ஓடிடுவான் எதிர்வீட்டுப் பிள்ளையுடன்!

வந்துவிடும் எனக்குக் கோபம்-கோலொன்றை எடுத்தோங்கி
"வரமாட்டேன் என்றா சொன்னாய்? இதோ வந்துவிட்டேன்" எனத்

துரத்திடுவேன்; அடிக்கமாட்டேன்! ஆனாலும் என்
தூயமகன் அஞ்சி நடுங்கிப் பதுங்கிடுவான்!

"கோலுக்கே இந்தப் பயம் கொள்கின்ற பிள்ளாய்; நீ - நாளை
வேலுக்குப் போர் முனையில் என்ன பதில் சொல்வாய்?" என்பேன்!

இழுத்து வந்து செல்லமாய்க் கன்னம் கிள்ளிப்
பழுத்திருக்கும் கோவைக்கனியாம் அவன் இதழில்;

தேன்கலந்த பாலின் கிண்ணம் மெல்லக் கவிழ்த்து
தெம்பாக இருப்பதற்கு முழுவதையும் அருந்தென்பேன்!

அழகுதமிழ் மழலைச் செல்வன் அதனை மறுக்காமல்
அச்சத்தின் காரணமாய் அனைத்தும் பருகிடுவான்

பிறைபோல இருந்த பிள்ளை முழுநிலவாக உருவெடுத்து
குறையில்லாத் தோற்றமுடன் குன்றம் போல் வளர்ந்து விட்டான்!



தாலாட்டப் பிள்ளையொன்றைத் தந்துவிட்டுப்
போராட்டக்களம் சென்ற என்னவரோ;

தமிழ் மண்ணின் பண்பாட்டுக் கேற்றவாறு
தட மார்பில் வேல்தாங்கி நடுகல்லாய் நின்றுவிட்டார்

நானும் கல்லாக மனத்தை ஆக்கிக்கொண்டு
வானதிரப் புவி வாழ்த்துகின்ற மானத்தை

ஊனமின்றிக் காப்பதற்கு உறுதிபூண்டு
உயர் வீரக்குடிமகனாய்ப் பிள்ளைதனை வளர்த்தேன்!

கட்டியணைத்துக் களித்த என் கணவனது நெஞ்சகத்தை
வெட்டிப்பிளந்து வீழ்த்திவிட்ட பகைப்புலத்தை;

எட்டியுதைத்துத் துரத்தி ஏற்றிடுக வெற்றிக்கொடி யென்றும்,
எதிரிகளின் கோட்டையிலே நம் முரசு முழங்கட்டுமென்றும்,

உச்சிமோந்து திலகமிட்டுக் குடுமிதனைக் கோதிவிட்டு
உடைவாளைக் கையில்தந்து, "சென்றுவா மகனே" என அனுப்பி
வைத்தேன்



**அவனோ;**

கொடுவாளால் களிறுகளைக் கொன்றுபோட்டுக்
குன்றுகளைப் பந்தாடுதல் போல் அவற்றை உருட்டி விட்டுப்

படுகளத்தில் விளையாடி வினை முடிக்கின்றான் என்றும்,
நெடுமரம் போல் பகைப்படை வீழ்கின்றதென்றும்,

அடுக்கடுக்காய்த் தித்திப்புச் செய்திகள் வந்திடவே அடக்கவொண்ணா
ஆவலுடன் அது காணக் களம் புகுந்தேன்!

ஐயந்திற் கிடமேயில்லை வெற்றி நமக்கேதான்...
ஆனால் ஒன்று; அங்கே என் மகனைத்தான் காணவில்லை!

குருதி மணம் கமழுகின்ற போர்க்களத்தில்
குமுத மலர் மொட்டுக்களாய் முளைக்கும் தலைகள்

வீழ்ந்துள்ள வீரர்தம் உடல்களோ கவிழ்ந்துவிட்ட படகுகளாம்!
வெட்டுண்ட கைகால்கள் வேலையின்றி மிதக்கின்ற துடுப்புகளாம்!

சூழ்ந்துள்ள பிணக்குவியல் நடுவில் சென்றேன்.
"ஆழ்ந்துள்ளேன் கவலையினால்; அருமை மகனே நீ

போர்க்களத்துப் பிணமாகி வாழ்கின்றாயா? அன்றி
புறமுதுகிட்டோடிச் செத்துத் தொலைந்தாயா?" எனக் கேட்டுத்
துடித்திட்டேன்!

"வாழ்கின்றேனம்மா வீரனாக!" என்றொரு குரல்
தாழ்கின்ற என் தலையை நிமிர்த்திற்றாங்கே!

குரல் வந்த திசைநோக்கிப் பறந்துபோனேன்- "உள்ள
உரம் வாய்ந்த மகனே! நீ எங்கே?" என்றேன்.

"இங்கே" என்றான்; கண்டு கொண்டேன்! "வலம்புரிச்
சங்கே!" என்றவாறு தழுவிக்கொண்டேன்! கையில்;

தாங்கிப் போரிட்ட கேடயம் தரையில் கிடக்க; அதில்
தங்கமகன் மார்பில் அம்புதாங்கி வீழ்ந்து கிடந்தான்!

"வெற்றியம்மா வெற்றி" என்றான்-அவன்
நெற்றியிலே முத்தமிட்டு, "என் நித்திலமே!

போர்முனையில் உயிர்விட்டு மானம் காத்த தந்தைக்கு
நேர்வழித் தோன்றலாய் வந்துதித்தாய் வாழ்க!" என்றேன்!

"ஊடுருவியிருக்கின்றதே மார்பில் அம்பு-வலி
உனக்குத் தாங்காதே மகனே!" என்றேன்; அழுதுவிட்டேன்!

"உண்மையா அம்மா? உன் கண்ணால் கண்டு நீ எனக்கு உரைக்கும் வரை
நான் உணரவில்லையம்மா!" என்றான்!

உயிர்விட்டான் மடி மீது! போய்விட்டான்;
உயிரோடு எனைமட்டும் விட்டுவிட்டு!

ஊர்ப்பிள்ளைகளுடன் விளையாடிக்கொண்டு
உண்பதற்குப் பிடிவாதம் பிடித்தபோது-நான்

ஓங்கிய கோல் கண்டு ஓடிய என் மகனா; மார்பில்
தாங்கிய கணையுடனே தாயகத்தை மீட்கும் போரில்

தன்னுயிரைத் தருவதற்கும் துணிந்து நின்றான்!
என்னுயிரே! என் மகனே! நீ வாழ்க! என வாழ்த்துகின்றேன்!"

★ ★ ★

★ "பால் கொண்டு மடுப்பவும் உண்ணான் ஆகலின்
செறாஅது ஓச்சிய சிறுகோல் அஞ்சி,
உயவொடு வருந்தும்மனனே! இனியே
புகர்நிறங் கொண்ட களிறட்டு ஆனான்.
முன்நாள் வீழ்ந்த உரவோர் மகனே!
உன்னிலன் என்னும் புண்ஒன்று அம்பு
மான் உளை அன்ன குடுமித்
தோல் மிசைக் கிடந்த புல் அண லோனே." (புறநானூறு : பாடல் : 310)

பாடியவர் : பொன்முடியார்

பொருள் விளக்கம்:

மடுப்ப=உண்ணுமாறு செய்ய. செறாஅது=செல்லமாகக்
கோபித்து. உயவொடு=கவலையுடன். மனனே=மனமே.
களிறட்டு ஆனான்=களிறுகளைக் கொன்றவனானான்.
உரவோர்=மூத்தோர் (தந்தை). உன்னி=கவனித்தல்.
மான் உளை அன்ன குடுமி=குதிரை மயிர் போன்ற
அடர்த்தியான குடுமி. தோல்=கேடயம். புல்=புல்லிய.
அணலோன்=தாடியுடையவன்.

★ ★ ★







# கச்சத்தீவு கடல் பகுதியில் இந்திய மீனவர்களின் உரிமைகளை மீண்டும் வழங்க நடவடிக்கை எடுத்திடுவீர்!

மாண்புமிகு இந்தியப் பிரதமர் அவர்களுக்கு
மாண்புமிகு தமிழக முதலமைச்சர் **கலைஞர்** அவர்கள் கடிதம்

**மா**ண்புமிகு இந்தியப் பிரதமர் டாக்டர் மன்மோகன்சிங் அவர்களுக்கு மாண்புமிகு தமிழக முதலமைச்சர் கலைஞர் மு. கருணாநிதி அவர்கள் 23.6.2008 அன்று எழுதியுள்ள கடிதம் வருமாறு :-

தமிழ்நாட்டைச் சேர்ந்த தஞ்சாவூர், புதுக்கோட்டை, இராமநாதபுரம், திருநெல்வேலி ஆகிய மாவட்டங்களைச் சார்ந்த மீனவர்கள் இந்தியாவுக்கும் இலங்கைக்கும் இடையிலுள்ள, குறிப்பாகக் கச்சத்தீவு அருகிலுள்ள கடல் பகுதியில் மீன்பிடித்து தங்களது வாழ்க்கையை நடத்தி வருகிறார்கள் என்பது நினைவு தெரிந்த காலம் தொட்டு நிலவிவரும் வரலாற்று உண்மையாகும்.

இரண்டு நாடுகளுக்கும் இடையில், ஆதம் பாலம் மற்றும் பாக் ஜலசந்தி ஆகியவற்றிற்கும் இடையிலுள்ள கடல் பகுதியில் எல்லைக் கோட்டை நிர்ணயிப்பதற்காக இந்திய அரசும், இலங்கை அரசும் 26.6.1974 அன்று ஒரு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டன என்பதைத் தாங்கள் அறிவீர்கள்.

இந்த ஒப்பந்தத்தின் 5 மற்றும் 6-ஆவது பிரிவுகளின்படி, கச்சத்தீவு அருகில் உள்ளிட்ட கடல் பகுதியில் இந்திய மீனவர்களின் பாரம்பரிய மீன்பிடிப்பு உரிமை ஏற்கப்பட்டு வழங்கப்பட்டிருந்தது. சொல்லப்போனால் 6-ஆவது பிரிவு . "இந்தியா மற்றும் இலங்கைப் படகுகள் பரஸ்பரமாக ஒவ்வொரு நாட்டின் கடல் பகுதியிலும் பாரம்பரியமாக அவை அனுபவித்து வந்த உரிமைகளை அனுபவிக்கலாம்" என்று அழுத்தம் திருத்தமாக வரையறுத்துள்ளது.

இரண்டு நாடுகளுக்கும் இடையில் மன்னார் வளைகுடாவில் எல்லைகளை நிர்ணயிப்பதற்காக 23.3.1976 அன்று இரண்டாவது ஒப்பந்தம் கையெழுத்தானது. இந்த ஒப்பந்தம் முந்தைய ஒப்பந்தத்தால் கூறப்படாத எல்லைக்கோட்டை விளக்குவதற்காக மட்டுமே செய்யப்பட்டது. 1974-ஆம் ஆண்டு ஒப்பந்தத்தின் இதரப் பிரிவுகள் அனைத்தும் செல்லத்தக்கதாகவும், நீக்கப்படாததாகவும் இருந்து வருகின்றன.

இருப்பினும், 1976 ஏப்ரல் மாதம் இந்திய அரசின் ஆலோசனைப்படி, 1976-ஆம் ஆண்டு ஒப்பந்தத்திற்கு விரிவான விளம்பரம் அளிக்கப்பட்டு, இப்பகுதிகளிலுள்ள

மீனவர்கள் இந்தியக் கடல் எல்லைப் பகுதிகளுக்குள் மீன்பிடித்தலைக் கட்டுப்படுத்திக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்பட்டனர். தேவைப்பட்டால் இந்திய மீனவர்கள் தங்களது வலைகளை கச்சத்தீவில் உலர்த்திக் கொள்ளலாம் என்றும் கூறப்பட்டிருந்தது.

இருப்பினும் அவர்கள் கச்சத்தீவைச் சுற்றியுள்ள இலங்கைக் கடல் பகுதியில் மீன்பிடிக்கத் தடை செய்யப்பட்டிருந்தனர். இவை நிருவாக உத்தரவுகள் தானே தவிர **1974** மற்றும் **1976**–ஆம் ஆண்டு ஒப்பந்தங்களின்படி உருவானவை அல்ல. அவை நிருவாக உத்தரவுகள் என்பதால், அவை இரண்டு நாடுகளும் ஏற்கெனவே செய்து கொண்ட சட்டப்படி செல்லுபடியாகும் ஒப்பந்தத்தின் பிரிவுகளை நீக்க முடியாது.

இருந்தபோதும் கடந்த பல ஆண்டுகளாக இந்த நிருவாக உத்தரவுகளை நடைமுறைப்படுத்துவது நமது மீனவர்களுக்குச் சொல்லொணாத் துயரத்தையும், பாதிப்பையும் ஏற்படுத்திவருகிறது. கச்சத்தீவைச் சுற்றியுள்ள பகுதியில் அவர்களது பாரம்பரிய மீன்பிடிப்பு உரிமை மறுக்கப்பட்டு வருகிறது. பலமுறை இந்தக் கடல் பகுதியில் நமது மீனவர்கள் கைது செய்யப்பட்டும், தாக்கப்பட்டும், துப்பாக்கியால் சுட்டுக் கொல்லப்பட்டும் வருகின்றனர். இந்தச் சம்பவங்கள் ஒவ்வொன்றும் மாநில மக்களை அதிர்ச்சிக்கு உள்ளாக்கியும், சட்டமன்றத்தில் அமளியையும் ஏற்படுத்தி வருகின்றன. தமிழக மீனவர்களுக்கு இழைக்கப்பட்டு வரும் இந்தப் பெரும் அநீதியைக் களையுமாறு இந்திய அரசுக்கு அடுத்தடுத்து வந்த முதலமைச்சர்கள் கடிதங்கள் எழுதியுள்ளனர்.

நான் ஆட்சிக்கு வந்த பிறகு **17.8.2006** அன்று எனது தலைமைச் செயலாளரால் வெளியுறவு விவகாரத்துறை அமைச்சகத்தின் அயல்நாட்டுச் செயலாளருக்கு ஒரு கடிதம் அனுப்பப்பட்டது. மாநில அரசு சார்பில் இந்திய அரசு இப்பிரச்சினையை எடுக்க வேண்டும் என்று தலைமைச் செயலாளர் கேட்டுக் கொண்டு, பின்வரும் ஆலோசனைகளைத் தெரிவித்திருந்தார்:–

1. கச்சத்தீவு மீது இலங்கை அரசின் ஆதிபத்திய உரிமையை நிலை நிறுத்தும் போதே, நிரந்தரக் குத்தகையிலுள்ள அத்தீவையும், அதன் அருகிலுள்ள கடல் பகுதியையும் மீன்பிடித்தலுக்கும், வலைகளை உலர வைப்பதற்கும், புனிதப் பயணம் மேற்கொள்வதற்கும் பெற வேண்டும்.
2. இலங்கைக் கடல் பகுதியில் ஐந்து கடல் மைல்கள் வரை இந்திய மீனவர்கள் முறையாக அங்கீகரிக்கப்பட்ட மீன்பிடித்தலை அனுமதிக்க வேண்டும்.
3. எல்லை தாண்டி கடல்பகுதிக்குள் சென்றுவிடும் மீனவர்கள் உடனடியாக விடுவிக்கப்படுவதையும், அடுத்த நாட்டு நிருவாகத்தினரால் கடும் இன்னல்களுக்கு ஆளாக்கப்படாமல் இருப்பதையும் உறுதி செய்ய இருதரப்பு ஒப்பந்தம் செய்யப்பட வேண்டும்.

இதைத் தொடர்ந்து, நீண்டகாலமாக நிலுவையிலுள்ள இந்தப் பிரச்சினைக்குத் தீர்வு காணும்படியும், கச்சத்தீவு கடல்பகுதியில் இந்திய மீனவர்களின் பாரம்பரிய மீன்பிடிப்பு உரிமைகளை மீட்டெடுக்கும்படியும் கோரி நானும் தனிப்பட்ட முறையில் **22.9.2006** அன்று தங்களுக்கு ஒரு கடிதம் எழுதியிருந்தேன்.

இருப்பினும், கைதுகளும், அப்பாவி மீனவர்கள் தன்னிச்சையாகச் சுடப்படும் சம்பவங்களும் தொடர்ந்து குறையாமல் நிகழ்ந்து இந்திய மீனவர்களை அச்சுறுத்தியும் வருகிறது. இது எனக்கும், மாநிலத்திலுள்ள ஒவ்வொரு குடிமகனுக்கும் ஆழ்ந்த துயரை ஏற்படுத்தி வருகின்றன. இதை ஏற்கெனவே தங்களது கவனத்திற்குக் கொண்டு வந்துள்ளேன்.

பிரச்சினையின் தீவிரத் தன்மையையும், தமிழக மீனவர்களுக்கு அதனால் ஏற்பட்டு வரும் துயரத்தையும் கருத்தில் கொண்டு, இந்தப் பிரச்சினையில் இந்தியாவின் நியாயமான உரிமைகளைப் பற்றி இலங்கை அரசுக்குத் தெளிவாகக் கூறப்பட வேண்டும்.

இந்தக் கடல் பகுதிகளில் மீன்பிடிப்புத் தொழிலை மேற்கொள்ள இந்திய மீனவர்களுக்குள்ள உரிமைகளும், சலுகைகளும் அங்கீகரிக்கப்படவும், மீண்டும் வழங்கப்படவும் வேண்டும். இந்திய மீனவர்களது மதிப்புமிக்க உயிர்களைக் காப்பாற்றவும், அவர்களது வாழ்க்கையை உறுதி செய்யவும் தேவையான நடவடிக்கைகளை எடுக்குமாறு இந்திய அரசை வலியுறுத்துகிறேன்.



# சென்னை - ஓமந்தூரார் அரசினர் தோட்டத்தில் புதிய சட்டப்பேரவை மற்றும் தலைமைச் செயலக வளாகம் - மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் கலைஞர் மு.கருணாநிதி அவர்கள் அடிக்கல் நாட்டினார்.



சென்னை, இராஜாஜி மண்டபத்தில் 12.06.2008 அன்று நடைபெற்ற நிகழ்ச்சியில்,
ஓமந்தூரார் அரசினர் தோட்டத்தில் கட்டப்படவுள்ள
புதிய சட்டப் பேரவை மற்றும் தலைமைச் செயலக வளாகத்திற்கு அடிக்கல் நாட்டி,
மாண்புமிகு தமிழக முதலமைச்சர் **கலைஞர் மு. கருணாநிதி** அவர்கள் ஆற்றிய உரை

ஓமந்தூரார் அரசினர் தோட்டத்தில் புதிய சட்டப் பேரவை, தலைமைச் செயலக வளாகம் – இவற்றுக்கான அடிக்கல் நாட்டு விழா நிகழ்ச்சியினை நடத்தி வைப்பதில் நான் மிகுந்த மகிழ்ச்சியும் பெருமிதமும் கொள்கின்றேன். இங்கே தொகுப்புரையாற்றிய அம்மையார் சுதா அவர்கள், இந்தச் சட்டப் பேரவை, மேலவை – இவைகள் எத்தனை இடங்களில் மாறி மாறி அமைந்து – தங்களுடைய பணிகளை ஆற்றியிருக்கின்றன என்பதை எடுத்துக் காட்டினார். இப்படி அலைந்து கொண்டிருந்த இந்த அவைகளை இனி அலைய வேண்டாமென்று ஓர் இடத்தில் நிறுத்துகின்ற வகையிலேதான் இன்றைக்கு இந்தப் புதிய கட்டடத்தை எழுப்புகின்ற அரும்பணியினை பொதுப்பணித்துறை அமைச்சர் தம்பி துரைமுருகன் இடத்திலே ஒப்படைத்து, அரசின் ஒத்துழைப்போடு அந்தப் பணி நிறைவேற விருக்கிறது.

இந்த இனிய விழாவில் உயர் நீதிமன்றத்தின் தலைமை நீதிபதி மாண்புமிகு கங்குலி அவர்கள் மக்களாட்சித் தத்துவத்திற்கு அடிக்கல் நாட்டப்பட வேண்டும். அந்த அடிக்கல், அந்தத் தத்துவத்தை வளரச் செய்ய வேண்டும், வாழச் செய்ய வேண்டும் என்ற கருத்துபட தன்னுடைய உரையினை நிறைவு செய்தார்கள். தமிழகத்தைப் பொறுத்தவரையில் காங்கிரஸ் ஆட்சிக் காலத்திலும் சரி, அதற்கு அடுத்து வந்த ஆட்சிகளின் காலங்களிலும் சரி, என்னதான்



கருத்து மாறுபாடுகள், வேறுபாடுகள் இருந்தாலுங் கூட, நாங்கள் அமர்ந்துள்ள அவையில் நடைபெறுகின்ற விவாதங்களில் மக்களாட்சித் தத்துவத்தினுடைய மாண்பினை உயர்த்துகின்ற வகையிலேதான் அமைச்சர்களானாலும், அவையிலே அனுபவப்பட்டவர்களானாலும் நடந்து கொண்டிருக்கிறோம், இனியும் நடப்போம் என்ற உறுதியினை இந்த நேரத்திலே நான் தெரிவிக்க விரும்புகிறேன்.

**தாடி இல்லாத பெரியார்**

ஓமந்தூரார் வளாகம் என்பது இதற்குப் பெயர். இந்தப் பெயரை இடைக்காலத்திலே நாம் மறந்து விட்டிருந்தாலுங்கூட, என்றைக்கு திராவிட முன்னேற்றக் கழகத்தின் ஆட்சி, 1967–ஆம் ஆண்டு பொறுப்பேற்றுக் கொண்டதோ – அதைத் தொடர்ந்து இரண்டாண்டு காலத்திற்குப் பிறகு நான் பொறுப்புக்கு வந்தநேரத்தில் ஓமந்தூர் இராமசாமி அவர்கள் இந்த நாட்டிற்கு, நலிந்த மக்களுக்கு, பிற்படுத்தப்பட்ட சமுதாயத்திற்கு மிகவும் பிற்படுத்தப்பட்ட சமுதாயத்திற்கு எவ்வளவு அருந்துணையாக இருந்தார் என்பதை எண்ணிப் பார்க்கின்ற வகையில் அவருக்கு "தாடி இல்லாத பெரியார்" என்றே கூட அவரை சில கட்சிக்காரர்கள் வர்ணித்தார்கள் என்பதும் – தமிழ் மக்கள் அவரை அப்படித்தான் போற்றினார்கள் என்பதும் அனைவரும் அறிந்த உண்மையாகும். எனவே அவருடைய பெயர் எந்தக் காலத்திலும் நின்று நிலைக்க வேண்டுமென்பதற்காகத்தான் இங்கே இந்தத் தோட்டத்திற்கு – இந்த வளாகத்திற்கு அவருடைய பெயரை நம்முடைய அரசு வைத்து, அது இன்றைக்கு வழக்கத்திற்கு வந்திருக்கிறது. அதையும் நீங்கள் அறிவீர்கள்.

**கல்வி வளர்ச்சி நாள்**

பெருந்தலைவர்களை – நாட்டிற்காக உழைத்தவர்களை – ஏழையெளியவர்களுக்காக பாடுபட்டவர்களைச் சிறப்பிப்பதும், அவர்களுக்குப் பெருமை சேர்ப்பதும் அவர்களுடைய நினைவை நிலைநிறுத்தி எதிர்காலச்சந்ததிக்கு அவர்களுடைய வாழ்க்கை ஒரு பாடமாக அமைய வேண்டுமென்று எண்ணிச் செயல்படுவதும், இந்த அரசினுடைய பணியாக – நோக்கமாக இருந்து வருகிறது. அதனால்தான் பெருந்தலைவர் காமராஜருக்கும், தி.மு. கழகத்திற்கும் இடையிலே எத்தனை கருத்து வேறுபாடுகள் இருந்தாலுங்கூட இன்றைக்கு தமிழகத்திலே கல்வி வாழ்கிறது என்றால், வளர்கிறது என்றால் அதற்கு ஒரே காரணகர்த்தா பெருந்தலைவர் காமராஜர் என்பதை உணர்ந்திருக்கின்ற காரணத்தால்தான் ஐந்தாவது முறையாக நாங்கள் ஆட்சிப் பொறுப்புக்கு வந்த நேரத்தில் ஜூலை 15ஆம் நாளை, காமராஜர் பிறந்த நாளை கல்வி வளர்ச்சி நாளாகக் கொண்டு அதை ஆண்டு தோறும் கடைப்பிடிக்க வேண்டும் என்று ஏற்கெனவே நாங்கள் வெளியிட்ட அறிவிப்பு – இடைக் காலத்திலே வேறு சில காரணங்களால் மறைந்து போய் – அது மறக்கப்பட்டு – அதை மீண்டும் புதுப்பிக்க வேண்டுமென்று எண்ணி – அது வெறும் அறிவிப்பாக இருந்தால் இந்த நாளுக்கு இந்தக் கதிதான் ஏற்படும், ஆகவே காமராஜர் பிறந்த நாளை "கல்வி வளர்ச்சி நாள்" என்று சட்டமாகவே ஆக்க வேண்டுமென்று சட்டமாக ஆக்கிக் களித்தது தி.மு.கழக ஆட்சி.





எனவே பழம்பெரும் தலைவர்கள் ஏழையெளிய மக்களுக்காகப் பாடுபட்ட தலைவர்கள் – நம்முடைய கொள்கைகளை நிறைவேற்ற வேண்டும் – அந்த வழியிலே எதிர்காலச் சந்ததி வாழ வேண்டும், வளம் பெற வேண்டும், ஏற்றம் பெற வேண்டும் என்று எண்ணிய அந்தத் தலைவர்களையெல்லாம் தொடர்ந்து பின்பற்றினால்தான் இன்றைய இளைய தலைமுறை வாழ முடியும், நாடு வாழ முடியும், நலிவு தீர முடியுமென்ற அந்த எண்ணத்தோடுதான். அவர்களையெல்லாம் பாராட்டி போற்றி வருகிறோம்.

அப்படி போற்றி வருகின்ற இயக்கத்தில் நான் நெஞ்சு நிமிர்த்திச் சொல்ல முடியும். தி.மு.கழகம் தான் பழைய தலைவர்களை, நமக்கெல்லாம் வழி காட்டியவர்களை, நமக்கெல்லாம் வழி வகுத்துத் தந்தவர்களை, நமக்கெல்லாம் பாடமாக இருந்தவர் களை, நமக்கெல்லாம் அறிவு கொளுத்தியவர் களை, இன்றளவும் நினைக்கின்ற நன்றி உணர்வு மிக்க இயக்கமாக திராவிட முன்னேற்றக் கழகம் இருக்கின்ற காரணத்தால்தான் நீங்கள் இங்கே பார்க்கின்றீர்கள், ஓமந்தூரார் பெயரை அரசினர் தோட்டத்திற்கு இட்டப்பட்டிருக்கின்ற அந்த நிலையை – இப்படி பழம்பெரும் தலைவர்களை யெல்லாம் பாராட்டி – அவர்களுக்கு மரியாதை தந்து அவர்களுடைய வழியிலே இளம் தலைமுறையினர் நடப்பதற்கு வழி வகுத்துக் கொண்டிருக்கின்ற இந்த ஆட்சிதான் இன்றையதினம் இங்கே இந்த மாபெரும் கட்டடத்தை ஏறத்தாழ 200 கோடி ரூபாய் செலவிலே அமைக்க கால்கோள் விழாவினை நிறைவேற்றி இருக்கின்றது. இதை யார் யார் என்னென்ன சொல்லிப் பாராட்டுவார்கள் – யார் யார் என்னென்ன சொல்லி விமர்சிப்பார்கள் என்பதெல்லாம் எனக்குத் தெரியும். ஆனால் இந்த நேரத்தில் 200 கோடி ரூபாய் செலவில் ஒரு கட்டடம் தேவையா என்ற கேள்விக்கு நாம் பதில் காணுகின்ற நேரத்தில் ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன்.

**3 மாவட்டங்கள் பயனடையும் திட்டம்**

இந்த இரண்டாண்டுக் காலத்தில் எங்களுடைய திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் வேறு எந்தப் பணியும் செய்யலாம், இந்தப் பணிக்கே 200 கோடி ரூபாயைச் செலவழித்தோம் என்று யாராவது சொன்னால், அல்லது நினைத்தால் அவர்கள் தயவுசெய்து திருத்திக் கொள்ள வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

இந்த இரண்டாண்டுக் காலத்திலே தான் – இராமநாதபுரம் கூட்டுக் குடிநீர்த் திட்டத்திற்கு 616 கோடி ரூபாய் செலவு செய்யத் திட்டமிட்டு – ராமநாதபுரம், சிவகங்கை, புதுக்கோட்டை மாவட்டம் ஆகிய 3 மாவட்டங்கள் பயனடையக் கூடிய ஒரு ஏற்பாட்டைச் செய்திருக்கிறோம். இந்த ஆண்டு இறுதியில் அல்லது அடுத்த ஆண்டு துவக்கத்தில் இந்தத் திட்டம் முடிவடைந்து அந்தக் கூட்டுக் குடிநீர் திட்டத்தின் பயனை அந்த வட்டாரத்து மக்கள் அனுபவிக்கவிருக்கிறார்கள்.

அதைப் போலவே ஒகேனக்கல் கூட்டுக் குடிநீர்த் திட்டம். ஜப்பான் பன்னாட்டுக் கூட்டுறவு வங்கியின் நிதியுதவியோடு, 1,330 கோடி ரூபாய் மதிப்பீட்டில் அந்தத் திட்டம் தீட்டப்பட்டிருக்கிறதென்றால், தருமபுரி, கிருஷ்ணகிரி போன்ற வறண்ட மாவட்டங்களை வளப்படுத்துகின்ற பணியாக அது அமையவிருக்கிறது.

இதே சென்னை மாநகர் கோட்டூர்புரத்தில் 100 கோடி ரூபாய் மதிப்பீட்டில் உலகத் தரத்திற்கு இணையாக மாநில நூலகம் ஒன்று அமைக்கப்படவிருக்கிறது. வீட்டுக்கொரு வாசக சாலை, வீட்டுக் கொரு புத்தகச் சாலை என்று அறிஞர் அண்ணா ஒரு முறை வானொலி உரையிலே சொன்னார். வீட்டுக்கொரு புத்தகச்சாலை அல்ல, மாநிலத்திற்கே உலகத் தரத்திலே ஒரு நூலகத்தை சென்னையிலே அமைக்கவிருக்கிறோம். இந்த ஆண்டு அதற்கான நிலம் எல்லாம் பார்த்து கோட்டூர்புரத்திலே, கோட்டை போன்ற அந்த மாளிகை உயரவிருக்கின்றது.

அனைத்துக் கிராம அண்ணா மறுமலர்ச்சித் திட்டம். 2,500 கோடி ரூபாய் – ஆண்டுக்கு ஏறத்தாழ 2,500 கிராம ஊராட்சிகள் வீதம் – ஐந்து ஆண்டுகளில் தமிழகத்தில் உள்ள 12 ஆயிரத்து 618 கிராம ஊராட்சிகளுக்கும் – உதவுகின்ற திட்டம் இது. இத்திட்டத்தின் கீழ் கடந்த இரண்டாண்டுகளில் 5 ஆயிரத்து 74 கிராம ஊராட்சிகளில் 1,025 கோடி ரூபாய் செலவில் 79 ஆயிரத்து 253 பணிகள் எடுத்துக் கொள்ளப்பட்டு நிறைவேற்றப்பட்டுள்ளன. மேலும் 2 ஆயிரத்து 521 கிராம ஊராட்சிகளில் 509 கோடி ரூபாய் செலவில், இந்த அண்ணா மறுமலர்ச்சித் திட்டம், மூன்றாவது ஆண்டாக நடப்பாண்டில் செயல்படுத்தப்படுகிறது.

**மெட்ரோ ரயில் திட்டம்**

உலகின் இரண்டாவது மிகப் பெரிய கடற்கரை எனப் புகழப்படும் சென்னை மெரினா கடற்கரையை எழிலூட்டுகின்ற திட்டம் – 16 கோடியே 92 இலட்சம் ரூபாய் செலவில் இப்போது அந்தத் திட்டம் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது.

சென்னை அடையாறு கடலோடு சங்கமிக்கும் இடத்தில் அமைந்துள்ள இயற்கை எழில் மிகுந்த சூழ்நிலையை மேம்படுத்தி, ஏறத்தாழ 100 கோடி ரூபாய்ச் செலவில் அழகிய அடையாறு பூங்கா அமைக்கப்படுகின்றது . இங்கே இந்த ஆண்டு நிறைவடையவுள்ள திட்டங்களில் இதுவும் ஒன்று.

ஜப்பான் பன்னாட்டுக் கூட்டுறவு வங்கியின் நிதியுதவியோடு 9 ஆயிரத்து 757 கோடி ரூபாய் மதிப்பீட்டில் "மெட்ரோ ரயில் திட்டம்" சென்னை மாநகரத்திலே தொடங்கப்படவிருக்கின்றது.

20 ஆயிரத்து 483 கோடி ரூபாய் முதலீட்டில் 1 இலட்சத்து 52 ஆயிரம் பேருக்கு வேலைவாய்ப்பை வழங்குகின்ற 15 புதிய தொழில்களுக்கான புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் – M.O.U. க்கள் கையெழுத்திடப்பட்டிருக்கின்றன. அந்த 15 ஒப்பந்தங்களில் இதுவரை 6 தொழிற்சாலைகள் திறக்கப்பட்டு, ஏறத்தாழ 50 ஆயிரம் பேர் நேரடியாகவும், மறைமுகமாகவும் இந்த இரண்டாண்டுக் காலத்திற்குள்ளே வேலை வாய்ப்புகளைப் பெற்றுள்ளனர்.

அரவாணி வாரியம் உட்பட 23 அமைப்புச் சாராத் தொழிலாளர் வாரியங்களின் சார்பில் – 5 இலட்சத்து 55 ஆயிரத்து 907 குடும்பங்களுக்கு இந்த இரண்டாண்டுக் காலத்திலே மாத்திரம் 219 கோடியே 47 இலட்சத்து 9 ஆயிரத்து 123 ரூபாய் பல்வேறு இனங்களின்கீழ் உதவித் தொகையாக வழங்கப்பட்டிருக்கின்றது.

இதுவரை 1,444 கோடி ரூபாய் செலவில் 59 இலட்சத்து 55 ஆயிரம் குடும்பங்களுக்கு இலவச வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகள் வழங்க அனுமதிக்கப்பட்டு, 37 இலட்சத்து 78 ஆயிரத்து 924 குடும்பங்களுக்கு வழங்கப்பட்டாகி விட்டது என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

1 இலட்சத்து 56 ஆயிரத்து 974 நிலமற்ற ஏழை விவசாயிகளுக்கு 1 இலட்சத்து 84 ஆயிரத்து 890 ஏக்கர் இலவச நிலம், தேர்தல் அறிக்கையிலே தெரிவித்தவாறு இதுவரையிலே இந்த இரண்டாண்டுக் காலத்திலே வழங்கப் பட்டிருக்கிறது.

5 இலட்சத்து 40 ஆயிரத்து 421 ஏழைகளுக்கு இலவச வீட்டுமனைப் பட்டாக்கள் தரப்பட்டுள்ளன என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

3 இலட்சத்து 53 ஆயிரத்து 488 வேலை வாய்ப்பில்லாத படித்த இளைஞர்களுக்கு இதுவரை 116 கோடியே 59 இலட்சத்து 23 ஆயிரத்து 454 ரூபாய் மாதாந்திர நிதி உதவி வழங்கப் பட்டிருக்கின்றது.

மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் திருமண உதவித் திட்டத்தின் கீழ் 1 இலட்சத்து 29 ஆயிரத்து 332 ஏழைப் பெண்களின் திருமணங்களுக்கு 193 கோடியே 99 இலட்சத்து 85 ஆயிரம் ரூபாய் திருமண உதவித் தொகை.

கர்ப்பிணிப் பெண்கள் 7 இலட்சத்து 132 பேருக்கு 8 ஆயிரம் ரூபாய் வீதம் 296 கோடியே 11 இலட்சத்து





95 ஆயிரம் ரூபாய் உதவித் தொகை வழங்கப் பட்டிருக்கிறது.

நீதிமன்றங்களுக்குத் தேவையான கட்டடங்கள் மற்றும் குடியிருப்புகளை அமைப்பதற்கு இந்த அரசு உயர் முன்னுரிமை அளித்து வருகிறது. இந்த அரசு பதவியேற்றது முதல் இதுவரை, ரூபாய் 102 கோடி மதிப்பீட்டிலான நீதித் துறைக் கட்டடப் பணிகளுக்கு ஒப்புதல் அளிக்கப்பட்டு பணிகள் நிறைவேற்றப்பட்டு வருகின்றன. இவற்றைத் தவிர, வரும் நிதி ஆண்டிலும் ரூபாய் 100 கோடி மதிப்பீட்டில் மேலும் புதிய பணிகள் மேற்கொள்ளப்படும். மொத்தமாக, நீதித்துறைக்கு இந்த ஆண்டு நிதி நிலை அறிக்கையில் ரூபாய் 316 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

ஏதோ 200 கோடி ரூபாயில் மாளிகை கட்டுகிறோம் என்று யாரும் வருத்தப்பட வேண்டாம். வருத்தப்படுவதற்குப் பதிலாகக்கூட கேலியும் செய்ய வேண்டும் இவ்வளவு செலவுகளையும் செய்து விட்டுத்தான் இப்படி கோடிக் கணக்கிலே – கோடியிலே இருக்கின்ற ஏழையெளியவர் களுக்கெல்லாம் உதவி செய்து விட்டுத்தான் அவைகள் எல்லாம் சரிவர நடைபெறுகிறதா என்பதை நிர்ணயிக்க – அதைப் பற்றி விவாதிக்க – அதிலே காணப்படுகின்ற குற்றம் குறைகளை எடுத்துச் சொல்ல அதைத் திருத்திக்கொள்ள ஏற்பாடு செய்யப்பட்டுள்ள ஜனநாயகக் கூடமான சட்டசபையை புதிய வகையிலே வசதியாக கட்டுவதற்கு 200 கோடி ரூபாயை ஒதுக்கியிருக்கிறோம் என்றால் – அதுவும் மக்கள் பணம்தான், மக்களுக்காகச் செலவழிக்கப் படுகின்ற பணம் என்பதை நான் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். தம்பி துரைமுருகன் சொன்னார் – தவம் செய்வதைப் போல நாங்கள் இதைக் கட்டி முடிக்க வேண்டுமென்றார் – "தம்பீ, தவமாக நினைத்துச் செய்", தவத்திற்கு இடையிலே யார் குறுக்கிட்டாலும் அதற்கு நீ தயவு செய்து அடி பணியாதே, மயங்காதே, தவத்தைக் கலைக்க யார் யாரோ எப்படியெப்படியோ வருவார்கள், அப்படி வரும் போதெல்லாம் தவம் கெடாமல் பார்த்துக் கொண்டு – "இந்தத் தவத்திலே நீ எடுத்துக் கொண்ட சூளுரையை நிறைவேற்று" என்று தம்பி துரைமுருகனுக்கு எடுத்துச் சொல்லி உங்களுடைய அன்பான ஆதரவும், உங்களுடைய வாழ்த்துக்களும் இந்தக் கட்டடத்தை விரைவிலே எடுப்பதற்குப் பயன்படட்டும் என்று கேட்டு இந்த இனிய விழாவிலே உரையாற்றிய மேடையிலே வீற்றிருக்கின்ற பெருமதிப்புக்குரிய பெரியவர்கள் அனைவருக்கும் நன்றியை தெரிவித்து விடைபெறுகிறேன். ★

## தமிழ்வழி பயின்று பத்தாம் வகுப்புப் பொதுத் தேர்வில் முதல் 1,000 இடங்கள் பெற்ற 1,100 மாணவ, மாணவியருக்கு ஊக்கப் பரிசாக மடிக்கணினிகள் ! மாநில அளவில் முதல் மூன்று இடங்கள் பெற்ற 13 மாணவ, மாணவியர்க்கு ரொக்கப் பரிசுகள் !

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் **கலைஞர்** அவர்கள் வழங்கிப் பாராட்டினார்.



தமிழ்வழிக் கல்வியில் பயின்று பத்தாம் வகுப்புப் பொதுத் தேர்வில் அதிக மதிப்பெண்கள் பெறும் 1,000 மாணவ, மாணவியருக்கு ஊக்கப் பரிசாகக் கணினிகள் அளிக்கப்படும் என இந்த ஆண்டின் நிதிநிலை அறிக்கையில் அறிவிக்கப்பட்டது. அதன்படி, 2008 மார்ச்சுத் திங்களில் நடைபெற்ற பத்தாம் வகுப்பு அரசுப் பொதுத் தேர்வில், தமிழ் வழி பயின்று அதிக மதிப்பெண்கள் எய்தியதில் முதல் 1,000 இடங்களைப் பெற்ற 1,100 மாணவ, மாணவியருக்கு 2 கோடியே 37 இலட்சம் ரூபாய் செலவில் ஊக்கப் பரிசாக மடிக்கணிணிகள் வழங்கும் திட்டம் இந்த ஆண்டின் ஒரு புதிய திட்டமாகச் செயல்படுத்தப்படுகிறது. இத்திட்டத்தை, மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் தலைமைச் செயலகத்தில் 26.6.2008 அன்று தொடங்கி வைத்து, சென்னை, திருவள்ளூர், காஞ்சிபுரம் ஆகிய மாவட்டங்களைச் சார்ந்த 10 மாணவ, மாணவியருக்கு மடிக்கணினிகளை வழங்கினார்.

இந்நிகழ்ச்சியை அடுத்து, தமிழகத்தில் உள்ள பள்ளிகளில் தமிழை ஒரு பாடமாக எடுத்துப் படித்து, 10–ஆம் வகுப்புப் பொதுத் தேர்வில் அதிக மதிப்பெண்கள் குவித்து மாநில அளவிலும், மாவட்ட அளவிலும் முதல் மூன்று இடங்களைப் பெற்றுச் சாதனைகள் படைக்கும் மாணவ, மாணவியரின் உயர்கல்விச் செலவினங்களைத் தமிழக அரசு ஏற்குமென 1996–ஆம் ஆண்டில் மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் அறிமுகம் செய்த திட்டத்தின்கீழ், 2008 மார்ச்சுத் திங்களில் நடைபெற்ற 10 ஆம் வகுப்புப் பொதுத் தேர்வில், 500க்கு 496 மதிப்பெண்கள் ஈட்டி மாநில அளவில் முதல் இடம் பெற்றுள்ள திருநெல்வேலி மாவட்டம், பாளையங்கோட்டை செயின்ட் இக்னீசியஸ் பெண்கள் மேல்நிலைப் பள்ளியைச் சேர்ந்த ஆர்.ராம் அம்பிகை என்ற மாணவிக்கு 7,500 ரூபாய்;

500க்கு 494 மதிப்பெண்கள் ஈட்டி மாநில அளவில் இரண்டாம் இடம் பெற்றுள்ள திருநெல்வேலி மாவட்டம், வீரவநல்லூர் செயின்ட் ஜான்ஸ் மேல்நிலைப் பள்ளி மாணவன் எம். ஜோசப்



ஸ்டாலின்; திருநெல்வேலி மாவட்டம், பாளையங் கோட்டை சாராடக்கர் பெண்கள் மேல்நிலைப் பள்ளி மாணவி எஸ்.ஜகீனா, பெரம்பலூர் மாவட்டம், பெரம்பலூர் தந்தை ஹேன்ஸ்ரோவர் மேல்நிலைப் பள்ளி மாணவன் பி. மருதபாண்டியன், சென்னை சாந்தோம் செயின்ட் ரபேல்ஸ் பெண்கள் மேல்நிலைப் பள்ளி மாணவி எஸ்.சுவேதா ஆகிய நான்கு பேருக்கும் தலா 6,000 ரூபாய்;

500க்கு 493 மதிப்பெண்கள் ஈட்டி மாநில அளவில் மூன்றாம் இடம் பெற்றுள்ள திருநெல்வேலி மாவட்டம், பாளையங்கோட்டை செயின்ட் இக்னீசியஸ் மேல்நிலைப் பள்ளி மாணவி என். ரமாசுவாதிகா, மதுரை மாவட்டம், சௌராஷ்டிரா பெண்கள் மேல்நிலைப் பள்ளி மாணவி ஜி.கே. உமாபிரியா, சேலம் மாவட்டம் செயின்ட் மேரீஸ் பெண்கள் மேல்நிலைப் பள்ளி மாணவி கே. இந்து, கரூர் மாவட்டம், புவியூர் சி.எப். ராணி மெய்யம்மை மேல்நிலைப் பள்ளி மாணவன் எஸ். செல்வராஜ், திருச்சி மாவட்டம், அமலா பெண்கள் மேல்நிலைப்பள்ளி மாணவி ஜி.காயத்திரி, தஞ்சாவூர் மாவட்டம், தாமரன்கோட்டை அரசு மேல்நிலைப்பள்ளி மாணவி எம். ரிஃபாயா பேகம், விழுப்புரம் மாவட்டம், கள்ளக்குறிச்சி ஏ.கே.டி. நினைவு உயர்நிலைப் பள்ளி மாணவன் எம். திருமால், காஞ்சிபுரம் மாவட்டம், செங்கல்பட்டு செயின்ட் மேரீஸ் பெண்கள் மேல்நிலைப் பள்ளி மாணவி வி. எமலின் மெர்சி ஆகிய எட்டு பேருக்கு தலா 5000 ரூபாய் என மொத்தம் 13 மாணவ, மாணவியருக்கு 71 ஆயிரத்து 500 ரூபாய்க்கான காசோலைகளை மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் வழங்கிப் பாராட்டியதுடன், பரிசு பெற்ற மாணவ, மாணவியரின் உயர்கல்விச் செலவு முழுவதையும் தமிழக அரசே ஏற்கும் என்பதற்கான சான்றிதழ்களையும் அவர்களிடம் வழங்கி வாழ்த்துகள் தெரிவித்தார்.

மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்களிடமிருந்து மடிக்கணினிகளையும், காசோலைகளையும் பரிசுகளாகப் பெற்ற மாணவ, மாணவியரும், அவர்களுடைய பெற்றோரும் இந்த மகத்தான திட்டங்கள் தமிழகப் பள்ளி மாணவ, மாணவியர் இடையே நன்றாகப் படித்து மாநில அளவில் சாதனைகள் படைத்திட ஊக்கமளிப்பதாகவும், இத்தகையத் திட்டங்களை அறிமுகப்படுத்தி, தமிழகத்தின் தரமான கல்வி வளர்ச்சிக்கு வழிவகுத்துவரும் மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்களுக்கு நன்றி கூறிப் பாராட்டுவதாகவும் தெரிவித்தனர்.

இந்நிகழ்வின்போது, மாண்புமிகு பள்ளிக் கல்வித்துறை அமைச்சர் திரு. தங்கம் தென்னரசு, தலைமைச் செயலாளர் திரு. எல்.கே. திரிபாதி, இ.ஆ.ப., பள்ளிக்கல்வித் துறைச் செயலாளர் திரு.எம்.குற்றாலிங்கம், இ.ஆ.ப., பள்ளிக்கல்வி இயக்குநர் முனைவர் பெருமாள்சாமி, அரசுத் தேர்வுகள் இயக்குநர் திருமதி. வசந்தி ஜீவானந்தம் ஆகியோர் உடனிருந்தனர்.

❖ ❖ ❖

## தமிழ் வளர்ச்சிக்குத் தொண்டாற்றியோருக்கு நிதியுதவி

தமிழ் மொழியைப் பேணிக்காக்கும் வகையிலும், தமிழ் வளர்ச்சி – பண்பாட்டினை மேம்படுத்தும் வகையிலும் தொண்டும் தியாகமும் செய்துள்ளவர்களைச் சிறப்பிக்கும் வகையில் அவர்களுக்கு நிதியுதவி வழங்கும் திட்டம் அரசால் செயற்படுத்தப்பட்டு வருகிறது. இவர்களின் மறைவிற்குப் பின் இவர்களது மரபுரிமையருக்கும் நிதியுதவி வழங்கப்படுகிறது.

நிதியுதவி பெறத்தக்கவர்களைத் தெரிவு செய்வதற்கான உயர்நிலைக் குழுக் கூட்டம் மாண்புமிகு உயர்கல்வித்துறை அமைச்சர் முனைவர் க.பொன்முடி அவர்களின் தலைமையில் தலைமைச் செயலகத்தில் 18.6.2008 அன்று நடைபெற்றது. இக்கூட்டத்தில் இத்திட்டத்தின்கீழ் நிதியுதவி பெறத் தகுதியுள்ள 885 பேருக்கு நிதியுதவி வழங்கிட உயர்நிலைக் குழு பரிந்துரை செய்துள்ளது. இதன்படி தமிழ்மொழி – பண்பாட்டினைக் காத்திடவும் வளர்த்திடவும் தொண்டும் தியாகமும் செய்தவர்களுக்கு மாதந்தோறும் நிதியுதவியாக ரூ.3,000 மற்றும் மருத்துவப் படியாக ரூ.15 மரபுரிமையர் எனில் நிதியுதவியாக ரூ.1,500 மற்றும் மருத்துவப்படி ரூ.15 வழங்கப்படும். எல்லைக் காவலர் எனில் மாதந்தோறும் நிதியுதவியாக ரூ.4,000 மற்றும் மருத்துவப்படி ரூ.15 எல்லைக் காவலர்களின் மரபுரிமையர் எனில் ரூ.2000 மற்றும் மருத்துவப்படி ரூ.15 வழங்கப்படும். இந்நிதியுதவிகள் இவர்களுக்கு 17.04.2008 முதல் வழங்கப்படும் என மாண்புமிகு உயர்கல்வித்துறை அமைச்சர் அவர்கள் தெரிவித்துள்ளார்.

இதற்கு முன்பு 28.02.2008 அன்று நடைபெற்ற உயர்நிலைக்குழுக் கூட்ட முடிவின்படி 635 பேருக்கு நிதியுதவிகள் வழங்கிட ஆணையிடப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது. ★

## பெட்ரோலிய சுத்திகரிப்பு ஆலை - துறைமுகத் திட்டம் - கப்பல் கட்டும் துறைமுகம் என 7 ஆயிரத்து 290 கோடி ரூபாய் முதலீட்டில் மூன்று திட்டங்கள் !

மாண்புமிகு முதலமைச்சர் **கலைஞர்** அவர்கள் தொடங்கி வைத்தார்



**த**மிழக அரசின் டிட்கோ நிறுவனம், நாகார்ஜுனா உரம் மற்றும் இரசாயன நிறுவனம், டாடா குழுமம் மற்றும் கடலூர் துறைமுகக் கம்பெனி ஆகியவற்றுடன் இணைந்து ஆண்டுக்கு 60 இலட்சம் டன் திறன்கொண்ட ஒரு பெட்ரோலிய சுத்திகரிப்பு ஆலைத் திட்டத்தைக் கடலூருக்கு அருகில் 4 ஆயிரத்து 790 கோடி ரூபாய் முதலீட்டில் கூட்டுத் துறையில் தொடங்கிடத் திட்டமிட்டுள்ளது.

ஏறத்தாழ 33 மாதங்களில் இத்திட்டத்தின் பணிகள் முழுமையாக நிறைவேற்றப்பட்டு, 2011–ஆம் ஆண்டில் செயல்படத் தொடங்கும். நாகார்ஜுனா எண்ணெய் நிறுவனத்தின் இந்த பெட்ரோலியம் எண்ணெய் சுத்திகரிப்பு ஆலை தமிழ்நாட்டில் அதிகபட்ச முதலீட்டில் உருவாகும் திட்டமாகும். தமிழகத்தின் போக்குவரத்து மற்றும் ஏனைய துறைகளின் எரிபொருள்கள் தேவையை நிறைவு செய்ய இத்திட்டம் பெரிதும் உதவும்.

**திருச்சோபுரம் துறைமுகத் திட்டம்**

புதிய தொழில் திட்டங்கள் மற்றும் எதிர்கால மின் உற்பத்தித் திட்டங்கள் ஆகியவற்றிற்குத் தேவையான நிலக்கரியை இறக்குமதி செய்வதற்குப் பயன்படும்வகையில் ஆண்டுக்கு 250 இலட்சம் டன் சரக்குகளைக் கையாளும் திறனுடன் 1,500 கோடி ரூபாய் முதலீட்டில் நாகார்ஜுனா எண்ணெய் நிறுவனத்தின்மூலம் திருச்சோபுரத்தில் ஆழ்கடல் துறைமுகம் ஒன்றும் அமைக்கப்படவுள்ளது. இத்துறைமுகம், கடலூர் மற்றும் நாகை மாவட்டங்களில் உருவாக விருக்கும் பெட்ரோலிய இரசாயனப்பொருட்கள் உற்பத்திக்கான தொழில்களுக்கு ஒரு முக்கிய கடல்சார் உள்கட்டமைப்பாகவும் விளங்கும்.

**சிலம்பிமங்கலத்தில் கப்பல் கட்டும் தளம்**

கடலூருக்கு அருகில் சிலம்பிமங்கலம் என்ற இடத்தில் குட்எர்த் கப்பல் கட்டும் நிறுவனத்தினால் 75 ஆயிரம் டன் கொள்ளளவு கொண்ட புதிய கப்பல்களைக் கட்டும் தளம் 1,000 கோடி ரூபாய் முதலீட்டில் அமைக்கப் படவிருக்கிறது. கடலூர் மற்றும் அதனைச் சுற்றியுள்ள பகுதிகளில் இக்கப்பல் கட்டும் தளம் அமைப்பதற்குத் தேவைப்படும் சாதனங்களை உருவாக்கிடச் சிறுதொழில்கள் பல பெருமளவில் உருவாகக் கூடிய வாய்ப்புகளும் ஏற்படும்.



மொத்தம் 7 ஆயிரத்து 290 கோடி ரூபாய் முதலீட்டில் அமையும், நாகார்ஜுனா நிறுவனத்தின் எண்ணெய் சுத்திகரிப்பு ஆலைத் திட்டம், திருச்சோபுரம் துறைமுகத் திட்டம், சிலம்பிமங்கலத்தில் குட்எர்த் நிறுவனத்தின் கப்பல் கட்டும் தளம் அமைக்கும் திட்டம் ஆகிய மூன்று திட்டங்களையும் மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் 2.7.2008 அன்று தலைமைச் செயலகத்தில் அடிக்கல் நாட்டி, தொடங்கி வைத்தார்.

இந்த மூன்று திட்டங்களின்மூலமும், துணைத் தொழில்கள் மூலமும் ஏறத்தாழ 5 ஆயிரத்து 700 பேருக்கு நேரடியாகவும், 11 ஆயிரத்து 300 பேருக்கு மறைமுகமாகவும் வேலைவாய்ப்புகள் கிடைக்குமென எதிர்பார்க்கப்படுகிறது.

இந்நிகழ்வின்போது, மாண்புமிகு மின்துறை அமைச்சர் திரு. ஆர்க்காடு நா. வீராசாமி, மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், மாண்புமிகு நெடுஞ்சாலைத்துறை அமைச்சர் திரு. வெள்ளக்கோவில் சாமிநாதன், மாண்புமிகு மத்திய சட்டத்துறை இணை அமைச்சர் திரு. கே. வேங்கடபதி, தலைமைச் செயலாளர் திரு. எல்.கே. திரிபாதி, இ.ஆ.ப., நிதித்துறைச் செயலாளர் திரு. கு. ஞானதேசிகன், இ.ஆ.ப., தொழில்துறைச் செயலாளர் திரு. எம்.எப். ஃபரூக்கி, இ.ஆ.ப., நெடுஞ் சாலைத் துறைச் செயலாளர் திரு. கே. அலாவுதீன், இ.ஆ.ப., டிட்கோ நிறுவனத்தின் தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குநர் திரு. எஸ். இராமசுந்தரம், இ.ஆ.ப., கடல்சார் வாரியத்தின் துணைத் தலைவர் மற்றும் தலைமைச் செயல் அலுவலர் திரு. சி. முத்துக்குமாரசுவாமி, இ.ஆ.ப., ஆகியோர் உடனிருந்தனர்.

❖ ❖ ❖

## ரூ.300 கோடி முதலீட்டில் ஒரகடத்தில் நோக்கியா சீமென்ஸ் நெட்வொர்க்ஸ் தொழிற்சாலை

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் **கலைஞர் மு. கருணாநிதி** அவர்கள் முன்னிலையில் புரிந்துணர்வு ஒப்பந்தம் கையெழுத்தானது.

**நெ**தர்லாந்து நாட்டைச் சேர்ந்த, 'நோக்கியா சீமென்ஸ் நெட்வொர்க் பி.வி.' என்ற நிறுவனம் உலக அளவில், தொலைத் தொடர்பு சாதனங்களைத் தயாரித்து வழங்குகின்ற மூன்று பெரிய நிறுவனங்களில் ஒன்றாகும். அதன் துணை நிறுவனம் 'நோக்கியா சீமென்ஸ் நெட்வொர்க்ஸ் நிறுவனம்' ஆகும். இந்நிறுவனம், மொபைல் தயாரிப்புக்கான சாதனங்கள் மற்றும் நிலையான தகவல் உள்கட்டமைப்புக்கான சாதனங்களைத் தயாரிப்பதற்கும், இதர பல்வேறு மின்னணு வன்பொருள்களுக்கான சாதனங்களைத் தயாரிப்பதற்கும், சென்னைக்கு அருகில் ஒரகடத்தில் உள்ள சிப்காட் உயர் தொழில்நுட்பச் சிறப்புப் பொருளாதார மண்டலத்தில், சிறப்புப் பொருளாதார மண்டல அமைப்பில் தொழிற்சாலை ஒன்றினை அமைக்கத் திட்டமிட்டுள்ளது.

இத்தொழிற்சாலையின்மூலம் நோக்கியா சீமென்ஸ் நெட்வொர்க்ஸ் நிறுவனம் மூன்றாண்டுகளுக்குள் 300 கோடி ரூபாய் முதலீட்டில் ஏறத்தாழ 400 பேருக்கு நேரடி வேலைவாய்ப்பையும், 100 பேருக்கு மறைமுக வேலைவாய்ப்பையும் அளிக்கும்.

நோக்கியா, மோட்டோரோலா, சாம்சங் போன்ற நிறுவனங்கள் சென்னையில் ஏற்கெனவே தங்கள் தொழிற்சாலைகளை அமைத்துள்ள நிலையில், நோக்கியா சீமென்ஸ் நிறுவனத்தின் இப்புதிய தொழிற்சாலை, சென்னை 'இந்தியாவின் தொலைத் தொடர்பு வன்பொருள் மையம்' என்பதனை மேலும் உறுதிப்படுத்திட உதவும்.

மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் முன்னிலையில், 26.6.2008 அன்று இப்புதிய தொழிற்சாலையை அமைப்பதற்காக நடைபெற்ற புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் தமிழக அரசின் சார்பாக, தொழில்துறைச் செயலாளர், திரு. எம்.எப். ஃபரூக்கி, இ.ஆ.ப., அவர்களும், நோக்கியா சீமென்ஸ் நெட்வொர்க்ஸ் நிறுவனத்தின் சார்பாக அந்நிறுவனத்தின் இயக்குநர் திரு. சுரேஷ் வாத்வானி அவர்களும் கையெழுத்திட்டனர்.

இந்நிகழ்வின்போது, தலைமைச் செயலாளர் திரு. எல். கே. திரிபாதி, இ.ஆ.ப., ஜெர்மனியில் உள்ள நோக்கியா சீமென்ஸ் நெட்வொர்க்ஸ் நிறுவனத்தின் ஒருங்கிணைப்புக் குழுவின் தலைவர் திரு. க்ளாஸ் லட்ஸ், இந்தியத் தயாரிப்புச் செயல்பாடுகள் தலைவர் திரு. சதேந்திர சிங் மற்றும் நோக்கியா சீமென்ஸ் நெட்வொர்க்ஸ் நிறுவனத்தின் இதர மூத்த அலுவலர்கள் உடனிருந்தனர்.

☐ ☐ ☐

## காந்தி மண்டப வளாகத்தை மேம்படுத்திட புரிந்துணர்வு ஒப்பந்தம் கையெழுத்தானது

சென்னை கிண்டியில் அமைந்துள்ள காந்தி மண்டப வளாகத்தை மேம்படுத்துவதற்கான புரிந்துணர்வு ஒப்பந்தம் 7.7.2008 அன்று தமிழக அரசுக்கும் ஏர்செல் செல்லுலார் நிறுவனத்திற்கும் இடையே கையெழுத்தானது.

தன்னலமற்ற பணிகளால், மக்கள் மனதில் நீங்கா இடம் பிடித்த தலைவர்களுக்கான பின்வரும் நினைவகங்களை காந்தி மண்டப வளாகம் தன்னகத்தே கொண்டுள்ளது :



மூதறிஞர் ராஜாஜி நினைவகம் – அருங்காட்சியகம் மற்றும் நூலகம், அண்ணல் காந்தியடிகள் அருங்காட்சியகம் மற்றும் நூலகம், காந்தி மண்டபம், தியாகிகள் மணிமண்டபம், மொழிப்போர் தியாகிகள் மணிமண்டபம், பக்தவத்சலம் நினைவகம், ரெட்டைமலை சீனிவாசன் மணிமண்டபம், பெருந்தலைவர் காமராஜர் நினைவகம் மற்றும் கூட்ட அரங்கம்.

சிறப்புமிக்க இந்த காந்தி மண்டப வளாகத்திலுள்ள காலியிடங்களை மேலும் சிறப்பாக மேம்படுத்தி பொதுமக்கள் பெருமளவில் வருகை புரியக்கூடிய இடமாக மாற்ற வேண்டும் என்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிவுரை வழங்கினார். அதன்படி, பொதுப்பணித்துறையின் மேற்பார்வையில் காந்தி மண்டப வளாகத்தை தனியார் பங்களிப்புடன் மேம்படுத்தலாம் என தீர்மானிக்கப்பட்டது. இதற்காக பல்வேறு தனியார் துறைகளின் உதவி நாடப்பட்டது.

அதனையடுத்து மேற்கொண்ட பல்வேறு நடவடிக்கைகளின் முடிவாக ஏர்செல் செல்லுலார் நிறுவனமானது சுமார் ரூ.78 இலட்சம் செலவில் காந்தி மண்டப வளாகத்தை மேம்படுத்த முன்வந்தது.

அதற்கான புரிந்துணர்வு ஒப்பந்தம் 7.7.2008 அன்று மாண்புமிகு செய்தித்துறை அமைச்சர் திரு.பரிதி இளம்வழுதி அவர்கள் தலைமையில் தலைமைச் செயலாளர் திரு. எல்.கே. திரிபாதி, இ.அ.ப., அவர்கள் முன்னிலையில் தமிழக அரசுக்கும் ஏர்செல் செல்லுலார் நிறுவனத்திற்கும் இடையே கையெழுத்தானது.

இந்த புரிந்துணர்வ ஒப்பந்தத்தின்படி ஏர்செல் செல்லூலர் நிறுவனமானது சுமார் ரூ.78,00,000/– செலவில் காந்தி மண்டப வளாகத்தை செய்தித்துறை மற்றும் பொதுப்பணித்துறை ஆகியவற்றின் மேற்பார்வையில் இயற்கை எழில் கொஞ்சும் வனப்புடன் பொது மக்கள் பயனுற மேம்படுத்தும்.

தற்போது காந்தி மண்டப வளாகத்தில் சில இடங்களில் வளர்ந்துள்ள புதர்கள் காட்டுச் செடிகள் போன்றவற்றை அகற்றிவிட்டு வளாகத்திலுள்ள காலியிடங்களில் அழகிய புல்வெளிகள், புல்வெளிகளைச் சுற்றிலும் 10 ஆயிரம் அடியில் பல்வகை வண்ணச் செடிகளால் ஆன வேலிகள், அழகிய பனை வகை மரங்கள், மலர்ச் செடிகள் ஆகியவற்றை ஏர்செல் நிறுவனம் அமைக்கும். மேலும் ஏற்கெனவே உள்ள நீருற்றுகளை அழகுற மாற்றியமைத்து நீருற்று அடியில் வண்ண விளக்குகளை அமைக்கவும் ஏர்செல் நிறுவனம் நடவடிக்கை எடுக்கவுள்ளது. முதலில் 3 ஆண்டு காலமும், அந்நிறுவனத்தின் பணிகளை ஆய்வு செய்த பின்னர் காந்தி மண்டப வளாகத்தை மேம்படுத்த மேலும் கால நீட்டிப்பும் அந்நிறுவனத்திற்கு வழங்கப்படும்.

தமிழக அரசின் சார்பில் தமிழ் வளர்ச்சி, அறநிலையங்கள் மற்றும் செய்தித்துறையின் முதன்மைச் செயலாளர் (பொறுப்பு) திரு.ம.குற்றாலிங்கம், இ.ஆ.ப., ஏர்செல் செல்லுலார் நிறுவனத்தின் சார்பாக அதன் தலைமைச் செயல் அலுவலர் திரு.ஐ.வீ.ஜே.பிரதீப் ஆகியோர் புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டனர்.

இந்நிகழ்வின்போது, சமூக நலத்துறை மற்றும் பொதுப்பணித்துறை (பொறுப்பு) முதன்மைச் செயலாளர் திரு.நா.ச பழனியப்பன், இ.ஆ.ப., செய்தி மக்கள் தொடர்புத் துறையின் இயக்குநர் மற்றும் அலுவலால் அரசு கூடுதல் செயலாளர் முனைவர். ஆ.சி.மோகன்தாஸ், இ.ஆ.ப., பொதுப்பணித்துறை அலுவலர்கள், தமிழக அரசின் இதர உயர் அலுவலர்கள் மற்றும் ஏர்செல் செல்லுலார் நிறுவனத்தின் செயல் இயக்குநர் திரு.கே.வி.ப.பாஸ்கரன் ஆகியோரும் உடனிந்தனர்.

❖ ❖ ❖



## மாநிலத் திட்டக் குழு தயாரித்துள்ள தமிழகத்திற்கான 11ஆவது ஐந்தாண்டுத் திட்ட அறிக்கையை

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் **கலைஞர்** அவர்கள் வெளியிட்டார்.

தமிழகத்திற்கான ஆண்டுத் திட்டங்களை உருவாக்குதல், ஐந்தாண்டுத் திட்டங்களை வடிவமைத்தல், பகுதி இரண்டின் கீழ் வரும் செயல் திட்டங்களுக்கு நிதி ஒப்புதல் அளித்தல், பல்வேறு முகமைகளின் வாயிலாக ஆய்வுகள் மேற்கொண்டு கொள்கை முடிவுகள் எடுக்க அரசுக்கு உதவுதல், மாநில நிலப் பயன்பாட்டு வாரியம் வழியாக நிலப் பயன்பாட்டு முறைகளை ஆய்வு செய்தல், மனித மேம்பாட்டு ஆதார மையத்தின் வழியாக மனித மேம்பாடுகள் குறித்த கருத்துகளை அரசுக்கு வழங்குதல் முதலிய பணிகளின் மூலம் தமிழகத்தின் முன்னேற்றத்தையும், வளர்ச்சியையும் விரைவுபடுத்திடும் நோக்கில், இந்தியாவிலேயே முதல் மாநிலமாகத் தமிழகத்தில் 1971 ஆம் ஆண்டு மேத் திங்கள் 25 ஆம் நாள் மாநிலத் திட்டக்குழு அமைக்கப்பட்டது. இது, மத்தியத் திட்டக்குழுவின் கொள்கைகளுக்கு முன்னுரிமை அளித்தும், மாநிலத்தின் தேவைகளை முதன்மைப்படுத்தியும் நான்காவது ஐந்தாண்டுத் திட்ட காலத்திலிருந்து திட்டங்களை உருவாக்கி வருகிறது.

2006இல் இந்த அரசு அமைந்த பின், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் தலைமையில் மாநிலத் திட்டக்குழு திருத்தியமைக்கப்பட்டது. இக்குழு தற்போது 2007–2008 முதல் 2011–2012 வரையிலான 11ஆவது ஐந்தாண்டுத் திட்டத்திற்கான அறிக்கையினை ஆங்கிலத்திலும் தமிழிலும் தயாரித்துள்ளது. தமிழ் மொழியில் உருவாக்கப்பட்டுள்ள 11ஆவது ஐந்தாண்டுத் திட்ட அறிக்கையை மாநிலத் திட்டக்குழுவின் துணைத் தலைவர் பேராசிரியர் மு. நாகநாதன் திட்டக்குழு உறுப்பினர்கள் முன்னிலையில் வழங்க, அதனை மாநிலத் திட்டக்குழுவின் தலைவராகிய மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் 3.7.2008 அன்று வெளியிட்டார்.

நடுவண் அரசின் திட்டக்குழு 11ஆவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் 9 விழுக்காடு வளர்ச்சி இலக்கினை இயைந்த வளர்ச்சி அணுகுமுறை வாயிலாக எய்திட வேண்டுமென முன்மொழிந்துள்ளது.

இத்திட்ட காலத்தில், வேளாண்துறைக்கு முக்கியத்துவம் அளிக்கப்பட்டுள்ளது. வேளாண்துறையில் ஆண்டு வளர்ச்சி 4 விழுக்காட்டினை எட்ட வேண்டும் எனும் இலக்கு முதன்மைப் படுத்தப்பட்டுள்ளது.

10 ஆவது ஐந்தாண்டுத் திட்டத்தில் தமிழகத்திற்கான மொத்தத் திட்ட அளவு 43 ஆயிரத்து 400 கோடி ரூபாய்; அது, 11ஆவது திட்டக் காலத்திற்கு இரு மடங்காக 85 ஆயிரத்து 344 ரூபாய் என உயர்த்தப்பட்டுள்ளது.

இதில், வேளாண்மை மற்றும் பாசனத்துறைக்கான திட்டச் செலவு 4 ஆயிரத்து 500 கோடி ரூபாய் என்பதிலிருந்து 11 ஆயிரத்து 145 கோடி ரூபாய் எனவும், ஊரக வளர்ச்சித்துறைக்கு 5 ஆயிரத்து 400 கோடி ரூபாய் என்பது 10 ஆயிரத்து 241 கோடி ரூபாய் எனவும், மின்சாரத் துறைக்கு 5 ஆயிரத்து 800 கோடி ரூபாய் என்பது 10 ஆயிரத்து 743 கோடி ரூபாய் அளவுக்கும், தொழில் துறைக்கு 2 ஆயிரம் கோடி ரூபாய் என்பது 3 ஆயிரத்து 716 கோடி ரூபாய் எனவும், சாலைகள் மேம்பாட்டுத்



திட்டங்களுக்கு 5 ஆயிரத்து 900 கோடி ரூபாய் என்பது 11 ஆயிரத்து 647 கோடி ரூபாய் எனவும், சமூகப் பணிகளுக்கு 19 ஆயிரம் கோடி ரூபாய் என்பது 36 ஆயிரத்து 733 கோடி ரூபாய் என்றும், இதரப் பணிகளுக்கான திட்டச் செலவு 800 கோடி ரூபாய் என்பது ஓராயிரத்து 121 கோடி ரூபாய் என்றும் உயர்த்தப்பட்டுள்ளது.

இந்தத் திட்ட நிதி ஒதுக்கீடுகள் மூலம் 11ஆவது ஐந்தாண்டுத் திட்டத்தின் முதன்மைக் குறிக்கோளான மாநிலப் பொருளாதாரத்தில் ஆண்டு வளர்ச்சி வீதம் 9 விழுக்காட்டினைப் பெறுவதற்குரிய தொடர் முயற்சிகளைத் தமிழக அரசு மேற்கொள்ளும்.

இந்நிகழ்ச்சியில் தலைமைச் செயலாளர் திரு. எல்.கே. திரிபாதி, இ.ஆ.ப., மாநிலத் திட்டக்குழுவின் துணைத் தலைவர் பேராசிரியர் மு. நாகநாதன், உறுப்பினர்கள் திரு. பெ. ஜெகதீசன், திரு. தமிழருவி மணியன், பேராசிரியர் ஜி. சிதம்பரம், திரு. லட்சுமிகாந்தன் பாரதி, இ.ஆ.ப., (ஓய்வு), முனைவர் இராம. சீனுவாசன், நிதித்துறைச் செயலாளர் திரு. கு. ஞானதேசிகன், இ.ஆ.ப., உறுப்பினர்– செயலர் முனைவர் திருமதி. அனுராதா கட்டி இராஜீவன், இ.ஆ.ப., மாநில ஊரக சுகாதார இயக்கத்தின் மாநிலத் திட்ட இயக்குநர் திருமதி. கிரிஜா வைத்தியநாதன், இ.ஆ.ப., ஆகியோர் உடனிருந்தனர். ❖

# 27 தமிழறிஞர்களின் நூல்கள் அரசுடைமை!
# 21 தமிழறிஞர்களின் மரபுரிமையர்க்கு
# 1 கோடியே 15 இலட்சம் ரூபாய் பரிவுத் தொகை!

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் **கலைஞர் மு.கருணாநிதி** அவர்கள் வழங்கினார்



சிறந்த தமிழ்ச் சான்றோர்களின் கருத்துகளும், சிந்தனைகளும் வளரும் தலைமுறைக்கு மட்டுமன்றி இனிவரும் தலைமுறைகளுக்கும் பயனளிக்கத்தக்க வகையில், அவர்களின் நூல்களை நாட்டுடைமையாக்கும் திட்டம் தமிழக அரசின் சார்பில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் கலைஞர் அவர்களால் தொடர்ந்து நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது. 2006–இல் பரிதிமாற்கலைஞர், புலவர் குழந்தை, சிலம்புச்செல்வர் ம.பொ.சி முதலான 16 தமிழறிஞர்களின் நூல்கள் நாட்டுடைமையாக்கப்பட்டு, அவர்களின் மரபுரிமையர்க்கு ஒரு கோடியே 23 இலட்சம் ரூபாயும், 2007–இல் ம. சிங்காரவேலர், முத்தமிழ்க் காவலர் கி.ஆ.பெ. விசுவநாதம், அ.ச. ஞானசம்பந்தனார், குன்றக்குடி அடிகளார் முதலான 19 தமிழறிஞர்களின் நூல்கள் அரசுடைமையாக்கப்பட்டு அவர்களின் மரபுரிமையர்க்கு ஒரு கோடியே 75 இலட்சம் ரூபாயும் பரிவுத்தொகையாக வழங்கப்பட்டுள்ளது. இந்த ஆண்டில், கவிஞர் பெரியசாமித்தூரன், பேராசிரியர் க. வெள்ளை வாரணனார் உள்ளிட்ட 27 தமிழறிஞர்களின் நூல்களை நாட்டுடைமை ஆக்கி, அவர்தம் மரபுரிமையர்களுக்கு மொத்தம் 1 கோடியே 65 இலட்சம் ரூபாய் பரிவுத்தொகை வழங்கிட மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் 21.5.2008 அன்று ஆணையிட்டார்.

அந்த ஆணையின்படி, நாட்டுடைமையாக்கப்பட்ட நூல்களைப் படைத்துள்ள 27 தமிழ் அறிஞர்களில், மரபுரிமையர் என்பதற்குரிய சான்றாவணங்களை இதுவரை அரசுக்கு வழங்கியுள்ள கவிஞர் பெரியசாமித் தூரன், பேராசிரியர் க. வெள்ளைவாரணனார் ஆகிய இருவருடைய படைப்புகளுக்காக, அவர்களின் மரபுரிமையருக்குத் தலா பத்து இலட்சம் ரூபாய் வீதம் 20 இலட்சம் ரூபாய்; மகாவித்வான் ரா.ராகவையங்கார், திரு. உடுமலை நாராயணகவி, திரு. கு.மு. அண்ணல் தங்கோ, திரு. அவ்வை தி.க. சண்முகம், திரு. லா.ச. இராமாமிர்தம், திரு. வல்லிக்கண்ணன், திரு. நா. வானமாமலை, கவிஞர் புதுவைசிவம், திரு. அ. இராகவன், திரு. தொ.மு.சி. ரகுநாதன், திரு. சக்திதாசன் சுப்பிரமணியன், டாக்டர் ந. சஞ்சீவி, திரு. முல்லை முத்தையா, கவிஞர் எஸ். டி. சுந்தரம், கவிஞர் மீரா, புலவர் முகமது நயினார் மரைக்காயர், திரு. சு. சமுத்திரம், திரு. கோவை இளஞ்சேரன், பேராசிரியர் ந. சுப்புரெட்டியார் ஆகிய 19 தமிழறிஞர்களின் படைப்புகளுக்காக, அச்சான்றோர் களின் மரபுரிமையர்களுக்குத் தலா ஐந்து இலட்சம் ரூபாய் வீதம் 95 இலட்சம் ரூபாய்; ஆக மொத்தம் 21 தமிழறிஞர்களின் மரபுரிமையர்களுக்கு மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் 28.6.2008 அன்று 1 கோடியே 15 இலட்சம் ரூபாய் பரிவுத் தொகை வழங்கி மகிழ்ந்தார்.

அரசுடைமையாக்கப்பட்டுள்ள மற்ற 6 தமிழ் அறிஞர்களான பண்டிதர் க. அயோத்திதாசர், திரு. ஆபிரகாம் பண்டிதர், திரு. சதாவதானி செய்குத் தம்பி பாவலர், டாக்டர் ரா.பி. சேதுப்பிள்ளை, திரு.விந்தன், பேராசிரியர் ஆ. கார்மேகக்கோனார் ஆகிய 6 தமிழறிஞர்களின் மரபுரிமையர்களுக்கு, அவர்கள் உரிய சான்றாவணங்களை வழங்கியபின் ஏற்கெனவே அரசு அறிவித்துள்ளபடி பரிவுத்தொகை வழங்கப்படும்.

மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்களிடம் பரிவுத்தொகையைப் பெற்றுக்கொண்ட தமிழ் அறிஞர்களின் மரபுரிமையர்கள் அனைவரும் மிகுந்த மகிழ்ச்சியோடு மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் ஆற்றிவரும் மகத்தான தமிழ்த் தொண்டுகளில் அறிஞர்களின் நூல்களை அரசுடைமையாக்கும் இந்தத் திட்டம் தமிழ் அறிஞர்களின் குடும்பங்களைப் போற்றிப் பாதுகாக்கும் மிகச் சிறந்த திட்டம் என்று கூறி மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்களுக்குத் தங்களுடைய நன்றியையும், பாராட்டுகளையும் தெரிவித்தனர்.

* * *



# ஒரகடத்தில் ரூ.2,000 கோடி முதலீட்டில்
# 3,000 பேருக்கு வேலைவாய்ப்புகள் வழங்கும்
# போட்டோ வோல்டாய்க் தொழில்நுட்பத் தொழிற்சாலை

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் **கலைஞர்** அவர்கள் முன்னிலையில்
புரிந்துணர்வு ஒப்பந்தம் கையெழுத்தானது

மோசர்பேயர் (Moser Baer) தொழில் நிறுவனம், நினைவாற்றல் சாதனங்கள், யு.பி.எஸ். டிரைவ்ஸ் போன்ற பொருள்களின் தயாரிப்பில் உலகின் புகழ்பெற்ற ஒரு முன்னணி நிறுவனமாகும். இந்நிறுவனம், போட்டோ வோல்டாய்க் தொழில்நுட்பத் தயாரிப்புகள், நேனோ (Nano) தொழில்நுட்பம், செமி கண்டக்டர்ஸ், ஊடகங்கள் மற்றும் பொழுதுபோக்குத் தொழில்களுக்கான சாதனங்கள் முதலியவற்றின் தயாரிப்பிலும் ஈடுபட்டுள்ளது.



சென்னைக்கு அருகே ஒரகடம் சிப்காட் உயர்தொழில்நுட்பச் சிறப்புப் பொருளாதார மண்டலத்தில் சிலிகான் அடிப்படையிலான போட்டோவோல்டாய்க் பொருள்களையும், நேனோ தொழில்நுட்பம் அடிப்படையிலான பொருள்களையும், நினைவாற்றல் சாதனங்கள் போன்றவைகளையும் தயாரிக்கும் தொழிற்சாலையை 2,000 கோடி ரூபாய்க்கும் மேற்பட்ட முதலீட்டில் நிறுவுவதற்குத் திட்டமிட்டுள்ளது.

இத்தொழிற்சாலை நேரடியாகவும் மறைமுகமாகவும் ஏறத்தாழ 3,000 பேருக்கு வேலைவாய்ப்புகளை வழங்கும். ஏற்கெனவே, திருவாளர்கள் சிக்னட் சோலார் நிறுவனத்துடன் 2,000 கோடி ரூபாய் முதலீட்டில் சிலிக்கான் அடிப்படையில் மெல்லிய போட்டோ வோல்டாய்க் பொருள்கள் தயாரிப்பதற்கான தொழிற் சாலையை நிறுவுவதற்காக ஒரு புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் 17.3.2008 அன்று அரசு கையெழுத்திட்டுள்ளது. அதே வசதியுடன் மோசர்பேயர் தொழிற்சாலையும் அமைவதன் மூலம் சென்னை மின்னணு வன்பொருள் தயாரிப்பு மற்றும் போட்டோ வோல்டாய்க் பொருள்கள் தயாரிப்பில் முக்கிய மையமாக உருவெடுக்கும்.

9.6.2008 அன்று மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்களின் முன்னிலையில் இத்தொழிற்சாலையை அமைப்பதற்கான புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் தமிழக அரசு சார்பில் தொழில்துறைச் செயலாளர் திரு. எம்.எஃப். பரூக்கி, இ.ஆ.ப., மோசர்பேயர் நிறுவனத்திற்காக, மோசர்பேயர் இந்தியா தொழிற்சாலையின் தலைவர் மற்றும் நிருவாக இயக்குநர் திரு. தீபக்பூரி ஆகியோர் கையொப்பமிட்டனர். மாண்புமிகு மத்திய தொலைத் தொடர்பு மற்றும் தகவல் தொழில்நுட்பத்துறை அமைச்சர் திரு. ஆ. இராசா, தலைமைச் செயலாளர் திரு. எல்.கே. திரிபாதி, இ.ஆ.ப., நிதித்துறைச் செயலாளர் திரு. கு. ஞானதேசிகன், இ.ஆ.ப., தொழில்துறை கூடுதல் செயலாளர் திரு. தீரஜ்குமார், இ.ஆ.ப., தொழில் வழிகாட்டுதல் மையத்தின் இயக்குநர் திரு. எம். வேல்முருகன். மோசர்பேயர் நிறுவனத்தின் பிரதிநிதிகள் திரு. ஜி. தனஞ்செயன், திரு. ஜி. ராஜேஸ்வரன், திரு. எஸ். ராஜலிங்கம் ஆகியோர் இந்நிகழ்வின் போது உடன் இருந்தனர்.

❖ ❖ ❖

# ரூ.1,500 கோடி முதலீட்டில் காற்றாலை கியர்பாக்ஸ் தயாரிக்கும் புதிய தொழிற்சாலை



மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் கலைஞர் அவர்களின் முன்னிலையில் புரிந்துணர்வு ஒப்பந்தம் கையெழுத்தானது

பெல்ஜியம் நாட்டைச் சேர்ந்த, 'ஹேன்சன் டிரான்ஸ்மிஷன்ஸ் இண்டர்நேஷனல் நிறுவனம்' மோட்டார் வாகனப் பயன்பாட்டுக்கு அல்லாத கியர் பாக்ஸ்களைத் தயாரிப்பதில் உலக அளவில் புகழ் பெற்றுள்ள இரண்டாவது பெரிய நிறுவனம். அதன் துணை நிறுவனமாக இந்தியாவில் செயல்படுவது ஹேன்சன் டிரைவ்ஸ் நிறுவனமாகும். காற்றாலைப் பயன்பாடுகளுக்கான மின்கடத்தி கியர் பாக்ஸ்களை வடிவமைத்து, உற்பத்தி செய்து சந்தைப்படுத்தும் நிறுவனங்களுள் இந்நிறுவனம் முதன்மையானதாகும். இந்நிறுவனம் கோவை மாவட்டம் பல்லடம் வட்டம், கருமத்தம்பட்டி மற்றும் கிட்டாம்பாளையம் ஆகிய கிராமங்களில் அமைந்துள்ள சுஸ்லான் உள்கட்டமைப்புச் சிறப்புப் பொருளாதார மண்டலத்தில் காற்றாலை கியர்பாக்ஸ்கள் தயாரிக்கும் தொழிற்சாலையினைச் சிறப்புப் பொருளாதார மண்டல அமைப்பில் ஏற்படுத்திடத் திட்டமிட்டுள்ளது.

இத்தொழிற்சாலையின்மூலம் ஹேன்சன் டிரைவ்ஸ் நிறுவனம் ஐந்தாண்டுக் கால அளவில் 1,500 கோடி ரூபாய் அளவுக்கு முதலீடுகளைச் செய்யும்; ஏறத்தாழ 800 பேருக்கு நேரடி வேலைவாய்ப்புகளையும், 200 பேருக்கு மறைமுக வேலைவாய்ப்புகளையும் அளிக்கும்.

தமிழகத்தில் சென்னைக்கு அப்பால், தொழில் வளர்ச்சியில் மிகவும் பின்தங்கிய பகுதியான கோயம்புத்தூர் மாவட்டம், பல்லடம் வட்டத்தின் பொருளாதார நிலை மேம்படவும், மரபுசாரா எரிசக்தி உற்பத்திக்கான முதலீடுகளை ஈர்ப்பதில் இப்பகுதி பெற்றுள்ள முன்னேற்றங்கள் மேலும் வலுப்பெறவும் உதவும்.

மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்களின் முன்னிலையில் 28.6.2008 அன்று நடைபெற்ற இந்தப் புதிய தொழிற்சாலை நிறுவப்படுவதற்கான, புரிந்துணர்வு ஒப்பந்தத்தில், தமிழக அரசின் சார்பாக, தொழில்துறைச் செயலாளர், திரு. எம்.எப். ஃபரூக்கி, இ.ஆ.ப., அவர்களும், ஹேன்சன் டிரைவ்ஸ் நிறுவனத்தின் சார்பாக ஹேன்சன் டிரான்ஸ்மிஷன்ஸ் இண்டர்நேஷனல் நிறுவனத்தின் தலைமைச் செயல் அலுவலர் மற்றும் ஹேன்சன் டிரைவ்ஸ் நிறுவனத்தின் இயக்குநர் திரு. இவன்ப்ரம்ஸ் அவர்களும் கையெழுத்திட்டனர்.

இந்நிகழ்வின்போது, மாண்புமிகு மின்துறை அமைச்சர் திரு. ஆர்க்காடு நா. வீராசாமி, தலைமைச் செயலாளர் திரு. எல்.கே. திரிபாதி, இ.ஆ.ப., நிதித்துறைச் செயலாளர் திரு. கு. ஞானதேசிகன், இ.ஆ.ப., மற்றும் ஹேன்சன் டிரைவ்ஸ் நிறுவனத்தின் மூத்த அலுவலர்கள் உடனிருந்தனர். ★



# ரூ.3,000 கோடி முதலீட்டில் சென்னை ஒரகடத்தில் சரக்கு வாகனத் தொழிற்சாலை அமைக்க மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் கலைஞர் அவர்களின் முன்னிலையில் புரிந்துணர்வு ஒப்பந்தம் !



ஜெர்மன் நாட்டைச் சார்ந்த டெய்ம்லர்–ஏ.ஜி நிறுவனம், மெர்சிடிஸ் பென்ஸ், ஃப்ரைட்லைனர், ஃப்யூசோ, செட்ரா போன்ற உலகப் புகழ் வாய்ந்த சீருந்துகள், சரக்கு வாகனங்கள், ஊர்திகள் மற்றும் பேருந்துகளைத் தயாரிக்கும் நிறுவனமாகும். இந்தியாவைச் சார்ந்த மதிப்பு வாய்ந்த ஹீரோ குழுமம், உலக அளவில் மோட்டார் சைக்கிள்கள் மற்றும் சைக்கிள்களைத் தயாரிக்கும் நிறுவனமாகும். இந்தியாவில் சரக்கு வாகனங்களைத் தயாரிப்பதற்காக, கூட்டு முயற்சியில் டெய்ம்லர்–ஏ.ஜி மற்றும் ஹீரோ குழுமம் ஆகிய இரண்டு நிறுவனங்களும் இணைந்து 'டெய்ம்லர் ஹீரோ வணிக வாகனங்கள் நிறுவனம்' என்னும் நிறுவனத்தை அமைத்துள்ளன.

இந்நிறுவனம் ஆண்டொன்றுக்கு 70 ஆயிரம் சரக்கு வாகனங்களைத் தயாரிக்கும் பொருட்டு, ஐந்தாண்டுக் கால அளவில் 3,000 கோடி ரூபாய்க்கும் மேலான முதலீட்டில் சிப்காட் ஒரகடம் தொழில் பூங்காவில் தனது தொழிற்சாலையை அமைக்கிறது. இந்த முதலீடு அடுத்த சில ஆண்டுகளில் 4,000 கோடி ரூபாய் அளவுக்கு உயரக்கூடும். இத்திட்டம் முழுத்திறனுடன் செயல்படும்போது ஏறத்தாழ 3,000 பேருக்கு நேரடியாகவும், 20 ஆயிரம் பேருக்கு மறைமுகமாகவும் வேலை வாய்ப்புகளை உருவாக்கும். ஜெர்மனி நாட்டிலிருந்து தமிழ்நாட்டிற்கு இதுவரை வந்துள்ள முதலீடுகளில் இது பெரிய முதலீடாகும். ஜெர்மனியிலிருந்து வெளிநாட்டு நேரடி முதலீடுகளைத் தமிழ்நாட்டிற்கு ஈர்ப்பதில் உதவியாக அமையும். ஏற்கெனவே ஃப்ரான்ஸ் நாட்டைச் சார்ந்த ரெனால் நிறுவனமும், ஜப்பான் நாட்டைச் சார்ந்த நிசான் நிறுவனமும் இணைந்து, ஒரகடம் தொழில் பூங்காவில், ஒருங்கிணைந்த மோட்டார் வாகனத் தொழிற்சாலைத் திட்டம் ஒன்றினை அமைத்து வருகின்றன. மேலும், ஹுண்டாய் மோட்டார் இந்தியா நிறுவனமும், தனது உற்பத்தி வசதிகளைப் பெரிய அளவில் விரிவாக்கம் செய்து வருகிறது. டெய்ம்லர், ஹீரோ நிறுவனத்தால் சரக்கு வாகனத் தொழிற்சாலை அமைக்கப்படவுள்ளதால், சீருந்துகள் உள்ளிட்ட வணிக வாகனங்கள் தயாரிப்பில் சென்னையின் தகுதி மேலும் உயரும்.

இத்தொழிற்சாலை அமைக்கப்படுவதற்காக 7.7.2008 அன்று மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் கலைஞர்

# டீசல் மீதான விற்பனை வரிக் குறைப்பு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் அறிவிப்பு



கடந்த ஒரு மாத காலமாகவே ஏடுகளில் தொடர்ந்து செய்தியாக வந்தபடியே 4.6.2008 அன்றைய தினம் மத்திய அரசு பெட்ரோல், டீசல் விலையைத் தவிர்க்க முடியாத சூழ்நிலையில் உயர்த்தியதோடு, அதற்கான விளக்கத்தைப் பிரதமர் அவர்கள் நாட்டிற்கு அளித்திருக் கின்றார்கள். அந்த விளக்கத்தில் பெட்ரோலியப் பொருட்கள்மீது அதிக அளவில் விற்பனை வரி விதிக்கும் மாநிலங்கள் அந்த வரியைக் குறைத்து சுமையைப் பகிர்ந்து கொள்ள முன்வர வேண்டுமென்றும் கேட்டுக் கொண்டுள்ளார்.

2006–ஆம் ஆண்டிலேயே, மத்திய அரசு பெட்ரோல், டீசல் விலையை உயர்த்திய போது, விற்பனை வரியை 25 சதவீதத்திலிருந்து 23.43 சதவீதமாகக் குறைத்து அறிவித்து, அதனை நடைமுறைப்படுத்திய முதல் மாநில அரசு தமிழக அரசுதான். அதன் பின்னர் மத்திய அரசு டீசல் விலையை ஓரளவு குறைத்த போதும்கூட, தமிழக அரசு குறைத்த விற்பனை வரியை மீண்டும் உயர்த்தாததால் தமிழக அரசுக்கு ஆண்டு ஒன்றுக்கு இன்றளவும் ரூ.200 கோடி இழப்பு ஏற்பட்டு வருகிறது. இப்போது அவற்றின் விலையை மத்திய அரசு உயர்த்தியிருக்கும்போது விற்பனை வரியைக் குறைத்திடுமாறு தமிழக அரசுக்கு எதிர்க்கட்சித் தலைவர் ஜெயலலிதா அவர்கள் ஆலோசனை கூறியுள்ளார். அவரது ஆலோசனையை அலட்சியப்படுத்தாமல், ஏற்கெனவே 2006 ஆம் ஆண்டு விற்பனை வரியைக் குறைத்தது போலவே இப்போதும் டீசல் மீதான விற்பனை வரியில் 2 சதவீதம் குறைப்பதென தமிழக அரசு முடிவெடுத்துள்ளது. இதனால் ஆண்டுக்கு மேலும் 260 கோடி ரூபாய் தமிழக அரசுக்கு இழப்பு ஏற்படும்.

ஆனால் 2004 ஆம் ஆண்டு தமிழகச் சட்டப் பேரவையில் அன்றைய எதிர்க்கட்சித் தலைவர், மூத்த காங்கிரஸ் தலைவர், திரு. எஸ்.ஆர். பாலசுப்ரமணியம் அவர்கள் 19.11.2004 அன்று அன்றைய முதலமைச்சர் ஜெயலலிதாவை நோக்கி விற்பனை வரியை டீசலுக்குக் குறைக்க வேண்டுமென்று வேண்டுகோள் வைத்தபோது, முதல்வராக இருந்து ஜெயலலிதா சொன்ன பதில் வருமாறு :–

"இப்போது திரு. எஸ். ஆர். பி. மாநில அரசுக்கு அறிவுரை வழங்குகிறார். அதாவது மாநில அரசு தனக்கு வருகின்ற வருவாயை எப்படி இழக்க வேண்டும், இதனால் இந்த மாநிலம் எப்படி பொருளாதாரச் சிக்கலில் மாட்டிக் கொள்ள வேண்டுமென்று அறிவுரை வழங்குகிறார். இந்த யோசனையை எஸ். ஆர். பி. அவர்கள் காங்கிரஸ் ஆளும் மாநிலங்களுக்கு வழங்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்".

அன்று திரு. எஸ்.ஆர். பாலசுப்ரமணியம் அவர்களுக்கு இவ்வாறு பதில் சொன்ன முன்னாள் முதலமைச்சர் ஜெயலலிதாதான் – இப்போது விற்பனை வரியைக் குறைக்க அறிவுரை வழங்கியிருக்கிறார். முடிந்த அளவு நாமும் அதனைப் பெருந்தன்மையுடன் ஏற்றுக் கொண்டிருக்கிறோம்.

அவர்கள் முன்னிலையில் புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் தமிழக அரசின் சார்பாகத் தொழில் துறை முதன்மைச் செயலாளர் திரு. எம்.எப். ஃபரூக்கி, இ.ஆ.ப., ஜெர்மனியின் டெய்ம்லர்–ஏ.ஜி நிறுவனம் சார்பாக அந்நிறுவனத்தின் இயக்குநர் குழு உறுப்பினர் திரு. ஆன்ட்ரியாஸ் ரென்சியர், அவர்களும் ஹீரோ குழுமத்தின் சார்பாக ஹீரோ நிறுவனப் பணிகளின் தலைவர் திரு. சுனில் காந்த் முஞ்சால் அவர்களும், டெய்ம்லர்–ஹீரோ வணிக வாகனங்கள் நிறுவனம் சார்பாக அந்நிறுவனத்தின் தலைமைச் செயல் அலுவலர் திரு. மார்க் லிஸ்டோசெட்டா அவர்களும் புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டனர்.

இந்நிகழ்வின்போது, மாண்புமிகு மின்துறை அமைச்சர் திரு. ஆர்க்காடு நா. வீராசாமி, மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் திரு. துரைமுருகன், தலைமைச் செயலாளர், திரு. எல்.கே. திரிபாதி, இ.ஆ.ப., நிதித் துறை முதன்மைச் செயலாளர் திரு. கு. ஞானதேசிகன், இ.ஆ.ப., சிப்காட் மேலாண்மை இயக்குநர் திரு. என். கோவிந்தன், இ.ஆ.ப., ஆகியோரும் டெய்ம்லர்–ஏ.ஜி ஹீரோ குழுமத்தின் மூத்த அலுவலர்களும் உடன் இருந்தனர்.

* * *



# தமிழகம் முழுவதிலும் 3,784 கிலோ மீட்டர் நீளச் சாலைகளையும் 284 பாலங்களையும் அகலப்படுத்தி மேம்படுத்தும் பணிகளுக்கு 905 கோடி ரூபாய் அனுமதி

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் **கலைஞர்** அவர்கள் ஆணை.

தமிழகத்திலுள்ள சாலைகளை மேம்படுத்துவதிலும், வலுப்படுத்துவதிலும் இவ்வரசு முக்கிய கவனம் செலுத்தி வருகிறது. நடப்பு ஆண்டில் (2008 – 2009) ஒருங்கிணைந்த சாலை உள்கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ்,

819 கிலோமீட்டர் நீளமுள்ள மாநில நெடுஞ்சாலைகளையும், அவற்றில் 98 பாலங்களையும் 353 கோடியே 67 இலட்சம் ரூபாய் செலவிலும்,

788 கிலோமீட்டர் நீளமுள்ள மாநில முக்கியச் சாலைகளையும், அவற்றில் 55 பாலங்களையும் 236 கோடியே 55 இலட்சம் ரூபாய் செலவிலும்,

1,354 கிலோமீட்டர் நீளமுள்ள மாவட்ட இதர சாலைகளையும் அவற்றில் 99 பாலங்களையும் 204 கோடியே 33 இலட்சம் ரூபாய் செலவிலும்,

823 கிலோமீட்டர் நீளமுள்ள மாவட்ட இதர சாலைகளையும் (ஆதி திராவிட குடியிருப்புச் சாலைகள் திட்டம்), அவற்றில் 32 பாலங்களையும் 110 கோடியே 64 இலட்சம் ரூபாய் செலவிலும்,

– ஆக மொத்தம் 3,784 கிலோமீட்டர் நீளச் சாலைகளை அவற்றில் சிறிய மற்றும் பெரிய பாலங்களாக அமையும் 284 பாலங்களுடன் 905 கோடியே 19 இலட்சம் ரூபாய் செலவில் அகலப்படுத்தி, மேம்படுத்துவதற்கு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் ஆணையிட்டுள்ளார்.

இதன் மூலம் ஏறத்தாழ 364 கிலோமீட்டர் நீள மாநில நெடுஞ்சாலைகளில் அகலப்படுத்தும் பணிகள் மேற்கொள்ளப்படும். இப்பணிகள் நிறைவேறியபின் திருவாரூர், நாமக்கல், கரூர், ஈரோடு, நீலகிரி, மதுரை, தேனி, திண்டுக்கல், சிவகங்கை, கோயம்புத்தூர், திருவண்ணாமலை, விழுப்புரம், கடலூர், திருச்சி, புதுக்கோட்டை, நாகப்பட்டினம், கன்னியாகுமரி ஆகிய 17 மாவட்டங்களில் அனைத்து மாநில நெடுஞ்சாலைகளும், இடைவழித் தடம் அல்லது இருவழித் தடம் கொண்டவையாக அகலப்படுத்தப்படும்.

இதனால் இம்மாவட்டங்களில் மாநில நெடுஞ்சாலைகளில் ஒருவழித் தடமே இல்லாத நிலை உருவாகும். இவையல்லாமல் 455 கிலோமீட்டர் நீள மாநில நெடுஞ்சாலைகளும் நடப்பாண்டில் மேம்படுத்தப்படும்.

மாவட்ட முக்கியச் சாலைகளில் 291 கிலோமீட்டர் நீளச் சாலைகள் அகலப்படுத்தப் படுவதுடன் 497 கிலோமீட்டர் நீளச் சாலைகள் மேம்படுத்தப்பட்டு வலுப்படுத்தப்படும். மாவட்ட இதர சாலைகளில் 1,259 கிலோமீட்டர் நீளச் சாலைகளை மேம்படுத்தும் பணிகளும், 95 கிலோமீட்டர் நீளச் சாலைகளை அகலப்படுத்தும் பணிகளும் மேற்கொள்ளப்படும். இத்துடன், 44 பேருந்து நிறுத்தங்கள் அமைத்தல் (bus lay byes), 34 விபத்துப் பகுதிகளை மேம்படுத்தும் பணிகளும்;

2006இல் இந்த அரசு அமைந்தபின், அறிமுகப்படுத்தப்பட்ட புதிய திட்டத்தின்கீழ் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் குடியிருப்புப் பகுதிகளுக்குச் செல்லும் மாவட்ட இதர சாலைகளில் 823 கிலோ மீட்டர் நீளச் சாலைகளை மேம்படுத்தும் பணிகளும்,

மேலும், இவ்வாண்டு அரசு அறிவித்தவாறு 27 கோடியே 7 இலட்சம் ரூபாய் செலவில் சுற்றுலாத் தலங்களுக்குச் செல்லும் 81 கிலோமீட்டர் நீளச் சாலைகளை மேம்படுத்தும் பணிகளும் மேற்கொள்ளப்படும்.

மொத்தம், 905 கோடியே 19 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டிலான இந்த சாலைப்பணிகள் அனைத்தையும் விரைவில் தொடங்கி, நிர்ணயிக்கப்பட்ட கால அளவுக்குள் நிறைவேற்றி முடிக்குமாறு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் ஆணையிட்டுள்ளார். ☐

# நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளில் நீடித்த கட்டமைப்பு வசதிகளுக்காக ஜெர்மன் நாட்டு வங்கியின் நிதியுதவி பெற முடிவு



மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை அமைச்சர்
திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள் முன்னிலையில் ஒப்பந்தம் கையெழுத்தானது.

**த**மிழக அரசு, தமிழ்நாடு நகர்ப்புற மேம்பாட்டு நிதியம் மூலமாக உள்ளாட்சி அமைப்புகளுக்குத் தேவையான கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்த நீண்டகால அடிப்படையில் கடன் வசதி அளித்து வருகிறது. உலக வங்கி, ஜப்பான் பன்னாட்டுக் கூட்டுறவு வங்கி போன்ற பல்வேறு அரசு நிதி நிறுவனங்களிடமிருந்து நிதியுதவி பெறப்படுகிறது.

உலக வங்கி நிதியுதவியுடன் மூன்றாவது தமிழ்நாடு நகர்ப்புற வளர்ச்சித் திட்டம் சுமார் ரூ.1,884 கோடி (434 மில்லியன் அமெரிக்க டாலர்) திட்ட மதிப்பில் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின்கீழ் 35 நகரங்களில் பாதாளச் சாக்கடைத் திட்டங்கள், திருநெல்வேலி குடிநீர்த் திட்டம், குறிச்சி –குனியமுத்தூர் கூட்டுக் குடிநீர்த் திட்டம், வடவள்ளி–கவுண்டம்பாளையம் கூட்டுக் குடிநீர்த் திட்டம் மற்றும் சாலைகள், பேருந்து நிலையங்கள், திடக்கழிவு மேலாண்மைத் திட்டங்கள் போன்ற நகர்ப்புற மேம்பாட்டுத் திட்டங்கள் தமிழகமெங்கும் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

ஜப்பான் பன்னாட்டுக் கூட்டுறவு வங்கியிடமிருந்து சுமார் ரூபாய் 340 கோடி (8,551 மில்லியன் ஜப்பானியயென்) கடன் பெறுவதற்கான ஒப்பந்தம் மார்ச்சு 10, 2008 அன்று கையொப்பமிடப்பட்டது. திருச்சி குடிநீர்த் திட்டம் மற்றும் ஆறு நகரங்களில் பாதாளச் சாக்கடைத் திட்டங்கள் இந்த நிதியுதவியுடன் செயல்படுத்தப் படவுள்ளது.

உலக வங்கி மற்றும் ஜப்பான் பன்னாட்டுக் கூட்டுறவு வங்கி தவிர தற்போது KFW எனப்படும் ஜெர்மானிய நாட்டு நிதி நிறுவனத்திடமிருந்தும் கடனுதவி பெற முடிவு செய்யப்பட்டு உள்ளது.

அதன் தொடர்ச்சியாக இந்நிறுவனத்திடமிருந்து சுமார் ரூபாய் 534 கோடி (77 மில்லியன் யூரோ) நிதியுதவி பெறுவதற்கான ஒப்பந்தம் மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் அவர்கள் முன்னிலையில் 8.7.2008 அன்று கையொப்பமிடப்பட்டுள்ளது. இந்த நிதியுதவி மூன்று பகுதிகளாக வழங்கப்படவுள்ளது.

முதல் பகுதியாக, நகர்ப்புற கட்டமைப்புத் திட்டங்களை நிறைவேற்றுவதற்காக உள்ளாட்சி அமைப்புகளுக்குக் கடன் உதவியாக வழங்குவதற்கு





மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் கலைஞர் அவர்கள்.
தியாகிகள் தினத்தன்று, சென்னை - காந்தி மண்டப வளாகத்தில்
தியாகி செண்பகராமன் சிலையினைத் திறந்து வைத்தார்.
மாண்புமிகு செய்தித்துறை அமைச்சர் திரு. பரிதி இளம்வழுதி அவர்கள் மற்றும்
செய்தித்துறை இயக்குநர் முனைவர் ஆ.சி. மோகன்தாஸ் ஆகியோர் உள்ளனர்.(17.7.2008)

ரூபாய் 450 கோடி (65 மில்லியன் யூரோ) ஒதுக்கப்பட்டுள்ளது. இந்த நிதியைக் கொண்டு குடிநீர் மேம்பாடு, பாதாளச் சாக்கடைத் திட்டம், சாலை வசதி போன்ற திட்டங்களை நிறைவேற்ற முடியும். இதில் கடனுதவியாக ரூ. 300 கோடியும், மானியமாக ரூ.150 கோடியும் உள்ளாட்சி அமைப்புகளுக்கு வழங்கப்படும். இதன் வட்டி விகிதம் LIBOR விகிதத்திலிருந்து 0.40 சதவிகிதம் குறைவாக இருக்கும். இதன் திரும்பச் செலுத்தும் காலம், மூன்று ஆண்டுகள் சலுகை உட்பட மொத்தம் 12 ஆண்டுகள். இந்தத் திட்டத்தினை நிறைவேற்றும் காலம் 2008–2009 முதல் சுமார் 5 ஆண்டுகள் ஆகும்.

இரண்டாம் பகுதியாக, சிறிய மற்றும் நடுத்தர நகரங்கள் கடன் பத்திரங்கள் மூலமாக நிதி திரட்டுவதற்கு ஏதுவாக சுமார் ரூபாய் 70 கோடி (10 மில்லியன் யூரோ) அளவிற்கு ஒரு பொது நிதி ஆதார அமைப்புக்குக் கடனாக வழங்கப்படுகிறது. இந்த ஒருங்கிணைந்த நிதி ஆதார அமைப்பின் (Master Financing Indenture) மூலமாக உள்ளாட்சி அமைப்புகள் மூலதனச் சந்தையிலிருந்து கடன் பத்திர வெளியீட்டின் மூலமாக சுமார் ரூபாய் 110 கோடி வரை நிதி திரட்ட முடியும். இந்த நிதியைக் கொண்டு சுமார் ரூபாய் 200 கோடி மதிப்பீட்டிலான திட்டங்களை நிறைவேற்ற முடியும். மீதமுள்ள ரூபாய் 20 கோடி உள்ளாட்சி அமைப்புகள் முதலீடு செய்ய வேண்டும். இதனுடைய வட்டி விகிதம் சுமார் 0.75 சதவிகிதம் ஆகும். இதன் திரும்பச் செலுத்தும் காலம், 10 ஆண்டுகள் சலுகைக் காலம் உட்பட மொத்தம் 40 ஆண்டுகள் ஆகும்.

மூன்றாம் பகுதியாக, சுமார் ரூபாய் 14 கோடி (2 மில்லியன் யூரோ) தொழில்நுட்பத் திறனைப் பெருக்கிக் கொள்வதற்காக மானியமாக வழங்கப்படுகிறது.

இந்த நிதியுதவிக்கான ஒப்பந்தங்கள் மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை அமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் அவர்கள் முன்னிலையில் இந்திய அரசின் நிதித்துறை இணைச் செயலாளர் திரு. குமார் சஞ்சய் கிருஷ்ணா, KfW–வின் டில்லி தலைமை அலுவலக இயக்குநர் திரு. கிருஸ்டியன் காஸ், நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை முதன்மைச் செயலர் திரு. க. தீனபந்து, இ.ஆ.ப., TNUIFSL மேலாண் இயக்குநர் மற்றும் தலைமைச் செயல் அலுவலர், திரு. விக்ரம் கபூர், இ.ஆ.ப., ஆகியோர்களுக்கிடையே இன்று கையொப்பமானது.

இந்நிகழ்ச்சியின்போது தமிழ்நாடு அரசு நிதித்துறை முதன்மைச் செயலர் திரு. கு. ஞானதேசிகன், இ.ஆ.ப., நகராட்சி நிருவாகத்துறை ஆணையர் டாக்டர் நிரஞ்சன் மார்டி, இ.ஆ.ப., பேரூராட்சிகளின் ஆணையர் டாக்டர் கே. கோபால், இ.ஆ.ப., மற்றும் சென்னை மாநகராட்சி ஆணையர், திரு. ராஜேஷ் லக்கானி, இ.ஆ.ப., ஆகியோர் உடனிருந்தனர். ❖

# சிக்கனம் வீட்டைக் காக்கும் சிறுசேமிப்பு நாட்டைக் காக்கும்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர், முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் தலைமையின்கீழ் உள்ள பொற்கால ஆட்சியில் இந்த இரண்டு ஆண்டுகளில் எல்லாத் துறைகளிலும் சரித்திரச் சாதனைகள் படைக்கப்பட்டதைப் போல அவரின் தலைமையிலுள்ள சிறுசேமிப்புத் துறையிலும் அவரது வழிகாட்டுதலின் மூலம் சிறுசேமிப்புத் துறையின் திட்டங்கள் சிறப்பாக நடைமுறைப்படுத்த உரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

சிறுசேமிப்பு மாநில அரசின் மிகச்சிறந்த நிதி ஆதாரமாகக் கருதப்படுகிறது. சிறுசேமிப்புத் துறையின் மூலம் வசூலிக்கப்படும் தொகை, மாநில அரசின் வளர்ச்சித் திட்டங்களுக்குப் பயன்படுத்தப்படுகிறது. மாநில அரசின் நிதிப் பற்றாக்குறையைச் சரிசெய்யவும் இது உதவுகிறது. சிறுசேமிப்புத் திட்டங்கள் மூலம் திரட்டப்படும் நிதி முழுவதுமாக மத்திய அரசால் மாநில அரசுகளுக்கு நீண்ட காலக் கடனாக வழங்கப்படுகிறது. ஒவ்வொரு ஆண்டும் தமிழக அரசு, மாவட்டங்களுக்குச் சிறுசேமிப்பு வசூல் இலக்கினை நிர்ணயித்து, மாவட்ட அதிகாரிகளின் மூலம் பொதுமக்களிடமிருந்து நிதி திரட்டப்படுகிறது. சிறுசேமிப்பு நிதிமூலம் சாலை வசதி, மின்சார வசதி, குடிநீர் வசதி, மருத்துவ வசதி போன்ற பல்வேறு அடிப்படை வளர்ச்சித் திட்டங்களும் சமுதாய நலத்திட்டங்களும் அமுல் படுத்தப்பட்டுவருகிறது. சிறுசேமிப்பு நாட்டுக்கு மட்டுமல்லாது வீட்டின் பொருளாதார வளர்ச்சிக்காகவும் பயன்படுகிறது.

சிலர் சிக்கனத்தைக் கஞ்சத்தனமாகக் கருதுகிறார்கள். ஆனால் சிக்கனம் என்பது வேறு; கஞ்சத்தனம் என்பது வேறு. நம்முடைய அத்தியாவசியமான செலவினங்களைக்கூட செய்யாமல் இருப்பது கஞ்சத்தனம் ஆகும். ஆனால் அவசியமான செலவினங்களை மேற்கொண்டு அநாவசியமான செலவினங்களைத் தவிர்த்து அந்தத் தொகையை தன்னுடைய எதிர்கால வாழ்விற்காகச் சேமிப்பது சிக்கனமாகும்.

தந்தை பெரியார் அவர்கள் சிக்கனத்தைப் பிறருக்கு வலியுறுத்தியதோடல்லாமல் தனது வாழ்க்கையிலும் கடைப்பிடித்தார். அவர் பல ஆண்டுகளுக்கு முன் ஒரு திருமண விழாவிற்குச் சென்றார். விருந்து முடிந்து அவர் கை கழுவுவதற்காக வந்தபோது ஒருவர் தேவைக்கு அதிகமாக ஒரு குவளையிலிருந்து தண்ணீரை எடுத்து அவர் கைகளைக் கழுவுவதற்காக ஊற்றிக்கொண்டே இருந்தார். அப்பொழுது தந்தை பெரியார் அவர்கள் அவரை தடுத்து அவரிடம் "தண்ணீரை நீங்கள் சாதாரணமாக நினைத்ததால்தான் இவ்வாறு மூன்று நான்கு முறை குவளையில் இருந்து தண்ணீரை ஊற்றுகிறீர்கள். இதுவே நெய்யாகவோ அல்லது பாலாகவோ இருந்திருந்தால்



**அ. இரகுமான்கான்**, பி.ஏ., பி.எல்.,
துணைத்தலைவர்,
மாநில தேசிய சேமிப்பு ஆலோசனைக்குழு

இவ்வாறு ஊற்றுவீர்களா? எதிர்காலத்தில் தண்ணீரை விலை கொடுத்து வாங்கவேண்டிய சூழ்நிலை வரும். எனவே இப்பொழுதே தண்ணீரைச் சிக்கனமாகப் பயன்படுத்துங்கள்" என்று கூறினார். இதேபோல் மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்களும் தந்தை பெரியார் வழியில் நின்று சிக்கனத்தைக் கடைபிடித்து வருபவராவார்.

சேமிப்பு மற்றும் சிக்கனத்தின் அவசியத்தைப்பற்றி வான்மறை தந்த வள்ளுவர் அவர்களும் "எல்லை கடந்த செலவு இல்லாமல் இருக்குமேயானால் வரவு குறைவாக இருப்பதால் கேடு எதுவுமில்லை" என்பதை

"ஆகாறு அளவிட்டது ஆயினும் கேடில்லை
போகாறு அகலாக் கடை" – குறள் எண் : 478

என்ற திருக்குறள் மூலம் தெளிவு படுத்தியுள்ளார்.

மேலும், அவ்வை மூதாட்டியார், சேமிக்காமல் வரவுக்கு மிஞ்சி செலவு செய்பவர்கள் வாழ்க்கையில் எத்தகைய இன்னல்களைச் சந்திக்க நேரிடும் என்பதை அழகான தமிழ்ப் பாடல் மூலம் விளக்கி இருக்கிறார்.

"ஆன முதலின் அதிகம் செலவானால்
மானம் அழிந்து மதிகெட்டு போன திசை
எல்லோருக்கும் கள்ளனாய் ஏழ் பிறப்பும் தீயனாய்
நல்லார்க்கும் பொல்லனாம் நாடு" என்கிறார்.






மாண்புமிகு நிதித்துறை அமைச்சர் பேராசிரியர் க.அன்பழகன் அவர்கள், 8.7.2008 அன்று சென்னையில் நடைபெற்ற அயோத்திதாச பண்டிதர் அவர்களால் தொடங்கப்பட்ட "ஒரு பைசாத் தமிழன்" வார இதழ் – நூற்றாண்டு விழாவில், விழா பேருரையாற்றினார்கள். மாண்புமிகு செய்தித்துறை அமைச்சர் திரு. பரிதி இளம்வழுதி அவர்கள், மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் திருமதி. ஆ. தமிழரசி அவர்கள், வணக்கத்திற்குரிய சென்னை மாநகராட்சி மேயர் திரு.மா.சுப்பிரமணியன் அவர்கள் மற்றும் முக்கிய பிரமுகர்கள் உள்ளனர்.

சிக்கனமாக இருந்து சேமிப்பதன்மூலம் எதிர்பாராமல் ஏற்படும் திடீர் செலவினங்களுக்கு அடுத்தவரை எதிர்பார்க்காமல் நமது சேமிப்பு நிதியிலிருந்தே பணத்தை எடுத்துக்கொள்ளலாம். குழந்தைகளின் மேற்படிப்பு, திருமணம், மருத்துவமனைச் செலவினங்கள் போன்ற எதிர்கால அத்தியாவசிய செலவினங்களுக்கு நமது சேமிப்பே நமக்கு உற்ற நண்பனாகக் கைகொடுக்கும்.

இளமையில் சேமிக்காவிட்டால் முதுமையில் மிகவும் அல்லல்பட நேரிடும்.

"மகன் கட்டிய வீட்டின் பெயர் அன்னை இல்லம்
அன்னை இருப்பதோ முதியோர் இல்லம்"

முதுமையில் பெற்ற பிள்ளைகள் கைவிட்டாலும், முதியோர் இல்லங்களை நாடாமல் நம்முடைய சேமிப்பைக்கொண்டே நமது பிற்கால வாழ்க்கையை நல்ல முறையில் மிக்க மதிப்புடனும், மன அமைதியுடனும் அமைத்துக்கொள்ளலாம். திடீர் உடல் நலக்குறைவு, விபத்துகள் போன்றவற்றிற்கு நம் சேமிப்பே நம்மைக் காக்கும் கரங்களாக இருக்கும். குழந்தைகள் படிப்பு, வீடு, வாகனம் வாங்குதல் போன்றவற்றிற்கு நம் சேமிப்பு நிதியிலிருந்தே செலவை மேற்கொள்ளலாம். நமது சிறுசேமிப்பு நமக்கு எந்நாளும் தேவையின் போது கைகொடுக்கும்.

**சிறுசேமிப்புத் திட்டங்கள்**

சமுதாயத்தில் உள்ள அனைத்துத் தரப்பு மக்களுக்கும் ஏற்ற சேமிப்புத் திட்டங்கள் சிறுசேமிப்புத்துறையில் உள்ளன அவை வருமாறு :

1. விவசாயிகள் மற்றும் அனைத்துத் தரப்பு மக்களுக்கு – முதலீடு இரட்டிப்பாக, கிஸான் விகாஸ் பத்திரம் (KVP)- Kissan Vikas Patram. முதலீடு, 8 வருடம் 7 மாதங்களில் இரட்டிப்பாகும்.

2. வருமான வரிச்சலுகை பெற திட்டமிடுவோருக்கு, தேசிய சேமிப்புப் பத்திரம் 8ஆவது வெளியீடு (NSC-National Savings Certificate) மற்றும் வட்டி 8 சதவீதம் பொது வருங்கால வைப்பு நிதி கணக்கு (PPF - Public Provident Fund), வட்டி 8 சதவீதம்.

3. மாதாந்திர வருமானமாக வட்டிபெற விரும்புவோருக்கு, ஓய்வு பெற்றோருக்கு மற்றும் வயது முதிர்ந்தவர்களுக்கான சேமிப்புத் திட்டம், அஞ்சலக மாதாந்திர வருவாய்த் திட்டம் (POMIS Post Office Monthly Income Scheme) வட்டி 8 சதவீதம் + வட்டி 5 சதவீதம் மற்றும் மூத்த குடிமக்கள் சேமிப்புத் திட்டம் (SCSS - Senior Citizen Savings Scheme), போனஸ் 9 சதவீதம்.

4. மாதந்தோறும் சிறுகச் சிறுக சேமிக்க விரும்பும் கிராமப்புர மக்கள், வறுமைக் கோட்டிற்குக் கீழ் உள்ளோர் மற்றும் நடுத்தர மக்கள், குடும்பத் தலைவி ஆகியோருக்கு, அஞ்சலக தொடர் வைப்புத் திட்டம் (PORD - Post Office Recurring Deposit Scheme) வட்டி 8 சதவீதம்.

5. அஞ்சலக கால வைப்பு நிதி செய்ய விரும்புவோருக்கு (POTD - Post Office Time Deposit) 1) ஓராண்டு– 6.25 சதவீதமும் 2) இரண்டாண்டுகள்– 6.50 சதவீதமும் 3) மூன்றாண்டுகள் மற்றும் – 7.25 சதவீதமும் 4) ஐந்தாண்டுகள் வைப்புக் கால முதலீடு – 7.50 சதவீதமும்.

6. வட்டியுடன் அன்றாடக் கணக்கு வைக்க விரும்புவோருக்கு, அஞ்சலக சேமிப்பு வங்கிக் கணக்கு (Post Office Savings Bank account)- 3.50 சதவீதம்.

மேற்கண்ட சிறுசேமிப்புத் திட்டங்கள் அஞ்சலகங்களில் செயல்படுத்தப்படுகின்றன. பொது சேமநல நிதித் திட்டம் மட்டும் அஞ்சலகங்களில் மட்டுமன்றி அனைத்து பாரத ஸ்டேட் வங்கிக் கிளைகள் மற்றும் சில தேசிய வங்கிகளிலும் செயல்படுத்தப்படுகின்றன.

## சிறுசேமிப்பு முகவர்கள்

சிறுசேமிப்பு வசூலை அதிகரிப்பதில் முகவர்கள் பெரும் பங்கு வகிக்கின்றனர். சிறுசேமிப்பு முகவர்கள் மூன்று வகைப்படுகின்றனர்.

1. நிலை முகவர்கள் (SAS) அஞ்சலக மாத வருவாய்த் திட்டம் (POMIS), அஞ்சலக கால வைப்புத் திட்டம் (POTD) தேசிய சேமிப்புப் பத்திரம் 8ஆவது வெளியீடு (NSC), மூத்த குடிமக்கள் சேமிப்புத் திட்டம் (SCSS), கிசான் விகாஸ் பத்திரம் (KVP) 1% 0.5%.

2. மகளிர் முகவர்கள் (MPKBY) அஞ்சலக தொடர் வைப்புத் திட்டம் (PORD) 4% 2%.

3. பொது சேம நல நிதித் திட்ட முகவர்கள் (PPF) பொது சேமநல நிதித் திட்டம் (PPF) 1%.

இம் முகவர்கள், துணை இயக்குநர், சென்னை மாநகராட்சி / மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர்கள்(சிறுசேமிப்பு) / வட்டார வளர்ச்சி அலுவலர் ஆகியோரால் நியமிக்கப்படுவர்.

முகவர்களாக நியமனம் பெற கீழ்க்கண்ட தகுதிகள் பெற்றிருக்க வேண்டும்.

அ. அவர்கள் 10ஆம் வகுப்பு தேர்வு பெற்றிருக்க வேண்டும்.

ஆ. அவர்கள் அரசு அலுவலராக இருக்கக் கூடாது.

இ. அவர்களின் நெருங்கிய உறவினர்கள் அஞ்சலகங்களில் பணியிலிருக்கக் கூடாது.

ஈ. நிலை முகவர்கள் (SAS) மற்றும் பி.பி.எப் (PPF) முகவர்கள் இருபாலருமாவர். ஆனால், மகளிர் முகவர்களாக முற்றிலும் மகளிரே நியமனம் பெறுகின்றனர்.

அஞ்சலகத் தொடர் வைப்புத்திட்டம் முழுவதும், மகளிர் முகவர்களாக இருந்து செயல்படுத்தும் திட்டமாகும். இத்திட்டத்தின் மூலம் சிறுசேமிப்புத்துறைக்கு பலகோடி ரூபாய் வருமானம் வந்துகொண்டிருக்கிறது. இத்திட்டத்தை மேலும் வலுப்படுத்த உரிய நடவடிக்கை எடுக்கப்படும். தமிழ்நாட்டில் சுமார் 50,000 முகவர்கள் முதலீட்டாளர்களுக்கு சேவை செய்கின்றனர். இதில் 30,000 பேர் மகளிர் முகவர்கள் ஆவர். இவர்கள் பொதுமக்களிடம் தொடர் வைப்புத் திட்டத்தை ஊக்குவித்து முதலீடு திரட்டுவதில் சேவை புரிகின்றனர். முகவர்களின் நலனைக் கருத்தில் கொண்டு தமிழக அரசும், இந்தியாவிலேயே வேறு எந்த மாநிலத்திலேயும் இல்லாத வகையில் சிறுசேமிப்பு முகவர்களுக்கு இலவசக் காப்புறுதித் திட்டத்தை (Group Insurance Scheme) அறிவித்துள்ளது.

கடந்த காலத்தில் அரசுக்கு கோடிக்கணக்கான நிதி சிறுசேமிப்பின் மூலம் திரட்டப்பட்டது. சிறுசேமிப்புத் திட்டங்களுக்கு அதிக வட்டியினைப் பெற்றுத்தரவும் முகவர்களுக்கு உரிய ஊக்கத்தொகையை அதிகப்படுத்தவும் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் கலைஞர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு சென்று உரிய நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

சிறுசேமிப்புத்துறையின் மூலம் ஒவ்வொரு ஆண்டும் மாவட்ட ஆட்சியர் மூலம் மாவட்ட நிருவாகத்தில் உள்ள அதிகாரிகளுக்கு சிறுசேமிப்பு வசூல் இலக்கு நிர்ணயிக்கப்படுகிறது. இந்த வசூல் இலக்கினை அதிகாரிகள் அனைவரும் திரட்டித்தர ஒத்துழைப்பு நல்கும்படி கேட்டுக்கொள்கிறேன். முகவர்களுக்கு அவர்கள் திரட்டித்தரும் சிறுசேமிப்பு நிதிக்காக மத்திய அரசும், மாநில அரசும் தரகுத் தொகையும், ஊக்கத்தொகையும், ஊக்கப்பரிசுகளும் வழங்குகின்றன. சிறுசேமிப்பு நிதிமூலம் உள்ளாட்சி அமைப்புகளுக்கு உட்பட்ட பகுதிகளில் சாலை வசதி, மின்சார வசதி, குடிநீர் வசதி, மருத்துவ வசதி போன்ற பல்வேறு அடிப்படை வளர்ச்சித் திட்டங்களும் அமுல்படுத்தப்பட்டு வருகிறது.

பொதுமக்களில் பலர் அதிக வட்டி கிடைக்கும் என்ற பேராசையின் காரணமாகப் பல தனியார் நிதி நிறுவனங்களில் முதலீடு செய்து தங்களது பணத்தை இழக்கிறார்கள். இது போலல்லாமல் தங்கள் முதலீட்டிற்கும் வட்டிக்கும் முழுப் பாதுகாப்புத் தருவது சிறுசேமிப்புத் திட்டங்கள்தான். சிறுசேமிப்பு நாட்டுக்கு மட்டுமல்லாது வீட்டின் பொருளாதார வளர்ச்சிக்காகவும் பயன்படுகிறது. எனவே அனைவரும் வளமாய் வாழ மக்கள் சிறுசேமிப்புத் திட்டங்களில் முதலீடு செய்ய வேண்டுமென அன்புடன் கேட்டுக்கொள்கிறேன். “சிக்கனம் வீட்டைக் காக்கும் சிறுசேமிப்பு நாட்டைக் காக்கும்” என்ற வாசகத்தை என்றும் நாம் நினைவில் நிறுத்துவோம். ★



# நகராட்சி மற்றும் மாநகராட்சிப் பள்ளி மாணவர் கல்வி உதவித்தொகை திட்டம்

## கல்வி உதவித் தொகை

தமிழ்நாட்டில் தற்போது நகராட்சி மற்றும் மாநகராட்சிகளின் கட்டுப்பாட்டில் 75 உயர்நிலைப் பள்ளிகளும், 76 மேல்நிலைப் பள்ளிகளும் இயங்கி வருகின்றன. நகராட்சி மற்றும் மாநகராட்சிப் பள்ளிகளில் பயிலும் மாணவ, மாணவியரை ஊக்குவிக்க இதுகாறும் திட்டம் ஏதும் இல்லாதிருந்தது. இந்த அரசு பதவியேற்றவுடன் இதனைக் கனிவுடன் பரிசீலித்து நகராட்சி மற்றும் மாநகராட்சிப் பள்ளிகளில் கல்வி பயிலும் மாணவ, மாணவியரை ஊக்குவிக்கும் நோக்கத்துடன் 2007 – 2008ஆம் ஆண்டு சட்டமன்றத்தில் ஓர் அறிவிப்பினை மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை அமைச்சர் அவர்கள் வெளியிட்டார்கள். அதன்படி நகராட்சி மற்றும் மாநகராட்சிப் பள்ளிகளில் பத்தாம் வகுப்பு மற்றும் பன்னிரெண்டாம் வகுப்புத் தேர்வுகளில் முதலாவதாக வரும் 25 மாணவ, மாணவியர்க்கு பரிசுத் தொகை ரூ.10 ஆயிரமும், பாராட்டுப் பத்திரமும் வழங்குவதோடு அவர்களுள் பொருளாதாரத்தில் பின்தங்கிய மாணவர்களுக்கு பட்டப்படிப்பு மேற்கொள்ள உதவித்தொகையும் வழங்கப்படும் எனவும் அறிவிக்கப்பட்டது.



மாணவர்களுக்கு வழங்கப்படும் பரிசுத் தொகை மற்றும் கல்வி உதவித் தொகை ஆகிய செலவினங்களை மேற்கொள்ள நகராட்சி மற்றும் மாநகராட்சிகளின் கல்வி நிதியிலிருந்து ரூ.2.53 கோடி பங்களிப்பாகப் பெற்று “நகராட்சி மற்றும் மாநகராட்சிப் பள்ளி மாணவர் கல்வி உதவி நிதி” என்னும் பெயரில் “பொது நிதி” ஒன்று ஏப்ரல் 2008ல் ஏற்படுத்தப்பட்டது. அரசு இந்நிதிக்கு ரூ.2 கோடியினை இணை மானியமாக வழங்கியுள்ளது. மேலே தெரிவித்துள்ளவாறு ரூ.2.53 கோடியை முதலீடாகக் கொண்டு பொது நிதி ஒன்று உருவாக்கப்பட்டு அரசு நிதி நிறுவனமான டுபிட்கோ (TUFIDCO) விடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. டுபிட்கோ நிறுவனம் இப்பொது நிதியினை நிருவகித்து வரும். இந்நிதியிலிருந்து ஈட்டப்படும் வட்டியினைப் பயன்படுத்தி இத்திட்டத்திற்கான செலவினங்கள் மேற்கொள்ளப்படும்.

இத்திட்டத்தினை செயல்படுத்திட மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை அமைச்சர் அவர்கள் தலைமையில் குழு ஒன்று அமைக்கப்பட்டுள்ளது.

## உயர்மட்ட தேர்வுக் குழு

அரசுத் தேர்வுகள் துறை இயக்குநரிடமிருந்து 2008ஆம் ஆண்டு மாநகராட்சி மற்றும் நகராட்சிப் பள்ளிகளில் பத்தாம் வகுப்பு மற்றும் பன்னிரெண்டாம் வகுப்பு பள்ளி இறுதித் தேர்வில் முதலாவதாக வந்த 25 மாணவர்களின் தரவரிசைப் பட்டியல் பெறப்பட்டது. இவ்விரண்டு தேர்வுகளிலும் 25ஆவது தரவரிசையில் உள்ள மாணவர் பெற்றுள்ள அதே மதிப்பெண்ணை 26ஆவது மாணவரும் பெற்றுள்ளதால் தலா 26 மாணவ, மாணவியர் இத்திட்டத்தில் தேர்வு செய்யப்பட்டுள்ளனர். மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை அமைச்சர் அவர்களின் தலைமையிலான குழுவின் ஒப்புதலினைப் பெற்று ஒவ்வொரு மாணவ, மாணவியருக்கும் தலா ரூ.10,000/– பரிசுத் தொகையும், பாராட்டுச் சான்றிதழும் 30.6.2008

அன்று வழங்கப்பட்டது. மேலும் பன்னிரெண்டாம் வகுப்பில் தேர்ந்தெடுக்கப்பட்ட மாணவ, மாணவியரில் பொருளாதாரத்தில் பின்தங்கியோருக்கு அவர்கள் பட்டப்படிப்பினை தொடர்வதற்கு உதவும் வகையில் அரசுக் கல்லூரிகளில் வசூலிக்கப்படும் கல்விக் கட்டணம், விடுதிக் கட்டணம் மற்றும் உணவுக் கட்டணம் முழுவதையும் இப்பொது நிதியிலிருந்து வழங்கிட முடிவு செய்யப்பட்டு மாணவர்களுக்கு கல்வி உதவித்தொகை விண்ணப்பப் படிவங்கள் வழங்கப்படும்.

**மாநகராட்சி / நகராட்சிப் பள்ளி**
**மாணவ– மாணவியரின் சாதனைகள்**

2008ஆம் ஆண்டு நகராட்சி மற்றும் மாநகராட்சிப் பள்ளிகளில் பத்தாம் வகுப்பு தேர்வு எழுதிய மொத்தம் 20,338 மாணவ, மாணவியரில் 76.34 சதவீதத்தினரும், பன்னிரெண்டாம் வகுப்புத் தேர்வு எழுதிய மொத்தம் 14,467 மாணவ, மாணவியரில் 80.83 சதவீதத்தினரும் தேர்ச்சி பெற்றுள்ளனர் என்பது குறிப்பிடத் தக்கதாகும். இத்தேர்வுகளில் மாணவர்களை விட மாணவியர் சிறப்பாகத் தேர்ச்சி பெற்றுள்ளனர். பத்தாம் வகுப்பு பள்ளி இறுதித் தேர்வில் முதலாவதாக வந்துள்ள 26 மாணவ, மாணவியரில் 23 பேர் மாணவியர், 3 பேர் மாணவர்கள்.

அதேபோன்று பன்னிரெண்டாம் வகுப்பு பள்ளி இறுதித் தேர்வில் முதலாவதாக வந்துள்ள 26 மாணவ, மாணவியரில், 22 பேர் மாணவியர், 4 பேர் மாணவர்கள். பரிசு பெறும் 52 மாணவர்களில் 9 மாணவர்கள் மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பைச் சார்ந்தவர்கள், 6 மாணவர்கள் ஆதிதிராவிடர் வகுப்பைச் சார்ந்தவர்கள், 35 மாணவர்கள் பிற்படுத்தப்பட்ட வகுப்பைச் சார்ந்தவர்கள், ஒருவர் பழங்குடியினர் வகுப்பைச் சார்ந்தவர் மற்றும் ஒருவர் இதர வகுப்பைச் சார்ந்தவர் என்பது குறிப்பிடத்தக்கது.

மேலும் இம்மாணவர்கள் அனைவரும் தனியார் பள்ளிகளுக்கு நிகராக அதிக மதிப்பெண்கள் பெற்றுள்ளனர் என்பதும் குறிப்பிடத்தக்கதாகும். பத்தாம் வகுப்பில் முதலிடம் பெற்ற செல்வி சு. தையல் நாயகி 500–க்கு 487 மதிப்பெண்களும், 25ஆவது இடத்தைப் பெற்றுள்ள மாணவி து. கௌசல்யா 500–க்கு 480 மதிப்பெண்களும், பன்னிரெண்டாம் வகுப்பில் முதலிடம் பெற்ற செல்வி ச.வைஷ்ணவி 1,200–க்கு 1,142 மதிப்பெண்களும், 25ஆவது இடத்தைப் பெற்ற மாணவி, இர. ப்ரியதர்ஷிணி 1,200–க்கு 1094 மதிப்பெண்களும் பெற்றுள்ளனர். என்பது மாநகராட்சி மற்றும் நகராட்சிப் பள்ளிகளில் கல்வியின் தரம் உயர்ந்துள்ளது என்பதற்கு சான்றாகும். மேலும் இவ்வாண்டு கோயம்புத்தூர் மற்றும் திருப்பூர் மாநகராட்சிப் பள்ளிகளில் அதிகமான அளவில் மாணவ, மாணவியர் முதலிடம் பெற்றுள்ளனர் என்பதும் குறிப்பிடத்தக்கதாகும்.

**கட்டமைப்பு வசதி மேம்பாடு**

அரசு கொண்டு வந்துள்ள இந்தக் கல்வி உதவித் திட்டத்தின் மூலம் ஒவ்வொரு ஆண்டும் நகராட்சி மற்றும் மாநகராட்சிப் பள்ளி மாணவர் கல்வி உதவித் தொகை பெறுவர் என்பதுடன் இத்திட்டம் அவர்களைப் பெருமளவில் ஊக்குவிக்கும் என்பது திண்ணமாகும். மாநகராட்சி மற்றும் நகராட்சிப் பள்ளிகளின் வசதிகளை மேம்படுத்த நடப்பாண்டில் ரூ.100 கோடி மதிப்பீட்டில் வகுப்பறைகள் கட்டுதல், ஆய்வுக் கூடங்கள் அமைத்தல் மற்றும் விளையாட்டு மைதானங்கள் ஏற்படுத்துதல் போன்ற கட்டமைப்பு வசதிகளை மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

**சாதனை புரிந்த மாணவ, மாணவியர்களுக்கு**
**பரிசுத்தொகை மற்றும் பாராட்டுப் பத்திரம்**

2008 ஆம் ஆண்டு நகராட்சி மற்றும் மாநகராட்சிப் பள்ளிகளில் பத்தாம் வகுப்புத் தேர்வில் அதிக மதிப்பெண்கள் பெற்ற 26 நபர்கள் மற்றும் +2 தேர்வில் அதிக மதிப்பெண்கள் பெற்ற 26 நபர்கள் ஆக மொத்தம் 52 மாணவ, மாணவியருக்கு தலா ரூ.10,000/– பரிசுத் தொகையும், பாராட்டுச் சான்றிதழும் மாண்புமிகு ஊரக மற்றும் உள்ளாட்சித்துறை அமைச்சர் திரு. மு. க. ஸ்டாலின் அவர்களால் 30.6.2008 அன்று தலைமைச் செயலகத்தில் நடைபெற்ற விழாவில் வழங்கப்பட்டது.

இந்நிகழ்ச்சியின் போது குழுவின் உறுப்பினர்களான நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை அரசு செயலர் திரு. தீனபந்து, நகராட்சி நிருவாக ஆணையர் டாக்டர் நிரஞ்சன் மார்டி, தமிழ்நாடு நகர்மன்றத் தலைவர்களின் பேரவைத் தலைவரும், ஆலந்தூர் நகர்மன்றத் தலைவருமான திரு. ஆர்.எஸ். பாரதி, கோவை மாநகராட்சி மேயர் ஆர். வெங்கடாசலம், பள்ளிக் கல்வித்துறை இயக்குநர் பெருமாள்சாமி மற்றும் மாநகராட்சி, நகராட்சி நிருவாகத்துறை உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர். ★



# படமும் செய்தியும்



மாண்புமிகு தமிழக முதலமைச்சர் கலைஞர் அவர்கள் 10.7.2008 அன்று தலைமைச் செயலகத்தில், சென்னை – நொச்சிக்குப்பம் முதல் சீனிவாசபுரம் வரை சுனாமியால் பாதிக்கப்பட்ட குடிசைப் பகுதிகளை அகற்றி மறுகுடி அமர்வு செய்யும் திட்டத்தின் மூலம் உலக வங்கியின் உதவியுடன் 293 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 6,500 குடியிருப்புகளின் மாதிரி கட்டிட வடிவமைப்புகளைப் பார்வையிட்டார். உடன் மாண்புமிகு குடிசை மாற்று வாரியத்துறை அமைச்சர் திரு.சுப.தங்கவேலன், வீட்டுவசதி மற்றும் நகர்புறச் செயலாளர் திரு. இரா. செல்லமுத்து, மேலாண்மை இயக்குநர் திரு. டி.கே. ராமச்சந்திரன் ஆகியோர் உள்ளனர்.



மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை அமைச்சர் திரு.மு.க. ஸ்டாலின் அவர்கள், 30.6.2008 அன்று சென்னை தலைமைச் செயலகத்தில் நகராட்சி மற்றும் மாநகராட்சிப் பள்ளிகளில் கல்வி பயிலும் மாணவ, மாணவிகளை ஊக்குவிக்கும் நோக்கத்துடன் அப்பள்ளிகளில் பயின்று 10ஆவது மற்றும் 12ஆவது வகுப்பு தேர்வுகளில் முதலாவதாக வந்துள்ள 25 மாணவ, மாணவியருக்கு பரிசுத் தொகை தலா ரூ.10,000/– மும், பாராட்டுப் பத்திரமும் அவர்களுள் பொருளாதாரத்தில் பின்தங்கிய மாணவர்களுக்குப் பட்ட மேற்படிப்பு, மேற்கொள்ள உதவித் தொகையையும் வழங்கினார்கள். இந்நிகழ்ச்சியில் சம்பந்தப்பட்ட நகராட்சித் தலைவர்கள், மாநகராட்சியின் வணக்கத்திற்குரிய மேயர்கள் மற்றும் துணை மேயர்கள், நகராட்சி நிர்வாகத்துறை உயர் அலுவலர்கள், பள்ளித் தலைமை ஆசிரியர்கள் மற்றும் ஆசிரியர்கள் பங்கேற்றனர்.



மாண்புமிகு தமிழக முதலமைச்சர் கலைஞர் அவர்கள் 12.7.2008 அன்று தலைமைச் செயலகத்தில், உலக அளவிலான பல்வேறு வலுதூக்கும் போட்டிகளில் கலந்து கொண்டு பதக்கம் பெற்று சாதனை புரிந்த திரு. ந. அன்பு அவர்களை ஊக்குவித்துப் பாராட்டும் வகையில் 10 இலட்சம் ரூபாய்க்கான காசோலையை வழங்கினார். உடன் மாண்புமிகு சுற்றுச்சூழல் மற்றும் விளையாட்டுத் துறை அமைச்சர் திரு.டிபி.எம். மைதீன்கான், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டுத் துறை முதன்மைச் செயலாளர் திரு. ஆர். கிருஸ்துதாஸ் காந்தி, இ.ஆ.ப., ஆகியோர் உள்ளனர்.



மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை அமைச்சர் திரு.மு.க. ஸ்டாலின் அவர்கள், 7.7.2008 அன்று சென்னை மீஞ்சூர் அருகில் உள்ள திருக்காட்டுப் பள்ளி கிராமத்தில், நாளொன்றுக்கு 100 மில்லியன் லிட்டர் கடல் நீரை குடிநீராக்கும் திட்டப் பணிகளை ஆய்வு செய்தார்கள். நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை செயலர் திரு. தீனபந்து இ.ஆ.ப., சென்னை குடிநீர் வடிகால் வாரிய மேலாண்மை இயக்குநர் திரு. சுனில் பாலிவால் இ.ஆ.ப., மற்றும் துறை அலுவலர்கள் உடன் உள்ளனர்.



# ரூ.400 கோடியில் கங்கைகொண்டானில் டயர் தயாரிக்கும் புதிய தொழிற்சாலை



**மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் கலைஞர் அவர்களின் முன்னிலையில் புரிந்துணர்வு ஒப்பந்தம் கையெழுத்தானது**

இஸ்ரேல் நாட்டைச் சேர்ந்த, பன்னாட்டு நிறுவனமான அலையன்ஸ் டயர்ஸ் நிறுவனம், பல்வேறு வகை டயர்களை மேம்படுத்தித் தயாரித்து வருவதில் 50 ஆண்டுகளுக்கும் மேலாக நிறைந்த அனுபவம் பெற்றுள்ள ஒரு முன்னணி நிறுவனமாகும். இந்நிறுவனத்தின் நிருவாகத்தை மேற்கொண்டுள்ள யோகேஷ் ஏஜென்சீஸ் மற்றும் முதலீடுகள் நிறுவனமும், நிதியமைப்பு மற்றும் தனியார் பங்குகளைப் பெறுவதில் உலகளவில் தலைசிறந்து விளங்கும் அமெரிக்காவைச் சேர்ந்த வார்பெர்க் பிங்கஸ் நிறுவனமும் இணைந்து ஏ.டி.சி டயர்ஸ் பிரைவேட் லிமிடெட் என்ற ஒரு புதிய தொழில் நிறுவனத்தை உருவாக்கியுள்ளன. இந்தப் புதிய தொழில் நிறுவனமாகிய ஏ.டி.சி. டயர்ஸ் நிறுவனம் திருநெல்வேலி மாவட்டம், கங்கை கொண்டான் சிப்காட் தொழிற்பூங்காவில் டயர் தயாரிப்புத் தொழிற்சாலை ஒன்றினை அமைத்திட முடிவு செய்துள்ளது.

ஏ.டி.சி டயர்ஸ் நிறுவனம், 3 ஆண்டுக் காலத்தில் 300 கோடி ரூபாய் அளவுக்கும், அடுத்த இரண்டு ஆண்டுகளில் மேலும் 100 கோடி ரூபாய் அளவுக்கும் ஆக மொத்தம் 400 கோடி ரூபாய் அளவுக்கு முதலீடுகள் செய்யும். 1,000 பேருக்கு நேரடியாகவும், 800 பேருக்கு மறைமுகமாகவும் வேலை வாய்ப்புகளை வழங்கும். இத்தொழிற்சாலை, திருநெல்வேலி மாவட்டத்தில் அமைக்கப்படுவதால், இது அரசின் முன்னுரிமை அடிப்படையில் தென்மாவட்டங்களில் இதர தொழில் முதலீட்டாளர்கள் பலருக்கும் தங்கள் தொழிற்சாலைகளை அப்பகுதியில் தொடங்கிட ஊக்கம் அளித்திடும்.

இந்தப் புதிய டயர் தொழிற்சாலையை அமைப்பதற்காக, மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்களின் முன்னிலையில் 30.6.2006 அன்று நடைபெற்ற புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் தமிழக அரசின் சார்பில் தொழில்துறைச் செயலாளர், திரு. எம். எப். ஃபரூக்கி, இ.ஆ.ப., ஏ.டி.சி டயர்ஸ் நிறுவனம் சார்பில் அந்நிறுவனத்தின் தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குநர் திரு.அசோக் மஹன் சாரியா ஆகியோர் கையெழுத்திட்டனர்.

இந்நிகழ்வின் போது தலைமைச் செயலாளர் திரு.எல். கே. திரிபாதி, இ.ஆ.ப., நிதித்துறைச் செயலாளர் திரு.கு. ஞானதேசிகன் இ.ஆ.ப. மற்றும் ஏ.டி.சி டயர்ஸ் நிறுவனத்தின் மூத்த அலுவலர்கள் ஆகியோர் உடனிருந்தனர். ★

# ஏழைப் பெண்களின் திருமணத்தை நடத்தி வைக்கும் கலைஞர் அரசின் திருமண நிதியுதவித் திட்டங்கள்

## பெரம்பலூர் மாவட்டம்

**மா**ண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் முதலமைச்சராகப் பொறுப்பேற்ற இந்த இரண்டாண்டுக் காலத்தில் பெரம்பலூர் மாவட்டத்தில் எண்ணற்ற பல திட்டங்கள் வெற்றிகரமாக செயல்படுத்தப்பட்டு வருகின்றன. அவற்றுள் சமூகநலத்துறை மூலம் கடந்த இரண்டாண்டுகளில்


மூக்கன் குடும்பத்தினர்

4 ஆயிரத்து 353 பெண்களுக்கு ரூ. 4 கோடியே 50 லட்சத்து 24 ஆயிரம் மதிப்பில் பல்வேறு உதவிகள் வழங்கப்பட்டுள்ளன. இவற்றுள், மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் நினைவுத் திருமண நிதிஉதவித் திட்டத்தின்கீழ் 2,784 பெண்களுக்கு ரூ. 4,17,60,000/–மதிப்பிலும், அஞ்சுகம் அம்மையார் நினைவுக் கலப்புத் திருமண நிதிஉதவித் திட்டத்தின்கீழ் 103 பெண்களுக்கு ரூ.17,50,000/–மதிப்பிலும், ஈ.வெ.ரா. மணியம்மையார் நினைவு விதவை மகள் திருமண நிதிஉதவித்திட்டத்தின்கீழ் 88 பெண்களுக்கு ரூ. 9,75,000/– மதிப்பிலும், டாக்டர் தர்மாம்பாள் அம்மையார் நினைவு விதவை மறுமண நிதிஉதவித்திட்டத்தின்கீழ் 26 பெண்களுக்கு ரூ. 2,70,000/–மதிப்பிலும், அன்னை தெரசா ஆதரவற்ற பெண்கள் திருமண நிதிஉதவித்திட்டத்தின்கீழ் 12 பெண்களுக்கு ரூ. 1,35,000/– மதிப்பிலும், ஏழை விதவை தாய்மார்களின் குழந்தைகளுக்கு இலவசப் பாடநூல் வழங்கும் திட்டத்தின்கீழ் 1,340 குழந்தைகளுக்கு ரூ. 1,34,000/–மதிப்பிலும் நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டுள்ளன.

மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் திருமண நிதிஉதவித் திட்டத்தின் மூலம் பயனடைந்த செங்குனம் கிராமத்தைச் சேர்ந்த மூக்கன் குடும்பத்தைச் சந்தித்தபோது அவர் தெரிவித்ததாவது,"நான், என் மனைவி, மகன் மூவரும் விவசாயக் கூலிகளாகப் பிழைப்பை நடத்திவருகிறோம். எங்கள் குடும்பம் ஏழ்மை நிலையில் உள்ளதால் எங்கள் மகளை 12–ஆம் வகுப்புவரை மட்டுமே படிக்கவைக்க முடிந்தது. வயிற்றுக்கும் வாய்க்குமே நாங்கள் சம்பாதிக்கும் பணம் சரியாக இருந்ததால் எங்கள் மகளுக்கு எப்படி திருமணம் செய்யப்போகிறோம் என்ற மன வேதனையில் இருந்துவந்தோம். அந்த நேரத்தில்தான் அக்கம்பக்கத்தில் உள்ளவர்கள் எங்களிடம் மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் திருமண நிதியுதவித் திட்டத்தைப்பற்றிக் கூறினார்கள். அதன்படியே நாங்களும் மனு எழுதிக் கொடுத்தோம், அதன் பயனாக அரசிடமிருந்து எங்கள் மகளின் திருமணத்திற்கு ரூபாய் 15 ஆயிரம் பணம் கிடைத்தது, அது எங்கள் மகளின் திருமணச் சுமையைக் குறைக்க பேருதவியாக இருந்தது. இப்பொழுது நாங்கள் அனைவரும் மகிழ்ச்சியாக உள்ளோம். எங்கள் மகிழ்ச்சிக்கு முழு காரணமாக விளங்கும் மாண்புமிகு தமிழக முதல்வர் கலைஞர் அவர்களுக்கு எங்களது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம்''என்றனர்.

ஈ.வெ.ரா. மணியம்மையார் நினைவு விதவை மகள் திருமண நிதிஉதவித் திட்டத்தின்மூலம் பயனடைந்த அனுக்கூர் குடிகாடு கிராமத்தைச் சேர்ந்த ஆண்டாள் கூறுகையில், "நான் ஏழைக் குடும்பத்தைச் சேர்ந்தவள். எனக்கு மூன்று பெண் பிள்ளைகள் உள்ளனர். என் கணவர் சவுதிஅரேபியாவில் கூலித்தெழிலாளியாக வேலை செய்தபோது விபத்தில் மரணமடைந்துவிட்டார். அவர் உயிருடன் இருந்தபோதே என் முதல் மகளுக்கும் இரண்டாவது மகளுக்கும் திருமணம் செய்து முடித்துவிட்டேன். ஆனால் என் கணவர் மரணமடைந்த பிறகு, மூன்றாவது மகளை எப்படி கரை சேர்க்கப் போகிறோம் என்ற மனவேதனையில் ஒவ்வொருநாளும் தவித்துவந்தேன். அந்த நேரத்தில் என் தோழி ஒருவர் மூலம் ஈ.வெ.ரா. மணியம்மையார் நினைவு விதவை மகள் திருமண நிதிஉதவித் திட்டத்தைப்பற்றித் தெரிந்து கொண்டு மனுச்செய்தேன், பணமும் கிடைத்தது. என் மூன்றாவது மகளின் திருமணமும் நல்லபடியாக முடிந்துவிட்டது. என் கணவர் இறந்த பிறகு என் மகளின் திருமணத்தை நடத்த வழி தெரியாமல் தவித்த நேரத்தில் இந்தத் திட்டத்தின் மூலம் எனது பெண்ணின் திருமணம் நடைபெற உதவித்தொகை வழங்கிய மாண்புமிகு தமிழக முதலமைச்சர் கலைஞர் அவர்களுக்கு எனது கோடி நன்றிகள்''.

இவ்வாறு பல பிரச்சினைகளால் தவித்து வரும் மக்களின் துன்பங்களை எண்ணற்ற பல சிறப்புத் திட்டங்களின் மூலம் துடைத்தெறியும் மாண்புமிகு தமிழக முதல்வர் கலைஞர் அவர்கள் மக்கள் மனதில் நீங்கா இடம் பெற்றுள்ளார் என்பதில் ஐயமில்லை.

தொகுப்பு:
த. மருதபிள்ளை,
செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்,
பெரம்பலூர்

★ ★ ★



# சேலம் பெரியார் பல்கலைக்கழகத்தில் முத்தமிழறிஞர் தமிழவேள் கலைஞர் மு. கருணாநிதி ஆய்வு மையம் துவக்கம்





**சே**லம் பெரியார் பல்கலைக்கழகத்தில் முத்தமிழறிஞர் தமிழவேள் கலைஞர் மு. கருணாநிதி ஆய்வு மையத் தொடக்கவிழா மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம் அவர்கள் தலைமையில் 18.5.2008 அன்று நடைபெற்றது. இதில் மாண்புமிகு நிதி அமைச்சர் பேராசிரியர் திரு. க. அன்பழகன் அவர்கள் கலந்து கொண்டு கலைஞர் ஆய்வு மையத்தையும் ரூ.3.38 கோடி மதிப்பில் கட்டி முடிக்கப்பட்ட கலைஞர் மு.கருணாநிதி கலையரங்கம், ரூ. 1.33 கோடி மதிப்பில் மாணவர் பயன்பாட்டு மையம், ரூ.1.95 கோடி மதிப்பில் பேரறிஞர் அண்ணா வளாகம் (தேர்வாணையர் அலுவலகம்) ரூ.5.1 கோடி மதிப்பில் அறிவியல் கட்டடம் 1 மற்றும் 2, ரூ. 96.30 லட்சம் மதிப்பில் அமைக்கப்பட்டுள்ள விளையாட்டுத் திடல் ஆகியவற்றைத் திறந்து வைத்து மாண்புமிகு நிதி அமைச்சர் பேராசிரியர் க.அன்பழகன் அவர்கள் விழாப்பேருரையாற்றினார். அப்பொழுது அவர் குறிப்பிட்டதாவது :-

இப்பல்கலைக்கழகம் தந்தை பெரியார் பெயரால் அமைந்துள்ளது சிறப்பு வாய்ந்த ஒன்று. பெரியார் இந்நாட்டிற்கு பெரிய எழுச்சி ஆற்றலை உருவாக்கியவர். பெரியார் இல்லையென்றால் தமிழ் நாட்டு மக்கள் இந்த நிலைக்கு உயர்ந்திருக்கமுடியாது. அவரால்தான் தமிழகம் இன்று தலைநிமிர்ந்து நிற்கிறது. பெரியாரின் கருத்து இல்லாவிட்டால் மக்களிடையே அண்ணாவோ, கலைஞரோ இந்த அளவிற்கு பெயர் பெற்றிருக்கமுடியாது. தமிழ்நாட்டின் வரலாற்றை எடுத்துக் கொண்டால் பெரியார், அண்ணா, கலைஞர் ஆகியோரின் வரலாறுதான் தமிழக வரலாறாக உள்ளது. பெரியார் தமிழக மக்களுக்கு உணர்வை ஊட்டியவர், அண்ணா அறிவை வளர்த்தவர், அறிவால் ஆட்சி பீடத்தில் அமர்ந்து அரும் பணி ஆற்றிவருபவர் டாக்டர் கலைஞர்.

இந்த விழாவில் முத்தமிழறிஞர் கலைஞர் பெயரால் அமைக்கப்பட்ட ஆய்வு மையம் திறந்துவைக்கப்பட்டுள்ளது. தமிழக முதல்வர் கட்சித் தலைவராக மட்டுமல்ல, சுயமரியாதை வீரராக மட்டுமல்ல, போராட்ட வீரராக மட்டுமல்ல, கலைஞர் கருணாநிதி ஒரு மிகப்பெரிய சிந்தனையாளர், எழுத்தாளர், கவிஞர், புதினங்கள் உருவாக்குபவர், காவியங்கள் புனைபவர், சமுதாய மறுமலர்ச்சிக்கு கலைப்பணிகள் மேற்கொண்டவராக திகழ்கிறார். நான் அறிந்தவரை இந்த 20ம் நூற்றாண்டில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் கலைஞர் மு. கருணாநிதி அவர்களுக்கு இணையாக ஒரு எழுத்தாளராக, கவிஞராக, சிந்தனையாளராக, தமிழறிஞர்கள் யாரும் இல்லை. சட்டசபையில் 50 ஆண்டுகாலம் பணியாற்றியுள்ளார்.

அவரது சட்டசபை உரையை பார்த்தாலே தமிழகத்தின் 50 ஆண்டுகால வரலாற்றை தெரிந்துக் கொள்ளலாம். தமிழக வரலாற்றுடன் இரண்டறக்கலந்த கருணாநிதியின் படைப்புகளை, அவரது அறிவு, புலமை, கற்பனைத்திறன் ஆகியவற்றால்

உருவான படைப்புகளை ஆய்வு செய்ய முதன் முதலாக இவ்வாய்வு மையம் தொடங்கப் படுவது சேலம் பல்கலைக்கழகத்திற்கும் சேலம் மாவட்டத்திற்கும் மிகப்பெருமை வாய்ந்தது.

உலகப் புகழ்பெற்ற திருக்குறள் தந்த அய்யன் திருவள்ளுவருக்கு வள்ளுவர் கோட்டம், குமரிமுனையில் 133அடி உயரத்தில் திருவள்ளுவர் சிலை அமைத்தவர். திருக்குறளுக்கு உரை எழுதி, குறள் ஓவியம்படைத்தவர். அவர் எழுதிய கடிதங்கள் கூட இலக்கியமாக ஆகிவிடுகிறது. சங்க இலக்கியத்தை வழங்கினார். அவர் அரசியலில் ஆற்றியபணிகளை விளக்கும் "நெஞ்சுக்கு நீதி'' என்னும் நூல் தமிழர்கள் ஏற்றுக் கொள்ள வேண்டிய ஒன்று. இவை அனைத்தையும் இப்பல்கலைக்கழகத்தில் அமைக்கப்பட்டுள்ள ஆய்வு மையம் ஆய்வு செய்வது மகிழ்ச்சி அளிக்கிறது.

பல்கலைக்கழகங்கள் பெருகுவது அறிவு வளர்ச்சிக்கு ஒரு சான்று. பல்கலைக்கழகங்கள் அதிகரித்தால்தான் அடித்தட்டு மக்கள், பின் தங்கிய மக்கள், கல்வி வளர்ச்சியில் முன்னேற முடியும். மக்களின் கல்வி வளர்ச்சிக்கு உதவியாக அமையும்.

இன்றைய தலைமுறையினர் தெளிவாக சிந்திக்க கற்றுத் தரும் கலை மற்றும் இலக்கியத்திலும் முன்னேற வேண்டும்.

மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம் அவர்கள் பேசியதாவது:-

தலைவர் கலைஞர் பெயரில் ஏன் ஆய்வு மையம் தொடங்க வேண்டும்? என்று சிந்தித்துப் பார்த்தால் – தமிழகத்தில் 5 முறை முதலமைச்சராகப் பொறுப்பேற்கக் கூடிய வாய்ப்பு கிடைக்கும் என்று நினைத்து, பொது வாழ்க்கைக்குத் தலைவர் கலைஞர் அவர்கள் வரவில்லை. சின்னஞ்சிறு வயதில் அதாவது 13வது வயதிலேயே அவர் உள்ளத்தில் பெருக்கெடுத்து ஓடிய தமிழ் உணர்ச்சிதான் – தமிழ்மொழியைக் காக்க வேண்டும் – வளர்க்க வேண்டும் – வளப்படுத்த வேண்டும்– தமிழர்கள் வளமாக வாழவேண்டும் என்ற உணர்ச்சிதான் அவரைப் பொது வாழ்வில் ஈடுபட வைத்தது. இன்று அறிவு உலகின் சிகரத்தில் சிம்மாசனமிட்டு கலைஞர் அவர்களை அமர வைத்திருப்பதும் தமிழ் இன உணர்ச்சிதான்.

இந்திய நாட்டின் எல்லா மாநில முதலமைச்சர்களும் வியப்போடு கூர்ந்து நோக்கக் கூடிய ஆட்சி நிர்வாக மேலாண்மையில் ஒப்பற்றவராகவும் – சர்வதேச பொருளாதார வல்லுநர்களும் வியந்து பாராட்டும் மக்கள் நலத் திட்டங்களை, நிறைவேற்றும் செயல்திறன் மிக்கவராகவும், அகில இந்திய அரசியல் சீரான பாதையில் செல்வதற்கு வழிகாட்டக்கூடிய மூத்த அரசியல் தலைவராகவும் கலைஞர் விளங்குகிறார். எனவே, அவருடைய படைப்புகளும் சிந்தனைகளும் அவர் ஆற்றிய சமுதாய மேம்பாட்டுப் பணிகளும் உரியவாறு பதிவு செய்யப்பட வேண்டும்– ஆவணப் படுத்தப்பட வேண்டும் என்பதற்காகவே முத்தமிழறிஞர் தமிழவேள் கலைஞர் மு.கருணாநிதி ஆய்வு மையம் இன்று இங்கு தொடங்கப்படுகின்றது.

இன்று உலக அளவில் நானோ டெக்னாலஜி (Nano - Technology) என்று கூறப்படுகின்ற குறுபொருள் தொழில்நுட்பம் வெகுவிரைவாக வளர்ந்து வரும் துறையாக விளங்குகிறது. தமிழ்நாட்டில் பாரதியார் பல்கலைக்கழகமும், மதுரை காமராசர் பல்கலைக்கழகமும் குறுபொருள் தொழில் நுட்ப (Center for Nano Technology) ஆய்வு மையங்களைத் தொடங்கியுள்ளன. இப்பல்கலைக்கழகமும் அறிவியல் துறையின் அண்மைக்கால வளர்ச்சியாகிய குறுபொருள் தொழில்நுட்பம் குறித்த ஆய்வு மையம் (Center for Nano Technology) ஒன்றைத் தொடங்கத் திட்டமிட்டுள்ளது. இத்திட்டத்தைச் செயலாக்கும் முயற்சியில் பெரியார் பல்கலைக்கழகம் ஈடுபடுவதற்கு நமது மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தமிழக அரசின் மூலம் ரூ.1 கோடி வழங்கி உதவ வேண்டும் என்று இதையும் துணைவேந்தர் அவர்கள் என்னிடம் கோரிக்கை வைத்தார். இது பற்றியும் நானும் நமது இனமான பேராசிரியர் அவர்களும் முதலமைச்சரிடம் உங்கள் நியாயமான கோரிக்கையை வைத்து நல்ல முடிவு வழங்கப்படும் என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு மின்சாரதுறை அமைச்சர் திரு.ஆற்காடு நா.வீராசாமி அவர்கள் பேசியதாவது:-

மாணவர்கள் பயன்பெறத்தக்க வகையில் மின்னியல் பாடப்பிரிவை தொடங்க வேண்டும். அனல்மின்நிலையம், நீர்மின்நிலையம், காற்றாலை மூலம் மின் உற்பத்தி, சூரிய ஒளிமூலம் மின் உற்பத்தி, அணு உலை மூலம் மின் உற்பத்தி போன்றவை மூலம் மின்சாரம் உற்பத்தி செய்யப்படுகிறது. கூடங்குளம் அணுமின் நிலையத்தில் 2 ஆயிரம் மெகாவாட் மின்சாரம் தயாரிக்கத் திட்டமிடப்பட்டு பணிகள் நடந்து வருகிறது.

"நியூக்கிளியோர் பவர்'' என்ற மின் உற்பத்தியை ஜப்பானியர்கள் தயாரித்து இந்தியாவோடு ஒப்பிட முடியாத வகையில் வளர்ச்சி அடைந்து உள்ளது. சீனாவில் 8 லட்சம் மெகாவாட் மின் உற்பத்தி செய்யப்படுகிறது. நமது நாட்டில் 1 இலட்சத்து 60 ஆயிரம் மெகாவாட் மின்சாரம்தான் உற்பத்தி செய்யப்படுகிறது. 2வது ஐந்தாண்டு திட்டத்தில் மேலும் 1 இலட்சம் மின்சாரம் தயாரிக்க வேண்டும் என்ற பிரதமர் அறிவித்திருக்கிறார். அதன் அடிப்படையில் 40 ஆயிரம் மெகாவாட் மின்சாரம் தமிழகத்தில் தயாரிக்க திட்டமிடப்பட்டுள்ளது.

மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் திரு.துரைமுருகன் அவர்கள் பேசியதாவது :-

பெரியார் பல்கலைக்கழகம் இருக்கும் வரை கலைஞரின் ஆய்வு மையம் இருக்கும் என்று காலத்தால் அழியாத புகழை சேர்த்துள்ளார். இந்த ஆய்வுமையத்தில் முதலமைச்சரின் திரைப்பட வசனம், சட்டப்பேரவை உரை, இலக்கியங்கள் என அனைத்தும் தொகுக்கப்பட வேண்டும். இதை ஆய்வு செய்தால் தமிழகத்தின் வரலாற்றை தெரிந்து கொள்ள முடியும்.

---

*தொகுப்பு :*

தா. மனோகரன், செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், சேலம்



# இமை சோராமல் உழைப்பவர்- இளம் சிறுவர்களின் இதயம் காத்து இன்பம் காணும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் கலைஞர் அவர்கள்

## திண்டுக்கல் மாவட்ட இளஞ்சிறாரகள் நன்றி!

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் தமிழக முதலமைச்சராக ஆட்சிப் பொறுப்பேற்கும் போதெல்லாம் "அகில இந்தியாவிற்கே வழிகாட்டியாக ஏழை–எளிய மக்கள் நலன் பெற எண்ணற்ற திட்டங்களை அறிவித்து செயல்படுத்தி வருகின்றார்''.



மருத்துவ வசதிகள் அனைத்தும் ஏழை–எளிய மக்கள் வாழும் இடத்திலேயே கிடைக்க வேண்டும் என்கிற உயரிய எண்ணத்தில் வருமுன் காப்போம் முகாம் மூலம் இலவசமாகப் பரிசோதனைகள் நடத்தி அவர்களின் நலன்களை காத்துவருகின்றார்.

"உலகம் இயந்திரமாகிக் கொண்டிருக்கின்ற நிலையில் உள்ளங்களும் இயந்திரமாகிவிட்டால் அங்கே உருகி அழுகின்ற கண்களையும், உவகையால் சிரிக்கின்ற உதடுகளையும் காண முடியாது என்றார் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்கள்''. பள்ளிக் குழந்தைகளிடையே காணப்படும் இருதயக் குறைபாடுகளை ஆரம்ப நிலையிலேயே கண்டறிந்து சிகிச்சை அளிக்கும் வகையில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் பிறந்த நாள் 03.06.2008 முதல் மாண்புமிகு முதல்வர் இளஞ்சிறார் இருதயப் பாதுகாப்புத் திட்டம் தொடங்கப்பட்டது.

திண்டுக்கல் மாவட்டத்தில் இளம் சிறுவர்–சிறுமியருக்கு முன் பரிசோதனை செய்து கொண்டதில் 294 பேர் இதய நோயாளிகளாகக் கண்டறியப்பட்டு முன்னணி தனியார் மருத்துவமனையின் சிறந்த இருதய சிகிச்சை மருத்துவர்களைக் கொண்ட நிபுணர்கள் குழுவால் பரிசோதிக்கப்பட்டு 161 சிறுவர்–சிறுமியருக்கு உடனடியாக அறுவைச் சிகிச்சை தேவை என கண்டறியப்பட்டு இதற்கான செலவினை அதாவது சிறிய அளவில் அறுவைச் சிகிச்சைக்கு ரூ.10,000, இதய ஓட்டை அடைப்பது போன்ற அறுவைச் சிகிச்சைக்கு ரூ.30,000, திறந்த இருதய அறுவைச் சிகிச்சைக்கு ரூ.70,000 என அதிகபட்ச அளவு நிதியை தமிழக அரசே ஏற்றுக் கொள்கிறது. இதற்காக மாவட்ட நிர்வாகத்திற்கு முதற்கட்டமாக ரூ.20 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு ரூ.4.76 இலட்சம் நிதி பெறப்பட்டுள்ளது. இத்தொகை சம்பந்தப்பட்ட மருத்துவமனைகளுக்கு அறுவைச் சிகிச்சைக்கென பிரித்து வழங்கப்பட உள்ளது.

இத்திட்டம் குறித்து திண்டுக்கல் அங்குவிலாஸ் இறக்கத்தில் காந்திஜி புதுரோட்டைச் சேர்ந்த கீதாலெட்சுமி கூறுகையில், "என் மகள் பாண்டிமீனா (வயது 20) தள்ளுவண்டி பழ வியாபாரம் செய்யும் சேதுராஜுக்குத் திருமணம் செய்து தந்து ஒரு பெண் குழந்தை பிறந்து. உடல்நிலை சரியில்லாமல் இருந்தது. டாக்டர்கிட்ட காட்டனப்ப என்னுடைய பேத்திக்கு இதயத்தில் ஓட்டை இருக்குதுனு சொன்னாங்க. ரொம்ப அதிர்ச்சியாக இருந்தது. அதன் பிறகு என் மகளுக்கும் உடல்நிலை சரியில்லாமல் போயிடுச்சு. அதுக்கு மருத்துவப் பரிசோதனை செய்தப்ப இதயத்துல

கோளாறு வால்வுல ஓட்டைன்னு சொன்னாங்க. சரியான நேரத்தில் கவனிக்காததால் சிகிச்சை செய்ய வசதி இல்லாமல் என் மகள் இறந்து விட்டாள். இப்ப பேத்திக்கும் இந்த நிலைமைன்னா எங்களோட இதயமே வெடிச்சிற மாதிரி இருக்கு. என் மருமகன் சேதுராஜ் தள்ளுவண்டியில பழவியாபாரம் செய்து நாள்தோறும் ரூ.80, 100ன்னு கொண்டுவந்து தருவார். அதைவச்சி குடும்பம் நடத்தறதே பெரிசு. என்னுடைய பேத்தி தர்சினிக்கு இப்ப 4வயது ஆகறது. சோபியா பள்ளியில் எல்.கே.ஜி. படிக்குது. கலைஞர் அய்யா சின்னக் குழந்தைகளுக்கு இலவசமா இதய சிகிச்சை செய்ய ஏற்பாடு செய்திருக்காருனு பேப்பர்ல படிச்சேன். என்னுடைய பேத்தியைக் கொண்டு வந்து டாக்டர்கிட்ட காமிச்சேன். அறுவை சிகிச்சை செய்யனும்னு சொல்லி மதுரைக்கு கூட்டிட்டு வரச்சொல்லியிருக்காங்க. இதற்கான எல்லாசெலவையும் அரசாங்கமே செய்யுதுனு சொன்னாங்க. எங்களுக்கு இப்ப பாதி தெம்பு வந்த மாதிரி இருக்குது. இந்த மாதிரியான ஒரு திட்டம் முன்பே இருந்திருந்தால் நான் பெத்த என் பொண்ண எப்படியும் காப்பாத்திருப்போம், இழந்திருக்க மாட்டோம். ஆனால் இப்ப என் பேத்தியையாவது காப்பத்த முடியும்னு நம்பிக்கை வந்திருக்கு. கலைஞர் அய்யா தெய்வம் மாதிரி. அவரு நீண்ட ஆயுசோட இருக்கனும், எங்கள மாதிரி எழை மக்களுக்கு அவரு செய்யற உதவிய நாங்க மறக்கவே மாட்டோம்'' என்று கண்ணீர் மல்க கூறினார்.

அசனாத்புரம் ஜின்னாத் தெருவைச் சேர்ந்த பரிதா கூறுகையில், ''என்னுடைய மகள் சையது அலிபாத்திமா திண்டுக்கல் சவேரியார் பள்ளியில் 7–ஆவது படிக்குது. குழந்தையாக இருந்த போதே இதயத்துல ஏதோ வால்வு கோளாறுனு சொன்னாங்க. எங்க வீட்டுக்காரர் உப்புத்தோல் தேய்ச்சி வேலை பார்த்து ரூ.50, 100னு சம்பளம் கொண்டு வருவாங்க. குடும்பம் நடத்தறதே கஷ்டம். மதுரை பெரியாஸ்பத்திரிக்கு கூட்டிட்டு போய்க் காட்டச் சொன்னாங்க. போக வர பஸ் செலவு செய்யறது கஷ்டம்னு மாத்திரைகள் மொத்தமாக வாங்கிட்டு வந்து வச்சுகிட்டு கொடுப்போம். பிள்ளைய காப்பாத்த முடியாமா போயிறுமோனு தினமும் நாங்க அழுகற அழுகைய சொல்லவே வார்த்தையில்ல. நிம்மதியில்லாத தூக்கம் கஷ்டப்பட்டு சம்பாதிக்கறதே பிள்ளைக்காகத்தான். அந்தப் பிள்ளை நோயால தவிக்க விட்டுட்டு எப்படிங்க கால் வயிறு சாப்பாடும் நிம்மதியா சாப்பிட முடியும். மழைக்குகூட தனியார் ஆஸ்பத்திரி பக்கம் ஒதுங்க முடியாத அளவுக்கு வறுமை. இலட்சக்கணக்குல செலவு பண்ணியல்லாம் வைத்தியம் பார்ப்பது என்பது கனவுல கூட நாங்க நினைக்க முடியாது. பள்ளிகூடத்துல சொன்னாங்க. இலவசமாக சிகிச்சை தர கலைஞர் அய்யா சொல்லியிருக்காங்கனு. இப்ப வந்து பரிசோதனை செய்துட்டு, திறந்த இருதய அறுவை சிகிச்சை செய்யனும்னு சொல்லி மதுரை கூட்டிட்டு வர சொல்லியிருக்காங்க. எல்லாச் செலவையும் அரசாங்கமே பார்த்துக்குவாங்கனு சொன்னாங்க. கலைஞர் அய்யாவுக்கு கண்ணீர் மல்க நன்றி சொல்றோம். இவர் இந்த மாதிரி திட்டம் கொண்டு வந்ததைப் பார்க்கறப்ப நாங்க கால காலத்துக்கும், என்றென்றும் நன்றி கடன் உள்ளவர்களாக இருப்போம்''.

இத்திட்டம் குறித்து மதுரை மீனாட்சி மிஷன் மருத்துவமனையின் மருத்துவர் சம்பத்குமார் (சீனியர் கண்சல்டன்ட்–இருதய நோய் அறுவைச் சிகிச்சை நிபுணர்) கூறுகையில், ''பணம் இருப்பவர்கள் எப்படியும் பணம் கொடுத்து சிகிச்சை செய்துருவாங்க. ஆனால் இன்றைக்கு இவ்வளவு சிறுவர், சிறுமியருக்கு பரிசோதனை செய்யும் போது எவ்வளவு பேர் வசதியில்லாமல் தகுந்த சிகிச்சை பெறாமல், ஆரம்ப கட்டத்தில் சரி செய்யக்கூடிய நோயைக் கூட முற்றவிட்டு வந்துள்ளார்கள் எனும்போது மனசு ரொம்ம பாதிப்பாக இருக்கிறது. உண்மையிலேயே மிகவும் மன ஒத்துழைப்போடும், சந்தோஷமாக, மன நிறைவாக நாங்கள் இந்தப் பணியை மேற்கொள்கிறோம். தமிழக அரசு கொண்டு வந்த இந்தத் திட்டம் உண்மையிலேயே பாராட்டுக்குரியது'' என்றார்.

முன்பெல்லாம் இருதய அறுவைச் சிகிச்சைக்கு அரசு மருத்துவமனைகளில் மேற்கொள்ளும்போது ஏற்படும் காலதாமதம் தவிர்க்கப்பட்டு தற்போது தனியார் மருத்துவமனைகளுக்குப் பரிந்துரை செய்யப்படுவதன் மூலம் உயிரிழப்பு தவிர்ப்பதோடு 2 மாதத்திற்குள்ளாகவே அறுவைச் சிகிச்சை செய்து முடித்துவிட முடியும்.

''துன்பத்திற்காக இரங்குதல் மனித இயல்பு
அதை நீக்குதல் தெய்வ இயல்பு என்பார்கள்''.

அத்தகைய இயல்பைப் பெற்ற மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் கலைஞர் அவர்களால் எண்ணற்ற நலத்திட்டங்கள் மக்கள் மனம் கவரும் வகையில் செயல்பட்டு வருகிறது என்றாலும் இளஞ்சிறார் இதயப் பாதுகாப்புத் திட்டத்திற்கு தன் குழந்தைகளை அழைத்து வரும் பெற்றோர்களின் இருண்டு கிடந்த சோகம் மறைந்து தங்கள் குழந்தைகளை காப்பாற்றிட முடியும் என்ற நம்பிக்கை ஒளிவீசுவதை காணமுடிந்தது. கள்ளம் கபடமற்ற இளஞ்சிறார்களின் முகத்தில் கலைஞர்தான் எங்களைக் காப்பாற்றி வருகின்றார். அவர்தான் எங்கள் உண்மையான தாத்தா என்று மகிழ்ச்சி பொங்க கூறுவதை கேட்கும் போது

''இடும்பைக்கே கொள்கலம் கொல்லோ
குடும்பத்தைக் குற்ற மறைப்பான் உடம்பு''.

தன்னைச் சார்ந்துள்ள குடிகளுக்குத் துன்பம் வராமல் தடுத்துத் தொடர்ந்து அக்குடிகளைக் காப்பாற்ற முயலுகிற ஒருவன், துன்பத்தைத் தாங்கிக் கொள்ளவே பிறந்தவனாகப் போற்றப்படுவான் என வள்ளுவன் வாக்கிற்கேற்ப ஆட்சி நடத்தி மழலைகள் முதல் முதியோர் வரை அனைவரது நலன் காக்கும் மாபெரும் தலைவராக மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் திகழ்கின்றார்.

தொகுப்பு:
டி.எஸ். சுப்ரமணியம்,
செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்,
திண்டுக்கல்.

* * *



## மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை அமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்களுக்கு, புதிதாக பணி நியமனம் பெற்ற 543 பணி மேற்பார்வையாளர்கள் நேரில் நன்றி தெரிவித்தனர்



**ஊ**ரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையின் மூலம் தமிழ்நாட்டில், சென்னையைத் தவிர இதர அனைத்து மாவட்டங்களிலும் தமிழ்நாடு தேசிய ஊரக வேலை உறுதித் திட்டம் செயல்படுத்தப்படுவதையொட்டி இத்துறையில் புதிதாகத் தோற்றுவிக்கப்பட்டுள்ள 673 பணி மேற்பார்வையாளர் பணியிடங்களில், 543 இடங்களைப் பொறுத்து பணி நியமனம் பெற்றுள்ள பல்வேறு மாவட்டங்களைச் சேர்ந்த 543 பணி மேற்பார்வையாளர்கள், மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை அமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்களைத் தலைமைச் செயலகத்தில் 12.7.2008 அன்று நேரில் சந்தித்து தங்களுக்குப் பணி நியமனம் வழங்கியதற்கு நன்றி தெரிவித்தனர்.

எவ்வித பாரபட்சமோ, பரிந்துரையோ இன்றி வேலைவாய்ப்பக பதிவு மூப்பு அடிப்படையில் பணி மேற்பார்வையாளராக நியமனம் பெற்றுள்ள ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையின் பொறியியல் பிரிவு அலுவலர்களான இவர்கள் அனைவரும் அப்பழுக்கின்றி சிறந்த முறையில் பணிபுரிய வேண்டுமென்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்.

அரசுப் பணியிடங்களில் காலியாகும் பணியிடங்களை நிரப்பிட விதிக்கப்பட்டிருந்த தடை இந்த அரசு பொறுப்பேற்றபின் நீக்கப்பட்டது. அதன் அடிப்படையில் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையில் காலியாக இருந்த பணியிடங்களை நிரப்பிட துரிதமாக நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன. அரசுப் பணியிடங்கள் மற்றும் மக்கள் நலப் பணியாளர் பணியிடம் உட்பட இத்துறையில் மே,2006இல் காலியாக இருந்த 17,819 பணியிடங்களில் 16,418 பணியிடங்கள் இதுவரை நிரப்பப்பட்டுள்ளன. எஞ்சியுள்ள பணி இடங்களையும் தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் மூலம் நிரப்பிட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

ஊரக வளர்ச்சித் துறையில் பல நிலையிலான காலிப் பணியிடங்கள் அனைத்தும் மிக விரைவாக நிரப்பப்பட்டுள்ளன என்றும், வளர்ச்சிப் பணிகளைத் துரிதமாக நிறைவேற்றவும், ஊராட்சி நிருவாகத்தைச் செம்மையாக நடைமுறைப்படுத்தவும், இது பெரிதும் உதவியுள்ளது என்றும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்.

காலிப் பணியிடங்களை நிரப்பியது மட்டுமல்லாமல் புதிதாக 32 பொறியியல் உபகோட்டங்கள் தோற்றுவிக்கப் பட்டு உதவி செயற் பொறியாளர் பணியிடங்களும், அதேபோல் 673 பணிமேற்பார்வையாளர் பணியிடம் தோற்றுவிக்கப்பட்டு, அதில் இதுவரை 543 பணியிடங்களுக்கும் அலுவலர்கள் நியமிக்கப் பட்டுள்ளனர் என்றும் மாண்புமிகு அமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்கள் தெரிவித்தார்.

இந்த நிகழ்ச்சியில், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையின் செயலர்/சிறப்பு ஆணையர் திரு.அஷோக்வர்தன் ஷெட்டி, இ.ஆ.ப., மற்றும் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி ஆணையர் திரு.ககன்தீப் சிங் பேடி, இ.ஆ.ப., ஆகியோரும் உடன் இருந்தனர். ★

# ஆண் வாரிசு இருந்தாலும், இல்லாவிட்டாலும் முதியோர் ஒய்வூதியத்தைப் பெறலாம்

மாண்புமிகு
தமிழ்நாடு முதலமைச்சர்
கலைஞர் அவர்கள்
ஆணை

முதியோர் ஓய்வூதியத் திட்டத்தின்கீழ், 65 வயது மற்றும் அதற்கு மேற்பட்ட ஆதரவற்றவர்களுக்கு மாதம் ஒன்றுக்கு 200 ரூபாய் ஓய்வூதியத் தொகையாக வழங்கப்பட்டு வந்ததை, இந்த அரசு பொறுப்பேற்ற பிறகு 400 ரூபாயாக 1.8.2008 முதல் உயர்த்தியது.

ஆண் வாரிசு இருந்தால் இந்த ஒய்வூதியத் தொகையினைப் பெறுவதற்குத் தகுதி இல்லை என்ற நிலையை மாற்றி, ஆண் வாரிசு இருந்தாலும், இல்லாவிட்டாலும், தகுதியுடையவர்களுக்கு முதியோர் ஓய்வூதியத் தொகையினை வழங்கிட வேண்டுமென்று சட்டப்பேரவையில் எதிர்க்கட்சி உறுப்பினர்கள் கோரிக்கை வைத்தனர். அந்தக் கோரிக்கையினை ஏற்று, ஆண் வாரிசு இருந்தாலும் இல்லாவிட்டாலும், வறுமைக்கோட்டிற்குக் கீழே உள்ள 65 மற்றும் அதற்கு மேற்பட்ட வயதுடையவர்களுக்கு முதியோர் ஓய்வூதியத் தொகையினை வழங்கலாம் என்று மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் 5.6.2008 அன்று ஆணையிட்டுள்ளார்.


TNSC BANK

# 100 ஆண்டுகளைக் கடந்து மக்கள் சேவையில்

## TNSC வங்கி

**தமிழ்நாடு மாநிலத் தலைமைக் கூட்டுறவு வங்கி லிட்.,**

233, என்.எஸ்.சி.போஸ் ரோடு, த.பெ.எண்.226,
சென்னை - 600 001.
தொலைபேசி : 2534 0301, 2534 0304
தொலைநகல் : 044-2534 0508
மின்னஞ்சல் : tnscbank@vsnl.com

- தமிழ்நாட்டில் உள்ள அட்டவணையிடப்பட்ட ஒரே கூட்டுறவு வங்கி
- சென்னை நகரில் 46 கிளைகள்
- வைப்பீடுகளுக்கு அதிக வட்டி
- அனைத்துக் கிளைகளிலும் கணினி மூலம் துரித சேவை
- 5 கிளைகளில் ஏ.டி.எம். வசதி
- குறைந்த வட்டியில் நகைக்கடன்
- கூடுதல் சேவை நேரம்

வெளியீட்டு ஆணை எண்.1664/வரைகலை/விளம்பரம் 2007, நாள் : 11.10.2007 இணையதளம் : www.tnscbank.com





சென்னை – தமிழரசு அச்சகத்தில் வடிவமைக்கப்பட்டு அரசு மைய அச்சகம், சென்னை–600 079–ல் அச்சிடப்பட்டது.



# கோ-ஆப்டெக்ஸின் கோலாகலம்
# பருத்தி பட்டின் கோடி அழகு





**கோ-ஆப்டெக்ஸ்**
வழங்குகிறது
**20%**
அரசுத் தள்ளுபடி

குளிர்ச்சியான கோ-ஆப்டெக்ஸ் வண்ணங்களால் உங்கள் வாழ்வை இனிமையாக்குங்கள்.

கோ-ஆப்டெக்ஸின் கைத்தறி பட்டு, பருத்தி, ஆடைகளுக்கான துணிவகைகள் 20% அரசுத் தள்ளுபடியுடன்.

வாருங்கள்! வாங்கி மகிழுங்கள்!!

**புதிய வருகை**

"அழகு மயில்" பட்டுப் புடவைகள் "மருதம்" கலப்பிழை பட்டுப் புடவைகள் "கோலங்கள்" கலப்பிழை பட்டுப் புடவைகள்
"மாந்துளிர்" பருத்திப் புடவைகள் "மலையரசி" பருத்திப் புடவைகள் "நாச்சியார்" பருத்திப் புடவைகள் "திருவரங்கம்" பருத்திப் புடவைகள்
"மல்லிகை" பருத்திப் புடவைகள் "கிரி" பருத்திப் புடவைகள் "அரோமா" நறுமண சட்டைகள்

தலைமுறைகளாய் தொடரும் பந்தம் - கோ-ஆப்டெக்ஸ்

வெ.ஆ.எண்.219/வரைகலை/விளம்பரம்/2008 நாள் : 6.2.2008



# தமிழரசு

ஆகஸ்ட் - செப்டம்பர் 2008

விலை ரூ.20/-

மக்கள் தொடர்புத் துறையின் வெளியீடு



தமிழ்நாடு ஆவணக் காப்பகம்
27 மே 2009



## சுதந்திரத் திருநாள் விழா
## 15-08-2008

# தமிழரசு


செய்தி-மக்கள்தொடர்புத் துறையின் வெளியீடு

திருவள்ளுவர் ஆண்டு 2039

ஆடி-ஆவணி - புரட்டாசி

ஆகஸ்ட்-செப்டம்பர் 2008

மலர் : 40 இதழ் : 2 & 3


27 மே 2009

**ஆசிரியர் குழு**


ஆசிரியர் மற்றும் வெளியிடுபவர் :

முனைவர் **ஆ.சி.மோகன்தாஸ், இ.ஆ.ப.,**
இயக்குநர் மற்றும்
அலுவலால் அரசு கூடுதல் செயலாளர்
செய்தி-மக்கள் தொடர்புத்துறை

நிருவாக ஆசிரியர்

**துரை. தாமரைச்செல்வம்**
துணை இயக்குநர் (வெளியீடுகள்)

முதன்மை பொறுப்பாசிரியர்

**மு.ஸ்ரீநாகேஷ்**
உதவி இயக்குநர்

பொறுப்பாசிரியர்களான
செய்தி-மக்கள் தொடர்பு அலுவலர்கள்

**க. குமாரவேலு**
**டி.ஆர். ஜெயஸ்ரீ**
**ஆர்.சேகர்**

உதவி ஆசிரியர்கள்

**க. இராஜராஜேஸ்வரி**
**இரா. சுரேஷ்**
**வீ.இரா. நவநீதகிருஷ்ணகுமார்**
**இரா.இளவரசி**

நிருபர்கள்

**கோ. சண்முகம்**
**மாய குமரேசன்**

இதழ் உதவியாளர்கள்

**தி.பெரியார் சாக்ரடீசு**
**ஜெ. ஜெயசிம்ஹன்**

புகைப்படக்காரர்

**வி.இராதாகிருஷ்ணன்**

கணினி வடிவமைப்பு

**அ. மதன்**, உதவி ஒளியச்சுக்கோர்வையாளர்
**ஆர். பாலாஜி**
(ஒப்பந்த தொகுப்பூதிய கணினி இயக்குபவர்)



சென்னை - தமிழரசு அச்சகத்தில்
அச்சிடப்பட்டது.

தமிழரசு அலுவலகம்,
110.அண்ணாசாலை, சென்னை-600 002.
தொலைபேசி : 28520407/28520408
தொலைநகல் : 28520407
மின் அஞ்சல் : tamilarasu@tn.gov.in
இணையதளம் : www.tn.gov.in




**அன்புநாண் ஒப்புரவு கண்ணோட்டம் வாய்மையொ**
**டைந்துசால் பூன்றிய தூண்.**

அன்பு கொள்ளுதல், பழிபுரிந்திட நாணுதல்,
உலக ஒழுக்கம் போற்றுதல், இரக்கச் செயலாற்றுதல்,
வாய்மை கடைப்பிடித்தல் ஆகிய ஐந்தும்
சான்றாண்மையைத் தாங்கும் தூண்களாகும்.

**கலைஞர் திருக்குறள் உரையிலிருந்து...**



## இந்த இதழில்...


பேரறிஞர் அண்ணா அவர்களின் வாழ்க்கைக் குறிப்பு ............ 9

**மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்**
**கலைஞர் மு. கருணாநிதி அவர்களின் நிகழ்ச்சிகள்**

- தமிழக அரசு ஆக்கப்பூர்வமான பல செயல் திட்டங்களை நிறைவேற்றி வருகிறது ............ 2
- இதயத்தைத் தந்திடு அண்ணா ............ 17
- ஒரு ரூபாய்க்கு ஒரு கிலோ அரிசி அண்ணாவின் கனவு நிறைவேறியது ............ 30
- சின்னத்திரை இல்லாமல் பெரியதிரை இல்லை ............ 45
- விலைமதிப்பில்லா மனித உயிர்களைக் காக்கும் அவசர மருத்துவ ஊர்தி சேவைத் திட்டம் ............ 52
- மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை அமைச்சர் திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள் நாகப்பட்டினம் மாவட்டத்தில் ரூ.150 கோடி மதிப்பீட்டில் பல்வேறு திட்டப்பணிகளைத் தொடங்கி வைத்து 1,500 மகளிர் சுயஉதவிக் குழுக்களுக்கு ரூ.8.50 கோடி சுழல்நிதி மற்றும் கடனுதவிகளை வழங்கினார் ............ 61


### 4ஆம் பக்க அட்டை

பேரறிஞர் அண்ணா அவர்களின் நூற்றாண்டையொட்டி
தமிழக அரசின் ஒரு ரூபாய்க்கு ஒரு கிலோ அரிசி
வழங்கும் திட்டத்தை மாண்புமிகு முதலமைச்சர்
**கலைஞர் மு. கருணாநிதி** அவர்கள்,
சென்னையில் தொடங்கிவைத்தார். (15.09.2008)



# தமிழக அரசு ஆக்கப்பூர்வமான பல செயல் திட்டங்களை நிறைவேற்றி வருகிறது

61-ஆவது சுதந்திர தினத்தையொட்டி தமிழக அரசின் கோட்டைக் கொத்தளத்தில்
தேசியக்கொடியை ஏற்றி வைத்து
மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் **கலைஞர்** அவர்கள் ஆற்றிய உரை (15.8.2008)

**அ**ன்புக்குரிய பெரியோர்களே!

அருமைத் தாய்மார்களே!

என் உயிரினும் மேலான அன்பு உடன் பிறப்புகளே!

உங்கள் அனைவருக்கும், என் வணக்கமும் நல்வாழ்த்துகளும் உரித்தாகுக!

சுதந்திரத் திருநாளில் தேசியக் கொடியேற்றும் உரிமை, மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட மாநில முதலமைச்சர்களுக்கு வழங்கப்பட வேண்டுமெனக் குரல் கொடுத்து - அந்த உரிமை பெற்றுத் தந்தவன் என்ற உணர்வோடு, இந்தக் கொத்தளத்தில் 12ஆவது முறையாக இன்று சுதந்திரத் திருநாளில் தேசியக் கொடியை ஏற்றி வைத்து மகிழ்கிறேன்.

### தியாகமாமணிகளை தமிழக மக்கள் சார்பில் நன்றியுடன் நினைத்து போற்றி வணங்குகிறேன்

இக்கோட்டையின் எதிரில் திரளாகக் கூடியுள்ள, உங்களையெல்லாம் காணும் வேளையில்; இதே கோட்டை கொத்தளத்துக் கொடிமரம் ஏறி - ஆங்கிலேயர் கொடியை இறக்கி - நமது நாட்டுத் தேசியக் கொடியைப் பறக்கவிட முயன்று, கைதாகி - இன்று கிண்டி தியாகிகள் மணிமண்டப முகப்பில் நமது ஆட்சியில் சிலையாக வடிக்கப்பட்டிருக்கும் ஆர்யா என்ற பாஷ்யம் என்னும் வீரத்திருமகனை நினைவு கூர்கிறேன்.

நமது நாட்டை இந்தக் கோட்டையிலேயிருந்து ஆண்டு கொண்டிருந்த ஆங்கிலேயர்களை விரட்டிட - ஜெர்மனி நாட்டுக் கப்பல் படையில் சேர்ந்து - அந்நாட்டு எம்டன் கப்பலில்

அண்ணா 100



### அறிவும் ஆற்றலும்

**அ**றிவாலும், ஆற்றலாலும் ஆகாத காரியம் இல்லை; அறிவும், ஆற்றலும் சேர்ந்து உழைத்தால் வெற்றி நிச்சயமாகக் கிடைக்கும்.



சென்னைக்கு வந்து - இக்கோட்டையை நோக்கிக் குண்டுகளை வீசிய தீரன் செண்பகராமன் - என் சிந்தையில் நிழலாட - அண்மையில் 17.7.2008 அன்று அந்த மாவீரனைப் போற்றி - கிண்டி தியாகிகள் மணிமண்டபம் எதிரே அவரது முழு உருவ வெண்கலச் சிலையைத் திறந்து வைத்த நினைவோடு,

வெள்ளையரை எதிர்த்துப் போராடி தூக்குக் கயிறை முத்தமிட்ட வீரபாண்டிய கட்டபொம்மன்! தியாக வேங்கை சுந்தரலிங்கம்! மருதுபாண்டிய சகோதரர்கள்! தீரன் சின்னமலை! நெற்கட்டும் செவல் பூலித் தேவன்! சிவகங்கை வேலுநாச்சியார்! அரிமா நெஞ்சன் அழகுமுத்துக்கோன்! செக்கிழுத்துச் சித்திரவதைக்காளான கப்பலோட்டிய தமிழன் சிதம்பரனார்! கொடி காத்த குமரன்! வீரத்தியாகி விசுவநாத தாஸ்! விடுதலைப் போரில் வெள்ளையரை விரட்டிட "சத்தியாக்கிரகம்" என்னும் புதிய அறப்போர் முறை வகுத்தவராம் - அண்ணல் காந்தியடிகள் - அவர் புகழ்ந்த வீரத் தமிழ்மங்கை தில்லையாடி வள்ளியம்மை! பயமறியா இளைஞன் பகுத்தறிவுச் சிங்கம் பகத்சிங்! வீரப்போர் புரிந்த நேதாஜி சுபாஷ்சந்திரபோஸ் அவர்களின் அடியொற்றி முரசொலித்த தென்னகத் திருச்சுடர் முத்துராமலிங்கத் தேவர்! மூதறிஞர் இராஜாஜி! தந்தை பெரியார்! பெருந்தலைவர் காமராசர் உள்ளிட்ட தியாக சீலர்களையும், தேசியக் கவி பாரதியார், நாமக்கல்லார் போன்ற எண்ணற்ற தியாகமாமணிகளையும் தமிழக மக்கள் சார்பில் இன்று நன்றியுடன் நினைந்து போற்றி வணங்குகிறேன்.

1947, ஆகஸ்டு 15 - விடுதலை நாளை, வெள்ளையருடன் கணக்குத் தீர்த்த நாள் எனக் கொண்டாடிய நாம், இப்போது ஒவ்வொரு ஆண்டும் நமது சாதனைகளைக் கணக்குப் பார்க்கும் நாளாகக் கொண்டாடுகிறோம் எனக் குறிப்பிட்ட - பேரறிஞர் அண்ணா அவர்களின் நூற்றாண்டு விழா தொடங்குவது இந்த ஆண்டில்தான்.

சமூக நீதியுடன் இணைந்து தொடரும் வளர்ச்சியை உறுதி செய்தல்; மக்களின் வாழ்வாதாரங்களைப் பாதுகாத்தல்; கிராமப்புற, நகர்ப்புற மக்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்துதல் ஆகியவற்றை இந்தப் பதினோராவது ஐந்தாண்டுத் திட்டத்தின் முக்கியக் குறிக்கோள்களாகத் தமிழக அரசு ஏற்றுக் கொண்டுள்ளது.

இந்த குறிக்கோள்களை ஒட்டியே கடந்த இரண்டு ஆண்டுகளாகத் திராவிட முன்னேற்றக் கழக அரசு வேளாண் துறை, தொழில் துறை, நற்பணிகள் துறை (Services Sector) ஆகிய துறைகளில் விரைந்த வளர்ச்சியை ஊக்குவிக்கும் நோக்கோடு, ஆக்கபூர்வமான பல செயல்திட்டங்களை நிறைவேற்றி வருகிறது.

### தமிழ்நாட்டின் உணவு தானிய உற்பத்தி 100 இலட்சம் டன்களாக உயர்வு

தமிழ்நாட்டின் உணவு தானிய உற்பத்தி, 2006இல் 60 இலட்சம் டன்களாக இருந்த நிலை மாறி, 2008ஆம் ஆண்டில் 100 இலட்சம் டன்களாக உயர்ந்துள்ளது.

பதினோராவது ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் வேளாண் துறையின் வளர்ச்சி இலக்கு ஆண்டுக்கு 4 விழுக்காடு என்று நடுவண் அரசால் அறிவிக்கப்பட்டுள்ளது.

ஆனால், தமிழக அரசு விவசாயிகளுக்கு 7 ஆயிரம் கோடி ரூபாய் கூட்டுறவுக் கடன்களைத் தள்ளுபடி செய்து, கூட்டுறவு விவசாயக் கடன்களுக்கான வட்டி வீதத்தை 9 சதவீதத்தில் இருந்து 4 சதவீதமாகக் குறைத்து, 103 உழவர் சந்தைகளைப் புதுப்பிக்கவும், புதிதாக 50 உழவர் சந்தைகளைத் தொடங்கிடவும் ஊக்கமளித்து,

1 இலட்சத்து 61 ஆயிரத்து 329 நிலமற்ற ஏழை விவசாயத் தொழிலாளர்கள் - விவசாயிகள் குடும்பங்களுக்கு இலவச நிலம் வழங்கி,

5 இலட்சத்து 40 ஆயிரத்து 421 ஏழைக் குடும்பங்களுக்கு இலவச வீட்டுமனைப் பட்டாக்கள் வழங்கி,

அண்ணா 100



### பிள்ளைப்பேறு

**ஒ**ரு காலம் இருந்தது; குழந்தைகளைச் செல்வம் என்ற காலம். அதுவும் இரண்டு அல்லது மூன்று குழந்தைகள் வரைதான். அதற்கும் மேலிருந்தால் குழந்தை எத்தனை என்று கேட்பதில்லை. குழந்தை குட்டி எத்தனை என்று தான் கேட்கிறோம்.

ஆகையால் குட்டி வேண்டாம், குழந்தை என்ற அளவோடு குடும்பத்தைக் கட்டுப்படுத்திக் கொள்ள வேண்டியதுதான். ஒரு குழந்தைக்கும் இரண்டாவது குழந்தைக்கும் நடுவில் இடைவெளி இருக்கவேண்டும். நாம் சினிமாவுக்குப் போகிறோம். மூன்று மணி நேரம் நடக்கக்கூடிய அந்தச் சினிமாவிலும் 15 நிமிடம் இடைவெளி விடுகிறார்கள். ஆனால் பிள்ளைகளைப் பெறுவதில் மட்டும் இடைவெளியே இல்லாமல் செய்கிறோம்.



பயிர்க் காப்பீடு செய்துகொள்ள வசதியாக, 25 இலட்சம் விவசாயிகளுக்கு, காப்பீட்டுத் தொகையில் 50 சதவீதத்தை அரசே வழங்கிடும் திட்டத்தைச் செயல்படுத்தி,

விவசாயத் தொழிலார்கள் - விவசாயிகள் சமூக நலப்பாதுகாப்புத் திட்டத்தின்கீழ், கடந்த 27 மாதங்களில் 2 இலட்சத்து 84 ஆயிரம் விவசாயக் குடும்பங்களுக்கு 160 கோடி ரூபாய் உதவித் தொகை வழங்கி,

இந்தியாவிலேயே முன்னோடித் திட்டமாக ஏழை எளிய சிறு, குறு விவசாயிகள் கடனுதவிகளும் அதிநவீன தொழில்நுட்ப உதவிகளும் பெறும் வகையில் குழுவிற்கு 10 பேர் வீதம் 10 ஆயிரம் சுய உதவிக் குழுக்கள் மூலம் விவசாயிகள் கூட்டுப் பொறுப்புக் குழுக்களை உருவாக்கி, நிதியுதவிகளை நல்கி,

நெல் கொள்முதல் விலையை குவிண்டால் ஒன்றுக்கு ஆயிரத்து 50 ரூபாய் என உயர்த்தி,

இந்த அரசு விவ்சாயிகளுக்கு வழங்கிவரும் வரலாறு காணாச் சலுகைகள் காரணமாக,

2007-2008ஆம் ஆண்டில் வேளாண் வளர்ச்சி அகில இந்திய சராசரி வளர்ச்சி விழுக்காடான 2.6 என்ற அளவைவிட வளர்ந்து, 6.5 விழுக்காடு என உயர்ந்து, தமிழக வேளாண் துறை ஒரு மகத்தான சாதனையைப் படைத்துள்ளது.

தமிழகத்தில் தொழில் வளத்தைப் பெருக்கி வேலைவாய்ப்புகளை உருவாக்கிடும் நோக்கத்தில் 2006க்குப்பின், 25 ஆயிரத்து 683 கோடி ரூபாய் முதலீட்டில், ஏறத்தாழ ஒரு இலட்சத்து 74 ஆயிரம் பேருக்கு வேலைவாய்ப்புகள் கிடைக்கும் வகையில், 19 புதிய பெரிய தொழிற்சாலைகளுக்கான புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் மேற்கொள்ளப்பட்டு, இதுவரை 6 தொழிற்சாலைகள் தொடங்கப்பட்டுள்ளன; மேலும், 10 தொழிற்சாலை களுக்கான பணிகள் வேகமாக நடைபெற்று வருகின்றன;

தகவல் தொழில்நுட்ப நிறுவனங்கள் மூலமாக மென்பொருள் ஏற்றுமதி 2005-2006இல் 14 ஆயிரத்து 400 கோடியாக இருந்தது, 2007-2008ஆம் ஆண்டில் 28 ஆயிரத்து 295 கோடி ரூபாயாக அதிகரித்துள்ளது. அத்துடன் இலட்சக்கணக்கான இளைஞர்களுக்கு வேலை வாய்ப்புகளையும் உருவாக்கியுள்ளது.

கடந்த ஆட்சியில் கொண்டுவரப்பட்ட பணி நியமனத் தடை ரத்து செய்யப்பட்டு, அரசின் பல்வேறு துறைகளிலும் புதிதாக, ஏறத்தாழ 3 இலட்சம் இளைஞர்களுக்கு வேலை வாய்ப்புகள் வழங்கப்பட்டுள்ளன.

கிலோ 2 ரூபாய்க்கு தரமான அரிசி வழங்கப்பட்டு வருவதுடன், விலைவாசி உயர்வைக் கட்டுப்படுத்திடும் நோக்கில்; சிறப்புத் திட்டம் ஒன்று உருவாக்கப்பட்டு, நியாய விலைக் கடைகளில் துவரம் பருப்பு, உளுத்தம் பருப்பு, பாமாயில், மைதா, ரவை போன்ற பொருள்கள் தொடர்ந்து வழங்கப்படுகின்றன.

வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகள் இல்லாத குடும்பங்களே இல்லை எனும் நிலையை உருவாக்கிட 1,517 கோடியே 87 இலட்சத்து 50 ஆயிரம் ரூபாய் செலவில் 62 இலட்சத்து 80 ஆயிரம் குடும்பங்களுக்கு இலவச வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகள் வழங்கிட ஆணைகள் இடப்பட்டு, இவ்வாண்டில் மேலும் 40 இலட்சம் வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகள் வழங்கிடத் திட்டமிடப்பட்டு, தொடர்ந்து வழங்கப்படுகின்றன.

220 கோடி ரூபாய் செலவில் 11 இலட்சம் குடும்பங்களுக்கு எரிவாயு இணைப்புடன் இலவச எரிவாயு அடுப்புகள் வழங்கப்பட்டு, மேலும் 160 கோடி ரூபாய் செலவில் 8 இலட்சம் ஏழைத் தாய்மார்களுக்கு இலவச எரிவாயு அடுப்புகள் வழங்கிட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

### ஐம்பது வயது கடந்தும் திருமணமாகாத ஏழை மகளிருக்கு உதவித்தொகை

அரவாணிகள் நல வாரியம், தூய்மைப் பணி புரிவோர் நல வாரியம் உள்ளிட்ட 24 அமைப்புசாராத் தொழிலாளர் நல வாரியங்கள் மூலம் 5 இலட்சத்து 82 ஆயிரத்து 774 அமைப்புசாராத் தொழிலாளர் குடும்பங்களுக்கு 239 கோடி ரூபாய் உதவித் தொகை வழங்கப்பட்டுள்ளது.

ஐம்பது வயது கடந்தும் திருமணமாகாமல் உழைத்து வாழ முடியாத நிலையில் வாடும் ஏழை மகளிர்க்கு மாதம் 400 ரூபாய் வீதம் உதவித் தொகை வழங்கும் புதிய திட்டம் தொடங்கி வைக்கப்பட்டுள்ளது.

தமிழகத்தில் ஏற்கெனவே அமைக்கப்பட்டுள்ள 145 சமத்துவபுரங்களுடன், மேலும் 95 புதிய சமத்துவபுரங்கள் பெரியார் சிலைகளுடன் நிறுவிடும் பணிகள் நடைபெற்று வருகின்றன.

மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் திட்டத்தின்கீழ் ஏழைப் பெண்களுக்கு 20 ஆயிரம் ரூபாய் திருமண நிதியுதவி;

ஏழை கர்ப்பிணிப் பெண்களுக்கு 6 ஆயிரம் ரூபாய் நிதியுதவி;

### வருமுன் காப்போம் திட்டம்

விவசாயிகளுக்கு வழங்கப்படுவது போல் நெசவாளர் களுக்கும் இலவச மின்சாரம்;

படித்து வேலை வாய்ப்பற்ற இளைஞர்களுக்கு உதவித் தொகை வழங்கும் திட்டம் - ஆகியன சிறப்பாகச் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

6 ஆயிரத்து 500 புதிய பேருந்துகள் விடப்பட்டு; மேலும் 3 ஆயிரத்து 500 புதிய பேருந்துகள் விட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இத்தகைய பல்வேறு நடவடிக்கைகளால் வறுமைக் கோட்டிற்குக்கீழ் வாழும் குடும்பங்களின் விழுக்காடு தமிழகத்தில் பெருமளவில் குறைந்து வருகிறது.

### அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சித் திட்டம்

இதுவரை வரலாற்றில் இல்லாத அளவில் மாநில அரசின் முழு நிதியில் நிறைவேற்றப்படும் ஒரு மாபெரும் திட்டமாக, ஒரு கிராம ஊராட்சிக்கு 20 இலட்சம் ரூபாய் வீதம் 12 ஆயிரத்து 618 கிராம ஊராட்சிகளுக்கு ஐந்து ஆண்டுகளில் 2 ஆயிரத்து 524 கோடி ரூபாய் நிதி வழங்கி, அனைத்துக் கிராம அண்ணா மறுமலர்ச்சித் திட்டப் பணிகளை நிறைவேற்றி, நகரங்களுக்கு இணையான அடிப்படை வசதிகள் அனைத்தும் உருவாக்கும் பணியில் இந்த அரசு ஈடுபட்டுள்ளது.

அதேபோல, அனைத்துப் பேரூராட்சிகளிலும் அண்ணா மறுமலர்ச்சித் திட்டப் பணிகளை நமது அரசு நிறைவேற்றி வருகிறது.

அண்ணா 100



## அறிவு

**ம**னிதருக்குள் பேதத்தையும் அச்சத்தையும் மூட்டக்கூடிய வளர்க்கக்கூடிய எந்த ஏற்பாடுகளும் சுதந்திரத்தின் பரம விரோதிகளே! மோரைக் கடைந்து வெண்ணெய் எடுப்பதைப்போல அறிவை வளர்த்துக் கொண்டு பலன் பெற வேண்டும்.



அண்ணா 100



## மூடநம்பிக்கை

**நா**ம் அறிவுத் துறையில் முன்னேற்றமடைந்தால்தான் நம்மிடம் உள்ள பழைய கருத்துக்கள் அகலும்; பாசி பிடித்துப் போன கண்மூடிப் பழக்கங்களும் தொலையும். மற்ற மூட நம்பிக்கைகள் முறியடிக்கப்படும்.

இராமநாதபுரம், சிவகங்கை, புதுக்கோட்டை மாவட்டங்கள் பயன்பெறும் வகையில் இதுவரை மேற்கொள்ளப்பட்ட குடிநீர்த் திட்டங்களிலேயே மிகப்பெரிய திட்டமாக, 616 கோடி ரூபாய் மதிப்பீட்டில் இராமநாதபுரம் கூட்டுக் குடிநீர்த் திட்டப் பணிகள் 2009ஆம் ஆண்டு ஏப்ரல் மாதத்திற்குள் முடிவடையும் வகையில் நடைபெற்று வருகின்றன.

**ஒகேனக்கல் கூட்டுக் குடிநீர்த் திட்டம்**

தருமபுரி, கிருஷ்ணகிரி மாவட்டங்கள் முழுவதும் பயன்பெறும் வகையில் ஒகேனக்கல் கூட்டுக் குடிநீர் திட்டம், ஆயிரத்து 334 கோடி ரூபாய் மதிப்பீட்டில் நிறைவேற்றப்படுவதற்கு 6.2.2008 அன்று அடிக்கல் நாட்டப்பட்டுத் தொடர் நடவடிக்கைகள் மேற்கொள்ளப் பட்டுள்ளன.

**கடல்நீரைக் குடிநீராக்கும் திட்டம்**

சென்னை மாநகரின் குடிநீர்ப் பிரச்சினையை நிரந்தரமாகத் தீர்க்கும் வகையில் - கடல் நீரைக் குடிநீராக்கும் திட்டங்கள் சென்னைக்கருகே உள்ள மீஞ்சூரிலும், நெம்மேலியிலும் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

பள்ளிக் கல்வியை வளப்படுத்திட சத்துணவுடன் வாரம் மூன்றுமுறை முட்டையும், முட்டை சாப்பிடாத குழந்தைகளுக்கு வாழைப்பழம் வழங்கும் திட்டமும் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது.

தொடக்கப் பள்ளிகளில் 100 விழுக்காடு குழந்தைகள் பள்ளிகளில் சேர்க்கப்பட்டுள்ளனர். அடுத்த ஐந்தாண்டுகளில் இடைநிலைக் கல்வி 100 விழுக்காடு இலக்கினை எய்திடும் வகையில் பணிகள் தொடங்கப்பட்டுள்ளன.

உயர்கல்வியைப் பொறுத்தவரை, தொழிற்கல்விக்கான நுழைவுத் தேர்வு ரத்து செய்யப்பட்டுள்ளது.

அரசு, அரசு உதவி பெறும் கலை அறிவியல் கல்லூரிகளிலும், பாலிடெக்னிக் நிறுவனங்களிலும் கல்விக் கட்டணங்கள் ரத்து செய்யப்பட்டுள்ளன.

**6 இடங்களில் புதியதாக அரசு பொறியியல் கல்லூரிகள்**

மேட்டூர், வால்பாறை, பெரம்பலூர், ஒரத்தநாடு, சுரண்டை, குளித்தலை ஆகிய 6 இடங்களில் புதிய அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளும்; விழுப்புரம், பண்ருட்டி, திண்டிவனம், திருக்குவளை, இராமநாதபுரம், அரியலூர் ஆகிய 6 இடங்களில் புதிதாக அரசு பொறியியல் கல்லூரிகளும் தொடங்கப்படுகின்றன.

**புதியதாக 5 அரசு மருத்துவக் கல்லூரிகள்**

விழுப்புரம், தருமபுரி, திருவாரூர், சிவகங்கை, பெரம்பலூர் ஆகிய 5 இடங்களில் அரசு மருத்துவக் கல்லூரிகள் புதிதாகத் தொடங்கப்படுகின்றன.

திருச்சி, கோவை, நெல்லையில் மூன்று புதிய அண்ணா பல்கலைக்கழகங்களும்;

கல்வி இயலுக்காக தனியே ஒரு பல்கலைக்கழகமும் தொடங்கப்பட்டுள்ளன.

**திருவாரூர் மாவட்டத்தில் மத்திய பல்கலைக்கழகம்**

திருவாரூர் மாவட்டத்தில் மத்திய பல்கலைக்கழகம் ஒன்றும்; கோவையில் உலகத் தரம் வாய்ந்த பல்கலைக்கழகம் ஒன்றும்; திருச்சியில் இந்திய மேலாண்மைக் கல்வி நிறுவனம் ஒன்றும்; தொடங்கிட மத்திய அரசு இசைவளித்துள்ளது.

**ரூ.200 கோடி செலவில் புதிய தலைமைச் செயலக வளாகம்**

சென்னை ஓமந்தூரார் அரசினர் தோட்டத்தில் 200 கோடி ரூபாய் செலவில் புதிய சட்டமன்றமும் தலைமைச் செயலக வளாகமும் கட்டப்படுகின்றன. சென்னை-கோட்டூர்புரத்தில் 120 கோடி ரூபாய் செலவில் உலகத் தரத்திலான அரசு நூலகம் அமைக்கப்படுகிறது. சென்னை மாநகரில் போக்குவரத்து நெரிசலைக் குறைக்க 11 ஆயிரத்து 124 கோடி ரூபாய் செலவில் மெட்ரோ ரயில் திட்டம் தொடங்கப்படுகிறது.

அண்ணா 100



**ஜனநாயகம்**

ஒவ்வொரு சர்க்கார் அலுவலகமும் ஜனநாயகத்தின் பயிற்சிக் கூடமாக ஆக வேண்டும். அப்போதுதான் ஜனநாயகம் வளரும்.





**சத்துணவுப் பணியாளர்களுக்கு தனியாக ஒரு காலமுறை ஊதியம்**

இவற்றையன்னியில், இந்த சுதந்திரத் திருநாளில் முக்கிய அறிவிப்பொன்றை வெளியிட விரும்புகிறேன். ஏழை, எளிய குடும்பங்களைச் சேர்ந்த குழந்தைகளுக்கு ஊட்டச்சத்து நிறைந்த உணவு வழங்குவதற்கான குழந்தைகள் நல மையங்களிலும், பள்ளிகளில் பயிலும் சிறார்களுக்கு மதிய உணவு அளிப்பதற்கான சத்துணவு மையங்களிலும், மொத்தம் சுமார் 2 இலட்சத்து 20 ஆயிரம் சத்துணவுப் பணியாளர்கள் பணிபுரிந்து வருகின்றனர்.

இவர்களில், அங்கன்வாடி உதவியாளர்கள், சத்துணவு சமையலர்கள் மற்றும் சமையல் உதவியாளர்கள் உள்ளிட்ட சுமார் 1 இலட்சத்து 30 ஆயிரம் பணியாளர்கள் தொகுப்பூதியத்தின் கீழ் (Consolidated Pay) நீண்டகாலமாக இருந்து வருகின்றனர். இவர்களுக்கான தொகுப்பூதியத்தை தி.மு.கழக அரசு 1.9.2006 முதல் உயர்த்தி வழங்கியது.

எனினும், இவர்கள் அனைவருக்கும் காலமுறை ஊதியம் (Time Scale of pay) வழங்க வேண்டுமென பல ஆண்டுகளாக கோரிக்கை விடுத்து வருகின்றனர். இதை நிறைவேற்ற வேண்டுமென்ற அக்கரையும் ஆர்வமும் இருப்பினும்; உற்றார் உறவினர்போல் இருந்து தாய்மை உணர்வுடன் இளம் சிறார்களை ஊட்டி வளர்க்கும் பணியில் இருக்கும் சத்துணவுப் பணியாளர்களுக்கு அதே விதமான பரிவுகாட்டி அவர்களின் கோரிக்கையை நிறைவேற்ற முடியவில்லையே என்ற ஆதங்கம் எனக்கு நீண்ட காலமாக உண்டு. இப்போது, இந்தக் கோரிக்கையை ஏற்று, இவர்கள் அனைவருக்கும் தனியாக ஒரு காலமுறை ஊதிய விகிதத்தில் (Special Time Scale of Pay) ஊதியம் வழங்க இந்த அரசு முடிவு செய்துள்ளது என்பதை பூரிப்புடனும் மகிழ்ச்சியுடனும் தெரிவித்துக்கொள்கிறேன்.

பத்து ஆண்டு காலத்திற்கு ஒரு ஊதிய உயர்வு வீதம் பணிமூப்பு அடிப்படையில் ஊதியத்தை உயர்த்த முடிவு.

அண்ணா 100

**மக்களிடம்...**

சட்டம்–ஒழுங்கு பற்றிய பழைய தத்துவத்தோடு புதிய காலமும் மக்களிடம் உணர்வுகளும் பொது மக்கள் தேவைகளும் இணைக்கப்பட வேண்டும்.



அஃதன்னியில், சத்துணவு அமைப்பாளர்கள் மற்றும் அங்கன்வாடி பணியாளர்கள் உள்ளிட்ட சுமார் 90 ஆயிரம் பணியாளர்களுக்கு வழங்கப்பட்டு வரும் தனி காலமுறை ஊதிய விகிதத்தையும் 1.9.2006 முதல் இந்த அரசு உயர்த்தி வழங்கியுள்ளது. இவர்களில், கடந்த 25 ஆண்டுகளுக்கும் மேலாகப் பணிபுரிந்து வருவோரும், தற்போது பணியில் சேர்ந்தோரும், ஒரே ஊதியம் பெறும் நிலை உள்ளது. இந்நிலையை மாற்றி, பணிமூப்பு அடிப்படையில் பணியில் மூத்தோருக்கு ஊதியம் உயர்த்தப்பட்டு நிர்ணயம் செய்யப்பட வேண்டும் என்று அவர்கள் கோரி வருகின்றனர். இக்கோரிக்கையை ஏற்று, பணியில் பத்தாண்டு காலத்திற்கு ஒரு ஊதிய உயர்வு வீதம் வழங்கி, பணி மூப்பு அடிப்படையில் ஊதியத்தை உயர்த்தவும் அரசு முடிவு செய்துள்ளது.

இதுமட்டுமன்றி, குழந்தைகளுக்கு அன்னமிட்டு அரும்பணியாற்றிடும் இந்த சிறப்புப் பணியாளர்கள் ஓய்வுபெற்ற பின்னரும் அவர்களது வாழ்வாதாரத்திற்கு வழிசெய்யும் வகையில், இவர்களுக்கு சிறப்பு ஓய்வூதியம் (Special Pension) அளிக்கப்படும்.

சுமார் 2 இலட்சத்து 20 ஆயிரம் பணியாளர்களுக்கு பயன் தரும் இந்த முடிவுகளால், அரசுக்கு ஆண்டுதோறும் சுமார் 200 கோடி ரூபாய் கூடுதல் செலவு ஏற்படும். பேரறிஞர் அண்ணா அவர்களின் நூற்றாண்டு கொண்டாடப்படுகின்ற இந்த நிதியாண்டில், செப்டம்பர் 15 அண்ணா பிறந்த நாள் முதல் இந்த அறிவிப்புகள் நடைமுறைக்கு வரும்.

இந்தக் கோரிக்கைகளை ஏற்றுக்கொள்வதின் வாயிலாக; பல ஆண்டுகளாக சத்துணவுப் பணியாளர்களின் ஊதியம் குறித்த என்னுடைய ஏக்கம் ஓரளவு நீங்கியது என்பதையும் - புதிய ஊக்கம் பிறந்து இன்றைய மழலையர் நாளைய நாட்டின் அறிவு மேதைகளாக வளர்ந்திட அவர்களை ஆளாக்கும் அரும்பணியில் இந்த இரண்டு இலட்சத்து 20 ஆயிரம் சத்துணவுப் பணியாளர்களும் ஈடுபடுவார்கள் என்பதையும் மகிழ்ச்சி பொங்க இந்த விடுதலை நாள் விழாவில் அறிவிக்கிறேன்.

மேலும், அரசு நிறைவேற்றிடும் திட்டப் பணிகளிலும் வளர்ச்சிப் பணிகளிலும் அரசு அலுவலர்களின் ஒத்துழைப்பும் கணிசமான பங்காக இருப்பதால் அந்தப் பங்கின் விகிதத்தையே அவர்களுக்கு பகிர்ந்து தருகிறோம் என்ற கொள்கையுடைய இந்த அரசு - மத்திய அரசு அலுவலர்களுக்கான ஆறாவது ஊதியக் குழுவின் பரிந்துரைகளின் பேரில் மத்திய அரசு அறிவித்துள்ள ஆணைகளையொட்டி, அந்த ஊதிய உயர்வினை, பத்து இலட்சத்திற்கு மேற்பட்ட தமிழக அரசு அலுவலர்களுக்கும் மனநிறைவளிக்கும் வகையில் நடைமுறைப்படுத்துவதற்கான ஆணைகளை விரைவில் வெளியிடும் என்பதையும் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

2006 மே திங்களில் இந்த அரசு அமைந்து 27 மாதங்கள் ஆகின்றன;

27 மாதங்களில் இதுவரை 29 முறை தமிழக அமைச்சரவைக் கூட்டங்கள் நடத்தப்பட்டு, தமிழகத்தின் முன்னேற்றம் குறித்து விவாதித்துத் திட்டங்களுக்கு ஒப்புதல்கள் வழங்கப்பட்டு அவை படிப்படியாக நிறைவேற்றப்பட்டு வருகின்றன.

**பணிகளை நிறைவேற்றுவதில் நொடிப்பொழுதும் வீணாக்காமல் உழைத்து வருகிறேன்**

இத்தகைய பல்வேறு நடவடிக்கைகள் மூலமாக - என் உயிரனைய தமிழ்ச் சமுதாயத்தை உயர்த்தி நிறுத்திடும் பணிகளை நிறைவேற்றுவதில் நொடிப்பொழுதையும் வீணாக்காமல் உழைத்து வருகிறேன் - வளமாக வாழ்வார்கள்; வெற்றி குவிப்பார்கள் என் தமிழ் மக்கள்! வரலாறு படைத்திடும் என் தமிழகம் எனும் நம்பிக்கையோடு! தமிழக மக்களுக்கு என் இதயங்கனிந்த சுதந்திர தின நல்வாழ்த்துகளை மீண்டும் தெரிவித்து விடைபெறுகிறேன்.

வாழ்க தமிழகம்!

நன்றி: வணக்கம்!

அண்ணா 100

### தமிழர்கள்

தமிழுக்கு ஆபத்து வருகிறது என்று அறிகிறபோது–ஆபத்து வருமோ என ஐயம் தோன்றும் போது–ஆபத்து வரக்கூடுமோ–என்ற சந்தேகம் வரும்போது தமிழர்கள் ஆர்த்தெழுகிறார்கள்.







# பேரறிஞர் அண்ணா

## வாழ்க்கைக் குறிப்பு



எளிய குடும்பத்தில் பிறந்து, நல்ல மாணவராக, ஆற்றல்மிகு பேச்சாளராக, சிறந்த எழுத்தாளராக, உள்ளம் கவர்ந்த பத்திரிகை ஆசிரியராக, நல்ல நூலாசிரியராக, நாடக ஆசிரியராக, நாடக நடிகராக, பண்பட்ட அரசியல்வாதியாக, உத்தமத் தலைவராக, ஒப்பற்ற வழிகாட்டியாக, நாடு போற்றும் முதல் அமைச்சராக, பல்துறை ஆற்றல் நிரம்பப் பெற்ற அறிவுலக மேதையாக ஓங்கு புகழ் எய்தியவர் பேரறிஞர் அண்ணா அவர்கள்.

இவர், ஏழை எளிய மக்களிடையே தம் பேச்சாற்றலால் அறிவுப் புரட்சியை உருவாக்கியவர். தமிழ்ச் சொற்றொடர் அமைப்பிலே புதிய நடை கண்டு, எழுச்சிமிகு எழுத்தால், இலட்சக்கணக்கான இளைஞர்களின் இதயங்களைக் கவர்ந்து, எழுத்துலகில் புரட்சியை உண்டாக்கிய மேதை. அடக்கத்தின் வடிவம். **கடமை, கண்ணியம், கட்டுப்பாடு** என்னும் தாரக மந்திரத்தை நாட்டு மக்களுக்கு நல்கியவர்; முதன்முதலாக, அரசியலில் குடும்பப் பாச உணர்வை ஊட்டியவர்; மாற்றாரையும் மதிக்கக் கற்றுத் தந்த ஆசான்; மாபெரும் ஜனநாயகத் தலைவர்.

திரைப்படங்களுக்குக் கதை வசனம் எழுதி, சுயமரியாதைக் கொள்கைகளை, சீர்திருத்தக் கருத்துகளை மக்களிடையே பரப்பினார். ஏழை எளியவர்களின்

நல்வாழ்வுக்காக பல்வேறு போராட்டங்களில் ஈடுபட்டுப் பலமுறை சிறைவாசம் ஏற்றார். தமிழக முதலமைச்சராகப் பொறுப்பேற்ற பிறகு, சுயமரியாதைத் திருமணச் சட்டத்தை நிறைவேற்றி, சுயமரியாதை இயக்கத் தலைவர் தந்தை பெரியாருக்கு அன்புப் பரிசு என்று அறிவித்தார். தமிழ் மக்களின் சிந்தனையில் படிந்துகிடந்த அழுக்குகளை அகற்றி தமிழகத்தை மாற்றியமைக்க தம் நாவையும், எழுதுகோலையும், இறுதி மூச்சு வரை பயன்படுத்தினார்.

## வாழ்க்கைக் குறிப்பு

1909 – காஞ்சிபுரம் மாவட்டம், காஞ்சிபுரத்தில், எளிய நெசவாளர் குடும்பத்தில், நடராசன்–பங்காரு அம்மாள் தம்பதியருக்கு செப்டம்பர் 15 அன்று பிறந்தார். இவரது வளர்ப்புத் தாய், சிற்றன்னை இராசாமணி அம்மையார்.

1914 – காஞ்சிபுரம், பச்சையப்பன் தொடக்கப்பள்ளியில் சேர்ந்தார். பச்சையப்பன் உயர்நிலைப்பள்ளியில் பள்ளி இறுதி வகுப்பு வரை பயின்றார்.

1927 – காஞ்சிபுரம் நகராட்சியில் எழுத்தராக சில மாதங்கள் பணிபுரிந்தார்.

1928 – சென்னை பச்சையப்பன் கல்லூரியில் இன்ட்டர்மீடியட் வகுப்பில் சேர்ந்து படித்தார்.

1929 – பிப்ரவரி 17, 18 தேதிகளில் செங்கல்பட்டு நகரில் நடந்த, முதல் மாநில சுயமரியாதை மாநாட்டில் பார்வையாளராகக் கலந்துகொண்டார்.

1930 – பச்சையப்பன் கல்லூரி முதல்வரின் உதவியால், உதவித்தொகை பெற்று பி.ஏ.(ஆனர்ஸ்) வகுப்பில் சேர்ந்து படித்தார். கல்லூரியில் படித்துக் கொண்டிருக்கும் போதே, பெற்றோர் விருப்பப்படி, காஞ்சிபுரத்தில் அண்ணாவுக்கும், இராணி அம்மையாருக்கும் திருமணம் நடந்தது.

1931 – மார்ச் 19ல் தமிழ் மருத்துவர் மாசிலாமணி முதலியார் நடத்திய "தமிழரசு" என்ற ஏட்டில் "மகளிர் கோட்டம்" என்னும் கட்டுரையே இவர் எழுதி வெளிவந்த முதல் கட்டுரையாகும்.

1932 – நீதிக்கட்சி அரசின் முதலமைச்சரான பொப்பிலி அரசர் தொடர்பு அண்ணாவுக்கு ஏற்பட்டது.

1934 – திருப்பூரில் நடந்த ஒரு மாநாட்டில் முதன் முதலாக தந்தை பெரியாரைச் சந்தித்து உரையாடினார். அன்று முதல் பெரியாரைத் தனது ஒரே தலைவராக ஏற்றார். பி.ஏ.(ஆனர்ஸ்) பட்டம் பெற்றதும், சென்னை சட்டக் கல்லூரியில் சேர்ந்தார். பொருளாதார வசதி இன்மையால் மூன்று மாதங்களுக்கு மேல் சட்டப்படிப்பைத் தொடர முடியவில்லை.

1935 – சென்னையில் உள்ள தொண்டை மண்டல துளுவ வேளாளர் உயர்நிலைப் பள்ளியில் ஆங்கில ஆசிரியராகச் சில மாதங்கள் பணியாற்றினார்.

நீதிக் கட்சித் தலைவர் சி. பாசுதேவ் அவர்களோடு சேர்ந்து தொடங்கிய 'பால பாரதி' என்ற வார ஏட்டிற்கு ஆசிரியராக இருந்து தொழிலாளர் நலம் பேணும் கட்டுரைகளை வரைந்தார்.



1936 – சென்னை மாநகராட்சித் தேர்தலில் பெத்துநாயக்கன் பேட்டையில் நீதிக்கட்சி சார்பில் போட்டியிட்டுத் தோல்வி அடைந்தார்.

1938 – 'விடுதலை', 'குடியரசு' ஏடுகளின் துணை ஆசிரியர் ஆனார். 'ஜஸ்டிஸ்' என்ற ஆங்கில ஏட்டிற்கும் துணை ஆசிரியராக இருந்தார். செப்டம்பர் 26ல் பெரியார் தலைமையில் நடைபெற்ற முதல் இந்தி எதிர்ப்புப் போராட்டத்தில் பங்கேற்று நான்கு மாதம் சிறைவாசம் ஏற்றார்.

1939 – நீதிக்கட்சியின் பொதுச்செயலாளராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

1940 – மும்பையில் (பம்பாய்) தந்தை பெரியார் – டாக்டர் அம்பேத்கர் சந்திப்பின்போது, மொழிபெயர்ப்பாளராக இருந்தார்.

1942 – மார்ச் 7 : 'திராவிட நாடு' வார ஏட்டின் ஆசிரியர் ஆனார்.

1944 – சேலம் நீதிக்கட்சி மாநாட்டில், அண்ணா தீர்மானம் மூலம், நீதிக்கட்சி திராவிடர் கழகமாகப் பெயர் மாற்றம் பெற்றது.

1945 – டிசம்பர் : "சிவாஜி கண்ட இந்து ராஜ்ஜியம்" என்னும் நாடகம் அரங்கேற்றம். இதை அண்ணா அவர்களே எழுதி அதில் 'காகபட்டர்' பாத்திரம் ஏற்று நடித்தார்.

1946 – ஜூலை 29 : நாவலர் சோமசுந்தர பாரதியார் தலைமையில் பாவேந்தர் பாரதிதாசனுக்கு அண்ணா பொற்கிழி அளித்தார்.

1947 – ஆகஸ்ட் 15 : இந்நாளை பெரியார் துக்க நாள் எனல் பொருந்தாது என்றும், இந்நாள் திருநாளே என்று திராவிடநாடு ஏட்டில் அண்ணா எழுதினார்.

1948 – ஜூலை 17 : இந்தி எதிர்ப்புப் போராட்டத்தில் சிறைவாசம் ஏற்றார்.

1949 – ஜூலை 9 : தந்தை பெரியார் – மணியம்மையார் திருமணம் நடந்தது.

அண்ணாவும் மற்றும் பலரும் திராவிடர் கழகத்தை விட்டுப் பிரிந்து செப்டம்பர் 17இல் 'திராவிட முன்னேற்றக் கழகம்' என்ற புதிய அமைப்பைத் தோற்றுவித்தனர்.



பேரறிஞர் அண்ணா – இராணி அம்மையார்

தி.மு.க.வின் முதல் பொதுச் செயலாளராக அண்ணா பொறுப்பேற்றார்.

1950 – "ஆரியமாயை" என்னும் நூல் எழுதியதற்காக ஆறு மாதம் சிறைத் தண்டனை பெற்றார்.

1952 – இந்தி எதிர்ப்பு அறப்போரில் ஈடுபட்டு – இந்தி எழுத்துகளை அழித்தார்.

1953 – ஜூன் 15 : 'நம்நாடு' நாளிதழின் ஆசிரியர் பொறுப்பை ஏற்றார்.

ஜூலை 15 : மும்முனைப் போராட்டத்தில் முன்னதாகவே கைது செய்யப்பட்டு மூன்று மாதம் சிறைத் தண்டனை பெற்றார்.

1955 – ஜனவரி 14 : அண்ணா, கதை வசனம் எழுதிய 'சொர்க்கவாசல்' என்னும் திரைப்படம் வெளிவந்தது.

1956 – மே 17–20 : திருச்சிராப்பள்ளியில் நடந்த தி.மு.க. இரண்டாவது மாநில மாநாட்டில் பொதுத்தேர்தலில் பங்கேற்பது குறித்து வாக்கெடுப்பு நடத்தி தி.மு.க. பொதுத் தேர்தலில் போட்டியிடுவதற்குப் பொதுமக்கள் அனுமதியைப் பெற்றார்.



1957 – காஞ்சிபுரம் தொகுதி சட்டமன்ற உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

ஜூன் 9 : 'ஹோம்லேண்ட்' ஆங்கில வார ஏட்டின் ஆசிரியர் பொறுப்பை ஏற்றார்.

1958 – ஜனவரி 3 : பிரதமர் நேரு அவர்கள், ஜனவரி 6ல் சென்னைக்கு வரும்போது, கருப்புக் கொடி காட்டத் திட்டமிட்டதால் கைது செய்யப்பட்டு சிறைவாசம் ஏற்றார்.

1962 – காஞ்சிபுரம் சட்டமன்றத் தொகுதித் தேர்தலில் தோல்வியடைந்தார். பின்னர், நாடாளுமன்ற மாநிலங்களவை உறுப்பினர் ஆனார்.

'ஹோம் ரூல்' ஆங்கில வார இதழ் ஆசிரியர் ஆனார்.

ஜூலை 19: விலைவாசி உயர்வு எதிர்ப்பு மறியல் போராட்டத்தில் கைதாகி, வேலூர் சிறையில் பத்து வாரம் கடுங்காவல் தண்டனை பெற்றார். இந்தியா மீது சீனா போர் தொடுத்தது. விடுதலையான அண்ணா நாட்டின் யுத்த முயற்சிகளுக்குப் பல உதவிகள் செய்தார்.

1963 – ஜனவரி : கட்சியின் கோரிக்கை பிரிவினை அல்ல என்பதற்கேற்ற மாற்றம் செய்து கட்சியைக் காப்பாற்றினார்.

நவம்பர் 17 : கட்டாய இந்தி 17ஆவது மொழிப் பிரிவுச் சட்ட நகல் எரிப்புப் போராட்டத்தில் நவம்பர் 16 அன்றே கைதாகி, ஆறு மாதம் கடுங்காவல் தண்டனை பெற்றார்.

1964 – ஜூலை 26 : ஆசிரியர் பொறுப்பேற்று 'காஞ்சி' வார ஏட்டைத் தொடங்கினார்.

1965 – ஜனவரி 26 முதல், இந்தியை, இந்திய யூனியன் ஆட்சி மொழியாக்க நாடாளுமன்ற ஆட்சி மன்றக்குழு பரிந்துரை செய்ததை எதிர்த்து, 'ஜனவரி 26 துக்க நாள்' என தி.மு.க. அறிவித்தது தொடர்பாக அண்ணா சிறைவாசம் ஏற்றார்.



ஜூலை : சிங்கப்பூர், மலேசியா, தாய்லாந்து, ஹாங்காங், கம்போடியா, ஜப்பான் ஆகிய நாடுகளுக்குச் சென்று வந்தார்.

1967 – பொதுத் தேர்தலில் தென் சென்னை நாடாளுமன்ற உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப் பட்டார். பொதுத் தேர்தலில் சட்டமன்றத்தில் தி.மு.க. பெரும்பான்மை இடங்களை வென்றது.

மார்ச் 6 : நாடாளுமன்ற உறுப்பினர் பதவியிலிருந்து விலகிவிட்டு தமிழ்நாடு முதலமைச்சராகப் பொறுப்பேற்றார்.

ஏப்ரல் 26 : தமிழ்நாடு சட்டமன்ற மேலவை உறுப்பினராகப் பதவி ஏற்றார்.



முதலமைச்சராகப் பதவியேற்கும் அண்ணா

மே 15 : ரூபாய்க்குப் படியரிசித் திட்டத்தை அறிமுகப்படுத்தினார்.

ஜூலை 18 : சென்னை மாநிலத்தை '**தமிழ்நாடு**' என்று அழைக்க அரசமைப்புச் சட்டத்தில் உரிய திருத்தம் செய்திடும் பெயர் மாற்றத் தீர்மானத்தைச் சட்டமன்றப் பேரவையில் ஒருமனதாக நிறைவேற்றச் செய்தார்.

ஜூலை 23 : சேலம் உருக்காலைத் திட்டத்தை நிறைவேற்ற, மைய அரசை வற்புறுத்தி, தமிழ்நாடெங்கும் 'சேலம் எழுச்சி நாள்' நடத்தினார்.



'சீரணி' துவக்க விழாவில் அண்ணா

ஆகஸ்ட் 16 : சீரணி என்னும் அமைப்பினை உருவாக்கினார்.

செப்டம்பர் 19 : சென்னையில் கூவம் சீரமைப்புத் திட்டத்தைத் தொடங்கி வைத்தார்.

1968 – ஜனவரி 1 : உலகத் தமிழ் மாநாட்டினை ஒட்டி, டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்களால் வழங்கப்பட்ட பேரறிஞர் அண்ணாவின் முழு உருவச்சிலை சென்னை மவுண்ட் சாலையின் (தற்போதைய அண்ணா சாலை) மையத்தில் திறந்து வைக்கப்பட்டது.

ஜனவரி 2 : தமிழ் வளர்த்த சான்றோருக்கு, சென்னை கடற்கரைச் சாலையில் சிலைகள் அமைத்துப் போற்றினார்.

ஜனவரி 3 : உலகத் தமிழ் மாநாட்டு ஊர்வலத்தை, சென்னை மாநகரில் நடத்தினார். திருக்குறள் ஆராய்ச்சிக்காக ரூ.9 இலட்சம் தமிழ்நாட்டுப் பல்கலைக்கழகங்களுக்கு வழங்க ஏற்பாடு செய்தார்.

ஜனவரி 23 : தாய்மொழி தமிழ், உலக மொழி ஆங்கிலம் ஆகிய இருமொழித் தீர்மானத்தைச் சட்டமன்றப் பேரவையில் நிறைவேற்றச் செய்தார்.

ஏப்ரல், மே : அமெரிக்கா, ஜப்பான், சிங்கப்பூர் சென்று வந்தார். அமெரிக்காவில் யேல் பல்கலைக்கழகத்தில் “சப்-பெலோஷிப்” விருது பெற்றார். வாட்டிகன் நகரில் போப் அவர்களைச் சந்தித்தார்.


போப் அவர்களுடன் அண்ணா

செப்டம்பர் 8 : அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில், அண்ணாவுக்கு டாக்டர் பட்டம் வழங்கப்பட்டது.

செப்டம்பர் 16 : அமெரிக்காவில் உலகப்புகழ் பெற்ற புற்றுநோய் மருத்துவமனையான மெமோரியல் மருத்துவமனையில், டாக்டர் மில்லர் என்பவரால் அண்ணாவுக்கு அறுவை சிகிச்சை செய்யப்பட்டது.

நவம்பர் 6 : சிகிச்சை முடிந்து அண்ணா சென்னை திரும்பினார்.

டிசம்பர் 1: உடல்நலம் கெட்டிருந்தும் மருத்துவர்களின் ஆலோசனையை மீறி, சென்னை மாநிலத்திற்கு தமிழ்நாடு என்று பெயர் சூட்டும் விழாவில் கலந்துகொண்டு பேசினார்.

1969 – ஜனவரி 14 : பொங்கல் தினத்தில் சென்னை தியாகராய நகரில், கலைவாணர் என்.எஸ்.கிருஷ்ணன் சிலை திறப்பு விழாவில் கலந்துகொண்டு பேசினார். அதுதான் அண்ணா கலந்துகொண்ட கடைசிப் பொது நிகழ்ச்சி.

ஜனவரி 25 : அமெரிக்க டாக்டர் மில்லர் சென்னை வந்து அண்ணாவுக்கு அடையாறு புற்றுநோய் மருத்துவமனையில் அறுவை சிகிச்சை செய்தார்.

பிப்ரவரி 3 : (பிப்ரவரி 2 நள்ளிரவு 12-20 மணி) சென்னையில் இயற்கை எய்தினார். அண்ணாவின் உடல், பொதுமக்கள் அஞ்சலிக்காக இராஜாஜி மண்டபத்தில் வைக்கப்பட்டது.

பிப்ரவரி 4 : அண்ணாவின் உடல் அரசு மரியாதையுடன் ஊர்வலமாக எடுத்துச் செல்லப்பட்டு, சென்னைப் பல்கலைக்கழகக் கட்டடத்திற்கு எதிரில் மெரினா கடற்கரையில் காலை 11.30 மணிக்கு சந்தன மரப்பெட்டியில் வைக்கப்பட்டு, அடக்கம் செய்யப்பட்டது.





அறிஞர் அண்ணா அவர்களுடன்
மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்கள்



## பேரறிஞர் அண்ணா நினைவாக தமிழக அரசு செய்த பணிகள்

தமிழக அரசு, அண்ணா துயிலும் சென்னை, மெரினா கடற்கரையில் நினைவிடம் எழுப்பி, “எதையும் தாங்கும் இதயம் இங்கே உறங்குகிறது” என எழுதிவைத்து, அணையா விளக்கை ஏற்றிவைத்து, அண்ணா சதுக்கத்தை உருவாக்கி இருக்கிறது. அங்கு அண்ணாவின் அழகு தமிழைக் கேட்க, ஒலிச்சாதன வசதி அமைக்கப்பட்டுள்ளது. அண்ணா நூலகமும், அண்ணா நூல்கள் விற்பனைக்கூடமும் அண்ணா சதுக்கத்தை அணி செய்கின்றன.



1969 – தமிழக சட்டப்பேரவையில் பேரறிஞர் அண்ணா அவர்களின் திருவுருவப்படம் திறந்து வைக்கப்பட்டது.

1970 – பிப்ரவரி 3 : மைய அரசு அண்ணா நினைவாக 20 காசு அஞ்சல் தலையை வெளியிட்டுச் சிறப்பித்தது.

1971 – சென்னை மாநகரில் மவுண்ட் ரோடுக்கு “அண்ணாசாலை” என்று பெயர் சூட்டப்பட்டது.

தமிழக அரசு வாங்கிய இரண்டு கப்பல்களுக்கு ‘எம்.வி. தமிழ் அண்ணா’ என்ற பெயரும், ‘தமிழ் அண்ணா’ என்ற பெயரும் சூட்டப்பட்டன.


அறிஞர் அண்ணா நினைவு அஞ்சல் தலை

1978 – சென்னை, கிண்டியில் தமிழக அரசால் தொடங்கப்பட்ட தொழில்நுட்பப் பல்கலைக் கழகத்திற்கு ‘அண்ணா பல்கலைக்கழகம்’ என்ற பெயர் சூட்டப்பட்டது.

1980 – காஞ்சிபுரத்தில், பேரறிஞர் அண்ணா பிறந்த இல்லத்தை தமிழக அரசு செப்டம்பர் 16 அன்று ‘அண்ணா நினைவு இல்லமாக’ மாற்றியது.


பேரறிஞர் அண்ணா நினைவு இல்லம்

1990 – சென்னை பன்னாட்டு விமான நிலையத்துக்கு “அண்ணா பன்னாட்டு விமான நிலையம்” எனப் பெயர் சூட்டப்பட்டது.

1994 – பேரறிஞர் அண்ணாவின் எழுத்தோவியங்கள் அரசுடைமை ஆக்கப்பட்டன.

1997 – அனைத்து வசதிகளையும் கிராமங்களுக்கு அளித்திடும் “அண்ணா மறுமலர்ச்சித் திட்டம்”, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் **கலைஞர் மு. கருணாநிதி** அவர்களால் உருவாக்கப்பட்டது.

ரூ.36.39 இலட்சத்தில் அண்ணா அருங்காட்சியகம் உருவாக்கப்பட்டு, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் **கலைஞர் மு. கருணாநிதி** அவர்களால் திறந்துவைக்கப் பட்டது.

1997–98 : அண்ணா சதுக்கம் ரூ.294.20 இலட்சம் செலவில் மேம்படுத்தப்பட்டது.


ஒரு கிலோ அரிசி ரூ.1க்கு வழங்கும் திட்டம்

2007 – அனைத்துக் கிராம அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் **கலைஞர் மு. கருணாநிதி** அவர்கள் தொடங்கிவைத்தார்கள்.

2008 – செப்டம்பர் 15 : அண்ணா நூற்றாண்டையொட்டி **ஒரு கிலோ அரிசி ஒரு ரூபாய்க்கு வழங்கும் திட்டத்தை** மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் **கலைஞர் மு. கருணாநிதி** அவர்கள் தொடங்கிவைத்தார்கள்.

❖ ❖ ❖





# இதயத்தைத் தந்திடு அண்ணா

(3.2.1969 அன்று சென்னை வானொலியில் பேரறிஞர் அண்ணா அவர்களுக்கு மாண்புமிகு முதலமைச்சர் **கலைஞர் மு.கருணாநிதி** அவர்கள் அளித்த கண்ணீர்க் கவிதாஞ்சலி)

பூவிதழின் மென்மையினும் மென்மையான
புனித உள்ளம் – அன்பு உள்ளம்
அரவணைக்கும் அன்னை உள்ளம்! – அவர்
மலர் இதழ்கள் தமிழ் பேசும் –
மா, பலா, வாழையெனும் முக்கனியும் தோற்றுவிடும்!
விழிமலர்கள் வேலாகும் – வாளாகும்
தீங்கொன்று தமிழ்த் தாய்க்கு வருகுதென்றால்!
கால் மலர்கள் வாடிடினும் அவர் கடும் பயணம் நிற்காது;

கைமலர்கள் பிணைத்து நிற்கும், தம்பியரை, கழகத்தை
அம் மலரே எதிரிகளை மன்னித்து
நெற்கதிர் போல் தலை நாணச் செய்துவிடும்
மக்களாட்சி மலர் குலுங்க
சமதர்மப்பூ மணக்க
தாய்மொழித் தமிழே வாழ்வுப் பொழிலாக
ஆடிவரும் தென்றல்
நாடிவரும் பூமுடியே! புகழ் முடியே! உமைத்
தேடிவரும் வாழ்த்துக் குவியலிலே – தினம்,

பாடிவரும் வண்டாக நான் பறப்பேன்
உனைக் காக்க எனைத் துறப்பேன்—என்,
ஒரு கோடி தமிழ் இளைஞர்
பாடிநின்ற பாட்டுக்குப் பெருந்தலைவன்.

முடுகிற் செறிந்த தமிழார்வம்
முதிரா இளைஞர் ஆருயிராய்ப்
பெருகச் செய்த செயல் மறவர்
சிறப்பைப் பாடக் கேண்மினோ!
தங்கு கண் வேல் செய்த புண்களை
அன்பெனும் வேது கொண்டொற்றியுஞ்
செங்கனி வாய் மருந்தூட்டுவார்
சீர்மையைப் பாடக் கேண்மினோ!
பொரு தடக்கை வாளெங்கே; மணிமார் பெங்கே;
போர் முகத்தின் எவர் வரினும் புறங்கொடாத
பருவயிரத் தோளெங்கே யெங்கேயென்று
தம்பியரைக் கேட்டானைக் கேண்மின்! கேண்மின்!
காஞ்சியிருக்கக் கலிங்கம் குலைந்த
கலவி மடவீர் கழற் சென்னி
காஞ்சியிருக்கக் கலிங்கம் குலைந்த
களப்போர் பாடத் திறமினோ என்று

மையல் கொண்ட மாதர் தமைத். துயில் எழுப்பச்
செயங்கொண்டார் பாடினார்,
களப்பரணி.. கலிங்கத்துப் பரணி –
அளப்பரிய வீரத்தின் புகழ்ப்பரணி – யான்
கவிப் பரணியேறி, காஞ்சிபுரப் பரணி பாடி நின்றேன்
அவலப் பரணி பாடுகின்றேன் இன்று...!

கவியினில் பொருளெனக் கரும்பினில் சுவையெனக்
கதிரினில் ஒளியெனக் காவினில் மலரென
நிலவினில் குளிரென நிலமிசை வளமென
குலவிடும் அருவி குழறிடும் மொழியென
உலவிடும் காற்றில் ஏறிடும் இசையென
அலையெழுங் கடலில் ஆடிடும் நுரையென
கலைமணங் கமழக் கூடிய கவிஞர்
தலைமகன் அண்ணா திருப்புகழ் பாடிட
நிலமகள் வடிக்கும் கண்ணீர் அந்தோ! வெள்ளம்! வெள்ளம்!
மாபெரும் வெள்ளம்!
ஆயிரத்துத் தொள்ளாயிரத்து முப்பத்து எட்டாம்
தாயகத்தில் மொழிப்புரட்சி தோன்றுதற்கு
வித்திட்டார் சிலபேர் என்றால், ஈரோட்டு



நாயகத்தின் இணையில்லாத் தலைமை வீரர்
எங்களண்ணன் களம் புகுந்தார் காஞ்சிபூண்டு!
இருமூன்று திங்கள் வரை சிறையில் வாடி,
தரும் ஊன்று கோலாகத் தமிழைத் தந்து
அருமூன்று எழுத்தாலே அண்ணா வானார்!
அன்றொரு நாள் அய்ம்பத்திரண்டுதனில்
சென்னையிலே சொன்னேனே நினைவுண்டா உங்களுக்கு?
மூன்றெழுத்திலே ஒரு சிறப்புண்டு, முத்தமிழ் மணமுண்டு!
மூவேந்தர் முக்கொடி முக்கனியென
மும்முர சார்த்தவர் தமிழர் – அவர் வாழ்ந்த
தமிழ் "வாழ்வு"க்கு மூன்றெழுத்து – அந்த
வாழ்வுக்கு அடிப்படையாம் "அன்பு"க்கு மூன்றெழுத்து..
அன்புக்குத் துணை நிற்கும் "அறிவு"க்கு மூன்றெழுத்து
அறிவார்ந்தோர் இடையிலெழும், "காதலு"க்கு மூன்றெழுத்து.
காதலர்கள் போற்றி நின்ற சுடும் "வீரமோ" மூன்றெழுத்து..
வீரம் விளைக்கின்ற "களம்" மூன்றெழுத்து...
களம் சென்று காணுகின்ற "வெற்றி" மூன்றெழுத்து
அந்த வெற்றிக்கு நமையெலாம் ஊக்குவிக்கும்
அமைதி மிகு "அண்ணா" மூன்றெழுத்து" அறிந்திடுவீர் எனச் சொன்னேன்!

திக்கெட்டும் தமிழ் முழக்கம்
திசையெங்கும் சொன் மாரி
வக்கற்றோர் வகையற்றோர்
வாழ்வதற்குத் திட்டம் கோரி
வண்டாகச் சுற்றுகின்றார் மேடையேறி!
எழுதுகின்றார் அண்ணா
ஏடெல்லாம் வீடெல்லாம் தமிழ்
நாடெல்லாம்... புதுமை மணக்குதங்கே...
"ஏடா தம்பி! எடுடா பேனா"
எத்தனை உணர்ச்சி! எத்தனை எழுச்சி!
"கத்தியைத் தீட்டாதே
புத்தியைத் தீட்டு"
கருத்துப் பேழை–கற்பூரப் பெட்டகம்!
"மரக்கிளையிலே பிணம் –
வெந்த புண்ணிலே வேல்!"
மறந்திடப் போமோ; மனங்கவர் வாசகம்?
"சாலை யோரத்திலே வேலையற்றதுகள்
வேலையற்றதுகளின் உள்ளத்தில் விபரீத எண்ணங்கள்
வேந்தே! அதுதான் காலக்குறி!"
அண்ணனுக்கன்றி யாருக்கு வரும் இந்த அழகு நடை?
அறிவு நடை?

கோடு உயர்ந்தது குன்றம் தாழ்ந்தது
தமிழகம் மறவாத் தலையங்கமன்றோ?
இப்படை தோற்கின் எப்படை ஜெயிக்கும்?
தம்பியுடையான் படைக்கஞ்சான்
ஒப்பில்லா வரிகள் உரைத்திடும் பனுவல்
மனோன்மணீயம் எனினும் – நம்
மனதில் பதித்தவர் அண்ணா வன்றோ!

“மாற்றான் தோட்டத்து மல்லிகையும் மணக்கும்”
அரசியல் பண்பினை போதிக்கும் அழகே!
“மறப்போம் – மன்னிப்போம்”
மாற்றார் ஏசல் தாங்கிடும் மாண்பே!
எவர் கற்றுத் தந்தார் இதனை?
சுவர் வைத்துச் சித்திரம் எழுதுதல்போல்
நயமிகு பண்புடன் அரசியல் நடாத்தல்
    நன்றென்றார் அண்ணா அதை மறுத்து
நாலைந்து பேர் குதித்திட்டார் என்றால்
அவர் கண்டு சிரித்திட்டார் அண்ணா –
அனைவரையும் ஓர் அன்னை பெற்றெடுக்க
வயிறு தாங்காக் காரணத்தால்
தனித்தனித் தாய் ஈன்றெடுத்த தம்பிகளே! என அழைத்து
கனிச் சுவையாய்க் கற்கண்டாய்த் தேன் பாகாய் அன்பு காட்டி
பனிமலர் வீழ் தும்பியதாய்த் தழுவிக்கொண்டார்;
சொலல் வல்லார் சேதுப்பிள்ளைதனை
சோமசுந்தர பாரதியைச் சொற் போரில்
சொக்க வைத்தார் – பாவம்; சிக்க வைத்தார்!
நீதிக் கட்சியென்று நெடியமதில் சுவருக்குள்ளே – பணச்
சாதிக்குக் கட்சியாய் இருத்தலாகாதெனும்
                    கொள்கையாலே அதனை
வீதிக்குக் கொண்டு வந்தார்;
வீசிடுக வெள்ளையர்கள் பட்டத்தையென்று
சேலத்து மாநாட்டில் தீர்மானம் போட்டுவிட்டார் –
                    அண்ணாவின் போர்க்
கோலத்தை எதிர்க்க மாட்டாமல்,
கோலற்ற குருடர்போலக் கொள்கையற்றோர்
                    வீழ்ந்துபோனார்!
தீரர் அண்ணா திராவிடர் கழகமெனும்
                பெயர் மாற்றத் தீர்மானம்
வீரர் கூடிய மாநாட்டில் கொண்டு வந்தார்
அண்ணல் காந்தியார் அறவழி கண்டு
ஆங்கில ஆட்சியை அகற்றிய போது



துன்ப நாளெனும் பெரியார் அறிக்கையை மறுத்துத்
தொடங்கினார் போரை!
இன்ப நாளிது! இனிய நாளிது!
என்பு தோலாய் ஆன இந்தியர்
அன்புறு காந்தியின் அருளால் இன்று
எழுந்தனர் அடிமைத் தளையினை அறுத்து
முழங்குவோம் விடுதலை முரசினை எடுத்து
என்றே அண்ணா, அன்றே சொன்னார்...
அன்று முதல் அண்ணன் அய்யா உறவினிலே கீறல் விழ
அது நாற்பத்தொன்பதாம் ஆண்டினிலே பிரிவாய் மாறி
முகில் கிழித்து வெளிக்கிளம்பும் முழுமதியாய்
முன்னேற்றக்கழகத்தை முகிழ்க்கச் செய்தார்.
தலைவருடன் கூடி வாழ முடியாமல்
பெரும்பான்மைத் தோழருடன் வெளியே வந்தும்,
நிலைகுலையா நம் அண்ணன் அன்று சொன்னார்
அது,
நேற்று சொன்னது போல் இருக்குதம்மா!
தலைவரில்லை முன்னேற்றக் கழகத்துக்கு – என்
தலைவர் இருந்த நாற்காலி காலியாக இருக்கும் அதில்
தலைவர் அவர் என்றேனும் வந்தமர்வார்
அதுவரையில் காத்திருப்பேன் என்றார்.
பூத்திருக்கும் மலர்த் தோட்டம்
காலைப் பனிநீர் வடிப்பது போல்
காத்திருந்து கூட்டம் கேட்டோர்
கண்ணீர் வடித்தார்
கண்ணீர்த் துளிகளே! நாட்டின் கண்மணிகளே! என அழைத்துச்

செந்நீர் சிந்துதற்கு அணிவகுத்தார்.
யாரேனும் பகர்ந்ததுண்டா?
யாரேனும் கேட்டதுண்டா?
பதினெட்டு ஆண்டுக்குள் ஓர் இயக்கம்
பதுங்கிப் பாயும் வேங்கையெனப் – பாராள வந்த கதை?
ஈராண்டு முடியவில்லை எம் அண்ணா ஆட்சியேற்று
சீரார்ந்த செயல் பலவும் செய்தலுற்றார்,
ஏராந்த உழவர்க்கெல்லாம் ஏற்றம் தந்து
எழில் வாழ்வு குவிப்பதற்கு எடுத்தார் முயற்சி
உலகத் தமிழ் மாநாடு துவக்க வந்த
ஓங்கு புகழ்க் குடியரசுத் தலைவரவர்
இணையற்ற காட்சி கண்டேன் மாட்சி கண்டேன்.
இதுபோல வாழ்வில் என்றும் கண்டதில்லை யென

ஊர் மெச்சப் புகழ்ந்துரைத்தார் அண்ணன் கீர்த்தி!
ஆந்திரத்துப் பிரும்மானந்த ரெட்டிகாரும்
ஆகா – நீதானே அசல் காந்திய வாதியென்று
ஆராதனை செய்திட்டார் – ஆண்டொன்று கழியவில்லை!

மதுவிலக்கைத் தீவிரமாய் ஆக்குகின்றீர் பல
மாநிலத்தில் கை கழுவி கலயம் கட்டிவிட்டார் மரங்களிலே!
மகாத்மாவின் தோன்றல் நீர்தான் என்று!
கிரியென்றால் மலையன்றோ – அந்த
மலை தழுவும் முகிலானார் நம் அண்ணா!
வி.வி. கிரி தந்த வாழ்த்துக்கு விளக்கமிது.
பன்னாட்டுப் பேரறிஞர் வாழ்த்தி நின்றார் – அன்று
தென்னாட்டுச் சிகரமாக
இருந்திட்டோர் அண்ணன் பற்றி
என்ன சொன்னார்?
பழந்தமிழ் வித்தகர் பல்லாவரத்தார் – அண்ணா,
பழந்தமிழ்ப் பேச்சால் மயங்கி நின்றார். அந்த
மறைமலை தந்த புகழ்மொழி ஆயிரம்
பசுமலை பாரதி – பாண்டியன் தோற்றம் – அவரை
நாவலர் என்று நாடே அழைக்கும் – அவர்
சழக்கரால் வீழ்ந்த தமிழ்நிலம் காக்க – மன
அழுக்கில்லாத் தலைவன் கிடைத்தான் என்றே
அண்ணன் பெருமை சொன்னார் அன்று!
ஈராயிரம் ஆண்டின் முன்னும் இன்றுபோல்
இளையவளாய் இருந்திட்ட தமிழாம் அன்னை
நூறாயிரம் கோடி என ஆண்டு பல வாழ்வதற்கு
நூலாயிரம் செய்திட்ட புலவர்களை ஈன்றாள் எனினும்;
கலைமகளாம் நம் அன்னை வள்ளுவனைத்
தலைமகனாய்ப் பெற்றெடுத்தாள்.

மலர் என்றால் தாமரை தான்
மன்னன் என்றால் கரிகாலன்
நூல் என்றால் திருக்குறளே அளித்திட்டான் எனப்போற்றும் அறப்பனுவல்
அளித்திட்டான் – மாந்தரெல்லாம் களித்திட்டார்!
விண்முட்டும் மலையோரம் – நம்
கண் பட்டும் படாமலும் எழுகின்ற நச்சுமரம் போல
பண்பட்ட தமிழர் வாழ்வில் – முதுகில்
புண்பட்ட கொள்கையெல்லாம் மூண்டதந்தோ
சாதிகளைக் காணாது குறள் ஒலித்த தமிழ் மண்ணில்
பாதியிலே வந்ததம்மா பலகோடி சாதிகளும்!



அறிவு மணங் கமழுகின்ற ஆலயங்கள் அற்றுப் போய்
ஆயிரம் தெய்வங்கள் உறைகின்ற கோவில்கள் கண்டுவிட்டார்.
மொழியுணர்வே இல்லாத வாயுணர்வின் மாக்கள் – தமிழ்
அழியினும் வாழினும் என்னென்று இருந்திட்டார்
அறநெறியே குறிக் கோளாய்த் திகழ்ந்திட்ட பெரு நிலத்தில்
பிறநெறிகள் பயிர் செய்தார் பிழை குவித்தார்.
மழையற்றுப் போன வயல் போல மாறிற்றுத் தமிழர் மனம்;
அழுக்காறு – அவா – வெகுளி – இன்னாச் சொல் நான்குமின்றி
நடக்காது வேலையென்று நடந்திட்டார் சில தமிழர்;
பொருளில்லார்க்கு இவ்வுலகமில்லையென்று
பொருள் குவித்து வளம் செழித்த நாட்டில் – இன்று
இருள் கவிந்து வாட்டம் கோடி போட்டதங்கே.
வாடினாள் தமிழன்னை – சோகப் பாட்டுப்
பாடினாள் தமிழன்னை – அடு நெருப்பில்
ஆடினாள் தமிழன்னை
ஓடினாள் – ஓடினாள் –
ஒரு வழியும் கிடைக்கவில்லை!
புவியூர் விட்டுப் புகழூரில் வாழுகின்றான்
கவியூரின் பெருவேந்தன் குறளாசான்
ஆண்டு சென்று, அருமை மகனே
வேண்டுகோள் ஒன்று விடுத்தேன் என்றாள்.
என்னம்மா? என்றான் குறளோன்.
தோண்டுகின்ற இடமெல்லாம் தங்கம் வரும் தமிழகத்தில்
மீண்டும் நீ பிறந்திட வேண்டுமென்றாள்.

தங்கம் எடுக்கவா என்றான்
தமிழர் மனம் வாழ்வெல்லாம்
தங்கமாக ஆக்க என்றாள்
இன்றென்ன ஆயிற் றென்றான்.
குன்றனைய மொழிக்கு ஆபத்தென்றாள்;
சென்றடையக் குடிலில்லை ஏழைக்கென்றாள்;
கடிதோச்சி மெல்ல எறியத் தெரியாமல்
கொன்றெறியும் கோல் ஓங்கிற்றென்றாள்; அறிவில்
கன்றனையோர் வீணில் கதைக்கின்ற கதையும் சொன்னாள்.
அழுதகண்ணைத் துடைத்தவாறு
அமுதமொழி வள்ளுவனும்
அம்மா நான் எங்கே பிறப்பதென்றான்?
தொழுத மகன் உச்சி மோந்து – ஆல
விழுதனைய கைகளாலே.. அணைத்துக்கொண்டு
உழுத வயல் நாற்றின்றிக் காயாது இனிமேலே என மகிழும்

உழவன் போல் உள்ளமெல்லாம் பூரிப்புத் துள்ளி எழ
சூழ்ந்த வயிற்றுக்குக் கஞ்சி வார்த்திடவே
கற்கண்டே! தேன்பாகே! திருக்குறளே!
நீ காஞ்சியிலே பிறந்திடுக! என்றாள்.
பிறந்திட்டான் நம் அண்ணனாக;
அறிவு மன்னனாக
பொதிகை மலைத் தென்றலாய்
போதாகி மலர்கின்ற தமிழ் உணர்வின் புதுமணமாய்
பதிகத்துப் பொருளாய்ப் பழந்தமிழர் புறப்பாட்டாய்
வந்துதித்தான் அண்ணன் – கீழ்
வானுதித்த கதிர் போல
புரியாதார்க்கு ஒரு புதிர் போல
அவன் புகழைப் பாடுதற்கு
அவன் வளர்த்த தம்பி நானும்
அவன் தந்த தமிழ் எடுத்து
இவண் வந்தேன் இதுதான் உண்மை.
தலைவரென்பார், தத்துவ மேதை என்பார்,
நடிகரென்பார், நாடக வேந்தரென்பார்
சொல்லாற்றல் சுவைமிக்க எழுத்தாற்றல் பெற்றார் என்பார்

மனிதரென்பார் மாணிக்கமென்பார் மாநிலத்து அமைச்சரென்பார்.
அன்னையென்பார், அருள் மொழிக் காவல் என்பார்
அரசியல் வாதி என்பார் அத்தனையும்
தனித்தனியே சொல்வதற்கு நேரமற்றோர் நெஞ்சத்து அன்பாலே
அண்ணா என்ற ஒரு சொல்லால்
அழைக்கட்டும் என்றே – அவர் அன்னை
பெயரும் தந்தார்.
அந்த அன்னைக் குலம் போற்றுதற்கு
ஔவைக்கோர் சிலை
அறம் வளர்த்த கண்ணகிக்கோர் சிலை
வளையாத நெஞ்சப் பாரதிக்கும்
வணங்காமுடி பாரதிதாசருக்கும் சிலை
வீரமா முனிவருக்கும் சிலை
கால்டுவெல் போப்புக்கும் சிலை கம்பர்க்கும் சிலை
தீரமாய்க் கப்பலோட்டிய தமிழர்க்கும் சிலை
திக்கெட்டும் குறள் பரப்ப திருவள்ளுவர்க்கும் சிலை
புத்துச் சிலை வைத்ததினால் – அண்ணன் தமிழின் பால் வைத்துள்ள
பற்றுதலை உலகறிய அண்ணனுக்கோர் சிலை
சென்னையிலே வைத்தபோது..
ஆட்காட்டி விரல் மட்டும் காட்டி நின்றார்.



ஆணையிடுகிறார் எம் அண்ணா என்றிருந்தோம்
அய்யகோ; இன்னும்
ஓராண்டே வாழப்போகின்றேன் என்று அவர்
ஓர் விரல் காட்டியது இன்றன்றோ புரிகிறது!
எம் அண்ணா... இதயமன்னா...
படைக் கஞ்சாத் தம்பியுண்டென்று
பகர்ந்தாயே;
எமை விடுத்துப் பெரும் பயணத்தை ஏன் தொடர்ந்தாய்
உன் கண்ணொளியின் கதகதப்பிலே வளர்ந்தோமே;
எம் கண்ணெல்லாம் குளமாக ஏன் மாற்றிவிட்டாய்?
நிழல் நீதான் என்றிருந்தோம்; நீ கடல்
நிலத்துக்குள் நிழல் தேடப்போய் விட்டாய்:
நியாயந்தானா?
நான்தானடா நன்முத்து எனச் சொல்லி
கடற் கரையில் உறங்குதியோ?...
நாத இசை கொட்டுகின்ற
நாவை ஏன் சுருட்டிக் கொண்டாய்?
விரல் அசைத்து எழுத்துலகில்
விந்தைகளைச் செய்தாயே; அந்த
விரலை ஏன் மடக்கிக் கொண்டாய்?
கண்மூடிக் கொண்டு நீ சிந்திக்கும்
பேரழகைப் பார்த்துள்ளேன்..
இன்று
மண் மூடிக் கொண்டுன்னைப் பார்க்காமல்
தடுப்பதென்ன கொடுமை,
கொடுமைக்கு முடிவுகண்டாய்; எமைக்
கொடுமைக்கு ஆளாக்கி ஏன் சென்றாய்?
எதையும் தாங்கும் இதயம் வேண்டுமென்றாய்:
இதையும் தாங்க ஏதண்ணா எமக்கிதயம்?
கடற்கரையில் காற்று
வாங்கியது போதுமண்ணா
எழுந்து வா எம் அண்ணா
வரமாட்டாய்; வரமாட்டாய்,
இயற்கையின் சதி எமக்குத் தெரியும் அண்ணா நீ
இருக்குமிடந்தேடி யான்வரும் வரையில்
இரவலாக உன் இதயத்தை தந்திடண்ணா..
நான்வரும் போது கையோடு கொணர்ந்து அதை
உன் கால் மலரில் வைப்பேன் அண்ணா?

* * *

# அறிஞர் அண்ணா நூற்றாண்டையொட்டி கிலோ அரிசி ஒரு ரூபாய்க்கு வழங்கும் திட்டம் நடைமுறை

### தமிழக அமைச்சரவைக் கூட்டத்தில் மேற்கொள்ளப்பட்ட முடிவுகள்

**மா**ண்புமிகு தமிழக முதலமைச்சர் கலைஞர் அவர்கள் தலைமையில் 30.8.2008 அன்று தலைமைச் செயலகத்தில் தமிழக அமைச்சரவையின் 30 ஆவது கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில் பின்வரும் முடிவுகள் மேற்கொள்ளப்பட்டன.

சிறப்புத் தீர்மானமாக மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் .கலைஞர் அவர்களால் முன்மொழியப்பட்டு, அமைச்சரவையினால் ஒருமனதாக நிறைவேற்றப்பட்ட முதல் தீர்மானம் வருமாறு :–

திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சிக்கு வந்தால் ஏழை, எளிய, நடுத்தர மக்களுக்கு எவ்வளவு குறைந்த விலையில் அரிசி வழங்க முடியுமோ; அவ்வளவு குறைந்த விலையில் அரிசி வழங்குவோம் என்று 1967ஆம் ஆண்டு தேர்தலின் போது அறிஞர் அண்ணா அவர்கள் வாக்குறுதி வழங்கினார். அதற்குப் "படி அரிசித் திட்டம்" என்று பெயரிடப்பட்டது. ஆனால் அண்ணாவின் அந்த நல்ல எண்ணம் ஈடேற முடியாமல் தடைப்பட்டு நின்று விட்டது.

"ஏழையின் சிரிப்பில் இறைவனைக் காண்போம்" என்ற அண்ணாவின் அந்த இலட்சிய முழக்கம் வெற்றிகரமாக நிறைவேறக்கூடிய அந்த அரிய வாய்ப்பு; இந்த ஆண்டு செப்டம்பர் 15 அன்று தொடங்குகிற அண்ணா நூற்றாண்டு விழாவையொட்டி நமக்குக் கிடைத்திருக்கிறது.

ஆம்; 2006ஆம் ஆண்டு மே, 13ஆம் நாள் ஐந்தாவது முறையாக ஆட்சிப் பொறுப்புக்கு வந்த நான்; பதவிப் பிரமாணம் செய்து வைக்கப்பட்டபோது, ஆன்றோர்களும், சான்றோர்களும் வீற்றிருந்த அந்த மேடையிலேயே விவசாயிகளின் கடன் ஏழாயிரம் கோடி ரூபாயை ரத்து செய்து அறிவித்ததுடன்– ஒரு கிலோ அரிசி இரண்டு ரூபாய் எனவும் இன்னும் பல தேர்தல் வாக்குறுதிகளை நிறைவேற்றியும் அறிவித்தேன்.

உணவுக்குப் பயன்படும் அத்தியாவசியப் பொருட்களான உளுந்து, பருப்பு, சமையல் எண்ணெய் போன்றவைகளின் விலைவாசி உயர்வைக் கட்டுப்படுத்தும் நோக்குடன் நமது தமிழக அரசு; மேற்கண்ட பொருட்களை நியாய விலைக் கடைகளின் மூலம் சலுகை விலையில் வழங்கி வருவது தொடருமெனத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இப்போது அரசு நியாய விலைக்கடைகளில் நடைமுறையில் உள்ள கிலோ இரண்டு ரூபாய் அரிசி வழங்கும் திட்டத்தை; அண்ணா நூற்றாண்டு விழாவையொட்டி மேலும் விலை குறைத்து இனி குடும்ப அட்டைதாரர்களுக்கு, வரும் செப்டம்பர் 15ஆம் தேதி முதல் கிலோ அரிசி ஒரு ரூபாய்தான் என்ற விலை வைத்து நியாயவிலைக் கடைகளில் வழங்கப்படும் என்று மகிழ்ச்சியுடன் அறிவிக்கின்றேன். அண்ணாவின் கனவை நிறைவேற்றும் இந்த அறிவிப்பைத் தமிழக மக்கள் மகிழ்ச்சியுடன் வரவேற்பார்கள் என்ற நம்பிக்கையுடன் அவர்களை வாழ்த்துகின்றேன்.

தொடர்ந்து நடைபெற்ற அமைச்சரவையில் எடுக்கப்பட்ட முடிவுகள் வருமாறு :–

மதுரை, தேனி, திண்டுக்கல், சிவகங்கை, இராமநாதபுரம், விருதுநகர், திருநெல்வேலி, தூத்துக்குடி, கன்னியாகுமரி ஆகிய ஒன்பது தென் மாவட்டங்களில் தொழில் தொடங்க முன்வரும் முதலீட்டாளர்களுக்கு ஒரு சிறப்புத் தொகுப்புச் சலுகை வழங்க முடிவு செய்யப்பட்டது. இதுவரை மூன்று ஆண்டுகால அளவில் 250 கோடி ரூபாய்க்குமேல் முதலீடு செய்யும் உற்பத்தித் தொழில்கள் மட்டுமே அமைப்பு முறையிலான தொகுப்புச் சலுகை பெற தகுதி பெற்றன. ஆனால், தென் மாவட்டங்களில் 50 கோடி ரூபாய்க்குமேல் 250 கோடி ரூபாய் வரை முதலீடு செய்யும் தொழில் திட்டங்களுக்கு, அவைகள் செய்யும் முதலீடுகளுக்கு ஏற்ப மூன்று ஆண்டுகள் முதல் ஐந்து ஆண்டுகள் வரை செலுத்தக்கூடிய உற்பத்திப் பொருள் விற்பனை அடிப்படையிலான மதிப்புக்கூட்டிய வரியை ஏழு ஆண்டுகளுக்குப் பிறகு செலுத்தக்கூடிய மென் கடனாக வழங்கிடவும்; 250 கோடி ரூபாய்க்கு மேலாக தென் மாவட்டங்களில் முதலீடு செய்யும் தொழில் திட்டங்களுக்கு மென் கடனுக்குப் பதிலாக உற்பத்திப் பொருள் விற்பனை மீது செலுத்திய



அண்ணா 100

### யார் தமிழர்?



**ப**யிரில் களை போன பிறகு, உழவர் முகத்தில் தோன்றும் மகிழ்ச்சியைக் காண வேண்டுமா? கண்கெட்டதே என்று கவலைப்பட்டவனுக்கு மருத்துவர் உதவியால் மீண்டும் பார்வை விளக்கமானதும், அவன் எங்ஙனம் இருப்பான் என்பதை அறிந்துகொள்ள வேண்டுமா? பாய்ந்த வேலை வாங்கி எறிந்து, எதிரியை வீழ்த்தும்போது வெற்றி வீரனின் அகமும் முகமும் எங்ஙனம் இருந்திருக்கும் என்று தெரிந்து கொள்ள வேண்டுமா?

காதலித்தவளைக் கடிமணம் புரியும் வாய்ப்புக் கிடைக்கப்பெற்ற காளையின் களிப்பைக் காணவேண்டுமா? கார் கண்ட மயிலை, கதிரவனைக் கண்ட கமலத்தைக் காணவேண்டுமா?

இதோ தமிழர்களைக் காணுங்கள்; பிறப்பால் மட்டுமல்ல; உணர்வால், பண்பால் தமிழர்களாக உள்ளவரைக் காணுங்கள், இவ்வளவும் தெரியும்!



அண்ணா 100

### கலை



**ம**ற்ற நாடுகளின் கலைச் சிறப்புக்கும் நமது நாட்டின் கலை வளர்ச்சிக்கும் அடிப்படையான ஒரு வித்தியாசமிருக்கிறது. செல்வ வளத்தோடு மற்ற நாடுகளிலே கலையை வளர்க்கிறார்கள். ஆனால் நம்முடைய நாட்டிலோ ஏழ்மையில் இருக்கும் போதே கலையும் வளர்க்கப்படுகிறது. நம்முடைய நாட்டு மக்களும் வறுமை நிலையிலும் கலைச் சுவையை நுகர்கிறார்கள்–கலைஞர்களை வாழ்த்துகிறார்கள் வளர்க்கிறார்கள்–கலையை வளம் பெறச் செய்கிறார்கள் என்றால், செல்வச் செழிப்பிலே இந்நாட்டு மக்கள் இருப்பார்களானால் கலையை வளர்க்கும் கலைஞர்களை எவ்வாறெல்லாம் போற்றுவார்கள், பாராட்டுவார்கள் என்பதை எண்ணிப் பார்க்கும்போது நல்ல எதிர்காலம் இருக்கிறது என்ற பிரமை ஏற்படுகிறது.

மதிப்புக்கூட்டிய வரி, அவைகள் செய்யும் முதலீட்டிற்கு ஏற்ப 21 ஆண்டுகள் வரை திருப்பி அளித்திடவும் முடிவு செய்யப்பட்டது.

சென்னைக்கு அருகில் நான்காயிரத்து 150 கோடி ரூபாய் முதலீட்டில் மோட்டார் வாகனத் திட்டங்கள் அமைப்பதற்காக அசோக் லேலண்டு மற்றும் நிசான் நிறுவனங்களுக்கு ஏற்கெனவே வழங்கப்பட்டுள்ள அமைப்பு முறையிலான தொகுப்புச் சலுகைகளில் சில மாறுதல்கள் செய்வதென முடிவு செய்யப்பட்டது.

பிரான்சு நாட்டைச் சேர்ந்த 'மிச்சலின் ' நிறுவனம் 4 ஆயிரம் கோடி ரூபாய் முதலீட்டில் திருவள்ளூர் மாவட்டம், தேர்வாய்கண்டிகையில் டயர் உற்பத்தித் தொழிற்சாலை நிறுவுவதற்கு அனுமதி வழங்குவதென முடிவு செய்யப்பட்டது.

காஞ்சிபுரம் மாவட்டம், பிள்ளைப்பாக்கம் 'சிப்காட்' தொழிற் பூங்காவில் 350 கோடி ரூபாய் முதலீட்டில் கட்டுமான இயந்திரங்கள் மற்றும் இயந்திரக் கருவிகள் தயாரிக்கக்கூடிய 'தூசான் இன் ஃப்ராகோர்' நிறுவனத்திற்கு அனுமதி வழங்குவதென முடிவு செய்யப்பட்டது.

சென்னைக்கு அருகில் ஒரகடம் 'சிப்காட்' தொழிற் பூங்காவில் 250 கோடி ரூபாய் முதலீட்டில் மோட்டார் வாகனங்களுக்கான பல்வேறு மின்னணு சாதனைங்களைத் தயாரிக்கும் அமெரிக்க நாட்டைச் சேர்ந்த 'டெல்ஃபி' நிறுவனத்தின் திட்டத்திற்கு அனுமதி வழங்குவதென முடிவு செய்யப்பட்டது.

சென்னைக்கு அருகில் 1,500 கோடி ரூபாய் முதலீட்டில் எண்ணெய் மற்றும் வாயு துரப்பண சாதனங்கள் மற்றும் கண்ணாடி ஆகியவைகளை தயாரிக்கக்கூடிய ஹர்ஷா நிறுவனத்தின் திட்டத்திற்கு அனுமதி வழங்குவதென முடிவு செய்யப்பட்டது.

திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் 2 ஆயிரத்து 512 கோடி ரூபாய் முதலீட்டில்கொதிகலன்கள்,மின் உற்பத்தி இயந்திரங்கள் ஆகியவற்றை தயாரிக்கும் தொழிற்சாலை அமைப்பதற்காக 'செதார் வெசல்ஸ்' நிறுவனத்தின் திட்டத்திற்கு அனுமதி வழங்குவதென முடிவு செய்யப்பட்டது.

தூத்துக்குடி மாவட்டம், சாகுபுரத்தில் 460 கோடி ரூபாய் முதலீட்டில் ஒருங்கிணைந்த காஸ்டிக் சோடா ஆலை மற்றும் இரும்பு ஆக்சைடு, கால்சியம் குளோரைடு போன்றவற்றைத் தயாரிக்கக்கூடிய டி.சி.டபிள்யூ. நிறுவனத்தின் தொழிற்சாலைத் திட்டத்திற்கு அனுமதி வழங்குவதென முடிவு செய்யப்பட்டது.

இந்திய ஆட்சிப் பணி நிலைப் பிரிவின் தமிழகத்திற்கான அங்கீகரிக்கப்பட்ட பதவிகளின் மொத்த எண்ணிக்கையை குறைக்க வேண்டுமென்று 20.3.2002 அன்று முந்தைய ஆட்சிக்காலத்தில் அமைச்சரவை மேற்கொண்ட முடிவை கைவிடுவதென்றும்; தற்போது மத்திய அரசு அந்த எண்ணிக்கையை 325–இலிருந்து 355–ஆக உயர்த்தியுள்ளதை ஏற்பதென்றும் முடிவு செய்யப்பட்டது.

2008–2009ஆம் கல்வியாண்டிலிருந்து அரசு மற்றும் அரசு நிதி உதவி பெறும் பள்ளிகளில் 'தமிழ்வழி' மற்றும் 'ஆங்கிலவழி' பிரிவுகளில் 6ஆம் வகுப்பு முதல் 12ஆம் வகுப்பு வரை பயிலும் மாணவ, மாணவியரிடமிருந்து ஆண்டுதோறும் பல்வேறு தலைப்புகளின்கீழ் வசூலிக்கப்படும் சிறப்புக் கட்டணத்தை இரத்து செய்து ஆணை வெளியிடப்பட்டதற்கு பின்னேற்பு வழங்குவதென்று முடிவு செய்யப்பட்டது.

தமிழகத்தில் அனைத்துப் பள்ளிகளிலும் சமச்சீர் கல்வி முறையை நடைமுறைப்படுத்துவதற்கு; ஒரு நபர் குழு மேலும் சில கல்வியாளர்களை இணைத்துக் கொண்டு, அந்தக் குழு வேறு சில மாநிலங்களுக்குச் சென்று அங்கெல்லாம் சமச்சீர் கல்வி முறை எப்படி அமல்படுத்தப் படுகின்றது என்பதை அறிந்து வந்து, அதற்குப் பிறகு அவர்களின் பரிந்துரைகளைப் பெற்று அமைச்சரவைக் கூட்டத்திலே விவாதிப்பதென்று முடிவு செய்யப்பட்டது.

தொழில் அல்லது வணிக நிறுவனங்கள் 15 ஸ்டான்டர்ட் ஏக்கர் என்ற உச்சவரம்பிற்கும் அதிகமாக நிலத்தை வைத்திருப்பதற்கும் அல்லது வாங்குவதற்கும்; கல்வி நிறுவனம் அல்லது மருத்துவமனை முதலியவற்றை நிறுவும் நோக்கத்திற்காக உச்சவரம்பு பரப்பளவிற்கும் அதிகமாக நிலத்தை வைத்திருப்பதற்கும் அல்லது வாங்குவதற்கும் அரசிடம் விண்ணப்பம் செய்து அனுமதி பெற்றுக்கொள்ளும் வகையில்–1961ஆம் ஆண்டு இயற்றப்பட்ட தமிழ்நாடு நிலச் சீர்திருத்தச் (நில உச்சவரம்பை நிர்ணயித்தல்) சட்டத்திலுள்ள பிரிவுகள் 37–A மற்றும் 37–B ஆகிய பிரிவுகளுக்கு திருத்தம் செய்வதென்று முடிவு செய்யப்பட்டது.

நடுத்தர மக்கள் பலர், தங்கள் நகைகளை அடகு வைத்தும் அல்லது வங்கிகளில் கடன் பெற்றும் அல்லது தமது சேமிப்பின் மூலமாகவும், குடியிருக்க ஒரு இடம் தேவை என்ற நோக்கத்தை நிறைவு செய்து கொள்வதற்காக–1978ஆம் ஆண்டு இயற்றப்பட்ட தமிழ்நாடு நகர்ப்புற (நில உச்சவரம்பு மற்றும் முறைப்படுத்துதல்) சட்டத்தின்கீழ் உச்சவரம்பிற்கு மேல் மிகை வெற்று நிலம் என்று அறிவிக்கப்பட்டு கையகப்படுத்தப்பட்ட நிலங்களை கிரையம் பெற்று–வீடுகள் கட்டிக் குடியிருந்து வருகின்றனர். நில உச்சவரம்புச் சட்டத்தின் கீழ் கையகப்படுத்தப்பட்ட நிலங்கள் என்பதை அறியாமல் கிரையம் பெற்ற நிலங்களை – ஒன்றரை கிரவுண்டு வரை உள்ள நிலப் பரப்பிற்கு நிலமதிப்புத் தொகையையும்; ஒன்றரை கிரவுண்டிற்கு மேல் மூன்று கிரவுண்டு வரை உள்ள நிலப் பரப்பிற்கு இரண்டு மடங்கு நிலமதிப்புத் தொகையையும்; மூன்று கிரவுண்டிற்கு மேல் உள்ள நிலப்பரப்பிற்கு மூன்று மடங்கு நிலமதிப்புத் தொகையையும் வசூல் செய்துகொண்டு–வரன் முறைப்படுத்துவதென்றும்; குடியிருப்பு நோக்கத்திற்காக மட்டுமன்றி வேறு எந்த பயன்பாட்டிற்கும் நிலத்தைப் பயன்படுத்தி வந்தாலும் அவர்களும் பயனடையும் வகையில் நிலமதிப்புத் தொகை வசூல் செய்து கொண்டு வரன்முறைப்படுத்துவதை விரிவுபடுத்துவதென்றும் முடிவு செய்யப்பட்டது.

சென்னை மாநகரினை மக்கள் வசிப்பதற்கு மிகவும் ஏற்ற பெருநகரமாகவும்–பொருளாதாரத்தில் வலுவானதாகவும் – தூய்மையான சுற்றுப்புறச் சூழல் நிறைந்ததாகவும் – வருங்காலத் தலைமுறையினருக்கு நல்லதொரு சொத்தாகவும் – உருவாக்கிட வேண்டும் என்ற நோக்கத்தோடு வரையப்பட்டுள்ள சென்னை மாநகரின் இரண்டாம் முழுமைத் திட்டம் அனைத்துத் தரப்பினருக்கும் நல்ல பயன் அளித்திடும் என்பதால், அதற்கு ஒப்புதல் அளிப்பதென்று முடிவு செய்யப்பட்டது.

கடந்த 18 ஆண்டுகளாக உதவி வேளாண்மை அலுவலர் பதவிக்கு நேரடி நியமனம் செய்யப்படாத நிலையில், வயது வரம்பைக் கடந்து வேலைவாய்ப்புக்காக காத்திருப்போரின் வாழ்க்கை நலனைப் பாதுகாத்திட, உதவி வேளாண்மை அலுவலர் பதவி நியமனத்திற்கான அதிகபட்ச வயது வரம்பை ஒரே ஒரு முறை மட்டும் மேலும் ஐந்தாண்டுகள் உயர்த்தி – தற்போது வேளாண்மைத் துறையில் காலியாக உள்ள 1,707 உதவி வேளாண்மை அலுவலர் பணியிடங்களை வேலைவாய்ப்பு அலுவலகம் மூலம் நிரப்பிடுவதற்கு அனுமதி வழங்குவதென்று முடிவு செய்யப்பட்டது. ❖

அண்ணா 100

## வணக்கத்துக்கு உரியோர்



**மு**ன்பு தரிசாகக் கிடந்த இடத்தை விளை நிலமாக்கிட வியர்வை சிந்துவோர், குறை அளவு இயங்கி வந்த இயந்திரச் தொழிற்சாலையை முழு அளவு இயங்கிடச்செய்யப் பாடுபடுவோர், மக்களின் வசதிப் பெருக்கத்துக்காக உற்பத்தி, விநியோகம், ஆகியவற்றில் ஈடுபட்டு அதனை நேர்மையான முறையில் நடத்துவோர், இவர்களெல்லாம் நம் வணக்கத்துக்கு உரியவர்கள்.



அண்ணா 100

## தொழிலாளர்கள்

"**ந**மது நாட்டில் ஒரு கெட்ட பழக்கம்–படிப்பவன் வேலை செய்யமாட்டான். வேலை செய்பவன் படிக்கமாட்டான். ஆனால் இந்த நிலை மெல்ல, மெல்ல மாறி, தொழிலாளர்கள், தங்கள் வேலை நேரம் போக, ஓய்வு நேரத்தில் கல்வியறிவை வளர்த்துக் கொண்டாக வேண்டும் என்ற நிலை வந்திருக்கிறது. இவ்வாறு அவர்கள் கல்வி பெறுவது, அவர்கள் தொழிலுக்கே பயன்படும்.

அதோடு கூட, மற்ற பொது அறிவைப் பெறுவது நல்லது. உதாரணமாக அரசாங்க நிதி நிலையைப் பற்றி அவர்கள் தெரிந்து கொள்வது நல்லது. அவ்வாறு தெரிந்திருந்தால், அளவுக்கு மீறிய கோரிக்கைகளை எழுப்ப மாட்டார்கள். "நாம் கேட்டால்கூட, அவர்கள் எங்கிருந்து தருவார்கள்?" என்பது தெரிந்து விட்டால், கேட்கவே மாட்டார்கள்".





# ஒரு ரூபாய்க்கு ஒரு கிலோ அரிசி அண்ணாவின் கனவு நிறைவேறியது

சென்னை, இராதாகிருஷ்ணன் நகரில் 15-9-2008 அன்று, பேரறிஞர் அண்ணா நூற்றாண்டையொட்டி தமிழக அரசின் ஒரு ரூபாய்க்கு ஒரு கிலோ அரிசி வழங்கும் திட்டத்தைத் தொடங்கிவைத்து **மாண்புமிகு** தமிழ்நாடு முதலமைச்சர் **கலைஞர்** அவர்கள் ஆற்றிய உரை வருமாறு :

ஒரு கிலோ அரிசி ஒரு ரூபாய்க்கு வழங்குகின்ற தொடக்க விழா நிகழ்ச்சியை சென்னையிலே இராதாகிருஷ்ணன் நகரில் தொடங்குகின்ற இந்த வைபவத்தில் ஆயிரக்கணக்கில் குழுமியிருக்கின்ற உங்களையெல்லாம் சந்திப்பதில் நான் மிகுந்த மகிழ்ச்சியடைகிறேன்.

எனக்கு இந்த நாள் ஒரு மகிழ்ச்சியான நாள். சோக ரேகை ஒரு புறத்திலே இதயத்திலே படர்ந்தாலும் கூட அதையும் மீறிக்கொண்டு நம்மையெல்லாம் ஆளாக்கிய அறிஞர் அண்ணா பிறந்து, அவருடைய பணியினை, அவருடைய அறிவை, ஆற்றலை இந்தத் தமிழகம் நூறாண்டு காலம் பயன்படுத்திக்கொள்ள முடியாவிட்டாலும், பயன்படுத்திக் கொண்ட ஏறத்தாழ 60 ஆண்டு காலத்தில் 600 ஆண்டுகாலப் பயனை அனுபவித்திருக்கிறது, பெற்றிருக்கிறது என்கின்ற அந்த எண்ணத்தின் காரணமாக நான் மகிழ்ச்சியோடு இந்த நாளில் இருப்பதாக கூறினேன்.

### மக்களுக்காக தொடர்ந்து உழைக்கிறேன்

மகிழ்ச்சிக்கு அதுமாத்திரம் காரணமல்ல; 60 ஆண்டுகளுக்கு முன்பு, இதேநாளில்தான் என்னுடைய திருமண விழா நடைபெற்றது. நான் திருமணம் புரிந்து கொண்டு 60 ஆண்டு காலம் ஆகிறது. 60 ஆண்டு கால திருமண வாழ்க்கையில் இல்வாழ்க்கையிலே ஈடுபட்ட நான் தமிழகத்து மக்களுடைய வாழ்க்கை நல்வாழ்க்கையாக அமைய வேண்டும் என்பதற்காக இத்தனை ஆண்டு



காலம், ஏறத்தாழ 70 ஆண்டு காலத்திற்கும் மேலாக எழுதியும், பேசியும், மக்களுக்காகத் தொடர்ந்து பாடுபட்டும், சிறை சென்றும் உழைத்திருக்கின்றேன்.

அந்த உழைப்புக்கு உற்ற பயன் எனக்கு கிடைக்கவேண்டும் என்பதற்காக அல்ல. இந்த நாட்டு மக்களுக்குக் கிடைக்கவேண்டும் என்பதற்காக பெரியார் அவர்கள் எண்ணிய எண்ணங்களெல்லாம் ஈடேறவேண்டும் என்பதற்காக, பெரியாரால் உருவாக்கப்பட்ட பேரறிஞர் அண்ணா, அவர் யாத்துத் தந்த அறிவுரைகள், அவர் சிந்தித்த எண்ணங்கள், இவைகளெல்லாம் வெற்றிபெற வேண்டும் என்பதற்காக, அவர்களோடு இணைந்து நான் பணியாற்றி, பாடுபட்டு, அதனுடைய விளைவை இன்றைக்கு உங்களோடு சேர்ந்து காணுகின்ற வாய்ப்பைப் பெற்றிருக்கின்றேன்.

அத்தகைய வாய்ப்புக்களிலே ஒன்றுதான் இன்றைக்கு ஏழை, எளிய மக்களுக்கு “ஏழையின் சிரிப்பில் இறைவனைக் காண்போம்” என்று எங்கள் அண்ணன் போதித்த, மொழிந்த அந்தப் பொன்மொழியை மெய்ப்பிக்கின்ற வகையிலே அந்தச் சிரிப்பைக் காண படி அரிசி போடவேண்டும் என்று 1967ஆம் ஆண்டு அவர் அறிவித்தார். அறிவித்த அண்ணா அவர்கள், நெடுங்காலம் வாழ முடியாத காரணத்தாலும், அன்றைய பொருளாதார தட்பவெட்பங்கள் மற்றைய சூழ்நிலைகள் இடம் தராத காரணத்தால் அதை இன்றைக்கு நிறைவேற்றி மிகப் பொருத்தமாக அண்ணா அவர்களுடைய நூற்றாண்டு விழாவிலே அதை நான் மிகுந்த மகிழ்ச்சிக்கு உள்ளாகியிருக்கின்றேன்.

அண்ணாவினுடைய எண்ணங்களிலே் ஒன்றுதான் கனவுகளிலே ஒன்றுதான் சென்னை இராஜ்ஜியத்திற்கு தமிழ்நாடு என்று பெயர் வைக்கவேண்டும் என்பதாகும். அந்த தமிழ்நாடு என்ற பெயரை அண்ணாவே சூட்டி மகிழ்ந்தார். சுயமரியாதை திருமணங்களெல்லாம் சட்டப்படி செல்லுபடியாகவேண்டும். அதற்காக குரல் கொடுக்க வேண்டும், அதற்காக சட்டம் இயற்ற வேண்டும் என்று அண்ணா சொன்னார். அதை அவர் ஆட்சியில் இருந்த காலத்திலே நிறைவேற்றிக் காட்டினார்.

### மக்களின் மகிழ்ச்சி

ஆனால், ஒரே ஒரு தயக்கமும், ஏக்கமும் நமக்கு இருந்தது. படி அரிசி திட்டம் என்ற ஒரு திட்டத்தை ஏழை எளிய மக்களுக்காக, நடுத்தர மக்களுக்காக , நம்முடைய அண்ணன் அறிவித்ததை நிறைவேற்ற முடியாமல் போய்விட்டதே என்பதுதான் அந்த ஏக்கமும், வருத்தமும். அதை நிறைவேற்றுகிற நாளாக இந்த நாள் அமைந்து, படி அரிசி திட்டம் வெற்றி பெற்றது, அண்ணாவினுடைய கனவு நிறைவேறியது என்கின்ற மகிழ்ச்சி நமக்கெல்லாம் இன்று ஏற்பட்டிருக்கிறது.

தமிழ்நாட்டு மக்கள் பெற்றிருக்கின்ற மகிழ்ச்சியைக் கண்டும்கூட, ஏழையினுடைய இதயத்திலே ஏற்பட்டிருக்கின்ற அந்த இன்பத்தை உணர்ந்தும்கூட, இன்னமும் சில பேருக்கு நம்மை ஏற்றுக் கொள்ளக்கூடிய மனப்பக்குவம் வரவில்லை. நான் அதற்காக வருத்தப்படவில்லை.

### மனமும் – மனப்பக்குவமும்

நம்மை ஏற்றுக் கொள்ளக்கூடிய மனப்பக்குவம் வருவது எதிரிகளுக்கு் அவ்வளவு சாதாரணமான விஷயமல்ல. ஏனென்றால் பக்குவம் வரவேண்டும். எதிலே ? மனதிலே வரவேண்டும். மனம் இருந்தால்தான் மனப்பக்குவம் வரமுடியும். மனம் இல்லாதவர்களிடத்திலே மனப்பக்குவம் எதிர்பார்ப்பது நம்முடைய மடமையே அல்லாமல் வேறல்ல. சிலர் இன்னமும் திட்டுகிறார்கள். இந்த அரிசி குறைந்த விலைக்கு கருணாநிதி கொடுப்பதாகச் சொல்லியிருக்கிறாரே, இந்த அரிசி திருட்டுப்போய்விடும் என்று சொல்லுகிறார்கள். ஏன் இந்த சந்தேகம் ? திருடனுக்கு வரவேண்டிய சந்தேகம். நமக்கெல்லாம் வரலாமா ?

இந்த அரிசி ஒழுங்காக விநியோகிக்கப்பட மாட்டாது, இந்த அரிசி கருப்பாக இருக்கும், இந்த அரிசி தரமாக இருக்காது, இதெல்லாம் ஒரு விமர்சனம் அல்ல. பக்கத்து வீட்டிலே திருமணம் என்றால், அவர்களும் ஒரு அழகான பெண்ணைப் பார்த்து திருமணத்திற்கு தேதி குறித்து, அழைப்பிதழ் கொடுத்தபோது, அழைப்பிதழைப் பார்த்துவிட்டு, பக்கத்து வீட்டுக்காரன் சொல்லுவான், தன்னுடைய சொந்தக்காரர் இடத்திலும், மாமனிடத்திலும், மச்சானிடத்திலும், அந்த வீட்டில் பெண் பார்த்திருக்கிறாயே அவ்வளவு ஒண்ணும் கலரா இல்லையாமே. ரொம்ப கருப்பாக இருக்காமே. அதுல ஒரு திருப்தி. அது கருப்பாக இருப்பதில் அவனுக்கொரு திருப்தி.

அண்ணா 100



## தமிழன் வாழ்வு

தமிழன் வாழவேண்டிய நல்வாழ்வு தன்னை மட்டுமே வாழ்வித்துக் கொள்ளக்கூடியதல்ல; தமிழன் நல்வாழ்வு வாழவேண்டும் என்பது, மற்றவர்களை வாழவைக்க வேண்டும் என்பதுதான்!

கால் கொஞ்சம் ஊனமாமே அதற்கு, ஊனமோ இல்லையோ, இவனுடைய நெஞ்சம் ஊனம். ஆகவே அந்தப் பெண்ணுடைய கால் ஊனமாகத் தெரிகிறது. குறைகள் இருக்கலாம், எந்தவொரு திட்டத்திலும் நிறைவேற்றும் பொழுது குறைகள் ஏற்படலாம். எல்லாம் நிறைவாகவே நடைபெறும் என்று எந்த அரசிலும் சொல்ல முடியாது. நாளைக்கு காந்தியடிகளே மறு அவதாரம் ஏடுத்து முதலமைச்சராகவோ, பிரதம அமைச்சராகவோ அமருவாரேயானால், அவருடைய ஆட்சியிலே குறைவே இல்லை, நிறைவாகவே எல்லாம் இருந்தது என்று சொல்லமுடியாது. கடவுள் நம்பிக்கை உள்ளவர்களுக்குச் சொல்லுகிறேன், கடவுளேகூட அவதாரம் எடுத்து வந்து அவரே ஆட்சி புரிய ஆரம்பித்தால் அந்த ஆட்சியிலேகூட குறை இருக்கத்தான் செய்யும்.

எனவே எந்தவொரு நல்ல காரியத்தைச் செய்தாலும், அதிலே குறை இல்லாமல் போகாது. குறை இருப்பதற்காக நல்ல காரியமே வேண்டாமென்றிருந்தால், அதைவிட பைத்தியக்காரத்தனம் வேறு எதுவும் இருக்க முடியாது. இருக்கின்ற குறையைச் சுட்டிக்காட்டி, அதைக் களைந்திடச் செய்யுங்கள். இருக்கிற குறை இது, இது என்று குறிப்பிட்டுச் சொல்லுங்கள். அப்படி குறிப்பிட்ட குறைகளை எண்ணிப்பார்த்து அவைகளைக் களைந்து நிறைவாகச் செய்ய முற்படுகிறோம்.

அப்படிச் சொல்லாமல், இந்தத் திட்டமே உருப்படாது, இந்தத் திட்டமே தேவையில்லை என்று சொன்னால், நீங்கள் என்னைச் சொல்லவில்லை, என்னை வளர்த்த தலைவர் ஏன், நீங்கள் யாருடைய பெயரைச் சொல்லி வளர விரும்புகிறீர்களோ, அந்தத் தலைவர் அறிஞர் அண்ணா 1967ஆம் ஆண்டு அறிவித்த திட்டம் படி அரிசித் திட்டம் அதையே குறை கூறுகிறீர்கள். படி அரிசி போட்டால் நாடு உருப்பட்டுவிடுமா என்று கேட்கிறீர்கள். ஒரு பெரிய தலைவர் சொல்லியிருக்கிறார். இது விலை குறைவு. ஆகவே வாங்கிச் சாப்பிடுங்கள் என்று கருணாநிதி சொல்லுகிறார். விஷம் கூட விலை குறைவாகக் கிடைத்தால் வாங்கி சாப்பிட்டுவிடுவாரா என்று கேட்கிறார். அப்படி விஷத்தை வாங்கி சாப்பிடுகின்ற அளவுக்கு நிலைமை ஒன்றும் ஏற்பட்டுவிடவில்லை.

**உண்மையான விமர்சனம் அல்ல**

இவைகளெல்லாம் நல்ல எழுத்தாளர்களாக இருந்தவர்களுக்கு, நல்ல பேச்சாளர்களாக, நல்ல தலைவர்களாக, மக்கள் சக்தியைத் திரட்டுபவர்களாக, மக்களுக்காக உழைப்பவர்களாக இருந்தவர்களுக்கு, தியாகச்சீலர்களாக விளங்கியவர்களுக்கு இப்படிப்பட்ட எண்ணம் வரும்போது எனக்கு என்ன தோன்றுகிறது என்றால், ஏ அப்பா, திராவிட முன்னேற்றக்கழக ஆட்சியிலே நாம் எடுத்து வைக்கின்ற ஒவ்வொரு அடியும், அந்தக் காலத்திலே சொல்லுவார்களே, மாவலியினுடைய தலையிலே வாமனன் எடுத்து வைத்த அடியைப்போல இவர்களுக்குத் தோன்றுகிறதே என்ன காரணம் என்றுதான் நான் வருத்தப்படுகிறேன், நான் ஆச்சரியப்படுகிறேன். இது பொறாமையின் காரணமாக, அசூயையின் காரணமாக ஏற்படுகின்ற ஒரு கருத்தே தவிர, இது உண்மையான கருத்தல்ல. உண்மையான விமர்சனம் அல்ல.

ஏழைக்கு, இல்லாதவர்க்கு, பசியோடு இருக்கின்ற பாமர மனிதனுக்கு, நடுத்தர மக்களுக்கு, அவர்களுடைய வாழ்க்கையிலே, அவர்களுடைய துன்பத்திலே செலவு ஓரளவு குறைய, செலவைச் சிக்கனப்படுத்த இந்தத் திட்டம் உதவுகிறதா இல்லையா என்பதை எண்ணிப் பார்க்க வேண்டுமே தவிர, இந்தத் திட்டத்திலே என்ன ஒட்டை, உடைசல் என்றெல்லாம் பார்த்து, அதற்காக திட்டமே தேவையில்லை என்று சொல்லுவது நல்லதல்ல.

அண்ணா 100



## மக்களாட்சி

"தூய்மை நிறைந்த மக்களாட்சி முறை தேவைப்படும்போது; பொது நோக்கத்துக்குத்தான் கட்டுப்படுமேயன்றி கட்சிக் கொடிகளுக்கு அன்று: அங்ஙனமாயின் கட்சிகள் பலப்பல ஏன்? தனித்தனிக் கொடிகள் ஏன்? என்று கேட்கப்படுகிறது. ஒரு பொது நோக்கத்துக்காகப் பாடுபடும் மாண்பு மக்களாட்சிக்கு உண்டு என்பதாலேயே எல்லாவற்றையுமே கூட்டிக் கலக்கி ஒருருவாக்கிப் பேருருவாக்கிவிட எண்ணுவது பேதைமை மட்டுமல்ல; கேடு விளைவிக்கக் கூடியதே!

மலர்களை உதிர்த்து இதழ்கள் குவித்திடலாம்; இதழ்களைக் குவித்துப் புதிய பூக்களை மலரச் செய்திட முடியாது! மலர்களைத் தொடுத்து மாலைகளாக்கலாம்– செடிகள் மாலை மாலையாகவே ஏன் தந்துவிடக்கூடாது என்று எண்ணுவது வேடிக்கை நினைப்பன்றி வேறில்லை! தனித்தனி முக்கனி பிழிந்து வடித்து ஒன்றாகக் கூட்டச் சொன்னார் சான்றோர்; தனித்தனிக் கனிகளே கூடாது என்றாரில்லை".



நாட்டுக்கு உகந்ததல்ல. இந்தத் திட்டத்தை எல்லோரும் எல்லாக் கட்சியிலே உள்ளவர்களும் ஆதரிக்க வேண்டும், ஆதரிக்காமல் இருந்தால் மக்கள் முன்னால் அவர்கள் குற்றவாளிகளாக தங்களை அறியாமல் நிறுத்தப்படுவார்கள் என்பதை சொல்ல விரும்புகின்றேன்.

ஒன்றை நீங்கள் கவனிக்க வேண்டும். குழந்தைகளுக்கு சத்துணவுத் திட்டத்தை பெருந்தலைவர் காமராசர் கொண்டு வந்தார். அப்போது அதை யாரும் குறை கூறவில்லை. அதிலே அங்கொன்றும் இங்கொன்றுமாக நடைபெற்ற செயல்களில் சிறுசிறு குறைகள் இருந்தன. அவைகள் சுட்டிக்காட்டப்பட்டன அரசுக்கு. அரசு அதை திருத்த முற்பட்டது.

அதற்குப் பிறகு என்னுடைய அருமை நண்பர் எம்.ஜி.ஆர் அவர்கள் சத்துணவுத் திட்டத்தைக் கொண்டு வந்தார்கள். அப்படி கொண்டு வந்தபோது, நான் சட்டப்பேரவையில் கேட்டதெல்லாம் இதை இப்படியெல்லாம் மாற்றி அமைக்கலாமே, இந்தத் திட்டத்தை இப்படியெல்லாம் நடைமுறைப்படுத்தலாமே என்று திட்டத்திற்கு ஆதரவாக யோசனைகளை சொன்னேனே தவிர திட்டமே தவறு, திட்டமே மக்களை ஏமாற்றுவதற்கு என்று நான் சொல்லவில்லை. அந்தத் திட்டத்தை நீங்கள் அறிவித்து 3 மாதம் ஆகிறதே. எப்பொழுது அமல்படுத்தப்போகிறீர்கள் என்று கேட்டிருப்பேனே தவிர, திட்டம் வேண்டாம் என்று சொன்னதில்லை.

**அண்ணா அறிவித்த திட்டம்**

ஆனால் இன்றைக்கு நாம் கொண்டு வருகிற திட்டம், அண்ணா அறிவித்த திட்டம்; அதை தி.மு.க. ஆட்சி கொண்டுவருகிறது என்பதற்காக திட்டத்தையே குறைகூறுகிறார்கள் என்றால் இவர்களுக்குத் திட்டத்தின் மீது அல்ல, இவர்களுக்கு இருக்கின்ற வெறுப்பு, இவர்களுக்கு இருக்கின்ற பொறாமை, இவர்களுக்கு இருக்கிற அசூயையெல்லாம் தி.மு.கழகம் மீது தானே தவிர, திட்டத்தின் மீது அல்ல என்பதை நீங்கள் புரிந்து கொண்டு, இந்தத் திட்டத்தை எல்லோரும் ஒருமுகமாக, இது பொதுப் பிரச்சினை, உணவுப் பிரச்சினை. பசியைப் பற்றி நம்முடைய விழாத் தலைவர் வேலு அவர்கள் நல்ல நேரத்தில் சரியான நேரத்திலே மிக விளக்கமாக பேசினார். மாலையிலேதான் கவியரங்கம் இருக்கிறது. இப்பொழுது காலையிலேயே கவியரங்கத்திற்கான பீடிகையைப் போட்டு அவர் மணிமேகலை போன்ற இலக்கியங்களையெல்லாம் இங்கே எடுத்துச் சொன்னார். மணிமேகலை கையிலே அட்சயப் பாத்திரம் இருந்ததைப்போல, இன்றைக்கு மாநிலத்தை ஆளுகின்ற நம்முடைய கையிலே அட்சயப்பாத்திரம் வரமுடியாது, வராது.

ஆனாலும் நான் சொல்லுகின்றேன், அட்சயப் பாத்திரங்களாக அரசினுடைய திட்டங்களும், அங்கீகாரங்களும், அதை விநியோகிப்பவர்களே இருந்தால் பசியை சுலபமாகப் போக்கலாம், எளிதாகப் போக்கலாம், பசி என்பதே என்னவென்று தெரியாமல் மக்களை மகிழ்ச்சியாக வாழ வைக்கலாம். அப்படி மகிழ்ச்சியாக வாழ வைக்க இன்றைக்குத் தொடங்கப்பட்டிருக்கின்ற இந்தத் திட்டம் பரவலாக தமிழகம் முழுவதிலும் விரைவிலே அமல்படுத்தப்படும். நாளையிலிருந்து நம்முடைய அமைச்சர் பெருமக்களும், மக்களுடைய பிரதிநிதிகளும் ஆங்காங்கு இந்த அரிசி வழங்குகின்ற திட்டத்தை 16ஆம் தேதி முதல் தொடர்ந்து அதிலே ஈடுபட இருக்கின்றார்கள். அதற்குப் பிறகு நியாயவிலைக் கடைகள் மூலமாகவும், மாவட்ட அதிகாரிகள் மூலமாகவும் இந்த அரிசி வழங்கப்பட இருக்கிறது. இவைகளை நல்ல முறையிலே வழங்கப்பட எல்லோரும், யாரோ சில பேர் காவல் புரிய வேண்டும். பாதுகாக்க வேண்டும் என்று இல்லாமல் எல்லா மக்களும், எல்லா பொதுமக்களும், எல்லா கட்சியைச் சேர்ந்தவர்களும் கண்காணித்து இந்தத் திட்டம் நல்ல முறையிலே நடைபெற ஒத்துழைக்க வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கின்றேன்.

பத்திரிகைக்காரர்கள் ஒன்று நடந்த பிறகு எழுதுவதை விட, நடக்காமலே பார்த்துக்கொள்ள பத்திரிகைகாரர்களும் ஒத்துழைக்க வேண்டும் என்பதை கேட்டுக்கொள்கின்றேன். இப்பொழுது பத்திரிகைகள் என்ன செய்கின்றன என்றால், ஒரு நூறு மூட்டை அரிசி பிடிபட்டது என்றால், பிடித்த அதிகாரிகளைப் பாராட்டாமல், இந்த அரசாங்கத்தில் 100 மூட்டை அரிசி பிடிபட்டது, களவானது என்று குறை கூறத்தான் அந்தச் செய்தியைப் பயன்படுத்துகிறார்களே அல்லாமல், சரி பிடிபட்ட அரிசி எந்த அரிசி யாரால் மீண்டும் கைப்பற்றப்பட்டது, அந்த அரிசியைக் களவாடியவர்கள் கைது செய்யப்பட்டார்களா இல்லையா, தண்டிக்கப்பட்டார்களா இல்லையா என்ற செய்திகளை பத்திரிகைகள் போடுவதில்லை. இடம் இல்லாத காரணத்தால் அல்ல, இதயம் இல்லாத காரணத்தால். ஆகவே எல்லோரும் இதயத்தைப் பெற்று இந்த நல்ல முயற்சிக்கு ஒத்துழைப்பு தரவேண்டும் என்று கேட்டுக்கொண்டு விடைபெறுகிறேன். ★

## மாநகராட்சி மன்றம் என்பது பெருமைக்காக, சொல்வழக்குக்காக அல்ல, மக்களுக்கு அதிக அளவில் பணியாற்றத்தான் என்பதை உணர்ந்து செயல்படவேண்டும்

கொண்டிருக்கின்றது. பந்தல் நிரம்பி வழிந்து பந்தலுக்கு வெளியேயும் பல்லாயிரக்கணக்கான மக்கள் காத்திருந்து வாழ்த்துக் கூறுகின்ற வகையில் இப்படி ஒரு திருவிழா நடைபெறுகிறது என்றால் இது அவரவருக்கு உரிய விழாவாக – அவரவர்களுடைய குடும்பத்திலே நடைபெறுகின்ற நல்லதொரு நிகழ்ச்சியாகக் கருதப்படுகின்ற காரணத்தினாலேதான், இந்த அளவிற்கு உணர்ச்சிப் பெருவெள்ளத்தை– அலைமோதுகின்ற ஆர்வத்தை என்னால் இங்கே காணமுடிகின்றது.

வேலூருக்கு மாநகராட்சித் தகுதி வேண்டும் என்று பல காலமாக நம்முடைய கழகத்தின் சார்பில், நகராட்சித் தலைவர்களாக வீற்றிருந்தவர்களானாலும் சரி,

### 1-8-2008 அன்று நடைபெற்ற வேலூர் மாநகராட்சி தொடக்கவிழாவில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் **கலைஞர்** அவர்கள் ஆற்றிய உரை.



**வே**லூரில் நடைபெறுகின்ற இந்த விழா தம்பி துரைமுருகன் இங்கே விவரித்துக் காட்டியவாறு சென்னையிலே தொடங்கி, இங்கே இந்த மைதானம் வரையில் கோலமிகு விழாவாக – கடல் அலைபோல் மக்கள் நிரம்பி வழிகின்ற விழாவாக நடைபெற்றுக் சட்டப்பேரவை உறுப்பினர்களாக நண்பர் ஞானசேகரனைப்போல வீற்றிருந்தவர்களானாலும் சரி, தொடர்ந்து கோரிக்கை வைத்து அந்தக் கோரிக்கை இன்றைக்கு நிறைவேற்றப்பட்ட வெற்றி விழாவாக அமைந்திருக்கிறது என்று சொன்னால் அது மிகையாகாது.



### இரு கொள்கைகள்

**பொ**ருள் பாடுபடுபவனுக்குப் போய்ச் சேரவேண்டும். போய்ச் சேரும் பொருளும் பயனுள்ள காரியத்துக்குச் செலவிடப்படவேண்டும். இரண்டும் நமது கொள்கை, இரு விழிகளில் ஒன்றுக்கு மற்றொன்று பாழாகக்கூடாது.



வேலூர் மாத்திரமல்ல, வேலூரை உள்ளடக்கிய வடஆற்காடு மாவட்டம், தஞ்சை மாவட்டத்திலே எனக்கு எவ்வளவு பாசமும் உறவு மனப்பான்மையும் நண்பர்களுடைய நேசமும் உண்டோ அந்தளவிற்கு, வடஆற்காடு மாவட்டத்தில் எனக்குப் பற்றும் பாசமும் தொடங்கி அது இன்றளவும் அற்றுப்போகாமல் என்னுடைய உள்ளத்தில் வாழ்ந்து கொண்டிருக்கிறது. அதனால்தான் இங்கே எனக்கு முன்னால் பேசிய நம்முடைய சட்டமன்ற உறப்பினர்களானாலும் நாடாளுமன்ற உறுப்பினர்களானாலும் மற்றுமுள்ள இயக்கத்தின் முன்னணித் தோழர்களானாலும் அவர்களெல்லாம் எடுத்துக்காட்டியதைப்போல பல சாதனைகள் இந்த மாவட்டத்திற்கு கழக அரசின் வாயிலாக கிடைத்திருப்பதை, ஆற்றப்பட்டிருப்பதை நீங்கள் அனைவரும் அனுபவ ரீதியாக உணர்ந்திருக்கின்றீர்கள்.

சிலநாட்களுக்குமுன்பு தொலைக்காட்சியில் ஆராய்ச்சியில் ஈடுபடுகின்ற ஒரு நண்பர், இளைஞர், இளைஞரைப் போன்ற தோற்றமுடையவர், வரலாற்று ஆய்வு நடத்தக் கூடியவர், அதுகுறித்த புத்தகங்கள் எழுதியிருப்பவர், அவர் தொலைக்காட்சியிலே ஒரு பேட்டியளித்தார் அந்தப் பேட்டியில் வடஆற்காடு வேலூர் பற்றி குறிப்பிடப்பட்டது என்ன காரணத்திற்காக என்றால் இந்தியாவினுடைய விடுதலைக்காக முதல் குரல் எழுந்த இடம் வடக்கே உள்ள பகுதி அல்ல, தென்னகத்தில், அதிலும் குறிப்பாகவும், சிறப்பாகவும் வேலூர் நகரத்திலேதான், இங்கேயிருந்த பட்டாளத்துச் சிப்பாய்கள்தான், அந்தக் கிளர்ச்சியை நடத்தினார்கள். அவர்கள் நடத்திய அந்த கிளர்ச்சிக்கு "வேலூர் சிப்பாய்க் கிளர்ச்சி" என்று வரலாற்றில் பெயர் உண்டு என்று அவர் குறிப்பிட்டார்.

ஆனால் சிப்பாய்க் கலகம் என்பது இந்தியாவிலேயே வடக்குப் பகுதியிலே நடைபெற்ற ஒரு விடுதலைப் போராட்டம் என்றுதான் இதுவரையில் சொல்லப்பட்டு வருகிறது. ஆனால் உண்மையில் கலகம் என்ற பெயரால் நடைபெறுகின்ற அந்தப் போராட்டத்திற்கு வித்தூன்றிய இடம் வேலூர்தான் என்று அவர் குறிப்பிட்டார். அதை பார்த்துக்கொண்டிருந்த நான் எண்ணிக்கொண்டேன், இவர் இதை இந்தத் தொலைக்காட்சியிலே சொல்வதற்கு முன்பு ஓராண்டுக்கு முன்பே இதை வேலூர் சென்று அங்குள்ள மக்களுக்கு உணர்த்தி, அதன் காரணமாக வேலூர் நகரத்தில் அந்தச் சிப்பாய் புரட்சியினுடைய 200ஆம் ஆண்டு நினைவு தினத்தை 10.7.2006 அன்றே கடைப்பிடித்து அதற்கென்று ஒது சிறப்பு அஞ்சல் தலையை வெளியிட்டு, வேலூர் கோட்டை அருகே 20.12.1998இல் அதற்கென ஒரு நினைவுத் தூணும் திறந்து வைக்கப்பட்டது. அதை நாமல்லவா செய்தோம் என்று எண்ணியபோது, என்னுடைய இதயத்திலே இனம் தெரியாத ஒரு பூரிப்பு ஏற்பட்டது.

தொலைக்காட்சியில் சொன்னவுடன், அவர் செய்த வரலாற்று ஆய்வில் அதைக் கண்டுபிடித்தாரோ என்னவோ எனக்குத் தெரியாது. கண்டுபிடித்தும், கண்டும் காணாததுபோல் இருந்துவிட்டாரோ என்னமோ எனக்குத் தெரியாது. ஆனால் உங்களுக்குச் சொல்லுகின்றேன் இந்தியாவினுடைய சுதந்திரத்திற்காகப் பாடுபட்டவர்கள் அவர்கள் வடக்கே பிறந்திருந்தால்தான் சிறப்புக்குரியவர்களாக கருதப்படுகிறார்கள். தெற்கே பிறந்திருந்தால் அதிலும் குறிப்பாகத் தமிழ்நாட்டிலே பிறந்திருந்தால் அவர்களுக்கு அந்தச் சிறப்புக் கிடையாது.

நான் சில நாட்களுக்கு முன்பு சென்னையில் ஒரு சிலையைத் திறந்துவைத்தேன். அந்தச் சிலைக்கு உரியவரின் பெயர் "ஜெய்ஹிந்த்" செண்பகராமன். செண்பகராமனுடைய சிலையைத் திறந்துவைத்தேன். கிண்டியில் ஆளுநர் மாளிகையைத் தொடர்ந்து இருக்கின்ற பசும்புல் தரையில் அந்தப் பெருவெளியில் தியாகிகளுக்காகப் பல சிலைகள், பல நினைவுச் சின்னங்களை அமைத்தது தி.மு.கழக ஆட்சிதான் அமைத்தவர் உங்கள் முன்னால் உட்கார்ந்திருக்கிற இந்தக் கருணாநிதிதான்.

தியாகிகள் எந்தக் கட்சியைச் சேர்ந்தவர்களாக இருந்தாலும், எந்த இயக்கத்தைச் சார்ந்தவர்களாக இருந்தாலும் அவர்கள் நாட்டிற்காகப் போரிட்டார்கள், நாட்டிற்காக உயிர் நீத்தார்கள், வாழ்க்கையை அர்ப்பணித்தார்கள் என்றால் அவர்களை மறவாமல் அவர்களுக்கு நினைவு மண்டபங்கள் கட்டியதும் சிலைகள் வைத்ததும் அவர் காங்கிரஸ் கட்சியா, கம்யூனிஸ்ட் கட்சியா என்றெல்லாம் பாராமல் அவர்களைப் பாராட்டி, போற்றி, புகழ்வது தி.மு.கழக அரசு என்பதை நீங்கள் அறிவீர்கள்.



### பழமை

**ப**ழங்கால ஆயுதங்களை மியூசியத்திலே நாம் பார்க்கிறோம். ஆனால் பார்வையிட்ட பின்னர் அவற்றை எடுத்துக் கொண்டு போர்புரியத் தொடங்குவதில்லை. அதுபோலத்தான் பழமைக் கருத்துகளை நாம் படிக்கலாம். ஆனால் கையாளக்கூடாது.



அதன்படி செண்பகராமனை, உங்களிலே பலர் கேள்விப்பட்டிருக்க முடியாது. படித்தவர்கள், மாணவர்கள் கேள்விப்பட்டிருக்கலாம். அரசியலில் அனுபவம் வாய்ந்தவர்கள் கேள்விப்பட்டிருக்கலாம். சாதாரண பொதுமக்கள் கேள்விப்பட்டிருக்க முடியாது. அந்த செண்பகராமனுக்கு ஒரு சிலை வைக்கப்பட்டது. அந்தச் சிலை திறப்பு விழாவை நான் நடத்தி வைத்தேன். அந்த இடத்திலேதான் சிதம்பரனார் இழுத்தாரே செக்கு. அந்தச் செக்கும் வைக்கப்பட்டிருக்கிறது. சிதம்பரனார் செக்கு இழுத்து, இந்தியாவுக்கு சுதந்திரம் வாங்க, காரணகர்த்தாக்களிலே ஒருவராகத்திகழ்ந்தார். ஆனால் அவர் இழுத்த செக்கு எங்கே இருக்கிறது என்று ஆட்சிக்கு வந்த யாரும் தேடிக்கூடப் பார்க்கவில்லை அதைப் பற்றி யாரும் கவலைப்படவில்லை.

1970 ஆம் ஆண்டில் நான் முதலமைச்சராகப் பொறுப்பேற்ற நேரத்தில் சிதம்பரனார் இழுத்த செக்கு எங்கே இருக்கிறது என்று தேடச் சொல்லி இறுதியாக அது கோயம்புத்தூர் சிறைச்சாலையிலே இருக்கிறது என்பதைக் கண்டுபிடித்து அதைக் கொண்டுவந்து சென்னையிலே கிண்டியிலே தியாகிகளுடைய மண்டபத்துக்குப் பக்கத்திலே வைத்தவன் நான்தான்.

இதை நான் சொல்வதற்குக் காரணம், தியாகிகள் எங்கே இருந்தாலும் தியாகம் எந்தக் கட்சியாலும் போற்றப்பட்டாலும் அந்தத் தியாகத்தை மதிக்கின்ற தன்மை இந்த ஆட்சிக்கு உண்டு என்பதால்தான் இதை நான் உங்களுக்குச் சொல்கிறேன். செண்பகராமன் என்று சொல்லிவிட்டு போய்விட்டேன். யார் அந்த செண்பகராமன்? திருவனந்தபுரத்துக்குப் பக்கத்தில் ஒரு கிராமத்திலே பிறந்து, தமிழகத்திலே வாழ்ந்து ஐரோப்பா கண்டமெல்லாம் இவருடைய கீர்த்தியை நிலைநாட்டி இன்னும் சொல்லப்போனால் ஹிட்லருக்கே நண்பனாகி ஹிட்லரால் மதிக்கத் தகுந்த நண்பராக இருந்து இந்திய சுதந்திர போராட்டத்துக்கு என்னென்ன உதவிகளை செய்ய வேண்டுமோ அவைகளையெல்லாம் செய்தவருடைய பெயர்தான் செண்பகராமன்.

நீங்கள் கேள்விப்பட்டிருப்பீர்கள் "எம்டன்" குண்டு என்று அந்த எம்டன் குண்டு ஒரு தனி மனிதனல்ல. அவன் போட்ட குண்டல்ல, ஒரு கப்பலில் இருந்து போடப்பட்ட குண்டு. அந்தக் கப்பலுக்குப் பெயர் "எம்டன்" கப்பல். அந்தக் கப்பலைச் செலுத்தி வந்தவர் செண்பகராமன். அவர் சென்னையிலிருந்து வெள்ளைக்காரர்களுடைய இடங்களையெல்லாம் அழிப்பதற்காக அந்த குண்டைப் போட்டார் எம்டன் கப்பலில் இருந்து. அப்படிப்பட்டவர், ஹிட்லர் ஒருநாள் தேனீர் விருந்திலே பேசிக்கொண்டிருக்கும்போது இந்தியரை இகழ்ந்துரைத்தார். இந்தியர்கள் சோம்பேறிகள் என்று சொன்னார் ஹிட்லர் என்ற காரணத்திற்காக அந்த ஹிட்லரை மன்னிப்புக் கேட்க வைத்து அதுவரையிலே அவரோடு பேச மறுத்து இறுதியாக ஹிட்லரே மன்னிப்பு கேட்டார் என்கின்ற அளவிற்கு வீரம் மிக்கவர் செண்பகராமன்.

இவையெல்லாம் சொல்வதற்குக் காரணம். அப்படிப்பட்ட வீரர்களையெல்லாம் நாம் மறந்து விட்டோம் அதைப்போலத்தான் வேலூரில் நடைபெற்ற முதல் சிப்பாய் கலகத்தை நாம் மறந்து விட்டோம், வரலாற்றிலே இடம்பெற முடியாமல் போய்விட்டது. பிறகு வந்தவர்கள் அந்த வரலாறு நமக்கு உரியதல்ல. வடக்கே உள்ள சிப்பாய்களுக்கு உரியது என்று ஆக்கினார்கள். நமக்கு உரியதாக இன்றைக்கு நாம் ஆக்கியிருக்கிறோம் என்பதை மறந்துவிடக் கூடாது.

அப்படிப்பட்ட வரலாற்றுப் பிழை நடைபெற்ற இந்த வேலூரில் அந்தப் பிழையைத் திருத்தி நம்முடைய சிப்பாய் புரட்சிக்கு ஒரு நினைவுத்தூணை நட்டு சிப்பாய் புரட்சியின் நினைவாக அகில இந்திய அளவிலே மத்திய அரசை வலியுறுத்தி ஒரு தபால் தலையையும் வெளியிட்ட பெருமை தி.மு.கழகத்தின் அரசுக்கு உண்டு. நான் கேட்கிறேன், வேலூரிலே உள்ள மக்களை, இதைவிட வேலூருக்கு இந்த வட ஆற்காட்டுச் சீமைக்கு இந்த அரசு என்ன மதிப்பும், மரியாதையும் தரவேண்டும் என்று நீங்கள் எண்ணுகின்றீர்கள்?

உங்களுக்கு இன்னும் பல கோரிக்கைகள் இருக்கின்றன. மாநகராட்சி மன்றம் மாத்திரம் வந்தால் போதாது நம்முடைய ஞானசேகரன் விமான நிலையமும் வேண்டும் என்று சொன்னார், வேண்டும். இல்லையென்று யார் மறுக்கிறார்கள், நிச்சயமாக வேண்டும். ஆனால் விமான நிலையம் வேண்டும், விமானத்திலே பறக்க வேண்டும், விமானங்கள் வந்து இறங்க இடம் வேண்டும். ஆனால் அந்த விமான நிலையத்திற்கு நிலம் வேண்டும், அந்த இடத்தை நாம் பெறுகின்ற நேரத்தில் எத்தனையோ இடையூறுகள் வரும் அந்த இடையூறுகளையெல்லாம் களையவேண்டும், இடையூறுகள் செய்வதற்காகவே சிலபேர் இன்றைக்கு நாட்டில் அரசியல் நடத்திக்கொண்டு இருக்கிறார்கள். அவர்களையெல்லாம் சமாளிக்க வேண்டும், "இது மேய்ச்சல் நிலம், இது பயிரிடுகிற நிலம். ஆகவே இங்கே விமான நிலையம் வரக்கூடாது" என்று சொல்லக் கூடியவர்கள் எல்லாம் இருப்பார்கள்.

விமான நிலையத்திற்கு இடம் வேண்டும். பிறகு நிலையம் வேண்டும். விமானத்திலே ஏறுவதற்கு பயணிகள் வேண்டும். வேலூரில் இருந்து எத்தனை பயணிகள் விமானத்தில் ஏறி சென்னைக்குச் செல்வார்கள், கொச்சிக்குச் செல்வார்கள், லண்டனுக்குச் செல்வார்கள் என்ற கணக்கெல்லாம் எடுக்க வேண்டும். இங்கு உட்கார்ந்திருக்கின்ற வேலூர் விசுவநாதன் வேண்டுமானால், வாரத்திற்கு ஒரு முறை விமானத்திலே போவார், அப்படி எத்தனை விசுவநாதன்கள் இங்கே இருப்பார்கள் என்று அந்தக் கணக்கெல்லாம் எடுக்க வேண்டும். இவ்வளவு கணக்கெடுத்த பிறகுதான் விமான நிலையம் இங்கே வரமுடியும்.

இப்படிச் சொல்கின்ற காரணத்தால், நான் ஞானசேகரன் போன்றவர்களுக்குச் சொல்லிக் கொள்கிறேன், விமான நிலையமே வராது என்று அர்த்தமல்ல, நிச்சயமாக வரும். நான் சொன்னால் அது வந்தே தீரும். எப்போது வரும் என்று கேட்டால், எப்போது என்று நான் சொல்ல இயலாது. விரைவில் வரும், விரைவில் என்றால் எவ்வளவு விரைவில் என்று கேட்டால் அதற்கு சாங்கியங்கள் இருக்கின்றன. அவைகள் எல்லாம் நிறைவேற்றிய பிறகு நிச்சயமாக விமான

அண்ணா 100



**நாடு**

**நா**டு என்பது வெறும் பூகோளப் படம் அல்ல; அங்கு வாழும் மக்களின் உணர்ச்சித் தொகுப்பே அது. கிராமங்களுக்கு நாம் உலக அறிவை ஊட்டவில்லை என்றால் அது நாட்டை வாழ வைக்காது.

அண்ணா 100



**எண்ணம்**

**தா**ங்கள் பெறாததை மற்றவர்களாகிலும் பெறவேண்டும் என்ற எண்ணம்தான் தமிழ்நாட்டுக்குக் கிடைத்த பெரும் வாய்ப்பாக உள்ளது. நாம் பெற்றதைக் காட்டிலும் மற்றவர்கள் அதிகம் பெறவேண்டும் என்ற நினைப்பே சமுதாயம் வளர்ந்து செல்லக் காரணமாகவும் உள்ளது.

நிலையம் வேலூருக்கு வரும். அதற்கு முன்பு வரவேண்டியவை வேலூர் நகரத்திற்கு–வடஆற்காடு மாவட்டத்திற்கு இந்த பகுதிக்கு வரும் என்ற உறுதியை நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றேன்.

இந்த மாநகராட்சி மன்றம் தோன்றுகிறது என்றவுடன் மாநகராட்சி மன்றத்தினுடைய தீர்மானம் என்ன? என்ன தீர்மானம் போட்டார்கள்? இந்த மாநகராட்சி மன்றத்தை நீங்கள் அறிவிக்கிறீர்கள், இருந்தாலும்கூட இதற்குத் தேவையான அடிப்படை வசதிகள் மற்ற வாய்ப்புகளை உருவாக்க எங்களுக்கு தமிழக அரசு 10 கோடி ரூபாய் மானியம் தரவேண்டும் என்று மாநகராட்சி மன்றத்தின் சார்பாக தீர்மானம் போட்டார்கள்.

மேயராக வருவதற்கு முன்பே கார்த்திகேயனுக்கு மானியம் பெறுவதிலே அவ்வளவு ஆர்வமும், ஆசையும் இருந்தது. அவர் கேட்டார், ஆனால் நாங்கள் அதைப்பற்றிச் சிந்தித்து 10 கோடி தொடக்கத்திலே கொடுக்க வேண்டாம் என்று நீங்கள் எல்லாம் மகிழத்தக்க அளவிற்கு முதல் கட்டமாக 5 கோடி ரூபாய் அனுமதிக்கப் பட்டிருக்கின்றது என்கின்ற மகிழ்ச்சிகரமான செய்தியை நான் இங்கே சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

இந்த 5 கோடி ரூபாயைப் பெற்று, ஆவன செய்து ஆக, 10 கோடியே கொடுத்திருக்கலாமே என்று நானும், உள்ளாட்சித்துறை அமைச்சரும், எங்கள் அமைச்சரவையும் எண்ணுகின்ற அளவிற்கு நீங்கள் செயல்படுங்கள். நீங்கள் இந்தப் பகுதி மக்களுக்குப் பாடுபடுங்கள். மாநகராட்சி மன்றம் என்பது ஒரு சொல் வழக்குக்காக அல்ல, பெருமைக்காக அல்ல, இன்னும் பரந்த அளவில், இன்னும் அதிக அதிகாரங்களைப் பெற்று, மக்களுக்குப் பணியாற்ற, மக்களுக்குச் சேவை செய்ய என்பதனை நீங்கள் மறந்துவிடக்கூடாது.

மாநகராட்சி மன்றம் என்ற நிலை ஏற்பட்டவுடன் பக்கத்திலே உள்ள சிறு சிறு பகுதிகளெல்லாம் இதோடு இன்றைக்கு இணைகின்றன. காட்பாடி இணைகிறது, ஆற்காடு இணைகிறது என்று இணைகின்ற பகுதிகளையெல்லாம் இங்கே எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். ஒரு பரந்த அளவிலே பெரிய பரப்பளவைப் பரிபாலிக்கின்ற அளவிற்கு மாநகராட்சி மன்றத்திற்கு பொறுப்பு வர இருக்கின்றது. அந்தப் பொறுப்பை நீங்கள் நிறைவேற்றியாக வேண்டும். மாநகராட்சி ஆகிவிட்டது என்ற மகிழ்ச்சியோடு மேயரோ அல்லது மண்ணின் மைந்தர் என்று அழைக்கப்படுகின்ற நம்முடைய வீராசாமியோ, தம்பி துரைமுருகனோ மகிழ்ந்து இருந்துவிடக்கூடாது. மாநகராட்சி மன்றம் ஆயிற்றே என்ன மகாப்பெரிய வேலைகளையெல்லாம் செய்தது என்று சாதாரண மக்கள் கேட்கின்ற அளவிற்கு இல்லாமல் மாநகராட்சியானால் எவ்வளவு இலாபம் பார்த்தாயா என்று அடுத்தடுத்து இருக்கின்ற நகரங்கள் எல்லாம்–நாம் எப்போது மாநகராட்சி ஆவது என்று எண்ணுகின்ற அளவிற்கு நீங்கள் நடந்து காட்ட வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அண்மையில் ஈரோடு நகரத்தை மாநகராட்சி மன்றமாக ஆக்கினோம். அப்படி ஆக்கியபோது ஒரு குறிப்பை தம்பி ஸ்டாலின் என்னிடத்திலே காட்டினார். என்ன குறிப்பு என்றால், 1917ஆம் ஆண்டு வாக்கில் அந்த ஈரோடு நகரத்தினுடைய தலைவராக இருந்தவர் யார் தெரியுமா? தந்தை பெரியார் அவர்கள். அவர் ஒரு குறிப்பு எழுதியிருக்கிறார், குறிப்பு எழுதுகின்ற புத்தகத்தில் ஒரு குறிப்பை எழுதியிருக்கிறார். 'இந்த ஈரோடு நகரம் அளவில் எல்லைகளில் குறைவானதாக இருக்கின்ற காரணத்தால், பக்கத்திலே இருக்கின்ற வீரப்பன் சத்திரம் என்ற ஊரையும் இன்னும் அதற்கு அருகிலே இருக்கின்ற ஊர்களையும் ஈரோடு நகரத்தோடு சேர்த்துக்கொள்ள வேண்டும்; அப்படி சேர்த்தால்தான் எதிர்காலத்திலே இது பெரிய நகராட்சி மன்றமாக, மாநகராட்சி மன்றமாக ஆகின்ற தகுதியைப் பெறும்' என்று பெரியார் குறிப்பு எழுதினார். எப்பொழுது? 1917.

பெரியார் எதை எழுதி வைத்திருந்தாலும் அவைகளெல்லாம் தேடிக் கண்டுபிடித்து அதை நிறைவேற்றுகின்ற பகுத்தறிவாளர்களுடைய ஆட்சியாக– முன்னேற்ற விரும்புகின்றவர்களுடைய ஆட்சியாக பெரியாருடைய கொள்கைகளை, அண்ணா வழியில் நிறைவேற்றுகின்ற ஆட்சியாக இந்த ஆட்சி இருக்கின்ற காரணத்தால் 1917ஆம் ஆண்டு அவர் எழுதிய குறிப்பின்படி வீரப்பன் சத்திரம் போன்ற பகுதியெல்லாம் ஈரோடு நகரத்தோடு இணைத்து ஈரோடு மாநகராட்சி மன்றத்தை உருவாக்கியிருக்கின்றோம்.

அண்ணா 100

## பட்டதாரிகளின் பணி!

**ஏ**ழை மக்களின் வாழ்வெனும் பாலைவனம் சோலைவனமாகிட வேண்டும்; வருங்காலச் சந்ததிகளாவது வளமெலாம் பெற்று வாழ்ந்திட வகை செய்திட வேண்டும். அதுதான் பட்டதாரிகளின் முதற்கடமையாகிறது!





அதைப்போலத்தான் இப்போதும் இதை விரிவாக பெரிய நகரமாக ஆக்கி பல நன்மைகளை, சாதனைகளைச் செய்ய வேண்டும் என்பதற்காகத்தான் இந்த மாநகரத்தை இன்றைக்கு உருவாக்கியிருக்கின்றோம்.

மாநகரத்தை உருவாக்கியிருக்கின்ற நேரத்தில் என்னுடைய தம்பிமார்கள் வீராசாமி அவர்களும், நம்முடைய துரைமுருகன் அவர்களும், பாராளுமன்ற தேர்தலைப் பற்றி பேசினார்கள். அதிலே நாம்தான் வெற்றிபெறப் போகிறோம் என்றெல்லாம் பேசினார்கள். ஞானசேகரன் அதைப்பற்றி பேசவில்லை. பேசாததற்குக் காரணம், இவர்கள் பேசிக்கொள்வார்கள் என்று ஒருவேளை விட்டு இருக்கலாம். அவர் அதைப் பற்றி எண்ணாதவர் அல்ல. இருந்தாலும் நான் சொல்கிறேன்; எல்லா இடத்திலும் வெல்வோம், வெற்றி பெறுவோம் என்று சொல்வதால் வெற்றி பெற்றுவிட மாட்டோம். வெற்றி வெறும் வார்த்தைகளால் விளைவதல்ல. வெற்றி நம்முடைய உழைப்பால், வியர்வையால், தொண்டால், ஆற்றுகின்ற பணியால் விளைவது.

யாருக்காக அந்தப் பணியை ஆற்றப்போகிறோம், நமக்காகவா? அல்ல. கார்த்திகேயன் மேயராக ஆக வேண்டும் என்பதற்காகவா? அல்ல. கருணாநிதி முதலமைச்சராக ஆக வேண்டும் என்பதற்காகவா? அல்ல. ஐந்து முறை ஆகியாயிற்று. இனி அந்த ஆசை கருணாநிதிக்கு கிடையாது. யாருக்கும் கிடையாது. அந்த ஆசைக்கு கருணாநிதி அடிபணிய மாட்டான். இங்குகூட சொன்னார்கள். இன்னொரு முறை முதலமைச்சராக வரப்போகிறார் என்று இல்லை. இல்லவே இல்லை. நான் அப்படி ஆசைப்படமாட்டேன்.

யார் தமிழகத்தை ஆளக்கூடிய தகுதியைப் பெறுகிறார்களோ, யாருக்கு மக்கள் அந்த ஆதரவைத் தருகிறார்களோ, அவர்களை ஊக்குவிக்கின்ற– அவர்களை மேலும் மேலும் ஆர்வத்தோடு பணியாற்ற வைக்கின்ற–அந்த தூண்டுகோலாக இருப்பேனே தவிர இனி எனக்கு செங்கோல் கையிலே தேவையில்லை. தூண்டுகோல் போதும். அந்த தூண்டுகோலை வைத்து நான் இந்த நாட்டிலே இன்னும் பல அற்புதங்களை, இன்னும் பல அதிசயங்களை, இன்னும் பல நன்மைகளை, சாதனைகளை ஆற்ற முடியும்.

நாட்டிலே ஏழை–எளிய மக்கள், பாட்டாளி மக்கள் காலையிலிருந்து மாலை வரையிலே உழைத்து அலுத்து, தூங்குவதற்கு இடமில்லாமல், அலைகின்ற மக்கள், அந்த மக்களைக் காப்பாற்ற இன்னும் சுதந்திரத்தினுடைய உண்மையான தன்மையை மக்கள் அனுபவிக்க பாடுபட்டாக வேண்டும். சுதந்திரம் பெற்றாலும்கூட, சுதந்திரத்தினுடைய சுவையை முழுமையாக இந்திய நாட்டு மக்கள் பெறவில்லை. அதற்கு யார் யார் உழைக்கின்றார் களோ, யார் யார் தங்களை தியாகம் செய்ய முன் வருகிறார்களோ, அவர்களுக்கெல்லாம் தொண்டனாக இருந்து, அவர்களுக்கெல்லாம் பணியாளனாக இருந்து, அவர்களுக்கெல்லாம் விசுவாசமுள்ள வேலைக்காரனாக இருந்து, அவர்களுக்கெல்லாம் உற்றத் தோழனாக இருந்து, உழைப்பேன்! உழைப்பேன்! உயிர் உள்ளவரை உழைப்பேன்.

அப்படி உழைக்கின்ற அந்தப் பாதையிலே ஒரு வெற்றிக் கல்லாகத்தான், வெற்றிப் படிக்கட்டாகத்தான் வேலூரிலே இந்த மாநகராட்சி மன்றத்தைக் காணுகின்றேன். இது வேலூரில் வாழுகின்ற மக்களுடைய சாதனை என்று ஒத்துக்கொள்கிறேன். என் சாதனை அல்ல, தம்பி ஸ்டாலினுடைய தனிப்பட்ட சாதனையல்ல, எல்லோரும் ஒன்றுகூடி செய்த சாதனை. இந்தச் சாதனை, என்னுடைய அமைச்சருடைய சாதனை, மாற்றுக் கட்சிக்காரர்களுடைய சாதனை என்றும் நான் பெருந்தன்மையோடு ஒத்துக்கொள்கிறேன். எல்லோரும் சேர்ந்து இழுத்தால்தான் தேரை இழுக்க முடியும். ஊர்கூடி தேர் இழுப்போம், வாரீர் வாரீர் என்று ஊர்கூடி தேர் இழுக்கும் அந்தப் பழமொழியை, ஊர்கூடித் தேர் இழுப்பதைப்போல் உலகத்தார் ஒற்றுமையாக இருந்து உலக மக்களை வாழவைப்போம்.

உலகத்திலே இன்றைக்கு நடைபெற்று வருகின்ற நாலாவிதமான நாசக்காரச் செயல்களையெல்லாம் பார்க்கிறோம், கேட்கிறோம், அவைகளை எப்படி எதிர்கொள்வது என்று முடியாமல் திகைக்கிறோம், அந்தத் திகைப்பில் இருந்து மக்களை விடுபடச் செய்ய வன்முறை, தீய சக்திகள், இவைகள் எல்லாம் விலகிட நாம் அனைவரும் ஒற்றுமையாக இருந்து பாடுபடுவோம், பணியாற்றுவோம். அதை இந்த மாநகராட்சி மன்றத் தொடக்கவிழாவில் ஒரு சூளுரையாக மேற்கொள்வோம் என்று கூறி விடைபெறுகிறேன்.

❖ ❖ ❖

அண்ணா 100

## நிலையும் நினைப்பும்!

**நி**லை உயர்ந்திருந்தால் நினைப்பு உயர்ந்திருக்கும்; நிலை தாழ்ந்திருந்தால் நினைப்புத் தாழ்ந்திருக்கும். நிலைக்குத் தகுந்தாற்போல் தான் நினைப்பும் இருக்கும்!





# தூத்துக்குடி மாநகராட்சிக்குத் தேவையான திட்டங்களை நிறைவேற்றுவோம்

5.8.2008 அன்று தூத்துக்குடி மாநகராட்சியைத் தொடங்கி வைத்து மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் ஆற்றிய உரை.

**தூ**த்துக்குடிக்கு நான் வந்து நீண்ட நாட்கள் ஆகிவிட்டன. இன்றைக்கு தூத்துக்குடி விழாவிற்கு வந்திருக்கிறேன் என்றால், இது இந்த வட்டாரத்து மக்களுக்கு ஒரு திருவிழா, ஒரு பெருவிழா, இந்த விழாவிலே நானும் கலந்துகொள்ளவேண்டும் என்று நம்முடைய சட்டப்பேரவை உறுப்பினர்களும், தம்பி பெரியசாமி அவர்களும் உள்ளாட்சித்துறை அமைச்சர் தம்பி ஸ்டாலினும் வலியுறுத்தியது மாத்திரமல்ல. எனக்கே தூத்துக்குடி மாநகராட்சி மன்றமாக ஆகுகிற காட்சியைக் காணாமல் இருக்கக்கூடாது என்ற ஆவலின் காரணமாகத்தான், இந்த விழாவிற்கு நான் பல தொல்லைகளுக்கிடையே அவற்றையெல்லாம் புறக்கணித்துவிட்டு வந்துள்ளேன்.

இங்கே பேசிய தம்பி பெரியசாமி குறிப்பிட்டதைப்போல் நான் இன்றைக்கு எந்த இயக்கத்தினுடைய தலைவனாக இருக்கின்றேனோ அந்த இயக்கத்தினுடைய கொடியை முதன் முதலாக என்னுடைய கைகளால் ஏற்றி வைத்த இடம், இந்த தூத்துக்குடிதான். 1949 ஆம் ஆண்டு, புதிய அரசியல்வாதிகள் கணக்கிட்டுக் கொள்ளுங்கள். 1949 ஆம் ஆண்டு சென்னையிலே செப்டம்பர் 17 ஆம் தேதி பேரறிஞர் அண்ணா அவர்கள் திராவிட முன்னேற்றக் கழகத்தைத் தொடங்கி இருவண்ணக் கொடியை ஏற்றி வைத்து கடமை, கண்ணியம், கட்டுப்பாடு என்ற பொன்மொழிகளைத் தம்பிமார்களுக்கு வழங்கிய அந்த நாள்– அதற்கு அடுத்த மாதம் அண்ணா அவர்கள் கழகத்தினுடைய தளபதிகளையெல்லாம் அழைத்து செப்டம்பர் 17 இல் சென்னையிலே பிரதான கழகத்தைத் தொடங்கிவிட்டோம், இதனுடைய கிளைகளை அக்டோபர் 17 அன்று நாடெங்கும் தொடங்க வேண்டும். யார், யார் எங்கெங்கே போகிறீர்கள் எனக்கேட்டு அப்படி கேட்கப்பட்டவர்கள் பதில் சொல்வதற்கு முன்பு என்னைப் பார்த்து நீ தூத்துக்குடி போகிறாய், மறுநாள் கோவில்பட்டி போகிறாய் என்று ஆணையிட்டார்கள்.

1949 அக்டோபர் 17 ஆம் தேதி கழகத்தினுடைய கொடியை என்னுடைய கரங்களால் முதன்முதலாக ஏற்றிவைத்து கிளைக் கழகத்தைத் தொடங்கிய இடம் இந்தத் தூத்துக்குடி. மறுநாள்தான் கோவில்பட்டியிலே கழகக் கிளையை தொடங்கி வைத்து, இருவண்ணக் கொடியை ஏற்றி வைத்தேன். எனவே இன்று நேற்றல்ல, 50, 60 ஆண்டுகாலமாக தூத்துக்குடி எனக்குப் பழகிய ஊர். எனக்குப் பழக்கப்பட்ட நண்பர்கள் பலரைக் கொண்ட ஊர். ஆருயிர் நண்பர்கள் பலர் வாழ்ந்த ஊர். பலர் இன்றைக்கு நினைவுச் சின்னங்களாக, நிழற்படங்களாக மாறிவிட்டாலும்கூட, என் நெஞ்சில் என்றென்றைக்கும் நிலைத்து இருக்கக்கூடியவர்களாக இருக்கின்ற ஊர் தூத்துக்குடியாகும்.

நான் கே.வி.கே. சாமியை மறக்க முடியுமா? அப்படிப்பட்ட தளபதிகளையெல்லாம் மறந்துவிடக்கூடிய இயக்கமா இந்த இயக்கம்? அந்த சாமியைப் பார்த்துதான் தந்தை பெரியார் அவர்கள் ஒரு மாநாட்டிலே சொன்னார், அந்த மாநாட்டிலே கே.வி.கே. சாமி ஆற்றிய தொண்டினைப் பார்த்து தொண்டர்படைத் தலைவராக அவர் ஆற்றிய பணியைப் பார்த்து எதிர்காலத்திலே திராவிட நாடு கிடைத்தால் நீ தான் அந்த நாட்டிற்கு கவர்னர் ஜெனரல் என்று கே.வி.கே. சாமியைச் சொன்னாரோ அந்த கே.வி.கே. சாமி உலவிய மண், இந்த மண் என்பதை நான் மறந்துவிடவில்லை.

மொழிப்போராட்டத்திலே உயிர் நீத்த நடராசன் தாளமுத்து என்ற இரு மாவீரர்களைத் தந்த மண் – இந்தப் பகுதி மண் என்பதை நான் அறிவேன். எனவேதான் இந்த மண்ணிலே கால் வைக்கும்போதெல்லாம், இந்த மண்ணிலே வந்து மக்களைச் சந்திக்கும்போதெல்லாம் மக்களைச் சந்தித்து அவர்களுக்காக சொல்ல வேண்டிய விஷயங்களை சொல்லும்போதெல்லாம் என்னுடைய சொந்த வீட்டிற்கு, நான் பிறந்த ஊருக்கு வந்ததைப்போன்ற உணர்வை அன்றும் பெற்றேன், இன்றும் பெறுகிறேன். அதனால்தான் தூத்துக்குடி நகராட்சி மாநகராட்சியாக மாறியது என்ற நிலையைவிட திருவாரூர் நகராட்சி மாநகராட்சியாக மாறியதைப் போன்ற ஒரு உணர்வைப் பெற்று, உங்கள் முன்னால் அமர்ந்திருக்கின்றேன். இதை ஸ்டாலின் ஞாபகத்தில் வைத்துக்கொள்ளவேண்டும். திருவாரூர் நகராட்சி மாநகராட்சியாக மாறுகிற காலம் வரையில் இந்த ஆட்சி நீடித்து, உன்னுடைய நிர்வாகமும் நீடித்து, நான் காணுகின்ற வகையிலே மாநகராட்சியாக திருவாரூர் போன்ற நகரங்களெல்லாம் ஆக்கப்படவேண்டும் என்ற ஆசை, பேராசைதான். இருந்தாலும் பேராசைப்பட எனக்கு உரிமை உண்டு.

அண்ணா 100



## பிறமொழி

**க**ண்ணுக்கு மையிடுவதுபோல, பிற மொழிகளைப் பயன்படுத்த வேண்டும்–மை அதிகமானால் கண் எப்படிக் கரித்து விடுகிறதோ அதுபோல் பிற மொழிகள் அதிகம் கலப்பதும் ஆபத்தான நிலையை உண்டாக்கும்.





அண்ணா 100



## உண்மையான வரலாறு தேவை!

**உ**ண்மையான வரலாறு எழுதப்பட வேண்டும். இன்று அந்த நிலை இல்லை. ஓர் ஊரின் பெயரைக் கேட்டால் அது தோன்றியதற்கு வரலாறு இருக்கும். மணல்மேடு இருந்தாலும் அதற்கு ஒரு வரலாறு இருக்கும். இந்தியா முழுவதிலும்– தூரக்கிழக்கு நாடுகளிலும் எதோடு ஒப்பிட்டாலும் தமிழகத்திற்கு ஒப்பான வரலாறு இருந்தது இல்லை என்று நாம் பார்க்கிறோம். நெப்போலியன் பெயரைக் கேட்டால் இங்கிலாந்து நாட்டில் அழுகிற குழந்தை வாய்மூடிவிடும்; நெப்போலியனைப்பற்றி பிரஞ்சு நாட்டில் இருப்பதைவிட இங்கிலாந்து நாட்டில் நூல்கள் ஏராளம். அப்படிப்பட்ட ஆர்வம் வேண்டும். தமிழ்நாட்டிலே இருந்து லண்டனுக்குச் செல்லும் எஞ்சீனியரிடத்தில் பாண்டிய மன்னனைப் பற்றிக் கேட்டால் தெரியாது என்று சொன்னால் நமக்குப் பெருமையல்ல.



காரணம் இந்த மண்ணுக்காக உழைத்தவன், இந்த மண்ணிலே வாழுகிற மக்களுக்காகப் பாடுபட்டுக் கொண்டிருப்பவன், பணியாற்றிக்கொண்டிருப்பவன்.

இந்த விழா எத்தனை விமர்சனங்களுக்கெல்லாம் ஆட்பட்டிருக்கிறது என்பதை தம்பி பெரியசாமி என்னிடத்திலே சொன்னார். சில பத்திரிகை நிருபர்களும்கூட என்னைச் சந்தித்தபோது சொன்னார்கள். யார் யாரோ இந்த விழாவிற்குத் தடை பெற முயலுகிறார்கள் என்று. ஏன் தடை பெறுகிறார்கள் ? எனக்குப் புரியவில்லை. ஒரு நகராட்சி, மாநகராட்சியாக மாறினால், உயர்ந்தால், வளர்ந்தால் அந்த வளர்ச்சியைப் பார்த்து மகிழ்ச்சியடைய வேண்டுமே தவிர, தடை கேட்க வேண்டிய அவசியம் என்ன ? என்றெல்லாம் நான் யோசித்துப்பார்த்தேன். வேடிக்கையாகத்தான் இருக்கிறது. ஒரு வீட்டிலே இருக்கின்ற பெண் பருவமடைந்துவிட்டாள், அவளுக்கு மங்கல நீராட்டு விழா நடக்கிறதென்றால், எதிர் வீட்டுக்காரிக்கு எரிச்சலாகத்தான் இருக்கும். அதற்காக அவள் பருவமடையாமல் இருக்க முடியுமா ? இன்றைக்கு இந்த நகராட்சி மன்றம், மாநகராட்சி மன்றமாக மாறியிருக்கின்றது. இதற்கேன் இவ்வளவு கூத்து ? இதற்கேன் இவ்வளவு ஆடம்பரம் ? இதற்கேன் இவ்வளவு செலவு ? என்று நீதிமன்றத்துக்குச் செல்கிறார்கள். இவர்கள் ஏதோ, இவர்கள் வீட்டுத் திருமணங்களையெல்லாம் செலவே இல்லாமல் நடத்தியவர்களைப் போலவும், இவர்கள் வீட்டு விழாக்களையெல்லாம் ஒண்டிக் குடித்தனம் செய்கின்றவர்களைப்போல நடத்தியதைப் போலவும், இவர்கள் கட்சி நிகழ்ச்சிகளையெல்லாம் மிக மிக எளிமையாக நடத்தி புகழ் பெற்றதைப் போலவும் இப்போது வழக்குப் போடப்போகிறார்கள். நான் இந்த விழாவிலே அரசியல் பேசக்கூடாது என்றுதான் வந்தேன். பேசுவதில்லை. ஆனால் பேசும்படி செய்து விட்டார்கள், அதற்கு நான் என்ன செய்ய ? ஒரு நகராட்சி மன்றம், மாநகராட்சி மன்றமாக மாறும்போது மகிழ்ச்சி இருக்கத் தான் செய்யும். இது மாற வேண்டுமென்று பாடுபட்டவர்களுக்கு, பணியாற்றியவர்களுக்கு குரல் கொடுத்தவர்களுக்கெல்லாம் ஒரு பெரிய குறிக்கோளிலே வெற்றி கிடைத்ததைப்போல குதூகலம் ஏற்படத்தான் செய்யும். அப்படி ஏற்படுவதையே தடுப்பதற்கு யாருக்கும் உரிமை இல்லை.

இதே தூத்துக்குடியில் 1967–ஆம் ஆண்டு ஒரு விழா நடைபெற்றது. தி.மு.கழகம் ஆட்சிக்கு வந்ததைப் பாராட்டிய விழா. அந்த விழாவிற்குத் தமிழக முதல்வராகப் பொறுப்பேற்றிருந்த அறிஞர் அண்ணா அவர்கள். 23.8.1967 அன்று வருகை தந்தார்கள். "தூத்துக்குடி நகரசபையில் அண்ணாவுக்கு நள்ளிரவில் வரவேற்பு" என்ற தலைப்பில் செய்தியை அன்றைய "தினமலர்" நாளேடு வெளியிட்டிருக்கிறது. "அண்ணா துரைக்கு தங்கச் செங்கோல் அன்பளிப்பு" – அண்ணா அவர்கள் அப்போது மேயராக இல்லை. இருந்தாலும் தங்கச் செங்கோல் அன்பளிப்பு. "16 முத்துக்கள் பதித்த வரவேற்பிதழ்" – அது மாத்திரமல்ல, அந்தச் செய்தியில், "பொதுக்கூட்டம் நடைபெறுவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டிருந்த இடம் நகர மண்டபத்திலிருந்து மூன்று மைல் தொலைவில் இருந்தது. 50 அடிக்கு ஒன்று வீதம் அலங்கார வளைவுகள் அமைக்கப்பட்டிருந்தன. மின்வண்ண விளக்கு அலங்காரங்கள் பிரமாதமாக இருந்தன. 16 முத்துக்கள் பதித்த வரவேற்பு இதழை நகரசபைத் தலைவர் பொன். சாமுவேல் அண்ணாதுரைக்கு வாசித்தளித்தார்."

நான் கேட்கிறேன். இது 1967 ஆம் ஆண்டு தி.மு.க. ஆட்சிக்கு வந்த பிறகு இங்கே இருந்தவர்கள் காங்கிரஸ்காரர்கள் – கண்ணியவான்கள் – நாகரிகம் படைத்தவர்கள் – ஒரு முதலமைச்சர் வருகிறார், அவரை முதலமைச்சராக ஆக்குவதற்காக முதுகெலும்பு உடைய பாடுபட்ட அவருடைய தொண்டர்கள் நகரெங்கும் பந்தலிடுகிறார்கள், பளபளக்கும் விளக்குகளை ஆங்காங்கு மாட்டுகிறார்கள், அவருக்கு வரவேற்பளிக்க ஏற்பாடு செய்கிறார்கள், அந்த விழாக்கோலத்தை பத்திரிகை இந்த அளவிற்கு வெளியிட்டு அவருக்கு முத்துக்கள் பதித்த வரவேற்பிதழ். தங்கச் செங்கோல் என்றெல்லாம் தலைப்பிட்டுச் செய்தி வெளியிடுகிறது. அப்போது யாரும் நீதிமன்றத்திற்குச் செல்லவில்லை. இதைத் தடுக்கவேண்டுமென்று கேட்கவில்லை. யாருடைய வயிறும் எரியவில்லை. யாருடைய நெஞ்சும் படபடக்கவில்லை. காரணம், அப்போதிருந்தவர்கள் எல்லாம் நாகரிகமான மனிதர்கள். அப்போது இருந்தவர்கள் எல்லாம் கட்சிகளின் ஜனநாயகத்தை மதிப்பவர்கள். அப்போதிருந்தவர்கள் எல்லாம் நம்முடைய நாடாளுமன்ற உறுப்பினர் தனுஷ்கோடி ஆதித்தன் சொன்னதைப்போல காமராசரிடத்திலே பயின்றவர்கள். காமராசர் காட்டிய நாகரிகத்தைக் கடைப்பிடித்தவர்கள். அதனால் அன்றைக்கு அந்த விழா முதலமைச்சருக்கு நடைபெற்ற விழா – இந்த மூதூரில் அவ்வளவு சிறப்பாக நடைபெற்றது. இன்றைக்கு விழாவா ? ஒரு கை பார்க்கிறோம், நீதிமன்றத்திற்குச் செல்கிறோம். நீதிமன்றம் என்றால் சும்மாவா ? உடனடியாக விழாவிற்குத் தடை போட்டுவிடும் என்றெல்லாம் எதிர்பார்த்து நீதிமன்றத்திற்குச் சென்றார்கள். நீதிமன்றத்திற்குச் சென்றதால் தடை கிடைத்துவிடவில்லை. பாரதிதாசன் பாடினாரே, " தடைக் கற்கள் உண்டென்றாலும், தடந்தோள் உண்டெனச் சிரிப்போம்" என்று, அதைப்போல தடைக் கற்களைக் கண்டு பயப்படுகின்ற படை, இந்தப் படை அல்ல. எத்தனை தடை வந்தாலும் அவைகளைக் கண்டு சிரித்து, அவைகளை இடரி எறிந்து நம்முடைய படை முன்னேறும். ஏனென்றால் இந்தப் படை ஜனநாயகப் படை. இந்தப் படை மக்களாட்சித் தத்துவத்திலே மதிப்பு வைக்கின்ற படை. இந்தப் படை மக்களாட்சி மாண்பினை உணர்த்துகின்ற படை. அதனால்தான் ஒரு நகராட்சி மன்றம் மாநகராட்சி மன்றமாக மாறும்போது நமக்கு ஏற்படுகின்ற மகிழ்ச்சியை வெளியிடுகிறோம் என்றால், குழந்தை இன்றைக்குப் பள்ளிக்கு அனுப்பப்படுகிறது எந்த மழலையைப் பள்ளிக்கு அனுப்புகிறோமோ, அதற்குச் சீவி, சிங்காரித்து அந்தக் குழந்தைக்கு இடுப்பிலே அரைஞாண் கட்டி கழுத்திலே தங்கச் சங்கிலி மாட்டி காதிலே கடுக்கணோ அல்லது டோலக்கோ தொங்கவிட்டுக் குழந்தையைப் பள்ளிக்கு அனுப்புகிற தாய், பின்னால் இருந்து மகிழ்ச்சி அடைவாளே அதைப் போல – நம்முடைய நகரம் மாநகரமாகிவிட்டது. நம்முடைய நகராட்சியிலே இதுவரையிலே ஒரு சத்துணவுக் கூடத்திலே, சத்துணவு அமைப்பாளராக இருந்த ஒருவர் இன்றைக்கு இங்கே இந்த மாநகரத்தினுடைய மேயராக ஆகிறார் என்றால் ஏழைகளை முன்னேற்ற வேண்டும் என்ற இந்த இயக்கம், சாதாரண சாமான்ய மக்களுக்குச் சுதந்திரம் வேண்டும் என்று இந்த

அண்ணா 100

## ஜனநாயகம்



ஜனநாயகம் என்பது ஒரு அமைப்பு மட்டுமல்ல; ஜனநாயகமென்பது உயிரற்ற பொருளல்ல; ஜனநாயகத்தின் பயன் குறித்து எவருக்கும் எவ்வித ஐயப்பாடும் இருக்கத் தேவை இல்லை. அந்த அமைப்பு எத்தனை சீரியதோ–நற்றிறம் கொண்டதோ–அத்தனை நற்றிறம் கொண்டவனாக அதனைச் செயல்படுத்தும் மனிதனும் இருந்திட வேண்டும்!

அண்ணா 100

## நிலையான செல்வம்!



கல்வித்துறையில் ஈடுபட்டிருப்பவர்கள்–பொறியியலாளர்கள்–நிர்வாக நிபுணர்கள்தான்–உண்மையான–நிரந்தரமான அழிக்க முடியாத–அளவிட முடியாத செல்வமாகும். அந்தச் செல்வம் நம்முடைய நாட்டிலே போதுமான அளவுக்கு இல்லாத காரணத்தால்தான் புதிய தொழிற்சாலைகளைத் துவக்க வேண்டுமென்றால் அமெரிக்க நாட்டின் நிபுணர்களையும், இங்கிலாந்து நாட்டு விஞ்ஞானிகளையும், ரஷ்ய நாட்டுப் பொறியியலாளர்களையும் தருவிக்கிறோம்.

இயக்கம், தாய்க்குலத்திற்கு சமஉரிமை வேண்டுமென்று 1939 ஆம் ஆண்டிலிருந்து பெரியார் தலைமையிலே போராடி வருகின்ற இந்த இயக்கம் மகிழக் கூடாதா? மகிழவேண்டும். அந்த மகிழ்ச்சியைத் தெரிவிக்கின்ற மாண்புதான் இன்றைய தினம் தூத்துக்குடி பெருநகரத்திலே நாம் காணுகின்ற இந்தக் காட்சியாகும். இன்னும் இந்த நகரத்தை பெயரளவில் மாநகரமாக மாற்றினால் மாத்திரம் போதாது. இந்த நகரத்தின் தேவைகளையெல்லாம் நிறைவு செய்வேன் என்று தம்பி ஸ்டாலின் உறுதி எடுத்திருக்கிறார். நாங்கள் அளிக்கின்ற உறுதிகள் வெறும் நீர் மேல் எழுத்தல்ல, கல்மேல் செதுக்கியவைகளாகும். அவைகளை நிறைவேற்றியே தீருவோம். இங்கே என்னென்ன திட்டங்கள், என்னென்ன வசதி வாய்ப்புகள் உங்களுக்குத் தேவையோ, அவைகளையெல்லாம் நாங்கள் நிறைவேற்றியே தீருவோம். இந்த மாநகராட்சி மன்றம் அமைவதற்கு எங்களுக்கு மானியமாக 15 கோடி ரூபாய் கொடு என்று கேட்டார்கள். இந்த அரசு உடனடியாக மானியமாக 15 கோடி ரூபாய் கொடுக்காவிட்டாலும் தொடக்கத்திலே 5 கோடி ரூபாய் வைத்துக்கொள்ளுங்கள். மிச்சப்படுகின்ற பணத்திற்கு நகராட்சி வருவாயிலே கொஞ்சம் ஏற்பாடு செய்துகொள்ளுங்கள் என்று குறிப்பிட்டு 5 கோடி ரூபாய் இந்த மாநகராட்சி மன்றத்திற்குத் தந்திருக்கின்றோம் என்ற மகிழ்ச்சியான செய்தியை நான் இங்கே தெரிவித்துக்கொள்கின்றேன்.

இதை ஸ்டாலினே சொல்வாரென்று எண்ணினேன். இது பண விஷயம், நாம் தலையிட வேண்டாமென்று என்னிடத்திலே விட்டுவிட்டார். எனவே வாங்கிய பணத்தை நல்ல முறையிலே செலவு செய்து, பயனுள்ள வகையில் செலவு செய்து, வழிமுறையோடு செலவு செய்து மக்களுக்கு என்னென்ன தேவையோ அந்தத் தேவைகளை நிறைவேற்ற செலவு செய்ய வேண்டும். நேர்மையாக, நாணயமாக மாநகராட்சி மன்றத்திலே பணியாற்றுகின்ற ஒவ்வொருவரும் அவர் காவலாளியாக இருந்தாலும் சரி, ஒரு சேவகனாக இருந்தாலும் சரி, ஒரு மாமன்ற உறுப்பினராக இருந்தாலும் சரி, மேயராக இருந்தாலும் சரி, துணை மேயராக இருந்தாலும் சரி, அவர்களெல்லாம் வகையாக நேர்மையாக, நாணயமாக சேவை செய்ய வேண்டும். என்னைப் பொறுத்தவரையில் நான் நேர்மையாக ஒரு நிர்வாகம் நடைபெற வேண்டுமென்பதில் எப்பொழுதும் கூர்மையாக இருப்பவன். அதை மீறி நடந்தால் நான் பொறுத்துக் கொண்டிருக்கமாட்டேன்.

என்னுடைய அரசியல் வாழ்க்கையில் ஆட்சிப் பொறுப்பில் நான் நடத்திய நிர்வாகத்தில் அவைகளையெல்லாம் நீங்கள் கண்டிருக்கிறீர்கள். சென்னை மாநகராட்சி மன்றம் சில தவறுகளுக்கு ஆட்பட்டது என்பதற்காக நான் முதலமைச்சராக இருந்த போது அந்த மாநகராட்சி மன்றத்தையே கலைத்தவன்தான் உங்கள் முன்னால் அமர்ந்திருக்கின்ற கருணாநிதி என்பதை மறந்துவிடாதீர்கள். கலைத்தது மாத்திரமல்ல; எனக்கு உயிருக்குயிராக இருந்த நண்பர்களையெல்லாம் பிடித்து – சிறைச்சாலையிலே போட்டவன்தான் இந்தக் கருணாநிதி என்பதையும் யாரும் மறந்துவிடாதீர்கள்.

ஆகவே என்னுடைய மாணவர்களாகிய என் தலைமையிலே இயங்குபவர்களாகிய மாநகராட்சி மன்ற உறுப்பினர்கள், மாநகராட்சி மன்றத் தலைவர்கள் நிர்வாகிகள், யாராக இருந்தாலும் நேர்மை தவறாமல் நாணயமாகத் தங்களுடைய நிர்வாகத்தை நடத்தவேண்டும். மாநகராட்சி மன்றமாக ஆகியது பெரிதல்ல, மாநகராட்சி மன்றமாக ஆன இந்த மாநகரம் மாப்புகழைப் பெறவேண்டும். இந்த மாநகரம் மதிப்போடும் மரியாதையோடும் மக்களால் பேசப்படவேண்டும், புகழப்படவேண்டும். அந்தப் புகழ் என்றென்றும் இந்த மாநகராட்சி நிர்வாகத்திற்கு, மாநகராட்சி மன்றத்திற்கு இருந்திடவேண்டும். அதைக் கட்டிக் காத்திடுங்கள் என்று உங்களையெல்லாம் கேட்டுக்கொள்கிறேன். இந்த விழாவிலே நானும் கலந்து கொள்ளும் இந்த வாய்ப்பு ஏற்பட்டமைக்காக மகிழ்ச்சியைத் தெரிவித்து அனைவரையும் பாராட்டி இந்த அளவோடு என் உரையை நிறைவு செய்கிறேன்.

❖ ❖ ❖

அண்ணா 100



## கூட்டுறவு

நமது பொருளாதார அமைப்பின் எல்லாத் துறைகளிலும் கூட்டுறவு முறையானது நன்கு பரவியுள்ளது. பொருள்களின் விலை உயர்வுகளைக் கட்டுப்படுத்திப் பொதுமக்களுக்கு நேர்மையான விலையில் அவர்களின் அவசியத் தேவைகளை வழங்கி உதவும் சிறந்த பணியைக் கூட்டுறவு நிலையங்கள் செவ்வனே நிறைவேற்றி வைக்க முடியும். சிறப்பான வகையில் அவைகளின் அமைப்பு இயங்குவதன் மூலம்தான் இயக்கம் இந்த உயர்ந்த குறிக்கோளை அடைய முடியும். கூட்டுறவுத் துறையானது பலம் பெற்று நல்ல வளம் பெற யாவரும் பாடுபடுவோமாக!



# சின்னத்திரை இல்லாமல் பெரிய திரை இல்லை




ஒருவேளை திரையுலக விழாவாக இருக்கின்ற காரணத்தாலோ என்னவோ என் குரலும் இன்றைக்கு "குஷ்பூ" குரலாகத்தான் (குஷ்பூ ஏற்புரையாற்றும்போது, அவரது குரல் வளம் கெட்டிருந்ததைப் போலவே முதல் அமைச்சரின் குரலும்





பாதிக்கப்பட்டிருந்தது) உள்ளது. காரணம், மூன்று நாட்களாகத் தூத்துக்குடி, மதுரை போன்ற இடங்களில் சுற்றுப்பயணம் செய்துவிட்டு, நேற்றுத்தான் சென்னை திரும்பினேன்.

திரும்பிய பிறகு சென்னையிலே உள்ள அரசு அலுவல்களையெல்லாம் ஒருசேரக் கவனித்து விட்டு இரவு 12 மணி வரையிலே கோப்புகளிலே கையெழுத்திட்டுவிட்டு, ஏனென்றால் சில பேர் எத்தனைக் கோப்புகள் முதலமைச்சர் இன்றைக்குப் பார்த்து முடித்திருக்கின்றார் என்று கணக்கிட்டுக் கொண்டிருப்பதால் – அந்தக் கணக்கையும் காட்டிவிட்டு – உங்களையெல்லாம் சந்திக்கின்ற இந்த நல்ல வாய்ப்பை நான் பெற்றிருக்கிறேன்.

குறைந்த செலவில் தயாரித்து வெளியிடப்பட்ட தரமான தமிழ்த் திரைப்படங்களுக்கு அரசு மானியம் வழங்குவது என்ற ஒரு ஏற்பாட்டைச்செய்து இங்கே எனக்கு முன்னால் பேசியவர்கள் எல்லாம் குறிப்பிட்டதைப்போல சின்னத்திரைப்படங்களுக்கு இதுபோல் பரிசு வழங்குவதும், மானியம் வழங்குவதும் இந்தியாவிலேயே தமிழ்நாட்டிலே மாத்திரம் நடைபெறுகிறது என்ற பெருமைக்குரிய காரியத்தை நாம் நிகழ்த்தியிருக்கிறோம்.

சின்னத்திரைக்கான விருதுகளும், அந்தத் தரமான படங்களுக்கு – தயாரிப்புக்குத் தேவையான துண்டு விழுகின்ற பற்றாக்குறையைச் சரிசெய்கின்ற பரிவுத்தொகையுமாக இன்றைக்குப் போதுமான தொகையாக அது இல்லாவிட்டாலும், மன ஆறுதல் வழங்கக்கூடிய தொகையாக அதை வழங்கியிருக்கிறோம்.

அண்ணா 100



## தமிழ்ப் பண்பாடு

தமிழ்ப் பண்பாடு உலகத்தில் எல்லா மனிதர்களையும் சகோதரர்களாகவும் தோழர்களாகவும் ஏற்றுக்கொள்ளும். தன்னிடம் வருபவர்களை வாழ்த்தி வரவேற்கும்; எந்தமொழியையும் உரிய முறையில் மதிக்கும்; அறிவுச் செல்வம் உலகின் எந்தக் கோடியில் இருந்தாலும் தேடிச் சென்று எடுத்துவரும்.





இங்கே ஒரு தம்பி படம் எடுத்து – அந்தப் படம் வெற்றி பெறாத காரணத்தால், வாழ்க்கையிலே நொடித்துப்போயுள்ள அந்தத் தம்பி – இங்கே பரிவுத்தொகை பெற்றபோது என் கையைப் பிடித்துக் கொண்டு, இந்தப் பணத்தை நான் என்னுடைய வாழ்க்கைக்கு ஊன்றுகோலாக வைத்துக்கொள்வேன் – என்று சொன்னார். நான் அவரிடம் தொடர்ந்து இந்தத்துறையிலேயே தொழில் செய்யப் போகிறாயா ? அல்லது தொழிலை மாற்றப்போகிறாயா என்று கேட்டேன். இல்லையில்லை, நிச்சயமாக மாற்றிக்கொள்ளப்போகிறேன் என்றார்.

அதற்கு என்ன காரணம் என்பதை நான் வேதனையோடு எண்ணிப்பார்க்கிறேன். எனக்கு நன்றாக நினைவிருக்கிறது. சினிமா படம் எடுப்பவர்கள் அல்லது இந்தத் தொழிலிலே ஈடுபட்டிருப்பவர்கள் சில நேரங்களில் ஏற்படுகின்ற அலுப்பினால், அவர்கள் பட்ட கஷ்டங்களால், அவர்களுக்கு ஏற்பட்ட சோதனைகளால், அவர்களுக்கு ஏற்பட்ட வேதனைகளால் இன்னும் சொல்லப் போனால் அந்தத்துறையிலே அவர்களுக்கு ஏற்பட்ட அவமானங்களால்கூட, “போதும் இந்தத் தொழில்” என்று அதை நிறுத்தி விடுவதுண்டு.

என்னுடைய மருமகன் முரசொலி மாறன் தொடர்ந்து ஏழெட்டுப் படங்கள் தயாரித்தார். அந்தப் படங்களின் வரிசையில் இறுதியாக வெளியிடப்பட்ட படம் “எங்கள் தங்கம்” என்ற படமாகும். அந்தப் படம் முடிவுற்று – விற்பனையாகி – படம் வெளியிடப்பட்டு அதற்குப் பிறகு சில பேர் அவரிடம் வந்து “அடுத்த படம் என்ன சார் ?” என்று கேட்டார்கள். “அடுத்த படமா, இதற்குமேல் படம் எடுப்பதில்லை என்று நான் முடிவு செய்திருக்கிறேன்” என்று ரொம்ப விரக்தியோடு சொல்லி, அதோடு படம் எடுக்கின்ற தொழிலை அவர் நிறுத்திக்கொண்டார். அதை நான் ஆதரிப்பவனல்ல, அதை நான் வரவேற்பவனல்ல, இருந்தாலும் மாறனைப்போன்ற மனத்திண்மை வாய்ந்தவர்களேகூட பெரிய படங்கள் எடுத்தபோது அதிலே ஏற்பட்ட சலிப்பும், அலுப்பும், களைப்பும் சில விரும்பத்தகாத நிகழ்வுகளும் அத்தகைய முடிவுகளுக்கு அவர்களை வரச்செய்தது. ஆனால் கையைக் கடிக்கின்ற அளவிற்கு அல்லது குடும்பத்திலே புயலை ஏற்படுத்துகின்ற அளவிற்கு ஒரு படத்தினுடைய விளைவு இருக்குமேயானால் – இழப்பு இருக்குமேயானால் அதை ஓரளவாவது சரிசெய்கின்ற வகையிலே தொழிலில் வீழ்ந்துவிட்டவர்களைக் காப்பாற்றுகின்ற அளவிற்கு – தூக்கி விடுகின்ற அளவிற்கு அரசும் இருக்க வேண்டும். அப்படிப்பட்ட அரசாக, கலைத்துறையைப் பொறுத்தவரையில் இந்த அரசு இருக்கும் என்ற நம்பிக்கையைக் காட்டுகின்ற வகையிலேதான் சில படங்களுக்கு ஏறத்தாழ



இரண்டரைக் கோடி ரூபாயை ஒரு படத்திற்கு ஏழு இலட்சம் ரூபாய் என்ற அளவிலே கொடுத்து அவர்களுடைய மன ஆறுதலைக் கண்டிருக்கிறோம்.

இது முழுமையாக அவர்களுக்குப் போதுமானதென்று நான் சொல்லமாட்டேன். இருந்தாலும் இதை வைத்து அவர்கள் மன ஆறுதல் பெறுவார்களேயானால், பரவாயில்லை, நாம் முழுமையாக விழுந்துவிடவில்லை, மறுபடியும் தலைதூக்கலாம் என்ற நம்பிக்கையை அவர்களுக்கு இது ஏற்படுத்தும் என்பதற்காகத்தான் இதைச் சொல்கிறேனே அல்லாமல் வேறல்ல. இப்படி அளித்த இந்தத் தொகையையேகூட ஓரிருவர் முதலிலே அதற்காக விண்ணப்பித்துக் கேட்டு, எங்களுக்கு வழங்க வேண்டுமென்று எழுதிக் கொடுத்து – நாமும் வழங்குவதற்கு ஒப்புதல் அளித்து அவர்களுக்கு அதற்கான தாக்கீதையும் அனுப்பிய பிறகு வாங்கவில்லை. அப்படி வாங்கப்படாத பணம் எல்லாம் அரசு நிதியிலே சேர்க்கப்படும் என்பதை இங்கே நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

இன்று சேர்க்கப்படுகின்ற அந்தத்தொகை இந்த ஆண்டு இல்லாவிட்டாலும் அடுத்த ஆண்டு இப்படிக் குறைந்த செலவில் தயாரித்து வெளியிடப்படுகின்ற ஒரு தரமான தமிழ்த் திரைப்படத்திற்கு வழங்கப்படும் என்பதையும் நான் தெரிவித்துக்கொள்கிறேன். முதலில் விண்ணப்பித்து விட்டு தரும்போது வேண்டாமென்று சொன்னவர்களைப்பற்றி நான் கவலைப்படவில்லை. அது அவர்களுடைய உரிமை. ஜனநாயக நாட்டில் எல்லோருக்கும் எல்லா உரிமையும் இருக்கிறது.

அண்ணா 100

## ஆசிரியர்கள்



கல்விச் செல்வத்தை அளிப்பதில் ஆர்வம் காட்டும் ஆசிரியர்களுக்குச் சமுதாயத்தில் நல்ல மதிப்பு கிடைக்கச் செய்ய வேண்டும். ஏனென்றால் அவர்கள்தான் அறிவுக் கண்களைத் திறந்து வைக்கிறார்கள்.





கேட்பதற்கும் உரிமை இருக்கிறது. கேட்பதைக் கொடுக்கும்போது வாங்க மறுப்பதற்கும் உரிமை இருக்கிறது. எனவே உரிமைகளைப் போற்றுகின்ற ஆட்சி என்ற முறையில் அந்த உரிமைகளுடைய உணர்வை நான் மதிக்கின்றேன். யார் மீதும் இதன் காரணமாக எனக்கு வெறுப்பில்லை. நான் அல்லது இந்த அரசு அதன் காரணமாக அவமானப்பட்டுவிட்டதாகக் கருதமாட்டேன். அவமானப்படுகிறோம் என்றால் யாரிடத்திலே அவமானப்படுகிறோம் ?

ஒரு தமிழன் இன்னொரு தமிழனைப் பார்த்து தூற்றுகிறான், அல்லது கேலி செய்கிறான், அல்லது கிண்டல் செய்கிறான், அல்லது கேவலமாகப் பேசுகிறான் என்றால் அதை அவமானம் இல்லையா என்று கேட்டால், நான் ஒன்றை இந்த அவையிலே சொல்லிக்கொள்ள விரும்புகிறேன் – நான் இன்று படுகின்ற அவமானத்தால், தமிழன் எதிர்காலத்திலே தலைதூக்கி நிற்பான், அதற்காக நான் இந்த அவமானத்தைப் பெறுகிறேன், ஏற்றுக்கொள்கிறேன் என்றால், இப்படி ஆயிரம் அவமானங்கள் வந்தாலும் நான் ஏற்றுக்கொள்ளத் தயாராக இருக்கிறேன். எனக்கு வேண்டியது, உச்சநீதிமன்றம் வரையிலே சென்று நியாயம் கேட்கிறோம் என்றால், எதற்காகக் கேட்கிறோம் ? எதற்காக வாதாடுகிறோம் ? பெரியாரும், பேரறிஞர் அண்ணாவும், பெருந்தலைவர் காமராசரும் எந்த சேதுசமுத்திரத் திட்டத்திற்காகக் குரல் கொடுத்தார்களோ, அந்தத் திட்டம் நிறைவேற வேண்டும், அதை இடையிலே வந்தவர்கள் கெடுக்க நினைக்கிறார்கள், ஏதேதோ காரணங்களைக் கூறி, அந்தத் திட்டமே நிறைவேறக்கூடாது என்று கருதுகிறார்கள், அது நிறைவேறாவிட்டால் அது இலங்கைக்கு இலாபம், தமிழகத்திற்கு நஷ்டம், தமிழகத்தின் வளம், வாணிபம், வர்த்தகம், எதிர்காலம் இவைகள் எல்லாம் பாதிக்கப்படும் – ஒரு திட்டம் நிறைவேற வேண்டும், அந்தத் திட்டம் சேதுக்கால்வாய்த் திட்டம், அந்தத் திட்டத்தை நிறைவேற்ற வேண்டுமென்று அண்ணா போராடினார், பெரியார் போராடினார், பெருந்தலைவர் காமராசர் நேருவிடம் சென்று வாதிட்டார், அத்தகைய ஒரு திட்டத்தை இன்றைக்கு மடக்கிப்போடச் செய்யப்படுகின்ற சூழ்ச்சிகளை எவ்வளவு நாட்களுக்குத் தாக்குப்பிடித்து நாம் தாங்கிக்கொண்டிருக்க முடியும் என்ற காரணத்தினாலேதான், அந்தப் போராட்டத்தில் எவ்வளவு அவமானங்கள் வந்தாலும் பரவாயில்லை, அதனைத் தாங்கிக்கொண்டு தமிழகத்தைத் தாங்குவதற்கு நம்முடைய எதிர்காலத்தை வளமாக்குவதற்கு, நம்முடைய தமிழ் இனத்தின் குழந்தை

குட்டிகள், எதிர்காலச் சமுதாயம் நலிவடையாமல் இருப்பதற்கு, நலிந்து போகாமல் காப்பாற்றப்படுவதற்கு நாம் நம்மைத் தியாகம் செய்வதென்றால் – தியாகம் என்பது உயிரைக் கொடுப்பது மாத்திரமல்ல – தியாகம் என்பது அவமானப்படுவதுகூட தியாகம்தான்.

தந்தை பெரியார் அவர்கள் கடலூரிலே அவருடைய சிலையைத் திறக்கின்ற ஒரு விழாவிற்கு என்னை வரச்சொல்லி, அழைத்துச்சென்றார். இருவரும் ஒரு வண்டியிலே கடலூரிலே உள்ள பாலத்தின் குறுக்கே சென்றபோது, அவர், அவருடைய சிலை அமைக்கின்ற அந்த இடத்தைக்காட்டி, "அந்தச்சிலைக்குப் பக்கத்திலே ஒரு செருப்பு கிடக்கிறது அல்லவா, அதைப்பார்" என்றார். "என்னய்யா ?" என்று கேட்டேன். அவர் சொன்னார். "இந்தச்சிலை திறப்பு விழாவிற்காக நான் வந்த போது, என்மீது வீசப்பட்ட செருப்பு இது" என்று சொன்னார். அவருடைய சிலையைத் திறக்கக்கூடாது என்று பெரியாருடைய சிலையை மறுத்து, பெரியார்மீது செருப்பு வீசினார்கள். ஐயோ என்மீது செருப்பு வீசி விட்டார்களே என்று பயந்துகொண்டு அவர் சென்னைக்குத் திரும்பிவிடவில்லை. அவர் திரும்பிப்பார்த்து, இன்னொரு செருப்பையும் என்மீது வீசு என்று அந்த அவமானத்தைத் தாங்கிக்கொண்டு, பொறுமையோடு விழாவிலே கலந்துகொண்டுவிட்டு, சிலை திறப்புவிழா முடிந்த பிறகு திரும்பினார்.



ஒரு சிலை திறக்கக்கூடாதென்று செருப்பு வீசினார்கள். இன்று தமிழ்நாடு முழுவதும் ஆயிரக்கணக்கான சிலைகள் தந்தை பெரியாருக்கு வைக்கப்பட்டிருக்கிறது என்றால், அந்த ஒரு செருப்பு வீசப்பட்டபோது, அந்த அவமானம் எனக்கு ஏற்பட்டுவிட்டது, இனி அந்த அவமானத்தோடு வாழமாட்டேன் என்று அவர் மனஉறுதி கலைந்திருப் பாரேயானால், அவரால் இவ்வளவு பெரிய இயக்கத்தைக் கட்டிக்காத்திருக்க முடியாது. நமக்கெல்லாம் தன்மான உணர்வைத் தட்டியெழுப்பியிருக்க முடியாது.



இந்தியாவின் தேசப்பிதா காந்தியடிகள் தென்னாப்பிரிக்காவிலே பட்ட அவமானத்தை விடவா ? ரெயிலிலே ஏறி உட்கார்ந்த அவரைப் பிடித்து வெள்ளைக்கார அதிகாரிகள் கீழே தூக்கி எறிந்தார்களே, அதை விடவா ? ஒரு பெரிய வழக்கறிஞராக, தென்னாப்பிரிக்காவிலே தலைசிறந்தவராகத் திகழ்ந்தவர் காந்தி அடிகள். அவருக்கே அந்தக்கதி அன்றைக்கு ஏற்பட்டதென்றால், அதைத் தாங்கிக்கொண்ட காரணத்தால் இன்றைக்கு அவர் உலகம் முழுவதிலும் இந்தியாவின் தேசப்பிதா, உத்தமர் காந்தி அடிகள் என்று போற்றப்படுகிறார் என்பதை யாரும் மறந்துவிட முடியாது. ஆகவே சகிப்புத் தன்மை, பொறுத்துக்கொள்வது, அது அவமானம் என்றாலும் அதைப் புகழாகவே எண்ணிக் கொள்வது – இவை ஒருவரை வாழ வைக்குமே தவிர, அவரை வாட விட்டுவிடாது. அவருடைய எதிர்காலத்தை இருளாக ஆக்கிவிடாது. அந்த நம்பிக்கையோடுதான் எவ்வளவு அவமானங்கள் வந்தாலும், எவ்வளவு



கண்டனங்கள் வந்தாலும், எவ்வளவு கேலிகள், கிண்டல்கள் வந்தாலும் அவைகளைப் பற்றிக் கவலைப்படாமல் இருக்கவேண்டும்.

இன்றைக்குக்கூடக் கேட்பார்கள். நாட்டில் எவ்வளவோ இருக்கிறது, அதையெல்லாம் விட்டு விட்டு இந்தச் சின்னத்திரைக்கு என்ன பரிசளிப்பு விழா என்று கேட்கக்கூடும். சின்னத்திரைக்குப் பரிசு கொடுத்தால்தான் பெரிய திரை வாழும். பெரிய திரை அதை மறந்து விடக்கூடாது. பெரிய திரை திடீரென்று வந்து விட்டதா இல்லை. பெரிய திரை வருவதற்கு முன்பு படங்கள் சின்னத்திரையிலேதான் ஓடின. இப்போது பார்க்கின்ற சின்னத்திரைகள் அல்ல. கடை வீதிகளில், சந்தை கூடுகின்ற இடங்களில் "பார், பார் பயாஸ் கோப் பார்" என்று சின்னத்திரைகளிலே படங்களைக் காட்டினார்களே, அதனுடைய வளர்ச்சிதான் இன்றைக்குப் பெரிய திரை என்பதை எண்ணிப் பார்த்தால், சின்னத்திரை நம்முடைய ஆதி என்பதை நாம் உணர முடியும். ஆகவே சின்னத்திரை இல்லாமல் பெரிய திரை இல்லை.

நாம் ஐந்து அடி உயரம், ஒன்றரை அடி அகலம் இருக்கிறோம் என்றால், குழந்தையாக இருந்தபோது ஐந்து அடி உயரம் இருந்தோமா என்றால் இல்லை. அப்போது சின்னத்திரையாகத்தான் இருந்தோம், இப்போதுதான் பெரிய திரையாக இருக்கிறோம். இதை மறந்து விடக்கூடாது. ஆகவே சின்னத்திரை இல்லாமல் பெரிய திரை இல்லை. சின்னத்திரையை மறந்து விடக்கூடாது.

நான் தம்பி விடுதலைக்குச் சொல்கிறேன். அன்றைக்குச் சொன்னதை மறந்திருப்பேன் என்று கருதுகிறாய், நான் மறக்கமாட்டேன். உங்களுக்கு ஒரு இடம் வேண்டுமென்று கேட்டாய், நான் உங்களுக்கு "அதிக இடம் கொடுத்து விடமாட்டேன்" கொடுக்கின்ற இடம் நீங்கள் அலுவலகம் நடத்துவதற்கு ஏற்றதாக அந்த இடத்தை நிச்சயமாகத் தருவேன், அந்த இடம் கலை வளர்க்கின்ற இடமாக இருக்கும் என்ற நம்பிக்கையோடு அந்த இடத்தைத் தருவேன்.

இந்தப் படங்களைத் தேர்வு செய்து அவைகளைத் தேர்ந்தெடுத்த நீதியரசர்கள் இருவருக்கும் என்னுடைய நன்றியையும் வணக்கத்தையும் தெரிவித்து – இவ்வளவு படங்களையும் பார்த்து தீர்ப்புகள் வழங்கி அவைகளைப் பரிசுக்குரியவையாகத் தேர்ந்தெடுத்த அந்தக்குழுவினர் அனைவருக்கும் அவர்களுடைய உழைப்பிற்காக என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இங்கே குஷ்பூ அவர்கள் பேசும்போது, ராதிகா அவர்கள் பேசும்போது "நீங்கள் எங்களுக்கு எப்போதுமே இப்படிப் பரிசுகளை வழங்கிக்கொண்டிருக்க வேண்டும்" என்று சொன்னார்கள். அது ராதிகாவின் ஆசையாக இருக்கலாம். அவருடைய வீட்டுக்காரரின் ஆசை எப்படி இருக்குமோ எனக்குத் தெரியாது என்று கூறி விடைபெறுகிறேன். ❖

அண்ணா 100



## கவிதை

**சி**ந்தித்தால் உரையாற்றலாம்; சிந்தித்து நெகிழ்ந்தால் மட்டும்தான் கவிதை இயற்ற முடியும். தான் கண்டு, உள்ளம் நெகிழ்ந்ததை மற்றவர்கள் நெகிழத்தக்க அளவுக்கு அள்ளித் தருவதுதான் கவிதை.

கவிதை எப்போது ஒரு நாட்டில் பிறக்கும்? மொழி வளர்ந்து –இலக்கியம் வளர்ந்து–அதை மக்கள் உணருகின்ற நேரத்தில்தான் தோன்றும்.

எழுத்து சுவைமிக்கதாக மட்டுமிருந்தால் போதாது. சுவையோடு கூடிய பயனும் உள்ளதாக இருக்க வேண்டும். அப்போதுதான் முழு அளவு பாராட்டத்தக்க இலக்கியமாக–கவிதையாக அது திகழும்.

அண்ணா நூற்றாண்டு விழாவையொட்டி

# விலை மதிப்பில்லா மனித உயிர்களைக் காக்கும் அவசர மருத்துவ ஊர்தி சேவைத் திட்டம்

## மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் தொடங்கிவைத்தார்

**ந**மது நாட்டில் பெருகி வரும் சாலை விபத்துகளில் ஓர் ஆண்டில் ஏறத்தாழ ஒரு இலட்சம் பேர் வரை உயிர் இழக்கின்றனர். ஏறத்தாழ 5 இலட்சம் முதல் 6 இலட்சம் பேர் வரை காயமடைகின்றனர். கிராமப் பகுதிகளில் மகப்பேறு காலங்களில் கர்ப்பிணிப் பெண்களும், விஷக் கடிகளாலும், வெறிநாய்க் கடிகளாலும் பாதிக்கப் படுவோரும், உடனடியாகச் சிகிச்சை பெற முடியாமல் உயிரிழக்க நேரிடுகிறது. விலை மதிப்பில்லா மனித உயிர்கள் காப்பாற்றப்பட வேண்டும் என்பதில் இந்த அரசு மிகுந்த அக்கறை கொண்டு விபத்துகளில் பாதிக்கப்படுவோருக்கு உரிய சிகிச்சைகளை உடனடியாக அளிப்பதற்காக, அவசர கால மருத்துவ ஊர்தி சேவைத் திட்டத்தை நடைமுறைப்படுத்திட முடிவு செய்து, அதன்படி, 16 கோடியே 83 இலட்சம் ரூபாய் செலவில் 187 வட்டாரங்களில் அவசரகால மருத்துவ ஊர்திகள் வழங்கப்பட்டு, தொண்டு நிறுவனங்கள் மூலம் திட்டம் செயல்படுத்தப்பட்டுள்ளது.





இத்திட்டத்தைத் தமிழகத்தின் அனைத்துப் பகுதிகளிலும் மேலும் செம்மையாகச் செயல்படுத்திடவும், மாநகராட்சி மற்றும் நகராட்சிப் பகுதிகளுக்கும் இத்திட்டத்தை விரிவுடுத்திடவும் ஆந்திரா மாநிலம் ஐதராபாத் நகரைச் சேர்ந்த இ.எம்.ஆர்.ஐ. என்னும் தொண்டு நிறுவனம் தேர்ந்தெடுக்கப் பட்டுள்ளது. இந்நிறுவனம் ஆந்திரம், குஜராத் மற்றும் உத்ராஞ்சல் மாநிலங்களில் இதேபோன்ற திட்டத்தைச் சிறப்பாகச் செயல்படுத்தி நல்ல அனுபவம் பெற்றுள்ளது. அந்நிறுவனத்தின் மூலம் தமிழகத்தில் இத்திட்டத்தைச் செயல்படுத்திட தமிழக அரசு 6.5.2008 அன்று, புரிந்துணர்வு ஒப்பந்தம் ஒன்றைச் செய்து கொண்டுள்ளது.

அதன் தொடர்ச்சியாக, இந்த இ.எம்.ஆர்.ஐ. நிறுவனத்திடம் முதற்கட்டமாக குளிர்சாதன வசதி மற்றும் தேவையான மருத்துவ உபகரணங்கள் அனைத்தும் பொருத்தப்பட்டுள்ள 198 அவசர கால மருத்துவ ஊர்திகள் தமிழக அரசினால் 17 கோடியே 82 இலட்சம் ரூபாய் செலவில் வழங்கப்பட்டுள்ளன.

ஏற்கெனவே தொண்டு நிறுவனங்கள் மூலம் செயல்பட்டு வரும் 187 அவசரகால மருத்துவ ஊர்திகளும் இத்திட்டத்துடன் இணைக்கப்பட்டு 34 கோடியே 65 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டிலான 385 அவசரகால மருத்துவ ஊர்திகள் இத்திட்டத்தில் ஈடுபடுத்தப்படும்.

இந்த திட்டத்தைச் செயல்படுத்துவதற்குத் தேவையான பணியாளர்கள், மேற்பார்வையாளர்கள் மற்றும் கண்காணிப் பாளர்களை இ.எம்.ஆர்.ஐ. நிறுவனம் தேர்வுசெய்து, அவர்களுக்கு உரிய பயிற்சிகளை அளித்துள்ளது.

இத்திட்டத்திற்குரிய 'மத்திய செயல்பாட்டு நிலையம்', சென்னை அரசு கஸ்தூரிபா காந்தி மகப்பேறு மருத்துவமனை வளாகத்தில் உள்ள சுகாதார மேற்பார்வையாளர் பயிற்சி நிலையத்தில், இ.எம்.ஆர்.ஐ. நிறுவனத்தினால் தற்காலிகமாக அமைக்கப்பட்டுள்ளது.

இந்த மத்திய செயல்பாட்டு நிலையத்தில், தகவல் தொடர்புகளுக்குத் தேவைப்படும் கணினிகளும், அதற்கான மென்பொருள்களும் பொருத்தப்பட்டுள்ளன.

மருத்துவத்துறை, தீயணைப்புத்துறை, காவல்துறை ஆகிய துறைகளின் அவசர உதவி தேவைப்படும் பொதுமக்கள், இத்திட்டத்திற்கென அமைக்கப்பட்டுள்ள கட்டணமில்லா தொலைபேசி எண்.108–ஐ பயன்படுத்தி, தமிழகத்தின் எந்த ஒரு பகுதியிலிருந்தும் இந்த மையத்தைத் தொடர்பு கொள்ளலாம். தொடர்பு கொண்ட சில நொடிகளில், அவசரகால மருத்துவ ஊர்தி புறப்பட்டு, அரை மணி நேரத்திற்குள் நோயாளி இருக்கும் இடத்திற்குச் சென்று, அவருக்குத் தேவைப்படும் முதல் கட்ட அவசர சிகிச்சையை அளிக்கும். பின்னர், அந்த நோயாளியை மருத்துவமனைக்குக் கொண்டு வந்து, அவருக்குத் தேவையான மருத்துவ உதவிகளை உடனடியாக வழங்கும். இந்தச் சிகிச்சைக்காக நோயாளியிடம் முதல் 24 மணி நேரத்திற்கு எந்தக் கட்டணமும் வசூலிக்கப்படமாட்டாது.

அதன் பின்னர், நோயாளியின் விருப்பத்திற்கேற்ப, அவர் விரும்பும் மருத்துவமனையில் சேர்ந்து தொடர் சிகிச்சையைப் பெற்றுக்கொள்ளலாம்.

இத்திட்டத்திற்காக மொத்தம் 385 மருத்துவ ஊர்திகளுக்கு அனுமதிக்கப் பட்ட 34 கோடியே 68 இலட்சம் ரூபாய் தவிர இத்திட்டத்திற்குரிய மத்திய கட்டுப்பாட்டு மையத்திற்கான கட்டடம் புதிதாகக் கட்டப்படவும், இதர நிர்வாகச் செலவுகளுக்காகவும் மேலும் 36 கோடி ரூபாயை இந்த அரசு வழங்கியுள்ளது.

நெருக்கடி நிலையில் உள்ள உயிர்களைக் காக்கும் சீரிய இந்தத் திட்டத்தின்கீழ், முதலில் சென்னையில் 20 அவசர மருத்துவ ஊர்திகளை வழங்கி மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் 15.9.2008 அன்று இத்திட்டத்தைத் தொடங்கி வைத்தார். மற்ற மாவட்டங்களுக்கும் இத்திட்டம் படிப்படியாக விரிவுபடுத்தப்படும்.

இந்நிகழ்வின்போது மாண்புமிகு மத்திய தொலைத் தொடர்பு மற்றும் தகவல் தொழில்நுட்பத்துறை அமைச்சர் திரு. ஆ. இராசா, மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் திரு. எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம், சத்யம் கம்ப்யூட்டர் சர்வீசஸ் தலைவர்–நிறுவனர் திரு. பி. ராமலிங்க ராஜு, கவிஞர் கனிமொழி, எம்.பி., தலைமைச் செயலாளர் திரு. கே.எஸ்.ஸ்ரீபதி, இ.ஆ.ப., மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்துறை முதன்மைச் செயலாளர் திரு. வி.கே. சுப்புராஜ், இ.ஆ.ப., தமிழ்நாடு சுகாதாரத்திட்ட இயக்குநர் திரு.டேவிதார், இ.ஆ.ப., மற்றும் உயர் அதிகாரிகள் கலந்து கொண்டனர்.

❖ ❖ ❖

அண்ணா 100



### நாட்டுப்பற்று

**பா**தையிலே கிடக்கிற முள்ளை எடுத்து ஓரத்திலே போட்டாலும் அதுவும் நாட்டுப் பற்றால் செய்யும் செயலாகும்.

### கூட்டுறவு

சமுதாயத்தில் தனி உடைமைக்கும் பொது உடைமைக்கும் மையமான ஒரு தங்குமிடமாக உருவாகியிருப்பதே கூட்டுறவு இயக்கம்.

## ரூ.4,150 கோடியில் வணிக வாகனங்கள் தயாரிக்கும் புதிய தொழில் திட்டம்
## தமிழக அரசுடன் - அசோக் லேலண்டு நிறுவனம் புரிந்துணர்வு ஒப்பந்தம்!



**வ**ணிக வாகனங்கள் தயாரிப்பில் இந்தியாவிலேயே இரண்டாவது மிகப் பெரிய நிறுவனமாக விளங்கும் அசோக் லேலண்டு நிறுவனம் சென்னைக்கு அருகில் எண்ணூரில் அமைந்துள்ள முதன்மைத் தொழிற்சாலையுடன், ஒசூரில் இரண்டு ஆலைகள், இராஜஸ்தான் மாநிலம் ஆல்வாரில் ஒன்று, மராட்டிய மாநிலம் பந்தாராவில் ஒன்று என மொத்தம் ஐந்து உற்பத்தித் தொழிற்சாலைகளைக் கொண்டுள்ளது.

இந்நிறுவனம் உலகின் அனைத்துப் பெரிய சந்தைகளிலும் இடம்பெற்றுள்ள, பயணிகளுக்கான சொகுசுக் கார், குடும்பங்களுக்கான கார், விளையாட்டுப் போட்டிகளுக்கான கார், விளையாட்டுப் போட்டிகளுக்குப் பயன்படும் பிற வாகனங்கள், இலகுரக வணிக வாகனங்கள் ஆகியவற்றைத் தயாரிக்கும் ஜப்பான் நாட்டைச் சேர்ந்த நிசான் மோட்டார்ஸ் நிறுவனத்துடன் சேர்ந்து – ஆண்டுக்கு ஒரு இலட்சத்து 90 ஆயிரம் வாகனங்களைத் தயாரிக்கும் திறன்கொண்ட இலகுரக வணிக வாகனத் திட்டத்தை மூன்று கூட்டு முயற்சி நிறுவனங்கள் மூலம் செயல்படுத்தத் திட்டமிட்டுள்ளது.

மேலும், ஆண்டுக்கு ஒரு இலட்சம் வாகனங்களைத் தயாரிக்கும் உற்பத்தித் திறனுடன் நடுத்தர ரக மற்றும் கனரக வணிக வாகனங்கள் திட்டத்தைத் தன் சொந்தத் திட்டமாகச் செயல்படுத்தவும் அசோக் லேலண்டு நிறுவனம் திட்டமிட்டுள்ளது.

அசோக் லேலண்டு நிறுவனத்தால் திட்டமிடப்பட்டுள்ள இந்த இரண்டு திட்டங்களும் ஒருங்கிணைந்த மோட்டார் வாகனத் திட்டத்திற்கான அனைத்து உட்கூறுகளையும் கொண்டிருக்கும். எண்ணூர், ஒசூர், பிள்ளைப்பாக்கம் போன்ற ஒன்றுக்கு மேற்பட்ட இடங்களில் 4,150 கோடி ரூபாய் முதலீட்டில் அமையவிருக்கும் இத்திட்டங்கள் முழுத்திறனுடனும் செயல்படும்பொழுது 4,500 பேருக்கு நேரடியாகவும், ஏறத்தாழ 13 ஆயிரத்து 500 பேருக்கு மறைமுகமாகவும் வேலைவாய்ப்புகளை வழங்கும்.

இத்தொழிற்சாலை மூலம் கிடைக்கும் முதலீடு அசோக் லேலண்டு மற்றும் நிசான் நிறுவனங்கள் மூலம் தமிழகத்திற்கு வந்துள்ள மிகப்பெரிய முதலீடாகும்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் கலைஞர் அவர்களின் முன்னிலையில் 8.9.2008 அன்று நடைபெற்ற இத்தொழிற்சாலைகளுக்கான புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் தமிழக அரசின் சார்பில் தொழில்துறை முதன்மைச் செயலாளர் திரு. எம்.எஃப். பரூக்கி, இ.ஆ.ப., அவர்களும் அசோக் லேலண்டு நிறுவனம் சார்பாக அந்நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் சேஷசாயி அவர்களும், நிசான் நிறுவனம் சார்பாக அந்நிறுவனத்தின் துணைத் தலைவர் திரு. ஆன்ட்ரூ பால்மர் அவர்களும் கையெழுத்திட்டனர்.

அசோக் லேலண்டு மற்றும் நிசான் நிறுவனங்களால் அமைக்கப்படவுள்ள இந்தத் திட்டங்களுடன் ஏற்கெனவே, தனது உற்பத்தி வசதிகளை பெரிய அளவில் விரிவாக்கம் செய்து வரும் ஹூண்டாய் மோட்டார் இந்தியா நிறுவனம், ஃப்ரான்ஸ் நாட்டைச் சார்ந்த ரெனோ நிறுவனமும் ஜப்பான் நாட்டைச் சார்ந்த நிசான் நிறுவனமும் இணைந்து ஒரகடம் தொழில் பூங்காவில் உருவாக்கிடும் ஒருங்கிணைந்த மோட்டார் வாகனத் திட்டம், ஜெர்மன் நாட்டைச் சேர்ந்த டெய்ம்லர் நிறுவனமும் இந்தியாவைச் சார்ந்த ஹீரோ நிறுவனமும் இணைந்து சிப்காட் ஒரகடம் தொழிற் பூங்காவில் அமைத்துவரும் வணிக வாகனங்கள் திட்டம் ஆகிய அனைத்தும் சீருந்துகள் உள்ளிட்ட வணிக வாகனங்கள் தயாரிப்பில் சென்னைக்கு மென் மேலும் சிறப்புகளைச் சேர்க்கும் என்பது உறுதியாகிறது.

இந்நிகழ்வின்போது, தலைமைச் செயலாளர் திரு. கே. எஸ். ஸ்ரீபதி, இ.ஆ.ப., நிதித்துறைச் செயலாளர் திரு. கு. ஞான தேசிகன், இ.ஆ.ப., தமிழ்நாடு தொழில் முன்னேற்றக் கழகத்தின் (SIPCOT) தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குநர் திரு என். கோவிந்தன், இ.ஆ.ப., தொழில்துறை சிறப்புச் செயலாளர் தீரஜ்குமார், இ.ஆ.ப., தமிழ்நாடு தொழில் வழிகாட்டி அமைப்பின் இயக்குநர் திரு. எம். வேல்முருகன், இ.ஆ.ப., அசோக் லேலண்டு நிறுவனத்தின் சார்பாக திரு. ஜி.பி. இந்துஜா, திரு. டி.ஜி. இந்துஜா, டாக்டர் வி. சுமந்திரன், திரு கே. ஸ்ரீதரன் ஆகியோரும் நிசான் நிறுவனத்தின் சார்பாக திரு. தகாஷி டொராடா மற்றும் திரு. நகாடா ஆகியோரும் உடனிருந்தனர்.

❖ ❖ ❖



## தமிழகத்திலே நிறைவேற்றப்படும் திட்டங்கள்
## பலராலும் பாராட்டி வரவேற்கப்படுகின்றன

### 16-8-2008 அன்று, சென்னையில் நடைபெற்ற அரசு நூலக வளாக அடிக்கல் நாட்டு விழாவில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் ஆற்றிய உரை



**கோ**ட்டூர்புரம் என்றாலே எனக்கு முன்னால் இங்கே உரையாற்றிய நண்பர்களும், தம்பிமார்களும் எடுத்துரைத்ததைப்போல என் வாழ்க்கையிலே ஒரு கொடுமையான அத்தியாயம்.

ஒரு பொதுத்தேர்தல் நேரத்தில், இரவு 10 மணி அளவில் வாக்காளர்களைச் சந்திப்பதற்காக அன்றைக்கு இந்த வட்டாரத்தில் மாநகராட்சி மன்ற உறுப்பினராக இருந்த நண்பர் கோபால் என்பவருடைய அழைப்பின் பேரில், நானும் நண்பர்களும் இந்தப் பகுதிக்கு வந்து வாக்கு சேகரித்த நேரத்தில் எங்களை "வருக, வருக" என்று அழைத்த சில பேர், நாங்கள் அதை நம்பி உள்ளே வந்ததும், எங்களை ஒரு மண்டபத்திற்குள் தள்ளி, கதவைப் பூட்டி, என்னுடன் வந்த வயதான பெரியவர் பேரறிஞர் அண்ணா அவர்களின் அருமைத் தோழர் காஞ்சி மணிமொழியாரையும் மற்றும் எங்கள் தோழர்களையும் உள்ளேயே பூட்டி வைத்து, அதற்குப் பிறகு நடக்க வேண்டிய காரியங்களையெல்லாம் நடத்தி, நாங்கள் இரத்தம் ஒழுக, உடல் வலி தாங்காமல் அங்குமிங்கும் ஓடி தப்பித்துச் செல்ல என்ன வழி என்று

அண்ணா 100



### பொது நன்மை

**நா**ட்டிலே ஒரு புது சமுதாய உணர்வை ஊக்குவிக்க, அரசு மேற்கொள்ளும் திட்டங்கள் மட்டும் போதா. அவற்றினை நிறைவேற்றுவதில் அதிகாரிகள் காட்டும் திறமையும் அக்கறையும் மட்டும் போதாது. சமூகம் முழுவதும் எழுச்சிபெற்று, ஒவ்வொருவரும் தமது பங்கினைச் செலுத்தி, புது நிலையினை உருவாக்க வேண்டும் என்ற ஆர்வம் கொள்ள வேண்டும். தமது உழைப்பினை மனமுவந்து ஈந்திட, பலப்பல ஆயிரவர் முன் வந்திடின், சமூகம் பெற்றிடக் கூடிய பயன், பெருமை தரத்தக்கதாக அமையும். "எனக்காகவும் என் குடும்பத்துக்காகவும் செலவிட்டது போக, மிஞ்சியதில் ஒரு மணி நேரமாகிலும், நாட்டின் பொது நன்மைக்காகச் செலவிடுவேன்" என்ற உறுதி கொண்ட சில ஆயிரவர் தமது உழைப்புச் செல்வத்தைத் தந்திடின், சமூக மேம்பாடு வளர்ந்திடுவது உறுதி.

பார்த்து வழி தெரியாமல் சாரங்கபாணி என்கிற மிகவும் பிற்படுத்தப்பட்ட சமுதாயத்தைச் சேர்ந்த தோழரும், அவருடைய மனைவியும் பரபரவென ஓடிவந்து எங்களுடைய கரங்களைப் பிடித்து இழுத்துச் சென்று, பக்கத்திலே உள்ள ஒரு குடிசைக்குள் என்னை அடைத்துவிட்டு என்னோடு வந்திருந்த வெங்கடங்கால் சந்தானம், வாழக்கரை ராஜகோபால் போன்ற நண்பர்களையெல்லாம் நீங்கள் போங்கள், நாங்கள் அவரைப் பத்திரமாக அனுப்புகிறோம் என்று சொல்லிவிட்டு – என்னை அந்த வீட்டிற்குள்ளே பத்திரமாகப் பாதுகாத்தார்கள்.

ஆனால் அங்கே நான் பிடித்து வைக்கப்பட்டிருக்கிறேன் என்பதைக் கேள்வியுற்ற, தேர்தலிலே போட்டியிட்ட எதிர்தரப்பு நண்பர்கள் அந்த வீட்டை வளைத்து என்னைப் பிடிப்பதற்கு அடிப்பதற்கு முனைந்தபோது நான் வெட்கத்தை விட்டுச் சொல்கிறேன் – அந்தச் சாரங்கபாணியின் இளம் மனைவி, தன்னுடைய பச்சைக் குழந்தையை, அதனுடைய அழுகையை நிறுத்துவதற்காக, அழுதால் அந்த ஒலி கேட்டு அந்த முரடர்கள் உள்ளே நுழைந்து விடுவார்கள் என்ற பயத்தின் காரணமாக அதன் வாயைப் பொத்திக்கொண்டே, அந்த குடிசைக்குள் இருந்த கயிற்றுக் கட்டிலின்கீழ் அந்தக் குழந்தையோடு விடிய விடிய படுத்திருந்த அந்தக் காட்சியும், அந்த மிகவும் பிற்படுத்தப்பட்ட சமுதாய ஏழை மக்கள் என்னைக் காப்பாற்றி வெளியே அனுப்பிய அந்த நிகழ்ச்சியும் – அதற்கிடையே செய்தி கேள்விப்பட்ட அறிஞர் அண்ணா அவர்கள் நடிப்பிசைப்புலவர் திரு. கே.ஆர். ராமசாமி போன்றவர்களையெல்லாம் அங்கே அனுப்பி நான் எங்கே என்று தேடியபோது, பொழுது விடிந்து ஆறு மணி அளவிலே அவர்கள் அந்த இடத்திற்கு வந்து என்னை அழைத்துச் சென்றார்கள்.

நுங்கம்பாக்கத்திலே அறிஞர் அண்ணா அவர்களின் வீட்டிற்குக் கொண்டுபோய் நிறுத்தினார்கள். அண்ணா அவர்கள் ராணி அண்ணியாரை அழைத்து சாரங்கபாணியின் மனைவிக்கு நீ நன்றி சொல்கிற வகையிலே அந்த அம்மையாருக்கு நமஸ்காரம் செய்துகொள், அவர்தான் கருணாநிதியைக் காப்பாற்றி அனுப்பியிருக்கிறார் என்று அண்ணியாரை விட்டு அந்தச் செயலைச் செய்யச் சொல்லி, சாரங்கபாணியினுடைய துணைவியாருக்கு புடவையும், சாரங்கபாணிக்கு வேட்டியும் எடுத்துக் கொடுத்து – என் தம்பியைக் காப்பாற்றிய உங்களுக்கு என்னால் முடிந்த பரிசாக இதைத்தான் தர முடியும் – என்று அனுப்பி வைத்தாரே, அந்த இடம் தான் இந்தக் கோட்டூர்புரம்.

இந்தக் கோட்டூர்புரத்தில் ஒரு நூல் நிலையத்தை நூலகத்தை இந்தியாவிலேயே எடுத்துக்காட்டிப் பேசுகின்ற அளவிற்கு, புகழ்கின்ற அளவிற்கு உருவாக்குகின்ற வாய்ப்பு எனக்கு ஏற்பட்டது என்பதையும் – அன்றைக்கு அந்த உத்தமி மாத்திரம் – சாரங்கபாணியின் மனைவி மாத்திரம் என்னைக் காப்பாற்றியிராவிட்டால் இன்றைக்கு கருணாநிதியை நீங்கள் முதலமைச்சராகப் பார்த்திருக்கவும் முடியாது, கருணாநிதி வந்தாலும் வராவிட்டாலும் இங்கே ஒரு நூல் நிலையத்தினை நீங்கள் கண்டிருக்கக்கூடும், ஆனால் என்னைப் பார்த்திருக்க முடியாது, நானும் உங்களோடு இருக்கக்கூடிய வாய்ப்பை எனக்கு வழங்கிய இயற்கைக்கு இந்த நேரத்திலே நான் நன்றி சொல்லி அந்த மிகவும் பிற்படுத்தப்பட்ட சமுதாயத்தைச் சேர்ந்த இளம் ஏழைக் குடும்பத்தினருக்கு என்னுடைய வணக்கத்தை, வாழ்த்தை, என்னுடைய விசுவாசம் மிக்க நன்றியைத் தெரிவித்துவிட்டு, இந்த விழாவிலே என்னுடைய பேச்சை ஆரம்பிக்கிறேன். அதுதான் நான் அவர்களுக்கு ஆற்றக்கூடிய கடமை, காட்டக்கூடிய நன்றி.

கோட்டூர்புரத்தைத் தேர்ந்தெடுத்து நூலகம் தந்தமைக்காக தம்பி துரைமுருகனும், தம்பி டி. ஆர். பாலுவும் மகிழ்ச்சி அடைந்தார்கள். தம்பி துரைமுருகன் புத்தகம் படிப்பதிலே ஆர்வம் படைத்தவர். எனக்குள்ள பயம் எல்லாம் இப்போது – அவர் என் வீட்டிற்கு வந்தாலே அங்கேயுள்ள புத்தகத்தை – எனக்குத் தெரியாமல்




எடுத்துக் கொண்டு போய் விடுவார். எனவே பக்கத்திலே ஒரு நூலகம் வரும்போது என்ன செய்வார்களோ என்று பாலுவைப் பற்றியும், துரைமுருகனைப் பற்றியும் எனக்குப் பயமிருந்தாலுங்கூட, இது அரசுக்குரிய இடம், நமக்கும் உரிய இடம் என்ற உணர்வோடு செயல்படுவார்கள், செயல்படவேண்டும் என்று நான் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

வீட்டுக்கொரு புத்தகச்சாலை வேண்டும் என்று அறிஞர் அண்ணா இன்று நேற்றல்ல – நீண்ட காலத்திற்கு முன்பு வானொலியிலே பேசினார். 1948ஆம் ஆண்டில் பேசினார். அப்போது சொல்கிறார்.

"வீடுகளில் மேஜை நாற்காலி, சோபாக்கள் இருக்கும், பீரோக்கள் இருக்கும். அவைகளில் வெள்ளித் தாம்பாளமும் விதவிதமான வட்டில்களும், பன்னீர்ச் செம்பும் இருக்கும், பித்தளைப் பாத்திரங்கள் இருக்கும். உடைகள் சிறு கடையளவு இருக்கும். மருந்து வகைகள் சிறு வைத்தியசாலை அளவுக்குகூட இருக்கும். அப்படிப்பட்ட வசதியுள்ள வீடுகளிலேயும்கூட புத்தகச் சாலை இராது. இருக்கவேண்டுமென்று எண்ணம் வருவதே இல்லை. அவசியமும் தோன்றுவதில்லை.

இந்தச் செப்புக் குடம் சீரங்கத்தில் வாங்கியது. தேவர் கல்யாணத்தின்போது திருப்பதியில் வாங்கினோம். இந்தத் தாம்பாளத்தைப் பெல்லாரிக்குச் சென்றோமே பெண் பார்க்க, அப்போது வாங்கினோம். இந்த இரத்தின ஜமுக்காளத்தைக் கார்த்திகை தீபத்தின்போது திருவண்ணாமலையில் வாங்கினோம். சிதம்பரத்திலே ஆருத்திரா தரிசனத்தின்போது, இதை வாங்கினோம் என்று நமது வீடுகளில் பல சாமான்களைக் காட்டுவர். சாமான் ஒவ்வொன்றுக்கும் ஒரு சரித்திரமே கூறுவார்கள். ஆனால், பத்து நல்ல புத்தகங்களைக் காட்டி இன்ன சந்தர்ப்பத்தில் இவைகளை வாங்கினோம் என்று கூறமாட்டார்கள்.

அண்ணா 100



## தொழிலாளர் உரிமை

இப்பொழுது எங்கு பார்த்தாலும் ஆலைகள் எழ ஆரம்பித்துவிட்டன. தொழிலாளர்கள் இந்தச் சமுதாயத்திற்குப் புது உருவத்தைக் கொடுக்கிறார்கள்.

பாரதி சொன்னார், தொழிலாளர்கள் பிரம்மாக்கள் என்று! பிரம்மாக்கள் என்றால் தெய்வங்களல்ல–உற்பத்தி செய்பவர்கள்! உற்பத்தி செய்பவர்தான் ஆக்குந் தொழில்தான் பிரம்மாவுக்கு உரியது என்று புராணங்கள் கதை சொல்லும். அதைப் போல, தொழிலாளர்கள் பிரம்மாக்களாகத்தான் இருக்க வேண்டுமென்று நினைத்தால், தொழில் இருக்கும் ஆனால் வளமிருக்காது. தொழிலாளர் உரிமைகளையும் அவர்களின் நலனையும் எவ்வளவுக் கெவ்வளவு பாதுகாக்கின்றோமோ, அவ்வளவு விரிந்த அளவில் தொழில் வளம் பெருகும்.

அண்ணா 100



## விவசாயம்

இன்னும் 10 அல்லது 15 ஆண்டுகளில் பி.ஏ. பட்டதாரி டிராக்டர் ஓட்டுவதையும், எம்.ஏ., பட்டதாரி அறுவடை செய்வதையும் பார்க்கலாம். படித்தவன் உழவேண்டும், உழுபவன் படிக்க வேண்டும். படிப்பான் அறிவுப் பசியைத் தீர்க்க–உழுவான் உற்பத்தியைப் பெருக்க என்ற நிலை ஏற்பட வேண்டும்.

தானே பயிரிட்டு வளரும் நிலம், தாய்ப்பால் குடித்து வளரும் குழந்தையைப்போல! நிலத்தைக் குத்தகைக்கோ வாரத்திற்கோ விட்டால், நிலத்திலே பயிர் வளராது என்பதில்லை–வளரும்–ஆனால் அதிலே வாஞ்சையிருக்காது.

வீட்டின் அலங்காரத்தையும், விசேஷகால உபயோகத்திற்கான சாதனங்களையும் கவனிப்பது போல வீட்டிற்கோர் புத்தகச்சாலை, சிறிய அளவிலாவது அமைக்க நிச்சயமாகக் கவனம் செலுத்தவேண்டும்; அக்கறை காட்டவேண்டும். அறிவு ஆயுதமாகிவிட்ட நாட்களிலே வாழும் நாம் இனியும் இந்தக் காரியத்தைக் கவனியாதிருப்பது நாட்டுக்கு மறைமுகமாகச் செய்யும் துரோகச் செயலாகும்.

வீட்டிற்கோர் புத்தகச்சாலை நிச்சயமாக வேண்டும். வாழ்க்கையில் அடிப்படைத் தேவைகளுக்கு அடுத்த இடம் அலங்காரப் பொருள்களுக்கும், போகபோக்கியப் பொருள்களுக்கும் தரப்படும் நிலைமாறி, புத்தகச்சாலைக்கும் அந்த இடம் தரப்படவேண்டும். உணவு, உடை, அடிப்படைத் தேவை – அந்தத் தேவையைப் பூர்த்தி செய்தானதும், ஒவ்வொரு வீட்டிலும் முதல் இடம் புத்தகச்சாலைக்குத் தரப்படவேண்டும்". – என அறிஞர் அண்ணா அவர்கள் 48ஆம் ஆண்டு வானொலியிலே ஆற்றிய உரை இன்னமும் நம்முடைய காதுகளிலே ஒலித்துக்கொண்டிருக்கின்றது. இன்னமும் ஒலித்துக்கொண்டிருப்பதற்குக் காரணம், அவருடைய அவா முழுமையாகத் தமிழகத்திலே ஏன் நாட்டிலே நிறைவேறவில்லை. நிறைவேறவேண்டும் என்ற அந்த நேரத்தை நோக்கி நாம் எல்லாம் நடைபோட வேண்டும் என்பதற்காகத்தான் இதனை ஞாபகப்படுத்துகிறேன்.

புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் புத்தகச்சாலையைப் பற்றி எடுத்துச் சொன்ன கவிதையை இங்கே தொகுப்புரை வழங்கிய" அம்மையார் அவர்கள் குறிப்பிட்டார்கள். பாரதிதாசன் சொல்கிறார்.

"மனிதரெலாம் அன்புநெறி காண்ப தற்கும்
மனோபாவம் வானைப்போல் விரிவ டைந்து

தனிமனித தத்துவமாம் இருளைப் போக்கிச்
சகமக்கள் ஒன்றென்ப துணர்வ தற்கும்,

இனிதினிதாய் எழுந்தஉயர் எண்ண மெல்லாம்
இலகுவது புலவர்தரு சுவடிச்சாலை;

புனிதமுற்று மக்கள்புது வாழ்வு வேண்டில்
புத்தகச்சா லைவேண்டும் நாட்டில்
யாண்டும்"

இப்படி புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் அவர்களால் சிறப்பிக்கப்பட்ட புத்தகச்சாலையாக இந்த நூலகம் அமையும் என்பதிலே எனக்கு எள்ளளவு அய்யமும் இல்லை.

நாம் பிற பெரிய திட்டங்களை நூறு கோடி ரூபாய்க்கு மேற்பட்ட செலவு ஆகக்கூடிய திட்டங்களை இப்போது இந்த இரண்டாண்டு காலத்திலே நிறைவேற்றத் தொடங்கி, அவைகள் முடிவுறும் தருவாயில் அல்லது பாதியளவு நடைபெற்றுக் கொண்டிருக்கிற நிலையிலே அந்தத் திட்டங்கள் இன்றைக்குத் தமிழகத்திலே பலராலும் போற்றப்படுகின்ற திட்டங்களாக – வரவேற்கப்படுகின்ற திட்டங்களாக அமைந்துள்ளன. இன்றைக்குப் பொதுநூலகத் துறையின்கீழ் தமிழகத்திலே இயங்கி வருகின்ற நூலகங்களுடைய எண்ணிக்கை அதிகமாக இருந்தாலும் கூட, அதனுடைய சிறப்பு, பெருமை போற்றத்தக்கதாக இல்லை என்பதை நாம் ஒப்புக்கொண்டுதான் ஆக வேண்டும்.

30 மாவட்டங்களில் மைய நூலகங்கள் இருக்கின்றன. 1,567 கிளை நூலகங்கள் இருக்கின்றன. 1,827 ஊர்ப்புற நூலகங்கள் இருக்கின்றன. 487 பகுதி நேர நூலகங்கள் இருக்கின்றன. 12 நடமாடும் நூலகங்கள் இருக்கின்றன. ஆகமொத்தம் 3,924 நூலகங்கள் அரசு பொதுநூலகத் துறையின்கீழ் செயல்படுகின்றன.

அங்கெல்லாம் தரப்படுகின்ற நூல்களின் எண்ணிக்கை ஒரு புதிய நூல் ஒன்று வெளிவருமேயானால், அந்த எழுத்தாளர் மூலம்



## செம்மொழி

"தமிழ் மீது, நாம் பற்று வைப்பது, இயற்கை நியதியாகும். ஆனால் அதற்குமேலே அந்த மொழியை ஒப்பிட்டுப் பார்த்தாலும், தமிழ் ஒரு செம்மொழி என்பது தெரிகிறது. அந்த மொழிமீது வைக்கப்படுகின்ற பற்றின் காரணமாக, அந்த மொழி, எல்லாத் துறைகளிலும் ஏற்றம் பெறவேண்டுமென்று விரும்புகிறோம். ஏற்றத்திற்குத் தடையாக, ஏதேனும் வருமானால், நம்மையும் அறியாமல் உள்ளம் கொதிப்படைகிறது".



கிடைக்கின்ற மன்னிக்க வேண்டும், அந்த எழுத்தாளரிடமிருந்து நூலகங்கள் வாங்குகின்ற புத்தகங்களின் எண்ணிக்கை இதுவரையிலே 600 ஆக இருந்ததை நம்முடைய எழுத்தாளர்கள் என்னிடம் வைத்த "வேண்டுகோளை" மன்னிக்கவும் "கோரிக்கை"யின் காரணமாக அதை ஆயிரமாக உயர்த்தித்தந்து இப்போது அவர்கள் மகிழ்ச்சியிலே திளைத்திருக்கின்றார்கள்.

மேலும் அவர்கள் இந்த நூலகங்களுடைய பெருமைகளை உயர்த்துவார்களேயானால் ஆயிரம் என்பதை இரண்டாயிரம் என்று ஆக்குவதற்குக் கூட அதிக நேரம் ஆகாது என்பதை நான் இந்த மாமன்றத்திலே சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இந்த நூலகத்தை உருவாக்க வேண்டுமென்று சிந்தனையை நான் பெற்றதற்கு வித்தாக இருந்தது என்னுடைய மகள் கனிமொழி என்பதை இங்கே குறிப்பிட்டார்கள். நான் அதற்காக நன்றி சொல்லப்போவதில்லை, தேவையும் இல்லை என்பதற்காக, ஆனாலும் கனிமொழியின் அந்த ஆர்வத்தை இன்றையதினம் செயல்படுத்தியிருக்கிறோம். இதைச் செயல்படுத்தி, இங்கே மாபெரும் கட்டடம் ஒன்று கட்டப்பட்டு, பல்லாயிரக்கணக்கான, லட்சக்கணக்கான மக்கள் அந்தப் புத்தகங்களின் மூலமாகப் பயன்பெறுகிற அந்த நிலை ஏற்படுகிற நேரத்தில் நாம் இன்றைக்கு தொடங்குகின்ற இந்த நிகழ்ச்சியினுடைய வெற்றி என்பதைக் கொண்டாடமுடியும். அந்த வெற்றியைப் பெறுவதற்கு நீங்கள் எல்லாம் உங்களுடைய ஒத்துழைப்பைத் தரவேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

நம்முடைய பள்ளிக் கல்வித்துறை அமைச்சர், அருமைத் தம்பி தங்கம் தென்னரசு உருக்கமிகு உரையொன்றை ஆற்றி என்னையும் பேராசிரியரையும் மற்றவர்களையும் வரவேற்றிருக்கின்றார். நான் தங்கம் தென்னரசிடம் என்ன எதிர்பார்த்து, அவரை அமைச்சராக ஆக்குகின்ற பணியிலே ஈடுபட்டேனோ அது நிறைவேறியிருக்கிறது அது நிச்சயமாக நிறைவேறும், அதிலே நான் ஏமாறவில்லை, ஏமாறமாட்டேன். யார் யாரை எந்த இடத்திலே வைக்க வேண்டும், யார் யாருக்கு என்ன பொறுப்பைக் கொடுக்க வேண்டுமென்பதை சிந்தித்துப் பார்த்து நாங்கள் செயல்படுகிறவர்கள், அந்தச் சிந்தனை தவறாகவில்லை என்பதற்கு என்னுடைய அருமைத் தம்பி – நான் இழந்த மறவர் குல மாணிக்கம் – தங்கபாண்டியனுடைய பெயரை தவறாது சொல்லக் கூடிய அந்தப் பெயரை நிலை நாட்டக் கூடிய வகையில் நம்முடைய தம்பி தங்கம் தென்னரசு செயல்படுகிறார்.

அவர் என்னை அதிகம் பார்ப்பதில்லை. இப்போது சொன்னாரே, தேதி கேட்பதற்காக – பெற்ற தேதியை உறுதி செய்வதற்காக – அழைப்பிதழ் அச்சடிப்பதற்காக என்னை வந்து பார்த்ததாகச் சொன்னாரே, அப்படி அவசியமான நேரம் தவிர, மற்ற நேரங்களில் என்னை வந்து பார்ப்பதில்லை. பார்க்காவிட்டாலுங்கூட, என்னுடைய நினைப்பை அவர் நுகர்ந்து, அதன்படி நடக்கக் கூடியவர். என்ன செய்யவேண்டுமென்று நான் கருதுகிறேனோ, பேராசிரியர் கருதுகிறாரோ, தலைமை கருதுகிறதோ என்பதை எண்ணிப் பார்த்து அதன்படி நடக்கக்கூடிய ஒரு இளைஞர் அந்த இளைஞரின் கையிலே பள்ளிக் கல்வி இன்றைக்கு ஒப்படைக்கப்பட்டிருக்கின்றது.

அத்தகைய நல்ல ஆர்வமும் துடிப்பும் மிக்க அந்த இளைஞர் இந்தக் கட்டடத்தை வெகு விரைவிலே முடித்து, நம்முடைய தம்பி துரைமுருகன், தம்பி பாலு போன்றவர்களுடைய துணையோடு இதை முடித்து, விரைவில் இந்தக் கட்டடத்தினுடைய திறப்பு விழாவிற்கு என்னை அவர் அழைப்பார் என்ற நம்பிக்கை எனக்கு நிச்சயமாக இருக்கின்றது. அந்தத் திறப்பு விழா நிகழ்ச்சியிலே உங்களையெல்லாம் காணக்கூடிய வாய்ப்பு எனக்குக் கிட்டும் என்று நான் நம்புகிறேன். அந்த நம்பிக்கையோடு இந்த இனிய விழாவிலே என்னுடைய வாழ்த்துகளைத் தெரிவித்து உங்களிடமிருந்து விடைபெற்று உரையை நிறைவு செய்கிறேன்.

❖ ❖ ❖



## மக்கள் தொகை

நம் நாட்டில் மக்கட் தொகைப் பெருக்கம் மிக வேகமாக நடந்து வருகிறது. நிபுணர் கணக்குப்படி நாம் ஒவ்வொரு ஆண்டும் ஒரு ஆஸ்திரேலிய (நாட்டு ஜனத் தொகையை) நாட்டை உண்டு பண்ணி நம் நாட்டோடு சேர்த்து கொண்டிருக்கிறோம். இதைத் தடுத்தாக வேண்டும்.

# சென்னைக் குடிநீர் வாரியம் சார்பில் 100 ரூபாயில் குடிநீர் இணைப்பு வழங்கும் திட்டம்

மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர்
திரு. **மு.க. ஸ்டாலின்** அவர்கள்
தொடங்கி வைத்தார்

**செ**ன்னை மாநகரில் 15.5.2006 அன்று நிலவரப்படி மொத்தமுள்ள 15,460 தெருக்களில் குடிநீர் விநியோகக் குழாய்கள் இல்லாமல் இருந்த 474 தெருக்களில் சுமார் 60 கிலோ மீட்டர் நீளத்திற்கு குடிநீர் குழாய்கள் 8.24 கோடி ரூபாய் செலவில் பதிக்கப்பட்டன. சென்னைக் குடிநீர் வாரியம் 2,924 கிலோ மீட்டர் நீளம் குடிநீர் வழங்கல் குழாய்களைப் பராமரித்து வருகிறது.

கழிவுநீரகற்று அமைப்புகள் இல்லாமல் இருந்த 198 தெருக்களில் சுமார் 17 கிலோ மீட்டர் நீளத்திற்கு கழிவுநீர் குழாய்கள் 3.14 கோடி ரூபாய் செலவில் பதிக்கப்பட்டு உபயோகத்தில் உள்ளன. தற்போது விரிவுபடுத்தப்பட்ட பகுதியில் உள்ள 268 தெருக்களுக்கும் குடிநீர் மற்றும் கழிவுநீர் வசதி செய்யப்பட்டு வருகின்றது.



சென்னை மாநகருக்கு நாளொன்றுக்கு வழங்கப்படும் குடிநீரின் அளவானது 540 மில்லியன் லிட்டரில் இருந்து 585 மில்லியன் லிட்டராக உயர்த்தப்பட்டுள்ளது. அதாவது நபர் ஒருவருக்கு நாளொன்றுக்கு 90 லிட்டரிலிருந்து 108 லிட்டராக உயர்த்தப் பட்டுள்ளது.

இதன்மூலம், அனைத்து வீடுகளுக்கும் குடிநீர் இணைப்பு மற்றும் கழிவுநீர் இணைப்பு பெற்றுக் கொள்ளக்கூடிய வாய்ப்பு வழங்கப் பட்டுள்ளது. தற்போது, குடிநீர் இணைப்புப் பெற, 1,000 சதுரஅடி வரையுள்ள குடியிருப்பு வீடுகளுக்கு ரூ.5,000மும், அதற்குமேல் உள்ள வீடுகளுக்கு ரூ.7,500மும் கட்டணம் செலுத்த வேண்டும். அதேபோல், கழிவுநீர் இணைப்புப் பெறவும் முறையே ரூ.5,000 மற்றும் ரூ.7,500 கட்டணம் செலுத்த வேண்டும்.

சென்னை நகரில் வீட்டு வரி செலுத்துவோரின் மொத்த எண்ணிக்கை 6,18,689. இதில், தற்போது 4,94,428 வீடுகளுக்கு கட்டணம் செலுத்தி குடிநீர் இணைப்பைப் பெற்றுள்ளனர். மீதமுள்ள அனைத்து வீடுகளுக்கும் குடிநீர் வசதி பெற்றுக்கொள்ளவும், பொருளாதார நிலையில் பின்தங்கியுள்ளவர்களும் குடிநீர் இணைப்புப் பெறவேண்டும் என்ற நல்லெண்ணத்தோடு மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்களின் அனுமதியுடன் உள்ளாட்சித்துறை மானியக் கோரிக்கை விவாதத்தின்போது 500 சதுரஅடி வரை உள்ள வீடுகளுக்கு குடிநீர் இணைப்பை சென்னைக் குடிநீர் வாரியத்திடமிருந்து 100 ரூபாய் மட்டும் செலுத்திப் பெற்றுக்கொள்ளலாம் என அறிவிக்கப்பட்டது. இவ்வாறு குடிநீர் இணைப்பை 100 ரூபாய்க்கு பெறுபவர்கள் 500 சதுரஅடி வரை உள்ள வீடுகளுக்கு கழிவுநீர் இணைப்பையும் 100 ரூபாய் செலுத்திப் பெற்றுக்கொள்ள ஆணையிடப்பட்டுள்ளது.

இதன்மூலம், வறுமைக் கோட்டிற்குகீழ் உள்ளவர்கள் என்று வட்டாட்சியரின் சான்றிதழ் தேவையில்லாமல், அந்தச் சிரமத்தை நீக்கி 500 சதுர அடி வரை பரப்பளவு உள்ள அனைத்து வீடுகளுக்கும் வருவாய்த்துறை சான்று இல்லாமலேயே 100 ரூபாய் கட்டணத்தில் குடிநீர் இணைப்பும் மற்றும் 100 ரூபாய் கட்டணத்தில் கழிவு நீர் இணைப்பும் பொருளாதார நிலையில் பின்தங்கியோர் பெற்றிட இந்த அரசு ஆவன செய்துள்ளது.

பின்தங்கிய பிரிவினர்களும் பயன்படும் வகையில் ரூ.100/– மட்டும் செலுத்தி குடிநீர் இணைப்பு வழங்க தமிழக அரசின் அறிவிப்பின்படி 'குடிநீர் இணைப்பு வழங்கும் விழா' 9.9.2008 அன்று சென்னை – புளியவண்ணை – போஜராஜன் நகரில் நடைபெற்றது.

இவ்விழாவில் மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை அமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் அவர்கள் கலந்து கொண்டு, குடிநீர் இணைப்பு வழங்குதலைத் தொடங்கி வைத்துச் சிறப்புரையாற்றினார்.

இவ்விழாவில் வணக்கத்திற்குரிய சென்னை மாநகர மேயர் திரு. மா. சுப்பிரமணியன், நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல்துறைச் செயலாளர் திரு. கே. தீனபந்து, இ.ஆ.ப., சென்னைக் குடிநீர் வாரிய மேலாண் இயக்குநர் திரு.சுனீல் பாலீவால், இ.ஆ.ப., உள்பட பலரும் பங்கேற்றனர்.

இதன்மூலம், சுமார் 48,000 வீடுகளில் உள்ளவர்கள் குடிநீர் இணைப்பு மற்றும் கழிவுநீர் இணைப்புப் பெற்று பயனடைவார்கள்.

❖ ❖ ❖

அண்ணா 100



## மனத்திலே

**ம**க்களை நல்லவர்களாக்க வேண்டுமானரல் அவர்கள் மனத்திலே உள்ள மாசு, மத வெறி, சாதி, ஆணவம், சுயநலம், ஆதிக்க எண்ணம் அழிந்தாக வேண்டும்.



# நாகப்பட்டினம் மாவட்டத்தில் ரூ.150 கோடி மதிப்பீட்டில் பல்வேறு திட்டப்பணிகளைத் தொடங்கி வைத்து 1,500 மகளிர் சுயஉதவிக் குழுக்களுக்கு ரூ.8.50 கோடி சுழல்நிதி மற்றும் கடனுதவிகளை

மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும்
உள்ளாட்சித்துறை அமைச்சர்
திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள் வழங்கினார்



**நா**கப்பட்டினத்தில் 1,500 மகளிர் சுயஉதவிக் குழுக்களுக்கு சுழல்நிதி வழங்கும் விழா, புதிய கட்டடங்கள் திறப்பு விழா மற்றும் பல்வேறு திட்டப்பணிகளுக்கு அடிக்கல் நாட்டும் விழா, அரசு நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழா, மாவட்ட ஆட்சியர் திரு. மு. ஜெயராமன், இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் 01.09.2008 அன்று நடைபெற்றது.

மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை அமைச்சர் திரு. மு. க. ஸ்டாலின் அவர்கள் 1,500 மகளிர் சுயஉதவிக் குழுக்களுக்கு ரூ.8.50 கோடி மதிப்பீட்டில் சுழல்நிதி வழங்கியும், ரூ.46.11 கோடி மதிப்பீட்டில் 4,041 புதிய திட்டப் பணிகளுக்கு அடிக்கல் நாட்டியும், ரூ.104.29 கோடி மதிப்பீட்டில் 6,696 வளர்ச்சிப் பணிகளை துவக்கி வைத்தும் மற்றும் அரசு நலத்திட்ட உதவிகளை

அண்ணா 100



## ஆற்றல்மிக்க அடிப்படை

"**எ**ந் நாடாயினும், இடரிலும் இழிவிலும் படாமல், இருளகன்று ஏற்றம் பெற்று இருந்திட வேண்டுமெனில், அந்நாட்டினில் தொடராய் அறிவாளர் தோன்றிய வண்ணம் இருந்திட வேண்டும். நன்று இது, தீது இது, நமதிது, பிறர் தந்ததிது, மரபு இது, மருள் இது என்பதனை ஆய்ந்தறிந்து கூறுவதற்கும், அவ்வழி நடந்து மக்கள் மாண்பினைப் பெற்றிடச் செய்வதற்கும், ஆற்றல் மிக்க அடிப்படை எழுந்தபடி இருந்திட வேண்டும்".



வழங்கி விழாப்பேருரையாற்றினார். அப்போது அவர் பேசியதாவது:–

ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறையின் சார்பில் 26 கோடியே 74 இலட்சம் மதிப்பீட்டில் 220 பணிகளும் மற்றும் சுனாமி திட்டத்தின்கீழ் ரூ.6 கோடியே 78 இலட்சம் மதிப்பில் 257 பணிகளும், நகராட்சி நிருவாகத் துறையின் சார்பில் 58 இலட்சம் மதிப்பில் 6 பணிகளும், வேளாண்மைத் துறையின் சார்பில் 23 இலட்சம் மதிப்பில் 7 உழவர் சந்தை அமைக்கும் பணிகளும், 34 கோடியே 31 இலட்சம் மதிப்பில் 490 பணிகளுக்கு அடிக்கல் நாட்டப்பட்டுள்ளது.

ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறை மூலம் 46 கோடியே 12 இலட்சம் மதிப்பில் 4,041 பணிகளும், சுனாமி திட்டப் பணிக்காக 46 கோடியே 59 இலட்சம் மதிப்பில் 2,573 பணிகளும், நகராட்சித் துறையின் சார்பில் ரூ.1 கோடியே 92 இலட்சம் மதிப்பில் 22 பணிகளும், தமிழ்நாடு மின்சார வாரியம் மூலமாக ரூ.3 கோடியே 28 இலட்சம் மதிப்பில் 2 பணிகளும், பொதுப்பணித்துறை மூலமாக ரூ.1 கோடியே 79 இலட்சம் மதிப்பில் 4 பணிகளும், தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் மூலமாக ரூ.1 கோடியே 41 இலட்சம் மதிப்பில் 30 பணிகளும்,

1989ஆம் ஆண்டு மகளிர் சுயஉதவிக் குழுக்கள் நாட்டிலேயே முதன்முதலாக தருமபுரி மாவட்டத்தில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் கலைஞர் அவர்களின் தலைமையில் தொடங்கப்பட்டது.

இவ்வரசு பொறுப்பேற்ற மே 2006 வரை மகளிர் மேம்பாட்டுக்கழகம் நகர்ப்புறப் பகுதிகளில் அமைக்கப்பட்ட குழுக்களுக்கு சுழல்நிதி மானியம் வழங்கப்படவில்லை. வங்கிக்கடன் மட்டுமே வழங்கப்பட்டுள்ளது. ஊரகப் பகுதிகளில் உள்ள குழுக்கள் தலா ரூ.10,000 மானியமாகப் பெறும் நிலையில் நகர்ப்புறக் குழுக்களுக்கும் இந்த மானியத்தை வழங்கவேண்டும் என்று முடிவு செய்து 2006–07ஆம் ஆண்டு ஊரக வளர்ச்சித்துறை மானியக் கோரிக்கையின்போது 5,000 நகர்ப்புறக் குழுக்களுக்கும் சுழல்நிதி வழங்கப்படும் என்று முதன்முறையாக அறிவிக்கப்பட்டது.

30.06.2008 வரை இந்தியன் வங்கியால் இந்தியா முழுவதும் 2 இலட்சத்து 57 ஆயிரத்து 641 குழுக்களுக்கு ரூ.1,824 கோடி கடன் தொகை வழங்கப்பட்டுள்ளது. அது தமிழகத்திற்கு மட்டும் 1 இலட்சத்து 46 ஆயிரத்து 855 குழுக்களுக்கு 1,058 கோடி ரூபாய் கடன் தொகை வழங்கப்பட்டுள்ளது. இதில் தமிழகத்திற்கு மட்டும் 50 சதவீதம் கிடைத்துள்ளது.

அண்ணா 100

## சித்தாந்தம்



தேள் கடிக்கு உடனே குணமளிக்கும் மூலிகை ஒன்று ஒருவருக்குத் தெரிந்திருக்கும். ஆனால் அது இன்னது என்பதை மற்றவர்களுக்குச் சொல்ல மாட்டார். சொன்னால் மருந்து பலிக்காது என்பார்கள். நமக்குத் தெரிந்த வித்தையைப் பிறருக்குத் தெரிவிக்காமலேயே அழிந்துவிடச் செய்வது நம்மிடையே உள்ள சித்தாந்தம்!



தந்தை பெரியார் அவர்கள் பெண்களுக்கு சொத்தில் சமபங்கு கொடுக்க வேண்டுமென 1929ஆம் ஆண்டு செங்கல்பட்டில் நடந்த மாநாட்டில் தீர்மானம் நிறைவேற்றினார். இத்தீர்மானத்தை 60 ஆண்டுகள் கழித்து மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் சட்டமாக நிறைவேற்றி சரித்திரம் படைத்தார். அதுமட்டுமின்றி பெண்களுக்குப் பல்வேறு நலத்திட்ட உதவிகளை அறிவித்தார். திருமண நிதி உதவித் திட்டத்தின் மூலம் தமிழகத்தில் 42,787 பெண்களுக்கு ரூபாய் 64,57,45,000 வழங்கப்பட்டுள்ளது. நாகப்பட்டினத்தில் மட்டும் 797 பெண்களுக்கு ரூபாய் 1.20 கோடி நிதி வழங்கப்பட்டுள்ளது, டாக்டர் முத்துலெட்சுமி ரெட்டி மகப்பேறு நிதி உதவி திட்டத்தின்கீழ் தமிழகத்தில் 9,66,199 பெண்களுக்கு ரூ.475 கோடியும் வழங்கப் பட்டுள்ளது, இதில் நாகப்பட்டினம் மாவட்டத்திற்கு மட்டும் 3,294 பெண்களுக்கு ரூபாய் 83,12,000 நிதி வழங்கப் பட்டுள்ளது.

மேலும் இந்த ஆண்டில் திருமணம் ஆகாத 50 வயதைக் கடந்த பெண்களுக்கும் நிதியுதவி வழங்க இந்த ஆண்டு முதல் தொடங்கப்பட்டுள்ளது. தமிழகத்தில் வனத்துறையின் சார்பில் ரூ.1 கோடியே 81 இலட்சம் மதிப்பில் 9 பணிகளும், கல்வித்துறையின் சார்பில் 1 கோடியே 16 இலட்சம் மதிப்பில் 14 பணிகளும், சுகாதாரப்பணிகள் மற்றும் குடும்ப நலத்துறையின் சார்பில் 22 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் ஒரு பணியும் ஆக சுமார் 104 கோடியே 29 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டிலான 6 ஆயிரத்து 696 பணிகள் முடிக்கப்பட்டு இப்போது மக்கள் பயன்பாட்டிற்காகத் திறந்து வைக்கப்பட்டுள்ளன.

இவ்விழாவில் 1,500 சுயஉதவிக் குழுக்களைச் சேர்ந்த உறுப்பினர்கள் பயன்பெறும் வண்ணம் அரசு மானியம் மற்றும் வங்கிக் கடனுடன் கூடிய சுழல்நிதியாக ரூபாய் 8 கோடியே 50 இலட்சம் ரூபாய் மானியமாகவும், கடன் தொகையாகவும் வழங்குவதில் மிகவும் மகிழ்ச்சி அடைகிறேன்.

இதைத் தவிர, பஞ்சாயத்து அளவிலான 16 குழுக் கூட்டமைப்புகளுக்கு ஆதாரத் தொகையாக ரூபாய் ஒரு இலட்சத்து 60 ஆயிரம் வழங்கப்பட உள்ளது, ஆக மொத்தம் இன்றைய விழாவில் 1,516 சுயஉதவிக் குழுக்களுக்கு ரூபாய் 8 கோடியே 51 இலட்சத்து 60 ஆயிரம் ரூபாய் சுழல்நிதி மானியம் மற்றும் வங்கிக் கடன் வழங்கப்படுகிறது.

மேலும், சமூக நலத்துறையின் சார்பில் 89 இலட்சம் ரூபாய் மதிப்பிலான நலத்திட்ட உதவிகள் 500 பயனாளிகளுக்கும், பிற்பட்டோர் நலத்துறையின் மூலமாக 9 இலட்சத்து 39 ஆயிரம் ரூபாய் மதிப்பிலான நலத்திட்ட உதவிகள் 188 பயனாளிகளுக்கும் வழங்கப்படவுள்ளது. பால்வளத்துறை சார்பில் 13 இலட்சத்து 41 ஆயிரம் ரூபாய் மதிப்பிலான நலத்திட்ட உதவிகள் மூன்று பயனாளிகளுக்கும், ஊனமுற்றோர் மறுவாழ்வுத்துறையின் சார்பில் 18 ஆயிரம் ரூபாய் மதிப்பிலான நலத்திட்ட உதவிகள் 16 பயனாளிகளுக்கும் ஆக கூடுதல் 9 கோடியே 13 இலட்சம் மதிப்பீட்டில் 2,223 பயனாளிகள் பயன்படும் வகையில் நலத்திட்ட உதவிகள் வழங்கப்படுகிறது.

தமிழ்நாட்டில் தற்போதைய நிலவரப்படி 3 இலட்சத்து 67 ஆயிரத்து 416 குழுக்கள் உள்ளன. இதில் ஊரக சுயஉதவிக் குழுக்கள் 2 இலட்சத்து 59 ஆயிரத்து 666 உள்ளது என்றும் நகர்ப்புற சுயஉதவிக்குழுக்கள் 1 இலட்சத்து 7 ஆயிரத்து 750 மகளிர் உறுப்பினர்களாக உள்ளனர். இக்குழுக்களில் 59 இலட்சத்து 7 ஆயிரத்து 869 மகளிர் உறுப்பினர்களாக உள்ளனர். இவர்களுடைய மொத்த சேமிப்புத்தொகை ரூ.1,826 கோடி.

மகளிருக்கு ரூ.36.40 இலட்சம் நிதி வழங்கப் பட்டுள்ளது. நாகப்பட்டினத்தில் 142 மகளிருக்கு ரூ.56,800 வழங்கப்பட்டுள்ளது.

இவ்வாறு மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை அமைச்சர் திரு. மு. க. ஸ்டாலின் அவர்கள் விழாப்பேருரையாற்றியபோது தெரிவித்தார்.

இவ்விழாவில் மாண்புமிகு பால்வளத்துறை அமைச்சர் திரு. உ. மதிவாணன், நாடாளுமன்ற உறுப்பினர் திரு. ஏ.கே.எஸ். விஜயன், சட்டமன்ற உறுப்பினர் திரு. வே. மாரிமுத்து ஆகியோர் முன்னிலை வகித்தனர். சட்டமன்ற உறுப்பினர்கள் திரு. எஸ். கே. வேதரத்தினம், திரு. எம். பன்னீர்செல்வம், திரு. க. அன்பழகன், திரு. எஸ். ராஜகுமார், திருமதி. பி. பத்மாவதி, ஒன்றியக் குழுத்தலைவர்கள், உள்ளாட்சி அமைப்பின் பிரதிநிதிகள் மற்றும் அரசு அலுவலர்கள் பங்கேற்றனர்.

– பொ. முத்தையா
செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்,
நாகப்பட்டினம்.

* * *

அண்ணா 100

## கற்றறிவாளர்கள்



நாட்டில் கற்றறிவாளர்கள் எந்த அளவில் இருக்கின்றனரோ, அதைக் கொண்டுதான் நாட்டு முன்னேற்றத்தை மதிப்பிட இயலும்.

# “தகவல் தொடர்பு தொழில் நுட்பக் கொள்கை 2008”

**மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் வெளியிட்டார்**

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் கலைஞர் அவர்களின் தலைமையில் மாநில தகவல் தொழில்நுட்பவியல் பணி முனைப்புக் குழுவின் இரண்டாவது கூட்டம் 29.7.2008 அன்று தலைமைச் செயலகத்தில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் ‘தகவல் தொடர்பு தொழில்நுட்பக் கொள்கை 2008’–ஐ வெளியிட்டார். பின்னர் தகவல் தொழில்நுட்ப முனைப்புக்குழு உறுப்பினர்களுடன் கலந்துரையாடினார். தகவல் தொழில்நுட்பத்துறையின் வளர்ச்சி தமிழ்நாட்டில் மிகச் சிறப்பாக இருப்பதாகக் குறிப்பிட்ட மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் இதன் பலன்கள் கிராமப்புற மக்களுக்கும் சென்றடையும் வகையில் இத்தகவல் தொழில்நுட்பவியல் கொள்கை வடிவமைக்கப்பட்டுள்ளது என்று குறிப்பிட்டார். தகவல் தொழில்நுட்ப நிறுவனங்கள் சென்னை மட்டுமல்லாது தமிழகத்தின் அனைத்து மாவட்டங்களிலும் பரவலாகத் தங்கள் நிறுவனங்களை அமைத்து, தமிழக இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பினைப் பெருக்க வேண்டுமென்று மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் கேட்டுக்கொண்டார்.

தொடர்ந்து, தகவல் தொழில்நுட்பத்துறையின் செயலர் திரு. ச. சந்திரமௌலி, இ.ஆ.ப. அவர்கள் தகவல் தொழில்நுட்பவியல் கொள்கையின் முக்கிய அம்சங்களை விளக்கினார். அவை பின்வருமாறு :–

புதிய தகவல் தொழில்நுட்பக் கொள்கை 2008–ன் தொலைநோக்கம் இந்தியாவில் தகவல் தொழில்நுட்ப உற்பத்தியில் (வன்பொருள் மற்றும் மென்பொருள்) 2011–ஆம் ஆண்டிற்குள் 25% பங்கை அடைவதுதான். இந்த இலக்கை அடைவதன் மூலம் தமிழகத்தில் 2011–ஆம் ஆண்டிற்குள் 30 இலட்சம் கூடுதல் வேலைவாய்ப்புகளை உருவாக்குவதுதான் இந்தக் கொள்கையின் நோக்கம்.

இந்தக் கொள்கையில் தமிழகத்தின் மனித வளத்தை மேம்படுத்த பல புதிய அம்சங்கள் சேர்க்கப் பட்டிருக்கின்றன. உயர் கல்விக்கான நிறுவனங்களை தமிழகத்தில் அமைத்து ஆராய்ச்சியை ஊக்குவிப்பதும் இக்கொள்கையின் முக்கிய அம்சம் ஆகும். அதைப்போல, தமிழகத்தில் தகவல் தொழில்நுட்பத் துறையில் தொழில் முனைவோருக்கு ஊக்கமளிக்கும் வகையில் சிறப்பம்சங்கள் இக்கொள்கையில் இடம்பெற்றுள்ளன.

❖ சென்னை, திருவள்ளூர் மற்றும் காஞ்சிபுரம் மாவட்டங்களில், புதிய மற்றும் விரிவாக்கப் பணிகளுக்காக ரூ.250 கோடிக்கு மேல் முதலீடு செய்பவர்களுக்கு கட்டமைப்பு தொகுப்புதவி (Structured assistance) அளிக்கவும் இக்கொள்கையில் விரிவாக வழிவகை செய்யப்பட்டுள்ளது.

❖ சென்னை, திருவள்ளூர் மற்றும் காஞ்சிபுரம் மாவட்டங்களைத் தவிர மற்ற மாவட்டங்களில் முதலீடு செய்யும் நிறுவனங்களுக்குச் சிறப்பு ஊக்கத்தொகையும் வழங்க முதல் முறையாக இக்கொள்கையில் வழிவகை செய்யப்பட்டுள்ளது. இதனால் தமிழகத்தின் அனைத்துப் பகுதிகளிலும் இத்துறை விரிவாக்கமடைந்து, இளைஞர்களுக்கு அதிக அளவில் வேலைவாய்ப்புகளை உருவாக்கும் வகையில் இக்கொள்கை அமைந்துள்ளது.

❖ இக்கொள்கையில் ஊனமுற்றோர்களுக்கு வேலைவாய்ப்பினை அளிக்கும் நிறுவனங்களுக்குச் சிறப்புப் பரிசுகள் வழங்கவும், ஊனமுற்றோர் வேலைவாய்ப்புப்பெற சிறப்பு மென்பொருள் தயாரிக்கவும் வழிவகை செய்யப்பட்டுள்ளது.



இது தவிரவும்; பல்வேறு சிறப்பு அம்சங்கள் இத்துறையை மேலும் வளர்ச்சியடையச் செய்யும் நோக்கத்துடன் புதிய தகவல் தொழில்நுட்பக் கொள்கை 2008–இல் கொண்டு வரப்பட்டுள்ளன.

இக்கூட்டத்தில் மாண்புமிகு மத்திய தகவல் தொடர்பு மற்றும் தொழில்நுட்பவியல்துறை அமைச்சர் திரு. ஆ. இராசா, மாண்புமிகு மின்துறை அமைச்சர் திரு. ஆர்க்காடு நா. வீராசாமி, மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் திரு. துரைமுருகன், மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் திரு. கே.என். நேரு, தலைமைச் செயலாளர் திரு. எல்.கே. திரிபாதி, இ.ஆ.ப., மத்திய–மாநில அரசு உயரதிகாரிகள் மற்றும் தகவல் தொழில்நுட்பவியல் நிறுவனங்களைச் சார்ந்த தலைவர்கள் – பிரதிநிதிகள் ஆகியோர் கலந்து கொண்டனர். ❖



## தோழமை

ஒற்றுமை–கூட்டுறவு–ஒப்பந்தம்–கூடிவாழ்தல் –நட்பு–அன்பு என்றுள்ள எத்தனையோ பதங்களும் ஒவ்வோர் அளவு வரை மட்டுமே செல்லக்கூடியவை. முழுத்திருப்தி தருபவை அல்ல–தோழமை என்ற நிலையை அடையும் படிக்கட்டுகள் இவை. ஆனால் தோழமை இவ்வளவுக்கு மேலான ஒரு நிலை பேதம் நீக்கிய நிலை அல்ல–பேதம், ஏற்படாத நிலை–ஏற்பட முடியாத நிலை.



# திருமணமாகாமல் 50 வயதைக் கடந்து வாழும் ஏழை மகளிர்க்கு மாதம் 400 ரூபாய் உதவித் தொகை வழங்கும் புதிய திட்டம் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் தொடங்கி வைத்தார்



முதியோர், விதவைகள், கணவனால் கைவிடப்பட்ட பெண்கள் ஆகியோருக்கு உதவித் தொகைகள் வழங்கப்படுவதைப்போல, குடும்பத்தில் வசதிவாய்ப்புகளின்றித் திருமணம் ஆகாமலேயே தனித்து வாழ்ந்து 50 வயது அடைந்த நிலையில், உழைத்துச் சம்பாதித்து வாழ்க்கை நடத்த இயலாத வறுமைச் சூழ்நிலையில் வாழ்ந்துகொண்டிருக்கும் ஏழை எளிய மகளிர்க்கு மாதம் 400 ரூபாய் வீதம் உதவித்தொகை வழங்கப்படும் என சென்னையில் கடந்த 20.6.2008 அன்று நடைபெற்ற மாவட்ட ஆட்சித் தலைவர்களின் மாநாட்டில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் அறிவித்திருந்தார். அந்த அறிவிப்பினையொட்டி 1.7.2008 அன்று அரசாணை பிறப்பிக்கப்பட்டது.

அதனைத் தொடர்ந்து, தமிழகத்திலுள்ள அனைத்து மாவட்டங்களிலும் குடும்பத்தில் வாய்ப்பு வசதி அற்ற நிலையில் திருமணமாகாமலேயே 50 வயதடைந்து, உழைத்து வாழ்க்கை நடத்த இயலாத ஏழை மகளிரின் விவரங்கள் மாவட்ட ஆட்சியர்களால் தொகுக்கப்பட்டு வருகின்றன.

அதன்படி உதவித்தொகை பெறுவதற்குத் தகுதி வாய்ந்தவர்களாக இதுவரை 9 ஆயிரத்து 100 ஏழை மகளிர் கண்டறியப்பட்டுள்ளனர். அவர்கள் ஒவ்வொருவருக்கும் மாதம் 400 ரூபாய் வீதம் உதவித் தொகை வழங்கப்படுவ்தன் அடையாளமாக 15 ஏழை மகளிர்க்கு தமிழக அரசின் இந்தப் புதிய திட்டத்தின்கீழ் மாதம் 400 ரூபாய் வீதம் உதவித் தொகைகளை அளிப்பதற்கான ஆணைகளையும், 2008 ஜூலை மாத உதவித் தொகைக்குரிய காசோலைகளையும் தலைமைச் செயலகத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் 31.7.2008 அன்று



## அதிகாரிகளின் பணி

மக்களுடன் பழகிக் குறைகளை அறிந்து அவற்றைத் தீர்க்கும் வகையில் சர்க்கார் அதிகாரிகள் பணி ஆற்றினால் மாநிலத்தில் ஆள்கின்ற சர்க்காருக்குச் சிறப்பு வரும்.



வழங்கி திட்டத்தைத் தொடங்கிவைத்தார். மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடம் ஆணைகளையும் உதவித் தொகைகளையும் பெற்ற 15 பெண்களின் விவரம் பின்வருமாறு :–

சென்னை மாநகர் புளியந்தோப்பு ஆ.ராணி, மு.சுகுணா; சாந்தோம் ச.லீமாரோஸ், மந்தைவெளிப் பாக்கம் கா. தவுலத்பேகம், பழைய வண்ணாரப்பேட்டை அ.மெகருன்னிசா.

திருவள்ளூர் மாவட்டம் தொழுவூர்குப்பம் கிராமத்தைச் சேர்ந்த அ.தாட்சாயணி, பா.செல்லம்மாள், பொ.தனம்மாள், சொராஞ்சேரி கிராமத்தைச் சேர்ந்த கி.பிரேமா, ஆவடியைச் சேர்ந்த ர.லலிதா,

கன்னியாகுமரி மாவட்டம் கோட்டாறு கிராமத்தைச் சேர்ந்த பொ.சகுந்தலா, நாகர்கோவில் செ.உமையம்மாள், ஏ.வசந்தா, பூதப்பாண்டியைச் சேர்ந்த சா. அழகம்மை, பூ. சிதம்பரவடிவு ஆகியோராவர்.

இந்நிகழ்வின்போது மாண்புமிகு மத்திய அமைச்சர் திரு. எஸ்.எஸ். பழனிமாணிக்கம், மாண்புமிகு மின்துறை அமைச்சர் திரு. ஆர்க்காடு நா.வீராசாமி, மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் திரு. கே.என்.நேரு, சமூகநலத்துறை முதன்மைச் செயலாளர் திரு. என்.எஸ். பழனியப்பன், இ.ஆ.ப., வருவாய்த்துறைச் செயலாளர் திரு. அம்புஜ் சர்மா, இ.ஆ.ப., வருவாய் நிருவாகச் சிறப்பு ஆணையர் திரு. சக்திகாந்ததாஸ், இ.ஆ.ப., சமூகநலத்துறை ஆணையர் டாக்டர் க.மணிவாசன், இ.ஆ.ப., வருவாய் நிருவாகக் கூடுதல் ஆணையர் திரு. து. இராஜேந்திரன், இ.ஆ.ப., சென்னை மாவட்ட ஆட்சியர் திருமதி. காகர்லா உஷா, இ.ஆ.ப., ஆகியோர் உடனிருந்தனர்.

★ ★ ★

அண்ணா 100



## எழுத்துப் பிழை

எங்கள் எண்ணத்தில் பிழை இருக்கிறதா என்று பாருங்கள்; அதை விட்டுவிட்டு எழுத்தில் பிழை இருக்கிறதா என்று தேடிப் பார்க்காதீர்கள்.

ஏழைகள் வாழவேண்டும்; எரியாத குடிசை வேண்டும்; வயிறார உணவு, மானமாரத் துணி; அறிவாரக் கல்வி இவைகளைத் தரவேண்டும்; உழைப்பதற்கு வாய்ப்பும்; உழைப்பதற்கேற்ற ஊதியமும் வேண்டும் என்று எண்ணுகின்ற எங்கள் எண்ணத்தில் என்ன குறை காணுகின்றீர்கள்?

குறிப்பிட்டுக் கோடிட்டுக் காட்டுங்கள்; குறைகளைக் களைகிறோம்!



## மத்திய அரசின் சுயவேலைவாய்ப்புத் திட்ட நிதியுதவி பெற ஊனமுற்றோர் செலுத்த வேண்டிய 5 சதவிதப் பங்குத் தொகையை தமிழக அரசே ஏற்கிறது! அனைத்துவகை ஊனமுற்றோருக்கும் வேலைவாய்ப்பற்றோர் நிவாரணத் தொகை!

## மாவட்டந்தோறும் தங்கும் விடுதியுடன் தொழிற் பயிற்சி நிலையங்கள்!

### ஊனமுற்றோர் மேம்பாட்டிற்காக மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் ஆணை!



தமிழ்நாடு உடல் ஊனமுற்றோர் சங்கங்களின் கூட்டமைப்பைச் சேர்ந்த நிர்வாகிகள் கடந்த 19.8.2008 அன்று ஊனமுற்றோர் மேம்பாட்டிற்காக நேரில் அளித்த கோரிக்கைகளைக் கனிவுடன் பரிசீலித்து, அவற்றுள் பெரும்பாலான கோரிக்கைகளை உடனடியாக ஏற்று, விரைவில் அரசாணைகள் வெளியிடப்படும் என மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் அறிவித்திருந்தார்.

அந்த அறிவிப்பினைத் தொடர்ந்து, அண்மையில் மத்திய அரசால் அறிவிக்கப்பட்ட பாரதப் பிரதமரின் ஊனமுற்றோருக்கான சுயவேலை வாய்ப்புத் திட்டத்தின்கீழ், மத்திய அரசின் மானியத்துடன் கூடிய வங்கிக் கடன் பெற்று சுயவேலைவாய்ப்புகளைப் பெறுவதற்கு வசதியாக, அத்திட்டத்தில் ஊனமுற்றோர் செலுத்த வேண்டிய 5 சதவீதப் பங்குத் தொகையினைத் (Own Contribution) தமிழக அரசே ஏற்குமென்றும்;

பார்வையற்றோருக்கு வழங்கப்படுவது போன்றே, அனைத்து வகை ஊனமுற்றோருக்கும், வேலை வாய்ப்பற்றோர் நிவாரண உதவித் தொகை வழங்கப் படுமென்றும்;

ஊனமுற்றோருக்கு வேலை வாய்ப்புப் பெறும் தகுதியை மேம்படுத்தும் வகையில்,

மூன்றாண்டுகளில் மாவட்டந்தோறும் தங்கும் விடுதிகளுடன் கூடிய தொழிற் பயிற்சி நிலையங்கள் அரசு நிதியுதவியுடன் தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள் மூலம் தொடங்கப்படுமென்றும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் 22.8.2008 அன்று ஆணையிட்டுள்ளார்.

❖ ❖ ❖

அண்ணா 100



## மனித மனம்

மனிதனின் மனம் எல்லா உலகங்களையும் விடப் பெரியது! அந்த இதயம் பண்புக்கேற்றபடி பெரிதாகத்தக்கது, நினைப்புக் கேற்றபடி குறுகத்தக்கது. ஆகவே, அந்த மனித மனத்தைப் பெரிதாக்கி அதன்படி நடக்க வேண்டும்.

# மாணவர்கள் பொறியாளர்களாக, மேதைகளாக, அறிஞர் பெருமக்களாக, எதிர்காலச் சிற்பிகளாக வரவேண்டும்

சென்னை அண்ணா பல்கலைக்கழகத்தில் 01.09.2008 அன்று நடைபெற்ற
ஐம்பெரும் திட்டங்களின் தொடக்க விழாவில்
மாண்புமிகு தமிழக முதலமைச்சர் **கலைஞர்** அவர்கள் ஆற்றிய உரை



**ந**ம்முடைய மாண்புமிகு உயர் கல்வித்துறை அமைச்சர் பொன்முடி அவர்கள் பசு மாட்டை, தென்னை மரத்திலே கட்டி விட்டுப் போயிருக்கிறார். அந்த மாட்டிலே பால் கறப்பதா? அல்லது அவிழ்த்து விடுவதா? என்ற இந்தக் கேள்விகளுக்குப் பதில் காணுகின்ற முறையில் உங்கள் முன்னால் நான் அமர்ந்திருக்கின்றேன்.

அவரே தன்னுடைய உரையில் குறிப்பிட்டதைப்போல் கடந்த இரண்டு நாட்களாக உடல் நிலை பெரிதும் பாதிக்கப்பட்டு இந்த நிகழ்ச்சிக்கு வர இயலுமா என்பது கேள்விக்குறியாகி, மருத்துவப் பெருமக்களும் இரண்டு நாள் ஓய்வெடுத்துக்கொள்வது நல்லது என்று அழுத்தந்திருத்தமாக அறிவுறுத்திய பிறகும் என் கண்ணெதிரே அண்ணா பல்கலைக்கழகமும், நடைபெற வேண்டிய நிகழ்ச்சியும் அந்த நிகழ்ச்சியில் கலந்துகொள்கிற மாணவத் தம்பிமார்களும் தென்பட்ட காரணத்தால், உங்களையெல்லாம் மதிக்கவேண்டும், உங்களிடத்திலே காட்டுகின்ற அன்பு போலியானதல்ல, அது உண்மையானது என்பதை நிலைநாட்டுகின்ற வகையில் இந்த ஆறு விழாக்களை இணைத்து நடத்துகின்ற பெருவிழாவில் நான் கலந்துகொள்கிற வாய்ப்பினைப் பெற்றிருக்கிறேன்.

இப்போதும் என்னுடைய குரல் வளம் ஒத்துழைப்பதாக இல்லை. இருந்தாலும் முடிந்த வரையில் என்னுடைய பேச்சில் சில கருத்துகளை உங்கள் முன்னால் வைக்கலாமென்று நான் கருதுகின்றேன்.

இங்கே உரையாற்றியவர்கள் என்னை “துரோணர்” என்றும், “பீஷ்மர்” என்றும் வர்ணித்து அவர்களுடைய கோபத்தைக் காட்டிக் கொண்டிருக்கின்றார்கள். ஏனென்றால் நான் பீஷ்மரை மதிப்பவன்தான். ஆனால் அவருடைய செயல், அவர் யாருக்காக தன்னை ஒப்படைத்துக் கொண்டிருந்தாரோ அவர்களுக்கு இறுதிக் காலத்திலே பயன்படவில்லை– மகாபாரதத்திலே வருவதைப்போல–கடைசிவரையில் பாண்டவர்களுக்காக வாதாடிக் கொண்டிருந்த பீஷ்மர், இறுதிக்கட்டத்திலே துரியோதனர்களுக்காக வாதாடி அவர்களுக்காக களத்திலே அடிபட்டு, அம்புப் படுக்கையில் படுக்க வைக்கப்பட்டு, போர் முடிகின்ற நாள் வரையிலே உயிரோடு இருந்து பிறகு மாண்டார் என்பது பீஷ்மருடைய கதை. இது இறுதிக் காலத்துக் கதை. அவருடைய தொடக்க காலத்துக் கதையை நான் படித்திருக்கிறேன், சொல்ல விரும்பவில்லை. அதை நீங்கள் நம்முடைய ஆசிரியர் வீரமணி அவர்களிடத்திலே முடிந்தால் கேட்டுத் தெரிந்து கொள்ளலாம். இயன்றால் படித்துத் தெரிந்துகொள்ளலாம். எனவேதான் என்னை இவ்வளவு பெரிய விழாவிற்கு அழைத்து ஏன் திட்டினார்கள் என்றுதான் எனக்குப் புரியவில்லை.

அதைப் போலத்தான் “துரோணர்”. துரோணர் என்ற பெயரை எனக்குச் சூட்டியபோது நான் விரும்பாததற்குக் காரணம் – நான் வருத்தப்படுவதற்கே காரணம், இது கல்வி நிலையம். இங்கே இருக்கின்ற மாணவர்கள் கல்வி கற்க விரும்புகின்றவர்கள், பொறியாளர்களாக, மேதைகளாக, அறிஞர் பெருமக்களாக, எதிர்காலச் சிற்பிகளாக வரவேண்டும் என்பதற்காக அண்ணா பல்கலைக் கழகத்திலே உங்களை ஒப்படைத்துக் கொண்டு, இங்கேயுள்ள ஆசிரியப் பெருமக்கள், துணை வேந்தர்கள் இவர்களுடைய துணையோடும், உதவியோடும் எதிர்கால நம்பிக்கை நட்சத்திரங்களாக ஆகவேண்டும் என்ற எண்ணத்தோடு வந்திருப்பவர்கள். அப்படி வந்திருக்கின்ற உங்களுடைய நம்பிக்கையை குலைப்பதைப்போல துரோணர் என்று சொன்னதை நான் ஏற்றுக்கொள்ளவில்லை. ஏனென்றால் துரோணர் காலத்திலேயே அடித்தட்டு மக்களுக்குச் சாதியின் பெயரால், வகுப்பின் பெயரால், மதத்தின் பெயரால் உயர் குலம், கீழ்க்குலம் என்ற பேதங்களின் பெயரால் கல்வி மறுக்கப்பட்ட காலம், துரோணருடைய காலம். அப்படி கல்வி மறுக்கப்பட்ட காரணத்தினால்தான் வில் வித்தை கற்றுக்கொள்ள வேண்டுமென்று ஏகலைவன் துரோணரிடம் சென்று கேட்ட போது, நீ வேடர் குலம், இழிகுலம், கீழ்க் குலம், கீழ்ச் சாதி, உனக்கு நான் வில் வித்தை கற்றுத்தரமாட்டேன் என்று துரோணர் சொல்லிவிட – அப்படியானால் பரவாயில்லை, நான் உங்களைப்போல ஒரு சிலை செய்து வைத்து, அதன் முன்னால் நின்று வித்தையைக் கற்றுக்கொள்கிறேன் என்று சொல்லி, அவருடைய சிலைக்கு முன்னால் நின்று அரும்பாடுபட்டு வில் வித்தையைக் கற்றுக் கொண்டு, துரோணரிடத்திலேயே வந்து தான் கற்ற வித்தை சரிதானா என்று கேட்டான். துரோணர் ஆச்சரியத்தால் அகல விழிகளை விழித்து, அப்படியா, கற்றுக்கொண்டாயா, எங்கே பார்க்கலாம் என்று குறி தவறாமல் உன்னுடைய அம்பு பாய்கிறதா பார்ப்போம்

## மாற்றம்



**கா**லம் மாறக்கூடியது. மாறிக் கொண்டுதான் இருக்கும். காலத்திற்கேற்ப கருத்தில் மாற்றம் வேண்டும். மாறாத சமுதாயம் மறைந்துவிடும்.







என்று பரிட்சை வைக்க, அவ்வாறே ஏகலைவன் துரோணர் காட்டிய குறியை – அவர் காட்டிய அடையாளத்தின் மீது சரியாக அம்பு எய்து வீழ்த்த – இது என்னைப்போல சிலை செய்து வைத்து நீ இந்த வித்தையைக் கற்றுக் கொண்டிருந்தாலும், நீ எனக்குத் தர வேண்டிய குரு காணிக்கையை தந்தே ஆகவேண்டும் என்று துரோணர் கேட்டார். என்ன காணிக்கை வேண்டுமானாலும் கேளுங்கள் தருகிறேன் என்றான். ஒன்றும் பெரிதல்ல, உன்னுடைய கட்டை விரலை எனக்கு காணிக்கையாகக் கொடு என்று துரோணர் கேட்க, அவனும் ஆசிரியர் கேட்கிறாரே, அதை மறுக்கக் கூடாதே என்று கட்டை விரலை வெட்டி காணிக்கையாகத் தந்துவிடுகிறான்.

கட்டை விரலை எதற்காகக் கேட்டார் என்ற சூட்சுமம் மறுபடியும் அவன் அந்த வில்லைக் கையிலே எடுத்தபோதுதான் அவனுக்குத் தெரிந்தது. கட்டை விரல் இல்லாமல் வில்லிலே அம்பை வைத்துக் குறிபார்க்க முடியாது. அவனால் அந்த வில்லைப் பயன்படுத்த முடியாது. தன்னிடத்திலே– உயர்குலத்தைச் சேர்ந்த தன்னிடத்திலே ஒரு தாழ்ந்த குலத்தைச் சேர்ந்த ஏகலைவன் வித்தை கற்றுக்கொண்டு, அதைப் பயன்படுத்தக்கூடாது என்ற அந்த மதவெறியின் காரணமாக – சாதி வெறியின் காரணமாக – ஆதிக்க வெறியின் காரணமாக அன்றைக்கே ஏகலைவன் என்ற வேடச் சிறுவனுக்கு அந்த வித்தை மறுக்கப்பட்டது, கல்வி மறுக்கப்பட்டது.

அப்படி கல்வி மறுக்கப்பட்ட பெரிய சமுதாயத்திலே இருந்து வந்த மாணவ சிங்கங்கள்தான் – மாணவ தங்கங்கள்தான் என் எதிரே இன்று வீற்றிருக்கின்ற காட்சியை நான் காணுகின்றேன். அன்றைக்கு ஒருவனுக்கு கல்வி இல்லை, வித்தையில்லை என்று சாதியின் பெயரால் விரட்டியடிக்கப்பட்ட அந்தக் காலத்தையும், இன்றைக்குப் பல்லாயிரக்கணக்கான மாணவர்கள் அண்ணா பெயரால் அமைந்துள்ள இந்தப் பல்கலைக்கழகத்திலே திரண்டிருக்கின்ற காட்சியையும் அண்ணாவின் தம்பியாகிய நான் இன்று காணும்போது – ஆனந்தம் கொள்ளுகிறேன், அக மகிழ்வு கொள்ளுகிறேன்.

இதற்கு என்ன காரணம் என்று நான் எண்ணிப் பார்க்கின்றேன். அன்றைக்குக் கல்வி தமிழகத்தில்

அண்ணா 100

## பெண் கல்வி வேண்டும்



**பெ**ண் கல்வி நாட்டில் எந்த அளவுக்கு உயருகிறதோ, அந்த அளவு நாடு மேம்பாடு அடைகிறது என்று பொருள். படித்த ஆண்கள் தவறான வழியில் செல்லும்போது படிப்பு வாசனையற்ற பெண்கள் அவர்களைச் சரியான வழிக்குத் திருப்பி விடுகிறார்கள். இந்தக் குடும்ப அறிவை எந்தப் பள்ளியிலும் பயிலாமலே அவர்கள் கற்றுக்கொண்டிருக்கிறார்கள்.



அனுபவரீதியாகச் சொல்ல வேண்டுமேயானால் பெருந்தலைவர் காமராசர் அவர்கள் ஆடு மேய்க்கின்ற சிறுவனையும், மாடு மேய்க்கின்ற சிறுவனையும் வழியிலே கண்டு, அவன் எப்படி முன்னேறுவான் என்று யோசித்து, அவனை அழைத்துப் பேசி, அவனுடைய குடும்ப நிலை என்ன, அவன் பட்டினி கிடந்துதான் படிக்க வேண்டுமென்பதை உணர்ந்து அவனுக்கு மதிய உணவு ஏற்பாடு செய்து, அவனைப் படிக்க வைத்து, அன்றையதினம் அவனைக் கல்வியாளனாக ஆக்குவதற்கு அரும்பாடுபட்டார். தம்பி பொன்முடி இங்கே எடுத்துச் சொன்னதைப்போல் பெருந்தலைவர் காமராசர் கிராமப்புற மக்களுக்கு படிப்பு வேண்டும், கல்வி வேண்டும் என்பதற்காகப் பாடுபட்டார். அதுதான் ஆரம்பக் கட்டம். இப்போது உயர்கல்வி தந்துவிட்டோம், கடந்த ஆண்டு 50 ஆயிரம், இந்த ஆண்டு இலட்சம் பேர் என்று பெருமை பேசினாலுங்கூட, உரிய கல்வி இல்லாத கஷ்டத்தையும் – உயர் கல்வி கிடைத்திருக்கின்ற இந்த மகிழ்ச்சியையும் நாம் ஒப்பிட்டுப் பார்க்க வேண்டும்.

இன்றைக்கு உயர்கல்வி பெற்றுத் திளைக்கின்ற மாணவர்கள், ஒரு காலத்திலே உரிய கல்விகூடக் கிடைப்பதற்குத் தடுக்கப்பட்டார்கள் என்பதை மறந்து விடக்கூடாது. அந்த உரிய கல்வி கிடைக்காமல், அவர்கள் வேதனைப்பட்ட நேரத்திலேதான்– அந்த உரிய கல்வியைப் பெருந்தலைவர் காமராசர் அவர்களுக்குத் தரவழி வகுத்தார். அவர் வகுத்த வழி நின்றுதான் இன்றைக்கு நாங்கள் – உரிய கல்வி பெற்றாயா, அடுத்து உயர் கல்வியையும் பெற்றுக்கொள் என்று இன்றைக்கு அவர்களுக்கு உயர் கல்வி தருகின்ற நிலையை ஏற்படுத்தியிருக்கிறோம். அந்தக் காட்சியைத்தான் கண்கொள்ளாக் காட்சியாக என் எதிரே நான் பார்க்கிறேன். இந்தக் காட்சி வளருமேயானால், இந்தக் காட்சி பெருகுமேயானால், இந்தத் தொகை பெருகுமேயானால், இந்த மாணவர்கள் இன்னும் வளருவார்களேயானால் எதிர்காலத் தமிழகத்தை, பூங்காவனமாக, பூந்தோட்டமாக நிச்சயமாக ஆக்குவீர்கள் என்ற நம்பிக்கை எனக்கு இருக்கின்றது. அந்த நம்பிக்கையோடு இன்றைக்கு ஐந்து அம்சங்கள் கொண்ட இந்தப் பெருவிழாவிலே என்னுடைய வாழ்த்துக்களை துணைவேந்தர் அவர்களுக்கும், ஏனைய துணை வேந்தர்களுக்கும் இங்கே வருகை தந்துள்ள மாணவக் கண்மணிகளுக்கும் வழங்கி இந்த அளவிற்கு மேல் என்னுடைய குரல் ஒத்துழைக்காது. இன்றைக்கு நான் பிடிவாதமாகப் பேசிவிட்டாலும் நாளைய தினம், அதற்கு மறுநாள் என்னால் அலுவல்களையே பார்க்க முடியாத அளவிற்கு ஆகிவிடக்கூடும். அது உங்களுக்கு நஷ்டமோ இல்லையோ எனக்கு நஷ்டம். எனக்கு நஷ்டம் என்றால், என்னுடைய செயல்களுக்கு நஷ்டம். என்னுடைய செயல்களுக்கு நஷ்டம் என்றால் ஏழைகளை கைதூக்கிவிட ஏழைகளுக்கு கல்விதர– ஏழைகளின் பசிபோக்க நான் எடுத்த முயற்சிகளுக்கு முட்டுக்கட்டை ஆகிவிடும், ஆகவே அந்த முட்டுக்கட்டை அகல நீங்கள் எனக்கு மன்னிப்பை அளித்து, இந்த விழாவிலே இந்த அளவிலே விடை கொடுக்க வேண்டுமென்று மாணவச் செல்வங்களே, உங்களையெல்லாம் கேட்டுக்கொண்டு விடைபெறுகிறேன்.

❖ ❖ ❖

அண்ணா 100

## நிலையும் நினைப்பும்



**தி**ருட்டுத்தனமாகக் கனி தேடி மரம் ஏறியவனுடைய நினைப்பு எப்படியிருக்கும்? எந்த அளவுக்கு அவன் நிலை உயர்ந்திருக்கிறதோ, அந்த அளவுக்கு அவன் நினைப்பு தாழ்ந்திருக்கும்!

முதலில் கனி பறித்து, பிறகு அவசர அவசரமாகத் தோட்டத்துக்குச் சொந்தக்காரன் வந்து விடுவானோ, வந்துவிட்டால் என்ன செய்வானோ என்ற பயத்தில் செங்காய்களைப் பறித்து, அதன் பின் காய்களையும் பறிப்பான். கனி பறிக்கையில் அவனது பாரத்தால் மரம் குலுங்கும் பொழுதெல்லாம் அவன் மனம் பயத்தால் குலுங்கும்! அடிக்கடி தோட்டத்துக்குச் சொந்தக்காரன் வந்தால், எப்படிக் குதித்து எங்கு ஓடுவது என்று நினைப்பான். அவன் இருப்பது மரத்தின் உச்சியில்; ஆனால் அவன் மனம் இருப்பது தரையில்!

# தமிழக மீனவ மக்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்திட நவீன தொழில்நுட்பத்துடன் மீனவ தொழில்நுட்ப மற்றும் பயிற்சி நிலையத் திட்டம்

மாண்புமிகு முதலமைச்சர்
**கலைஞர்** அவர்கள்
முன்னிலையில்
தமிழக அரசு டாடா நிறுவனத்துடன்
புரிந்துணர்வு ஒப்பந்தம்!

**மா**ண்புமிகு தமிழக முதலமைச்சர் கலைஞர் அவர்கள் மீனவர்களின் வாழ்க்கைத் தரத்தினை உயர்த்துவதற்கு உலகத் தரம் வாய்ந்த பயிற்சி நிலையம் ஒன்றினை நிறுவி அதன்மூலம் மீன்பிடிப்பதற்கு மாற்று வழிமுறைகளில் மீனவ சமுதாய மக்களுக்கு உரிய பயிற்சிகளை வழங்கிட இந்த அரசு உறுதி பூண்டுள்ளது என ஏற்கெனவே அறிவித்திருந்தார்கள்.

அதனைத் தொடர்ந்து 2008–2009 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையில், "தமிழக மீனவர்கள் மீன் பிடிப்பதிலும், மீன்களைச் சேதமின்றிப் பதப்படுத்தி விற்பதிலும், நவீன உத்திகளைக் கடைப்பிடித்து அதிக வருவாய் ஈட்டிட வழிவகுக்கும் நோக்கத்தோடு, வெளிநாடுகளில் உள்ளதுபோல, கடலில் கூண்டுகளில் மீன் வளர்த்தல், நண்டு வளர்ப்பு ஆகியவற்றில் தமிழக மீனவர்கள் ஈடுபடவும்; கடல் பாசி வளர்த்தல் மற்றும் மீன் பொருட்களை நல்ல முறையில் பதப்படுத்துதல்" ஆகியவற்றை மீனவப் பெண்கள் மேற்கொள்ளவும், தேவையான நவீன தொழில்நுட்ப உதவி மற்றும் பயிற்சிகளை அளிப்பதற்கான "நவீன மீன்பிடி தொழில்நுட்பப் பயிற்சி மையம்" ஒன்றை அமைத்திட இந்த அரசு கருதியுள்ளது.

சுனாமி நிவாரணப் பணிகளைச் சிறப்பாக மேற்கொண்ட டாடா போன்ற பெரும் தொழில் நிறுவனங்கள், எந்தவித ஆதாயமும் எதிர்பாராமல் தங்களின் சமூகப் பொறுப்பின் மற்றுமொரு அடையாளமாக இதற்கு உதவ முன்வந்துள்ளன. அத்தகைய உதவிகளைப் பெற்று, இந்தச் சிறப்புப் பயிற்சி மையத்தை அரசு அமைக்கும். இதற்கான அரசின் முதல்கட்ட உதவியாக இந்த வரவு–செலவுத் திட்டத்தில் ஒரு கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது" என்று அறிவிக்கப்பட்டது.

அந்த அறிவிப்பின்படி, இத்திட்டத்தை நிறைவேற்றுவதற்காக "மீனவ தொழில்நுட்பப் பயிற்சி நிலையம்–ஃபிட் (The Fisheries Institute of Technology and Training-FITT)" என்னும் அமைப்பு உருவாக்கப்பட்டு, 18.7.2008 அன்று தமிழ்நாடு சங்கங்கள் பதிவுச் சட்டத்தின்கீழ் பதிவு செய்யப்பட்டுள்ளது.

இச்சங்கத்தில் மத்திய, மாநில அரசு நிறுவனங்கள், அரசு சாரா நிறுவனங்கள் மற்றும் மீன் உற்பத்தித் தொழில் முனைவோர்உறுப்பினர்களாகச் செயல்படுவர்.

நிலையத்தை அமைத்திட காஞ்சிபுரம் மாவட்டம், செங்கல்பட்டு வட்டம், முட்டுக்காடு கிராமத்தில் 1.16 எக்டேர் நிலத்தினை தமிழக அரசு இலவசமாக வழங்கியுள்ளது.

இந்தப் பயிற்சி நிலையத்தினை அமைத்துச் செயல்படுத்தும் திட்டத்திற்கு இலாபநோக்கம் எதுவுமின்றி தொழில்நுட்ப உதவி முதலான அனைத்துவகை உதவிகளையும் நல்குவதற்கு டாடா குழுமம் முன்வந்துள்ளது.

டாடா குழுமத்தின் முழு ஒத்துழைப்புடன் இத்திட்டத்தை நிறைவேற்றுவதற்கான புரிந்துணர்வு ஒப்பந்தம் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் கலைஞர் அவர்கள் முன்னிலையில்



2.9.2008 அன்று நடைபெற்றது. இவ்வொப்பந்தத்தில் தமிழக அரசின் சார்பில் மீன்வளத்துறையின் முதன்மைச் செயலாளர் செல்வி லீனா நாயர், இ.ஆ.ப., அவர்களும், டாடா நிறுவனத்தின் சார்பாக திரு. கிருஷ்ணகுமார் அவர்களும் கையெழுத்திட்டனர்.

இத்திட்டத்தின் தொழில்நுட்பப் பங்களிப்பாளரான டாடா நிறுவனம் மீன்பிடித்தல், மீன் பதப்படுத்துதல், கடல்மீன் வளர்ப்பு மற்றும் விற்பனை ஆகியவற்றின்செயலாக்கச் செயல்பாடுகள் குறித்து இந்திய மற்றும் வெளிநாட்டுத்தொழில்நுட்ப வல்லுநர்களின் உதவியோடு விரிவாக ஆய்வு செய்து திட்டத்தை வடிவமைக்கும்; ஃபிட் சங்கத்தின் செயல்திட்டங்களை நிறைவேற்றுவதற்குத் தேவையான தொழில்நுட்ப உதவிகளை வழங்கும்; வலைக்கூண்டுகளை அண்மைக்கடல் பகுதிகளில் நிறுவி மீன் உற்பத்தியினை அதிகரிக்கவும், அதற்கான மீன் குஞ்சுகளைப் பொறிப்பகங்கள் மூலம் உற்பத்தி செய்தல், மீன் வளர்ப்பிற்கான மீன் உணவு தயாரித்தல், மீன் பதப்படுத்துதல், மற்றும் மீன் விற்பனை செய்தல் ஆகிய பணிகளை மேற்கொள்ளும்.

இத்திட்டத்தின் முதல் ஆறு மாத காலத்தில் அலுவலகக் கட்டட வாடகை; ஊர்தி மற்றும் சில்லறைச் செலவினங்கள்; இந்திய மற்றும் வெளிநாட்டு வல்லுநர்களிடமிருந்து தொழில்நுட்பங்களைப் பெறுவதற்கான செலவினங்கள்; இந்திய வல்லுநர்கள் வெளிநாடுகளில் மேற்கொள்ளும் பயிற்சிகளுக்கான செலவினங்கள் ஆகியவற்றை டாடா நிறுவனம் மேற்கொள்ளும்.

இத்திட்டத்தின் மூலம் டாடா நிறுவனம் உருவாக்கும் சொத்துக்கள், திட்டம் செயல்படுத்தப்படும்போது தமிழ்நாடு அரசிடம் ஒப்படைக்கப்படும்.

ஃபிட் சங்கம் தமிழ்நாடு அரசு, மீன்துறை, டாடா நிறுவனம் ஆகியவற்றுக்கும், பயனாளிகளுக்கும் இடையில் ஒருங்கிணைப்பு நிறுவனமாகச் செயல்படும்.

இச்சங்கம், மீன் இறங்கு தளங்கள், மீன்பிடித் துறை முகங்கள், மீன் பதப்படுத்தும் நிலையங்கள் ஆகியவற்றின் உள்கட்டமைப்பு வசதிகளை நன்கு பயன்படுத்தவும், உள்நாட்டு மற்றும் வெளி நாட்டு நிதியினைப் பெற்றுத் தரவும் வழிவகை செய்கிறது.

முட்டுக்காடு கிராமத்தில் பயிற்சி நிலைய மாநில தலைமையகத்திற்குத் தகுதியான நிலத்தினை தேவையான அளவில் இலவசமாக வழங்கியும், கடலோர மாவட்டங்களில் சங்கத்தால் அடையாளம் காட்டப்படும் இடங்களில் மையங்களை நிறுவிட ஏற்பாடு செய்வதுடன், இந்தப் பயிற்சி நிலையம் சிறப்பாக இயங்கத் தேவையான நிதியுதவிகளையும் தமிழக அரசு வழங்கும்.

தமிழ்நாடு கால்நடை மற்றும் அறிவியல் பல்கலைக் கழகம், மீன்வளக் கல்லூரி, தூத்துக்குடி, வனத்துறை, தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டுக் கழகம், மனோன்மணீயம் சுந்தரனார் பல்கலைக் கழகம், இந்திய நீர்வாழ் உயிரின வளர்ப்பு மையத் தலைவர் டாக்டர் சக்திவேல் ஆகியோர் அடங்கிய குழு இந்தப் பயிற்சி நிலையத்தின் மூலம் வழங்கப்படும் பயிற்சித் திட்டங்கள் குறித்து முடிவு செய்யும்.

இந்த மீனவ தொழில்நுட்ப மற்றும் பயிற்சி நிலையத்தின் ஆரம்பகட்ட வளர்ச்சிப் பணிக்குரிய செலவினங்களை மேற்கொள்வதற்காக இந்த ஆண்டின் நிதிநிலை அறிக்கையில் அறிவித்ததற்கேற்ப, முதற்கட்ட உதவி நிதியாக ஒரு கோடி ரூபாய்க்குரிய காசோலையை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் கலைஞர் இச்சங்கத்தின் கௌரவத் தலைவர் மற்றும் மீன்வளத் துறையின் முதன்மைச் செயுலாளர் செல்வி லீனா நாயரிடம் வழங்கினார்.

இந்நிகழ்ச்சியின்போது, மாண்புமிகு மீன்வளத் துறை அமைச்சர் திரு. கே.பி.பி. சாமி, திருமதி. கனிமொழி, எம்.பி., தலைமைச் செயலாளர் திரு. ஸ்ரீபதி, இ.ஆ.ப, நிதித்துறைச் செயலாளர் திரு. கு. ஞானதேசிகன், இ.ஆ.ப., மீன்வளத்துறை ஆணையர் திரு. சம்பு கல்லோலிகர், இ.ஆ.ப., ஆகியோர் உடனிருந்தனர். ❖

## பயிற்சி நிலையத்திற்கு முதற்கட்டமாக ஒரு கோடி ரூபாய் நிதியுதவி

அண்ணா 100



### திட்டமிட்டுச் செயலாற்றினால்

நம் நாடு வெப்பமுள்ள நாடு! இவ்வளவு வெப்பத்தையும் தாங்கிக்கொண்டு வேர்வை ஆறாகப் பெருகியோட உழைப்பவர்கள் இங்கு இருக்கிறார்கள்– இயற்கை வளத்தைப் பயன்படுத்தி, தொழில் திறனை உண்டாக்குபவர்கள் – தொழிற்சாலையை நடத்துபவர்கள் இருக்கிறார்கள்.

திட்டமிட்டுச் செயலாற்றினால் 15 ஆண்டுகளில் ஜப்பான் நாட்டைவிடச் சிறப்பாக நம் நாடு திகழும் என்பதில் ஐயப்பட வேண்டாம்.



அண்ணா 100



### பழக்கம்

**எ**ந்தக் காலத்துப் பழக்கமானாலும் சரி, அது இந்தக் காலத்திற்குப் பொருந்துகிறதா, வாழ்க்கைக்குத் தேவையானதுதானா, அறிவுக்கு ஏற்றதா என்றுதான் நாம் பின்பற்ற வேண்டுமே தவிர, அந்தக் காலத்துப் பழக்கம் என்பதற்காகவும் கண்ணை மூடிக்கொண்டு எதையும் அர்த்தமற்றும் பொருத்தமல்லாமலும் பின்பற்றக்கூடாது.

# பள்ளிச் சிறார்கள் இருதய அறுவைச் சிகிச்சைத் திட்டத்தின்கீழ் அறுவைச் சிகிச்சை பெற்று குணம் அடைந்த பள்ளிச் சிறுவர்களுக்கு மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் வாழ்த்து



வறுமைக்கோட்டிற்குக்கீழ் வாழும் ஏழை நோயாளிகள், உயிர் காக்கும் அறுவைச் சிகிச்சைகளான இருதய அறுவைச் சிகிச்சை, சிறுநீரக மாற்று அறுவைச் சிகிச்சை, இடுப்பு மாற்று அறுவைச் சிகிச்சை, தண்டுவட அறுவைச் சிகிச்சை போன்ற அறுவைச் சிகிச்சைகளை அங்கீகரிக்கப்பட்ட தனியார் மருத்துவமனைகளில் செய்துகொள்ள தமிழ்நாடு மாநில நோயாளர் சங்க நிதியிலிருந்து மாவட்ட ஆட்சித்தலைவர்கள் மூலமாக தலா 25 ஆயிரம் ரூபாய் நிதிஉதவி வழங்கப்படுகிறது. இத்திட்டத்தின் மூலம் கடந்த இரண்டு ஆண்டுகளில் 5 ஆயிரத்து 248 ஏழை நோயாளிகளுக்கு 13 கோடியே 55 இலட்சம் ரூபாய் நிதி உதவி வழங்கப்பட்டுள்ளது.

மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்கள், 2007ஆம் ஆண்டு ஆகஸ்டு 15 அன்று சுதந்திர தின விழா உரையில், ஏழை–எளிய குடும்பங்களைச் சார்ந்த சிறார்களை இருதய நோய்களிலிருந்து காத்திட, அவர்கள் தனியார் மருத்துவமனைகளில் அறுவைச் சிகிச்சை செய்து கொண்டால், மூடிய இருதய அறுவைச் சிகிச்சைக்கு 10 ஆயிரம் ரூபாயும், சாதாரண திறந்த இருதய அறுவைச் சிகிச்சைக்கு 30 ஆயிரம் ரூபாயும், கடினமான திறந்த இருதய அறுவைச் சிகிச்சைக்கு 70 ஆயிரம் ரூபாயும் நிதியுதவி வழங்கி ஏழை–எளிய குடும்பங்களைக் காத்திட இந்த அரசு முடிவு செய்துள்ளது என்ற ஓர் அறிவிப்பினை வெளியிட்டார்கள்.

### 162 பள்ளிச் சிறார்களுக்கு அறுவைச் சிகிச்சை செய்யப்பட்டுள்ளது

அத்திட்டத்தின்படி, அரசு மருத்துவமனைகளில் இருதய அறுவைச் சிகிச்சைக்குப் பதிவு செய்து கொண்டுள்ள ஏழைக் குடும்பங்களைச் சார்ந்த குழந்தைகளுக்கு, 17 தனியார் மருத்துவமனைகளின் மூலம் இருதய அறுவைச் சிகிச்சை செய்திடும் இளம் சிறார்கள் இருதய அறுவைச் சிகிச்சைத் திட்டத்தை, மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் 21.11.2007 அன்று தொடங்கி வைத்தார்கள். இந்தத் திட்டத்தின் வாயிலாக இதுவரை 294 சிறார்களுக்கு தனியார் மருத்துவமனைகளில் இருதய அறுவைச் சிகிச்சை செய்யப்பட்டுள்ளது. மேலும், ஏறத்தாழ சுமார் 100 குழந்தைகள் அறுவைச் சிகிச்சைக்காக தனியார் மருத்துவமனைகளில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் கலைஞர் அவர்களின் 85ஆவது பிறந்த நாளான 3.6.2008ஆம் நாளன்று, பள்ளிச் சிறார்கள் இருதய அறுவைச் சிகிச்சைத் திட்டம் என்ற ஒரு சிறப்புத் திட்டம் தொடங்கப்பட்டது.

இந்த திட்டத்தின்கீழ், ஜூன் மாதம் முடிய சிறப்பு மருத்துவர்கள் அடங்கிய மருத்துவக் குழு பள்ளிகளுக்குச் சென்று சோதனைகள் நடத்தி 9 ஆயிரத்து 986 பள்ளி மாணவர்கள் இருதய நோயினால் பாதிக்கப்பட்டுள்ள விவரம் கண்டறிந்து, அவர்களில் 2 ஆயிரத்து 396 பள்ளி மாணவர்களுக்கு இருதய அறுவைச் சிகிச்சை தேவை என பரிந்துரை செய்தது. இச்சிறார்களுக்கு அங்கீகரிக்கப்பட்ட 17 தனியார் மருத்துவமனைகளில் இருதய அறுவைச் சிகிச்சை செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டு, இதுவரை 162 பள்ளிச் சிறார்களுக்கு இருதய அறுவைச் சிகிச்சைகள் செய்யப்பட்டுள்ளன. எஞ்சிய பள்ளிச் சிறார்களுக்கும் இருதய அறுவைச் சிகிச்சை செய்ய தொடர்ந்து நடவடிக்கை மேற்கொள்ளப் பட்டுள்ளது.

### ஏழைக் குழந்தைகளின் உயிர்காக்கும் மகத்தான திட்டம்

பள்ளிகளில் பயிலும் ஏழைக் குழந்தைகளின் உயிர்காத்திடும் இந்த மகத்தான திட்டத்தை செயல்படுத்தப்படுவதில் திண்டுக்கல் மாவட்டம் இதுவரை 30 இளம் சிறார்களுக்கு இருதய அறுவைச் சிகிச்சை செய்து முன்னோடியாக விளங்குகிறது.

ஏழைச் சிறார்களுக்கான இருதய அறுவைச் சிகிச்சைத் திட்டம் மற்றும் பள்ளிச் சிறார்களுக்கான இருதய அறுவைச் சிகிச்சைத் திட்டம் ஆகிய இரண்டு திட்டங்களின் மூலமாக இதுவரை 456 இளம் சிறார்களுக்கு இருதய அறுவைச் சிசிச்சைகள் வெற்றிகரமாகச் செய்யப்பட்டுள்ளன.

இத்திட்டத்தில் முன்னோடியாக விளங்கும் திண்டுக்கல் மாவட்டத்தில் இருதய அறுவைச் சிகிச்சை செய்துகொண்ட பள்ளிச் சிறார்களில் 11 பேர் தங்கள் பெற்றோருடன், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் கலைஞர் அவர்களை தலைமைச் செயலகத்தில் 18.8.2008 அன்று சந்தித்து மகிழ்ச்சியுடன் தங்களது நன்றியைத் தெரிவித்தனர். அப்பொழுது இருதய மருத்துவச் சிகிச்சை செய்துகொண்டு குணம் அடைந்துள்ள சிறார்களுக்கு மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் வாழ்த்து தெரிவித்தார்.

இந்நிகழ்வின்போது மாண்புமிகு மின்துறை அமைச்சர் திரு. ஆற்காடு நா. வீராசாமி, மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் திரு. ஐ. பெரியசாமி, மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் திரு. எம்.ஆர்.கே. பன்னீர் செல்வம், முன்னாள் தலைமைச் செயலாளர் திரு. எல்.கே. திரிபாதி,இ.ஆ.ப., (ஓய்வு), தலைமைச் செயலாளர் திரு. கே.எஸ். ஸ்ரீபதி, இ.ஆ.ப., திண்டுக்கல் மாவட்ட ஆட்சியர் திருமதி. ஆர். வாசுகி, இ.ஆ.ப., மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்துறை செயலாளர் திரு. வி.கே. சுப்புராஜ், இ.ஆ.ப., பொது சுகாதாரத்துறை இயக்குநர் டாக்டர். இளங்கோவன் ஆகியோர் உடன் இருந்தனர்.

❖ ❖ ❖

அண்ணா 100



## பாராட்டு!

பாராட்டுதல் என்பது ஜனநாயகத்திலே சாதாரணம்தான். ஆனால், அது அளவிற்கு அதிகமாகப் போய்விட்டால் ஆபத்து!



அண்ணா 100



## ஜனநாயகம்

“அரசாங்கம் என்பது வீடு – ஆளும் கட்சி அதை வாடகைக்கு எடுத்துக்கொள்கிறது; மக்களின் நல்லெண்ணம்தான் வாடகைப் பணம். ஜனநாயக உணர்வு அதை ஐந்தாண்டுகளுக்கு ஒரு முறை கணக்குப் பார்க்கிறது”.

காலத்திற்கேற்ற கருத்து எது தேவை என்பதை அறிவிக்க வேண்டும். அதற்குத் தேவை துணிவு. அந்தத் துணிவு–தெளிவின் அடிப்படையில் பிறக்க வேண்டும். அந்தத் தெளிவுடைய கருத்தும் கனிவோடு எடுத்துச் சொல்லப்பட வேண்டும்.





டாக்டர் இராதாகிருஷ்ணன்

ஆசிரியராகப் பணி தொடங்கி,
நம் இந்தியத் திருநாட்டின் குடியரசுத் தலைவராக
விளங்கி உலகப் புகழ் குவித்த தத்துவமேதை
டாக்டர். இராதாகிருஷ்ணன் அவர்கள் பிறந்த செப்டம்பர்
5ஆம் நாள் ஆசிரியர் தினமாகக் கொண்டாடப்படுகிறது.

ஆசிரியப் பெருமக்களின் நல்வாழ்வு கருதி உயர்கல்விக்கு ஊக்க ஊதியம்; 10 ஆண்டு பணி முடித்தால் தேர்வுநிலை ஊதியம்; 20 ஆண்டு பணி முடித்தால் சிறப்பு நிலை ஊதியம்; தமிழாசிரியர்களிடையே இருநிலை நீக்கம்; தமிழாசிரியர்களின் 'புலவர்' பட்டம், 'பி.லிட்' பட்டமாக மாற்றம்; தொடக்கப்பள்ளி ஆசிரியர்களுக்கு மட்டுமே வழங்கப்பட்ட நல்லாசிரியர் விருதுகளை, உயர்நிலைப்பள்ளி, ஆங்கிலோ இந்தியன் பள்ளி உள்ளிட்ட பிற பள்ளிகளின் ஆசிரியர்களுக்கும் வழங்கிட ஆணைகள்; நல்லாசிரியர் விருது– 'டாக்டர் இராதாகிருஷ்ணன் விருது' எனப் பெயர் மாற்றம்; விருதுத் தொகை 1,000 ரூபாயை, 1997இல் 2,000 ரூபாய் என்றும், 2006இல் 5,000 ரூபாய் என்றும் உயர்த்தியமை; மத்திய அரசு ஊழியர்களுக்கு நிகரான ஊதிய உயர்வுகள், அகவிலைப்படிகள் உட்பட அரசு ஊழியர்களுக்கான சலுகைகள் அனைத்தையும் ஆசிரியர் சமுதாயமும் பெற்றுப் பயனடையச் செய்கின்றமை, பதிவு மூப்பு அடிப்படையிலேயே பள்ளி ஆசிரியர்கள் நியமனம், தொகுப்பூதிய ஆசிரியர் நியமன முறை அடியோடு நீக்கம் எனச் சலுகைகளை வழங்கி, அவர்களைக் காத்து வருகின்றமை முதலான இந்த அரசு வழங்கும் ஆசிரியர் நலத்திட்டங்களை நினைவு கூர்ந்து, ஆசிரியர் சமுதாயம் தமது மக்கள் மனை, சுற்றம் சூழ, நலனும் வளனும் வாய்ந்து, மகிழ்வுடனும் மன நிறைவுடனும் பல்லாண்டு புகழுடன் வாழ என் இதயங்கனிந்த ஆசிரியர்தின நல்வாழ்த்துகளையும், இன்று மத்திய, மாநில அரசுகளின் விருதுகள் பெறும் ஆசிரியப் பெருமக்களுக்கு என் பாராட்டுகளையும் தெரிவித்து மகிழ்கிறேன்.

**மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் கலைஞர் அவர்களின் ஆசிரியர் தின வாழ்த்துச் செய்தி**



## தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் நடத்தும் தேர்வுகளில் பங்குபெறும் ஊனமுற்றவர்கள் இனி தேர்வுக்கட்டணம் செலுத்தத் தேவையில்லை!

**மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் ஆணை!**



தமிழ்நாடு அரசின் பல்வேறு துறைகளுக்குத் தேவைப்படும் பணியாளர்கள் தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் நடத்தும் போட்டித் தேர்வுகள் மூலம் தேர்வு செய்யப்பட்டு நியமனம் செய்யப்படுகின்றனர்.

ஊனமுற்றவர்களின் நலன்களை மேம்படுத்திடவும், அவர்களின் மதிப்பைச் சமுதாயத்தில் உயர்த்திடவும், ஒரு புதிய சலுகையாக தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் நடத்தும் போட்டித் தேர்வுகளில் கலந்து கொள்ளும் ஊனமுற்றவர்களுக்கு இனி தேர்வுக் கட்டணம் செலுத்துவதிலிருந்து முழுமையாக விலக்களித்து மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் ஆணையிட்டுள்ளார்.

## அத்தியாவசியப் பொருள்களைச் சரியான எடையில் வழங்கிட 23 ஆயிரத்து 600 நியாயவிலைக் கடைகளில் 8 கோடியே 50 இலட்சம் ரூபாய் செலவில் நவீன மின்னணுத் தராசுகள் நிறுவப்பட்டுள்ளன!

தமிழகத்தில் மொத்தம் 29 ஆயிரத்து 760 நியாயவிலைக் கடைகள் உள்ளன. இவற்றுள் 6 ஆயிரத்து 160 நியாயவிலைக் கடைகளில் ஏற்கெனவே நவீன மின்னணுத் தராசுகள் படிப்படியாக நிறுவப்பட்டிருந்தன.

அந்நிலையில், பொதுமக்கள் நலன் கருதி, நவீன மின்னணுத் தராசுகள் நிறுவப்படாமல் நிலுவையில் இருந்த எஞ்சிய 23 ஆயிரத்து 600 நியாயவிலைக் கடைகளிலும் நவீன மின்னணுத் தராசுகளை உடனடியாக நிறுவிட மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்களால் ஆணையிடப்பட்டது.

அந்த ஆணையின்படி, மொத்தம் 8 கோடியே 50 இலட்சம் ரூபாய் செலவில் நவீன மின்னணுத் தராசுகள் கொள்முதல் செய்யப்பட்டு, 23 ஆயிரத்து 600 கூட்டுறவு நியாயவிலைக் கடைகளிலும் நிறுவப் பட்டுள்ளன.

இதன்மூலம் நவீன மின்னணுத் தராசுகள் இல்லாத நியாயவிலைக் கடைகளே தமிழகத்தில் இல்லை என்ற நிலை ஏற்பட்டுள்ளதென்றும், மேலும் அத்தியாவசியப் பொருள்களைப் பொதுமக்களுக்கு எடைக்குறைவின்றி வழங்கிட வகை செய்யப்பட்டுள்ளது என்றும் தமிழக அரசு அறிவித்துள்ளது.

அண்ணா 100



## மொழியும் வாழ்வும்

தமிழர்கள் தங்கள் மொழியையும் வாழ்வையும் ஒன்று இணைத்துக் கொண்டவர்கள்; மொழியைக் கருவி என்று நினைக்காமல், தங்களை வழி நடத்தும் துணைவன், வழிகாட்டும் வழிகாட்டி; பாடம் போதிக்கும் ஆசான்; உள்ளத்து உணர்ச்சிகளை வெளியிடும் நண்பன் என்று நினைக்கிறார்கள்.

**சுமைதூக்கும்**
**தொழிலாளர்களின்**
**கையாளுதல் கூலி**
**ஐந்து சதவீதத்திலிருந்து**
**பத்து சதவீதமாக**
**உயர்வு!**

**இனி மூன்றாண்டுகளுக்கு**
**ஒருமுறை**
**கையாளுதல் கூலி**
**உயர்த்தி வழங்கப்படும்!**

---

மாண்புமிகு தமிழ்நாடு
முதலமைச்சர் **கலைஞர்**
அவர்கள் ஆணை

தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தின் கிடங்குகள், நவீன அரிசி ஆலைகள், நேரடிக் கொள்முதல் நிலையங்கள், இரயில்வே சேமிப்பு மையங்கள் போன்றவைகளில் பணிபுரியும் சுமைதூக்கும் பணியாளர்களுக்கு வழங்கப்படும் கையாளுதல் கூலி ஏற்கெனவே கழக ஆட்சியில் இரண்டாண்டுகளுக்கு ஒரு முறை உயர்த்தி வழங்கப்பட்டு வந்தது. இந்த நடைமுறை அ.தி.மு.க. ஆட்சி காலத்தில் 21.9.2001 அன்று வெளியிடப்பட்ட அரசாணையின்மூலம் ஐந்து ஆண்டுகளுக்கு ஒருமுறைதான் உயர்த்தப்பட வேண்டும் என்று மாற்றி அமைக்கப்பட்டது.

சுமைதூக்கும் தொழிலாளர்களின் நலன்களைப் பரிவுடன் பரிசீலனை செய்து, தற்பொழுது நடைமுறையில் உள்ள **ஐந்து சதவீத கூலி உயர்வினைப் பத்து சதவீதமாக உயர்த்தி வழங்கிடவும்**, ஐந்து ஆண்டுகளுக்கு ஒரு முறை கையாளுதல் கூலி உயர்த்தப்படும் என்பதை மாற்றி, இனி மூன்றாண்டுகளுக்கு ஒரு முறை உயர்த்தி வழங்கிடவும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் 26.7.2008 அன்று ஆணையிட்டுள்ளார்.

இந்த ஆணையின் காரணமாக, ஏறத்தாழ 18 ஆயிரத்துக்கும் மேற்பட்ட சுமைதூக்கும் தொழிலாளர்கள் பயன்பெறுவார்கள்.

❖ ❖ ❖

ஆதிதிராவிட, பழங்குடியின வகுப்புகளைச் சார்ந்த மாணவ, மாணவியர் அகில இந்தியப் பொதுத்தேர்வில் கலந்து கொள்வதற்கு ஊக்கமளிக்கும் வகையில், அவர்களைத் தயார்ப்படுத்துவதற்காக அரசுப் பள்ளிகள், அரசு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலப் பள்ளிகள், மாநகராட்சி மற்றும் நகராட்சிப் பள்ளிகள் ஆகியவற்றில் பத்தாம் வகுப்புப் படித்து அரசுப் பொதுத்தேர்வில் அதிக மதிப்பெண்கள் பெறும் இவ்வகுப்புகளைச் சேர்ந்த மாணவ, மாணவியரில் ஒவ்வொரு மாவட்டத்திலும் 10 மாணவ மாணவியரைத் தேர்வு செய்து, அவர்கள் அந்தந்த மாவட்டங்களிலோ, பிற மாவட்டங்களிலோ சிறந்து விளங்கும் தனியார் மேல்நிலைப் பள்ளிகளில் 11ஆம் வகுப்பில் சேர்ந்து படிப்பதற்காக ஒவ்வொருவருக்கும் ஆண்டுக்கு 28 ஆயிரம் ரூபாய் வீதம் இரண்டு ஆண்டுகளுக்கு 56 ஆயிரம் ரூபாய் நிதியுதவி வழங்கும் திட்டம் கடந்த ஆண்டில் அறிமுகப்படுத்தப்பட்டது.

அத்திட்டத்தின்படி, இவ்வாண்டில் தமிழகத்தில் உள்ள 31 மாவட்டங்களில் மாவட்டத்திற்கு 10 மாணவ, மாணவியர் என மொத்தம் 310 மாணவ, மாணவியரைத் தேர்வுசெய்து, அவர்கள் தாம் விரும்பும் சிறந்த தனியார் மேல்நிலைப் பள்ளிகளில் சேர்ந்து படிப்பதற்காக ஆண்டு ஒன்றுக்குத் தலா 28 ஆயிரம் ரூபாய் வீதம் இரண்டு ஆண்டுகளுக்கு 56 ஆயிரம் ரூபாய் என மொத்தம் ஒரு கோடியே 73 இலட்சத்து 60 ஆயிரம் ரூபாய் அனுமதித்து மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் ஆணையிட்டுள்ளார்.

**பத்தாம் வகுப்பு**
**அரசுப் பொதுத்தேர்வில்**
**அதிக மதிப்பெண்கள் பெறும்**
**ஆதிதிராவிட, பழங்குடியின**
**வகுப்புகளைச் சார்ந்த**
**310 மாணவ, மாணவியர் விரும்பும்**
**மேல்நிலைப் பள்ளிகளில்**
**11ஆம் வகுப்பில் சேர்ந்து பயில**
**ஒரு கோடியே 73 இலட்சத்து**
**60 ஆயிரம் ரூபாய் அனுமதி!**

---

மாண்புமிகு தமிழ்நாடு
முதலமைச்சர் கலைஞர் அவர்கள் ஆணை



# உலக தாய்ப்பால் வாரம்

பிறந்த சிலமணித் துளிகளிலேயே குழந்தைகளுக்குத் தாய்ப்பால் அளிக்கத் துவங்கிடவேண்டும். அதுதான் அது மட்டுமேதான் குழந்தைக்கு உன்னதமான வாழ்க்கைக்குச் சிறப்பான துவக்கமாக இருக்க முடியும். இதனை மறுப்பதற்கில்லை குழந்தைகளின் அனைத்து வளர்ச்சிகளும் முழுமையாக ஏற்படுவதற்குத் தேவையான தூண்டுதலை தாய்ப்பால் தருகின்றது. தாய்ப்பால் குழந்தைகளுக்கு ஒரு பரிபூரண உணவாக அமைகின்றது. தாயாரிடமிருந்து குழந்தை தாய்ப்பாலைப் பெறுவது அக்குழந்தையின் உரிமை எனக் கூறப்படுகிறது. இந்த உரிமை என்றும் எவராலும் பறிக்கப்படக்கூடாது. குழந்தைகளுக்குத் தாய்ப்பால் புகட்டுவது என்பது அக்குழந்தைக்குத் தங்கப்பரிசு அளிப்பதற்கு ஒப்பானது எனக்கருதலாம்.

தங்கம் நம் குடும்பத்திலும், சமுதாயத்திலும் ஒரு மதிப்பு வாய்ந்த பொருளாகக் கருதப்படுகிறது. பித்தளைக்கு இத்தகைய மதிப்பு இல்லை என ஒன்றுபோலக் கூறுவோம். இல்லையா ? அதுபோல்தான் குழந்தைக்குத் தாய்ப் பாலுக்குப் பதில் மாற்றுப் பால் பொருட்களைக் கொடுப்பது.

'தங்கம் இருக்க பித்தளைக்கு அலைவானேன்' ?

'குழந்தைக்குத் தாய்ப்பால் இருக்க மாற்றுப்பால் தருவானேன் ? (புட்டி பால்)

மாற்றுப்பால் பொருட்களைக் குழந்தைக்கு உணவாகக் கொடுப்பது மூலம் நாம் நம்மையும் நம் குழந்தையையும் குறைத்து மதிப்பிட்டுக்கொள்கின்றோம். குழந்தையின் ஆரோக்கியத்திற்கு ஊறுவிளைவிக்கக் காரணம் ஆகின்றோம்.

தாய்ப்பாலுக்கு நிகர் தாய்ப்பால்தான். இத்தகைய சிறப்பு அம்சம் கொண்ட தாய்ப்பாலினை தாய்மார்கள் அனைவரும் குழந்தைக்கு அளிப்பதற்குக் குடும்பத்தினர் சமுதாயத்தினர் பொறுப்பெடுத்துக்கொண்டு ஆதரவு தரவேண்டும் என்பதே இந்த வருடத்தின் தாய்ப்பால் வார காலத்தில் விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட வேண்டிய கருத்தாக எடுக்கப்பட்டுள்ளது.

இன்றைய வேகமான காலக்கட்டத்தில் பெண்களும் குடும்ப நலன் கருதி வேலைக்குச் செல்கின்றனர். வேலை நிமித்தத்தின் பேரில் காலதாமதமாக வீட்டிற்குத் திரும்பும் சூழ்நிலை நிலவுகின்றது. இருப்பினும் தாய்ப்பாலின் முக்கியத்துவத்தினை உணர்ந்து பாலூட்டும் தாய்மார்களுக்குப் பல்வேறு வகையில் ஆதரவு அளித்தால் அத்தாய் குழந்தைக்கு நிறைவாகவும், மனமகிழ்ச்சியுடனும் பால் புகட்ட ஏதுவாக இருக்கும் பாலூட்டும் தாய்க்கு, குடும்பம் மற்றும் சமுதாயம், வேலை மற்றும் வேலை இடம் ஆபத்து மற்றும் இக்கட்டான காலங்களில் உதவுதல், அரசு / சட்டம், சுகாதாரப் பராமரிப்பு ஆகிய வழிகளில் ஆதரவு தந்தோமானால் தங்கம் போன்ற மதிப்பு வாய்ந்த குழந்தையினை வளர்த்து பொறுப்புள்ள பிரஜையாக எதிர்காலத்தில் உருவாக்கிட முடியும். இதுதானே உண்மையில் ஒரு தாய் மற்றும் அவளைச்சார்ந்த குடும்பம், சமுதாயம் ஒரு குழந்தையின் மீது போடுகின்ற மூலதனம்,

இக்கருத்தினை வலியுறுத்திக் கூறும் வகையில்தான் ஆகஸ்ட் ஒன்றாம் தேதி முதல் ஏழாம் தேதி வரையில் சென்னை மாவட்டத்தில் செயல்படுத்தப்பட்டுவரும் 1346 குழந்தைகள் மையங்கள் வாயிலாகத் தாய்மார்களுக்கும் அவர்களைச் சார்ந்த குடும்ப உறுப்பினர்கள் மற்றும் சமுதாய மக்களுக்கும் விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டது. அனைத்துக் குழந்தைகள் மையத்திலும் பாலூட்டும் தாய்மார்களுக்குத் தரப்பட வேண்டிய ஆதரவுகள் குறித்த கண்காட்சிகள் வைக்கப்பட்டிருந்தன. இது தவிர குழந்தைகளுக்கு முதல் ஆறு மாதம் வரையில் தாய்ப்பால் மட்டுமே போதுமான, பரிபூரணமான உணவு என்பதனை விளக்கும் கருத்துக்களையும் கண்காட்சியில் உணர்ந்துகொள்ள வாய்ப்பு ஏற்படுத்தப்பட்டது.

மைய அளவில் தாய்மார்களையும், புதுமணத் தம்பதிகளையும் வரவழைத்து, தாய்க்குப் பாலூட்டும் காலத்தில் தரப்படவேண்டிய ஆதரவுகள் குறித்து விளக்கப்பட்டன. குழந்தைகள், வளர் இளம் பெண்கள், தாய்மார்கள் ஆதரவுக் குழுவினர்களால் கலைநிகழ்ச்சிகள் நடத்தப்பட்டன. பலருக்குப் பரிசுகளும் வழங்கப்பட்டது.

திட்ட அளவிலும் தாய்ப்பால் வாரம் சிறப்பான வகையில் அனுசரிக்கப்பட்டு நல்ல விழிப்புணர்வு, மக்களிடையே ஏற்படுத்தப்பட்டது. இயற்கையின் படைப்பாம் – தாய்ப்பாலின் அருமையினை உணர்ந்திருந்தாலும், வெளிப்புறச் சூழலில் தாக்கத்தினால் மாற்றுப்பாலுக்குச் சென்று குழந்தையின் ஆரோக்கியத்தினையும், பொருளாதாரச் சிக்கல்களிலும் மாட்டிக்கொள்ளும் தாய்மார்களுக்கும் அவர்தம் குடும்பத்தினருக்கும் இவ்வார விழாமூலம் விழிப்புணர்வு ஏற்படுத்தியிருப்பது அவர்களிடத்தே நல்மாற்றத்தினை உண்டு பண்ணும் என்று நிச்சயமாகக் கூறலாம்.

மண் மீதும் பொன் மீதும் போடுவது வீணல்ல – என்ற பழமொழியைக் கேட்டுள்ளோம். அது போன்றே குழந்தைகளுக்குப் பாலூட்டும் தாய்மார்கள் 6 மாதம் வரையில் அனைவரின் ஆதரவுடன் தாய்ப்பால் மட்டுமே அளித்து (தண்ணீர் கூட வேண்டாம்) வளர்த்தால், திருவள்ளுவரின்.

"ஈன்ற பொழுதில் பெரிதுவக்கும் தன்மகனை
சான்றோன் எனக் கேட்ட தாய்"

என்ற குறள் உரைக்கும் சிறப்பினைத் தாய் அடையலாம்.

**பாலூட்டுவது தாயின் உரிமை – அதற்கு**
**துணை நிற்பது நமது கடமை** ✶



## மொழிப்பற்று

மொழிப் பற்று இருப்பது எந்த வகையிலும் வருந்தத்தக்கதல்ல; போற்றத்தக்கது.

## தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக்கழக கொள்முதல் நிலையங்களில் டி.கே.எம்.-9 பொதுரக நெல் கொள்முதல் செய்யப்படும்

காவிரி டெல்டா பாசனப் பகுதிகளில் சாகுபடி செய்யப்படும் நெல் ரகங்களில் ஒன்றான டி.கே.எம்.–9 பொது ரக நெல்லையும் அரசு நெல்கொள்முதல் நிலையங்களில் கொள்முதல் செய்யவேண்டும் என பல்வேறு விவசாய சங்கங்களும் விவசாயிகளும் வலியுறுத்தி வந்தனர்.

தமிழ்நாட்டில் டி.கே.எம்.–9 ரக நெல் கொள்முதல் செய்வது சில வருடங்களாக நிறுத்தப்பட்டது. எனினும், விவசாயிகளின் நீண்ட நாள் கோரிக்கையை ஏற்றும், அவர்களுடைய நலன் புறக்கணிக்கப்படாமலும், அவர்களது நெல்லுக்கு மத்திய அரசு நிர்ணயித்துள்ள குறைந்த பட்ச ஆதார விலையுடன் மாநில அரசு வழங்கும் கூடுதல் ஊக்கத் தொகையும் முழுவதுமாகக் கிடைத்திடும் வகையிலும் டி.கே.எம் – 9 ரக நெல்லை உடனடியாக அரசு நேரடிக் கொள்முதல் நிலையங்களில் கொள்முதல் செய்ய மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் உத்தரவிட்டுள்ளார். இதன் மூலம் விவசாயிகள் பயிரிடும் அனைத்து ரக நெல்லும் அரசு நேரடிக் கொள்முதல் நிலையங்களில் கொள்முதல் செய்யப்படும் என்றும், விவசாயிகள் இந்த வாய்ப்பினை நன்கு பயன்படுத்திக் கொள்ளுமாறும் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

புதிய முகவரியில்

**தமிழரசு**

தமிழரசு இதழ்
அலுவலகம் மற்றும் அச்சகம்
தற்போது பின்வரும்
புதிய முகவரிக்கு
மாற்றப்பட்டுள்ளது
என்பதைத் தெரிவித்துக்
கொள்கிறோம்.

**தமிழரசு**

110. அண்ணா சாலை,
(அரசு எழுதுபொருள்
மற்றும் அச்சுத்துறை
ஆணையரக வளாகம்)
சென்னை - 600 002.
தொலைபேசி:28520407/
28520408


**100 ஆண்டுகளைக் கடந்து மக்கள் சேவையில்**

TNSC BANK

**TNSC வங்கி**

**தமிழ்நாடு மாநிலத் தலைமைக் கூட்டுறவு வங்கி லிட்.,**

233, என்.எஸ்.சி.போஸ் ரோடு, த.பெ.எண்.226,
சென்னை - 600 001.
தொலைபேசி : 2534 0301, 2534 0304
தொலைநகல் : 044-2534 0508
மின்னஞ்சல் : tnscbank@vsnl.com

- தமிழ்நாட்டில் உள்ள அட்டவணையிடப்பட்ட ஒரே கூட்டுறவு வங்கி
- சென்னை நகரில் 46 கிளைகள்
- வைப்பீடுகளுக்கு அதிக வட்டி
- அனைத்துக் கிளைகளிலும் கணினி மூலம் துரித சேவை
- 5 கிளைகளில் ஏ.டி.எம். வசதி
- குறைந்த வட்டியில் நகைக்கடன்
- கூடுதல் சேவை நேரம்

வெளியீட்டு ஆணை எண்.1664/வரைகலை/விளம்பரம் 2007, நாள் : 11.10.2007

இணையதளம் : www.tnscbank.com





சென்னை – தமிழரசு அச்சகத்தில் வடிவமைக்கப்பட்டு அரசு மைய அச்சகம், சென்னை–600 079–ல் அச்சிடப்பட்டது.



**கோ-ஆப்டெக்ஸின் கோலாகலம்**
**பருத்தி பட்டின் கோடி அழகு**



**கோ-ஆப்டெக்ஸ்**
வழங்குகிறது
**20%**
அரசுத் தள்ளுபடி

குளிர்ச்சியான கோ-ஆப்டெக்ஸ் வண்ணங்களால் உங்கள் வாழ்வை இன்பமயமாக்குங்கள்.

கோ-ஆப்டெக்ஸின் கண்கவர் பட்டு, பருத்தி, ஆடைகளுக்கான துணிவகைகள் 20% அரசுத் தள்ளுபடியுடன்.

வாருங்கள்! வாங்கி மகிழுங்கள்!!

**புதிய வருகை**

"அழகு மயில்" பட்டுப் புடவைகள் "மருதம்" கலப்பிழை பட்டுப் புடவைகள் "கோலங்கள்" கலப்பிழை பட்டுப் புடவைகள்
"மாந்துளிர்" பருத்திப் புடவைகள் "மலையரசி" பருத்திப் புடவைகள் "நாச்சியார்" பருத்திப் புடவைகள் "திருவரங்கம்" பருத்திப் புடவைகள்
"மல்லிகை" பருத்திப் புடவைகள் "கிரி" பருத்திப் புடவைகள் "அரோமா" நறுமண சட்டைகள்

தலைமுறைகளாய் தொடரும் பந்தம் - கோ-ஆப்டெக்ஸ்



R.N.I: No.21446/70-Regn.No.TN/ARD/48/06-08
TN/PMG(CCR) WPP-518/06-08

# தமிழரசு

சய்தி-மக்கள் தொடர்புத் துறையின் வெளியீடு

விலை ரூ.20/-





சென்னையில், மழையால் பாதிக்கப்பட்ட பகுதிகளை
மாண்புமிகு தமிழக முதலமைச்சர் **கலைஞர்** அவர்கள்
பார்வையிட்டு, நிவாரணப் பணிகளை விரைவுபடுத்தினார். (28.11.2008)





கடலூர், திருவாரூர் மாவட்டங்களில்
மழை வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளில்
மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை
அமைச்சர் திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள்
மீட்புப் பணிகளை விரைவுபடுத்தி, பாதிக்கப்பட்ட
மக்களுக்கு வெள்ள நிவாரண உதவிகளை வழங்கினார்.
(28 & 29.11.2008)






# தமிழரசு

செய்தி-மக்கள்தொடர்புத் துறையின் வெளியீடு

திருவள்ளுவர் ஆண்டு 2039
புரட்டாசி-ஐப்பசி - கார்த்திகை
அக்டோபர்-நவம்பர் 2008
மலர் : 40 இதழ் : 4 & 5

**ஆசிரியர் குழு**

ஆசிரியர் மற்றும் வெளியிடுபவர் :

முனைவர் **ஆ.சி.மோகன்தாஸ்,** இ.ஆ.ப.,
இயக்குநர் மற்றும்
அலுவலால் அரசு கூடுதல் செயலாளர்
செய்தி-மக்கள் தொடர்புத்துறை

நிருவாக ஆசிரியர்

**துரை. தாமரைச்செல்வம்**
துணை இயக்குநர் (வெளியீடுகள்)

முதன்மை பொறுப்பாசிரியர்

**மு.ஸ்ரீநாகேஷ்**
உதவி இயக்குநர்

பொறுப்பாசிரியர்களான
செய்தி-மக்கள் தொடர்பு அலுவலர்கள்

**க. குமாரவேலு**
**டி.ஆர். ஜெயஸ்ரீ**
**ஆர்.சேகர்**

உதவி ஆசிரியர்கள்

**க. இராஜராஜேஸ்வரி**
**இரா. சுரேஷ்**
**வி.இரா. நவநீதகிருஷ்ணகுமார்**
**இரா.இளவரசி**

நிருபர்கள்

**கோ. சண்முகம்**
**மாய குமரேசன்**

இதழ் உதவியாளர்கள்

**தி.பெரியார் சாக்ரடீசு**
**ஜெ. ஜெயசிம்மன்**

புகைப்படக்காரர்

**வி.இராதாகிருஷ்ணன்**

கணினி வடிவமைப்பு

**அ. மதன்,** உதவி ஒளியச்சுக்கோர்வையாளர்
**ஆர். பாலாஜி**
(ஒப்பந்த தொகுப்பூதிய கணினி இயக்குபவர்)

சென்னை - தமிழரசு அச்சகத்தில்
அச்சிடப்பட்டது.

தமிழரசு அலுவலகம்,
110,அண்ணாசாலை, சென்னை-600 002.
தொலைபேசி : 28520407/28520408
தொலைநகல் : 28520407
மின் அஞ்சல் : tamilarasu@tn.gov.in
இணையதளம் : www.tn.gov.in




**கடனென்ப நல்லவை யெல்லாம் கடனறிந்து**
**சான்றாண்மை மேற்கொள் பவர்க்கு**

ஆற்ற வேண்டிய கடமைகளை உணர்ந்து, அவற்றைப் பண்பார்ந்த முறையில் நிறைவேற்ற மேற்கொள்ளப்படும் முயற்சிகள் அனைத்தும் நல்ல கடமைகள் என்றே கொள்ளப்படும்.

**கலைஞர்** திருக்குறள் உரையிலிருந்து...



## இந்த இதழில்...

### மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
### கலைஞர் மு. கருணாநிதி அவர்களின் நிகழ்ச்சிகள்


- ஐம்பது ரூபாய்க்கு பத்து மளிகைப் பொருட்கள் வழங்கும் திட்டம் ........ 2
- மதநல்லிணக்கத்தைப் பராமரிப்பதில் தமிழகம் எப்போதும் முனைப்பாகச் செயல்பட்டு வருகிறது ........ 5
- அமைப்புசாரா தொழிலாளர் நலவாரியங்களின் அளப்பரிய செயல்பாடுகள் ........ 16
- ரூ.750 கோடி செலவில் 4ஆவது கட்டமாக இலவச வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகள் வழங்க அரசு முடிவு ........ 28
- மகளிர் சுயஉதவிக் குழுவினர் திறமையாகவும் வெற்றிகரமாகவும் செயல்படுகிறார்கள் ........ 30


### மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை அமைச்சர்
### திரு. மு.க.ஸ்டாலின் அவர்களின் நிகழ்ச்சிகள்


- இதுவரை 60 இலட்சத்து 63 ஆயிரம் உறுப்பினர்களைக் கொண்டு 3,78,564 சுயஉதவிக்குழுக்கள் உருவாக்கப்பட்டுள்ளன ........ 35
- பெருமழையால் பாதிக்கப்பட்ட தஞ்சை, திருவாரூர், நாகை மாவட்டங்களுக்கு நேரில் சென்று நிவாரண உதவி ........ 46
- இந்தியாவிலேயே மகளிர் சுயஉதவிக்குழுக்களின் செயல்பாடுகள் தமிழகத்தில் முதலிடத்தில் உள்ளன ........ 60


**முதலாம் அட்டை**

உத்தமர் காந்தியடிகளின் 140ஆவது பிறந்தநாளன்று, சென்னையில் அவரது திருவுருவச்சிலை அருகே அமைக்கப்பட்டிருந்த உத்தமர் காந்தியடிகளின் திருவுருவப் படத்திற்கு மேதகு தமிழக ஆளுநர் திரு.சுர்ஜித்சிங் பர்னாலா அவர்கள், மாண்புமிகு தமிழக முதலமைச்சர் கலைஞர் மு.கருணாநிதி அவர்கள் மற்றும் மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள் மலர் தூவி மரியாதை செலுத்தினார்கள் (2.10.2008)

**நான்காம் அட்டை**

மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் மு. கருணாநிதி அவர்கள், நியாயவிலைக் கடைகளில் 50ரூபாய்க்கு மானிய விலையில் மளிகைப் பொருட்கள் வழங்கும் திட்டத்தினை, தலைமைச் செயலகத்தில், 2.10.2008 அன்று தொடங்கிவைத்தார்.

# ஐம்பது ரூபாய்க்கு பத்து மளிகைப் பொருட்கள் வழங்கும் திட்டம்

மாண்புமிகு முதலமைச்சர் **கலைஞர்** அவர்கள் தொடங்கி வைத்தார்



**த**மிழக அரசின் புதிய மக்கள் நலத் திட்டமான, ஐம்பது ரூபாய்க்கு மானிய விலையில் பத்து மளிகைப் பொருட்கள் வழங்கும் திட்டத்தை உத்தமர் காந்தியடிகள் பிறந்த நாளான **02.10.2008** அன்று மாண்புமிகு முதலமைச்சர் **கலைஞர்** அவர்கள் தலைமைச் செயலகத்தில் தொடங்கி வைத்து ஆற்றிய உரை வருமாறு:–

இன்றைய விழா நம்முடைய மக்கள் ஒவ்வொரு இல்லத்தோடும் தொடர்புடைய ஒரு தூய விழாவாகும். இந்த விழாவை தொடங்கி வைப்பதில் நான் மிகுந்த மகிழ்ச்சியும் பெருமையும் அடைகின்றேன். இந்த நாள் உத்தமர் காந்தியடிகள் பிறந்த நாள். இந்த நாளில் பேரறிஞர் அண்ணா அவர்களுடைய நூற்றாண்டு விழாவையொட்டி நாம் தமிழகத்திலே நடத்திக் கொண்டி ருக்கின்ற மக்கள் தொடர்புடைய செயல்கள் பலவற்றோடு இந்த இனிய செயலையும் இணைத்து கொண்டாடுகின்றோம்.

ஏழை எளிய மக்கள், நடுத்தர மக்கள், அந்த மக்களுக்குப் பாடுபடுவதும், பணியாற்றுவதும் ஒரு அரசின் பொறுப்பாகும். அந்தப் பொறுப்பை நிறைவேற்றத் தவறியோ, நிறைவேற்ற இயலாது என்று ஒதுங்கியோ இருப்பது மக்களிடத்திலே வாக்குகளைப் பெற்று அவர்களுக்காக அரசு நடத்துகிறோம் என்று உறுதி எடுத்துக் கொண்டவர்களுக்கு அழகல்ல. எனவேதான், ஒரு ஆட்சிக்கு அழகு இது என்பதை அறிந்து தெளிந்து அவ்வாறு செயல்படுகின்ற முறையிலே இந்த அரசு செயல்பட்டு வருகிறது.

கடந்த இரண்டரை ஆண்டு காலத்தில் சாதாரண, சாமான்ய மக்களுக்காக, விவசாயப் பெருங்குடி மக்களுக்காக, வணிகப் பெருமக்களுக்காக, சிறுபான்மைச் சமுதாய மக்களுக்காக, அரசின் சார்பில் ஆற்றியுள்ள கடமைகளை யெல்லாம் நீங்கள் மிக நன்றாக அறிவீர்கள். அது தொடர்கிறது, மேலும் தொடரும் என்பதற்கு அடையாளம்தான் இந்த விழா என்பதை நான் தெரிவித்துக் கொள்ள விரும்புகின்றேன்.

**எங்கள் ஆசை**

இந்த விழாவிலே நம்முடைய தலைமைச் செயலாளர் ஸ்ரீபதி அவர்கள் பேசும்போது இது எந்த அளவிற்கு நம்முடைய உள்ளத்திலே இடம்பெற்று விட்டது என்பதை



எடுத்துக் காட்டுகின்ற வகையிலும், இந்த விழாவின் காரணமாக ஸ்ரீபதி அவர்களுடைய தமிழ் ஆற்றலே மிகுந்திருக்கிறது என்பதை எடுத்துக்காட்டும் வகையிலும் இந்த விழா அமைந்துள்ளது. பத்துப் பொருளை வைத்து அவர் இங்கே ஒரு இனிய செய்தியைச் சொன்னார். பசி வந்திடப் பத்தும் பறந்து போகும் என்ற பழமொழியை அவர் இங்கே நினைவூட்டினார் என்றாலுங்கூட, இந்தப் பத்தும் மக்களிடம் பறந்து போக வேண்டுமென்பது எங்கள் ஆசை. இது பறந்து போகாதா என்று வேறு சிலர் வேறு நோக்கத்துடன் தொலை தூரத்திலேயிருந்து ஆசைப்படுகிறார்கள். அது பறந்து போகாது, நிச்சயமாக இந்தப் பத்தும் சிறந்து விளங்கும், தமிழ்நாட்டு மக்களுடைய இல்லங்களில்; என்பதை நான் இங்கே நினைவூட்ட விரும்பு கிறேன்.

இந்தத் திட்டத்தை நம்முடைய உணவுத்துறை அமைச்சர் தம்பி வேலு அவர்களுடைய ஒத்துழைப் போடும், மாநில அரசினுடைய செயலாளர்கள், குறிப்பாக தலைமைச் செயலாளர், நிதித் துறைச் செயலாளர், உணவுத் துறைச் செயலாளர் – அந்தத் துறைகளிலே உள்ள செயலாளர்கள், அதிகாரிகள், அலுவலாளர்கள் ஒத்துழைப்போடு இதை நாம் தொடங்கி யிருக்கிறோம். இந்தத் தொடக்கம், அடக்கத்தோடு ஆரம்பமாகி யிருக்கிறது. ஏனென்றால் இதைப் பெரிய ஆர்ப்பாட்டமாக நடத்த நாங்கள் விரும்பவில்லை என்பதற்கு அடையாளம்தான் இந்தக் கோட்டை வளாகத்திற் குள்ளேயே சிறிய அளவில் பந்தலிட்டு, பெருமளவிற்கு இங்கே மக்கள் வரவேண்டுமென்று விரும்பாமல் ஒரு அடையாள பூர்வமாக இன்றைக்கு இதை ஆரம்பித்து வைக்கிறோம். ஏடுகள் வாயிலாக நாட்டிற்கு இது தெரியப்படுத்தப்படும். நாட்டு மக்கள் இதன் பயனைத் தொடர்ந்து அடைய வேண்டுமென்ற அந்த நிலையிலே தான் இன்றைக்கு ஆடம்பரமில்லாமல், ஆரவாரம் இல்லாமல், ஆர்ப்பாட்டம் இல்லாமல் இந்த நிகழ்ச்சியை நாம் தொடங்கியிருக்கிறோம்.

**வெற்றிகரமாக நடைபெற்று வரும் ஒரு ரூபாய்க்கு ஒரு கிலோ அரிசி திட்டம்**

முதலில் ஒன்றை நாம் நினைவுபடுத்திக் கொள்ள வேண்டும். மக்களுக்கு இன்றியமையாத மிக முக்கியமான தேவையான உணவில் மூலப் பொருளாக இருக்கின்ற அரிசியை குறைந்த விலைக்குத் தர வேண்டுமென்று எங்களையெல்லாம் ஆளாக்கிய பேரறிஞர் அண்ணா அவர்கள் விரும்பினார்கள். அதனால் தான் அவர்கள் ஆட்சிக்கு வருவதற்கு முன்பு படி அரிசித் திட்டத்தைக் கொண்டு வருவேன் என்று அறிவித்தார்கள். சென்னை, கோவை நகரங்களில் கொண்டு வந்தார்கள், ஆனால் நீண்ட காலம் அதை நடத்த முடியாமல், ஓரிரு மாதங்களில் அந்தத் திட்டத்தை அரசு கைவிட நேர்ந்தது. அதற்குக் காரணம் அன்றையதினம் இருந்த நாட்டின் பொருளாதாரம், விளைச்சல், உணவுப் பெருக்கம் இவைகளின் காரணமாக அதற்குமேல் அந்தத் திட்டத்தை நிறைவேற்ற இயலவில்லை.

இப்போது வாய்ப்பு கிடைத்திருக்கிறது. வாய்ப்பும் நல்ல முறையிலே உருவாகியிருக்கிறது. இதைப் பயன்படுத்திக் கொள்ளாவிட்டால்; மக்களுக்கு என்ன வாக்குறுதி அளித்தோமோ, அதை நிறைவேற்ற முடியாத நிலைக்கு ஆளாகி விடுவோம், ஆகவே அந்த வாக்கினை நிறைவேற்ற வேண்டும் என்பதற்காகத்தான் படி அரிசி திட்டம் அண்ணா அவர்களின் கனவாக இருந்தாலும், அதை நிறைவேற்ற முடியாமல் இடையிலே தொய்வு ஏற்பட்டாலும், அந்தத் திட்டத்தைத் தொடர்ந்து நிறைவேற்றுவோம், அந்தத் திட்டத்தை மீண்டும் தொடங்கி தொடர்ந்து நிறைவேற்றுவோம் என்று சூளுரைத்து, கிலோ அரிசி ஒரு ரூபாய் என்று அறிவித்து, அது வெற்றிகரமாக இன்றைக்கு நடைபெற்று வருகின்றது.



## அண்ணாவின் பொன்மொழி

### கலை

கலை ஓர் இன மக்களின் மனப்பண்பு. அவ்வின மக்களிடையே தோன்றும் தெளிவு, வீரம் ஆகியவற்றின் எடுத்துக்காட்டு. எனவே, கலை இன வளர்ச்சிக்கு ஏற்றபடி மாறியும் விரிந்தும் வரும் என்பதே நுண்ணறிவினரின் துணிவு.

## உத்தமர் காந்தியடிகள் பிறந்த நாளான அக்டோபர் 2ஆம் தேதி முதல் 50 ரூபாய்க்கு வழங்கப்படும் 10 மளிகைப் பொருட்கள்

- 250 கிராம் மிளகாய்த் தூள்
- 50 கிராம் மஞ்சள் தூள்
- 250 கிராம் மல்லித் தூள்
- 75 கிராம் கடலைப் பருப்பு
- 25 கிராம் வெந்தயம்
- 25 கிராம் கடுகு
- 25 கிராம் சோம்பு
- 25 கிராம் மிளகு
- 25 கிராம் சீரகம்
- 10 கிராம் பட்டை/இலவங்கம்

நம்மைப் பொறுத்தவரையில் அது வெற்றிகரமாக நடைபெறுகிறது. அதை வாங்கிப் புசிக்கின்ற மக்களைப் பொறுத்தவரையிலே வெற்றிகரமாக நடைபெற்று வருகிறது. தொலைவிலே இருந்து பார்ப்பவர்களைப் பொறுத்தவரையில் அய்யோ, இவர்கள் இந்தத் திட்டத்தையும் நிறைவேற்றி அதிலே வெற்றிகண்டு விடுவார்களேயானால், நாளைக்கு நாம் என்ன ஆவது, என்ற அந்தக் கேள்விக்குறிக்கு தங்களை ஆளாக்கிக் கொண்டவர்கள்தான் இதைப் பற்றி இது ஒரு திட்டமா என்றெல்லாம் கேட்கிறார்கள். நேற்று வரையில் மலிவான விலையில் அரிசி கிடைக்க வேண்டுமென்று சொன்னவர்கள், இன்றைக்கு மலிவான விலையில் அரிசியை நாம் தரும்போது, அரிசி மாத்திரம் கொடுத்தால் போதுமா என்று கேட்கின்றார்கள்.

**மலிவு விலை!**

அதனால்தான் பத்துப் பொருட்களை ஒரு பையிலே வைத்து, ஐம்பது ரூபாய் விலைக்கு வெளிச்சந்தையிலே வாங்கினால், வெளியிலே கடைகளிலே வாங்கினால் 70 ரூபாய், 80 ரூபாய் என்றளவிற்கு விற்கக் கூடிய அந்தப் பொருட்களை 50 ரூபாய் விலைக்கு இன்றைக்குத் தருகின்ற மலிவு விலை மளிகைப் பொருட்கள் என்ற நிலையில் அவைகளை இன்றைக்கு நாம் தர முன் வந்திருக்கிறோம். இதையும் குறை சொல்வார்கள், குறை சொல்லா விட்டால் அது எதிர்க்கட்சி அல்ல, குறை சொன்னால் தான் எதிர்க்கட்சியாக இருக்க முடியும் என்ற அந்த எண்ணத்தோடு அவர்கள் செயல்படுகிறார்கள். நான் அவர்களை குற்றஞ்சாட்டமாட்டேன். அவர்கள் எந்தக் கட்சி, எந்த லேபிள், எந்த சின்னத்தில் அவர்கள் இன்றைக்கு விளம்பரப்படுத்தப்படுகிறார்களோ, அந்தக் கட்சியின் கடமைகளை அவர்கள் செய்கிறார்களே அல்லாமல் என் மீது அவர்களுக்கு கோபம், அல்லது இந்த அரசு மீது அவர்களுக்கு ஆத்திரம், இந்தக் காரியங்களைக் கண்டு அவர்களுக்கு பொறாமை, ஆகவே இப்படியெல்லாம் செய்கிறார்கள் என்று நான் சொல்ல மாட்டேன். இது கூடச் சொல்லாமல் அவர்கள் வேறென்னதான் செய்வார்கள் என்கின்ற அனுதாபத்தோடு நான் அவர்களையெல்லாம் காணுகின்றேன்.

அவர்கள் பேசப் பேச எதிர்க்க எதிர்க்க அவர்கள் விமர்சிக்க விமர்சிக்க நாம் ஏதாவது குறை இருந்தால் அதையும் திருத்திக் கொண்டு, தவறிருந்தால் அந்தத் தவறுகளைப் போக்கிக் கொண்டு இந்தத் திட்டத்தை நல்ல முறையிலே நிறைவேற்றுவதற்கு அவர்கள் சொன்ன யோசனைகளாக அவைகளையெல்லாம் எடுத்துக் கொண்டு இந்தத் திட்டத்தை வெற்றிகரமாக நிறைவேற்றிட நீங்கள் எல்லாம் ஒத்துழைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

நீங்கள் ஒத்துழைப்பீர்கள் என்று நம்புகிறேன். மானிய விலையில் மளிகைப் பொருட்கள் வழங்கும் இந்தத் திட்டத்தின் தொடக்க விழாவிலே வந்திருந்து சிறப்பித்த உங்கள் அனைவருக்கும் என் நன்றியையும், வணக்கத்தையும் வாழ்த்தையும் வழங்கி இந்த அளவில் விடைபெறுகிறேன்.

* * *



## மதநல்லிணக்கத்தைப் பராமரிப்பதில் தமிழகம் எப்போதும் முனைப்பாகச் செயல்பட்டு வருகிறது

மாண்புமிகு முதலமைச்சர் **கலைஞர் மு. கருணாநிதி** அவர்களின் உரை




புதுடெல்லியில், 13.10.2008 அன்று மாண்புமிகு இந்தியப் பிரதமர் டாக்டர் மன்மோகன்சிங் அவர்களின் தலைமையில் நடைபெற்ற தேசிய ஒருமைப்பாட்டுக் குழுவின் கூட்டத்தில், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் கலைஞர் மு.கருணாநிதி அவர்களின் ஆங்கில உரையை மாண்புமிகு பொதுப்பணி மற்றும் சட்டத்துறை அமைச்சர் திரு. துரைமுருகன் அவர்கள் படித்தார். அந்த ஆங்கில உரையின் தமிழாக்கம் வருமாறு:-

தற்போதைய இக்கட்டான தருணத்தில் மாற்றி அமைக்கப்பட்ட தேசிய ஒருமைப்பாட்டுக் குழுவின் கூட்டத்தை ஏற்பாடு செய்தமைக்காக மாண்புமிகு பிரதமர் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். நமது மதச்சார்பற்ற தன்மைக்கும் ஒருமைப்பாட்டுக்கும் அச்சுறுத்தலாக அமைந்துள்ள நாட்டின் பல்வேறு பகுதிகளில் நடைபெற்று வரும் மத மோதல்கள் பற்றிய செய்திகளின் பின்னணியில், மாற்றி அமைக்கப்பட்ட தேசிய ஒருமைப்பாட்டுக் குழுவின் கூட்டத்தைக் கூட்டியிருப்பது பெரும் முக்கியத்துவம் வாய்ந்ததாக உள்ளது.

**மதநல்லிணக்கத்தைப் பராமரிப்பதில் முனைப்புடன் திகழும் தமிழகம்**

தீய நோக்கம் கொண்டதும், தூண்டி விடப்பட்டதுமான வகுப்புவாத வன்முறை மத அமைதிக்கும், நல்லிணக்கத்திற்கும் மோசமான அச்சுறுத்தலாக இருப்பதோடன்றி, நாட்டின் சமூக மற்றும் பொருளாதார வளர்ச்சியின் வேகத்தையும்

பாதிக்கின்றது. இன்று நாம் நடத்தும் விவாதங்கள், இந்த மாபெரும் தேசம் சந்தித்து வரும் சவால்களைத் திடமாகச் சந்திக்க மத்திய, மாநில அளவில் எடுக்கும் நமது அரசுகளின் நடவடிக்கைகளை வலுப்படுத்துவதற்கு உதவும் வகையில் நேர்மையான முடிவுகளை எடுக்க நிச்சயமாகப் பயன்படும் என்று நான் உறுதியாக நம்புகிறேன்.

சிறுபான்மையினர் மற்றும் ஏழை, எளிய அடித்தட்டு மக்களின் கோரிக்கைகளை நிறைவேற்ற செயல்துடிப்பு மிக்க நடவடிக்கைகளை எடுத்து, மாநிலத்தில் மத நல்லிணக்கத்தைப் பராமரிப்பதில் தமிழ்நாடு எப்போதுமே முனைப்பாக இருந்து வருகிறது. எங்களது மாநில அரசு சிறுபான்மையினருக்கான தனியானதொரு இயக்ககத்தை ஏற்படுத்தி, சிறுபான்மை சமுதாயத் தினரின் மேம்பாட்டுக்காக பல்வேறு நலத்திட்டங்களை உருவாக்கி அவை நிறைவேற்றப்படுவதை மேற்பார்வையிட்டு வருகிறது.

கல்வி உதவித் தொகைகள் மற்றும் கல்விக் கடன் திட்டங்கள் அறிமுகம், சுய வேலை வாய்ப்பு உருவாக்கிக் கொள்ள திறமை வளர்ப்புப் பயிற்சி அளித்தல், சிறுபான்மையினர் பொருளாதார மேம்பாட்டுக் கழகம் போன்றவற்றின் மூலம் குறைந்த வட்டிக்குக் கடன்கள் அளித்தல் போன்றவை மாநிலத்திலுள்ள சிறுபான்மை சமுதாயத்தினரின் நல்வாழ்வுக்காக மாநில அரசால் அறிமுகப்படுத்தப்பட்டுள்ள ஒரு சில நடவடிக்கை களாகும்.

நாங்கள் முஸ்லிம் மற்றும் கிறிஸ்தவ சமுதாயங்களைச் சேர்ந்த பிற்படுத்தப்பட்ட வகுப்பு மாணவர்களுக்கு தனியானதொரு இட ஒதுக்கீட்டை அறிமுகப் படுத்தியுள்ளோம். சிறுபான்மைச் சமுதாயத்தினரின் குறைகளைக் கவனிக்கவும் அவர்களது பிரச்சினைகளில் அரசுக்கு ஆலோசனை கூறவும் சிறுபான்மையினர் பொருளாதார வளர்ச்சி ஆணையம் ஒன்றையும் நாங்கள் அமைத்துள்ளோம்.

பிற்படுத்தப்பட்ட மற்றும் சிறுபான்மைச் சமுதாயத்தினருக்கு சமமான போட்டித் தளத்தை உறுதி செய்வதற்கு மத்தியப் பணிகளிலும், மத்தியக் கல்வி நிலையங்களிலும் 'பொருளாதார ரீதியில் முன்னேறியவர்கள்' (கிரீமிலேயர்) என்று கூறப்படும் பிரிவினரை எந்த விதத்திலும் விலக்கி வைக்காத வகையில் இதர பிற்படுத்தப்பட்ட பிரிவினருக்கு இட ஒதுக்கீட்டை நடைமுறைப்படுத்துவது அவசியமாகும்.

எமது அரசால் சமீபத்தில் அறிவிக்கப்பட்ட தொழிற் கொள்கையும், சிறு, குறு மற்றும் நடுத்தர தொழில்கள் கொள்கையும், மூலதன மானியம், வேலை வாய்ப்பு மானியம் மற்றும் மின் கட்டண மானியம் உள்ளிட்ட கவர்ச்சிகரமான சலுகைத் திட்டங்களை அளிப்பதன் மூலம், அனைத்துப் பகுதிகளும் குறிப்பாக மாநிலத்தின் 251 பின்தங்கிய வட்டங்களின் சமமான வளர்ச்சிக்கும், தொழில் மயமாக்கலுக்கும் அழுத்தம் அளிக்கின்றன.

சிறு, குறு, நடுத்தர தொழில் துறையில், மகளிர் தொழில் முனைவோருக்கும், ஊனமுற்றோர் உட்பட சமுதாயத்தின் நலிந்த பிரிவினருக்கும் சிறப்பு மூலதன மானியம் வழங்கப்படுகிறது.

வேலை வாய்ப்புகளை உருவாக்க மாநிலத்தின் பல்வேறு பகுதிகளில் தொழில் பூங்காக்கள், சிறப்புப் பொருளாதார மண்டலங்கள் ஆகியவற்றைத் தொடங்க மாநில அரசு நடவடிக்கைகள் எடுத்து வருகிறது.

### சிறுபான்மை – அடித்தட்டு மக்கள் உயர்வுக்கு பல்வேறு திட்டங்கள்

இது தவிர, நியாயவிலைக் கடைகள் மூலமாக ரூபாய்க்கு ஒரு கிலோ அரிசி, மானிய விலையில் மளிகைப் பொருட்கள் வழங்கும் திட்டம், ஏழை எளிய குடும்ப அட்டைதாரர்களுக்கு இலவச வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகள் மற்றும் எரிவாயு அடுப்புகள் ஆகியவற்றை வழங்குதல், அண்ணா கிராம மறுமலர்ச்சித் திட்டத்தை நிறைவேற்றுதல், சுய உதவிக் குழுக்களுக்குக் கடன்கள் வழங்குதல் போன்ற சிறப்புத் திட்டங்களை நிறைவேற்றியும், சிறுபான்மையினர் மற்றும் அடித்தட்டு ஏழை எளிய பிரிவினரின் உயர்வுக்காக சிறப்புத் திட்டங்களை அறிமுகப்படுத்தியும் மக்களின் அனைத்து வகுப்பினரின் சமமான வளர்ச்சியினை மாநில அரசு உறுதி செய்கிறது.

மாநிலக் காவல் துறையையும், உளவு அமைப்புகளையும், துடிப்புடன் செயலாக்கி அதன் மூலம் அடிப்படைவாத மற்றும் சாதிய அமைப்புகளின் நடவடிக்கைகள் கூர்மையாகக் கவனிக்கப்பட்டு வருகின்றன. மாநிலத்தில் மதநல்லிணக்கத்தைப் பராமரிக்கத் தேவையான இடங்களில் தேசியப் பாதுகாப்புச் சட்டத்தின்கீழ் கைது உட்பட பல்வேறு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. அனைத்து மாவட்டங்களிலும் மோதல்கள் ஏற்படக்கூடிய பகுதிகளில் அமைதிக்குழுக்கள் உருவாக்கப்பட்டு, பல்வேறு மதங்கள், சாதிகளைச் சேர்ந்த மக்களிடையே எந்தவிதமான மோதல்



சூழ்நிலை ஏற்பட்டாலும் அவற்றைத் தணிக்க இந்த அமைதிக் குழுக்களின் சேவை பயன்படுத்தப் படுகிறது.

### நிறைவேற்றப்பட வேண்டிய சில அமலாக்கத் திட்டங்கள்

சாதித் தலைவர்களின் சிலைகளை சேதப்படுத்தியும், சிறுமைப்படுத்தியும் அதன்மூலம் சாதிய மோதல்களைத் தூண்டிவிட முயலும் நபர்களை கைது செய்ய உதவும் வகையில் தடுப்புக் காவல் சட்டத்தில் ஒரு திருத்தம் செய்யப்பட்டுள்ளது.



## அண்ணாவின் பொன்மொழி

**நல்லகாலம்!**

இப்பொழுது தமிழிலே பாடுகின்ற, தமிழுக்காக உழைக்கின்ற எல்லாக் கவிவாணர்களையும் தமிழ்நாடு வரவேற்கின்றது. எக்கட்சி யினராயினும் எம்மதத்தினராயினும் எக் கொள்கையினராயினும் செய்கிற தொண்டு தமிழுக்கும் தமிழ்நாட்டிற்கும் பயன்படுகிற தென்றால், தமிழனுடைய உள்ளம் குளிர்கிறது. உடனே கவிகளைக் கட்டி அணைக்கத் தனது இரு கரங்களையும் நீட்டுகிறான்; பாராட்டுகிறான்; பரிசளிக்கிறான். இது நாட்டின் நற்காலத்திற்கோர் எடுத்துக்காட்டு!

நாட்டின் ஒரு சில பகுதிகளில் தீவிரவாத சக்திகள் பொது அமைதியைப் பராமரிப்பதற்கு அச்சுறுத்தலை உருவாக்கி, அரசியல் சட்ட ரீதியில் தேர்ந்தெடுக்கப்பட்ட அரசுகளின் ஆணைகளுக்கு சவாலாகவும் விளங்கி வருகின்றன. மத்திய மற்றும் மாநில உளவு அமைப்புகளை வலுப்படுத்துதல், மாநிலக் காவல் படைகளுடன் தீவிரமான ஒருங்கிணைப்பை உறுதி செய்தல், பாதிக்கப்பட்ட மாநிலங்களில் தீவிரவாத மற்றும் பயங்கரவாத சக்திகளை சமாளிக்க தனியாக சிறப்புப் பயிற்சி பெற்ற காவல் படைகளை உருவாக்குதல், அவைகளுக்கு நவீன ஆயுதங்கள், பாதுகாப்புக் கவசங்கள் மற்றும் தேவையான வசதிகளை வழங்குதல், கூட்டு நடவடிக்கைகளை மேற்கொள்ள அனைத்து மாநில கூட்டுக் காவல் படைகளை அமைத்தல், மத்திய காவல் படைகள் மற்றும் இராணுவப் படைகளின் பயிற்சி மையங்கள், நவீன உக்திகளைக் கையாள வெளிநாட்டு பயிற்சி மையங்கள் ஆகியவற்றில் மாநில காவல்துறைக்கு பயிற்சி அளித்தல் – ஆகியவை நிறைவேற்றப்பட வேண்டிய சில அமலாக்கத் திட்டங்களாகும்.

தீய சக்திகளின் ஊடுருவலையும், கள்ளக் கடத்தலையும் தடுக்கவும், அவர்களுடைய நடவடிக்கைகளுக்கு தமிழ்நாடு கடற்கரைப் பகுதிகளை தளமாகப் பயன்படுத்திக் கொள்வதைத் தடுக்கவும் ஆயிரம் கிலோ மீட்டருக்கு மேலுள்ள நீளமான கடற்கரையில் தீவிர நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. கடற்கரையை கவனித்துக் கொள்ள ஆயுதக் காவல்படையின் ஒரு குழுவை (பட்டாலியனை) ஏற்படுத்திவிட்டு கடற்கரையோரம் முழுவதும் தொடர்ச்சியான சோதனைச் சாவடிகள் (செக் – போஸ்ட்டுகள்) ஏற்படுத்தப்பட்டுள்ளன.

### பன்னாட்டு எல்லைப் பாதுகாப்பு மாநில அரசுக்கு நிதி உதவி

இந்த ஏற்பாடு இல்லாவிட்டால், பன்னாட்டு எல்லையைப் பாதுகாக்கும் பொறுப்புடைய மத்திய அரசுக்கு ஏற்பட்டிருக்கக்கூடிய இந்தச் செலவினங்களை மாநில அரசு செய்து வருகிறது. அதைத் திருப்பித் தருமாறு கேட்டால், எங்களது வேண்டுகோள்களுக்கு சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடமிருந்து போதுமான பதில் இல்லை. இது தேசத்தின் நலனைப் பாதுகாத்து, பன்னாட்டு எல்லைக் கோட்டையும் பாதுகாத்து வருவதால் மாநில அரசுக்கு இந்த உதவி முக்கியமானதாகும்.

தீவிரவாத பாதிப்புக்கு ஆளாகக் கூடிய மாவட்டங்களில் வேலை வாய்ப்புகளை உருவாக்க வளர்ச்சித் திட்டங்களை நிறைவேற்றுதல், பின்தங்கிய மாவட்டங்களில் கல்வியின்மையை களைதல், தற்போதுள்ள நலத்திட்டங்களை தீவிரமாக நடைமுறைப் படுத்துவதற்கு அரசின் பல்வேறு அமைப்புகளுக் கிடையில் ஒருங்கிணைப்பை மேம்படுத்துதல், கிராமப்புற கண்காணிப்பு முறையை வலுப்படுத்துதல் ஆகியவை மாவட்ட நிருவாகங்களில் முனைப்புடன் செலுத்தப் படவுள்ள சில நடவடிக்கைகளாகும்.

இத்தகைய மாவட்டங்களுக்குக் குறிப்பாகப் பொருந்தும் சமூகப் பொருளாதார வளர்ச்சித் திட்டங்கள் எந்தவிதமான மத்திய உதவியுமின்றி தொடர்ந்து நிறைவேற்றப்பட்டு வருகின்றன. மேலும், இந்தப் பகுதிகளில் எந்தவிதமான தீவிரவாதமும் ஊடுருவி செயல்படுவதைத் தடுக்க பாதிப்பிற்கு உள்ளாகக் கூடிய பகுதிகளில் சிறப்புக் காவல் படைகளும் நிறுத்தப்பட்டுள்ளன.

வாக்குறுதிகள் இருந்த போதிலும், தமிழ்நாட்டு மீனவர்கள் மீது தாக்குதல்கள் அதிகரித்து வருகின்றன. இது கவலை அளிப்பதுடன், இலங்கை எல்லையிலுள்ள தமிழ்நாடு கடற்கரையில் வாழும் மீனவ சமுதாயத்தினரின் போராட்டங்களுக்கும் காரணமாக உள்ளது.

தீர்வு காணப்படாத மாநிலங்களுக்கிடையிலான நதிநீர்ச் சிக்கல், நாட்டின் சில பகுதிகளில் நடைபெறும் பிராந்திய வெறிப் போக்குகளும், போராட்டங்களும் தேசத்தின் ஒருங்கிணைப்புக்கும் ஒருமைப்பாட்டுக்கும் எதிராகச் செயல்படுகின்றன. இந்த நீண்ட காலப் பிரச்சினைக்கு சுமுகமான தீர்வுகள் காண தேசிய அளவில் நடவடிக்கைகள் விரைவாக எடுக்கப்படா விட்டால், இந்தச் சிக்கல்கள் காலப்போக்கில் தேசத்தின் நலன்களுக்குப் பாதகமாக அமையும்.

மாநிலங்களுக்கிடையிலான நதிகளை நாட்டுடைமையாக்குதல், தேசிய நதி நீர் ஆணையத்தை அமைத்து மாநிலங்களுக்கு இடையிலான நதிகளை இணைத்தல், மாநிலங்களுக்கு இடையிலான குழுக்களை அமைத்து நிலுவையிலுள்ள சிக்கல்களுக்கு சுமுகமான தீர்வு காணுதல் ஆகியவை, மாநிலங்களுக்கு இடையில் நல்ல உறவைப் பராமரிக்க தேசிய ஒருமைப்பாட்டுக் குழுவினால் ஆலோசிக்கப்பட வேண்டிய சில நடவடிக்கைகளாகும்.

மதநல்லிணக்கத்தையும், சமமான முறையில் துறை மற்றும் பகுதி வளர்ச்சியையும் உறுதி செய்து, பொது அமைதியையும், உள்நாட்டுப் பாதுகாப்பையும் அடைய தேசிய ஒருமைப்பாட்டுக் குழு வலுவான தீர்மானகரமான ஒரு அமைப்பாக மாற வேண்டும் என்பது எங்களது நம்பிக்கையும், விருப்பமுமாகும்.

நமது நாட்டிற்கு பல்வேறு இனங்கள், மதங்கள், கலாச்சாரங்கள், மொழிகள் ஆகியவை ஒருங்கிணைந்த நிலையில் உள்ளன. இந்தப் பன்முகம் நமது வலிமையே தவிர வலுவின்மை அல்ல. பல்வேறு மக்கட் பிரிவினர் வளர்ந்து செழிக்க விரும்பும் ஆவலை நாம் ஆதரிக்க வேண்டும். இந்த முக்கியமான தருணத்தில் நமது தேசத்தின் ஒருமைப்பாட்டுக்கு ஏற்படும் எந்தவிதமான அச்சுறுத்தலையும் சந்தித்து வென்றிட, கூட்டான உறுதியை உருவாக்க எங்களது ஆதரவும், கடப்பாடும் உண்டு என நான் உறுதி அளிக்கிறேன்.

★ ★ ★

## அண்ணாவின் பொன்மொழி

**இசைத் தமிழே!**



சேர நன்னாட்டின் மங்கையர் வேழத்தை விரட்டிய தமது வீரக் காதலரை வாழ்த்திப் பாடியது தமிழில்தான்! வெற்றிக்கொடி பறக்க, எதிரியை விரட்டி அடித்துத் திரும்பிய சோழ மன்னர்கள் சிறப்பைத் தமிழில்தான் பாடினார்கள்.

பாண்டியனின் குமாரிகளுக்கு பாங்கிகள் பாடியது தமிழ்ப் பாட்டுகள்தான்.

கதிரவன் காய்வதை அடக்கிக் கொண்டு, மேனி சிவந்து மறையும் நேரத்தில் கடலோரத்தில், பட்டுக் கூடாரத்தினுள்ளே, பக்கத்தில் இருந்த கோவலனின் உள்ளம் குழைய மாதவி பாடியது தமிழில்தான்!



# முதலீடுகள் வந்தடையும் முதன்மையான மாநிலங்களில் ஒன்றாக தமிழகம் விளங்குகிறது

**செ**ன்னையை அடுத்த திருப்பெரும்புதூரில், 16.10.2008 அன்று, நோக்கியா–சீமென்ஸ் நெட்ஒர்க்ஸ் தொழிற்சாலையில் உற்பத்தியைத் தொடங்கி வைத்து மாண்புமிகு முதலமைச்சர் **கலைஞர்** அவர்கள் ஆற்றிய உரை வருமாறு:

நோக்கியா–சீமென்ஸ் கம்பெனியின் உற்பத்தி ஆலையைத் துவக்கி வைப்பதில் நான் பெரு மகிழ்ச்சி அடைகிறேன்.

இந்தத் தொழிற்சாலையை மிகக் குறுகிய காலத்தில் கட்டி முடித்ததற்காக நோக்கியா–சீமென்ஸ் குழுவினரை நான் பாராட்டுகிறேன். இந்தத் திட்டத்திற்கான நிலம் சிப்காட் நிறுவனத்தால் 2007 ஆம் ஆண்டு ஜுன் மாதம் வழங்கப்பட்டது. இதற்கான புரிந்துணர்வு ஒப்பந்தம் எங்களது அரசால் 2008 ஜுன் மாதம் 26ஆம் தேதியன்று கையெழுத்திடப்பட்டது. இன்று இந்தத் தொழிற்சாலையைத் தொடங்கிவைக்க நாம் அனைவரும் கூடியுள்ளோம்.



இந்தியாவில், தமிழ்நாடு முதலீடுகள் வந்தடையும் முதன்மையான மாநிலங்களில் ஒன்றாக விளங்குகிறது. உலகின் முன்னணி நிறுவனங்கள் பல தமிழகத்தைத் தங்களது உற்பத்தித் தளமாக ஆக்கியுள்ளன: சமீப காலங்களில், தமிழ்நாடு மோட்டார் தொழில் மற்றும் மின்னணு வன்பொருள் உற்பத்தித் தளமாக உருவாகி வருகிறது.

இந்தியா அதிவேகமாக வளர்ந்து வருகிறது. கைபேசித்துறை இந்த வளர்ச்சியில் முன்னணி வகிக்கிறது. தற்போது முப்பது கோடிக்கும் அதிகமான கைபேசி சந்தாதாரர்கள் உள்ளனர். ஒவ்வொரு மாதமும் 90 இலட்சம் கூடி வருகிறது. இந்த வளர்ச்சி இத்துறையில் சாதனங்களை வழங்கும் தொழில்களுக்குப் பெரும் வாய்ப்பை அளிக்கிறது.

கைபேசிகள் உற்பத்தியில் முன்னணி நிறுவனங்களான மோடோரோலா, நோக்கியா ஆகியவை தமிழ்நாட்டில் ஏற்கெனவே அவற்றின் தொழிற் சாலைகளை நிறுவிவிட்டன. இங்கு நோக்கியா–சீமென்ஸ் ஆலை நிறுவப்படுவதுடன், தொலைத்தொடர்பு உற்பத்தித் தொழில் எங்களது மாநிலத்தில் ஒருங்கிணைகிறது.

தொழில்நுட்பம் அடிப்படையிலான தொழில்களை நிறுவுவதற்கு தமிழ்நாடு மிகவும் சாதகமான சூழ்நிலையை அளிக்கிறது. இத்தகைய தொழில்களின் வளர்ச்சிக்கு மிகப் பெருமளவிலான திறமையான மனித சக்தி அடித்தளத்தை அளிக்கிறது. மாநிலம் முழுவதுமுள்ள தொழில் கல்வி நிலையங்கள் தரமான மனித சக்தியை அளிக்கின்றன. அனைத்து அரசு மேல்நிலைப் பள்ளிகளிலும் கணினிக் கல்வியை அளித்து அடிப்படைக் கல்வியையும் தொழில் நுட்ப நட்பானதாக எங்களது அரசு ஆக்கியுள்ளது. அமைதியான தொழில் சூழல் மற்றும் நல்ல முறையில் பராமரிக்கப்படும் சட்டம் ஒழுங்கு நிலைமை ஆகியவை கூடுதலான சாதகங்களாகும்.

**புதிய வளர்ச்சி மையங்கள்**

10 ஆண்டுகளுக்கு முன்பு எங்களது அரசால் திருப்பெரும்புதூரில் தொழில் வளர்ச்சிக்கான விதைகள் விதைக்கப்பட்டன. இன்று திருப்பெரும்புதூர் பகுதி மோட்டார் மற்றும் மின்னணு வன்பொருள் உற்பத்தியில்

உலகத் தலைமை பெற்று வளர்ந்துள்ளது. எங்களது மாநிலத்தில் இப்பகுதி முற்றிலுமாக மாற்றப்பட்டுள்ளது.

இப்பகுதியில் பெருகிவரும் போக்குவரத்தைச் சமாளிக்க, நாங்கள் திருப்பெரும்புதூர் – சிங்கப்பெருமாள் கோவில் சாலை மற்றும் வண்டலூர் – வாலாஜாபாத் சாலை ஆகியவற்றை நான்கு வழி மற்றும் ஆறுவழிச் சாலைகளாக மாற்றத் தொடங்கியுள்ளோம்.

தற்போது எங்களது அரசு தொழில் மயமாக்கல் முறையை மாநிலத்தின் இதர பகுதிகளுக்கு, குறிப்பாக மாநிலத்தின் தென் பகுதிகளுக்கு கொண்டு செல்கிறது.

இதற்காக, தென் மாவட்டங்களில் நிறுவப்படும் தொழில்களுக்கு ஊக்க சலுகைகள் அடங்கிய சிறப்புத் திட்டத்தை அளிக்க புதிய கொள்கை ஒன்றை நாங்கள் கொண்டு வந்துள்ளோம்.

இந்தக் கொள்கை தென் மாவட்டங்களில் தொழில் வளர்ச்சியைப் பெருக்கிட பெருமளவிற்கு உதவும்.

சென்னைப் பகுதி மற்றும் கோவை, ஈரோடு பகுதிகள் ஆகியவை தவிர, எங்களது மாநிலத்தில் கடலூர், திருச்சி, திருநெல்வேலி – தூத்துக்குடி ஆகியவையும் புதிய வளர்ச்சி மையங்களாக உருவாகி வருகின்றன என்பதைப் புதிய முதலீட்டுத் திட்டங்கள் காட்டுகின்றன.

இந்த வளர்ச்சி மையங்களால் சுற்றுப்புற மாவட்டங்களும் வளர்ச்சி கண்டு, இவ்வாறு தமிழகம் முழுவதும் தொழில் மயமாக்கலின் பலன்களால் பயனடைகின்றன.

தொழில் மயமாக்கலின் முக்கியமான பலன்களில் ஒன்று வேலைவாய்ப்பு ஆகும். இதைக் கருத்தில் கொண்டு, எங்களது அரசு தற்போது மிக அதிகமான வேலைவாய்ப்பு வழங்கும் தொழில்களில் முதலீட்டுக்கு ஊக்கமளித்து வருகிறது. இந்த இலக்கை அடைவதற்காக, முதலீடுகளின் மேல் எந்தவிதமான நிபந்தனைகளையும் விதிக்காமல், அதிக வேலைவாய்ப்பு அளிக்கும் தொழில்களுக்கு சிறப்பு ஊக்க சலுகைத் திட்டம் ஒன்றை வழங்கும் ஒரு கொள்கையைக் கொண்டு வருகிறோம். இந்த முன் முயற்சி எங்களது இளைஞர்களுக்கு மேலும் அதிகமான வேலைவாய்ப்புகளை உருவாக்க உதவும் என்று நம்புகிறோம்.

எங்களது அரசின் முதலீட்டாளர் நட்பு அணுகுமுறையாலும், வெளிப்படையான செயல்பாட்டாலும் பல்வேறு முதலீட்டுத் திட்டங்கள் தமிழ்நாட்டுக்கு ஈர்க்கப்பட்டு வருகின்றன.

**“ எங்களது அரசின் முதலீட்டாளர் நட்பு அணுகுமுறையாலும், வெளிப்படையான செயல்பாட்டாலும் பல்வேறு முதலீட்டுத் திட்டங்கள் தமிழ்நாட்டுக்கு ஈர்க்கப்பட்டு வருகின்றன. ”**

2008 ஆம் ஆண்டு மே மாதத்திலிருந்து புதிய தொழில்களைத் தொடங்க எங்களது அரசு 21 புரிந்துணர்வு ஒப்பந்தங்களில் கையொப்பம் இட்டுள்ளது. இந்தத் தொழில் திட்டங்களில் மொத்த முதலீடு 31 ஆயிரத்து 300 கோடி ரூபாய் ஆகும். இவை ஒரு இலட்சத்து 93 ஆயிரம் வேலைவாய்ப்புகளை வழங்கும்.

புரிந்துணர்வு ஒப்பந்தங்களில் வெறுமனே கையெழுத்திடுவதால் மட்டும் நானும் திருப்தி அடைந்து விடுவதில்லை. இந்தத் தொழில் திட்டங்களில் முன்னேற்றம் குறித்து தொழில்துறைச் செயலாளரிடம் அடிக்கடி விசாரிப்பேன். திட்டம் தொடங்கப்படுவதற்குத் தயார் என்று அவர் கூறும்போதுதான் நான் மகிழ்ச்சி அடைகிறேன்.

நோக்கியா – சீமென்ஸ் விரைவில் உற்பத்தியைத் தொடங்கத் தயாராக இருக்கிறது என்றும் 500 பேருக்கு அது வேலைவாய்ப்பு தரும் என்றும் அறிந்து நான் மிகவும் மகிழ்ச்சி அடைகிறேன். வேலை வாய்ப்பில் உள்ளூர் மக்களுக்கு நோக்கியா – சீமென்ஸ் நிருவாகம் முன்னுரிமை அளிக்கும் என்று நம்புகிறேன்.

இந்த மகிழ்ச்சியான தருணத்தில், இந்தத் திட்டத்தில் ஈடுபட்டுள்ள குழுவினருக்கு என்னுடைய நல்வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கிறேன். நோக்கியா – சீமென்ஸ் இந்தியாவில் கைபேசித் தொழில் வளர்ச்சியோடு இணைந்து வளர்ந்து சேவை நிறுவனங்கள் அனைத்திற்கும் முன்னணி விநியோக நிறுவனமாக மாறும் என்று நான் நிச்சயமாக நம்புகிறேன்.

❖ ❖ ❖





# சேதுசமுத்திரத் திட்டத்தை நிறைவேற்றினால் தமிழகத்தில் மேலும் வளம் பெருகும்

சென்னை, விமானநிலையத்தின் எதிரே கட்டப்பட்டுள்ள புதிய மேம்பாலத்தை 19.10.2008 அன்று திறந்து வைத்து மாண்புமிகு முதலமைச்சர் **கலைஞர்** அவர்கள் ஆற்றிய உரை

இன்று இந்த விழா ஒரு நல்ல வகுப்பு நடத்துவதைப் போல நம்முடைய தம்பி டி.ஆர்.பாலு அவர்களால் வெகு சிறப்பாக நடத்தப்பட்டிருக்கின்றது. அவர் இங்கே பேசும்போது அடுத்து யார் வருகிறார்களோ அவர்கள் செய்வார்கள், அவர்கள் செய்யத் தயங்கினால், நாங்கள் வலியுறுத்தி அவற்றை முடித்து வைப்போம் என்கிற நம்பிக்கையை உங்களுக்கெல்லாம் இந்த விழாவிலே வழங்கினார். அத்தகைய நம்பிக்கையோடு, அவர் இங்கே ஆற்றிய உரையில் பல தொழில்நுட்பங்களை மத்திய, மாநில அரசுகளின் ஒற்றுமையை – அந்த ஒற்றுமையின் காரணமாக உருவாகி வருகின்ற திட்டங்களின் மேன்மையை அந்தத் திட்டங்களால் தமிழ் மக்கள், இந்திய மக்கள் அடைகின்ற பயன்களை எல்லாம் விரித்துரைத்திருக்கிறார்.

அவர் பேசும்போது நான் எண்ணிக்கொண்டேன். என்னை விழாவுக்கு வந்து, மேம்பாலத்தைத் திறந்து வைத்து, அதைப் பற்றி பேசச் சொல்லிவிட்டு அவரே நமக்கெல்லாம் ஒரு வகுப்பு நடத்தியிருக்கிறாரோ, என்று எண்ணி வியப்பும் அடைந்தேன். மகிழ்ச்சியும் அடைந்தேன். ஏனென்றால் பல அமைச்சர்களுக்கு இன்ன துறைக்கு இவர் அமைச்சர் என்று அழைக்கப்படுகின்ற பட்டம் உண்டு.

நம்முடைய அமைச்சர் தம்பி பாலு அவர்கள் அந்தப் பட்டத்தைப் பெற்றவர் மாத்திரமல்ல. இந்தத் துறையின் அமைச்சர் என்று சொல்லப்படுகிறவர் மாத்திரமல்ல, அந்தத் துறையைப் பற்றி ஆதியோடு அந்தமாக அனைத்தையும் புள்ளி விவரங்களோடு தெரிந்து வைத்திருக்கின்ற ஒரு அமைச்சர் என்பதை தக்க நேரத்திலே இதுபோன்ற விழாக்களிலே அவர் சொல்லக் கேட்டு, நான் மகிழ்ச்சி அடைந்து வருகின்றேன்.

“தம்பி உடையான், படைக்கு அஞ்சான்” என்ற மொழிக்கேற்ப இந்தத் தம்பியை நான் பெற்றிருப்பது உள்ளபடியே இதுபோன்ற திட்டகளை நிறைவேற்றி மக்களை மகிழ்ச்சிக் கடலிலே ஆற்றி அவர்களுடைய தேவைகளை உணர்ந்து, சேவைகளைச் செய்து, தன்னை அடையாளம் காட்டிக் கொள்ளக்கூடிய தம்பியாகத் திகழ்வார் என்ற நம்பிக்கை வீண்போகவில்லை.

அவர் இங்கே ஆற்றிய உரை, இந்தியாவிலே இன்றைக்கு நடைபெறுகின்ற – மன்மோகன் சிங் அவர்களை பிரதமராகக் கொண்டும், திருமதி சோனியா காந்தி அம்மையார் அவர்களை ஆலோசகராக வழிகாட்டியாகக் கொண்டும், நடைபெறுகின்ற இந்தியப் பேரரசு, மத்திய அரசு தமிழகத்தை எந்த அளவிற்கு சீராட்டி, பாராட்டி வாழ வைக்கின்ற அரசாக விளங்குகிறது என்பதற்கான புள்ளி விவரங்களையும், அதற்காக எவ்வளவு பணத்தைச் செலவழிக்கவும் தயாராக மத்தியிலே உள்ள அரசு இருக்கிறது என்பதையும் அவர் இங்கே சுட்டிக் காட்டியிருக்கிறார்.

இன்னொன்றும் சொன்னார் – இந்த அரசில் நடைபெறுகின்ற காரியங்களுக்கு நானும் ஒரு காரணம் என்றார். அந்தக் காரணம் சரியா தவறா என்பதைவிட, நான் எப்படிக் காரணமாக இருக்க முடியும் என்றால் இந்தியாவினுடைய தேர்தல் முழுமையாக முடிவுற்று எந்தெந்த கட்சியின் சார்பில் யார் யார் – எத்தனை பேர் பாராளுமன்ற உறுப்பினர்களாக ஆகியிருக்கிறார்கள் என்று கணக்குப் பார்க்கிற நேரத்தில் – நான் டெல்லியிலே இருந்த திருமதி சோனியாகாந்தி அவர்களோடு பேசிய நேரத்திலும் – டெல்லிக்கு நேராகச் சென்றிருந்த நேரத்திலும் – நம்முடைய தம்பி ஜி.கே. வாசன் போன்றவர்களோடு கலந்து பேசிய நேரத்திலும் – அழுத்தந்திருத்தமாக நான் சொன்னது – இந்தியாவை ஆளக்கூடிய மாபெரும் சக்தியாக நம்முடைய சோனியா காந்தி அவர்கள் விளங்க முடியும்.

எனவே, அவர்கள் ஒன்று பிரதமராகப் பொறுப்பேற்க வேண்டும் அல்லது காங்கிரஸ் கட்சியின் தலைவராகப் பொறுப்பேற்க வேண்டும் என்று அன்றைக்குச் சொன்னேன். அது காரணமாக இருக்குமேயானால், இந்த வளர்ச்சிகளுக்கெல்லாம் – நான் காரணம் என்று சொன்ன தம்பி பாலுவின் வாதத்தை மகிழ்ச்சிகரமாக ஏற்றுக் கொள்ளத் தயாராக இருக்கிறேன்.

தமிழ்நாட்டின் தேவைகள் இந்தப் பாலம் மாத்திரமல்ல, நம்முடைய தமிழ் மொழிக்கான ஆக்கத்தை ஊக்கத்தை அளிக்கின்ற வகையிலும் நான் வலியுறுத்திக் கேட்ட நேரத்தில் எல்லாம் கொஞ்சம் கூட தயங்காமல் இல்லை என்று சொல்லாமல் அவற்றை வாரி வழங்கிய அந்த வள்ளல்தன்மை டெல்லியிலே இன்றைக்கு ஆட்சி நடத்திக் கொண்டிருக்கின்ற காங்கிரஸ் கட்சிக்கு உண்டு என்பதையும் உங்களுக்கு நான் சொல்ல முடியும்.

## தமிழுக்குச் செம்மொழிப் பெருமை

உதாரணமாக செம்மொழியாக நம்முடைய தமிழ்மொழி ஆனது. செம்மொழி என்று தமிழ்மொழி அழைக்கப்பட வேண்டும் என்ற ஒரு நிலைக்காக நூறாண்டு காலத்திற்கு முன்பே பரிதிமாற் கலைஞர் – சூரிய நாராயண சாஸ்திரி பாடுபட்டார். அந்த முழக்கத்தைச் செய்தார். அவர் சூரிய நாராயண சாஸ்திரியாக இருந்தாலும் கூட தன்னுடைய பெயரை தனித்தமிழ்ப் பெயராக பரிதிமாற்கலைஞர் என்று மாற்றிக் கொண்டு – அவர் தமிழுக்காக உழைத்த நேரத்தில் அவருடைய ஆய்வின் முடிவாக தமிழ்மொழி – கிரேக்கம், லத்தீன், உருது, ஹுப்ரூ போன்ற மொழிகளின் வரிசையிலே வைத்து எண்ணத்தக்க, மதிக்கத்க்க ஒரு மொழி இந்த மொழி செம்மொழி, இது செம்மொழி வரிசையிலே வைக்கத் தகுந்தது என்று முதல் குரல் கொடுத்தவர் பரிதிமாற்கலைஞர்.

இப்படி தமிழுக்காக குரல் கொடுத்தவர்களை, பாடுபட்டவர்களை நாம் மறந்தது கிடையாது. அந்தப் பரிதிமாற் கலைஞருடைய வீடு மதுரை மாநகரத்திலே எங்கேயோ ஒரு கிராமத்திலே மதுரைக்குப் பக்கத்தில் அந்த மாவட்டத்தில் இருப்பதை அறிந்து அந்த வீட்டை நம்முடைய அரசின் சார்பிலே விலைக்கு வாங்கி – அதை அரசுடைமையாக ஆக்கி – சின்னஞ்சிறிய வீடாக இருந்தாலுங்கூட, அது ஒரு நினைவுச் சின்னம் என்ற வகையிலே பரிதிமாற்கலைஞரின் வீட்டை நாம் விலைக்கு வாங்கி, அதை தமிழக அரசின் உடைமையாக ஆக்கி அதற்கொரு விழா எடுத்து அந்த



வீட்டு வாசலிலே பரிதிமாற் கலைஞரின் சிலையையும் வைத்தபோது அந்தத் தெருவெல்லாம் – அந்தத் தெருவிலே வாழ்கின்ற பிராமணச் சகோதரர்கள், தாய்மார்கள் கூடி நின்று வாழ்த்துரைத்தார்கள்.

நான் என்னுடைய பொது வாழ்க்கையில் முதன் முதலாக அவ்வளவு பார்ப்பனத் தோழர்களிடத்திலே வாழ்த்துப் பெற்ற ஒரேயொரு நிகழ்ச்சி அந்த நிகழ்ச்சிதான் என்று சொன்னால் அது மிகையாகாது. ஏன் ? எதற்காக ? தமிழுக்காக உலவியவர், தமிழுக்காகப் பெருமை சேர்த்தவர், தமிழின் மேன்மையை எடுத்துச் சொன்னவர், அதற்காகப் போர்க் குரல் கொடுத்தவர், இன்றைக்கு உயிரோடு இல்லாவிட்டாலும், அவருடைய அந்தச் சூளுரையை நிறைவேற்றுவதற்காக நாம் எடுத்து வைத்த வாதத்தை ஏற்றுக் கொண்டு, அதை நிறைவேற்றச் சொன்னவர் சோனியாகாந்தி அவர்கள். நாம் இதிலே வெற்றி பெற்றதும் – செம்மொழி என்கிற அந்த நிலையை ஏற்படுத்தியதும் – டெல்லியிலேயிருந்து சோனியா காந்தி அம்மையாரிடமிருந்து எனக்கொரு கடிதம் வந்தது. தமிழுக்குச் செம்மொழி என்ற நிலை ஏற்பட்டதற்காக இந்தச் செய்தியைச் சொல்லும்போதே (நிகழ்ச்சி நடைபெற்ற இடத்தில் பெரு மழை பொழிந்தது) மழையும் நம்மை வாழ்த்திக் கொண்டிருக்கின்ற செய்தியை காணுகிறோம். இதை முன்கூட்டியே அறிந்துதான் சிலப்பதிகாரத்திலே இளங்கோவடிகள், “மாமழை போற்றதும், மாமழை போற்றதும்” என்று பாடி வைத்திருக்கிறார்,

அதிலே அம்மையார் சோனியா காந்தி அவர்கள் குறிப்பிட்டார்கள். இந்தியாவில் தமிழைச் செம்மொழியாக ஆக்குவதற்கு பாடுபட்டு, அதிலே வெற்றி பெற்றோம் என்ற பெருமையை ஒருவர் சொல்லிக்கொள்ள வேண்டுமேயானால், அந்தத் தகுதி கருணாநிதி அவர்களே, உங்களுக்குத்தான் உண்டு என்று எழுதிய கடிதம் இன்னமும் என்னிடம் பத்திரமாக இருக்கிறது. அப்படிப்பட்ட செம்மொழித் தகுதியை நம்முடைய மொழிக்குத் தந்தவர்கள் – வடக்கே இன்றைய தினம் ஆட்சிப் பொறுப்பிலே டெல்லியிலே இருக்கின்ற மன்மோகன் சிங் அவர்களும், அவருக்கு வழிகாட்டியாக விளங்குகின்ற அம்மையார் சோனியா காந்தி அவர்களும் என்று சொன்னால் அது மிகையாகாது.

## சேது சமுத்திரத் திட்டம்

அப்படிப்பட்ட நல்லாட்சி, தமிழர்களின் கோரிக்கைகளை நிறைவேற்றுகின்ற ஆட்சி அங்கே நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது. தம்பி பாலுவை, இன்றைய தினம் நாம் சாலைப் போக்குவரத்து, கப்பல்



**அண்ணாவின் பொன்மொழி**

**ஏற்றம் காண ஏற்ற வழி**

படித்தவன் உழவேண்டும்;
உழுபவன் படிக்கவேண்டும்.
படிப்பவன் அறிவுப் பசியைத் தீர்க்க,
உழுபவன் உற்பத்தியைப் பெருக்க,
இரு சாராரும் இணைந்தால்தானே
ஏற்றம் காண முடியும்?

போக்குவரத்துத் துறைகளுக்கு அமைச்சராகப் பார்க்கிறோம். சில பேர் சொல்லுகிறார்கள் என்று நான் கூட கேள்விப்பட்டேன். பத்திரிகைகளிலே கூடப் படித்தேன். இவர்கள் இந்தத் துறையை சண்டை போட்டு – கப்பல் துறையை வாங்கியவர்கள் – அன்றைக்கே வெளி உறவுத் துறையை வாங்கியிருந்தால், இந்நேரம் இலங்கைக்குப் போய் நாம் தமிழர்களை மீட்டிருக்கலாமே என்று கூட ஒரு பைத்தியக்காரத்தனமான கருத்துப் பேசப்படுவதை நாம் அறிகிறோம்.

வெளி உறவுத் துறையாக இருந்தாலும், உள்ளாட்சித் துறையாக இருந்தாலும், தொழில் துறையாக இருந்தாலும், சுரங்கத் துறையாக இருந்தாலும் எந்தத் துறையாக இருந்தாலும், அந்தத் துறைகளோடு கலந்தாலோசித்து வெளிநாட்டைப் பற்றி ஒரு முடிவை எடுக்கக் கூடிய அந்த அதிகாரம் பிரதமருக்குத்தான் உண்டு என்பதை அரசியல் புரிந்தவர்கள் தெரிந்து வைத்துக் கொண்டிருப்பார்கள்.

ஆகவே, பாலுவை கப்பல்துறை, சாலைப் போக்குவரத்துத்துறை, துறைமுகத்துறை ஆகிய துறைகளில் பணியாற்றக் கூடிய அமைச்சராகப் பொறுப்பேற்க வேண்டுமென்று நாங்கள் அன்றைக்கு விரும்பியது உங்களுக்கு நினைவிருக்கும். 1967ஆம் ஆண்டு தி.மு.கழகத்தின் ஆட்சி மலர்ந்த நேரத்தில் அண்ணா அவர்கள் தமிழகத்திலே எழுச்சி நாள் ஒன்றைக் கொண்டாடினார்கள். ஆட்சிப் பொறுப்பிலே இருந்த நாங்களே ஒரு எழுச்சி நாளைக் கொண்டாடினோம்.

அந்த எழுச்சி நாளில் அண்ணாவும் நாங்களும் பல ஊர்களிலே கூட்டம் போட்டு, அந்த நாளில் நோக்கத்தை எடுத்துரைத்தோம். அந்த எழுச்சி நாளில் நாங்கள்



எழுப்பிய கோரிக்கைகளிலே ஒன்று – நாங்கள் வைத்த மிக முக்கியமான வேண்டுகோளிலே ஒன்று சேலம் இரும்புத் தொழிற்சாலை. நெய்வேலி நிலக்கரி இரண்டாவது சுரங்கம். அடுத்தது சேது சமுத்திரத் திட்டம். இதிலே நெய்வேலி பெருந்தலைவர் காமராஜர் காலத்திலேயே ஆரம்பிக்கப்பட்டு முடிவடைந்து அடுத்தடுத்து சுரங்கங்கள் தோண்டுவதற்கான சூழ்நிலை அங்கே உருவாகிக் கொண்டிருப்பது உங்களுக்குத் தெரியும்.

அதைத் தொடர்ந்து சேது சமுத்திரத் திட்டத்திற்காக வாதாடினோம், போராடினோம். அந்தத் திட்டத்திற்கான ஏற்பாடுகளைச் செய்து கொடுத்து, அந்தத் திட்டத்தை நிறைவேற்றச் சொல்லி, அந்தப் பொறுப்பை அந்தத் துறையின் அமைச்சர் தம்பி பாலுவிடம் மத்திய அரசு தந்திருக்கிறது என்றால் அவர் அந்தத் திட்டத்தை வெற்றிகரமாக முடிப்பார் என்ற நம்பிக்கையோடு தான் என்பதை நீங்கள் மறந்து விடக் கூடாது.

இப்போது வேறு துறைகளைப் பெற்றிருக்கலாம் என்றால் என்ன துறைகளைப் பெறச் சொல்கிறார்கள் என்று எனக்குப் புரியவில்லை. நாம் இன்றைக்குப் பெற்றிருக்கின்ற துறை – பாலுவிற்காக அல்ல – எனக்காக அல்ல – அல்லது நம்முடைய தம்பி வாசனுக்காக அல்ல – நம்முடைய தங்கபாலு அவர்களுக்காக அல்ல – அன்பரசனுக்காக அல்ல – நாம் பெற்றிருக்கின்ற இந்தத் துறை தமிழகத்தை வளம் பொருந்திய நாடாக ஆக்குவதற்காக – தமிழகத்திலே இன்றைக்கு பாறையாக இருக்கின்ற இடத்தையெல்லாம் சோலைவனமாக ஆக்குவதற்காக – வணிக பூமியாக ஆக்குவதற்காக – வெளிநாட்டு வாணிபங்கள் விரிவடைதவதற்காக – அதற்காகத்தான். தமிழகத்தின் வளத்தைப் பெருக்குவதற்காகத்தான் சேது சமுத்திரத் திட்டம்.

இந்தத் திட்டத்தை ஏறத்தாழ நூறாண்டு காலமாகத் தமிழ்நாட்டின் ஆன்றோர்கள், சான்றோர்கள், அறிஞர்கள், விஞ்ஞானிகள், வித்தகர்கள் அத்தனைபேரும் ஆய்ந்து இது நல்ல திட்டம், நிறைவேற்றலாம் என்று சொல்லி, அதற்கு சர். ஏ. ராமசாமி முதலியார் தலைமையிலே ஆய்வு நடைபெற்று, பெருந்தலைவர் காமராஜர் அவர்கள் பண்டித ஜவகர்லால் நேரு அவர்களை டெல்லியிலே சந்தித்து பரிந்துரை செய்து, பண்டிதநேரு அவர்களும் அதற்கு தன்னுடைய ஒத்துழைப்பைத் தருவதாகச் சொல்லி, அந்தத் திட்டத்தை நிறைவேற்ற இடையிலே பல சங்கடங்கள் ஏற்பட்டு, இன்றைய தினம் அந்தத் திட்டம் ஏறத்தாழ முக்கால் பகுதி நிறைவேறியிருக்கின்ற சூழ்நிலையில் அதைத் தடுக்க சில பேர் இன்றைக்கு முயற்சி செய்து கொண்டிருக்கிறார்கள்.





## அண்ணாவின் பொன்மொழி

### தமிழ்ப்பற்றும் ஒருமைப்பாடும்

உலகையே தன் வீடாக முதன் முதல் நினைத்தவன் தமிழன்தான். அப்படிப்பட்ட தமிழனின் தமிழ் மொழிப்பற்றை குறுகிய மனப்பான்மை என்று யாரும் கணக்கிட்டு விட முடியாது. யார் தடுத்தாலும் யார் மறுத்தாலும் தாய் மொழிப்பற்று குன்றிவிடாது. பொங்கித்தான் வழியும். தமிழ் மீது பற்றுக் கொண்டிருப்பது தேசியத்துக்கு ஊறு ஏற்படுத்தும்; ஒருமைப்பாட்டைக் கெடுக்கும் என்று சிலர் நினைப்பது பொருளற்றது!

**தமிழகம் வளம் பெறும்**

குறிப்பாக பக்கத்திலே இருக்கின்ற ஒரு அரசு ஒரு நாட்டின் அரசு – நாம் இந்தத் திட்டத்தை நிறைவேற்றுவதை விரும்பவில்லை. ஏனென்றால் இந்தத் திட்டத்தை தமிழகத்திலே நிறைவேற்றினால் தமிழகம் மேலும் வளம் பொருந்தியதாக ஆகிவிடும், மேலும் பலம் பொருந்தியதாக ஆகிவிடும். தமிழகம் பலம் பொருந்துவதும், வளம் சிறப்பதும் தனக்குப் பிடிக்காத ஒன்று என்பதால் அவர்கள், சிங்களவர்கள் சில பேர் தமிழகத்திலே இருக்கிற சில பேரை வளைத்துப் போட்டு – ஏற்கெனவே, எவ்வளவு சீக்கிரமாக இந்தத் திட்டம் வேண்டுமென்று சொன்னார்களோ, அவர்கள் எல்லாம் இந்தத் திட்டத்தை இன்றைக்கு எதிர்த்துப் பேசுகிறார்கள் என்றால் அது திட்டத்தின் மீதுள்ள கோபத்தால் அல்ல, அந்தத் திட்டத்தை நாம் எடுத்து நிறைவேற்றக்கூடாது, அந்தப் பெயர் பாலுவிற்கு வந்து விடக் கூடாது, அந்தப் பெயர் இங்குள்ள கூட்டணிக்கு வந்து விடக் கூடாது, கூட்டணியிலே உள்ள காங்கிரஸ் கட்சிக்கு வந்து விடக்கூடாது, கூட்டணியிலே உள்ள தி.மு.கழகத்திற்கு வந்து விடக்கூடாது, கூட்டணியிலே உள்ள தமிழ்நாட்டு அமைச்சர்களுக்கு வந்து விடக்கூடாது. எனவேதான் இந்தத் திட்டத்தை இன்றைக்கு அவர்கள் வேண்டாமென்று சொல்கிறார்கள்.

நீங்கள் கடந்த கால தேர்தல் அறிக்கையை எடுத்துப் படித்துப் பார்த்தீர்களேயானால், அ.தி.மு.கவின் தேர்தல் அறிக்கையில் திட்டவட்டமாக சேது சமுத்திரத்திட்டம் நிறைவேற்றப்பட வேண்டும், அது சிறந்த திட்டம், அந்தத் திட்டம் நிறைவேற்றப்படாவிட்டால் தமிழ்நாடு பாழாகும் எப்படியும் இதை நிறைவேற்றியே தீருவேன் என்று சபதம் செய்தவர்கள், இப்போது என்ன சொல்கிறார்கள்? அந்தத் திட்டத்தை எப்படியும் நான் தடுத்தே தீருவேன் என்று சொல்கிறார்கள் என்றால், என்ன தாராளமான மனப்பான்மை? என்ன தமிழ் உணர்வு? என்ன நாட்டைப் பற்றிய நல்ல எண்ணம்? எவ்வளவு அதி அற்புதமான சிந்தனை? இவைகளை எல்லாம் நீங்கள் எண்ணிப் பார்க்க வேண்டும்.

எண்ணிப் பார்க்கின்ற மக்களின் எண்ணிக்கை இன்றைக்கு தமிழ்நாட்டிலே குறைந்து வருகின்ற காரணத்தால் எவரும் எதையும் பேசலாம் என்றாகி விட்டது. அப்படி ஆகிவிட்ட காரணத்தினாலேதான் இந்தத் திட்டங்களைப் பற்றி நாம் பேசும்போது, அந்தத் திட்டங்களிலே தங்களுக்கு உள்ள வெறுப்பைக் காட்டி, அதைத் தடுத்தே தீரவேண்டுமென்று உச்ச கட்டத்திற்குச் செல்கிற சில தலைவர்களை நாம் பார்க்கிறோம். அவர்களை நீங்கள் வைக்க வேண்டிய இடத்திலே வைக்க வேண்டும். அவர்களை நீங்கள் ஒதுக்க வேண்டிய இடத்திற்கு ஒதுக்க வேண்டும். அவர்களை நீங்கள் போட வேண்டிய இடத்திலே போட வேண்டும்.

இங்கே தம்பி பாலுவை இந்த வட்டாரத்து மக்கள் தேர்வு செய்த காரணத்தால் இதோ மேம்பாலங்கள், மேம்பாலங்கள், என்று தொடர்ந்து என் உயிரை வாங்கி கொண்டிருக்கிறார் – திறப்பு விழாவிற்கு வா, கல்நாட்டு விழாவிற்கு வா என்று என்னைத் தொந்தரவு கொடுத்துக் கொண்டே இருக்கிறார்.

பாரதிதாசன் பாடியதைப் போல, "தொந்தரவுக்குள்ளே தோழி நான் சுகம் கண்டேன்" என்பதைப் போல – அந்தத் தொந்தரவு கூட எனக்குச் சுகமாகத்தான் இருக்கிறது, ஆகவே தம்பி, நீ தொந்தரவு செய்து கொண்டே இரு, தொந்தரவு செய்கின்ற அளவிற்கு திட்டங்களை இங்கே கொண்டு வா, நிறைவேற்று, வாழ்த்துவதற்கு நான் வருகிறேன் என்று உங்களோடு சேர்ந்து பாலுவின் முயற்சிகளை – மத்திய அரசு, மாநில அரசுக்குச் செய்கின்ற உதவிகளைப் பாராட்டி, போற்றி இந்த விழாவிலே என்னுடைய உரையை இந்த அளவில் நிறைவு செய்கிறேன்.

* * *

# அமைப்புசாரா தொழிலாளர் நலவாரியங்களின் அளப்பரிய செயல்பாடுகள்

தமிழகத்தில் உள்ள அமைப்புசாராத் தொழிலாளர்களின் நலன்களைப் பாதுகாத்திடும் நோக்கில் ஒவ்வொரு வகைத் தொழிலுக்கும் ஒரு நல வாரியம் தொடங்கப்பட்டு அந்த நல வாரியங்களின் மூலம் பல்வேறு நலத்திட்ட உதவிகள் அமைப்புசாரா தொழிலாளர்களுக்கும், அவர்களுடைய குடும்பத்தினருக்கும் அளிக்கப்பட்டு வருகின்றன.



தமிழக அரசின்கீழ் 25 அமைப்புசாரா தொழிலாளர் நல வாரியங்கள் செயல்பட்டுவருகின்றன. அவற்றின் செயல்பாடுகள், இந்த வாரியங்கள் மூலம் வாரிய உறுப்பினர்களான ஏழை எளிய தொழிலாளர் குடும்பங்களுக்கு வழங்கப்படும் நலத் திட்ட உதவிகள் முதலியவை குறித்து ஆய்வு செய்திட முடிவு செய்து, முதற்கட்டமாக தொழிலாளர் நலத்துறையின் கீழ் செயல்பட்டுவரும் 14 அமைப்புசாரா தொழிலாளர் நல வாரியங்களின் பணிமுன்னேற்றங்கள் குறித்து மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் 28.10.2008 அன்று தலைமைச் செயலகத்தில் விரிவாக ஆய்வு செய்தார்.

இந்த ஆய்வின்போது, தமிழ்நாடு ஆட்டோ ரிக்ஷா மற்றும் டாக்சி ஓட்டுநர்கள் நல வாரியத்தின் தலைவராகிய மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர், தமிழ்நாடு கைவினைத் தொழிலாளர் நல வாரியத்தின் தலைவரான மாண்புமிகு ஊரகத் தொழில்துறை அமைச்சர், தமிழ்நாடு முடிதிருத்துவோர் நல வாரியம் மற்றும் தமிழ்நாடு கைத்தறி மற்றும் பட்டு நெசவுத் தொழிலாளர்கள் நல வாரியங்களின் தலைவரான மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர், தமிழ்நாடு கட்டுமானத் தொழிலாளர் நல வாரியம், தமிழ்நாடு உடலுழைப்புத் தொழிலாளர் நல வாரியம், தமிழ்நாடு சலவைத் தொழிலாளர் நல வாரியம், தமிழ்நாடு தையல் தொழிலாளர் நல வாரியம், தமிழ்நாடு காலணி, தோல் பொருட்கள் உற்பத்தி மற்றும் தோல் பதனிடும் தொழிலாளர்கள் நல வாரியம், தமிழ்நாடு ஓவியர்கள் நல வாரியம், தமிழ்நாடு பொற்கொல்லர் நல வாரியம், தமிழ்நாடு வீட்டுப் பணியாளர் நல வாரியம் என மொத்தம் 8 வாரியங்களின் தலைவரான மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர், தமிழ்நாடு பனைமரத் தொழிலாளர் நல வாரியத்தின் தலைவர் திரு. குமரி அனந்தன், தமிழ்நாடு மண்பாண்டத் தொழிலாளர் நல வாரியத்தின் தலைவரான தமிழ்நாடு மண்பாண்ட உற்பத்தியாளர் சங்கத்தைச் சேர்ந்த திரு. சேம நாராயணன் ஆகியோரும், தலைமைச் செயலாளர், நிதித் துறைச் செயலாளர் மற்றும் துறைச் செயலாளர்களும், உயர் அதிகாரிகளும் கலந்து கொண்டனர்.

இந்த 14 அமைப்புசாரா தொழிலாளர் நல வாரியங்களிலும் உறுப்பினர்களாகும் தொழிலாளர்கள் நலம்பெறும் வகையில் அவர்களது குடும்பங்களுக்கும் பல்வேறு நலத் திட்ட உதவிகள் வழங்கப்படுகின்றன. அதாவது,

விபத்து மரணம்
ஏற்பட்டால் – 1இலட்சம் ரூபாய்;





இரண்டு கைகள் இழப்பு,
இரண்டு கால்கள் இழப்பு,
ஒரு கை மற்றும்
ஒரு கால் இழப்பு,

இரண்டு கண்களும் முழுமையான
இழப்பு என்றால் – 1இலட்சம் ரூபாய்;

ஒரு கை, ஒரு கால் அல்லது
ஒரு கண் பார்வை
இழப்பு ஏற்பட்டால் – 50,000 ரூபாய்;

– என்பன போல ஊனத்தின் தன்மைக்கேற்ப ஒரு இலட்ச ரூபாய்க்குட்பட்டு நிவாரண உதவிகள் தனிநபர் விபத்துத் திட்டத்தின்கீழ் வழங்கப்படுகின்றன.

இயற்கை மரணத்திற்கு
உதவித் தொகை – 15,000 ரூபாய்;

ஈமச் சடங்குகளுக்கு
உதவித் தொகை – 2,000 ரூபாய்:

**கல்வி உதவித் தொகை**

10ஆம் வகுப்புப் படிக்கும்
பெண் குழந்தைக்கு – 1,000 ரூபாய்;

10ஆம் வகுப்புப் தேர்ச்சி
பெற்றவர்களுக்கு – 1,000 ரூபாய்;

11ஆம் வகுப்புப் படிக்கும்
பெண் குழந்தைக்கு – 1,000 ரூபாய்;

12ஆம் வகுப்புப் படிக்கும்
பெண் குழந்தைக்கு – 1,500 ரூபாய்;

12ஆம் வகுப்புப் தேர்ச்சி
பெற்றவருக்கு – 1,500 ரூபாய்;

முறையான பட்டப் படிப்புக்கு – 1,500 ரூபாய்;

விடுதியுடன் பட்டப் படிப்பு - 1,750 ரூபாய்;

தொழிற்கல்வி பட்டப் படிப்புக்கு – 2,000 ரூபாய்;

விடுதியுடன் பட்டப் படிப்பு – 1,750 ரூபாய்;

தொழிற்கல்வி பட்டப் படிப்புக்கு – 2,000 ரூபாய்;

விடுதியுடன் தொழில் பட்டப் படிப்பு – 4,000 ரூபாய்;

தொழிற்கல்வி பட்ட மேற்படிப்புக்கு – 4,000 ரூபாய்;

விடுதியுடன் தொழில் பட்ட மேற்படிப்பு –6,000 ரூபாய்;

| | | |
|---|---|---|
| ஐ.டி.ஐ. அல்லது தொழில் நுட்பப் படிப்புக்கு | – | 1,000 ரூபாய்; |
| விடுதி வசதியுடன் ஐ.டி.ஐ . தொழில்நுட்பப் படிப்புக்கு | – | 1,200 ரூபாய்; |
| திருமண உதவித் தொகை | – | 2,000 ரூபாய்; |
| கர்ப்பிணிப் பெண்களுக்கு | – | 6,000 ரூபாய்; |
| கருச்சிதைவு / கருக்கலைப்பு நேர்ந்தால் | – | 3,000 ரூபாய்; |
| மூக்குக் கண்ணாடி செலவுத் தொகையை ஈடுசெய்திட | – | 500 ரூபாய் வரை; |
| 60 வயதானால் ஓய்வூதியம் மாதம் ஒன்றுக்கு | – | 400 ரூபாய்; |

-என்ற அடிப்படையில் நலத்திட்ட உதவிகள் வழங்கப்படுகின்றன.

**இந்த அரசு அமைந்தபின் 13.5.2006 முதல் 15.10.2008 வரை,**

தமிழ்நாடு கட்டுமானத் தொழிலாளர் நல வாரியத்தில் 8 இலட்சத்து 7 ஆயிரத்து 602 தொழிலாளர்கள் புதிதாக சேர்க்கப்பட்டு, அவர்களில் 1 இலட்சத்து 17 ஆயிரத்து 85 தொழிலாளர் குடும்பங்களுக்கு 35 கோடியே 89 இலட்சத்து 11 ஆயிரத்து 485 ரூபாய் உதவித் தொகையாக வழங்கப்பட்டுள்ளது.

1999ஆம் ஆண்டில் அப்போதைய தி.மு.க. அரசினால் தொடங்கப்பட்டு, தொடர்ந்து செயல்பட்டுவரும் தமிழ்நாடு உடலுழைப்புத் தொழிலாளர் நலவாரியத்தில் பதிவு செய்துள்ள 5 இலட்சத்து 91 ஆயிரத்து 227 தொழிலாளர்களில் ஒரு இலட்சத்து 5 ஆயிரத்து 63 தொழிலாளர்களின் குடும்பங்களுக்கு 25 கோடியே 59 இலட்சத்து 26 ஆயிரத்து 760 ரூபாய் உதவித்தொகை வழங்கப்பட்டுள்ளது.

2000–2001ஆம் ஆண்டில் இருந்த திராவிட முன்னேற்றக் கழக அரசு உருவாக்கிய தமிழ்நாடு ஆட்டோ ரிக்ஷா மற்றும் வாடகை ஊர்தி ஓட்டுநர்கள் நல வாரியம் முதலான 9 அமைப்புசாரா நல வாரியங்களை முந்தைய அ.தி.மு.க அரசு தமிழ்நாடு உடலுழைப்புத் தொழிலாளர் நல வாரியத்துடன் இணைத்துவிட்டது.

ஆனால், அந்த 9 வகை அமைப்புசாரா தொழில்களிலும் பாடுபட்டுவரும் ஏழைத் தொழிலாளர் குடும்பங்களின் நலன்களில் சிறப்புக் கவனம் செலுத்தவேண்டும் என்ற நோக்கத்துடன் அவையனைத்தையும் 1.9.2006 முதல் மீண்டும் தனித்தனி நல வாரியங்களாக செயல்படும் வகையில் இந்த அரசு ஆணையிட்டதுடன், மேலும் பல அமைப்புசாரா தொழிலாளர் நல வாரியங்களையும் உருவாக்கி அவற்றின்மூலம் தொழிலாளர்களை உறுப்பினர்களாகச் சேர்த்து நலத்திட்ட உதவிகளை வழங்கி வருகிறது.

அந்த வகையில், தமிழ்நாடு ஆட்டோ ரிக்ஷா மற்றும் வாடகை ஊர்தி ஓட்டுநர் நலவாரியத்தில் பதிவு செய்துள்ள 37 ஆயிரத்து 813 தொழிலாளர்களில் 2 ஆயிரத்து 572 பணியாளர்களின் குடும்பங்களுக்கு 63 இலட்சத்து 2 ஆயிரத்து 787 ரூபாய் உதவித்தொகை வழங்கப் பட்டுள்ளது.

தமிழ்நாடு சலவைத் தொழிலாளர் நலவாரியத்தில் பதிவு செய்துள்ள 22 ஆயிரத்து 456 தொழிலாளர்களில் 2 ஆயிரத்து 923 பணியாளர்களின் குடும்பங்களுக்கு 71 இலட்சத்து 62 ஆயிரத்து 499 ரூபாய் உதவித்தொகை வழங்கப்பட்டுள்ளது.

தமிழ்நாடு முடிதிருத்துவோர் நல வாரியத்தில் பதிவு செய்துள்ள 13 ஆயிரத்து 621 தொழிலாளர்களில் 2 ஆயிரத்து 325 பணியாளர்களின் குடும்பங்களுக்கு 48 இலட்சத்து 15 ஆயிரத்து 524 ரூபாய் உதவித்தொகை வழங்கப்பட்டுள்ளது.

தமிழ்நாடு தையல் தொழிலாளர் நல வாரியத்தில் பதிவு செய்துள்ள 2 இலட்சத்து 28 ஆயிரத்து 601 தொழிலாளர்களில் 47 ஆயிரத்து 923 பணியாளர்களின் குடும்பங்களுக்கு 12 கோடியே 7 இலட்சத்து 10 ஆயிரத்து 949 ரூபாய் உதவித்தொகை வழங்கப்பட்டுள்ளது.

தமிழ்நாடு கைவினைத் தொழிலாளர் நல வாரியத்தில் பதிவு செய்துள்ள 34 ஆயிரத்து 953 தொழிலாளர்களில் 3 ஆயிரத்து 671 பணியாளர்களின் குடும்பங்களுக்கு ஒரு கோடியே 26 இலட்சத்து 58 ஆயிரத்து 429 ரூபாய் உதவித்தொகை வழங்கப்பட்டுள்ளது.



தமிழ்நாடு பனைமரத் தொழிலாளர் நலவாரியத்தில் பதிவு செய்துள்ள 19 ஆயிரத்து 449 தொழிலாளர்களில் 780 பணியாளர்களின் குடும்பங்களுக்கு 16 இலட்சத்து 561 ரூபாய் உதவித்தொகை வழங்கப்பட்டுள்ளது.

கைத்தறி மற்றும் கைத்தறி பட்டு நெய்யும் தொழிலாளர் நலவாரியத்தில் பதிவு செய்துள்ள 1 இலட்சத்து 10 ஆயிரத்து 687 தொழிலாளர்களில் 22 ஆயிரத்து 851 பணியாளர்களின் குடும்பங்களுக்கு 5 கோடியே 37 இலட்சத்து 81 ஆயிரத்து 373 ரூபாய் உதவித்தொகை வழங்கப்பட்டுள்ளது.

தமிழ்நாடு காலணி தோல் பொருட்கள் உற்பத்தி மற்றும் தோல் பதனிடுதல் தொழிலாளர் நலவாரியத்தில் பதிவு செய்துள்ள 5 ஆயிரத்து 257 தொழிலாளர்களில் 526 பணியாளர்களின் குடும்பங்களுக்கு 13 இலட்சத்து 57 ஆயிரத்து 135 ரூபாய் உதவித் தொகை வழங்கப் பட்டுள்ளது.

தமிழ்நாடு ஓவியர் நலவாரியத்தில் பதிவு செய்துள்ள 2,080 தொழிலாளர்களில் 108 பணியாளர்களின் குடும்பங்களுக்கு இரண்டு இலட்சத்து 27 ஆயிரத்து 275 ரூபாய் உதவித் தொகை வழங்கப்பட்டுள்ளது.

தமிழ்நாடு பொற்கொல்லர் நலவாரியத்தில் பதிவு செய்துள்ள 10 ஆயிரத்து 37 தொழிலாளர்களில் 524 பணியாளர்களின் குடும்பங்களுக்கு 13 இலட்சத்து 57 ஆயிரத்து 753 ரூபாய் உதவித்தொகை வழங்கப் பட்டுள்ளது.

தமிழ்நாடு மண்பாண்டத் தொழிலாளர் நலவாரியத்தில் பதிவு செய்துள்ள 10 ஆயிரத்து 367 தொழிலாளர்களில் 399 பணியாளர்களின் குடும்பங்களுக்கு 11 இலட்சத்து 77 ஆயிரத்து 321 ரூபாய் உதவித்தொகை வழங்கப் பட்டுள்ளது.

22.1.2007இல் தொடங்கப்பட்டு செயல்பட்டுவரும் தமிழ்நாடு வீட்டுப் பணியாளர் நலவாரியத்தில் பதிவு செய்துள்ள 65 ஆயிரத்து 582 தொழிலாளர்களில் 3 ஆயிரத்து 809 பணியாளர்களின் குடும்பங்களுக்கு 86 இலட்சத்து 71 ஆயிரத்து 166 ரூபாய் உதவித்தொகை வழங்கப்பட்டுள்ளது.

**“14 அமைப்புசாரா தொழிலாளர் நலவாரியங்களிலும் 15.10.2008 வரை 19 இலட்சத்து 59 ஆயிரத்து 732 பேர் உறுப்பினர்களாகச் சேர்க்கப்பட்டுள்ளனர். அவர்களில் 3 இலட்சத்து 10 ஆயிரத்து 559 தொழிலாளர்களின் குடும்பங்களுக்கு 83 கோடியே 46 இலட்சத்து 61 ஆயிரத்து 17 ரூபாய் உதவித் தொகைகள் வழங்கப்பட்டுள்ளன.”**

---

இந்த 14 அமைப்புசாரா தொழிலாளர் நல வாரியங்களிலும் 15.10.2008 வரை 19 இலட்சத்து 59 ஆயிரத்து 732 பேர் உறுப்பினர்களாகச் சேர்க்கப் பட்டுள்ளனர். அவர்களில் 3 இலட்சத்து 10 ஆயிரத்து 559 தொழிலாளர்களின் குடும்பங்களுக்கு 83 கோடியே 46 இலட்சத்து 61 ஆயிரத்து 17 ரூபாய் உதவித் தொகைகள் வழங்கப்பட்டுள்ளன என்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கூறினார்.

மேலும், இந்த அமைப்புசாரா தொழிலாளர் நல வாரியங்களில் உறுப்பினர்கள் சேர்க்கும் பணிகளைத் தொடர்ந்து மேற்கொள்ளவேண்டும் என்றும், இந்த வாரியங்களின் மூலம் வழங்கப்படும் நலத் திட்ட உதவிகள் தொழிலாளர்களுக்கும் அவர்களுடைய குடும்பங் களுக்கும் உரிய நேரத்தில் சென்றடைவதை உறுதி செய்திடவேண்டும் என்று வாரியங்களின் தலைவர்களுக்கும், அதிகாரிகளுக்கும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிவுரைகள் வழங்கினார்.

முதற்கட்டமாக தொழிலாளர் நலத் துறையின்கீழ் செயல்பட்டுவரும் 14 அமைப்புசாரா தொழிலாளர் நல வாரியங்களின் செயல்பாடுகளில் ஏற்பட்டுள்ள முன்னேற்றங்கள் குறித்து 28.10.2008 அன்று ஆய்வு செய்த மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தொடர்ந்து 30.10.2008 அன்று எஞ்சியுள்ள 11 அமைப்பு சாரா தொழிலாளர் நல வாரியங்களின் செயல்பாடுகளின் முன்னேற்றங்கள் குறித்து ஆய்வு செய்தார்.

இந்த ஆய்வின்போது, மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர், மாண்புமிகு சுற்றுலாத்துறை அமைச்சர், மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர், மாண்புமிகு அறநிலையத்துறை அமைச்சர், மாண்புமிகு சமூகநலத்துறை அமைச்சர், மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர், மாண்புமிகு மீன்வளத்துறை அமைச்சர் ஆகியோரும் சம்பந்தப்பட்ட துறைகளின் செயலாளர்களும், தலைமைச் செயலாளர், நிதித்துறைச் செயலாளர் மற்றும் உயர் அதிகாரிகளும் உடனிருந்தனர்.

இந்த ஆய்வைத் தொடர்ந்து, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இந்த வாரியங்களின் செயல்பாடுகளில் ஏற்பட்டுள்ள முன்னேற்ற நிலைகள் குறித்து பின்வருமாறு கூறினார்:

**தமிழ்நாடு விவசாயத் தொழிலாளர் நல வாரியம்**

தமிழ்நாடு விவசாயத் தொழிலாளர்கள் – விவசாயிகள் சமூகப் பாதுகாப்பு மற்றும் நலத் திட்டம் 7.8.2006 அன்று தொடங்கப்பட்டு, அதன் தொடர்ச்சியாக மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சரின் தலைமையில் 18.1.2007 அன்று விவசாயத் தொழிலாளர் நல வாரியம் தொடங்கப் பட்டது. இவ்வாரியத்தின்கீழ் 74 இலட்சத்து 61 ஆயிரத்து 583 விவசாயத் தொழிலாளர்கள்– விவசாயிகள் குடும்பங்களுக்கு அடையாள அட்டைகள் வழங்கப்பட்டுள்ளன. 1 கோடியே 69 இலட்சத்து 94 ஆயிரத்து 416 தொழிலாளர்கள் உறுப்பினர்களாகச் சேர்க்கப்பட்டுள்ளனர். 15.10.2008 வரை மொத்தம் 3 இலட்சத்து 39 ஆயிரத்து 558 விவசாயத் தொழிலாளர்கள் – விவசாயிகள் குடும்பங்களுக்கு 197 கோடியே 23 இலட்சத்து 78 ஆயிரத்து 122 ரூபாய் உதவித் தொகை வழங்கப்பட்டுள்ளது.



**தமிழ்நாடு மீனவர் நல வாரியம்**

தமிழ்நாட்டிலுள்ள மீனவர்களின் சமூக, பொருளாதார மற்றும் கல்வி நிலையங்களில் திட்டமிடப்பட்ட உறுதியான முன்னேற்றத்தை அடைவதற்கென 'தமிழ்நாடு மீனவர் நல வாரியம்' மாண்புமிகு மீன்வளத் துறை அமைச்சர் தலைமையில் 29.6.2007 அன்று உருவாக்கப்பட்டுள்ளது. விவசாயத் தொழிலாளர் நல வாரியத்தில் உறுப்பினர்களுக்கு வழங்கப்படும் நல உதவிகள் போலவே மீனவர் நல வாரிய உறுப்பினர்களுக்கும் நல உதவிகள் அனுமதிக்கப்படுகின்றன. மாநிலம் முழுவதுமாக 1 இலட்சத்து 24 ஆயிரத்து 460 மீனவத் தொழிலாளர்கள் உறுப்பினர்களாகச் சேர்க்கப் பட்டுள்ளனர். இவ்வாரியத்திற்கு அரசு 5 கோடி ரூபாய் நிதி வழங்கி மீனவர்களுக்கு பல்வேறு நலத்திட்ட உதவிகளை அளிக்கிறது. இதுவரை 203 உறுப்பினர்களின் குடும்பங்களுக்கு 6 இலட்சத்து 21 ஆயிரத்து 250 ரூபாய் உதவித் தொகையாக வழங்கப்பட்டுள்ளது.

**தமிழ்நாடு கேபிள் டிவி தொழிலாளர்கள் நலவாரியம்**

கேபிள் டி.வி. தொழிலில் ஈடுபட்டிருப்போரின் நலன்களைக் கருத்தில் கொண்டு கேபிள் டி.வி. தொழிலாளர்கள் நலவாரியம் 28.3.2008 அன்று அமைக்கப்பட்டுள்ளது.



அரசு கேபிள் டி.வி. கார்ப்பரேஷன், முதற்கட்டமாக கோயம்புத்தூர், திருநெல்வேலி, வேலூர் மற்றும் தஞ்சாவூர் ஆகிய மாவட்டங்களில் அதிநவீன கேபிள் டி.வி. ஒளிபரப்பு சாதனங்களை நிறுவி, கட்டுப்பாட்டு அறைகளை அமைத்து, 2008 ஜூலை மாதம் 15ஆம் நாள் முதல் தஞ்சாவூரிலும், ஆகஸ்டு 15ஆம் நாள் முதல் கோயம்புத்தூரிலும் செப்டம்பர் 15ஆம் நாள்முதல் திருநெல்வேலி மற்றும் வேலூர் ஆகிய மாவட்டங்களிலும் தொலைக்காட்சி நடத்துபவர் களிடமிருந்து சிக்னல்களைப் பெற்று, உள்ளூர் கேபிள் டி.வி. ஆபரேட்டர்களுக்கு வழங்கும் தனது பணியைத் தொடங்கியுள்ளது. தற்போது சென்னை மாநகரில் தனது சேவையைத் தொடங்குவதற்கான நடவடிக்கைகளை இந்நிறுவனம் மேற்கொண்டு வருகிறது. 50 இலட்ச ரூபாய் அரசு நிதியுதவியுடன் செயல்படும் இவ்வாரியத்தில் உறுப்பினர்கள் சேர்த்தல் முதலிய பணிகள் விரைவில் தொடங்கப்படும்.

**தமிழ்நாடு நாட்டுப்புறக் கலைஞர்கள் நல வாரியம்**

'தமிழ்நாடு நாட்டுப்புறக் கலைஞர்கள் நல வாரியம்' மாண்புமிகு சுற்றுலா மற்றும் பதிவுத்துறை அமைச்சர் தலைமையில் 20.4.2007 அன்று தொடங்கப்பட்டு உறுப்பினர்களுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்குவதற்காக முதற்கட்டமாக 1 கோடி ரூபாய் நிதி அனுமதித்துள்ளது. இவ்வாரியத்தில் 11 ஆயிரத்துக்கும் மேலானவர்கள் உறுப்பினர்களாக சேர்க்கப்பட்டுள்ளனர்.

***தமிழ்நாடு சீர்மரபினர் நல வாரியம்***

'தமிழ்நாடு சீர்மரபினர் நல வாரியம்' மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர் தலைமையில் 20.4.2007 அன்று தொடங்கப்பட்டு உறுப்பினர் சேர்க்கும் பணிகள் நடைபெறுகின்றன. இவ்வாரியத்திற்கு அரசு 2 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்துள்ளது. இதுவரை 1,221 உறுப்பினர்களுக்கு அடையாள அட்டைகள் வழங்கப் பட்டுள்ளன. 51 உறுப்பினர்களின் குடும்பங்களுக்கு 58 ஆயிரம் ரூபாய் நலத்திட்ட உதவிகளாக அளிக்கப் பட்டுள்ளன. மேலும் உறுப்பினர்கள் சேர்த்தல், நலத்திட்ட உதவிகள் வழங்குதல் ஆகிய பணிகள் தொடர்ந்து நடைபெறுகின்றன.

**தமிழ்நாடு நரிக்குறவர் நல வாரியம்**

மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர் தலைமையில் செயல்படும் மற்றொரு வாரியமாகிய 'தமிழ்நாடு நரிக்குறவர் நல வாரியம்' 27.5.2008 முதல் செயல்படுகிறது. இதுவரை 4 ஆயிரத்து 213 பேர் உறுப்பினர்களாக பதிவு செய்து கொண்டுள்ளனர். நலத்திட்ட உதவிகள் வழங்குவதற்காக 1 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

> "74 இலட்சத்து 61 ஆயிரத்து 583 விவசாயத் தொழிலாளர்கள்–விவசாயிகள் குடும்பங்களுக்கு அடையாள அட்டைகள் வழங்கப்பட்டுள்ளன. 1 கோடியே 69 இலட்சத்து 94 ஆயிரத்து 416 தொழிலாளர்கள் உறுப்பினர்களாகச் சேர்க்கப்பட்டுள்ளனர். 15.10.2008 வரை மொத்தம் 3 இலட்சத்து 39 ஆயிரத்து 558 விவசாயத் தொழிலாளர்கள் – விவசாயிகள் குடும்பங்களுக்கு 197 கோடியே 23 இலட்சத்து 78 ஆயிரத்து 122 ரூபாய் உதவித் தொகை வழங்கப்பட்டுள்ளது."

**தமிழ்நாடு கிராமக் கோவில் பூசாரிகள் நல வாரியம்**

'தமிழ்நாடு கிராமக் கோவில் பூசாரிகள் நல வாரியம்' மாண்புமிகு இந்து அறநிலையத்துறை அமைச்சர் தலைமையில் 22.4.2007 அன்று தொடங்கப்பட்டு, 33 ஆயிரத்து 396 பேர் உறுப்பினர்களாக சேர்க்கப்பட்டுள்ளனர். இவ்வாரிய உறுப்பினர்களுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கிட அரசு 10 இலட்சம் ரூபாய் மானியம் வழங்கியுள்ளது.

**தமிழ்நாடு ஊனமுற்றோர் நல வாரியம்**

'தமிழ்நாடு ஊனமுற்றோர் நல வாரியம்' மாண்புமிகு சமூக நலத்துறை அமைச்சர் தலைமையில் 24.4.2007 முதல் தொடங்கப்பட்டு, இவ்வாரியத்தில் இதுவரை 52 ஆயிரம் பேர் உறுப்பினர்களாகச் சேர்க்கப்பட்டு, 2,875 பேருக்கு 4 இலட்சத்து 63 ஆயிரத்து 578 ரூபாய் உதவித் தொகை வழங்கப்பட்டுள்ளது. இவ்வாரியத்திற்கு அரசு 1 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்துள்ளது.

### தமிழ்நாடு அரவாணிகள் நல வாரியம்

மாண்புமிகு சமூக நலத்துறை அமைச்சர் தலைமையில் செயல்படும் மற்றொரு வாரியமாகிய 'தமிழ்நாடு அரவாணிகள் நல வாரியம்' 10.4.2008 அன்று தொடங்கப்பட்டு, தமிழகத்தில் உள்ள அரவாணிகள் அனைவரையும் வாரிய உறுப்பினராகச் சேர்ப்பதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. இவ்வாரியத்திற்காக அரசு 50 இலட்சம் ரூபாய் அனுமதித்துள்ளது.

### தமிழ்நாடு பழங்குடியினர் நல வாரியம்

'தமிழ்நாடு பழங்குடியினர் நல வாரியம்' மாண்புமிகு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை அமைச்சர் தலைமையில் 20.4.2007 அன்று தொடங்கப்பட்டு, உறுப்பினர்களைச் சேர்ப்பதற்கும் அவர்களது குடும்பங்களுக்கு உதவித்தொகை வழங்குவதற்குமான பணிகள் நடைபெற்று வருகின்றன. நலத்திட்ட உதவிகள் வழங்குவதற்காக அரசு 1 கோடி ரூபாய் அனுமதித்துள்ளது.

### தமிழ்நாடு தூய்மைப் பணிபுரிவோர் நல வாரியம்

மாண்புமிகு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை அமைச்சர் தலைமையில் 8.6.2007 முதல் செயல்பட்டு வரும் மற்றொரு வாரியமாகிய தமிழ்நாடு தூய்மைப் பணிபுரிவோர் நல வாரியத்தில் 9 ஆயிரத்து 895 குடும்பங்களைச் சேர்ந்த 22 ஆயிரத்து 811 பேர் உறுப்பினர்களாகச் சேர்க்கப்பட்டுள்ளனர். நலத்திட்ட உதவிகள் வழங்கிட அரசு 1 கோடி ரூபாய் நிதி வழங்கியுள்ளது.

இந்த ஆய்வின் முடிவில் சமூகப் பாதுகாப்பு எதுவுமில்லாத சூழ்நிலையில் தங்களது உடல் வலிமையை மட்டுமே மூலதனமாகக் கொண்டு பல்வேறு தொழில்களிலும் உழைத்துவரும் ஏழை–எளிய தொழிலாளர் குடும்பங்கள் சமூகப் பாதுகாப்பு உணர்வையும், அரசின் உதவிகளையும் பெற்றுப் பயனடையவேண்டும் என்பதற்காகவே உருவாக்கப் பட்டுள்ள இந்த அமைப்புசாரா தொழிலாளர் நல வாரியங்கள் மூலம் தொழிலாளர்கள் உரிய நேரத்தில் உதவிகளைப் பெற்றுப் பயனடையும் வகையில் உறுப்பினர்கள் சேர்த்தல், நலத்திட்ட உதவிகளை உடனுக்குடன் வழங்குதல் முதலிய பணிகளில் முனைப்போடு ஈடுபடுமாறு பல்வேறு வாரியங்களின் தலைவர்களாக இன்றைய ஆய்வுக் கூட்டத்தில் பங்குபெற்ற அமைச்சர்களுக்கும், அதிகாரிகளுக்கும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் அறிவுரைகள் வழங்கினார்.

> "தமிழக அரசின் கீழ் செயல்படுத்தப்படும் பல்வேறு திருமண உதவித் திட்டங்களின்கீழ் 2006க்குப்பின் 2 இலட்சத்து 6 ஆயிரத்து 300 ஏழைப் பெண்களின் திருமணங்களுக்கு 319 கோடியே 16 இலட்சத்து 45 ஆயிரம் ரூபாய் திருமண நிதியுதவி வழங்கப்பட்டுள்ளது;
> அதேபோல, ஏழை எளிய கர்ப்பிணிப் பெண்களுக்கு 6 ஆயிரம் ரூபாய் நிதியுதவி வழங்கும் டாக்டர் முத்துலெட்சுமி ரெட்டி மகப்பேறு நிதியுதவித் திட்டத்தின் கீழ் 2006க்குப்பின் இதுவரை 10 இலட்சத்து 78 ஆயிரத்து 612 ஏழை மகளிருக்கு 487 கோடியே 56 இலட்ச ரூபாய் வழங்கப்பட்டுள்ளது."

இதனைத் தொடர்ந்து தமிழக அரசின்கீழ் செயல்படுத்தப்படும் பல்வேறு திருமண உதவித் திட்டங்களின்கீழ் 2006க்குப்பின் 2 இலட்சத்து 6 ஆயிரத்து 300 ஏழைப் பெண்களின் திருமணங்களுக்கு 319 கோடியே 16 இலட்சத்து 45 ஆயிரம் ரூபாய் திருமண நிதியுதவி வழங்கப்பட்டுள்ளதென்றும்; அதேபோல, ஏழை எளிய கர்ப்பிணிப் பெண்களுக்கு 6 ஆயிரம் ரூபாய் நிதியுதவி வழங்கும் டாக்டர் முத்துலெட்சுமி ரெட்டி மகப்பேறு நிதியுதவித் திட்டத்தின்கீழ் 2006க்குப்பின் இதுவரை 10 இலட்சத்து 78 ஆயிரத்து 612 ஏழை மகளிருக்கு 487 கோடியே 56 இலட்ச ரூபாய் வழங்கப் பட்டுள்ளதென்றும் தெரிவித்த மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், திருமண நிதியுதவி கோரும் பெண்களுக்கும், கர்ப்பிணிப் பெண்களுக்கும் உடனுக்குடன் உதவித் தொகைகள் கிடைப்பதில் மனித நேய உணர்வோடு அதிகாரிகள் அனைவரும் ஒருங்கிணைந்து செயல்பட வேண்டுமென்றும் அறிவுரைகள் வழங்கினார்.

* * *



## நாம் போற்றிட வேண்டிய கண்ணியமான நினைவை எண்ணித்தான், சாலைக்கு இராஜீவ்காந்தியின் பெயரைச் சூட்டியிருக்கிறோம்



இராஜீவ்காந்தி சாலை திறப்பு விழா மற்றும் ஒரகடம் தொழில் பூங்கா மேம்பாட்டுப் பணிகள் தொடக்க விழாவில்
மாண்புமிகு தமிழக முதலமைச்சர்
**கலைஞர் மு.கருணாநிதி** அவர்களின் உரை

**செ**ன்னையை அடுத்த சோழிங்கநல்லூரில் 29.10.2008 அன்று இராஜீவ்காந்தி சாலை திறப்பு விழா, மற்றும் ஒரகடம் தொழில் பூங்கா மேம்பாட்டுப் பணிகள் தொடக்க விழாவில் மாண்புமிகு தமிழக முதலமைச்சர், கலைஞர் மு.கருணாநிதி அவர்கள் ஆற்றிய உரை :-

இங்கே எழுச்சி மயமாக விழா ஒன்று நடைபெற்றுக் கொண்டிருக்கின்ற இந்த நேரத்தில் சோகமும், அதே நேரத்திலே சுகந்தமும் கலந்து வீசுகின்ற சில கருத்துக்களை எடுத்துச் சொல்ல வேண்டிய தவிர்க்க முடியாத இன்றியமை யாமைக்கு நாமெல்லாம் ஆட்பட்டிருக்கிறோம். இங்கே நம்முடைய நண்பர், தமிழ்நாடு காங்கிரஸ் கட்சியின் முன்னாள் தலைவர் திரு.கிருஷ்ணசாமி வந்திருக்கிறார். இன்றைக்கு திறந்து வைக்கப்பட்டிருக்கின்ற இந்தியத் திருநாட்டின் இளந் தலைவர் – இராஜீவ்காந்தியின் பெயரால் அமைந்துள்ள இந்த இராஜீவ்காந்தி சாலை என்ற பெயருக்கு – அதை இன்று நாம் தொடங்கி – அந்தப் பெயரை உச்சரிப்பதற்கு – அதைச் சூட்டி ஆறுதல் பெறுவதற்கு நம்முடைய நண்பர் கிருஷ்ணசாமி அவர்கள் தான் காரணம் என்பதை இங்கே நான் நன்றி உணர்வோடு எடுத்துக்காட்டக் கடமைப் பட்டிருக்கிறேன்.

என்னை தமிழ்நாடு காங்கிரஸ் கட்சியினுடைய அலுவலகத்திற்கு அழைத்துச்

சென்றார்கள். நான் பிறந்தது முதல் – முதன் முதலாக தமிழ்நாடு காங்கிரஸ் கட்சி அலுவலகத்திற்குச் சென்றது அதுதான் முதல் முறை. என்னை அழைத்துச் சென்றது கிருஷ்ணசாமி அவர்கள்தான். அங்கே அழைத்துச் சென்று வரவேற்புரையாற்றி, பாராட்டுரை வழங்கி கடைசியாக அழைத்த காரியத்தை சாதித்துக் கொண்டதும் கிருஷ்ணசாமி அவர்களின் அந்தத் திட்டத்தை, தந்திரத்தை, அவர் தீட்டிய அந்தச் சாதனையை நான் அன்றைக்கே போற்றிப் பாராட்டி அவருடைய கோரிக்கையை அதே இடத்தில் நிறைவேற்றுகிறேன் என்று சொன்னேன். ஒருவேளை அவர் அந்த அலுவலகத்திற்கு என்னை அழைத்துச் சென்று அந்தக் கோரிக்கையை வைக்காவிட்டாலும், ஒரு கடிதம் மூலமாகத் தெரிவித்திருந்தாலும் – தமிழகத்தினுடைய தலைவர்கள், இந்தியத் திருநாட்டின் தலைவர்கள், நாட்டு விடுதலைக்காகப் போராடிய குடும்பத்தின் குலவிளக்குகள், யாராக இருந்தாலும் தியாகத் திருவிளக்குகளாக விளங்கியவர்கள் மறைந்திருந்தால் அவர்கள் வேறொரு இயக்கத்தைச் சேர்ந்தவர்களாயிற்றே என்று கருதாமல் அவர்கள் தியாகத்தின் காரணமாக நம்மைச் சேர்ந்தவர்கள் தான் – நாம் அவர்களைச் சேர்ந்தவர்கள்தான் என்ற அந்த உணர்வோடு அவர்களுடைய பெயர் நிலைக்க நான் காரியமாற்றி வந்திருக்கிறேன் என்பதை நீங்கள் எல்லாம் அறிவீர்கள்.

இப்போது புதிதாகக் கட்டப்படுகின்ற சட்டசபைக் கட்டிடத்திற்கு அங்கே அமைந்துள்ள அந்த இடத்திற்குப் பெயர் – முன்பெல்லாம் இல்லை – ஓமந்தூரார் அரசினர் தோட்டம் என்ற அந்தப் பெயரைச் சூட்டி – அந்தப் பெயர் அங்கேயிருக்கிற தென்றால் – ஒரு காலத்தில் காங்கிரஸ் கட்சியின் முதல் அமைச்சராக இருந்தவர் ஆயிற்றே, நாம் திராவிடக்கட்சி சார்புடையவர் ஆயிற்றே, அந்தப் பெயரை வைப்பதா என்று எண்ணவில்லை. ஓமந்தூரார் காங்கிரஸ்காரராக இருந்தாலும், தியாகத்திற்குரியவர் – ஏழைப் பங்காளர் – இன்னும் சொல்லப் போனால் தாடி இல்லாத ராமசாமி நாயக்கர் என்று உயர்சாதி மக்களால் ஒரு காலத்திலே அழைக்கப்பட்டவர் – மன்னிக்க வேண்டும், அப்படிக் கேலி செய்யப்பட்டவர். அவருடைய பெயரை அங்கே வைத்து நான் மகிழ்ந்தேன்.

அதைப் போலவே நாமக்கல் ராமலிங்கம் பிள்ளை அவர்கள் பெரும் கவிஞர் – தேசியக் கவிஞர். அவருடைய பெயரால் திரவிட முன்னேற்றக் கழக ஆட்சியிலே கட்டிய பத்து மாடிக் கட்டிடத்திற்கு – நாமக்கல் கவிஞர் மாளிகை என்ற பெயரைச் சூட்டி மகிழ்ந்தேன். இன்றும் அந்தப் பெயரால் அந்தக் கட்டிடம் விளங்கிக் கொண்டிருக்கின்றது.

**கல்வி வளர்ச்சி நாளாக காமராசர் பிறந்த நாள்**

பெருந்தலைவர் காமராஜர் மறைந்தபிறகு சாலைக்கும் – மண்டபங்களுக்கும் பெயர் வைத்தது மாத்திரமல்ல – அவருடைய கவலை, ஏழையெளிய வீட்டுப் பிள்ளைகள், தாழ்த்தப்பட்டோர் வீட்டுப் பிள்ளைகள், பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் வீட்டுப் பிள்ளைகள், மாடு மேய்க்கின்ற அளவுக்கு, ஆடு மேய்க்கின்ற அளவிற்கு கிராமப்புறங்களிலே வாழ்கின்ற படிப்பதற்கு வழியில்லாமல்

## அண்ணாவின் பொன்மொழி

**அ**ஞ்சாநெஞ்சு படைத்த
இலட்சியவாதிகள் தாம்
ஒரு நாட்டிற்கு கிடைக்கக்கூடிய
ஒப்பற்ற செல்வங்கள் ஏனெனில்,
பணம் வெறும் இரும்புப்
பெட்டியில்தான் தூங்கும்.
ஆனால் இந்தச் செல்வங்களோ
மக்களின் இதயப் பெட்டிகள்
தோறும் நடமாடுவார்கள்.

வாடுகின்ற அந்தப் பிள்ளைகள் எல்லாம் படிக்க வேண்டுமென்பதற்காக அவர்களுக்கு கல்வி அறிவு ஊட்ட, பெருந்தலைவர் காரமராஜர் எடுத்த முயற்சி கல்விக் கண் திறந்த காமராஜர் – என்ற பட்டத்தை அவர் பெறுவதற்கு காரணமாயிற்று. எனவேதான், காமராஜர் பிறந்த நாளான, ஜூலை 15ஆம் தேதி பெருந்தலைவர் காமராஜர் பிறந்த நாள் என்று அதிகாரப் பூர்வமாக அரசியல் ரீதியாக ஆட்சியின் மூலமாக அறிவித்து – அதோடு நான் அமைதி கொள்ளாமல், யாராவது அடுத்த ஆட்சிக்கு வந்து, அந்தப் பெயரை மாற்றிவிட்டால் என்ன செய்வது என்பதற்காக – காமராஜர் பெயரால் அமைந்த அந்த நாளை சட்டமாகவே – சட்டசபையிலே நிறைவேற்றி ஜூலை 15 கல்வி வளர்ச்சி நாள் காமராஜர் பிறந்த நாள் – இதை சட்டப் பூர்வமாக ஆண்டுதோறும் கொண்டாடப்பட வேண்டும் என்று ஆக்கியதும் நான்தான்.

இதை நான் தொடர்ந்து வளர்த்திக் கொண்டே போகலாம். ஏனென்றால் தேசியத்திற்காக பாடுபட்டு தியாகம் செய்தவர்களை – திராவிட இயக்கத்தைச் சேர்ந்த



நாங்கள் என்றைக்கும் ஒதுக்கிப் பார்த்ததில்லை. தியாகம் எங்களையும், அவர்களையும் ஒன்றுபடுத்தியிருக்கிறது. தியாகம் எங்களையும், அவர்களையும் இணைத்திருக்கிறது. அந்த வகையிலே நான் பெருந்தலைவர் காமராஜருடைய பெயரை சட்டப்பூர்வமாகவே கல்வி வளர்ச்சி நாள் என்பதற்கு சூட்டுவதற்கான வழி வகைகளைச் செய்து இன்றைக்கும் அது நிலவி வருகிறது என்பதை நீங்கள் மிக நன்றாக அறிவீர்கள். எனவே இன்னொரு கட்சியைச் சேர்ந்தவர், வேறு கட்சியைச் சேர்ந்தவர், அவருடைய தியாகத்தை நாம் மதிக்கத் தேவையில்லை என்று கருதுகின்ற வழக்கம் எங்களுக்கு இல்லை, எங்களை – எங்கள் தலைவர் அறிஞர் அண்ணா அப்படி எங்களைப் பழக்கவும் இல்லை. எனவேதான் இன்றைக்கு இந்தியத் திருநாட்டின் இளந்தலைவர் – இராஜீவ்காந்தியின் பெயரை இந்தச் சாலைக்கு சூட்டியிருக்கிறோமென்றால் நண்பர் கிருஷ்ணசாமி கேட்டார் என்பதற்காக மாத்திரமல்ல, என்னை அழைத்து வரவேற்பு அளித்தார் என்பதற்காக மாத்திரமல்ல, இந்த மண்ணில் அவர் சிந்திய ரத்தம் – அதற்கு நாம் அளிக்க வேண்டிய மதிப்பு, மரியாதை, நாம் செலுத்த வேண்டிய நன்றி – நாம் போற்றிட வேண்டிய கண்ணியமான நினைவு அதை எண்ணித்தான் இன்றைக்கு இந்தச் சாலைக்கு ஏறத்தாழ 300 கோடி ரூபாய் செலவிலே அமைக்கப்பட்டுள்ள இந்தச் சாலைக்கு அந்தப் பெருமகனுடைய பெயரைச் சூட்டியிருக்கிறோம்.

**இராஜீவ்காந்தியுடன் சந்திப்பு**

நான் ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். இராஜீவ் காந்தி



## அண்ணாவின் பொன்மொழி

### ஆற்றல் வேண்டும்

**நா**ம் எண்ணியதைச் செயல்படுத்த முதலில் ஆர்வம் வேண்டும். ஆர்வம் இருந்தால்தான் நம்பிக்கை பிறக்கும். பிறகு அதற்கான வழி வகைகளை ஆராய வேண்டும். அதைச் செயல்படுத்த ஆற்றல் வேண்டும். நாம் மட்டும் ஆற்றல் பெற்றால் போதாது. அந்த ஆற்றல் மற்றவர்களுக்கும் வரும்படி செய்ய வேண்டும். இத்தனைக்கும் பிறகுதான் நாம் எண்ணிய எண்ணத்தைச் செயல்படுத்த முடியும்.

இந்த மண்ணிலே மறைந்ததைப் பற்றி என்னுடைய அருமை நண்பர், தமிழ்நாடு காங்கிரஸ் கட்சியின் தலைவர், நாடாளுமன்ற உறுப்பினர் தங்கபாலு அவர்கள் இங்கே உருக்கமாக சில வரிகளிலே சுட்டிக் காட்டினார். அந்த உருக்கம் என்றைக்கும் நம்முடைய உள்ளங்களிலே நிலைத்திருக்கக் கூடிய உருக்கம் என்பதிலே மாறுபட்ட கருத்துக்கு இடமே கிடையாது. அந்த இராஜீவ்காந்தி அவர்கள் இன்றைக்கு நாம் பேசிக்கொண்டிருக்கிற இலங்கைப் பிரச்சினையில் எப்படி நடந்து கொண்டார் என்பதற்கான வரலாற்றுச் சான்றுகள் ஆதாரப் பூர்வமாக என்னிடம் இருக்கின்றன. அதிலே அவருக்கும் எனக்கும் இருந்த தொடர்பு 1989ஆம் ஆண்டு நடைபெற்று முடிந்த சட்டமன்றத் தேர்தலின்போது – இராஜீவ்காந்தி அவர்கள் தமிழகத்திலே காங்கிரஸ் கட்சிக்காகப் பிரச்சாரம் செய்தார். நான் அதை எதிர்த்துப் பிரச்சாரம் செய்ய வேண்டிய – கட்சியின் தலைவராக இருந்தேன். அந்தத் தேர்தல் முடிந்த பிறகு, நான் முதலமைச்சராக ஆன பிறகு எனக்குள்ள ஒரு பொறுப்பு – ஒரு கடமை உண்டு, பிரதமரை முதலமைச்சர் என்ற முறையில் சந்திக்க வேண்டும். அவரைச் சந்திப்பதற்காக டெல்லிக்குச் சென்றேன். என்னுடன் தம்பி முரசொலிமாறன் வந்தார். பிற்பகல் 2 மணிக்கு இராஜீவ்காந்தியைச் சந்திக்க நேரம் கிடைத்தது. சந்தித்தபோது, அவரும் நானும் தேர்தலிலே இரு முனையிலே போட்டி போட்டு – இரு கட்சிகளுக்குப் பிரச்சாரம் செய்தோம் என்ற நிலையே அப்போது இல்லை.

இருவரும் சகோதரர்களைப் போல – தேர்தலில் நடந்ததையெல்லாம் மறந்துவிட்டு – அதைப் பற்றிய கவலையே இல்லாமல் இனிமையாகப் பழகினார். நான் அதே இனிமையோடும், உரிமையோடும் அவரிடத்திலே பழகினேன். அன்று மாலையே சென்னைக்குத் திரும்புவதாகச் சொன்னேன். இல்லையில்லை, இரண்டு நாள் டெல்லியிலே தங்கி

என்னோடு இலங்கையைப் பற்றி கலந்து பேசிவிட்டு போகலாம் என்று அன்புக் கட்டளையிட்டார். நான் இரண்டு நாள் தங்க இயலாதே, சென்னையிலே வேலை இருக்கிறதே என்று சொன்னேன். இல்லையில்லை, நாளை வெளியுறவுத்துறைச் செயலாளர் நட்வர்சிங் அவர்களை நீங்கள் தங்கியிருக்கின்ற தமிழ்நாடு இல்லத்திற்கு அனுப்பி வைக்கிறேன், இலங்கைப் பிரச்சினைகளைப் பற்றி விரிவாக உங்களிடம் பேசுவார். அந்த விவரங்களையெல்லாம் கேட்டு விட்டு – மீண்டும் நாளை மாலையிலே என்னை வந்து சந்தித்தால், பிறகு சில விவரங்களைச் சொல்லுகிறேன் என்றார். அதன்படி நட்வர்சிங் வந்தார், அவரோடு கலந்து பேசினேன் – காலையிலே 7 மணிக்கு வந்த நட்வர்சிங்கோடு நான்கு மணி நேரம் பேசினோம். பேசி முடித்துவிட்டு, இராஜீவ்காந்தியைச் சந்திக்க அவருடைய அலுவலகத்திற்குச் சென்றேன். பேசிய விஷயங்களையெல்லாம் அவரிடம் விவரமாகச் சொன்னேன். அவ்வளவையும் கேட்டு விட்டு, இலங்கை சம்பந்தமாக ஒரு நல்ல முடிவை மேற்கொள்ள நாம் இன்னும் ஒரு முறை பேச வேண்டுமென்று சொன்னார். என்ன பேசினோம். என்ன முடிவுகளை அதைப் பற்றியெல்லாம் எடுத்தோம் என்பதையெல்லாம் இப்போது சொல்ல நேரமில்லை. நான் சட்டசபையிலே இரண்டு மாதங்களுக்கு முன்பு அதைப் பற்றிப் பேச வேண்டிய அவசியம் வந்தபோது – நான் குறிப்பாகப் பேசி விளக்கியிருக்கிறேன்.

ஏன் இதைச் சொல்கிறேன் என்றால், அவர்கள் தேர்தல் பிரச்சாரத்தில் ஈடுபட்டு காங்கிரஸ் கட்சிக்கு வாக்குக் கேட்டுக் கொண்டிருந்த அந்தக் கால கட்டத்திலேயே கோவையிலே நடந்த ஒரு பொதுக்கூட்டத்தில் இலங்கைப் பிரச்சினை பற்றி இராஜீவ்காந்தி அவர்கள் பேசியிருக்கிறார். அது முரசொலியிலோ அல்லது தி.மு.க. ஏடு ஒன்றிலோ வந்த செய்தி அல்ல. 6.11.1989 தேதியிட்ட "இந்தியன் எக்ஸ்பிரஸ்" பத்திரிகையிலே வந்த செய்தி. "கோவையில் நடந்த ஒரு பொதுக் கூட்டத்தில், இலங்கைத் தமிழர் பிரச்சினையில் முழு ஒத்துழைப்பு தந்து வருவதற்காக தி.மு.க அரசுக்கு இராஜீவ்காந்தி பாராட்டுத் தெரிவித்தார்" என்று அப்பொழுதே இலங்கைப் பிரச்சினையிலே மத்திய அரசுக்கு ஒத்துழைப்பு தந்த கட்சி என்று நான் அல்ல, அன்றையப் பிரதமர் இராஜீவ்காந்தி அவர்கள் கோவைக் கூட்டத்திலே 5.11.1989 அன்று பேசி, அது "இந்தியன் எக்ஸ்பிரஸ்" பத்திரிகையில் 6.11.1989 அன்று வெளிவந்தது.

அதைப்போலவே திருச்சியிலே 5.11.1989 அன்று நடந்த தேர்தல் பிரச்சாரக் கூட்டத்திலே – அவர் பேசியது அதே எக்ஸ்பிரஸ் பத்திரிகையில் 6.11.1989 அன்று முதல் பக்கத்தில் வெளியாகி யிருக்கிறது என்ன சொன்னார் என்று சொன்னால்; "இலங்கைத் தமிழர் பிரச்சினைக்குத் தீர்வு காண்பதில் கடந்த பல மாதங்களாக ஒத்துழைப்பு வழங்கி வரும் தி.மு.க. அரசுக்கும், முதலமைச்சர் கருணாநிதிக்கும் பிரதமர் நன்றி தெரிவித்தார்" என்று வந்திருக்கின்றது.

ஆக இலங்கைப் பிரச்சினையிலே இந்த அரசும், மத்திய அரசும் ஒத்துப் போவது என்பது இன்றல்ல. அன்றைக்கே தொடங்கிய ஒன்றுதான் என்பதற்காகத்தான் இந்த ஆதாரங்களை இந்த நேரத்தில் இராஜீவ் பெயரால் ஒரு சாலை தொடங்கப்படுகின்ற நேரத்தில் எடுத்துச் சொல்வது என்னுடைய கடமை என்று நான் கருதுகின்றேன். இப்படி அன்றைக்கு ஏற்பட்ட அந்த இலங்கையைப் பற்றிய தொடர்பு இன்றைக்கும் எப்படியோ எங்களைச் சுற்றிக் கொண்டிருக்கிறது. இதில், அபிப்பிராய பேதத்திற்கு இடமில்லை. நான் திட்டவட்டமாகச் சொல்கிறேன்.

திராவிட முன்னேற்றக் கழகம் அல்லது கழக அரசு தமிழ்நாட்டைப் பொறுத்தவரையில் இன்றைக்கு எடுத்திருக்கிற நிலை – இலங்கைத் தமிழர்களைக் காப்பாற்ற வேண்டும் – இந்த நிலை தான் நாங்கள் வேறு நிலை எதுவும் எடுக்கவில்லை. அன்றைக்கு எந்தக் கொள்கையைக் கொண்டிருந்தோமோ, அதே கொள்கையைத்தான் இன்றைக்கும் கொண்டிருக்கிறோம் போர் இல்லாத ஒரு சூழ்நிலை இலங்கையிலே உருவாக வேண்டும். அமைதி உருவாக வேண்டும். அந்த அமைதியை உருவாக்குவது யாராக இருந்தாலும் சரி, அவர்களை நாம் ஆதரிக்க வேண்டும். அந்த அமைதியை உருவாக்க மத்திய அரசோடு நாம் ஒத்துழைக்க வேண்டும் என்பதில் மாநில அரசை நடத்திக் கொண்டிருக்கின்ற எனக்கு எந்தவிதமான கருத்து வேறுபாடும் இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

### காந்திய வழியில் தீர்வு

இப்படி ஒத்துழைக்கிறேன், ஒத்துழைக்கிறேன் என்று சொல்கிறானோ, எனவே ஒற்றுமையா



கவே இருந்து விடுவார்கள் போலிருக்கிறதே என்று சில பேருக்கு சங்கடம் – சில பேருக்கு வருத்தம் – சில பேருக்குக் கவலை – சில பேருக்கு வாட்டம் – சில பேருக்கு வேதனை – சில பேருக்கு ஒரு அருவருப்பு – அதனால் அவர்கள் தேர்தலை மனதிலே வைத்து ஒரு பெரிய பிரச்சினையை அணுகுகிறார்களே அல்லாமல், தமிழர்களை – தமிழ் மக்களுடைய உயிர்களை மையமாக வைத்து இந்தப் பிரச்சினையை அணுகவில்லை, ஆனால் சென்னையிலே வந்து என்னைச் சந்தித்த மாண்புமிகு வெளி உறவுத்துறை அமைச்சர் பிரணாப் முகர்ஜி அவர்கள் ஆனாலும், நான் ஆனாலும், எங்களைச் சந்திக்க வைத்த வழிகோலிய திருமதி. சோனியா காந்தி அம்மையார் அவர்கள் ஆனாலும், எங்கள் எண்ணம் எல்லாம் தமிழர்களுடைய சிக்கல் தீர வேண்டும் – அவர்களுக்கு ஏற்பட்டிருக்கின்ற சங்கடம், துன்பம் அகல வேண்டும் என்பதிலேதான் – எங்களுடைய அக்கறை எல்லாம். அதனால்தான் நாங்கள் துப்பாக்கிக்கு துப்பாக்கி – பீரங்கிக்கு பீரங்கி – என்றெல்லாம் இல்லாமல் போர் விமானத்திற்கு எதிர் விமானம் – என்றெல்லாம் இல்லாமல் – அதற்காக காந்திய வழி என்று நண்பர் தங்கபாலு சொன்னதைப் போல – காந்திய வழியில் ஒரு பக்கத்திலே உள்ளவர்கள் கடைப்பிடிப்பது என்பதல்ல – இருவரும் அமர்ந்து ஒரு இடத்தில் – ஏற்கெனவே பேசிய சமரசத்தைப் போல – பேசி ஒரு நல்ல அமைதியான வழியை அந்த நாட்டிலே ஜனநாயகம் பூத்துக் குலுங்கக் கூடிய ஒரு வழியை இரு சாராரும் சேர்ந்து பேசி உருவாக்க வேண்டும். அதற்கு இந்தியாவோடும், இந்தியாவோடு சேர்ந்து தமிழ்நாடும் இருப்பதால் தமிழ்நாடும் ஒத்துழைக்கத் தயாராக இருக்கிறது என்பதுதான் இன்றைக்கு எடுக்கப்பட்டுள்ள நிலை.



நான் இராஜீவ்காந்தியின் பெயரால் சாலையைத் திறந்து வைக்கும் நேரத்தில் இலங்கைக்கு ஏன் போனேன் என்றெல்லாம் நீங்கள் வியப்படைவீர்கள். இராஜீவ் காந்திக்கும், இலங்கைக்கும் உள்ள தொடர்பு – அவர் இலங்கை பிரச்சினையினால் எந்த அளவிற்கு முதலிலே ஒரு முறை தாக்குண்டார் என்பதும் – அதற்குப் பிறகு அவர் தன்னுடைய வாழ்வையே தமிழ் மண்ணிலே பகிர்ந்தளித்தார் என்பதும், அவருடைய குருதி இங்கேதான் கொட்டியது என்பதும் மறந்து விடக் கூடிய சரித்திர நிகழ்ச்சி அல்ல. எனவேதான், இலங்கையை எண்ணும்போது இராஜீவ்காந்தி நினைவுக்கு வருகிறார். இராஜீவ்காந்தியின் பெயரால் சாலை திறக்கும்போது இலங்கையை நினைவு கூர்கிறோம். இலங்கை நினைவுக்கு வரும்போது அங்கே வாடிக் கொண்டிருக்கின்ற ஏழையெளிய குழந்தைகள், தாய்மார்கள், சேலை இல்லாமல், ஆடை இல்லாமல், வேட்டி இல்லாமல், துண்டு இல்லாமல், படுக்க பாய் இல்லாமல், தின்னச் சோறு இல்லாமல் – தூங்க ஒரு வீடு இல்லாமல், மழையில், வெயிலில் அங்கே அனாதைகளாய், அபலைகளாய் அந்த நாட்டிலேயே வாழ முடியாமல் இந்தியாவிற்கு அனாதைகளாக வருகின்ற அந்தக் காட்சியெல்லாம் நம் கண்முன்னே தெரிகிறது. அந்தக் கண்ணீர் துடைக்கப்பட வேண்டும். நாம் நம்முடைய கண்ணீரைத் துடைத்துக் கொள்கின்ற காலம் வெகுவிரைவிலே வரவேண்டும். அந்தக் காலம்தான் இலங்கையிலே அமைதி ஏற்பட்டது, என்ற செய்தி வருகின்ற காலம்.

அந்தக் காலத்தைக் கொண்டு வருகின்ற வழியாக இன்றைக்கு திறக்கப்பட்டுள்ள இராஜீவ்காந்தி சாலை என்கின்ற இந்த வழி அமையட்டும். இந்த வழியாக அந்த அமைதி வரட்டும். இந்தச் சாலையிலே பஸ்கள் ஓடும், பேருந்துகள் ஓடும், கார்கள் ஓடும், வண்டிகள் ஓடும், மக்கள் நடமாடுவார்கள் என்பது மாத்திரமல்ல, இந்த இராஜீவ் காந்தி வழியிலே இந்தியாவே மகிழ்ச்சியடையக் கூடிய அளவிற்கு இலங்கைக்கு அமைதி வரட்டும், அதைத்தான் என்னுடைய வேண்டுகோளாக, என்னுடைய விருப்பமாக, என்னுடைய விழைவாக, என்னுடைய ஆசையாக இங்கு வெளியிட்டு இந்த விழாவிலே உங்களையெல்லாம் சந்தித்தமைக்காக நன்றி கூறி விடைபெறுகிறேன். ❖

# ரூ.750 கோடி செலவில் 4ஆவது கட்டமாக இலவச வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகள் வழங்க அரசு முடிவு



15.9.2006 அண்ணா பிறந்த நாளன்று தொடங்கப்பட்ட இலவச வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகள் வழங்கும் திட்டத்தின்கீழ், இதுவரை மூன்று கட்டங்களில் 1,517 கோடியே 87 இலட்சத்து 50 ஆயிரம் ரூபாய் செலவில் 62 இலட்சத்து 80 ஆயிரம் ஏழைக் குடும்பங்களுக்கு வழங்கப்படும் இலவச வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகள் வழங்கிட அனுமதிக்கப்பட்டு, இதுவரை 1,266 கோடியே 17 இலட்சத்து 4 ஆயிரத்து 222 ரூபாய் செலவில் 51 இலட்சத்து 34 ஆயிரத்து 326 ஏழைக் குடும்பங்களுக்கு இலவச வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகள் வழங்கப்பட்டுள்ளன; தொடர்ந்து வழங்கப் படுகின்றன.

நான்காம் கட்டமாக தற்போது நடப்பு ஆண்டில் மேலும் 750 கோடி ரூபாய் செலவில் இலவச வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகள் வழங்கிட தமிழக அரசு முடிவு செய்தது.

அதனடிப்படையில், மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் தலைமையிலான சட்டமன்றக் கட்சிகளின் பிரதிநிதிகள் குழுவின் முன்னிலையில் 15.10.2008 அன்று வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகள் கொள்முதல் செய்வதற்கான உலகளாவிய ஒப்பந்தப்புள்ளிப் பெட்டிகள் திறக்கப்பட்டன. முதல் நிலை ஆய்வுக்குப்பின் ஒப்பந்தப்புள்ளிகளை அளித்த 19 நிறுவனங்களும் அடுத்தக்கட்டமான தொழில்நுட்ப மதிப்பீடு நிலைக்குத் தகுதி பெற்றதாக மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் தலைமையிலான சட்டமன்ற கட்சிகளின் பிரதிநிதிகள் அடங்கி குழு முடிவு செய்தது.

தொழில்நுட்ப மதிப்பீட்டில் ஒப்பந்தப்புள்ளி நிபந்தனைகளை முழுவதும் நிறைவு செய்த 17 நிறுவனங்கள், அடுத்த கட்டமான விலைப்புள்ளிகளைத் திறக்கும் கட்டத்திற்குத் (Price Bid) தகுதி பெற்றன. ஒப்பந்தப்புள்ளி நிபந்தனைகளை நிறைவு செய்யாத இரண்டு நிறுவனங்கள் நிராகரிக்கப் பட்டன.

4.11.2008 அன்று மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் தலைமையிலான சட்டமன்றக் கட்சிகளின் பிரதிநிதிகள் அடங்கிய குழு தலைமைச் செயலகத்தில் மீண்டும் கூடியது. இக்கூட்டத்தில், தகுதிபெற்ற 17 ஒப்பந்ததாரர்களின் விலைப்புள்ளி உறைகள் மாண்புமிகு முதலமைச்சர், சட்டமன்றக் கட்சிகளின் பிரதிநிதிகள் குழு உறுப்பினர்கள், ஒப்பந்ததாரர்கள் மற்றும் ஒப்பந்த தாரர்கள் பிரதிநிதிகளின் முன்னிலையில் திறக்கப்பட்டன. குறைந்தபட்ச விலைப்புள்ளியான ரூ.2,321/–ஐ அளித்த திருவாளர்கள் பீ.ஜீ.இன்டர்நேஷனல் நிறுவனத்தினரிடம் தொழில் நுட்ப வல்லுநர்குழு பேச்சு வார்த்தை நடத்தி, தொலைக்காட்சிப் பெட்டிக்கான இறுதி விலையை நிர்ணயம்



செய்தபின் மற்ற ஒப்பந்ததாரர்களிடம் இறுதி விலைப்புள்ளிக்கு தொலைக்காட்சிப் பெட்டிகளை வழங்க ஒப்புதல் பெற்று, எந்தெந்த நிறுவனங்களிடமிருந்து எவ்வளவு கொள்முதல் செய்யலாம் என்பது குறித்து அடுத்த கூட்டத்தில் முடிவு செய்யலாம் என்றும், இக்கூட்டம் 5.11.2008 அன்று காலை 11.30 மணிக்கு நடத்தப்படலாம் என்றும் தீர்மானிக்கப் பட்டது.

இதனைத் தொடர்ந்து தொழில் நுட்ப வல்லுநர் குழு, குறைந்த விலையை அளித்துள்ள திருவாளர்கள் பீ.ஜீ. இன்டர்நேஷனல் நிறுவனத்தினரிடம் முதலில் பேச்சுவார்த்தை நடத்தியது. இந்நிறுவனம், ஏற்கெனவே மிகக் குறைவான விலைப்புள்ளி கொடுத்திருப்பதால் மேலும் விலையைக் குறைக்க இயலாது என்று தெரிவித்துவிட்டனர்.

இதன் அடிப்படையில் மற்ற ஒப்பந்ததாரர்களை அழைத்து இதே விலைக்கு அவர்களும் வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகளை வழங்க இயலுமா என்று கேட்டபோது, 2 (இரண்டு) நிறுவனத்தினர், அதாவது, எம்.ஐ.ஆர்.சி. எலக்ட்ரானிக்ஸ் லிமிடெட் மற்றும் எல்.பி. எலக்ட்ரானிக்ஸ் லிமிடெட் ஆகியோர் மறுத்துவிட்டனர்.

எஞ்சிய 14 (பதினான்கு) நிறுவனங்களான, வீடியோகான் இன்டஸ்ட்ரீஸ் லிமிடெட், பெல்டெக் (இந்தியா) லிமிடெட், ஜீன்ஸ் எலக்ட்ரோடெக் லிமிடெட், மல்கோத்ரா எலக்ட்ரானிக்ஸ் பிரைவேட் லிமிடெட், டிக்சன் டெக்னாலஜீஸ் (இந்தியா) பிரைவேட் லிமிடெட், க்ளியர் விஷன் இன்டஸ்ட்ரீஸ், ஏர்விஷன் இந்தியா பிரைவேட் லிமிடெட், கெவின் இன்போடெக் பிரைவேட் லிமிடெட், டொங்குவான் யாங்கு எலக்ட்ரானிக்ஸ் கம்பெனி லிமிடெட், சீனா, சலோரா இன்டர்நேஷனல் லிமிடெட், ஈஸ்ட் இந்தியா டெக்னாலஜிஸ் பிரைவேட் லிமிடெட், சன்டெக் விஷன், கிச்சன் அப்ளையன்சஸ் இந்தியா லிமிடெட், டிரென்ட் எலக்ட்ரானிக்ஸ் லிமிடெட் ஆகியோர் ஒரு வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிக்கு குறைந்த இறுதி செய்யப்பட்ட விலைப்புள்ளியான ரூ.2,321/–க்கு வழங்க ஒப்புக் கொண்டுள்ளனர்.

இதனைத் தொடர்ந்து 5.11.2008 அன்று இக்குழுவின் கூட்டம் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் கலைஞர் மு.கருணாநிதி அவர்கள் தலைமையில் தலைமைச் செயலகத்தில் நடைபெற்றது. இதில் மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை அமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின், சட்டமன்றக் கட்சிகளின் தலைவர்கள் டி. சுதர்சனம் (காங்கிரஸ்), சி. கோவிந்தசாமி (இந்தி கம்யூனிஸ்ட்–மார்ச்சிஸ்ட்), வை. சிவபுண்ணியம் (இந்திய கம்யூனிஸ்ட்), எச். அப்துல் பாசித், (இந்திய யூனியன் முஸ்லீம் லீக்) சட்டமன்ற உறுப்பினர்கள், மு. ஜெகன் மூர்த்தி (புரட்சி பாரதம்) மற்றும் து. ரவிக்குமார் (விடுதலை சிறுத்தைகள்) ஆகியோர் கலந்து கொண்டனர்.

இக்குழு கூட்டத்தில் ஒரு வண்ணத் தொலைக்காட்சி பெட்டியின் விலை ரூ.2,321/– என்ற அடிப்படையில்,

பீ.ஜீ. இன்டர்நேஷனல் நிறுவனத்திடமிருந்து 5 இலட்சம் தொலைக்காட்சிப் பெட்டிகளும்

2) க்ளியர் விஷன் இன்டஸ்ட்ரீஸ் நிறுவனத்திடமிருந்து 1 இலட்சம் தொலைக்காட்சிப் பெட்டிகளும்

3) கெவின் இன்போடெக் பிரைவேட் லிமிடெட் நிறுவனத்திடமிருந்து 75 ஆயிரம் தொலைக்காட்சிப் பெட்டிகளும்

4) சலோரா இன்டர்நேஷனல் லிமிடெட் நிறுவனத்திடமிருந்து 1 இலட்சம் தொலைக்காட்சிப் பெட்டிகளும்

5) சன்டெக் விஷன் நிறுவனத்திடமிருந்து 50 ஆயிரம் தொலைக்காட்சிப் பெட்டிகளும்

6) டொங்குவான் யாங்கு எலக்ட்ரானிக்ஸ் கம்பெனி லிமிடெட் நிறுவனத்திடமிருந்து 1 இலட்சத்து 87 ஆயிரத்து 500 தொலைக்காட்சிப் பெட்டிகளும்

7) வீடியோகான் இன்டஸ்ட்ரீஸ் லிமிடெட் நிறுவனத்திடமிருந்து 5 இலட்சம் தொலைக்காட்சிப் பெட்டிகளும்,

8) டிக்சன் டெக்னாலஜிஸ் (இந்தியா) பிரைவேட் லிமிடெட் நிறுவனத்திடமிருந்து 5 இலட்சம் தொலைக்காட்சிப் பெட்டிகளும்,

9) ஏர்விஷன் இந்தியா பிரைவேட் லிமிடெட் நிறுவனத்திடமிருந்து 5 இலட்சம் தொலைக்காட்சிப் பெட்டிகளும்

10) கிச்சன் அப்ளையன்சஸ் இந்தியா லிமிடெட் நிறுவனத்திடமிருந்து 2 இலட்சம் தொலைக்காட்சிப் பெட்டிகளும்

11) ஜீனஸ் எல்க்ட்ரோடெக் லிமிடெட் நிறுவனத்திடமிருந்து 2 இலட்சத்து 50 ஆயிரம் தொலைக்காட்சிப் பெட்டிகளும்

12) ஈஸ்ட் இந்தியா டெக்னாலஜிஸ் பிரைவேட் லிமிடெட் நிறுவனத்திடமிருந்து 5 இலட்சம் தொலைக்காட்சிப் பெட்டிகளும்

13) பெல்டெக் (இந்தியா) லிமிடெட் நிறுவனத்திடமிருந்து 4 இலட்சம் தொலைக்காட்சிப் பெட்டிகளும்

14) டிரென்ட் எலக்ட்ரானிக்ஸ் லிமிடெட் நிறுவனத்திடமிருந்து 2 இலட்சம் தொலைக்காட்சிப் பெட்டிகளும்

15) மல்கோத்ரா எலக்ட்ரானிக்ஸ் பிரைவேட் லிமிடெட் நிறுவனத்திடமிருந்து 1 இலட்சம் தொலைக்காட்சிப் பெட்டிகளும்,

ஆக நான்காம் கட்டத்தில் இலவச வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகள் வழங்கும் திட்டத்திற்காக மொத்தம் 41 இலட்சத்து 62 ஆயிரத்து 500 வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகளுக்கான கொள்முதல் செய்வதென அன்றைய கூட்டத்தில் ஒரு மனதாக முடிவு செய்யப்பட்டுள்ளது என மாண்புமிகு தமிழக முதலமைச்சர் கலைஞர் அவர்கள் அறிவித்துள்ளார்.

❖ ❖ ❖

# மகளிர் சுயஉதவிக் குழுவினர் திறமையாகவும் வெற்றிகரமாகவும் செயல்படுகிறார்கள்

## மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பாராட்டு




சிறப்பாகச் செயலாற்றும் மகளிர் சுயஉதவிக் குழுக்களுக்கு
மணிமேகலை விருதும் - 3 ஆயிரம் சுயஉதவிக் குழுக்களுக்கு சுழல்நிதியும் வழங்கும் விழா
25.11.2008 அன்று, சென்னைப் பல்கலைக்கழக நூற்றாண்டு விழா மண்டபத்தில்
மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை அமைச்சர்
திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையில் நடைபெற்றது.
இவ்விழாவில் மாண்புமிகு முதலமைச்சர் **கலைஞர் மு.கருணாநிதி** அவர்கள்
ஆற்றிய உரை :-

**த**மிழகம் எப்படியெல்லாம் வளர்ந்திருக்கிறது, எப்படியெல்லாம் உயர்ந்திருக்கிறது என்பதை இங்கே உரையாற்றிய அரசின் உள்ளாட்சித் துறையின் முதன்மைச் செயலாளர் நண்பர் ஷெட்டி அவர்கள் எடுத்துக் கூறினார்கள். தமிழகம் உயர்ந்திருக் கிறதோ இல்லையோ, அசோக் வர்தன் ஷெட்டியின் தமிழ் உயர்ந்திருக்கிறது என்பதை அவருடைய வரவேற்புரையிலிருந்து, கருத்துரையிலிருந்து நான் புரிந்து கொண்டேன். அவ்வளவு தெளிவான உரையை அவர் இங்கே ஆற்றியிருக்கிறார்.

ஷெட்டி அவர்கள் பேசும் போது, தம்பி ஸ்டாலின் அவர்களைப் பற்றிக் குறிப்பிடும்போது, இலக்கணத் திலிருந்து வெண்பா, கலிப்பா, ஆசிரியப்பா என்றெல்லாம் பல பாக்களைச் சொல்லிப் பாராட்டினார். நான் அப்போது ஸ்டாலினிடம் சொன்னேன், ஏ, அப்பா, உன்னைப் பற்றி எத்தனைப் பா என்றேன். என்னைப் பொறுத்தவரையில் – வெண்பாவும் அல்ல, கலிப்பாவும் அல்ல, ஆசிரியப்பாவும் அல்ல, நான் விருத்தப்பா. இப்போது வெண்பாக் களுக்கும், கலிப்பாக்களுக்கும், ஆசிரியப்பாக்களுக்கும் வழி விடுகின்ற விருத்தப்பாவாகத் தான் இங்கே வந்திருக்கிறேன் என்பதை உங்களுக்கு நான் குறிப்பிட விரும்புகிறேன்.

### பாராட்டு

இந்த விழா என்னுடைய நினைவு களை 1989 ஆம் ஆண்டுக்குத் துரத்துகின்ற வகையிலே அமைந்துள்ள விழாவாகும். தருமபுரி மாவட்டத்தில் இந்த ஆட்சியில் 1989 ஆம் ஆண்டில் தொடங்கப்பட்ட சீரிய, சிறப்பான திட்டம்தான் மகளிருக்கான சுய உதவிக் குழுக்களைத் தோற்றுவித்த திட்டமாகும். அதைத் தோற்றுவித்த காரணத்தால், அதனுடைய தொடர் வளர்ச்சியைத் தொடங்கிய முதல் இன்று வரையிலே நான் கவனித்துக் கொண்டிருக்கிறேன். அதற்கு இன்றைக்கு 'மணிமேகலை விருது' வழங்குகின்ற அளவிற்கு பெருமையும் மாண்பும் உருவாகியிருக்கின்றது என்பதை அறியும்போது இந்த மாண்பினையும், பெருமையையும் உருவாக்கியது நம்முடைய உள்ளாட்சித்துறை அமைச்சர் தம்பி ஸ்டாலின் என்பதையும், அவருக்குத் துணையாக இருக்கின்ற ஷெட்டி போன்ற அதிகாரிகள் என்பதையும் நான் எண்ணிப்பார்த்து, நான் அவர்களையெல்லாம் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இங்கே நான் வந்து அமர்ந்தது முதல் இதுவரையிலே பேசியவர்கள், பேச்சைப் படித்தவர்கள், வாழ்த்திய வர்கள் அத்தனை பேருடைய நாவிலும் நடனமாடிய ஒரு சொல் – இலட்சக்கணக்கில், கோடிக் கணக்கில் – என்பதுதான். இப்படி லட்சக்கணக்கிலே, கோடிக் கணக்கிலே பணம் புழங்கிக் கொண்டிருக்கின்ற இடமாக, இந்த இடம் மாறியதற்குக் காரணமே, பணத்தை வைக்க வேண்டியவர் வைத்து, கொடுக்க வேண்டிய இடத்திலே கொடுத்து, பெற வேண்டிய நேரத்திலே பெற்று, அதைப் பாதுகாக்கின்ற அமைப்பாக இந்த மகளிர் சுய உதவிக் குழுக்கள் என்ற அமைப்புகள் இன்றையதினம் இருக்கின்றன. இதே முறையில் இதே வகையில், இதே நிலையில், இதே கட்டுப்பாட்டுகளோடு, சட்டதிட்டங் களோடு, விதிமுறைகளோடு தம்பி ஸ்டாலின் பேசும்போது குறிப்பிட்டதைப்போல – ஆடவர் பங்கு பெறுகிற திட்டமாக இது அமைந்திருக்குமேயானால், பல சோடை சொத்தைகள் ஏற்பட்டிருக்கக் கூடும். ஆனால் இது பெண்களுடைய சுய உதவிக் குழுக்களாக அமைந்து, அவர்கள் பாடுபட்டுப் பணியாற்றி, அக்கறையோடு, ஆர்வத்தோடு அவர்கள் இந்தக் காரியத்திலே ஈடுபடுகிற காரணத்தால் பணம் பத்திரமாகவும் இருக்கிறது, பாதுகாப்பாகவும் இருக்கிறது. தன்னைப் பெருக்கிக் கொள்கிற அளவிற்கு வளர்கின்ற அளவிற்கு வளர்ச்சி பெற்று வருகிறது என்பதை நான் அறிந்து இந்தத் தாய்மார்களை யெல்லாம் மிக மிகப் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மகளிர் சுய உதவிக் குழுக்கள் – இன்றைய நிகழ்ச்சியைப் பொறுத்த வரையில் ஒரு ஐந்து இடங்களில் – கூட்டமைப்புகளில் – மணிமேகலை விருது என்று வழங்கப்பட் டிருக்கின்றது. ஒவ்வொரு விருதும் ஒரு இலட்ச ரூபாயோடு இணைத்து வழங்கப்படுகின்ற விருதுத் தொகை என்பது சிறப்புக்குரிய ஒன்றாகும். ஆர்வத்தை, அக்கறையைத் தூண்டக் கூடிய ஒன்றாகும்.



## அண்ணாவின் பொன்மொழி

### பெண் கல்வி வேண்டும்!

பெண் கல்வி நாட்டில் எந்த அளவுக்கு உயருகிறதோ, அந்த அளவு நாடு மேம்பாடு அடைகிறது என்று பொருள். படித்த ஆண்கள் தவறான வழியில் செல்லும்போது படிப்பு வாசனையற்ற பெண்கள் அவர்களைச் சரியான வழிக்குத் திருப்பி விடுகிறார்கள். இந்தக் குடும்ப அறிவை எந்தப் பள்ளியிலும் பயிலாமலே அவர்கள் கற்றுக்கொண்டிருக்கிறார்கள்.




இந்த ஐந்து முக்கியமான விருதுகளை மணிமேகலை விருதுகளைப் பெற்றவர்களுக்கு ஒரு இலட்ச ரூபாய் வீதம் வழங்கப்பட்டதில், அதனைப் பெற்றவர்கள் எந்தெந்த ஊர்க்காரர்கள் என்று பார்த்தேன். திருவாரூர் மாவட்டம் – திருவாரூர் மாவட்டம் யாருடைய மாவட்டம் என்பது உங்களுக்குத் தெரியும், எங்கள் மாவட்டம். திருவாரூர் மாவட்டத்திற்கு மாத்திரமல்ல, அடுத்து விருது பெற்றது, காஞ்சிபுரம் மாவட்டம், அடுத்து விருது பெற்றது விருதுநகர் மாவட்டம், திருவாருர் மாவட்டம், கருணாநிதி பிறந்த மாவட்டம் – காஞ்சிபுரம் மாவட்டம், கருணாநிதியை ஆளாக்கிய அண்ணா பிறந்த மாவட்டம் – விருதுநகர் மாவட்டம் எங்களுக்கு முன்பிருந்து அரசு புரிகின்ற இலக்கணத்தைக் கற்பித்த பெருந்தலைவர் காமராஜர் பிறந்த மாவட்டம் இப்படி மூன்று தலைவர்கள் பிறந்த மாவட்டங்களில் இந்தத் திட்டம் செழிப்புற வளர்ந்து, ஐந்து கூட்டமைப்புகள் மணிமேகலை விருதைப் பெற்றிருப்பதற்காக நான் அவர்களுக்கெல்லாம் என்னுடைய பாராட்டுகளை வழங்கக் கடமைப் பட்டிருக்கிறேன்.

இந்த நிலை எப்படி வந்தது? சுய உதவிக் குழுக்கள் அதிலும் குறிப்பாக மகளிர் சுயஉதவிக் குழுக்கள் – அவர்கள் திறமையாகச் செயல்படுவார்களா என்ற அய்யப் பாடு இருந்தாலுங் கூட – அதையும் மீறி செயல்படுவார்கள் என்ற நம்பிக்கை பிறந்து, அந்த நம்பிக்கை வெற்றிகரமாக இன்றைக்குச் செயல் படுகிறார்கள் என்ற செய்தியை நமக்குச் சொல்கிறது என்றால், இதற்கு நான் எப்படி 89 ஆம் ஆண்டு, தருமபுரியில் இந்த சுய உதவிக் குழுக்கள் அமைவதற்கு நான் இருந்த, நான் நடத்திய ஆட்சி காரணமாக அமைந்ததோ, அதைப் போலத்தான் இந்தியாவில் வங்கிகளை தேசியமயமாக ஆக்குகின்ற இந்தத் திட்டமும், திராவிட முன்னேற்றக் கழகத்தி னுடைய தூண்டுதலால்தான் – கோரிக்கையால்தான் ஏற்பட்டது என்பதை நினைவுபடுத்த விரும்புகிறேன்.

**வங்கிகள் தேசிய மயம்**

இன்றைக்கு சுய உதவிக் குழுக்களால் ஆதாயம் பெறுகின்ற யாராக இருந்தாலும், அவர்கள் மகளிராக இருந்தாலும், அந்த மகளிருக்கு உதவிகளைச் செய்கின்ற வங்கித் தலைவர்கள், வங்கி நிருவாகிகளாக இருந்தாலும் அவர்கள் எல்லாம் மறந்து விடாமல் நினைவிலே வைத்துக் கொள்ள வேண்டிய ஒன்று – 1969 ஆம் ஆண்டு என்னுடைய தலைவர் அறிஞர் அண்ணா அவர்கள் முதலமைச்சராகப் பொறுப்பேற்றி ருந்து, மறைந்த பிறகு, அந்தப் பொறுப்பு என்னுடைய தோளிலே சுமத்தப்பட்டது. நான் முதன் முதலாக டெல்லிப் பட்டிணத்திற்கு – அங்கே நடைபெற்ற முதல் அமைச்சருடைய மாநாட்டிற்குச் சென்றிருந்தேன். அப்போது அந்த மாநாட்டிற்குத் தலைமை வகித்தவர், இந்தியாவின் பிரதமர், அன்னை இந்திரா காந்தி அம்மையார் அவர்கள்: அப்போது துணைப் பிரதமராக இருந்தவர் மொரார்ஜி தேசாய். அந்த மாநாட்டிலே நான் பேசும்போது குறிப்பிட்டேன், சேலம் இரும்பாலை, சேது சமுத்திரத் திட்டம் – இவைகள் எல்லாம் எங்கள் தமிழ்நாட்டிற்குத் தேவை என்பதைக் குறிப்பிட்டுவிட்டு, பொதுவான பொருளாதாரத் திட்டங்களைப் பற்றி அந்த முதல் அமைச்சர்கள் மாநாட்டிலே பேசும்போது, நான் உறுதிபடச் சொன்னேன் – நீங்கள் இந்தியாவிலே இருக்கின்ற பெரிய வங்கிகளையெல்லாம் தேசிய மயமாக ஆக்குங்கள், அப்படிச் செய்தால் ஏழையெளியவர்களுக்கு பணம் கிடைக்கும், கடன் கிடைக்கும், உழவர்களுக்கு, வணிகர்களுக்கு, நடுத்தர மக்களுக்கு, சாமானியர் களுக்கு, சாதாரணமானவர்களுக்கு சுலபமாக கடன் கிடைக்கும், அந்தக் கடனும் ஒழுங்காக வந்து சேரும், பயத்தோடு வந்து சேரும், பாசத்தோடு வந்து சேரும், நன்றி உணர்வோடு திரும்பக் கிடைக்கும், ஆகவே நீங்கள் வங்கிகளை தேசியமயமாக ஆக்க வேண்டும் என்ற திட்டத்தை அன்றைக்கு அறிவித்தேன். அந்த முதலமைச்சர்களுடைய மாநாட்டில் மேற்கு வங்கத்தின் முதலமைச்சர் அஜாய் முகர்ஜியும் அமர்ந்திருந்தார். அந்த மாநிலத்தின் துணை முதல் அமைச்சர் தோழர் ஜோதிபாசும் வந்திருந்தார். அவர்கள் யாரும் எழுப்பாத இந்தக் குரலை அண்ணாவின் தம்பியாகிய நான்தான் அன்றையதினம் அந்த மாநாட்டிலே – முதலமைச்சர்கள் மாநாட்டிலே எழுப்பினேன். அதை இந்திரா காந்தி அம்மையார் ஏற்றுக் கொள்வது போல தலையசைத்து புன்னகை புரிந்து ஆமோதித்து வரவேற்கின்ற முக ஜாடையையும், காட்டினார். ஆனால் அவருக்குப் பக்கத்திலே இருந்த மொரார்ஜி தேசாய் அவர்கள், துணைப் பிரதமர் ஏற்றுக் கொள்ளவில்லை மறுத்துப் பேசினார். நான் முதல் நாள் பேசியது, மறுநாள் காலையிலே, டெல்லியிலே உள்ள தினசரிப் பத்திரிகைகள் ஆங்கிலம் மற்றும் இந்திப் பத்திரிகைகளிலேயும் தலைப்புச் செய்தியாக – தமிழ்நாடு முதலமைச்சர் வங்கிகளை தேசிய மயமாக ஆக்க வேண்டும் என்று வற்புறுத்தினார் – என்று வெளியிட்டிருந்தார்கள். அதற்கு அடுத்த நாள்தான், பேசுவதற்கு மீண்டும் ஒரு முறை நேரம் கேட்டுப் பெற்று – தோழர் ஜோதிபாசு அவர்கள், முதல்நாள் அஜாய் முகர்ஜி, மேற்கு வங்கத்தின் முதலமைச்சர் பேசாததை, இவர் பேசியபோது, நான் பேசியதை வழிமொழிவதைப்போல பேசினார். அதற்குப் பிறகு, சில மாதங்களுக்குப் பிறகு இந்திரா காந்தி அம்மையார் வங்கிகளை தேசியமயமாக ஆக்கி ஆணை பிறப்பித்தார்கள்.

இன்னும் உங்களுக்கு ஞாபகப்படுத்த வேண்டுமேயானால் – இந்திரா காந்தி அம்மையார் அவர்களை முதன் முதலாக முதலமைச்சராகப் பொறுப்பேற்ற நான், தமிழகத்திற்கு அழைத்து குறிப்பாக தலைநகரம் சென்னைக்கு அழைத்து ராஜாஜி மண்டபத்து வாயிற்புறத்திலே பேச வைத்து, 14 வங்கிகளை தேசிய மயமாக்கினார்கள் என்பதற்காக 14 பொருட்களை, தமிழகத்திலே கிடைக்கக் கூடிய சின்னங்களை, மாமல்லபுரம் கோயில், நடராஜர் சிலை என்று இப்படி 14 பொருட்களை இந்திரா காந்தி அம்மையாருக்கு, 14 வங்கிகளை தேசியமய மாக்கினார் என்பதற்கு அடையாளமாக பரிசாகத் தந்தவன் இந்தக் கருணாநிதி தான் என்பதை உங்களுக்கு நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஏன் இதைச் சொல்கிறேன் என்றால், என்னைப் பெருமைப் படுத்திக் கொள்வதற்காக அல்ல. இதற்கு மூலவேர், பணம் புழங்க, ஏழைகளுக்கு தங்கள் கைகளிலே கடன் கிடைக்க, சாதாரணமான



## அண்ணாவின் பொன்மொழி

### தமிழ்

தமிழைத் தக்க முறையில் பயன்படுத்தும் பணியில் அரசுத் துறையினர் மட்டுமல்ல வேறுபல துறைகளைச் சேர்ந்தவர்களும் மும்முரமாக ஈடுபட்டிருப்பது தமிழுக்கு நல்ல எதிர்காலம் இருக்கிறது என்பதையே காட்டுகிறது.

– அறிஞர் அண்ணா

வர்கள், பாட்டாளிகள், உழைப்பாளி கள் இவர்கள் எல்லாம் பல தொழில்களை நடத்த, வசதியுடன் காரணம் – அந்த மூலக் காரணத்திற்கு மூலமாக இருந்தது முன்னேற்றக் கழகம் என்பதற்காகத்தான் இதைச் சொல்கிறேன்.

இப்போது சில பேர் சொல்லக் கூடும் – கருணாநிதி பிற்போக்கு வாதி, கருணாநிதிக்கு கம்யூனிசம் தெரியாது, கருணாநிதிக்கு சமதர்மம் தெரியாது, கருணாநிதிக்கு சமத்துவக் கொள்கை புரியாது, எல்லாவற்றையும் நாங்கள்தான் நாட்டிலே சமைத்து பரிமாறிக் கொண்டிருக்கிறோம் என்று சொல்லலாம். சமைக்கத் தெரியும் அவர்களுக்கு, இல்லை என்று சொல்லவில்லை. ஆனால் பரிமாறத் தெரியாது. யாருக்குப் பரிமாற வேண்டும், முதலில் எப்படி சமைக்க வேண்டும் என்ற அந்தக் கலை தெரிந்து அதைச் சமைத்துப் பரிமாறிய பெருமை திராவிட முன்னேற்றக் கழக அரசுக்குத்தான் முதன் முதலாக உண்டு. 1969 ஆம் ஆண்டிலேயே அதற்கு வழிகாட்டி, அன்னை இந்திரா காந்தி இடத்திலே வலியுறுத்தி, மொரார்ஜி தேசாய் மறுத்தும் கூட, அதற்கு இடம் தராமல், முதன் முதலாக இந்தியாவிலே வங்கிகளை தேசிய மயமாக ஆக்கிய அந்தப் பெருமை, அதற்குக் காரணமாக இருந்த பெருமை, திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிக்கு உண்டு என்பதற்காகத் தான் இதை நான் சொன்னேனே அல்லாமல் வேறல்ல.

இப்படி மக்கள் பணம் இது – வங்கியிலே இருக்கின்ற பணம் என்றால் – அது மக்கள் பணம். மக்களுக்காகச் செலவழிக்கப்பட வேண்டிய பணம். மக்களுடைய தேவைகளுக்காக – அவர்களை வாழ வைப்பதற்காக பயன்படுத்தப்பட வேண்டிய பணம். அதை ஒழுங்குற, செம்மையுறப் பயன்படுத்துகின்ற நிலைக்கு ஒரு வழிகாட்டியாக அமைந்து இருப்பதுதான் சுய உதவிக் குழுக்கள்.

இந்தச் சுய உதவிக் குழுக்களின் சார்பாக வழங்கப் படுகின்ற விருதுக்கு என்ன பெயர் வைக்கலாம் என்று தம்பி ஸ்டாலினும் அதிகாரிகளும் கேட்டார்கள். நல்ல முறையில் செயல்படுகின்ற மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு பரிசுகள் வழங்கப்போகிறோம், அந்த விருதுகளுக்கு என்ன பெயரிடலாம் என்றார்கள். பொதுவாக நான் வீட்டிலிருந்து வெளியே வரும்போதோ, அல்லது அலுவலகத்திற்குச் செல்லும் போதோ என்னிடம் குழந்தைகளைத் தூக்கிக் கொண்டு வந்து காட்டி பெயர் வையுங்கள் என்று தாய்மார்கள் கேட்பது வழக்கம். அதைப்போல இந்தச் சுய உதவிக் குழுக்களுக்கு வழங்கப்படும் விருதுகளுக்கு என்ன பெயர் என்று கேட்டார்கள்.

நான் அப்போது சொன்னேன் – பெண்களிலே தனக்கென்று – தன்னுடைய சுகத்தைப் பற்றிக் கவலைப்படாமல் – தன்னுடைய வாழ்க்கையைப் பற்றிக் கவலைப் படாமல் – பிறரை வாழவைக்க – அதிலும் குறிப்பாக ஏழையெளியோரை வாழவைக்கப் பாடுபட்ட பெண்மணி மணிமேகலைதான், அந்த மணி மேகலையின் பெயரை வையுங்கள் என்று நான் சொன்னேன். அந்தப் பெயரை வைத்து இன்றைக்கு மிகச் சிறப்பாக மாப்புகழ் கொண்ட மணிமேகலையினுடைய சிறப்பு மேலும் ஓங்குகிற அளவிற்கு இந்த அரசின் சார்பாக தம்பி ஸ்டாலினும், அவருடைய அதிகாரிகளும் சிறப்பாக ஒரு நிகழ்ச்சியை ஏற்பாடு செய்து, தக்கவர்களுக்கெல்லாம் இந்த விருதினை வழங்கியமைக்காக என்னுடைய பாராட்டுகளையும், மகிழ்ச்சியையும், வாழ்த்துகளையும் வழங்கி விடைபெறுகிறேன்.

* * *



## அண்ணாவின் பொன்மொழி

### அயல்நாட்டுப் பயணம்–ஏன்?

பக்கத்து வீட்டுக்காரன் எப்படி இருக்கிறான் என்பதைக் கூடத் தெரிந்துகொள்ளாதது பழைய காலப்பழக்கம். இன்று நெடுந்தூரத்து நாடுகளானாலும் அங்கே மக்கள் எப்படி வாழ்கிறார்கள் என்பதை நேரில் தெரிந்துகொள்ள விழைகிறோம். அந்த நாட்டில் என்னென்ன விந்தைகள் உள்ளன என்பதை அறிய விரும்புகிறோம். அத்தனை ஆர்வம் உள்ளது. அங்கு காணுகின்றவற்றைத் தெரிந்தவகையில் புகுத்தலாம் என்பதை நம்மவர்கள் தெரிந்துகொள்ள இந்த அயல்நாட்டுப் பயணங்கள் துணையாக இருக்கும்.






# இதுவரை 60 இலட்சத்து 63 ஆயிரம் உறுப்பினர்களைக் கொண்டு 3,78,564 சுயஉதவிக் குழுக்கள் உருவாக்கப்பட்டுள்ளன.

மகளிர் சுயஉதவிக் குழுக்களுக்கு மணிமேகலை விருது மற்றும்
சுழல்நிதி வழங்கும் விழாவில் (25.11.2008)
மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை அமைச்சர்
திரு. **மு.க. ஸ்டாலின்** அவர்கள் ஆற்றிய உரை:–

இந்த சிறப்பான விழாவில், 3,000 மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு சுழல் நிதி மானியத்தை நம்முடைய தலைவர் கலைஞர் அவர்கள் பங்கேற்றுள்ள இந்த விழாவிலே வழங்குவதற்கும், அதேபோல நாம் ஆட்சிப் பொறுப்பை ஏற்றதற்குப் பின்னால் சுயஉதவிக் குழுக்களுக்கு சிறப்பான திட்டங்களை, பல்வேறு சலுகைகளை வழங்கவேண்டுமென்று நம்முடைய தமிழக முதல்வர் கலைஞர் அவர்கள் முடிவு எடுத்து, சுய உதவிக் குழுக்களை ஊக்குவிக்க வேண்டும், உற்சாகப்படுத்த வேண்டுமென்ற நல்ல எண்ணத்தோடு அவர்களுக்கு மாவட்ட அளவிலே, வட்டார அளவிலே, கிராம அளவிலே விருதுகளை வழங்கி சிறப்பிக்க வேண்டுமென்று, நம்முடைய துறைக்கு ஆணையிட்டு, அதை நிறைவேற்றுகின்ற வகையில் சென்ற ஆண்டும், இந்த ஆண்டும் மணிமேகலை விருது என்ற சிறப்பான விருதினைத் தொடர்ந்து வழங்கிக் கொண்டிருக்கிறோம்.

## இந்தியாவிலேயே முதலிடம்

நம்முடைய கலைஞர் அவர்களின் கரங்களால், இங்கே மகளிர் சுயஉதவிக் குழுக்களுக்கு விருதுகள் வழங்கப்பட்டிருக்கிறது. மகளிர் சுயஉதவிக்குழு முதன் முதலில் நம்முடைய தமிழகத்தைப் பொறுத்தவரை 1989ஆம் ஆண்டு நம்முடைய தலைவர் கலைஞர் அவர்கள், அன்று முதலமைச்சர் பொறுப்பில் இருந்தபோது, தருமபுரி மாவட்டத்திலே தொடங்கி வைத்தார். தொடங்கி வைத்த நேரத்தில் அன்றைக்கே நம்முடைய முதல்வர் அவர்கள் தெளிவாக எடுத்துக் கூறியிருக்கிறார்கள். இந்த மகளிர் சுய உதவிக் குழுக்கள் தொடங்கப்படுவதன் காரணம் – அரசியல் நோக்கத்தோடு அல்ல, கட்சியினுடைய வளர்ச்சிக்காக அல்லது தேர்தல் நேரங்களில் பயன்படுத்திக்கொள்ள வேண்டுமென்ற நோக்கத்தில் அல்ல. நம்முடைய தாய்மார்கள், சகோதரிகள், மகளிர் சுய உதவிக் குழுக்களில்

தங்களை ஒப்படைத்துக்கொண்டு அவர்கள் தன்னம்பிக்கை பெற்றவர்களாக வாழ்ந்திட வேண்டும், யாரையும் எதிர்பார்க்காமல் அவரவர்கள் சொந்தக் காலிலே நிற்கக் கூடிய ஒரு சூழ்நிலையை பெற்றாக வேண்டும். அவர்களின் வாழ்க்கையினை முறைப்படுத்திக்கொண்டு, அவர்கள் வாழ்ந்து கொண்டிருக்கிற பகுதிகளில், வட்டாரங்களில், அந்தந்த சூழ்நிலைக்கேற்ப அவரவரவர்கள் சிறுசிறு தொழில்களைச் செய்ய, அதற்குத் தேவையான பணம், தேவையான நிதியை வங்கிகளிடமிருந்து குறைந்த வட்டியிலே கடனாகப் பெற்று, அவர்கள் தங்கள் வாழ்க்கையினை வளமாக்கிக்கொள்ள வேண்டும் என்ற நல்ல எண்ணத்தோடு தொடங்கப்பட்ட அமைப்புதான் இந்த மகளிர் சுய உதவிக்குழு.

அப்படிப்பட்ட மகளிர் சுயஉதவிக் குழு படிப்படியாக வளர்ந்து கம்பீரமாக இன்னும் பெருமையோடு சொல்ல வேண்டுமென்று சொன்னால், இந்தியாவிலே இருக்கின்ற முதலிடம் பெற்றுள்ள மாநிலங்களிலே தமிழகமும் இடம் பெற்றிருக்கிறது என்பதைப் பெருமையுடன் தெரிவித்துக்கொள்கின்றேன். இந்த மகளிர் திட்டத்தின்கீழ், இதுவரை 60 இலட்சத்து 63 ஆயிரம் உறுப்பினர்களைக்கொண்டு 3,78,564 சுய உதவிக் குழுக்கள் உருவாக்கப்பட்டுள்ளன.

இவற்றில் 2,64,165 குழுக்கள் ஊரகப் பகுதியிலும், 1,14,399 குழுக்கள் நகரப் பகுதியிலும் செயல்பட்டு வருகின்றன. இன்னும் சிறப்பாகச் சொல்வதென்றால், 5ஆம் முறையாக தலைவர் கலைஞர் அவர்களின் தலைமையில் 2006 ஆம் ஆண்டு ஆட்சிப் பொறுப்பேற்று இரண்டரை ஆண்டுக் காலத்தில், 60 ஆயிரத்து 826 சுயஉதவிக் குழுக்கள் உருவாக்கப்பட்டிருக்கின்றன என்பதை, நான் பெருமையோடு தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றேன். இந்த மகளிர் சுய உதவிக் குழுக்களைப் பொறுத்தவரையில் நம்முடைய மேயர் அவர்கள் எடுத்துச் சொன்னதைப் போல், கடந்த கால ஆட்சி நடைபெற்றபோது, இதே மகளிர் சுயஉதவிக் குழுக்கள் எந்த நிலையில் இருந்தது என்பதை மறந்திருக்க மாட்டீர்கள், ஆனால் 1989ஆம் ஆண்டு மகளிர் சுய உதவிக்குழு தொடங்கி வைக்கப்பட்ட போது சுய உதவிக் குழுக்களுக்கான பயிற்சிக்கான தொகையை தலைவர் கலைஞர் அவர்கள் அன்றைக்கு 45 ரூபாயாக வழங்கினார்கள். ஆனால் கடந்த கால ஆட்சியில் ரூபாய் 45லிருந்து, வெறும் ரூ.7.50 ஆக குறைக்கப்பட்டது. இதனால்தான் 2006ஆம் ஆண்டு ஆட்சிக்கு வருவதற்கு முன்னால், தேர்தலைச் சந்தித்தபோது, தமிழக முதல்வர் கலைஞர் அவர்கள், கழகம் ஆட்சிக்கு வந்தால், எங்களை நம்பி வாக்களித்து எங்களை ஆட்சிப் பொறுப்பில் அமர வைத்தால் என்ன என்ன வாக்குறுதிகளை தேர்தல் நேரத்தில் எடுத்துச் சொல்லப்பட்டதோ, அவைகள் எந்த அளவிற்கு காப்பாற்றப்பட்டிருக்கிறது என்பது உங்களுக்கெல்லாம் நன்றாகத் தெரியும்.

### பல்வேறு சலுகைகள்

மீண்டும் கழகம் ஆட்சிக்கு வந்தால், 89ஆம் ஆண்டு வழங்கப்பட்ட பயிற்சிக்கான கட்டணத்தை மீண்டும் நாங்கள் வழங்குவோம் என்று தேர்தல் நேரத்தில் சொன்னார்கள். ஆட்சிக்கு வந்தார்கள். மீண்டும், தற்போது மகளிர் சுய உதவிக் குழுக்களின் பயிற்சிக்கான கட்டணமாக ரூ.45ஐ தொடர்ந்து வழங்கிக் கொண்டிருக்கின்றார்கள் என்பது உங்கள் அனைவருக்கும் நன்றாகத் தெரியும். அதுமட்டுமல்ல, குழுக்களின் பராமரிப்புத் தொகை, பயிற்சிக்கான காலம் ஆகியவைகள் முறைப்படுத்தப்பட்டு, பல்வேறு சலுகைகள், பல சாதனைகள், நம்முடைய மகளிர் சுயஉதவிக் குழுக்களுக்காக உருவாக்கப்பட்டுக் கொண்டிருக்கிறது.

2006ஆம் ஆண்டு நாம் ஆட்சிப் பொறுப்பை ஏற்பதற்கு முன்னால், சுய உதவிக் குழுக்களிடமிருந்து சுழல் நிதி மானியம் ஊரகப் பகுதிகளிலே இருக்கின்ற குழுக்களுக்கு மாத்திரம் வழங்கப்பட்டது. ஆனால், தலைவர் கலைஞர் அவர்களின் ஆட்சி மீண்டும் வந்தபிறகு, நகர்ப்புற,

**தாய்நாடும் – தாய்மொழி பிறந்தநாடும்**

உலகு எங்கும் தமிழர்கள் பரவி வாழ்கிறார்கள். அவர்கள் எந்த நாட்டில் குடிமக்களாகி வாழ்கிறார்களோ அந்த நாடுதான் அவர்களுடைய தாய்நாடாகும். மலேசிய நாட்டில் வாழும் தமிழ் மக்களாகிய உங்களுக்கு தாய்நாடு மலேசிய நாடுதான். தமிழ்நாடு உங்கள் தாய்மொழி பிறந்தநாடு.

– அறிஞர் அண்ணா



மாநகர் ஆகிய பகுதிகளிலே உள்ள மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கும் சுழல் நிதி மானியத்தை வழங்கவேண்டுமென்று தமிழக முதல்வர் கலைஞர் அவர்கள் எங்களுக்கு ஆணையிட்டு, அதை இன்றைக்கு நிறைவேற்றிக்கொண்டு வருவது உங்கள் அனைவருக்கும் நன்றாகத் தெரியும்.

அது மட்டுமல்ல இந்தத் துறையினுடைய பொறுப்பை நான் ஏற்றுக் கொண்டதற்குப் பின்னால், தமிழகம் முழுவதும் இருக்கின்ற மாவட்டங்களில் சுற்றுப்பயணத்தை மேற்கொண்டு, ஆய்வு நடத்தியபோது, பொதுமக்கள் ஒரு கோரிக்கையை தொடர்ந்து எங்களிடத்தில் எடுத்துச் சொன்னார்கள். அமைச்சர் பெருமக்கள், சட்டமன்ற – நாடாளுமன்ற உறுப்பினர்கள், உள்ளாட்சி மன்றப் பிரதிநிதிகள் ஆகியோர் அனைவரும் அந்தக் கோரிக்கையை தொடர்ந்து சுட்டிக்காட்டினார்கள். தன்னார்வத் தொண்டு நிறுவனங்களைச் சார்ந்தவர்களும் நம்மிடத்திலே மனுக் கொடுத்தார்கள்.

### உடனடியாக நிதி ஒதுக்கீடு

என்னவென்று கேட்டால், இவற்றில் தகுதி பெற்றிருக்கக்கூடிய சுயஉதவிக் குழுக்கள் ஏராளமாக இருக்கிறார்கள். ஆனால், தகுதி பெற்றிருக்கக்கூடிய பல குழுக்களுக்கு இன்னும் பல சுழல்நிதி வரப்பெறவில்லை என்பதுதான். இது தொடர்பாக அதிகாரிகளை வரவழைத்து ஆய்வு மேற்கொண்டு, அது உண்மைதான் என்பதைத் தெரிந்து கொண்டோம். ஏறக்குறைய 1 இலட்சத்து 50 ஆயிரம் குழுக்கள் தகுதி பெற்றிருந்தும் சுழல் நிதி கிடைக்கப்பெற வாய்ப்பு இல்லாமல் இருக்கிறது என்பதை முதலமைச்சர் அவர்களிடம் தெரிவித்தோம். இதற்காக, தலைவர் கலைஞர் அவர்கள் உடனடியாக 150 கோடி ரூபாய் நிதியையும் ஒதுக்கீடு செய்தார்கள் என்பதை நான் இங்கே பெருமையோடு தெரிவித்துக் கொள்கின்றேன்.

**ஏறக்குறைய 1 இலட்சத்து 50 ஆயிரம் குழுக்கள் தகுதி பெற்றிருந்தும் சுழல் நிதி கிடைக்கப்பெற வாய்ப்பு இல்லாமல் இருக்கிறது என்பதை முதலமைச்சர் அவர்களிடம் தெரிவித்தோம். இதற்காக, தலைவர் கலைஞர் அவர்கள் உடனடியாக 150 கோடி ரூபாய் நிதியையும் ஒதுக்கீடு செய்தார்கள்**

இங்கே, இந்தியன் வங்கியின் தலைவர் அவர்கள், தங்கள் வங்கிகள் மூலம் மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு வழங்கப்படும் கடன்கள் அனைத்தும், அதாவது 100க்கு 99 சதவிகிதத்தை அவர்கள் திருப்பிச் செலுத்திக் கொண்டிருக்கின்றார்கள் என்ற மகிழ்ச்சியான செய்தியைத் தெரிவித்தார்கள். 100க்கு 99 சதவிகிதம் பேர் இன்றைக்கு கடனைத் திருப்பிச் செலுத்தி இன்றைக்கு ஒரு பெருமையை, உங்களுக்கு மட்டுமல்ல, ஒட்டுமொத்த தமிழகத்திற்கே நீங்கள் பெருமையைச் சேர்த்துக் கொண்டிருக்கிறீர்கள் என்பதை நான் பெருமையோடு தெரிவித்துக் கொள்கின்றேன்.

### 19 ஆண்டு கால வரலாறு

நம்முடைய தமிழகத்தைப் பொறுத்தவரையில் சொல்லவேண்டுமென்று சொன்னால், இந்தியா முழுவதும் இருக்கக்கூடிய மாநிலங்களுக்கு இன்றைக்கு வங்கிக் கடன்களை வழங்கிக் கொண்டிருக்கிறது. அந்தக் கடன் வழங்கிக் கொண்டிருக்கின்ற கணக்கைப் பார்த்தால், சுமார் 29 இலட்சத்து 25 ஆயிரம் சுய உதவிக் குழுக்களுக்கு 18 ஆயிரத்து 41 கோடி ரூபாயைக் கடனாக வழங்கியிருக்கிறது. இதில் தமிழகத்திற்கு மட்டும் 4 இலட்சம் மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு 4 ஆயிரம் கோடி வரை கடன் வந்துள்ளது என்று சொன்னால், இதனை நீங்கள் ஒப்பிட்டுப் பார்க்க வேண்டும். 4 ஆயிரம் கோடி வரை கடனாக வங்கிகளிலிருந்து இன்றைக்குத் தமிழகம் பெற்றிருக்கிறது என்று சொன்னால் இது 19 ஆண்டு கால வரலாறு.

ஆனால், இந்த இரண்டரை ஆண்டுகளில் மட்டும் 2,000 கோடி ரூபாயை சுய உதவிக் குழுக்காக வங்கிகளிலிருந்து கடனாகப் பெற்றிருக்கிறோம் என்றால், இன்றைக்கு மகளிர் சுயஉதவிக் குழுக்கள் மீது வங்கிகள் வைத்துள்ள அசைக்க முடியாத நம்பிக்கையைத்தான் இது எடுத்துக் காட்டுகின்றது என்பதை நான் இங்கே பெருமையோடு தெரிவித்துக் கொள்ள விரும்புகின்றேன்.

அது மட்டுமல்ல, தேசிய அளவிலே இந்தியன் வங்கியைப் பொறுத்தவரையிலே ஒரு கணக்கு, அதாவது 2 இலட்சத்து 64 ஆயிரத்து 825 சுய உதவிக் குழுக்களுக்கு 1 இலட்சத்து 864 கோடியே 87 இலட்சம் ரூபாய் இந்திய வங்கி கடனாக அளித்துள்ளது. ஆகவே, அதில் தமிழகத்திற்கு மட்டும் 1,159 கோடி ரூபாயைக் கடன் உதவியாக இந்தியன் வங்கி தந்துள்ளார்கள். ஆகமொத்தம் 62 சதவிகிதம் தமிழகத்தில் உள்ள சுயஉதவிக் குழுக்களுக்கு கடன் தந்திருக்கின்றார்கள். மேலும்,

இந்தியன் ஓவர்சீஸ் வங்கியானது இந்தியா முழுவதும் அவர்களால் வழங்கப்பட்டுள்ள கடன் பகுதியில் 48 சதவிகிதம் நம்முடைய தமிழகத்திற்குக் கடனாக வழங்கியிருக்கிறார்கள் என்று சொன்னால் இதைத்தான் நீங்கள் சிறப்பான முறையில் பயன்படுத்திக் கொள்ளவேண்டும்.

அதோடு, நாகப்பட்டினம் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் மற்றும் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் அனைவரும் நம்முடைய தமிழக முதல்வர் அவர்களின் கையால் இன்றைக்கு விருதுகளைப் பெற்றிருக்கிறார்கள் என்றால், அது எதற்கு என்று கேட்டால், சுய உதவிக் குழுக்களுக்கென்று ஒரு கூட்டமைப்பு ஏற்படுத்த வேண்டுமென்று கடந்த ஆண்டு நிதி நிலை அறிக்கையில் எடுத்துச் சொல்லப்பட்டது. ஆக, அந்தக் கூட்டமைப்பினை உருவாக்கியதன் காரணத்தினால், குறிப்பாக முதன் முதலில் நாகை

**இந்த இரண்டரை ஆண்டுகளில் மட்டும் 2,000 கோடி ரூபாயை சுய உதவிக் குழுக்காக வங்கிகளிலிருந்து கடனாகப் பெற்றிருக்கிறோம் என்றால், இன்றைக்கு மகளிர் சுய உதவிக் குழுக்கள் மீது வங்கிகள் வைத்துள்ள அசைக்க முடியாத நம்பிக்கையைத்தான் இது எடுத்துக் காட்டுகின்றது**

தமிழகத்தில் தொடங்கவிருப்பதாகத் தெரிவித்துள்ளார்கள் என்றால் இந்திய வங்கி தமிழகத்தின் மீது அவ்வளவு நம்பிக்கை வைத்துள்ளது. இதற்கு காரணம் மகளிர் சுய உதவிக் குழுவுடைய உங்கள் நோக்கம்தான், உங்கள் எண்ணம்தான், உங்கள் வெற்றிதான் என்று எடுத்துச் சொல்லி, உங்களை அனைவரையும் அன்போடு கேட்டுக் கொள்கிறேன்.



மாவட்டத்திலேயே 5 தொகுதிகளாக இந்த அமைப்புகள் உருவாக்கப்பட்டு பதிவு செய்யப் பட்டுள்ளன. அந்தக் கூட்டமைப்பினால் என்ன பயன் என்று கேட்டால், பாரத ஸ்டேட் வங்கி, இந்தியன் வங்கி, இந்தியன் ஓவர்சீஸ் வங்கி மற்றும் தொடக்க கூட்டுறவு வங்கிகள் மூலம் இந்த வட்ட அமைப்பு களுக்கு அதிக பட்சமாக கடன் வழங்கப்படுகிறது. ஆகவே, இதனை இங்கே வந்திருக்கக்கூடிய நீங்கள் சிறப்பாக பயன்படுத்திக் கொள்ளுமாறு வேண்டிக் கொள்கின்றேன்.

அதுமட்டுமல்ல, இந்தியா முழுவதும் சுய உதவிக் குழுக்களுக்காக தனியாக 15 வங்கிகள் தொடங்கவிருப்பதாகவும், அதில் 10 வங்கிகள்

இந்த அரசும், இந்த வங்கிகளும், இன்றைக்கு உங்களுக்காக பல பணிகளை தொடர்ந்து செய்து கொண்டிருக்கிறது. அவற்றை நீங்கள் சிறப்பான முறையிலே முறையாகப் பயன்படுத்திக் கொண்டு, இந்தப் பணிகளையெல்லாம் நிறைவேற்றக்கூடிய உந்து சக்தியாக இருக்கக் கூடிய தலைவர் கலைஞர் அவர்களின் தலைமையிலே அமைத்திருக்கக்கூடிய உங்களுடைய ஆட்சிக்கு தொடர்ந்து என்றும் துணை நிற்க வேண்டும், தொடர்ந்து உங்கள் நல்லாதரவை வழங்கி உங்களுடைய வாழ்க்கைத் தரத்தை நீங்கள் பெருக்கிக் கொள்ள வேண்டுமென்று உங்களை அனைவரையும் அன்போடு கேட்டுக் கொள்கின்றேன்.

★ ★ ★



# உடன்குடி 2 x 800 மெகாவாட் அனல் மின் திட்டம் அமைத்திட புரிந்துணர்வு ஒப்பந்தம்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் கலைஞர் அவர்களின் முன்னிலையில் 26.10.2007 அன்று தமிழ்நாடு மின்சார வாரியம், மத்திய அரசு நிறுவனமான பாரத மிகு மின். நிறுவனத்துடன் இணைந்து கூட்டு முயற்சியில், தூத்துக்குடி மாவட்டம் உடன்குடியில்

இத்திட்டத்தில் தமிழ்நாடு மின்சார வாரியம், பாரதமிகு மின் நிறுவனம் (பி.எச்.இ.எல்) மற்றும் பிற நிதி நிறுவனங்கள் முதலீடு செய்கின்றன. இத்திட்டத்திற்கான முக்கிய இயந்திரங்கள் பி.எச்.இ.எல் நிறுவனத்திடமிருந்து பெறப்படவுள்ளன. தமிழ்நாடு மின்சார வாரியம் இத்திட்டத்தைச் செயல்படுத்தி மின் நிலையத்தை இயக்கும்.

இத்திட்டத்திற்கான கூட்டு நிறுவனம் அமைக்கும் பணி நடைபெற்று வருகிறது. கூட்டு நிறுவனத்திற்கு, உடன்குடி பவர் கார்ப்பரேஷன் லிமிடெட் என்ற பெயர் பதிவு செய்யப்பட்டுள்ளது. கூட்டு முயற்சி வரைவு ஒப்பந்தத்திற்கு தமிழ்நாடு அரசு ஒப்புதல் அளித்துள்ளது. இதற்கான கூட்டு நிறுவன ஒப்பந்தம் (Joint Venture Agreement) 26.11.2008 அன்று மாண்புமிகு தமிழக முதலமைச்சர் கலைஞர் அவர்களின் முன்னிலையில் தமிழ்நாடு மின்வாரியத்தின் தலைவர்



2×800 மெகாவாட் திறனுள்ள மிக உயரிய அனல் மின் திட்டம். அமைக்க புரிந்துணர்வு ஒப்பந்தம் கையெழுத்தானது. இத்திட்டத்தின் மதிப்பீடு ரூபாய் 8,700 கோடியாகும்.

திரு. சு. மச்சேந்திரநாதன், இ.ஆ.ப., மற்றும் பாரத மிகுமின் நிறுவனத்தின் தலைவர் திரு. கி. ரவிக்குமார் ஆகியோரால் கையெழுத்திடப்பட்டது.

இந்நிகழ்வின்போது, மாண்புமிகு மின்சாரத்துறை அமைச்சர் திரு. ஆர்க்காடு நா. வீராசாமி, தலைமைச் செயலாளர் திரு. கே. எஸ். ஸ்ரீபதி, இ.ஆ.ப., நிதித்துறை முதன்மைச் செயலாளர் திரு. கு. ஞானதேசிகன், இ.ஆ.ப., எரிசக்தித்துறைச் செயலாளர் திருமதி. ஸ்மிதா நாகராஜ், இ.ஆ.ப., தமிழ்நாடு மின்சார வாரியத்தின் உறுப்பினர் (மின்உற்பத்தி) திரு. பாலசுப்பிரமணியன், முதன்மைப் பொறியாளர் திரு. எஸ். ராஜேந்திரன், பாரத மிகுமின் நிறுவனத்தின் இயக்குநர் (நிதி) திரு. சி.எஸ். வர்மா, பொது மேலாளர்கள் திரு. டி.என். வரதராஜன், திரு. எஸ். கோபாலகிருஷ்ணன், திரு.பி. அருண்குமார் மற்றும் உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்.

இத்திட்டத்திற்கு உடன்குடி கிராமத்தில் 760 ஏக்கர் பரப்பளவில் உள்ள அரசு புறம்போக்கு நிலம் கண்டறியப்பட்டுள்ளது. தமிழக அரசு மேற்படி நிலத்தில் திட்டம் தொடர்பான பணிகளை செய்வதற்கு நுழைவு அனுமதி 29.02.2008இல் வழங்கியுள்ளது.

கள ஆய்வுப் பணிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. மேற்படி நிலத்தில் உள்ள முட்புதர்கள் அகற்றும் பணி நடைபெறுகிறது. ஆழ் கடல் துளை குழி ஆய்வுப்பணி (Marine Bore Hole Study) ஏற்கெனவே நிறைவு பெற்றது.

மத்திய அரசின் சுற்றுச்சூழல் மற்றும் வனத்துறை அமைச்சகம் சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு ஆய்வுகள் மேற்கொள்வதற்கு 13.2.2008 அன்று ஒப்புதல் வழங்கியுள்ளது. சுற்றுச்சூழல் ஆய்வுப் பணி முடிக்கப்பட்டு, சுற்றுச்சூழல் ஆய்வு அறிக்கை தயாரிக்கப்பட்டுள்ளது. விரைவில் பொதுமக்கள் கருத்து கேட்பு நடத்தப்படும்.

இத்திட்டத்திற்கான சாத்தியக்கூறு அறிக்கை மற்றும் விரிவான திட்ட அறிக்கையை தயார் செய்வதற்கு ஆலோசகர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். சாத்தியக்கூறு அறிக்கை (Feasibility Report) இறுதி செய்யப்பட்டுள்ளது. விரிவான திட்ட அறிக்கை (Detailed Project Report) இறுதி செய்யப்பட உள்ளது.

இத்திட்டத்திற்கான நிலக்கரி கப்பல்கள் மூலம் கொண்டுவரப்படும் என்பதால், கடலில் தளம் அமைப்பதற்கான ஆய்வு செய்யும் பணியை ஐ.ஐ.டி., சென்னை நிறுவனம் ஆய்வு செய்து அறிக்கை வழங்கியுள்ளது.

இத்திட்டத்தின் முதல் யூனிட் மார்ச் 2012லும் இரண்டாவது யூனிட் செப்டம்பர் 2012லும் இயக்கப்படவுள்ளது. ❖

---

## ஆதிதிராவிட விவசாயிகள்

## தாட்கோவில் பெற்ற

## கடன் முழுவதையும்

## நீக்கம் செய்து

## மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்

## கலைஞர் அவர்கள்

## ஆணை

2008–2009ஆம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கையில், "கூட்டுறவு வங்கிகளிடமிருந்து பெறப்பட்ட விவசாயக் கடன்கள் இரத்து செய்யப்பட்டதைப் போன்றே, ஆதிதிராவிட விவசாயிகள் 'தாட்கோ' நிறுவனத்திடமிருந்து பெற்று நிலுவையில் உள்ள விவசாயக் கடன்களும் தள்ளுபடி செய்யப்படும்" என்று அறிவிக்கப்பட்டிருந்தது.

அந்த அறிவிப்பினையொட்டி, ஆதிதிராவிடர் நிதி மற்றும் மேம்பாட்டுக் கழகத்தின் மூலம் (தாட்கோ) விவசாயம் மற்றும் விவசாயம் சார்ந்துள்ள பணிகளுக்காகவும்; விவசாய நிலத்தை உழுவதற்கான இயந்திரம், விவசாயப் பண்ணை, ஆடு வளர்ப்பு, கோழி வளர்ப்பு, துளையிடும் இயந்திரம் போன்ற விவசாயத் திட்டங்களுக்காகவும் ஆதிதிராவிட விவசாயிகள் 'தாட்கோ' நிறுவனத்தின் மூலம் 31.3.2006 வரை பெற்ற கடன் தொகை 3 கோடியே 47 இலட்சம் ரூபாய்; கடன் தொகை மீதான வட்டி 59 இலட்சம் ரூபாய்: அபராத வட்டி 1கோடியே 19 இலட்சம் ரூபாய் – ஆக மொத்தம் 5 கோடியே 25 இலட்சம் ரூபாய் முழுவதையும் ஆதிதிராவிட விவசாயிகளின் நலன் கருதி நீக்கம் செய்து மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள்.



# இலங்கையில் போர் நிறுத்தம் செய்ய வேண்டும்

## தமிழக சட்டமன்றத்தில் தீர்மானம்



தமிழக சட்டப்பேரவையில் 12–11–2008 அன்று, அவை முன்னவரும் நிதியமைச்சருமான பேராசிரியர் க. அன்பழகன் அவர்கள் "பேரவை விதி 185(2) மற்றும் 190–ஐ தளர்த்தி 12–11–2008 அன்று, அரசினர் அலுவல்கள் எடுத்துக் கொள்ளப் பெறவேண்டும் என்று கூறினார். இதனையடுத்து மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் அரசினர் தீர்மானத்தை முன்மொழிந்தார். அந்தத் தீர்மானம் வருமாறு :

ஏறத்தாழ நாற்பதாண்டு காலத்திற்கும் மேலாக இலங்கைத் தமிழர்களின் பிரச்சினை; பல்வேறு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டும் முடிவுக்கு வராமல், அந்த மண்ணின் மைந்தர்களாம் தமிழின மக்களின் உயிர், உடைமைகள் எதற்கும் உத்திரவாதமில்லாமல்; அவர்களின் குடும்பங்கள், குழந்தை குட்டிகள் என இலட்சக்கணக்கானோர் அகதிகளாக அயல் நாடுகளுக்கு ஓடியவர்கள் போக எஞ்சியிருப்போர், எந்த நேரத்திலும் மரணத்தை எதிர்பார்த்து துடித்துத் தவித்துக் கொண்டிருக்கிறார்கள்.

இந்நிலை குறித்து முடிவெடுக்க அக்டோபர் 14ஆம் தேதி நடத்தப்பட்ட அனைத்துக் கட்சிக் கூட்டத்தின் தீர்மானத்திற்கிணங்க; கடலில் எல்லை வகுக்கப்பட்டு ஓர் உடன்பாட்டின் மூலம் தமிழக மீனவர்களின் உயிருக்கும், உடைமைக்கும், உரிமைக்கும் பாதுகாப்பு வழங்கும் ஏற்பாடு செய்யப்பட்டாலும் நமது பக்கத்து நாட்டிலேயே நமது உடன்பிறந்த தமிழ் மக்கள், நித்த நித்தம் சிந்தும் ரத்தமும் வடிக்கும் கண்ணீரும் நெஞ்சைப் பிளக்கும் நிகழ்ச்சிகளாகிவிட்ட கொடுமைக்கிடையே; இந்தியப் பேரரசின் உதவியுடன் இலங்கைத் தமிழர்களுக்கான உணவு, உடை, மருந்து போன்ற அத்யாவசியப் பொருள்களை, தமிழகத்திலிருந்து செஞ்சிலுவைச் சங்கம் போன்ற சர்வதேச அமைப்புகளின் வாயிலாக அனுப்பி வைக்கிறோம் எனினும்; அவர்களுக்கு இந்த உதவிகள் மட்டும் போதுமானதல்ல.

அவர்களின் உயிர், உடைமை ஆகியவற்றுக்குப் பாதுகாப்பு, இலங்கையில் அமைய வேண்டிய அமைதி நிறைந்த சமநிலை வாழ்வு, இவை அங்குள்ள தமிழர்களுக்கு உறுதி செய்யப்படவேண்டும். அதற்கான அழுத்தமான நடவடிக்கையை நமது இந்திய மத்திய அரசு மேற்கொள்ளவேண்டும்.

இலங்கைத் தமிழர்களின் இந்த அவல நிலை உலகெங்கிலும் வாழும் தமிழர்களிடையே பெரும் கொந்தளிப்பையும், ஆத்திரத்தையும் ஏற்படுத்தியிருக்கிறது. குறிப்பாக வரலாற்று ரீதியாகவும், கலாச்சாரம் மற்றும் பண்பாடு ரீதியாகவும் ஒன்றாக உள்ள ஏழு கோடி இந்தியத் தமிழர்களின் மத்தியில் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தி வருகிறது. இதன் விளைவாகத் தமிழகத்தில் அனைத்து அரசியல் இயக்கங்களும், அரசியல் சார்பற்ற அமைப்புகளும், ஆர்ப்பாட்டங்களையும், பேரணிகளையும் நடத்தி, இலங்கை அரசுக்குத் தங்களது எதிர்ப்பைத் தெரிவித்து வருகின்றன. மாணவர்கள், வணிகர்கள், திரைப்படக் கலைஞர்கள், திரைப்படத் தொழில் நுட்பக் கலைஞர்கள், சின்னத்திரை கலைஞர்கள், தொழிலாளர்கள், தமிழ் ஆர்வலர்கள் என எல்லாத் தரப்பினரும் இலங்கைத் தமிழர்களுக்காகக் குரல் கொடுத்து வருகிறார்கள்.

அரசு சார்பில் நடைபெற்ற அனைத்துக் கட்சிக் கூட்டத்தில் இலங்கையில் உடனடியாகப் போர் நிறுத்தம் செய்யப்படவேண்டும் என்றும், இலங்கைத் தமிழர்களின் துயர் துடைக்கப்படவேண்டும் என்றும் வலியுறுத்தி ஒருமனதாகத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டிருக்கின்றது. அதைத் தொடர்ந்து சென்னையில் வரலாறு படைத்த மனிதச் சங்கிலி அணிவகுப்பு நடத்தி ஈழத் தமிழர்களுக்கு ஆதரவுக் கரம் நீட்டிய மாபெரும் நிகழ்ச்சி மறக்கவொண்ணாதது.

இலங்கைத் தமிழர்களின் இன்னல்கள் நீங்க வேண்டுமானால், அங்கு உடனடியாகப் போர் நிறுத்தம் மேற்கொள்ளப்படவேண்டும். இது உலகத் தமிழர்களின் ஏகோபித்த விருப்பமாகும்.

போர் நிறுத்தம் என்பது இரு தரப்பினராலும் ஒப்புக் கொள்ளப்பட்டு நிறைவேற்றப்பட வேண்டிய ஒன்று என தமிழக முதலமைச்சர் வெளியிட்ட கருத்தைத் தொடர்ந்து, போர் நிறுத்தம் மேற்கொள்வதற்கு நாங்கள் தயார் என்று மற்றொரு தரப்பில் அறிவிக்கப்பட்டிருக்கிறது. இந்த நிலையில், இலங்கை அரசும் போர் நிறுத்த அறிவிப்பை வெளியிட்டு உடனடியாகப் படைகளைப் பழைய நிலைக்கு விலக்கிக்கொள்ள வேண்டும். அத்துடன் தமிழர்களின் கோரிக்கைகள் குறித்துப் பேச்சுவார்த்தை நடத்தி, அரசியல் தீர்வு காண்பதற்கான முயற்சிகளையும் உடனடியாக மேற்கொள்ளவேண்டும் என்று தமிழ்நாடு சட்டப் பேரவை வலியுறுத்துகிறது.

இந்தியப் பேரரசு தனது செல்வாக்கைப் பயன்படுத்தி இலங்கை அரசை போர் நிறுத்தத்திற்கு இணங்க வைத்து தமிழர் பகுதிகளில் நிலையான அமைதியும், சக வாழ்வும் ஏற்படுத்துவதற்கு நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமென்று தமிழ்நாடு சட்டப்பேரவை வலியுறுத்திக் கேட்டுக் கொள்கிறது. ★

# 80 ஆயிரம் இலங்கைத் தமிழர் குடும்பங்களுக்கு 2 ஆயிரம் டன் எடையுள்ள நிவாரணப் பொருள்கள்



இலங்கையில் பாதிப்புக்கு ஆளாகியிருக்கும் தமிழர்களுக்கு உதவுவதற்காக மாண்புமிகு தமிழக முதலமைச்சர் கலைஞர் அவர்கள் விடுத்த வேண்டுகோளுக்கிணங்க, நிதி உதவிகளும், நிவாரணப் பொருள்களும் இதுவரையில் பத்து கோடி ரூபாய் அளவுக்கு தமிழக அரசுக்கு வந்து சேர்ந்துள்ளன.

அரிசி, பருப்பு, டீத்தூள், சர்க்கரை போன்ற உணவுப் பொருள்களுடன், குளிக்கும் சோப்பு, துவைப்பதற்கான சோப்பு, பற்பசை ஆகியனவும், வேட்டி, கைலி, சேலை, பெண்கள் அணியும் ஆயத்த ஆடை, துண்டுகள் மற்றும் படுக்கை விரிப்புகள் ஆகிய துணி வகைகளும் அடங்கிய நிவாரணப் பொருட்கள் 80 ஆயிரம் குடும்பங்களுக்கு வழங்குவதற்காகத் தனித்தனியே சிப்பங்களாகத் தயார் நிலையில் வைக்கப்பட்டுள்ளன.

தமிழக அரசினால் முதல் கட்டமாக அளிக்கப்படும் ஏறத்தாழ 2,000 டன் எடையுள்ள இந்த நிவாரணப் பொருட்கள் சென்னையில் இருந்து கப்பல் மூலம் கொழும்பு துறைமுகத்திற்குக் கொண்டுசெல்லப்பட்டு, அங்கு இலங்கையில் உள்ள இந்திய நாட்டுத் தூதரிடம் ஒப்படைக்கப்படும். அவரிடமிருந்து இந்த நிவாரணப் பொருள்கள் செஞ்சிலுவைச் சங்கத்தின் பன்னாட்டுக் குழுமத்திடம் ஒப்படைக்கப்பட்டு பின்னர், இலங்கையில் பாதிப்புக்கு ஆளாகியிருக்கும் மக்களின் ஏறத்தாழ 80 ஆயிரம் தமிழர் குடும்பங்களுக்குப் பகிர்ந்து வழங்கப்படும்.

இந்த நிவாரணப் பொருள்கள் கப்பல் மூலம் இலங்கைக்குக் கொண்டுசெல்லப்படுவதையும், அங்கு பாதிப்புக்கு ஆளாகியுள்ள தமிழ் மக்களுக்கு இவற்றை வழங்குவதற்கான ஏற்பாடுகளை இந்திய தூதரகம் மேற்கொள்வதையும் கண்காணிக்கும் பொறுப்பை மத்திய அரசின் வெளியுறவுத்துறை ஏற்றுள்ளது.

இலங்கைக்கு அனுப்பி வைக்கப்படவுள்ள இந்த நிவாரணப் பொருள்களை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் 6.11.2008 அன்று பார்வையிட்டார். அவ்வமயம் செஞ்சிலுவைச் சங்கத்தின் பன்னாட்டுக் குழுமத்தின் அலுவலர் திரு. தாமஸ் ரீஸ், மத்திய அரசின் வெளியுறவுத் துறையைச் சார்ந்த அதிகாரி திரு. ஐ.எம். பாண்டே, தமிழக அரசின் தலைமைச் செயலாளர் திரு. கே.எஸ். ஸ்ரீபதி, இ.ஆ.ப., மற்றும் உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்.

* * *



# மழையினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு தலா ரூ.2 ஆயிரம் மற்றும் குடும்பத்திற்கு இலவசமாக பத்து கிலோ அரிசி

## மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் கலைஞர் மு.கருணாநிதி அவர்கள் அறிவிப்பு



பெரும் மழையினால் பாதிக்கப்பட்ட மக்களின் இன்னல் தீர்த்திட பாதிக்கப்பட்டோருக்கு தலா இரண்டாயிரம் ரூபாய் நிதி உதவியும், குடும்பத்திற்கு இலவசமாக பத்து கிலோ அரிசியும் வழங்க மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் உத்தரவிட்டார்.

தமிழகம் முழுவதும் பெய்த பலத்த மழையினால் பல மாவட்டங்களில் வெள்ளம் கரை புரண்டோடியது. சென்னையில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் நேரில் சென்று பார்வையிட்டு நிவாரண உதவிகளை வழங்கினார்.

பல்வேறு மாவட்டங்களுக்கு அமைச்சர்கள் சென்று நிவாரணப் பணிகளை மேற்கொண்டனர்.

இந்நிலையில் அண்மையில் நடைபெற்ற தமிழக அமைச்சரவைக் கூட்டத்தில் வெள்ள நிவாரணப் பணிகளுக்காக முதற்கட்டமாக நூறு கோடி ரூபாய் நிதி ஒதுக்க முடிவு செய்யப்பட்டது.

இதனைத் தொடர்ந்து பாதிக்கப்பட்ட மக்களுக்கு இரண்டாயிரம் ரூபாய் நிவாரண உதவித் தொகையும், இலவசமாக குடும்பத்திற்கு பத்து கிலோ அரிசியும் வழங்க மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் உத்தரவிட்டார்.

இதுகுறித்து தமிழக அரசு 29.11.2008 அன்று வெளியிட்ட செய்திக் குறிப்பு வருமாறு:

தமிழகத்தில் ஒரு வார காலமாக தொடர்ந்து பெய்து வரும் பெருமழை காரணமாக பகுதியாகவோ அல்லது முழுவதுமாகவோ பாதிக்கப்பட்ட வீடுகளுக்கு – தலா 2000 ரூபாய் வீதம் நிதி உதவி அளிக்கப்படும் என்று தமிழக அரசின் சார்பில் ஏற்கெனவே அறிவிக்கப்பட்டதைத் தொடர்ந்து – அவ்வாறு நிதி உதவி பெறுவோருக்கு பத்து கிலோ அரிசியும் இலவசமாக வழங்க மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் 29.11.2008 அன்று ஆணையிட்டுள்ளார்கள். ★

## சென்னையில் கொட்டிய மழையில்
## மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் நேரில் சென்று
## மழையால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவிகளை வழங்கினார்



சென்னை மாநகரத்தில் பெருமழையினால் பாதிக்கப்பட்ட பகுதிகளை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் கலைஞர் மு. கருணாநிதி அவர்கள் 28.11.2008 அன்று பார்வையிட்டார்.

சென்னை மாநகரத்தில் 28.11.2008 அன்று காலை பெருமழையினால் பாதிக்கப்பட்ட கோட்டூர்புரம், காந்தி மண்டபம், சைதாப்பேட்டை, கீழ்ப்பாக்கம், பெரம்பூர் ஆகிய பகுதிகளுக்கு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் நேரில் சென்று பார்வையிட்டார். அந்தப் பகுதிகளில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு ஆறுதல் அளித்ததுடன், நிவாரணப் பணிகளில் ஈடுபட்டுள்ள அரசு அலுவலர்களுக்கு அறிவுரைகள் வழங்கி ஊக்கப்படுத்தினார். காந்தி மண்டபத்தில் தங்க வைக்கப்பட்டுள்ள பாதிக்கப்பட்ட மக்களுக்கு ரொட்டிகள் வழங்கினார். அவர்களுக்கு வழங்கப்படும் உணவு மற்றும் மருந்துகள் பற்றிய விவரங்களை மாநகராட்சி அலுவலர்களிடம் கேட்டறிந்தார்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் பெரம்பூரில் செய்தியாளர்களிடம் பேசும் போது, "மத்திய அரசு மாநில அரசுக்குத் தேவையான நிவாரண நிதி உதவிகளை வழங்கிடுமென்று எதிர்பார்க்கிறேன். தமிழ்நாட்டில் புயல்–தொடர்ந்து பெய்து வரும் பெருமழையினால் ஏற்பட்டுள்ள சேத விவரங்கள் மத்திய அரசுக்குத் தரப்பட்டுள்ளன. அனைத்து மாவட்ட ஆட்சித் தலைவர்களுடனும் அதிகாலை நானே தொலைபேசியில் நேரடியாகத் தொடர்புகொண்டு, அந்தந்த மாவட்டங்களில் சேத விவரங்களைக் கேட்டறிந்துள்ளேன். மாவட்டங்களில் பாதிக்கப்பட்டுள்ள மக்களுக்கு செய்ய வேண்டிய நிவாரண உதவிகள் அனைத்தும் உடனடியாகச் செய்யப்படும்" என்று கூறினார்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுடன் மாண்புமிகு உணவுத்துறை அமைச்சர் திரு. எ.வ. வேலு, வணக்கத்திற்குரிய சென்னை மாநகராட்சி மேயர் திரு. மா. சுப்பிரமணியம், சட்டப்பேரவை முன்னாள் உறுப்பினர் திரு. ஆயிரம் விளக்கு உசேன், தமிழ்நாடு அரசு தலைமைச் செயலாளர் திரு. கே.எஸ். ஸ்ரீபதி, இ.ஆ.ப., சென்னை மாநகராட்சி ஆணையர் திரு. ராஜேஷ் லக்கானி, இ.ஆ.ப., சென்னை மாநகரக் காவல் துறை ஆணையாளர் திரு. ராதாகிருஷ்ணன், இ.கா.ப., ஆகியோர் சென்றனர்.

தமிழகத்தில் வரலாறு காணா கனமழையினால் கடலோர மாவட்டங்கள் வெள்ளக் காடாகக் காட்சியளித்த நாகையருகே புயல் மையங் கொண்டதையடுத்து கடும் சூறாவளிக் காற்றுடன் பெரும் மழை கொட்டத் தொடங்கியது. தொடர்ந்து இரவு பகலாக இடைவிடாமல் பெய்த கடும் மழையினால் மக்களின் இயல்பு வாழ்க்கை பெரிதும் பாதிக்கப்பட்டது.

புதுவை, கடலூர், நாகை, தஞ்சை மாவட்டங்களில் கடும் புயலுடன் 80 கிலோ மீட்டர் வேகத்தில் வீசிய சூறாவளி காற்று மழையினால் ஏராளமான பயிர் நிலங்கள்





நீரில் மூழ்கின. கடலோர மாவட்டங்களில் குறிப்பாக காவிரி டெல்டா மாவட்டங்களில் சம்பா பயிர்கள் பல ஆயிரம் ஏக்கர் தண்ணீரில் மிதக்கின்றன. வெள்ளப் பெருக்கினால் சாலைகள் பழுதடைந்து போக்குவரத்துகள் பாதிக்கப்பட்டன.

பாதிக்கப்பட்ட மக்கள் பள்ளிக் கூடங்களில் தங்க வைக்கப்பட்டு அவர்களுக்கு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் உத்தரவின் பேரில் ஆங்காங்கு மாவட்ட நிருவாகங்கள் சார்பில் உணவு வழங்கப்பட்ட ஏராளமான மரங்கள் சாய்ந்தும், நூற்றுக்கணக்கில் கால்நடைகள் உயிரிழந்தும், பெரும் பொருட்சேதங்களும் ஏற்பட்டுள்ளதுடன், இந்தப் பெரும் மழைக்கும் புயலுக்கும் 90–க்கும் மேற்பட்டோர் உயிரிழந்தனர்.

சென்னை உள்ளிட்ட பல்வேறு மாவட்டங்களில் பள்ளிகளுக்கும், கல்லூரிகளுக்கும் இரண்டு நாட்கள் விடுமுறை விடப்பட்டது. கடைகளும், வர்த்தக நிறுவனங்களும் செயல்பட முடியாத அளவிற்கு சூறாவளியுடன் கூடிய மழை நீடித்தது.

கடும் மழையைத் தொடர்ந்து மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் கலைஞர் அவர்கள், மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள், மாவட்ட ஆட்சியாளர்கள் ஆகியோரை உடனே பாதிக்கப்பட்ட இடங்களுக்குச் சென்று நிவாரணப் பணிகளை மேற்கொள்ளுமாறு அறிவுறுத்தினார். அதனைத் தொடர்ந்து மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள், நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் ஆங்காங்கு விரைந்து சென்று மழை வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவிகளை வழங்கினர். பல ஆயிரக்கணக்கான மக்களுக்கு உணவு வழங்கப்பட்டது.

மேலும் 27.11.2008 அன்று மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் தலைமையில் நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் தமிழகத்தில் ஏற்பட்டுள்ள கடும் வெள்ளச் சேதங்கள் குறித்து விவாதித்ததுடன், மழையினால் உயிரிழந்தோரின் குடும்பத்திற்கு தலா ரூ.1 இலட்சம் நிதி வழங்கப்படும் என்றும், பாதிக்கப்பட்ட குடிசைகளுக்கு தலா ரூ.2 ஆயிரம் நிதிஉதவியும், மேலும் பாதிப்படைந்து, உடமைகளை இழந்தோருக்கு உடனடி நிவாரணமும் வழங்க முடிவு செய்யப்பட்டது.

இந்த நிவாரணப் பணிகளை விரைந்து மேற்கொள்ள ரூ.100 கோடி நிதி ஒதுக்கியும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் அறிவித்தார்கள். மேலும் மாண்புமிகு அமைச்சர் பெருமக்களை அந்தந்த மாவட்டங்களுக்கு அனுப்பி நிவாரணப் பணிகளை மேற்கொள்ளுமாறு அறிவுறுத்தினார். இந்தச் சூறாவளி மழைக்குப் பெரிதும் பாதிப்படைந்த சுமார் 55 வட்டங்கள், 1,380 வருவாய் கிராமங்களில் ஒன்றரை இலட்சத்திற்கும் அதிகமான மக்களுக்கு 242 மையங்கள் திறக்கப்பட்டு அவர்களுக்கு உரிய நிவாரண உதவிகள் அரசின் சார்பில் வழங்கப்பட்டன.

அதுமட்டுமின்றி பெரும் மழையினால் பல ஆயிரம் ஏக்கர் பயிர்கள் நீரில் மூழ்கி அதனால் விவசாயிகள் பாதிப்படைந்தனர். பாதிப்படைந்த பகுதிகளை மத்திய அரசின் குழுவினர் பார்வையிட்டு உரிய நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமென மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் கலைஞர் அவர்களின் அறிவுறுத்தலைத் தொடர்ந்து நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் மாண்புமிகு மத்திய அமைச்சர் திரு. டி.ஆர்.பாலு கேட்டுக்கொண்டதன் பேரில் மாண்புமிகு இந்தியப் பிரதமர் டாக்டர். மன்மோகன் சிங் அவர்கள் மத்திய அரசின் சார்பில் குழுவினை தமிழகத்திற்கு அனுப்பிட நடவடிக்கை மேற்கொள்வதாக உறுதியளித்தார்.

சென்னை மாநகரில் கொட்டும் மழையில் மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் அவர்கள், மாநகர மேயர் மற்றும் அதிகாரிகளுடன் பல்வேறு இடங்களுக்குச் சென்று நிவாரணப் பணிகளை முடுக்கிவிட்டார். பாதிக்கப்பட்ட மக்களுக்கு வழங்கிட தயாரிக்கப்படும் உணவுக் கூடங்களுக்குச் சென்று அதனையும் பார்வையிட்டு சோதித்துப் பார்த்து நல்லமுறையில் உணவு வழங்கிட சம்பந்தப்பட்ட அதிகாரிகளை மாண்புமிகு அமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் அவர்கள் கேட்டுக்கொண்டார். சென்னை மாநகரில் தென்சென்னை, வட சென்னை பகுதிகளில் இரண்டு நாட்களாக வெள்ளம் சூழ்ந்த பல்வேறு பகுதிகளைப் பார்வையிட்டு உடனடி நிவாரண உதவிகளை மக்களுக்கு வழங்கிட அதிகாரிகளைக் கேட்டுக்கொண்டார்.

சென்னை நகரில் இரவு–பகல் என இடைவிடாது தொடர்மழை கொட்டிக் கொண்டிருந்தபோதும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் காலை 9 மணியளவில் மழை கொட்டிக்கொண்டும் சூறாவளிக் காற்று விட்டு விட்டு வீசிக் கொண்டிருந்ததையும் பொருட்படுத்தாமல்; வெள்ளப் பகுதிகளைப் பார்வையிட்டு பாதிக்கப்பட்ட ஏழை, எளிய மக்களுக்கு ஆறுதல் கூறினார்.

★

# பெருமழையால் பாதிக்கப்பட்ட

## தஞ்சை - திருவாரூர் - நாகை மாவட்டங்களில்

## மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை அமைச்சர்

## திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் நேரில் சென்று நிவாரண உதவி

**த**மிழகத்தில் பெய்த கடும் மழையினால் பாதிக்கப்பட்டுள்ள பகுதிகளை பார்வையிட்டு அந்த மக்களுக்கு ஆறுதல் கூறியும், நிவாரணப் பணிகளை பார்வையிட்டு உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளவும், மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள், இந்திய ஆட்சிப்பணி அலுவலர்களை நியமித்து அந்தந்த பகுதிகளுக்கு உடனடியாக சென்றிட நிவாரணப் பணிகளை மேற்கொள்ளுமாறு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் ஆணையிட்டார்.



அதன்படி மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை அமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் அவர்கள் மழையினால் கடுமையாக பாதிக்கப்பட்ட கடலூர், தஞ்சை, திருவாரூர், நாகை ஆகிய மாவட்டங்களில் வெள்ளச் சேதங்களை பார்வையிட கடலூர் மாவட்டத்திற்கு சென்று பார்வையிட்டு நடவடிக்கை மேற்கொண்டார்.



அதன் தொடர்ச்சியாக 29.11.2008 அன்று தஞ்சை மாவட்டத்தில் காலை 8.30 மணிக்கு வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட சாலியமங்கலம் மற்றும் அதனைச் சுற்றியுள்ள கிராமங்களில் மழையினால் வீடுகளில் தங்கமுடியாமல் அரசு மேல் நிலைப் பள்ளியில் தங்க வைக்கப்பட்டுள்ள 2,000 பேருக்கு உணவு மற்றும் மருத்துவ வசதிகள் குறித்து அவர்களிடம் கேட்டறிந்தார்.



அத்துடன் அவர்களுக்கு வழங்கப்படும் உணவின் தரத்தையும் சாப்பிட்டுப் பார்த்தார். அங்கு தங்கியுள்ள மக்களுக்கு உணவு உள்ளிட்ட





வசதிகள் செய்து தர அதிகாரிகளுக்கு ஆணையிட்டார்.

அப்போது மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை அமைச்சர் அவர்கள் செய்தியாளர் களிடம் கூறியதாவது :—

"கடந்த 5, 6, நாட்களாக தொடர்ந்து பெய்த கடும் மழையின் காரணமாக கடலோர மாவட்டங்களான தஞ்சை, திருவாரூர், நாகை, கடலூரில் பயிர்கள், வீடுகள், சாலைகள் மோசமாக பாதிக்கப்பட்டுள்ளன. பாதிக்கப்பட்டுள்ள பொது மக்கள் பாதுகாப்பான இடங்களில் தங்கவைக்கப்பட்டுள்ளனர். மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் நிவாரணப் பணிகள் மேற்கொள்ள ரூ.100 கோடி ஒதுக்கீடு செய்துள்ளார்கள். பாதிக்கப்பட்ட மக்களுக்கு போர்க்கால அடிப்படையில் நிவாரணப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

தஞ்சாவூர் மாவட்டத்தில் ஒரு இலட்சத்து 10 ஆயிரம் ஹெக்டேர் பயிர்கள் இந்த கன மழையினால் சேதமடைந்துள்ளது. மேலும் வீடுகள் முழுவதுமாகவும், பகுதியாகவும் பழுதடைந்துள்ளன. தஞ்சாவூர் மாவட்டத்தில் 330 வெள்ள நிவாரண மையங்கள் அமைக்கப்பட்டு அதில் 90 ஆயிரம் பேர் தங்க வைக்கப்பட்டுள்ளனர். அவர்களுக்கு உணவு, பாதுகாக்கப்பட்ட குடிநீர், சுகாதார வசதிகள் போன்ற அத்தியாவசிய உதவிகள் மாவட்ட ஆட்சித் தலைவர் மூலம் வழங்கப்பட்டு வருகிறது. மாவட்டத்தில் ஏற்பட்டுள்ள பாதிப்புகள் குறித்து கணக்கெடுக்கும் பணி நடைபெற்று வருகிறது. கணக்கெடுக்கும் பணி முடிவடைந்ததும் அந்தந்த மாவட்ட ஆட்சித் தலைவர்கள் அறிக்கை தயார் செய்து அரசுக்கு அனுப்பி வைப்பார்கள். அதன் அடிப்படையில் நிவாரணமும், இழப்பீடும் வழங்கப்படும்".

மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் மாண்புமிகு திரு. மு. க. ஸ்டாலின் அவர்களுடன் மாண்புமிகு மத்திய நிதித்துறை இணையமைச்சர் திரு. எஸ்.எஸ். பழனி மாணிக்கம், மாண்புமிகு பால்வளத்துறை அமைச்சர் திரு. உ. மதிவாணன், மாவட்ட ஆட்சியர் திரு. பெ. சந்திரசேகரன், இ.ஆ.ப., நாடாளுமன்ற உறுப்பினர் திரு. ஏ.கே.எஸ். விஜயன், சட்டமன்ற உறுப்பினர்கள் திரு. துரை. சந்திரசேகரன்,

திரு. கி. த. மகேஷ் கிருஷ்ணசாமி, மாவட்ட ஆட்சித் தலைவர் திரு. எம்.எஸ். சண்முகம், இ.ஆ.ப., சிறப்புப் பார்வையாளர் திரு. விஸ்வநாத் ஷெகாவ்கர் இ.ஆ.ப., ஆகியோர் சென்றனர்.

தொடர்ந்து மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை அமைச்சர் அவர்கள் திருவாரூர் மாவட்டத்தில் வெள்ளப் பகுதிகளை பார்வையிடச் சென்றார்.

மாவட்ட எல்லையான கோயில் வெண்ணியில் தொடங்கி நீடாமங்கலத்திற்கு சென்றார். வழியில் பரப்பனமேடு கிராமம் அருகே பாமணி ஆறு உடைப்பு ஏற்பட்டு அந்தப் பகுதியில் உள்ள கிராமங்களில் தண்ணீர் புகுந்ததோடு பயிர்களும் மூழ்கியுள்ளதை மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை அமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் அவர்கள் பார்வையிட உடைப்பு ஏற்பட்டுள்ள பகுதிக்கு தண்ணீரில் நடந்து சென்று பார்த்து உடைப்பினை சரி செய்ய உடனடியாக நடவடிக்கை எடுக்க அதிகாரிகளுக்கு ஆணையிட்டார்.

அப்போது விவசாயிகள் மூழ்கியுள்ள பயிர்களை எடுத்து வந்து மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் காண்பித்தனர். விவசாயிகளுக்கு ஆறுதல் கூறிய மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தமிழக அரசினால் உரிய நிவாரணம். வழங்கப்படும் கலங்க வேண்டாம் என்று அவர்களுக்கு ஆறுதல் கூறினார்.

தொடர்ந்து நீடாமங்கலம் சென்ற மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அதைச் சுற்றியுள்ள கிராமங்களான சித்தமல்லி உள்ளிட்ட கிராமங்களைச் சேர்ந்த அங்குள்ள திருமண மண்டபத்தில் தங்க வைக்கப்பட்டுள்ள 1,000 பேரைச் சந்தித்து ஆறுதல் கூறியதோடு அங்கு உணவு உள்ளிட்ட வசதிகள் குறைவின்றி வழங்கப்படுகிறதா என்று கேட்டார். மேலும் தேவையான வசதிகளை செய்து தர ஆணையிட்டார்.

இதையடுத்து ரயில்வே கேட் பகுதியில் அமைந்துள்ள துணை மின் நிலையம் தண்ணீரில் மூழ்கியிருந்தது. அங்கு சென்று பார்த்த மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அங்குள்ள நீரை வெளியேற்ற உடனடி நடவடிக்கை எடுக்க ஆணையிட்டார்.

தொடர்ந்து திருவாரூர், முகந்தனூர், கிளரியம் உள்ளிட்ட பகுதிக்கு சென்ற மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அங்கே நீரில் சூழ்ந்துள்ள கிராம மக்களை சந்தித்து ஆறுதல் கூறியதோடு அவர்களுக்கு உரிய அடிப்படை உதவிகள் கிடைத்திட நடவடிக்கை எடுத்தார்.

திருவாரூரில் கமலாபுரத்தைச் சேர்ந்த வைரக்கண்ணு என்பவர் சுவர் இடிந்து விழுந்து இறந்துவிட்டார். அவரது குடும்பத்திற்கு அரசின் சார்பில் வழங்கப்படும் 1 இலட்சத்திற்கான காசோலையினை வழங்கி ஆறுதல் கூறினார்.

இதனைத் தொடர்ந்து மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை அமைச்சர் அவர்கள் 29.11.2008 அன்று தஞ்சையில் தொடங்கி, சாலியமங்கலம் வழியாக நீடாமங்கலத்தை கடந்தும் தேசிய நெடுஞ்சாலை 4 அடி உயர தண்ணீரில் மூழ்கிருந்தது. அந்தச் சாலையில் மாண்புமிகு அமைச்சர் அவர்களின் வாகனம் நீந்தி ஊர்ந்து சென்றது. ஏறத்தாழ 20 கிலோ மீட்டர் தூரம் அதே நிலை நீடித்தது.

வழியெங்கும் ஆங்காங்கே மூழ்கிய பயிரையும் தண்ணீர் சூழ்ந்துள்ளபடி கலங்கி நின்ற தாய்மார்களுக்கும், விவசாயப் பெருங்குடி மக்களுக்கும் மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை அமைச்சர் அவர்கள் சென்று பார்த்து ஆறுதல் கூறியதும், மூழ்கிய பயிர்களுக்கு வாடி நின்ற விவசாயிகளை வாஞ்சையுடன் விசாரித்து மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்களின் அரசு கைவிடாது உங்களுக்கு உரிய நிவாரண உதவி வந்து சேரும் கவலை கொள்ள வேண்டாம் என்று அவர் கூறிய வார்த்தைகள் அங்கே வாடி நின்ற மக்களுக்கு ஆறுதலையும், தேறுதலையும் புதிய தெம்பையும் அளித்தது.

* * *



## மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் சீரிய முயற்சியில் இதுவரை 62 தமிழறிஞர்களின் நூல்கள் நாட்டுடைமை ஆக்கப்பட்டு 4 கோடியே 61 இலட்சம் ரூபாய் பரிவுத்தொகை வழங்கப்பட்டுள்ளது.



சிறந்த தமிழறிஞர்களின் நூல்கள் பொது மக்கள் அனைவரையும் சென்றடைதல் வேண்டும் என்னும் உணர்வோடு, அவர்தம் நூல்களை நாட்டுடைமையாக்கி, அவற்றைப் படைத்துள்ள சான்றோர்களின் மரபுரிமையர்க்குப் பரிவுத் தொகை வழங்கும் திட்டம் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் கலைஞர் அவர்களால் சீரிய முறையில் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

இத்திட்டத்தின்படி 2006–2007ஆம் ஆண்டில் 16 தமிழறிஞர்களின் நூல்கள் நாட்டுடைமை யாக்கப்பட்டு, அவர்களின் மரபுரிமையர்க்கு 1 கோடியே 23 இலட்ச ரூபாயும், 2007–2008ஆம் ஆண்டில் 19 தமிழறிஞர்களின் நூல்கள் நாட்டுடைமை யாக்கப்பட்டு, அவர்களின் மரபுரிமையர்க்கு 1 கோடியே 75 இலட்ச ரூபாயும் பரிவுத் தொகையாக வழங்கப்பட்டுள்ளது.

அதனைத் தொடர்ந்து, தமிழ்நாடு சட்டப் பேரவையில் 2008–2009ஆம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கையில், 27 தமிழறிஞர்களின் படைப்புகள் நாட்டுடைமை யாக்கப்படும் எனவும், அவர்களின் மரபுரிமையர்க்குப் பரிவுத் தொகை வழங்கப்படும் எனவும் அறிவிக்கப்பட்டது. அதற்கேற்ப, சான்றாவணம் அளித்த 21 தமிழறிஞர்களின் மரபுரிமையர்க்கு மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் 28.6.2008 அன்று மொத்தம் 1 கோடியே 15 இலட்சம் ரூபாய் பரிவுத் தொகை வழங்கினார்கள். மற்ற 6 தமிழறிஞர்களுள் மரபுரிமையர் சான்றாவணம் அளித்துள்ள சதாவதானி செய்குத்தம்பிப் பாவலர், டாக்டர் ரா.பி. சேதுப்பிள்ளை ஆகியோரின் மரபுரிமையர்க்குத் தலா 10 இலட்சம் ரூபாய் வீதம் 20 இலட்ச ரூபாய்; எழுத்தாளர் விந்தன், பேராசிரியர் திரு. ஆ. கார்மேகக்கோனார் ஆகியோரின் மரபுரிமையர்க்கு தலா 5 இலட்ச ரூபாய் வீதம் 10 இலட்ச ரூபாய்; 2006–2007ஆம் ஆண்டு அறிவிக்கப்பட்டவாறு மாயூரம் வேதநாயகம் பிள்ளை அவர்களின்



மரபுரிமையர்க்கு 6 இலட்ச ரூபாய்; கடந்த 29.9.2008 அன்று, உவமைக் கவிஞர் சுரதா அவர்களின் சிலை திறப்பு விழாவின்போது பாவலரேறு பெருஞ்சித்திரனார் அவர்களின் நூல்கள் நாட்டுடைமையாக்கப்படும் என மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் அறிவித்ததற்கிணங்க நாட்டுடைமையாக்கப்பட்டு அவரது மரபுரிமையர்க்கு 12 இலட்ச ரூபாய் என மொத்தம் 48 இலட்ச ரூபாய்க்கான காசோலைகளை, அவரவர்களின் மரபுரிமையர்கள் 97 பேருக்கு 28.11.2008 அன்று மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் வழங்கினார்.

சிறந்த தமிழறிஞர்களின் நூல்களை அரசுடைமையாக்கி அவர்களின் குடும்பங்களுக்கு ஆதரவு அளித்து வரும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் கலைஞர் அவர்களின் இந்த மகத்தான திட்டத்தின் வாயிலாக 2006க்குப் பின் இதுவரை 62 தமிழறிஞர்களின் படைப்புகள் நாட்டுடைமை யாக்கப்பட்டு அவர்தம் மரபுரிமையர் குடும்பங்களுக்கு மொத்தம் 4 கோடியே 61 இலட்ச ரூபாய் பரிவுத் தொகையாக வழங்கப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

**கவிதைப்போட்டியில்**
**வென்றோருக்குப் பரிசு**

இத்துடன், தமிழக அரசின் ஆட்சிமொழித் திட்டப் பொன்விழாவை முன்னிட்டு, அரசு அலுவலகங்களில் தமிழ் மொழி பயன்பாடு பற்றிய விழிப்புணர்வை வலுப்படுத்தும் நோக்கில், 2006 நவம்பர்த் திங்களில் அரசு அலுவலர்கள், பணியாளர்களுக்கெனவும், பொது மக்களுக்கெனவும் தமிழ் வளர்ச்சித்துறை இரண்டு பிரிவாக நடத்திய "ஆட்சியில் தமிழ்" எனும் தலைப்பிலான கவிதைப் போட்டியில் வெற்றி பெற்றவர்களில் ஒவ்வொரு பிரிவிலும் முதற் பரிசு 5 ஆயிரம் ரூபாய், இரண்டாம் பரிசு 3 ஆயிரம் ரூபாய், மூன்றாம் பரிசு 2 ஆயிரம் ரூபாய் எனவும், ஆறுதல் பரிசாக 500 ரூபாய் வீதம் 10 பேருக்குமாக மொத்தம் 16 கவிஞர்களுக்கு 25 ஆயிரம் ரூபாய்க்கான காசோலைகளையும், பாராட்டுச் சான்றிதழ்களையும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் வழங்கினார்.

மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடம் பரிவுத் தொகையாகவும், பரிசுத் தொகையாகவும் பெற்றுக் கொண்ட 113 பேரும் மிகுந்த மகிழ்ச்சியும், மனநிறைவும் கொண்டு மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் தமிழ்த் தொண்டுகளைப் பாராட்டி தங்களுடைய நெஞ்சார்ந்த நன்றிகளை நெகிழ்ச்சியுடன் தெரிவித்து வாழ்த்துகள் கூறினர்.

இந்நிகழ்வின்போது, தலைமைச் செயலாளர் திரு. கே. எஸ். ஸ்ரீபதி,இ.ஆ.ப., தமிழ்வளர்ச்சி, அறநிலையம் மற்றும் செய்தித்துறைச் செயலாளர் திரு. க. முத்துசாமி, இ.ஆ.ப., தமிழ் வளர்ச்சி இயக்குநர் (பொறுப்பு) வை.கண்ணபுரக்கண்ணன் ஆகியோர் உடனிருந்தனர்.

* * *



சிறுகதை

# செவ்வாழை

● அறிஞர் அண்ணா

செங்கோடன், அந்தச் செவ்வாழைக் கன்றைத் தன் செல்லப்பிள்ளைபோல் வளர்த்து வந்தான். இருட்டுகிற நேரம் வீடு திரும்பினாலும் கூட, வயலிலே அவன் பட்ட கஷ்டத்தைக் கூடப் பொருட்படுத்தாமல், கொல்லைப்புறம் சென்று, செவ்வாழைக் கன்றைப் பார்த்து விட்டு, தண்ணீர் போதுமானபடி பாய்ச்சப்பட்டிருக்கிறதா என்று கவனித்துவிட்டுத்தான், தன் நான்கு குழந்தைகளிடமும் பேசுவான். அவ்வளவு பிரேமையுடன் அந்தச் செவ்வாழையை அவன் வளர்த்து வந்தான். கன்று வளர வளர அவன் களிப்பும் வளர்ந்தது. செவ்வாழைக்கு நீர் பாய்ச்சும் போதும், கல் மண்ணைக் கிளறிவிடும் போதும், அவன் கண்கள் பூரிப்படையும் மகிழ்ச்சியால். கரியனிடம் – அவனுடைய முதல் பையன் காட்டியதைவிட அதிகமான அன்பும், அக்கரையும் காட்டுகிறாரே என்று ஆச்சரியம், சற்றுப் பொறாமை கூட ஏற்பட்டது, குப்பிக்கு.



"குப்பி! ஏதாச்சும் மாடு கீடு வந்து வாழையை மிதிச்சிடப்போகுது. ஜாக்ரதையாக் கவனிச்சுக்கோ. அருமையான கன்று – ஆமாம். செவ்வாழைன்னா சாமான்யமில்லே. குலை, எம்மாம் பெரிசா இருக்கும் தெரியுமோ? பழம், வீச்சு வீச்சாகவும் இருக்கும், உருண்டையாகவும் இருக்கும் – ரொம்ப ருசி – பழத்தைக் கண்ணாலே பார்த்தாக்கூடப் போதும்; பசியாறிப் போகும்" என்று குப்பியிடம் பெருமையாகப் பேசுவான் செங்கோடன்.

அப்பா சொல்லுவதை நாலு பிள்ளைகளும் ஆமோதிப்பார்கள் – அதுமட்டுமா – பக்கத்துக் குடிசை – எதிர்க் குடிசைகளிலே உள்ள குழந்தைகளிடமெல்லாம், இதே பெருமையைத் தான் பேசிக் கொள்வார்கள். உழவர் வீட்டுப் பிள்ளைகள், வேறே எதைப்பற்றிப் பேசிக் கொள்ள முடியும் – அப்பா வாங்கிய புதிய மோட்டாரைப் பற்றியா, அம்மாவின் வைரத்தோடு பற்றியா, அண்ணன் வாங்கிவந்த ரேடியோவைப் பற்றியா, எதைப்பற்றிப் பேச முடியும்? செவ்வாழைக் கன்றுதான், அவர்களுக்கு, மோட்டார், ரேடியோ, வைரமாலை, சகலமும்!

மூத்த பயல் கரியன், "செவ்வாழைக் குலை தள்ளியதும், ஒரு சீப்புப் பழம் எனக்குத்தான்" என்று சொல்லுவான்.

"ஒண்ணுக்கூட எனக்குத் தரமாட்டாயாடா– நான் உனக்கு மாம்பழம் தந்திருக்கிறேன்? கவனமிருக்கட்டும் – வறுத்த வேர்க்கடலை கொடுத்தி ருக்கிறேன்; கவனமிருக் கட்டும்" – என்று எதிர்க்குடிசை எல்லப்பன் கூறுவான்...

கரியனின் தங்கை, காமாட்சியோ, கண்ணைச் சிமிட்டிக் கொண்டே "உனக்கு ஒரு சீப்புன்னா, எனக்கு இரண்டு தெரியுமா? அம்மாவைக் கேட்டு ஒரு சீப்பு அப்பாவைக் கேட்டு ஒரு சீப்பு" என்று குறும்பாகப் பேசுவாள்.



சென்னை-600 008

மூன்றாவது பையன் முத்து, "சீப்புக் கணக்குப் போட்டுக்கிட்டு ஏமாந்து போகாதீங்க – ஆமா – பழமாவதற்குள்ளே யாரார் என்னென்ன செய்து விடுவாங்களோ, யாரு கண்டாங்க" என்று சொல்லுவான் – வெறும் வேடிக்கைக்காக அல்ல – திருடியாவது மற்றவர்களைவிட அதிகப்படியான பழங்களைத் தின்றே தீர்த்து விடுவது என்று தீர்மானித்தே விட்டான்.

செங்கோடனின் செல்லப் பிள்ளையாக வளர்ந்து வந்தது செவ்வாழை. உழைப்பு அதிகம் வயலில். பண்ணை மானேஜரின் ஆர்ப்பாட்டம் அதிகம். இவ்வளவையும் சகித்துக் கொள்வான் – செவ்வாழையைக் கண்டதும் சகலமும் மறந்துபோகும். குழந்தைகள் அழுதால், செவ்வாழையைக் காட்டித்தான் சமாதானப் படுத்துவான்! துஷ்டத்தனம் செய்கிற குழந்தையை மிரட்டவும், செவ்வாழையைத்தான் கவனப்படுத்துவான்! குழந்தைகள், பிரியமாகச் சாப்பிடுவார்கள், செவ்வாழையை என்ற எண்ணம் செங்கோடனுக்கு. பண்ணை வீட்டுப் பிள்ளைகள் ஆப்பிள், திராட்சை தின்ன முடிகிறது – கரியனும் முத்துவும், எப்படி விலை உயர்ந்த அந்தப் பழங்களைப் பெற முடியும்? செவ்வாழையைத் தந்து தன் குழந்தைகளைக் குதூகலிக்கச் செய்ய வேண்டும் என்ற எண்ணந்தான், செங்கோடனை, அந்தச் செவ்வாழைக் கன்றைச் செல்லமாக வளர்க்கும்படிச் செய்தது. உழவன் செங்கோடனிடம், எவ்வளவு பாடுபட்டாலும், குழந்தைகளுக்குப் பழமும் பட்சணமும் வாங்கித் தரக்கூடிய 'பணம்' எப்படிச் சேர முடியும்? கூலி நெல், பாதி வயிற்றை நிரப்பவே உதவும் – குப்பியின் 'பாடு' குடும்பத்தின் பசியைப் போக்கக் கொஞ்சம் உதவும். இப்படிப் பிழைப்பு! பலனில் மிகப் பெரும் பகுதியோ, பண்ணைக்குச் சேர்ந்து விடுகிறது. இந்தச் 'செவ்வாழை' ஒன்றுதான் அவன் சொந்தமாக மொத்தமாக பலன் பெறுவதற்கு உதவக்கூடிய, உழைப்பு! இதில் பங்கு பெற, பண்ணையார் குறுக்கிட முடியாதல்லவா? அவருக்காகப் பாடுபட்ட நேரம் போக, மிச்சமிருப்பதிலே, அலுத்துப் படுக்க வேண்டிய நேரத்திலே பாடுபட்டு கண்ணைப் போல வளர்த்து வரும், செவ்வாழை! இதன் முழுப் பயனும் தன் குடும்பத்துக்கு! இது ஒன்றிலாவது தான் பட்ட பாட்டுக்கு உரிய பலனைத் தானே பெற முடிகிறதே என்ற சந்தோஷம் செங்கோடனுக்கு.

இவ்வளவும் அவன் மனதிலே, தெளிவாகத் தோன்றிய கருத்துக்கள் அல்ல. புகைப்படலம் போல, அந்த எண்ணம் தோன்றும், மறையும் – செவ்வாழையைப் பார்க்கும்போது பூரிப்புடன் பெருமையும் அவன் அடைந்ததற்குக் காரணம் இந்த எண்ணந்தான்.



கன்று வளர்ந்தது கள்ளங் கபடமின்றி, செங்கோடனுக்குக் களிப்பும் வளர்ந்தது. செங்கோடனின் குழந்தைகளுக்கு இப்போது, விளையாட்டு இடமே, செவ்வாழை இருந்த இடந்தான்! மலரிடம் மங்கையருக்கும், தேனிடம் வண்டுகளுக்கும் ஏற்படும் பிரேமை போல, அந்தக் குழந்தைகளுக்குச் செவ்வாழையிடம் பாசம் ஏற்பட்டு விட்டது.

> "கன்று வளர்ந்தது
> கள்ளங் கபடமின்றி,
> செங்கோடனுக்குக்
> களிப்பும் வளர்ந்தது.
> செங்கோடனின்
> குழந்தைகளுக்கு இப்போது,
> விளையாட்டு இடமே,
> செவ்வாழை இருந்த இடந்தான்!"

"இன்னும் ஒரு மாசத்திலே குலை தள்ளுமாப்பா?" கரியன் கேட்பான், ஆவலுடன், செங்கோடனை.

"இரண்டு மாசமாகும்டா கண்ணு" என்று செங்கோடன் பதிலளிப்பான்.

செவ்வாழை குலை தள்ளிற்று – செங்கோடனின் நடையிலேயே ஒரு புது முறுக்கு ஏற்பட்டுவிட்டது. நிமிர்ந்து பார்ப்பான், குலையை பெருமையுடன்.

பண்ணை பரந்தாம முதலியார், தமது மருமகப் பெண் முத்துவிஜயாவின் பொன்னிற மேனியை அழகுபடுத்திய வைர மாலையைக் கூட அவ்வளவு பெருமையுடன் பார்த்திருக்க மாட்டார்! செங்கோடனின் கண்களுக்கு, அந்தச் செவ்வாழைக் குலை, முத்துவிஜயாவின் வைர மாலையைவிட விலை மதிப்புள்ளதாகத்தான் தோன்றிற்று, குலை முற்றமுற்ற, செங்கோடனின் குழந்தைகளின் ஆவலும், சச்சரவும், பங்குத் தகராறும், அப்பாவிடமோ அம்மாவிடமோ 'அப்பீல்' செய்வதும் ஓங்கி வளரலாயிற்று, "எப்போது பழமாகும்?" என்று கேட்பாள் பெண். 'எத்தனை நாளைக்கு மரத்திலேயே இருப்பது?' என்று கேட்பான் பையன். செங்கோடன், பக்குவமறிந்து குலையை வெட்டி, பதமாகப் பழுக்க வைத்துப் பிள்ளைகளுக்குத் தர வேண்டுமென்று எண்ணிக்கொண்டிருந்தான். உழைப்பின் விளைவு! முழுப் பலனை நாம் பெறப் போகிறோம்–இடையே தரகர் இல்லை – முக்காலே மூன்று வீசம் பாகத்தைப் பறித்துக் கொள்ளும் முதலாளி இல்லை. உழைப்பு நம்முடையது என்றாலும் உடைமை பண்ணையாருடையது – அவர் எடுத்துக் கொண்டது போக மீதம்தானே தனக்கு என்று, வயலில் விளையும் செந்நெல்லைப் பற்றி எண்ண வேண்டும் – அதுதானே



முறை! ஆனால் இந்தச் செவ்வாழை அப்படி அல்ல! உழைப்பும் உடைமையும் செங்கோடனுக்கே சொந்தம்.

இரண்டு நாளையில், குலையை வெட்டிவிடத் தீர்மானித்தான் – பிள்ளைகள் துள்ளின சந்தோஷத்தால், மற்ற உழவர் வீட்டுப் பிள்ளைகளிடம் 'சேதி' பறந்தது – பழம் தர வேண்டும் என்று சொல்லி, அவலோ, கடலையோ, கிழங்கோ, மாம்பிஞ்சோ, எதை எதையோ, 'அச்சாரம்' கொடுத்தனர். பல குழந்தைகள், கரியனிடம்.

பாடுபட்டோம், பலனைப் பெறப் போகிறோம், இதிலே ஏற்படுகிற மகிழ்ச்சிக்கு ஈடு எதுவும் இல்லை. இதைப் போலவே, வயலிலும் நாம் பாடுபடுவது நமக்கு முழுப்பயன் அளிப்பதாக இருந்தால் எவ்வளவு இன்பமாக இருக்கும்! செவ்வாழைக்காக நாம் செலவிட்ட உழைப்பு பண்ணையாரின் நிலத்துக்காகச் செலவிட்ட உழைப்பிலே, நூற்றுக்கு ஒரு பாகம்கூட இராது – ஆனால் உழைப்பு நம்முடையதாகவும் வயல் அவருடைய உடைமையாகவும் இருந்ததால் பலனை அவர் அனுபவிக்கிறார் பெரும்பகுதி. இதோ, இந்தச் செவ்வாழை நம்ம கொல்லையிலே நாம் உழைத்து வளர்த்தது – எனவே பலன் நமக்குக் கிடைக்கிறது – இதுபோல, நாம் உழைத்துப் பிழைக்க நம்முடையது என்று ஒரு துண்டு வயல் இருந்தால், எவ்வளவு இன்பமாக இருக்கும். அப்படி ஒரு காலம் வருமா! உழைப்பவனுக்குத்தான் நிலம் சொந்தம் – பாடுபடாதவன் பண்ணையாராக இருக்கக்கூடாது என்று சொல்லும் காலம் எப்போதாவது வருமா என்றெல்லாம்கூட, இலேசாகச் செங்கோடன் எண்ணத் தொடங்கினான். செவ்வாழை இதுபோன்ற சித்தாந்தங்களைக் கிளறிவிட்டது அவன் மனதில். குழந்தைகளுக்கோ நாக்கிலே நீர் ஊறலாயிற்று.

செங்கோடன் செவ்வாழைக் குலையைக் கண்டு களித்திருந்த சமயம், பண்ணை பரந்தாமர், தமது மருமகப் பெண் முத்து விஜயத்தின் பிறந்தநாள் விழாவை விமரிசையாகக் கொண்டாட ஏற்பாடுகள் செய்து கொண்டிருந்தார். அம்பிகை கோயிலில் அபிஷேக ஆராதனை செய்வதற்காக, 'ஐயரிடம்' சொல்லி விட்டார். கணக்கப் பிள்ளையைக் கூப்பிட்டு, 'பட்டி' தயாரிக்கச் சொன்னார். பல பண்டங்களைப் பற்றிக் குறிப்பு எழுதும் போது, 'பழம்' தேவை என்று தோன்றாமலிருக்குமா? 'இரண்டு சீப்பு வாழைப்பழம்' என்றார் பண்ணையார்.





## அண்ணாவின் பொன்மொழி

### மக்கள் வாழ்வு

சமுதாயக் கொடுமைகள்
ஒருபுறமும் சாதிப் பூசல்கள் ஒருபுறமும்,
வைதீகம் ஒரு புறமும், வீண் வாய் வேதாந்தம்
வேறோர் புறமும் இருந்து கொண்டிருப்பதால்தான்
இந்த நாட்டில் வீரர்கள் கோழைகளாகின்றனர்.
மக்கள் வாழ்வு வழுக்கு நிலமாகிறது.

"ஏனுங்க பழம் – கடையிலே நல்ல பழமே இல்லை – பச்சை நாடாத்தான் இருக்கு" என்று இழுத்தான் சுந்தரம், கணக்கப்பிள்ளை.

"சரிடா, அதிலேதான் இரண்டு சீப்பு வாங்கேன்? – வேறே நல்ல பழமா எங்கே இருக்கு!" என்று பண்ணையார் சொல்லி முடிப்பதற்குள், சுந்தரம், "நம்ம செங்கோடன் கொல்லையிலே, தரமா, ஒரு செவ்வாழைக் குலை இருக்குதுங்க – அதை கொண்டுகிட்டு வரலாம்" என்றான். "சரி" என்றார் பண்ணையார்.

செங்கோடனின் செவ்வாழைக் குலை! அவனுடைய இன்பக் கனவு!! உழைப்பின் விளைவு!! குழந்தைகளின் குதூகலம்!! அதற்கு மரண ஓலை தயாரித்துவிட்டான் சுந்தரம்!

எத்தனையோ பகல் பார்த்துப் பார்த்து, செங்கோடனின் குடும்பம் பூராவும் பூரித்தது அந்தக் குலையை! அதற்குக் கொலை காரனானான் சுந்தரம். மகிழ்ச்சி, பெருமை, நம்பிக்கை இவைகளைத் தந்து வந்த, அந்தச் செவ்வாழைக் குலைக்கு வந்தது ஆபத்து.

தெருவிலே, சுந்தரமும் செங்கோடனும் பேசும்போது குழந்தைகள், செவ்வாழையைப் பற்றியதாக இருக்கும் என்று எண்ணவே இல்லை! செங்கோடனுக்குத் தலை கிறுகிறுவென்று சுற்றிற்று – நாக்குக் குழறிற்று – வார்த்தைகள் குபுகுபுவென்று கிளம்பி, தொண்டையில் சிக்கிக் கொண்டன.

மாட்டுப் பெண்ணுக்கு பிறந்த நாள் பூஜை – என்று காரணம் காட்டினான் சுந்தரம். என்ன செய்வான் செங்கோடன்! என்ன சொல்வான்? அவன் உள்ளத்திலே, வாழையோடு சேர்ந்து வளர்ந்த ஆசை – அவன் குழந்தைகளின் நாக்கில் நீர் ஊறச் செய்த ஆசை – இன்று

– நாளை, என்று நாள் பார்த்துக் கொண்டிருந்த ஆவல் – எனும் எதைத்தான் சொல்ல முடியும் ? கேட்பவர் பண்ணை பரந்தாமர்! எவ்வளவு அல்பனடா, வாழைக் குலையை அவர் வாய் திறந்து, உன்னை ஒரு பொருட்டாக மதித்துக் கேட்டனுப்பினால் முடியாது என்று சொல்லிவிட்டாயே! அவருடைய உப்பைத் தின்று பிழைக்கிறவனுக்கு, இவ்வளவு நன்றி கெட்டதனமா ? கேவலம், ஒரு வாழைக் குலை! அவருடைய அந்தஸ்துக்கு, இது ஒரு பிரமாதமா! என்று ஊர் ஏசுகிறது போல், அவன் கண்களுக்குத் தெரிகிறது.

'அப்பா' ஆசை காட்டி மோசம் செய்யாதே! நான் கூடத்தான் தண்ணீர் பாய்ச்சினேன் – மாடு மிதித்து விடாதபடி பாதுகாத்தேன் – செவ்வாழை ரொம்ப ருசியாக இருக்கும். கல்கண்டு போல இருக்கும் என்று நீதானே என்னிடம் சொன்னாய். அப்பா! தங்கச்சிக்குக்கூட, 'உசிர்' அந்தப் பழத்திடம். மரத்தை அண்ணாந்து பார்க்கும்போதே, நாக்கிலே நீர் ஊறும். எங்களுக்குத் தருவதாகச் சொல்லிவிட்டு, இப்பொழுது ஏமாற்றுகிறாயே. நாங்கள் என்னப்பா, உன்னை கடையிலே காசு போட்டுத் திராட்சை, கமலாவா வாங்கித் தரச் சொன்னோம். நம்ம கொல்லையிலே நாம் வளர்த்ததல்லவா! – என்று அழு குரலுடன் கேட்கும் குழந்தைகளும், 'குழந்தைகளைத் தவிக்கச் செய்கிறாயே, நியாயமா ?' என்று கோபத்துடன் கேட்கும் மனைவியும், அவன் மனக்கண்களுக்குத் தெரிந்தனர்! எதிரே நின்றவரோ, பண்ணைக் கணக்கப் பிள்ளை! அரிவாள் இருக்குமிடம் சென்றான். 'அப்பா, குலையை வெட்டப் போறாரு – செவ்வாழைக் குலை' என்று ஆனந்தக் கூச்சலிட்டுக் கொண்டு, குழந்தைகள் கூத்தாடின. செங்கோடனின் கண்களிலே நீர்த்துளிகள் கிளம்பின! குலையை வெட்டினான் – உள்ளே கொண்டு வந்தான் – அரிவாளைக் கீழே போட்டான் – 'குலையைக் கீழே வை அப்பா, தொட்டுப் பார்க்கலாம்' என்று குதித்தன குழந்தைகள். கரியனின் முதுகைத் தடவினான் செங்கோடன். "கண்ணு! இந்தக் குலை, நம்ம ஆண்டைக்கு வேணுமாம் கொண்டு போகிறேன் – அழாதீங்க – இன்னும் ஒரு மாசத்திலே, பக்கத்துக் கண்ணு மரமாகிக் குலை தள்ளும். அது உங்களுக்குக் கட்டாயமாகக் கொடுத்து விடறேன்" என்று கூறிக் கொண்டே, வீட்டை விட்டுக் கிளம்பினான், குழந்தையின் அழுகுரல், மனதைப் பிளப்பதற்குள்.

செங்கோடன் குடிசை அன்று பிணம் விழுந்த இடம் போலாயிற்று, இரவு நெடுநேரத்திற்குப் பிறகுதான் செங்கோடனுக்குத் துணிவு பிறந்தது வீட்டுக்கு வர! அழுது அலுத்துத் தூங்கிவிட்ட குழந்தைகளைப் பார்த்தான். அவன் கண்களிலே, குபுகுபுவெனக் கண்ணீர் கிளம்பிற்று. துடைத்துக் கொண்டு, படுத்துப் புரண்டான் – அவன் மனதிலே ஆயிரம் எண்ணங்கள். செவ்வாழையை, செல்லப் பிள்ளை போல் வளர்த்து என்ன பலன்...!



அவருக்கு அது ஒரு பிரமாதமல்ல – ஆயிரம் குலைகளையும் அவர் நினைத்த மாத்திரத்தில் வாங்க முடியும்! ஆனால் செங்கோடனுக்கு. . .? அந்த ஒரு குலையைக் காண அவன் எவ்வளவு பாடுபட்டான் – எத்தனை இரவு அதைப் பற்றி இன்பமான கனவுகள் – எத்தனை ஆயிரம் தடவை, குழந்தைகளுக்கு ஆசை காட்டியிருப்பான்! உழைப்பு எவ்வளவு! அக்கரை எத்துணை! எல்லாம் ஒரு நொடியில் அழிந்தன!

நாலு நாட்கள் சமாதானம் சொல்லியும், குழந்தைகளின் குமுறல் ஓயவில்லை. கரியன் ஒரே பிடிவாதம் செய்தான், ஒரு பழம் வேண்டுமென்று. குப்பி, பழங்காலத்திலிருந்து ஒரு காலணாவை எடுத்துக் கொடுத்தனுப்பினாள். பழம் வாங்கிக் கொள்ளச் சொல்லி. பறந்தோடினான் கரியன்.

கடையிலே செவ்வாழைச் சீப்பு, அழகாகத் தொங்கிக் கொண்டிருந்தது. கணக்கப்பிள்ளை, பண்ணை வீட்டிலே இருந்து நாலு சீப்பை முதலிலேயே தீர்த்துவிட்டான் – அவன் விற்றான் கடைக்காரனுக்கு – அதன் எதிரே, ஏக்கத்துடன் நின்றான் கரியன்! "பழம், ஒரு அணாடா, பயலே – காலணாவுக்குச் செவ்வாழை கிடைக்குமா – போடா" என்று விரட்டினான், கடைக்காரன். கரியன் அறிவானா, பாபம், தன் கொல்லையிலே இருந்த செவ்வாழை, இப்போது கடையில் கொலு வீற்றிருக்கிறது என்ற விந்தையை! பாபம்! எத்தனையோ நாள், அந்தச் சிறுவன், தண்ணீர் பாய்ச்சினான், பழம் கிடைக்குமென்று! பழம் இருக்கிறது; கரியனுக்கு எட்டாத இடத்தில்! விசாரத்தோடு வீட்டிற்கு வந்தான், வறுத்த கடலையை வாங்கிக் கொரித்துக்கொண்டே. செங்கோடன், கொல்லைப் புறத்திலிருந்து வெளியே வந்தான், வாழை மரத்துண்டுடன்.

"ஏம்பா! இதுவும் பண்ணை வீட்டுக்கா ?" என்று கேட்டான் கரியன்.

"இல்லேடா, கண்ணு! நம் பார்வதி பாட்டி செத்துப் போயிட்டா, அந்தப் பாடையிலே கட்ட" என்றான் செங்கோடன்.

அலங்காரப் பாடையிலே, செவ்வாழையின் துண்டு!

பாடையைச் சுற்றி அழுகுரல்!

கரியனும், மற்றக் குழந்தைகளும், பின்பக்கம்.

கரியன் பெருமையாகப் பாடையைக் காட்டிச் சொன்னான். "எங்க வீட்டுச் செவ்வாழைடா" என்று.

"எங்க கொல்லையிலே இருந்த செவ்வாழைக் குலையைப் பண்ணை வீட்டுக்குக் கொடுத்து விட்டோம் – மரத்தை வெட்டி 'பாடை'யிலே கட்டி விட்டோம்" என்றான் கரியன்.

பாபம், சிறுவன்தானே!! அவன் என்ன கண்டான், செங்கோடனின் செவ்வாழை. தொழிலாளர் உலகிலே சர்வ சாதாரணச் சம்பவம் என்பதை.

✱



# பெரம்பலூர் மாவட்டத்தில் ரூ.24.22 கோடி மதிப்பிலான புதிய திட்டப்பணிகள்

### மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் தொடங்கி வைத்தார்



பெரம்பலூர் மாவட்ட ஆட்சியரக பெருந்திட்ட வளாகத் திடலில் 26.9.2008 அன்று நடைபெற்ற அரசு விழாவில் மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை அமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் அவர்கள், ரூ. 24.22 கோடி மதிப்பிலான 151 புதிய திட்டப்பணிகளைத் தொடங்கி வைத்து, 11 ஆயிரத்து 347 மகளிர் சுயஉதவிக்குழு உறுப்பினர்களுக்கு ரூ. 3 கோடியே 84 இலட்சம் மதிப்பில் சுழல்நிதி மற்றும் கடனுதவிகளை வழங்கினார். இந்த விழாவில், புதிய திட்டப் பணிகளைத் தொடங்கிவைத்து மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் அவர்கள் சிறப்புரையாற்றும்போது, "கடந்த இரண்டரை ஆண்டுகளில் மூன்றாவது முறையாக பெரம்பலூருக்கு வருகை தந்து பல்வேறு வளர்ச்சித் திட்டப்பணிகளைத் தொடங்கி வைப்பதில் மிகுந்த மகிழ்ச்சி அடைகிறேன். குறிப்பாக, பெரம்பலூர் மாவட்டத்தில் உள்ள 4 ஊராட்சி ஒன்றியங்களுக்கும் காவிரி கூட்டுக் குடிநீர் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகின்றது. பெரம்பலூர் நகராட்சி மக்களுக்காக ரூ. 28 கோடி மதிப்பில் பாதாளச் சாக்கடைத் திட்டம் தொடங்கப்பட்டுள்ளது". இதுதவிர, இன்றைய விழாவில் தொடங்கப்பட்டுள்ள முழு கணினி மாவட்டம் திட்டத்திற்கும், மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் மக்கள் சேவை மையம் பணிகளை நிறைவேற்ற மத்திய அரசு ரூ. 3 கோடியே 4 லட்சம் ஒதுக்கீடு வழங்கியுள்ளது. மேலும், மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளிலும் 3ஐ இன்போடெக் நிறுவனம் பெரம்பலூர் மாவட்டத்தில் 51 மையங்களையும், அரியலூர் மாவட்டத்தில் 72 மையங்களையும் தொடங்கி அரசின் 200 வகையான படிவங்களையும், 110 சேவை திட்டங்களையும் அந்தந்த கிராமப் பகுதிகளில் பொதுமக்கள் எளிதாக பெறும் வசதியும் ஏற்படுத்தப் பட்டுள்ளது. பெரம்பலூர் மாவட்டத்தில் இதுவரை 3 ஆயிரத்து 127 சுயஉதவிக் குழுக்கள் தொடங்கப் பட்டுள்ளன. இவற்றில் 49 ஆயிரத்து 555 மகளிர் உறுப்பினராக உள்ளார்கள். இவர்கள் மூலம் ரூ. 8 கோடி 47 இலட்சம் சேமிக்கப்பட்டுள்ளது. இக்குழுக்கள் உட்கடன் வழங்கியதில் ரூ. 46 கோடியே 84 இலட்சம் புழக்கத்தில் உள்ளது.

2006ஆம் ஆண்டு முதல் 513 மகளிர் சுயஉதவிக் குழுக்களும், 201 ஆண்கள் சுயஉதவிக் குழுக்களும் துவக்கப்பட்டுள்ளன. இன்றைய விழாவில், மாவட்டத்தின் வளர்ச்சிக்காக ரூ. 14 கோடி மதிப்பில் நிறைவேற்றப்பட்டுள்ள 121 பணிகள் திறந்து வைக்கப்பட்டுள்ளன. ரூ. 5 கோடியே 87 லட்சம் மதிப்பிலான 30 புதிய திட்டங்களுக்கு அடிக்கல் நாட்டப்பட்டுள்ளது. மகளிர் குழுக்களுக்கு சுழல்நிதி வழங்குவதுடன், அரசின் பல்வேறு துறைகளின் மூலம் 2,848 பயனாளிகளுக்கு ரூ. 4 கோடி மதிப்பில் நலத்திட்ட உதவிகளும் வழங்கப்படுகின்றன. மகளிர் சுயஉதவிக் குழுக்களின் முன்னேற்றத்தைக் கருத்தில் கொண்டு மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் இந்த ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கையில் 1 இலட்சத்து 50 ஆயிரம் சுயஉதவிக் குழுக்களுக்கு ரூ. 150 கோடியினை ஒதுக்கீடு செய்து மானியமாக வழங்க உத்தரவிட்டுள்ளார். 99% சதவீத அளவுக்கு கடனை பெண்கள் திரும்பச் செலுத்துகின்றனர் என்பதை எண்ணி மகிழ்ச்சி அடைகின்றேன். இவற்றை மாவட்ட மக்கள் நல்ல முறையில் பயன்படுத்தி முன்னேற வேண்டும். மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் பொறுப்பேற்ற நாள் முதல் பல்வேறு புதிய திட்டங்களை அறிவித்து செயல்படுத்தி வருகின்றார். 1 கிலோ அரிசி 2 ரூபாய்க்கு வழங்கியதை பேரறிஞர் அண்ணா நூற்றாண்டு பிறந்தநாள் முதல் 1 கிலோ அரிசி 1 ரூபாய்க்கு வழங்கும் திட்டத்தை தொடங்கி வைத்துள்ளார். ஏழைப் பெண்களின் திருமணத்திற்கு ரூ. 5 ஆயிரம் வழங்கப்பட்டதை படிப்படியாக உயர்த்தி தற்பொழுது ரூ. 20 ஆயிரம் வழங்கப்படுகிறது. 50 வயதுவரை திருமணம் ஆகாத முதிர்கன்னிகளுக்கு மாதந்தோறும் ரூ. 400 வழங்கும் திட்டம் இந்த ஆட்சியில் தொடங்கப்பட்டுள்ளது. அனைவருக்கும் இல்வச வண்ணத் தொலைக்காட்சிப்பெட்டி வழங்கும் திட்டத்தில் 4ஆவது கட்டமாக 40 இலட்சம் வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகள் வழங்க ஒப்பந்தம் கோரப்பட்டுள்ளது. இதுபோல் இந்த அரசு அறிவிக்கும் அனைத்து திட்டங்களும் மக்களுக்கு பயனுள்ள வகையில் செயல்படுத்தப்படும், என்று தெரிவித்தார். முன்னதாக, மாண்புமிகு உள்ளாட்சி மற்றும் ஊரக வளர்ச்சித்துறை அமைச்சர் அவர்கள் பெரம்பலூர், அரியலூர் மாவட்டங்களில் தொடங்கப்படவுள்ள 123 பொது சேவை மையங்களைத் தொடங்கி வைத்து, அரணாரை மற்றும் வாலாஜாநகரம் மையத்தில் உள்ள மகளிர் சுயஉதவிக்குழு உறுப்பினர்கள் மற்றும் உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகளுடன் வீடியோ கான்பரன்ஸிங் முறையில் உரையாடி இத்திட்டத்தின் பயன்கள் குறித்தும், அப்பகுதிக்கான அடிப்படை வசதிகள் குறித்தும் கேட்டறிந்தார். இந்த விழாவில் மாண்புமிகு மத்தியத் தொலைத்தொடர்பு மற்றும் தகவல் தொழில்நுட்பத்துறை அமைச்சர் திரு. ஆ.இராசா அவர்கள் தலைமை வகித்துப் பேசும் போது,"தமிழகத்திலேயே பெரம்பலூர், அரியலூர் மாவட்டங்களில்தான் அனைத்துக் குடியிருப்பு களுக்கும் ரூ. 231.95 கோடி மதிப்பிலான காவிரி கூட்டுக்குடிநீர்த் திட்டம் முழுமையாக நிறைவேற்றப்பட்டுள்ளது என்பதை பெருமையுடன் தெரிவித்துக் கொள்கிறேன். இதேபோல், பெரம்பலூரில் அரசு மருத்துவக்கல்லூரியும், அரியலூரில் அரசு பொறியியல் கல்லூரியும் ஒரே ஆண்டில் தொடங்கப்பட்டுள்ளதும் இங்குதான். கடந்த ஆண்டுகளில் அரசு கலைக்கல்லூரியும், 2 அரசு தொழிற்பயிற்சி நிலையங்களும் இங்குதான் ஒரே ஆண்டில் தொடங்கப்பட்டுள்ளது என்று தெரிவித்தார். இவ்விழாவில், மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் திரு. கே.என். நேரு, மாண்புமிகு வருவாய் மற்றும் வீட்டுவசதித்துறை அமைச்சர் திரு. இ. பெரியசாமி, மாண்புமிகு வனத்துறை அமைச்சர் திரு. என். செல்வராஜ் ஆகியோர் முன்னிலை வகித்தனர். முன்னதாக, மாவட்ட ஆட்சியர் திரு. அனில் மேஷராம், இ.ஆ.ப., அனைவரையும் வரவேற்றார், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட அலுவலர் வெ. நடராஜன் நன்றி கூறினார். இந்த விழாவில் பெரம்பலூர் அரசு மருத்துவக் கல்லூரிக்கு மாண்புமிகு மத்திய அமைச்சர் திரு.ஆ. இராசா அவர்களின் தந்தை பெயரிலான "ஆண்டிமுத்து சின்னப்பிள்ளை அறக்கட்டளையின்" மூலம் 30 ஏக்கர் நில தானம் வழங்குவதற்கான ஆவணங்களை மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் அவர்கள், மருத்துவக்கல்லூரி முதல்வர் மற்றும் தனி அலுவலர் பாலசுப்பிரமணியன் அவர்களிடம் வழங்கினார். இதேபோல், முழு கணினி மாவட்ட திட்டத்தின் தொடக்கமாக மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் அவர்கள் மடி கணினியை மாவட்ட ஆட்சியரிடம் வழங்கினார்.

த. மருதபிள்ளை,
செய்தி–மக்கள் தொடர்பு அலுவலர்,
பெரம்பலூர்.



# கிராமசபைக் கூட்டத்தில்

## மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை அமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் அவர்கள் பங்கேற்பு



தமிழக ஊராட்சிகளில் ஒவ்வொரு ஆண்டும் நான்கு முறை கிராமசபைக் கூட்டங்கள் நடத்தப்பட்டு வருகிறது. அதன் தொடர்ச்சியாக, 2.10.2008 அன்று உத்தமர் காந்தியடிகள் அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு, தமிழகம் முழுவதும் உள்ள ஊராட்சிகளில் கிராமசபைக் கூட்டங்கள் நடைபெற்றது. அக்கூட்டத்தில், தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தின் சமூக தணிக்கை, அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தில் துவக்கப்பட்ட பணிகள் மற்றும் அதன் முன்னேற்றங்கள், முழு சுகாதார இயக்கத்தின் பணிகள், புதிதாக அறிமுகப்படுத்தப்பட்ட ஊரக அடிப்படை வசதித் திட்டம் பற்றிய விவரங்கள், 2007–2008ஆம் ஆண்டிற்கான கிராமக் கணக்குகள் மற்றும் தணிக்கை, ஊராட்சித் தலைவர் எழுப்பும் இதர முக்கியத் தலைப்புகளில் கலந்துரையாடல் நடைபெற்று ஊராட்சியின் வளர்ச்சிக்கு முக்கிய முடிவுகள் எடுக்கப்படுகின்றன. இக்கூட்டத்தில் ஊராட்சித் தலைவர், பொதுமக்கள், அரசு சாரா அமைப்பைச் சார்ந்தவர்கள், மகளிர் சுய உதவிக்குழு உறுப்பினர்கள், ஊரக வளர்ச்சித்துறை அலுவலர்கள், ஊழியர்கள் பங்கேற்கின்றனர்.

திருவள்ளூர் மாவட்டம், வில்லிவாக்கம் சட்டமன்றத் தொகுதியில் உள்ள காரம்பாக்கம் ஊராட்சியில் நடைபெற்ற கிராமசபைக் கூட்டத்தில், மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை அமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் அவர்கள், எந்தவித முன்னறிவிப்புமின்றி, பொதுமக்களுடன் பொதுமக்களாகக் கலந்து கொண்டார். மாண்புமிகு அமைச்சர் அவர்களுடன், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையின் முதன்மைச் செயலர் திரு. க. அஷோக் வர்தன் ஷெட்டி, இ.ஆ.ப., திருவள்ளூர் மாவட்ட ஆட்சியர் டாக்டர் இராஜேந்திர குமார், இ.ஆ.ப., ஆகியோரும் கலந்துகொண்டார்கள்.

மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை அமைச்சர் அவர்கள், கூட்டத்தில் பங்கேற்று, சென்ற முறை நடத்தப்பட்ட கிராம ஊராட்சியின் நடவடிக்கைக் குறிப்பை நேரடியாக ஆய்வு செய்ததுடன் 2007–2008ஆம் ஆண்டிற்கான தணிக்கை செய்யப்பட்ட கிராமக் கணக்குகளைக் கேட்டார்.



2007–2008ஆம் ஆண்டு கிராமக் கணக்கு தணிக்கை செய்யப்படாமலிருந்ததைக் கண்டறிந்து, சம்பந்தப்பட்ட அலுவலர் மீது உடனடி நடவடிக்கை மேற்கொள்ள அறிவுறுத்தினார். இக்கூட்டத்தில், கட்சி வேறுபாடின்றி பங்கேற்ற பொதுமக்கள் தெரிவித்த அனைத்து கருத்துக்களையும் கேட்டறிந்தார்.

மகளிர் சுய உதவிக் குழுக்களின் சார்பில் கேட்டுக்கொண்டபடி, தகுதியுள்ள எஞ்சிய 27 சுய உதவிக் குழுக்களுக்கும் உடனடியாக சுழல் நிதி வழங்க, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆணையிட்டதுடன், காரம்பாக்கம் – காந்திநகர், அன்னை அஞ்சுகம் நகர் பகுதியில் நீண்ட நாட்களாகத் தீர்க்கப்படாமல் உள்ள பட்டா தொடர்புடைய பிரச்சினைகளுக்கு உடனடித் தீர்வுகாண, திருவள்ளூர் மாவட்ட ஆட்சியருக்கு அறிவுரை வழங்கினார்கள்.

மேலும், இக்கூட்டத்தில், பொதுமக்களால் கோரப்பட்டபடி செட்டியார் அகரம் பகுதியில் 3.5 கி.மீ தூரத்திற்கு உள்ள ஒன்றியச் சாலைகளை தார்ச்சாலையாக தரமான முறையில் உடனடியாக அமைத்திடவும், மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆணையிட்டார்கள்.

இக்கூட்டத்தில் நடைபெற்ற கலந்துரையாடலைக் கேட்டு, நிதர்சனமான உண்மைகளை அறிந்து, ஊராட்சிக்கு உடனடியாகத் தேவைப்படும் பணிகளுக்கு, நிதி ஆதாரங்களை உருவாக்குவதற்குரிய கருத்துகளை வழங்கி, அவர்கள் இதுவரை செய்துள்ள பணிகளுக்குப் பாராட்டு தெரிவித்து, மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை அமைச்சர் அவர்கள் சிறப்புரையாற்றிய தன்மையை பொதுமக்கள் மகிழ்ச்சியுடன் வரவேற்றார்கள்.

❖ ❖ ❖

## அண்ணாவின் பொன்மொழி



### தமிழனின் பண்பு

தமிழர்கள் தங்களை உணரத் தொடங்கி விட்டார்கள் தமிழனின் பண்பு யாருக்கும் தாழ்ந்தவனாக இருப்பதல்ல; யாரையும் தாழ்த்துவதும் அல்ல. தமிழகம் உலகின் ஒரு பகுதியாக இருக்கலாம். ஆனால் அது யாருடைய வேட்டைக் காடாகவும் இருந்திட ஒரு போதும் ஒருப்பட மாட்டோம்.



# சென்னை மாநகராட்சிப் பள்ளிகளில் பயிலும் உடல் ஊனமுற்ற மாணவர்கள் மற்றும் அவர்களின் பெற்றோருக்கு முதல்முறையாக இலவச பேருந்துப் பயண அட்டைகள்



மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை அமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் 21.11.2008 அன்று வழங்கினார்கள்

இயலா குழந்தைகள் பேச்சுத்திறன் பயிற்சியும், உடல் வள நலப்பயிற்சியும் பெறுவதற்கு தனியார் நிறுவனத்தால் நடத்தப்படும் பயிற்சி மையங்களுக்குச் சென்று வர மாநகராட்சிப் பள்ளிகளில் பயிலும் மாணவ / மாணவியருக்கும், அவர்களின் பெற்றோர் ஒருவருக்கும் பேருந்தில் பயணம் மேற்கொள்ள இலவச பேருந்து பயண அட்டைகள் வழங்கப்படும் என்றும், இச்செலவினத்தை சென்னை மாநகராட்சி ஏற்கும் என்றும் சென்னை மாநகராட்சி நிதிநிலை அறிக்கையில் அறிவிக்கப்பட்டது.

இத்திட்டத்தின் துவக்கமாக மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை அமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் 21.11.2008 அன்று தலைமைச் செயலகத்தில் பேச்சுத்திறன் பயிற்சியும், உடல் வளப் பயிற்சியும் பெற உள்ள 22 மாணவர் களுக்கும், மாணவர்களுடன் பயிற்சி மையத்திற்குச் சென்று வர அவர்களுடைய பெற்றோர் ஒருவருக்கும் இலவச பேருந்துப் பயண அட்டைகளை வழங்கினார்கள்.

சென்னை மாநகராட்சிப் பள்ளியில் பயிலும் உடல் ஊனமுற்ற மாணவர்களுடன், அவர்களது பெற்றோர்களும் மனவளப் பயிற்சி மையத்திற்குச் சென்று பயிற்சிகள் அறிந்து மாணவர்கள் மனவளப் பயிற்சிகள் மேற்கொள்ள உறுதுணையாக அமைந்திடும் வகையில் பெற்றோர்களுக்குச் சென்னை மாநகராட்சி இலவச பேருந்துப் பயண அட்டைகள் வழங்கப்பட்டது.

இதன் மூலம் உடல் ஊனமுற்ற மாணவர்கள் மற்ற மாணவர்களுடன் சகஜமாக இணைந்து பழகும் நட்பு சூழல் ஏற்பட வாய்ப்பு உருவாக்கப்பட்டுள்ளது. முதன்முறையாக சென்னை மாநகராட்சியின் இந்த அரிய முயற்சிக்குச் சென்னை மாநகராட்சிப் பள்ளியில் பயிலும் உடல் ஊனமுற்ற மாணவ / மாணவியர் அவர்களின் பெற்றோர்கள் தமிழக அரசுக்கும், சென்னை மாநகராட்சிக்கும் நன்றி தெரிவித்துக் கொண்டனர். இதுவரை சென்னை மாநகராட்சி மூலம் 6,397 பள்ளி மாணவ / மாணவியர் உடல் ஊனமுற்றோர் என்று கண்டறியப்பட்டுள்ளனர். அடுத்த கட்டமாக தகுதியானவர்களுக்கு இலவச பேருந்துப் பயண அட்டைகள் வழங்கப்படும்.

இந்நிகழ்ச்சியில், மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் திரு. கே.என். நேரு, வணக்கத்திற்குரிய சென்னை மாநகராட்சி மேயர் திரு. மா சுப்பிரமணியன், நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல்துறை முதன்மைச் செயலர் திரு. கே. தீனபந்து, இ.ஆ.ப., சென்னை மாநகராட்சி ஆணையர் திரு. ராஜேஷ் லக்கானி, இ.ஆ.ப., துணை மேயர் திருமதி. ஆர். சத்தியபாமா, மன்ற ஆளுங்கட்சித்தலைவர் திரு. ந. இராமலிங்கம், மன்ற எதிர்க்கட்சித்தலைவர் திரு.சைதை ப. ரவி, நிலைக்குழுத்தலைவர் (கல்வி) திருமதி. கே. ஜானகி, துணை ஆணையர் (கல்வி) திருமதி. அனுஜார்ஜ், இ.ஆ.ப., ஆகியோர் கலந்து கொண்டனர். ★

# இந்தியாவிலேயே மகளிர் சுயஉதவிக்குழுக்களின் செயல்பாடுகள் தமிழகத்தில் முதலிடத்தில் உள்ளன

மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை அமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்கள் கலந்துகொண்ட புதுக்கோட்டை மாவட்டத்தில் மகளிர் சுய உதவிக் குழுவினருக்கு சுழல்நிதி வழங்கும் விழா, வளர்ச்சித் திட்டப்பணிகளுக்கு அடிக்கல் நாட்டுவிழா, புதிய கட்டடங்கள் திறப்பு விழா மற்றும் அரசு நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழா 20.11.2008 அன்று புதுக்கோட்டை மாமன்னர் கல்லூரி விளையாட்டு மைதானத்தில் நடைபெற்றது.

இந்த விழாவிற்கு புதுக்கோட்டை மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி.ரீட்டா ஹரிஸ் தாக்கர்,இ.ஆ.ப., தலைமை வகித்தார். மாவட்ட வருவாய் அலுவலர் இரா.மகேந்திரவேல் வரவேற்புரையாற்றினார்.

பின்னர் ரூ.79.92 கோடி மதிப்பிலான 882 புதிய திட்டப் பணிகளுக்கு அடிக்கல் நாட்டியும், ரூ.26.58 கோடி மதிப்பிலான 288 புதிய கட்டடங்கள், சாலைகளைத் திறந்து வைத்து 3,250 மகளிர் சுய உதவிக்குழுக்களுக்கு 48,750 உறுப்பினர்கள் பயன்பெறும் வகையில் ரூ.18.90 கோடி மதிப்பிலான சுழல் நிதியும் 8,874 பயனாளிகள் பயன்பெறும் வகையில் ரூ.5.83 கோடி மதிப்பிலான அரசு நலத்திட்ட உதவிகள் வழங்கி, விழாப் பேருரையாற்றினார்.

அப்போது மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை அமைச்சர் அவர்கள் ஆற்றிய உரையில் கூறியதாவது :-

மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு சுழல் நிதி வழங்கக்கூடிய விழாவா ? அரசினுடைய எழுச்சி மிகுந்த விழாவா ? அல்லது மகளிர் அணியினுடைய மாநாடா ? என்று சந்தேகப்படக்கூடிய அளவிற்கு மிகுந்த எழுச்சியோடு ஏற்றத்தோடு இந்த நிகழ்ச்சிகள் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது.

என்னுடைய கருத்துக்களை உங்களோடு பகிர்ந்து கொள்வதற்கு முன்பு என்னுடைய உள்ளத்திலே ஓடிக் கொண்டிருக்கின்ற ஒரு உணர்வை நான் இந்த இடத்திலே வெளிப்படுத்த விரும்புகிறேன். அதனை நான் வெளிப்படுத்துகின்றபோது இங்கே வீற்றிருக்கக்கூடிய




புதுக்கோட்டைக்கு வருகை புரிந்த மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை அமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்கள் முதலில் ரூ.1.25 கோடி மதிப்பில் கட்டப்பட்டுள்ள வட்டார போக்குவரத்து அலுவலகத்தினை திறந்து வைத்து, மகளிர் சுய உதவிக் குழுவினரின் கைவினைப் பொருட்கள் கண்காட்சியைப் பார்வையிட்டார்.

தாய்மார்களுக்கு அருமைச் சகோதரிகளுக்கு கொஞ்சம் கோபம் வரலாம். அப்படியே கோபம் வந்தாலும் அடுத்த விநாடியே அதுமாறி நீங்கள் அனைவரும் பெருமைப்படத்தக்ககூடிய வகையில் அது நிச்சயமாக மாறும் என்பதையும் நான் உணர்ந்து கொண்டிருக்கிறேன்.





அதாவது சாதாரணமாக சொல்வார்கள், 5 ஆயிரம் பெண்கள் இருந்தால் அந்த இடம் எப்படி இருக்கும். கொஞ்சம் கலகலப்பாக அல்லது அதையும் தாண்டி கொஞ்சம் சலசலப்பாக ஏன் அதையும் மீறி கொஞ்சம் கைகலப்பு ஏற்படக்கூடிய ஒரு சூழ்நிலை கூட உருவாகும். இது எதார்த்தமாகப் பேசக்கூடிய ஒரு செய்தி. ஆனால் இன்றைக்கு இந்த நிகழ்ச்சியிலே பார்க்கிறேன் 5-6 பெண்கள் அல்ல 50-60 சகோதரிகள் அல்ல, 500-600 தாய்மார்கள் அல்ல, ஏன் 5 ஆயிரத்தையும் தாண்டி பல்லாயிரக்கணக்கிலே திரண்டிருக்கக்கூடிய நம்முடைய மகளிர் குழுவினைச் சார்ந்து இருக்கக்கூடிய மகளிர் சுய உதவிக்குழுவில் இடம் பெற்றிருக்கக்கூடிய உங்களிடத்திலே இப்பொழுது தோன்றிக் கொண்டிருக்கக்கூடிய இந்தக் கட்டுப்பாட்டை இந்த அமைதியைக் காணுகின்ற நேரத்தில் இதுதான் மகளிர் அணியை தலைவர் கலைஞர் அவர்கள் எந்த உணர்வோடு தொடங்கி வைத்திருக்கின்றாரோ அது வெற்றி பெற்று இருக்கின்றது என்பதற்கு எடுத்துக்காட்டாக அதற்கு ஒரு சாட்சியாக ஒரு சான்றாக இது அமைந்திருக்கின்றது என்று சொன்னால் அது நிச்சயம் மிகையாகாது.

**882 பணிகள்**

ஆகவே, அந்த உணர்வோடு நடைபெறக்கூடிய இந்த நிகழ்ச்சியிலே இன்றைக்கு அடிக்கல் நாட்டுவிழா ஊரக வளர்ச்சித்துறையின் சார்பிலே ரூபாய் 53 கோடியே 79 இலட்சம் மதிப்பீட்டில் தந்தை பெரியார் பெயரில் அமையவிருக்கக்கூடிய சமத்துவபுரம், கலையரங்கம், நூலகக் கட்டடம், சமுதாயக்கூடம், உள்ளிட்ட 272 பணிகளுக்கும் சுனாமி திட்ட செயலாக்க அலகின் மூலமாக ரூபாய் 11 கோடியே 78 இலட்சம் மதிப்பீட்டில் குளங்கள், சத்துணவுக் கூடம், வடிகால்கள், உள்ளிட்ட 196 பணிகள் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் சார்பில் ரூபாய் 12 கோடியே 16 இலட்சம் மதிப்பீட்டில் 405 மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகள் உள்பட, கட்டக்கூடிய அந்தப் பணிகள் நெடுஞ்சாலைத்துறையின் சார்பில் ரூபாய் 92 இலட்சம் மதிப்பீட்டிலே புதிய அலுவலகக் கட்டடம், சமுதாயக் கூடம் உள்ளிட்ட 8 பணிகள் ஆக ரூபாய் 79 கோடியே 92 இலட்சம் மதிப்பீட்டில் 882 பணிகளுக்கு இந்த விழாவில் அடிக்கல் நாட்டப்பட்டு இருக்கிறது.

திறப்பு விழாவைப் பற்றி குறிப்பிடவேண்டுமென்று சொன்னால், ஊரக வளர்ச்சித்துறையின் சார்பில் ரூபாய் 3 கோடியே 26 இலட்சம் மதிப்பீட்டில் கலையரங்கம், நூலகக் கட்டடம், சமுதாயக் கூடம், வணிக வளாகம், உள்ளிட்ட 148 பணிகள் சுனாமி திட்ட விரிவாக்க அலகின் கீழ் ரூபாய் 3 கோடியே 58 இலட்சம் மதிப்பீட்டில் புனரமைப்புத் திட்ட வீடுகள், பொதுக் கிணறுகள் உள்ளிட்ட 31 பணிகள் பேரூராட்சித்துறை சார்பிலே ரூபாய் 28 இலட்சம் நெடுஞ்சாலைத்துறையின் சார்பிலே ரூபாய் 1 கோடியே 52 இலட்சம் மதிப்பீட்டில் 2 சாலைப் பணிகள், போக்குவரத்துத் துறையின் சார்பிலே இந்த நிகழ்ச்சிக்கு வருவதற்கு முன்னால் அதனுடைய திறப்பு விழாவை நடத்திவிட்டுத்தான் இந்த மேடைக்கு நாங்கள் வந்திருக்கிறோம்.

**288 கட்டடங்கள்**

ரூபாய் 1 கோடியே 25 இலட்சம் மதிப்பீட்டில் கட்டப் பட்டிருக்கக்கூடிய அலுவலகக் கட்டடப்பணிகள் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தின் சார்பில் ரூபாய் 6 இலட்சம் மதிப்பீட்டில் புதிய வட்டக் கிடங்கு ஆக ரூபாய் 26 கோடியே 58 இலட்சம் மதிப்பீட்டிலே 288 கட்டடங்கள் கட்டி முடிக்கப்பட்டிருக்கக்கூடிய பணிகள் இன்றைய தினம் மக்களுடைய பயன்பாட்டிற்காக திறந்து வைக்கப்பட்டிருக்கின்றது.

அதேபோல் மகளிர் சுய உதவிக்குழுவினருக்கு சுழல் நிதி – இங்கே எல்லோரும் பெருமையோடு குறிப்பிட்டுச் சொன்னார்கள். சுழல் நிதியைப் பொறுத்தவரையிலே 3,250 சுய உதவிக் குழுக்களுக்கு 48,750 உறுப்பினர்கள் பயன்படக்கூடிய வகையிலே அரசு மானியம் தலா 10 ஆயிரம் மற்றும் வங்கிக் கடனோடுகூடிய சுழல் நிதியாக ரூபாய் 18 கோடியே 90 இலட்சம் இந்த விழாவின் மூலமாக வழங்கப்பட இருக்கின்றது. இந்த விழாவிலே 3,250 சுய உதவிக் குழுக்களுக்கு வழங்கப்படுகின்றது என்று சொன்னால் ஏதோ அடையாளத்திற்கு 10 பேருக்கு, 20 பேருக்கு, 25 பேருக்கு, தந்துவிட்டு நாங்கள் போகமாட்டோம். ஒட்டு மொத்தமாக இங்கு வந்திருக்கக்கூடிய அனைத்துக் குழுவினருக்கும் வழங்கிவிட்டுத்தான் இந்த மேடையைவிட்டு நாங்கள் இறங்கப்போகிறோம்.

தமிழக வரலாற்றில் இந்திய வரலாற்றில் மட்டுமல்ல; உலகிலேயே, கின்னஸ் ரெக்கார்டில் பதிக்கப்படக்கூடிய வகையிலே சுழல் நிதியை மகளிர் சுயஉதவிக் குழுக்கள் அத்துணை பேருக்கும் தொடர்ந்து வழங்கக்கூடிய ஒரு நிலையை இன்றைக்கு எம்முடைய துறை உருவாக்கியிருக்கிறது.

அதேபோல் நலத்திட்ட உதவிகள்; அரசினுடைய பல்வேறு துறைகள் – வருவாய்த் துறை, தாட்கோ, மீன்வளத் துறை, சமூகநலத்துறை, ஆதிதிராவிடர் நலத்துறை, வேலைவாய்ப்புத்துறை, சுகாதாரத்துறை, பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை, கூட்டுறவுத்துறை, வேளாண்மைத்துறை, என்று பலதுறைகளின் சார்பில் ரூபாய் 24.73 கோடி மதிப்பீட்டில் 57,624 பயனாளிகள் பயன்படக்கூடிய வகையிலே நலத்திட்ட உதவிகள் இந்த விழாவிலே வழங்கப்படவிருக்கிறது. ஆகமொத்தம் மகளிர் சுயஉதவிக் குழுக்களுக்கு வழங்கப்படக்கூடிய சுழல் நிதி உள்பட நலத்திட்ட உதவிகள் அடிக்கல் நாட்டு விழா திறப்பு விழா இவைகளின் ஒட்டுமொத்த மதிப்பீட்டைப் பார்க்கின்ற போது ரூ.131 கோடியே 23 லட்சம் மதிப்பீட்டிலே நடை பெறக்கூடிய விழாவாக இந்த விழா இன்று எழுச்சியோடு நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது.

சுயஉதவிக்குழுவைப் பொறுத்தவரை நான் உங்களுக்கு நினைவுபடுத்த வேண்டுமென்று சொன்னால், பல நிகழ்ச்சிகளில் பலர் எடுத்துச் சொல்லி இருக்கலாம், இருந்தாலும் நான் உங்களுக்கு மீண்டும் மீண்டும் நினைவுபடுத்த விரும்புவது; இந்த சுயஉதவிக் குழுக்கள் முதன்முதலில் திராவிட முன்னேற்றக்கழக ஆட்சி நடைபெற்றுக் கொண்டிருந்தபோதுதான் 1989ஆம் ஆண்டு தமிழக முதல்வர் தலைவர் கலைஞர் அவர்கள் ஆட்சிப் பொறுப்பில் இருந்தபோதுதான் தொடங்கி வைக்கப்பட்டது. அந்த திட்டம் முதன்முதலில் தர்மபுரி மாவட்டத்தில்தான் தொடங்கி வைக்கப்பட்டது.

**மகளிர் தன்னம்பிக்கை பெற்று வாழ வேண்டும்**

சுயஉதவிக்குழுக்கள் என்பது ஏதோ அரசியலுக்காக அல்ல, கட்சியினுடைய வளர்ச்சிக்காக அல்ல அல்லது தேர்தல் வருகின்ற பொழுது உங்களைப் பயன்படுத்திக் கொள்வதற்காக அல்ல. இந்தத் திட்டம் எதற்காக தொடங்கி வைக்கப்பட்டிருக்கிறது என்று உண்மையிலே சொன்னால்; தமிழகத்தில் இருக்கக்கூடிய பெண்கள் தாய்மார்கள் மிக தன்னம்பிக்கை பெற்றவர்களாக வாழ்ந்திடவேண்டும். யாருடைய தயவையும் எதிர்பார்க்காமல் அவரவர்கள் சொந்தக்காலில் நிற்கக்கூடிய ஒரு சூழ்நிலையை நீங்கள் பெற்றாகவேண்டும்.

நான் பெருமையோடு தெரிவிக்க விரும்புகிறேன், இந்தியாவில் இருக்கக்கூடிய மாநிலங்களிலேயே ஒப்பிட்டுப் பார்க்கும்பொழுது தமிழகம் முதலிடம் பெற்றிருக்கிறது. ஆக அப்படிப்பட்ட இந்த சுய உதவிக் குழுக்களும் இடம் பெற்றுள்ளன. இதில் தமிழக சுயஉதவிக் குழுக்களின் கணக்கு புதுக்கோட்டை மாவட்டத்தைப் பொறுத்த வரையில் மாவட்ட ஊரக மற்றும் நகர்ப்புறங்களில் உருவாக்கப்பட்டுள்ள 9,720 சுய உதவிக்குழுக்களில் 1,50,979 மகளிர்களும் 6,426 இளைஞர்களும் இதிலே உறுப்பினர்களாக இடம் பெற்றுள்ளார்கள்.

ஆகவே இந்த சுயஉதவிக் குழுக்கள் தொடங்கப்பட்டு அந்த நேரத்தில் கழக ஆட்சி வந்த பிறகு பயிற்சித் தொகை ரூ.45 வழங்கப்பட்டது. ஆனால் தமிழகத்தில் இடையிடையே ஆட்சிமாற்றம் ஏற்பட்டது. உங்களுக்குத் தெரியும். அந்த ஆட்சி மாற்றம் ஏற்பட்ட நேரத்தில் பயிற்சிக்கான தொகை ரூபாய் 7.50ஆக குறைக்கப்பட்டது. ஆனால் கலைஞர் அவர்கள் 2006–லே ஆட்சிப் பொறுப்பு ஏற்பதற்கு முன்னால் தேர்தல் நேரத்திலே மீண்டும் தி.மு.க. ஆட்சிக்கு வந்தால் கலைஞர் முதல்வராக வந்தால் மீண்டும் அந்தப் பயிற்சிக்கான தொகை ரூ.45ஆக வழங்கப்படும் என்று உறுதி மொழி எடுத்துச் சொல்லப்பட்டது. ஆட்சிக்கு வந்தோம் பயிற்சிக்கான தொகை உடனடியாக உயர்த்தி இப்பொழுது ரூபாய் 45ஆக வழங்கப்பட்டு வருகிறது என்பது உங்களுக்கு தெரியும்.

அது மட்டுமல்ல; ஊரகப் பகுதிகளில் இருக்கக்கூடிய சுயஉதவிக்குழுக்களுக்குத்தான் 2006–க்கு முன்னால் சுழல்நிதி வழங்கப்பட்டுக் கொண்டிருந்தது. நான் இப்பொழுது 2006க்கு பின்னால் ஊரகப் பகுதிகளுக்கு மட்டுமல்ல, மாநகரப் பகுதிகளுக்கும் சுழல்நிதிமானியம் வழங்கப்பட்டுக் கொண்டிருக்கிறது. இந்தத் துறையின் அமைச்சராக நான் பொறுப்பேற்றதற்குப் பின்னால் தமிழ்நாடு முழுவதும் நான் ஆய்வுப் பணி மேற்கொண்ட பொழுது, நம்முடைய மக்களின் பிரதிநிதிகளாக இருக்கக்கூடிய சட்டமன்ற உறுப்பினர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஏன் அமைச்சர் பெருமக்கள், அந்தந்த மாவட்டத்தில் உள்ள அதிகாரிகள் உள்ளாட்சி அமைப்பின் பிரதிநிதிகள், சுயஉதவிக்குழுக்களில் இடம் பெற்றிருக்கக் கூடிய சகோதரிகள் எல்லாம் எங்களைச் சந்திக்கின்ற பொழுது தொடர்ந்து ஒரு கோரிக்கையை எடுத்துச் சொன்னார்கள். சில இடங்களில் சுயஉதவிக்குழுக்கள் தகுதி பெற்றிருந்தும் அவர்களுக்கு சுழல்நிதி மானியம் வழங்கப்படவில்லை என்று ஒரு கணக்கை எங்களிடம் எடுத்துச் சொன்னார்கள். நாங்கள் இதுகுறித்து உடனடியாக சம்மந்தப்பட்ட அதிகாரிகளை அழைத்து விசாரித்தோம். அவர்கள் ஒவ்வொரு மாவட்டமாகச் சென்று ஆய்வுப் பணியை மேற்கொண்டார்கள். அப்படி மேற்கொண்டபொழுது அதன்பிறகு இது உண்மை என்று கண்டறிந்தோம். தகுதி பெற்றிருக்கக்கூடிய குழுவினர்கள் இன்னமும் சுழல்நிதி மானியம் பெறாமல் இருக்கிறார்கள் என்ற செய்தியை நாங்கள் அறிந்தோம். அதற்குப் பிறகு இங்கே அமர்ந்து இருக்கக் கூடிய மத்திய நிதித்துறை இணை அமைச்சர் பழனி மாணிக்கம் அவர்களிடத்திலே நாங்கள் இதுபற்றி எடுத்துச் சொல்லி அதன் பிறகு நிதியமைச்சர் ப.சிதம்பரம் அவர்களிடம் குறிப்பிட்டுக்காட்டி அதன்பிறகு, மத்திய அரசினர் வங்கியினுடைய அதிகாரிகளைத் தொடர்பு கொண்டு – அவர்களுக்கு உதவியாக விளங்கிட வேண்டும் என்ற ஒரு செய்தியை அவர்களுக்கு அறிவுறுத்தி அதற்குப் பிறகு நாங்கள் சென்னையிலே அரசின் அங்கீகாரம் பெற்றிருக்கக்கூடிய வங்கி அதிகாரிகளை அழைத்து ஒரு கூட்டம் போட்டோம். அந்தக் கூட்டத்திற்கு மத்திய நிதித்துறை இணை அமைச்சரும் வந்திருந்தார்.

அந்தக் கூட்டத்திற்கு வந்திருந்த அதிகாரிகளுடன் கலந்து பேசி உண்மை என்ன என்பதைக் கண்டறிந்து அதற்கு உடனடியாக கடன் வழங்க சுழல்நிதி மானியத்தை வழங்க அவர்களும் ஒப்புதல் தந்து அதற்குப் பிறகு முதல்வரிடத்தில் நாங்கள் இந்தச் செய்தியை குறிப்பிட்டுச் சொல்லி, கடந்த சட்டமன்ற கூட்ட தொடரில் நிதிநிலை அறிக்கையைத் தாக்கல் செய்து என்னுடைய துறையின் மானியக் கோரிக்கையை நாங்கள் தாக்கல் செய்த நேரத்தில்; முதலமைச்சர் அனுமதி பெற்று ஒரு அறிவிப்பை நான் வெளியிட்டேன். அதுதான் ஏறக் குறைய 1,50,000 குழுக்கள் தகுதி பெற்றிருக்கக்கூடிய இந்த குழுக்கள் சுழல்நிதி பெற முடியாத இந்தச் சூழ் நிலையில் இருக்கிறார்கள். எனவே அவர்கள் அத்துணைபேருக்கும் சுழல்நிதி மானியத்தை வழங்கிட இந்த அரசு முடிவு செய்து இருக்கிறது. அதற்காக ரூ.150 கோடி ஒதுக்கீடு செய்து இருக்கிறது என்று அந்த அறிவிப்பை நான் வெளியிட்டு அந்த அறிவிப்பின் அடிப்படையில்தான் தமிழ்நாடு முழுவதும் சுற்றுப்பயணம் செய்து அந்த



சுழல்நிதியை இன்றைக்கு நான் ஒவ்வொரு மாவட்டமாக வழங்கிக் கொண்டிருக்கிறோம்.

**தமிழகத்திற்குப் பெருமை**

அதுமட்டுமல்ல, வங்கிகளினுடைய அதிகாரிகள் அந்தக் கூட்டத்தில் கலந்து கொண்டபோது அந்த அதிகாரிகள்தான் என்னிடத்தில் திறமையாக எடுத்துச் சொன்னார்கள். கடன் பெறக்கூடிய சுயஉதவிக் குழுக்கள் அந்தக் கடனை வட்டியோடு வங்கியில் திருப்பிச் செலுத்துகிறோம். வாங்கிய கடனை இன்றைக்கு தமிழ்நாட்டில் 99 சதவிகிதம் பேர் அதனை திருப்பி செலுத்திக் கொண்டிருக்கிறார்கள் என்று என்னிடத்திலே எடுத்துச் சொன்னார்கள். எந்த மாநிலத்திலேயும் கிடையாது தமிழ்நாட்டில் மட்டும்தான் பெண்கள் வாங்கிய கடனை திருப்பிச் செலுத்திவிடுகிறார்கள் என்று பெருமையோடு எடுத்துச்சொன்னார்கள். பெண்களாக இருக்கக் கூடிய நீங்கள் அதை இன்றைக்கு 99 சதவிகிதம் பேர் இன்றைக்கு திருப்பிச் செலுத்திக் கொண்டிருக்கிறீர்கள் என்று சொன்னால் உள்ளபடியே இது உங்களுக்கு கிடைக்கக்கூடிய பெரும மட்டுமல்ல, இந்த அரசுக்கே தமிழகத்திற்கே கிடைத்திருக்கக்கூடிய ஒரு பெருமை என்று சொன்னால் அது நிச்சயம் மிகையாகாது.

**மகளிர் சுயஉதவிக் குழுக்களிடம்**
**வங்கிகளுக்கு நம்பிக்கை**

இந்தியன் வங்கி இந்தியா முழுவதும் இருக்கக்கூடிய எல்லா மாநிலத்திலும் சுய உதவிக்குழுக்களுக்கு கடன் தந்துகொண்டு இருக்கிறது. இந்தியா முழுவதும் தரக்கூடிய அந்தக் கடனைப் பொறுத்தவரைக்கும் ஒட்டுமொத்தமாக இது வரைக்கும் 2,65,000 ரூ.1,864 கோடி கடன் தந்திருக்கிறோம். இது இந்தியா முழுமைக்கும் இருக்கக்கூடிய கணக்கு. இந்தக் கணக்கை சொல்லிவிட்டு அடுத்து அவர் சொல்லுகிறார், 2,65,000 குழுக்களுக்கு 1,864 கோடி ரூபாய் கடன் தந்து இருக்கிறோம் என்று சொன்னால் அதிலே தமிழ் நாட்டிற்கு மட்டும் 1,72,000 குழுக்களுக்கு கடன் தந்து இருக்கிறோம். 1,331 கோடி ரூபாயை தமிழ்நாட்டிற்குத் தந்து இருக்கிறோம் என்று சொன்னால் மொத்தத்திலே 71 சதவிகிதம் தமிழ் நாட்டிற்கே கடன். ஆக தமிழ்நாட்டு மகளிர் சுய உதவிக்குழுக்கள் மீது எந்த அளவிற்கு இன்றைக்கு வங்கிகள் நம்பிக்கை பெற்றிருக்கின்றன என்பதற்கு இதைவிட ஒரு எடுத்துக் காட்டை உங்களிடம் எடுத்துச் சொல்ல வேண்டிய அவசியம் இல்லை.

1929ம் ஆண்டு செங்கல்பட்டில் நடைபெற்ற சீர்திருத்த மாநாட்டிலே தந்தை பெரியார் அவர்கள் உரையாற்றுகின்றபோது, பெண்களுடைய முன்னேற்றத்திற்காக பல தீர்மானம் நிறைவேற்றுகின்றபோது அவர் குறிப்பிட்டுச் சொன்னார்; சொத்திலே பெண்களுக்கு சம உரிமை தந்தாகவேண்டும் என்று. அது 1989–ல் நிறைவேற்றித்தரப்பட்டது. கலைஞர் ஆட்சிக் காலத்திலே இப்படி எத்தனையோ தலைவர்கள் பெண்கள் உடன்கட்டை ஏறக்கூடிய கொடுமைகள் அந்தக் கொடுமையிலிருந்து பெண்களை பாதுகாத்து தந்தவர் ராஜா ராம் மோகன்ராய் அவர்கள் பெண்சிசு படுகொலை இப்படிப்பட்ட கொடுமையிலிருந்து காத்தவர் இராமலிங்க அடிகளார் அவர்கள். இதுபோல எண்ணற்ற தலைவர்கள் பாரதியாராக இருந்தாலும் சரி, புரட்சிக் கவிஞர் பாவேந்தர் பாரதிதாசனாக இருந்தாலும் சரி. தமிழ்த்தென்றல் திரு.வி.க. வாக இருந்தாலும் சரி ஏன் புதுக்கோட்டை மாவட்டத்தைச் சார்ந்த டாக்டர் முத்துலெட்சுமி ரெட்டி அவர்களாக இருந்தாலும் சரி, எத்தனையோ தலைவர்கள் பெருந்தலைவர் காமராஜ் அவர்கள், தந்தை பெரியார் அவர்கள், பேரறிஞர் பெருந்தகை அறிஞர் அண்ணா அவர்கள், அவர்களையெல்லாம் தொடர்ந்து இன்றைக்கு நமது தலைவர் கலைஞர் அவர்கள் பெண்களுடைய முன்னேற்றத்திற்கே தொடர்ந்து போராடிக் கொண்டிருக்கக்கூடிய அந்தத் தலைவர்களையெல்லாம் நாம் பார்த்துக் கொண்டிருக்கிற அதற்காக பல திட்டங்களை யெல்லாம் நிறைவேற்றிக் கொண்டு இருக்கக்கூடிய அந்தச் சாதனைகளை வரிசையாக இன்றைக்கு நாம் பார்த்துக் கொண்டிருக்கிறோம்.

இன்றைக்கு பெண்கள்தான் எல்லாவற்றிலும் முன்னிலைப்படுத்தக் கூடிய ஒரு சூழ்நிலை இன்று நேற்றல்ல, வரலாறு வரலாறுகளாக அது இருந்து கொண்டிருக்கக்கூடிய உண்மை. ஆக அதை எல்லாம் அடிப்படையாக வைத்துதான் இன்றைக்கு எண்ணற்ற திட்டங்களை பெண்களுடைய முன்னேற்றத்திற்காக இந்த அரசு நிறைவேற்றிக் கொண்டிருக்கிறது. அதை நீங்கள் பயன்படுத்திக் கொண்டு உங்கள் வாழ்க்கை வளமாக்கிக் கொள்ளவேண்டுமென்று நான் உங்களையெல்லாம் கேட்டுக்கொண்டு அரசு நலத்திட்ட உதவிகள் மூலமாக பயன்பெறுவதற்காக வருகை தந்துள்ள பயனாளிகள் பெருமக்களுக்கெல்லாம் என்னுடைய வாழ்த்துகளை தெரிவித்து மகளிர் சுய உதவிக் குழுவினராக வந்திருக்கக்கூடிய நீங்கள் இன்றைக்கு சுழல்நிதியைப் பெற்று மேலும் உங்கள் வாழ்க்கையினை வளப்படுத்திக் கொள்வதற்கு இவற்றை நீங்கள் பயன்படுத்திக் கொள்ள வேண்டுமென்று உங்களுக்கெல்லாம் எனது அன்பான வேண்டுகோளை விடுத்து அத்துணை பேருக்கும் எனது வாழ்த்துக்களை பாராட்டுக்களை தெரிவித்து வாய்ப்புக்கு நன்றி சொல்லி விடைபெறுகிறேன்.

இவ்வாறு மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை அமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்கள் பேசினார்.

விழாவில், மாண்புமிகு மத்திய சுற்றுச் சூழல் மற்றும் வனத்துறை இணை அமைச்சர் திரு. எஸ். ரகுபதி முன்னிலையுரையாற்றினார்.

மாண்புமிகு மத்திய நிதித்துறை இணை அமைச்சர் திரு. எஸ்.எஸ். பழனிமாணிக்கம், மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் திரு. கே.என்.நேரு, வனத்துறை அமைச்சர் திரு. என்.செல்வராஜ் உள்ளிட்டோர் விழாவில் கலந்துகொண்டனர். ❖



# வளர்ச்சிப் பணிகளை விரைந்து மேற்கொள்ள ஏதுவாக நகர் ஊரமைப்புத் துறையில் பணியாளர்கள் நியமனம்



நகர் ஊரமைப்புத் துறையில் நீண்ட காலமாக காலியாக இருந்துவரும் 32 அளவையாளர்கள் – உதவி வரைவாளர் மற்றும் 20 களப்பணி உதவியாளர் பணிகளுக்குரிய நபர்களை வேலைவாய்ப்பு அலுவலகம் மூலம் தேர்வு செய்யப்பட்டு, 23.10.2008 அன்று மாண்புமிகு செய்தித்துறை அமைச்சர் திரு. பரிதி இளம்வழுதி அவர்கள் நியமன ஆணைகளை வழங்கினார்.

அளவையாளர் – உதவி வரைவாளர்களில் தாழ்த்தப்பட்ட வகுப்பினர் 6 நபர்கள், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் 6 நபர்கள், பிற்படுத்தப்பட்டோர் 20 நபர்கள், அதில் பெண்களில் 2 நபர்கள் தாழ்த்தப்பட்டவர்கள், 2 நபர்கள் மிகவும் பிற்படுத்தப்பட்டவர்கள், 10 நபர்கள் பிற்படுத்தப்பட்டவர்கள் என்றும் களப்பணி உதவியாளர்களில் 10 நபர்கள் தாழ்த்தப்பட்ட வகுப்பினர்கள், 5 நபர்கள் மிகவும் பிற்படுத்தப்பட்டவர்கள், 5 நபர்கள் பிற்படுத்தப்பட்டவர்கள், அதில் பெண்களில், 3 நபர்கள் தாழ்த்தப்பட்டவர்கள், 1 நபர் மிகவும் பிற்படுத்தப்பட்டவர், 1 நபர் பிற்படுத்தப்பட்டவர் என நியமிக்கப்பட்டுள்ளனர்.

நகர் ஊரமைப்புத் துறையில் சென்னைப் பெருநகர்ப் பகுதி நீங்கலாக தமிழகத்தின் ஏனைய பகுதிகளில் 2ஆம் நிலை நகர்ப்பகுதிகள் மற்றும் இதர நகராட்சிப் பகுதிகளின் அபிவிருத்திக்கான முழுமைத் திட்டங்கள் மற்றும் விரிவு அபிவிருத்தித் திட்டங்கள் தயாரித்து அவற்றில் கண்டுள்ள சாலைகள் மற்றும் இதர அபிவிருத்தித் திட்டங்களைச் செயல்படுத்த நிதியுதவி வழங்குதல், மனைப்பிரிவு ஒப்புதல், பலமாடிக் கட்டுமானங்கள், தகவல் தொழில்நுட்ப அலுவலகம், தொழிற்சாலை கட்டுமானங்களுக்குரிய ஒப்புதல் வழங்குவது, புராதன நகர்ப்பகுதிகளின் அபிவிருத்திக்கான நிதியுதவி, மானியம் ரூ.50 இலட்சம் வரை வழங்குவது, நகர்ப்பகுதிகளில் பூங்கா அபிவிருத்திக்காக ரூ.25 இலட்சம் வரை வழங்குதல் போன்ற பணிகள் விரைவாக நடைபெற்றிட புதிதாக பணி நியமனம் செய்யப்பட்டவர்கள் மூலமும், மேலும் காலியாக உள்ள வேறு பணியிடங்கள் விரைவாக நிரப்ப நடவடிக்கை எடுக்கப்பட்டதன் மூலமும் இப்பணிகள் நிறைவேற்றப்படும்.



மேற்படி கூட்டத்தில் தமிழக அரசு வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை முதன்மைச் செயலர் திரு. அரங்க செல்லமுத்து, இ.ஆ.ப., மற்றும் நகர் ஊரமைப்புத்துறை ஆணையர் திரு. அஷோக் டோங்கரே, இ.ஆ.ப., ஆகியோர் கலந்து கொண்டனர்.

மாண்புமிகு செய்தித்துறை அமைச்சர் அவர்கள் புதிய பணியாளர்களிடம் உரையாற்றும்போது, கடந்த ஆட்சியில் பணி நியமன தடை உத்தரவுச் சட்டம் இருந்தது, மாண்புமிகு தமிழக முதலமைச்சராக டாக்டர் கலைஞர் அவர்கள் பொறுப்பேற்றபிறகு, அந்த உத்தரவை நீக்கி பல இலட்சம் பேர்களுக்கு வேலைகளை வழங்கியுள்ளார். இப்பணிபுரிய வந்துள்ள தாங்கள் இத்துறையில் உள்ள மூத்த அலுவலர்களின் வழிகாட்டுதலின்படி சிறப்பாகப் பணிபுரிந்து பொதுமக்களுக்கு உதவி செய்திடவும், இவ்வரசுக்கும் நற்பெயர் ஏற்படுத்தி தந்திடவும் கேட்டுக்கொள்கிறேன். பாண்டிச்சேரி மாநிலத்தில் உள்ள ஊரமைப்புப் போன்று திட்டங்களை உருவாக்கிட நீங்கள் உழைத்திடவேண்டும். உங்களுடைய புதிய, நவீன கருத்துக்களைத் தயக்கமின்றி எனக்கோ, அல்லது உயரதிகாரிகளுக்கோ தெரிவிக்கவேண்டும். உகந்த கருத்துக்கள் உடனடியாக ஏற்றுக் கொள்ளப்படும் என்று தெரிவித்தார். ✶

### பெயர் மாற்ற விண்ணப்பப் படிவத்தை இலவசமாக அளிக்கும்

## எழுதுபொருள் மற்றும் அச்சுத்துறை வலைதளம்



தமிழக அரசின் எழுதுபொருள் மற்றும் அச்சுத்துறைக்கான வலைதளத்தை (Website) 20.11.2008 அன்று மாண்புமிகு செய்தித்துறை அமைச்சர் திரு. பரிதி இளம்வழுதி அவர்கள் தொடங்கி வைத்தார். இந்த வலைதளத்தின் முகவரி: www.tn.gov.in / Stationery Printing ஆகும் இந்த வலைத்தளத்தில் பொது மக்களுக்குத் தேவையான பல்வேறு விவரங்கள் அளிக்கப்பட்டுள்ளன. அவை பின்வருமாறு:–

* தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின்படி நியமிக்கப்பட்டுள்ள தகவல் அளிக்கும் அலுவலர்கள், மேல் முறையீட்டு அலுவலர்கள் மற்றும் அவர்களைத் தொடர்புகொள்ள வேண்டிய தொலைபேசி எண்கள்
* பொது மக்களின் நலன் கருதி தலைமைச் செயலகத் துறைகளால் வெளியிடப்படும் அறிவிப்புகள், அரசால் வெளியிடப்படும் அறிவிப்புகளின் தமிழ் மொழிபெயர்ப்புகள், பொதுசட்டவிதிகள், ஆணைகள் வரையறுக்கப்பட்ட விதிகள், பணி விதிகள் (அடாக் விதிகள் உட்பட) மற்றும் தமிழ்நாடு அரசால் வெளியிடப்படும் சட்டங்கள் மற்றும் அவசரச் சட்டங்கள் தொடர்பான அறிவிப்புகள், வணிகவரித் துறையினால் வெளியிடப்படும் வரி விவரங்கள்.
* தமிழ்நாடு அரசிதழ்களில் வெளியிடப்படும் பெயர் மாற்றம் / மத மாற்றம் தொடர்பான அறிவிப்புகள், பொதுமக்கள் தொடர்புடைய நிலம் கையகப்படுத்துதல் தொடர்பான அறிவிப்புகள் மற்றும் தொழில்துறை தீர்ப்பாயத்தின் ஆணைகள்.
* பெயர் மாற்றம் மற்றும் மதமாற்றம் செய்தல் தொடர்பான நடைமுறை விவரங்கள்.
* தேவையற்ற கால விரயத்தினை தவிர்க்கும் வகையில் பெயர் மாற்றம் மற்றும் மதமாற்றத்திற்குத் தேவையான படிவங்களை இலவசமாக வலைதளத்திலிருந்து பெறுதல் குறித்த வழிமுறைகள்.
* தமிழ்நாடு வாராந்திர அரசிதழ்கள் கிடைக்கும் விவரங்கள்.
* இத்துறையின் கிளை அச்சகங்களில் அச்சிடப்படும் தமிழ்நாடு மாவட்ட அரசிதழ்கள் கிடைக்கும் விவரங்கள்.
* விற்பனைக்கு உள்ள அரசு விதிகளடங்கிய கையேடுகள், சட்டத் தொகுப்புகள் மற்றும் நடைமுறை நூல்களின் விவரங்கள்.

இவை தவிர, பிற அரசுத் துறைகளுக்கு இத்துறை ஆற்றிவரும் சேவை குறித்த விவரங்களும் இவ்வலைத் தளத்தில் விளக்கப்பட்டுள்ளன. அதன் சிறு பட்டியல் கீழே வழங்கப்படுகிறது.

* அனைத்து அரசுத் துறைகளின் படிவங்கள் மற்றும் பதிவேடுகள் அச்சிடுதல், தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகள், குழு அறிக்கையில், வரவு–செலவு ஆவணங்கள், கழுக்க அறிக்கைகள் பல்வேறு துறைகளின் கையேடுகள் போன்றவற்றை அச்சிட்டு வழங்குதல்.
* பிற அரசுத் துறைகளுக்கு வழங்கப்பட்டு வரும் எழுதுபொருட்களின் விவரங்கள்.
* அரசு வெளியீடுகள் விற்பனை நிலையத்தின் பணி நேரங்கள். ஆகியவற்றோடு இத்துறையின் தலைமையிடமான ஆணையரகம் மற்றும் சென்னையில் உள்ள அலுவலகங்களான அரசு மைய அச்சகம், அரசு கிளை அச்சகம் உயர்நீதிமன்ற வளாகம், அரசு எழுதுபொருள் அலுவலகம் மற்றும் வெளியூரில் உள்ள விருத்தாசலம், திருச்சி, புதுக்கோட்டை, சேலம், மதுரை மற்றும் சென்னை உயர்நீதிமன்றம் மதுரை கிளை அச்சகங்களின் செயல்பாடுகள் குறித்தும் இவ்வலைதளத்தில் விவரிக்கப்பட்டுள்ளன.

★ ★ ★



# தமிழகத்தில் முதன்முறையாக ஊரக வேலைவாய்ப்பு உறுதித் திட்டத்தில் பணிபுரியும் ஊழியர்களுக்காக சிறப்பு ஏ.டி.எம். இயந்திரம்

தமிழகத்திலேயே முதன் முறையாக, ஊரக வேலை வாய்ப்பு உறுதித் திட்டத்தில் பணிபுரியும் ஊழியர்களுக்காக, சிறப்பு ஏ.டி.எம் இயந்திரத்தை கடலூர் மாவட்டம் பெரிய கங்கனாங்குப்பம் கிராமத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில் மத்திய அரசின் ஊரக வேலை வாய்ப்பு உறுதித் திட்டத்தின்கீழ் பணிபுரியும் தொழிலாளர்களுக்கான ஊதியத்தை வழங்குவதற்கான சிறப்பு ஏ.டி.எம் இயந்திரத்தை மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை அமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் அவர்கள் திறந்து வைத்தார்.

பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய மாண்புமிகு அமைச்சர் அவர்கள், ஊரக வேலைவாய்ப்பு உறுதித் திட்டத்தில் பணிபுரியும் தொழிலாளர்கள் தங்களது ஊதியத்தை எளிதாக பெற்றுக்கொள்வதற்காக இந்த சிறப்பு ஏ.டி.எம் இயந்திரங்கள் அறிமுகப்படுத்தப் பட்டிருக்கிறது.

முதல் கட்டமாக கடலூர் மாவட்டத்தில் இந்த சிறப்பு ஏ.டி.எம் இயந்திரங்கள், 5 இடங்களில் திறக்கப்பட்டிருக்கிறது. தமிழகம் முழுவதும் இந்த சிறப்பு ஏ.டி.எம் இயந்திரங்களை நிறுவ நடவடிக்கை எடுக்கப்படும் என்று அவர் தெரிவித்தார்.



மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை அமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின், அவர்கள் 22.11.2008 அன்று கடலூரில் தொடங்கி வைத்தார்.

தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தின்கீழ் பணிபுரியும் தொழிலாளர்களுக்கு ஏ.டி.எம் மூலம் ஊதியம் வழங்குவது குறித்த விவரம் வருமாறு:–

தமிழ்நாட்டில் முதல் கட்டமாக தேசிய ஊரக வேலை உறுதித் திட்டம் செயல்படுத்தப்பட்ட 6 மாவட்டங்களில், கடலூர் மாவட்டமும் ஒன்று ஆகும். இம்மாவட்டத்தில் 2.2.2006 முதல் தேசிய ஊரக வேலை உறுதித் திட்டம் செயல்பாட்டில் உள்ளது. இத்திட்டம் மூலம் ஒவ்வொரு குடும்பத்திற்கும் ஆண்டொன்றுக்கு 100 நாள் வேலை வாய்ப்பினை உறுதி செய்கிறது. ஊராட்சியில் பதிவு செய்துள்ள அனைத்து குடும்ப உறுப்பினர்களுக்கும் வேலை வாய்ப்பு வழங்கப்படுகிறது. பதிவு செய்துள்ள குடும்ப உறுப்பினர்கள், வேலைகோரி விண்ணப்பிக்கும் பட்சத்தில் அவர்களுக்கு வேலைவாய்ப்பு வழங்கப்படும். அனுமதிக்கப்பட்ட பணிகளை மேற்கொள்ள தொழிலாளர்களுக்கு ஊராட்சி தலைவர் பணி ஒதுக்கீடு செய்து தருவார்.

குறைந்தபட்சம் ஊதியம் பெற 7 மணி நேரம் அல்லது பொறியியல் பிரிவு அலுவலர்களால் அளவீடு செய்து வழங்கப்பட்ட அளவில் பணியினை மேற்கொள்ள வேண்டும். ஒரு நாள் குறைந்தபட்ச ஊதியம் ரூ.80/- என நிர்ணயிக்கப்பட்டுள்ளது. செய்து முடிக்கப்பட்ட பணியின் அளவைப் பொறுத்தே ஊதியம் அனுமதிக்கப்படும். ஒவ்வொரு வாரமும் ஒரு குறிப்பிட்ட நாளில் ஊதியப் பட்டுவாடா குழுவின் முன்னிலையில் ஊதியம் பட்டுவாடா செய்யப்படும். தொழிலாளர்களுக்கான ஊதியம் ரொக்கமாக ஊராட்சியின் மூலம் வழங்கப்படும். ஊதியப் பட்டுவாடா வெளிப்படையாக வழங்கிட ஏதுவாக ஒரு குறிப்பிட்ட பொது இடத்தில் ஊதியம் வழங்கப்படும்.

ஊதியப் பட்டுவாடா வெளிப்படையாக அமைந்திட ஏதுவாக கடலூர் மாவட்டத்தில் ஒரு முன் முயற்சியாக தொழிலாளர்களுக்கு ஏ.டி.எம் மூலம் ஊதியம் வழங்கிட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு முன்மாதிரியாக கடலூர் ஊராட்சி ஒன்றியத்தில் உள்ள 4 ஊராட்சிகளில் தேர்வு செய்யப்பட்டு ஏ.டி.எம் அமைக்கப்பட்டுள்ளது.

பெரியகங்கனாங்குப்பம், திருவந்திபுரம், பச்சையாங்குப்பம் மற்றும் பாதிரிக்குப்பம் ஆகிய ஊராட்சிகள் ஏ.டி.எம் அமைத்திடத் தேர்வு செய்யப்பட்ட ஊராட்சிகள் ஆகும். இந்திய தொழிற் நுட்பப் பயிற்சி மையம், சென்னை எனும் நிறுவனமும் என்லேக் எனும் நிறுவனமும் இணைந்து ஊராட்சிகளைத் தேர்வு செய்தது. ஏ.டி.எம் அமைப்பதற்கு ஸ்டேட் பேங்க் ஆப் இந்தியா முதன்மை வங்கியாகச் செயல்படுகிறது. என்லேக் நிறுவனம் ஆரம்பக் கணக்கெடுப்புகளை மேற்கொண்டது. இந்தியத் தொழில் நுட்பக் கழகம், ஸ்டேட் பாங்க் ஆப் இந்தியா மற்றும் என்லேக் மற்றும் வோர்டெக்ஸ் ஆகிய நிறுவனங்கள் ஒருங்கிணைந்து ஏ.டி.எம் நிறுவுவதற்கு மின்னணு இசைவாக உள்ளதா என்று பரிசோதித்துக் கண்டறிந்தனர்.

ஏ.டி.எம் கருவியைக் கண்காணிக்கத் தகுதியான நபரை இந்திய தொழிற்நுட்ப நிறுவனம், என்லேக் மற்றும் ஸ்டேட் பாங் ஆப் இந்தியா நிறுவனங்களால் தேர்வு செய்யப்பட்டுள்ளது. பாதிரிகுப்பம், பெரிய கங்கனாங்குப்பம், திருவந்திபுரம் மற்றும் பச்சையாங்குப்பம் ஊராட்சிகளில் கணினி பொருத்தப்பட்டுள்ளது. மேற்படி ஏ.டி.எம் அமைப்பிற்கு வலைதல இணைப்பு வசதி (இண்டர்நெட்) செய்யப்பட்டுள்ளது. மேற்படி ஏ.டி.எம் அமைப்பதற்கான அனுமதியை ஸ்டேட் பாங்க் ஆப் இந்தியா, ரிசர்வ் பேங்க் ஆப் இந்தியா வங்கியிடமிருந்து பெற்றுள்ளது.

தேசியத் தகவல் அலுவலரால் முற்றிலும் நவீனமயமாக்கப்பட்ட மென்பொருள் அமைப்பு உருவாக்கப்பட்டுள்ளது. இதன் மூலம் கல்வி அறிவற்ற மற்றும் படித்தறியாத தொழிலாளிகள் பயன்பெறும் வகையில் பையோ மேட்ரிக் சிஸ்டம் மூலம் மேற்படி ஏ.டி.எம் இயங்குகிறது. ஏ.டி.எம்மில் உள்ள தொடுதிரையில் தொழிலாளி தனது பெருவிரலைப் பதித்து இலகுவாக தனக்கு வேண்டிய தொகையை பெற்றுக் கொள்ளலாம், இந்திய தொழில்நுட்பக்கழகம் 26.2.2008 முதல் மேற்படி ஏ.டி.எம் இயக்குவது தொடர்பான பயிற்சியை அளித்து வருகிறது.

பெரிய கங்கனாங்குப்பம் ஊராட்சியில் பதிவு செய்துள்ள 690 தொழிலாளர்களில் பணிக்கு வருகை தரும் 420 தொழிலாளர்களுக்கு வங்கிக் கணக்கு துவக்கப்பட்டு, மேற்படி 420 தொழிலாளர்களுக்கும் ஏ.டி.எம் அட்டைகள் வழங்கப்பட்டுள்ளது. தேசிய ஊரக வேலை உறுதித் திட்ட தொழிலாளர்களுக்கு வாராந்திர ஊதியம் வெளிப்படையாக வழங்கிடும் பொருட்டு ஏ.டி.எம் மூலம் இனி ஊதியப் பட்டுவாடா செய்யப்படும். ★



# நெல் உற்பத்தித் திறன் அதிகரிப்பு

## தமிழக அரசின் நடவடிக்கைகளால் குறுவை சாகுபடியில் தமிழகம் சாதனை

குறுவை சாகுபடிப் பருவத்தில் ஹெக்டேருக்கு 7.7 டன் சராசரி உற்பத்தித் திறன் கண்டு நெல் உற்பத்தியில் தமிழ்நாடு சாதனை படைத்துள்ளது. சில விவசாயிகள் ஹெக்டேருக்கு 9 முதல் 12 டன் வரை அறுவடை செய்துள்ளனர்.

சாதாரணமாக மாநிலத்தில் சராசரி உற்பத்தித் திறன் ஹெக்டேருக்கு ஆறு டன் அளவுக்கு இருக்கும். நீர்த் தேக்கங்களிலிருந்து குறித்த காலத்தில் நீர் விநியோகம், நெல் தீவிர சாகுபடி தொழில் நுட்ப முறையைக் கையாண்டது, உரங்கள் போதுமான அளவு கிடைத்தது போன்ற காரணங்களால் ஹெக்டேருக்கு ஏழு டன்னுக்கு மேல் உற்பத்தித் திறன் சாதனை படைக்கப்பட்டுள்ளது.

சாதாரணமாக டெல்டா மாவட்டங்களில் ஹெக்டேருக்கு ஐந்து முதல் ஆறு டன் வரை காணப்படும் உற்பத்தித் திறன், இந்த முறை பல இடங்களில் எட்டு டன்னுக்கும் மேல் உள்ளது. திருச்சி மாவட்டம் மணச்சநல்லூரில் இரண்டு விவசாயிகள் ஒவ்வொருவரும் 10 மற்றும் 12 டன் அறுவடை செய்துள்ளனர். திருவாரூர் மாவட்டத்தில் மற்றொரு விவசாயி ஹெக்டேருக்கு 11.24 டன் அறுவடை செய்துள்ளார். ஆனால் நாகை மாவட்டத்தில் குறைவான உற்பத்தித் திறனால் டெல்டா மாவட்டங்களில் ஹெக்டேருக்கு 5,756 டன்னாக சராசரி உற்பத்தித் திறன் இருந்தது. கடந்த ஆண்டு 12.46 இலட்சம் ஹெக்டேராக இருந்த குறுவை சாகுபடி நிலப்பரப்பு இந்த ஆண்டு 12.63 இலட்சம் ஹெக்டேராக உயர்ந்தது.

மாநிலத்தில் 75 சதவீத குறுவை அறுவடை முடிந்துவிட்டது என்றும், மீதமுள்ளது டிசம்பர் மாதம் இரண்டாவது வாரத்துக்குள் அறுவடை செய்யப்பட்டுவிடும். கட்டுப்படுத்தப்பட்ட பாசனம் நல்ல உற்பத்தித் திறனை அளிக்கும் என்று விவசாயிகளுக்கு கற்பிக்கப்படுகிறது. இந்தப் பருவத்தில் இதற்குப் பலன் கிடைத்துள்ளது.

டெல்டா மாவட்டங்களில் நெல் உற்பத்தித் திறன் அதிகரிப்பு தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் செய்யும் நெல் கொள்முதலில் பிரதிபலிக்கிறது. இந்த நிறுவனம் இந்த ஆண்டு அக்டோபர் மாதத்திலிருந்து 2.67 இலட்சம் டன் நெல் கொள்முதல் செய்துள்ளது. சுமார் 700 கொள்முதல் மையங்களில் தினசரி 1,500 டன் நெல் வருகிறது. இந்த அளவில் டிசம்பர் மாதம் இரண்டாவது வாரத்துக்குள் இந்நிறுவனம் மூன்று இலட்சம் டன் நெல்லை கொள்முதல் செய்யும். ★



# வேளாண் தேவைகள் மற்றும் சேவைகள் அனைத்தும் ஒரே இடத்தில் கிடைக்கச் செய்யும் தமிழக அரசின் புதிய திட்டம்

வேளாண்மைப் பணியில் தேவைப்படும் அனைத்து இடுபொருட்கள் மற்றும் பிற தேவைகளும் ஒரே இடத்தில் விவசாயிகளுக்கு கிடைக்கச் செய்யும் வகையில், வேளாண் ஆலோசனை மற்றும் சேவை மையத்தினை தமிழ்நாட்டில் 385 வட்டாரங்களிலும் அமைக்க அரசு ஆணை வழங்கியதன் மூலம், தமிழகத்தின் வேளாண்மையில் ஒரு பெரிய மாற்றத்தை ஏற்படுத்த அனைத்து நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டுள்ளன.



ரூ. 33 கோடி செலவில் வேளாண் ஆலோசனை மையம், பண்ணை இயந்திர சேவை மையம் மற்றும் விதை சுத்திகரிப்பு மையம் அமைக்கும் மூன்று முக்கியத் திட்டங்களின் உதவிகள் ஒருங்கிணைக்கப்பட்டு, உரம், பூச்சிக்கொல்லி மருந்து, நுண்ணீர்ப் பாசன உபகரணங்கள் மற்றும் சான்று விதைகள் ஆகிய இடுபொருட்களை விவசாயிகளுக்கு விநியோகம் செய்யும் மையங்களாகவும் அவை செயல்படும்.

"வேளாண்மைத் தொழிலைப் பொருளாதார ரீதியாக, இலாபம் தரக்கூடிய வணிகத் தொழிலாக மேம்படுத்துவதே எங்கள் எண்ணம். தற்போது வேளாண்மையை அறிவியல் ரீதியாக மேற்கொண்டால், கிராமப்புற மக்களுக்குப் பெரிய அளவில் வேலைவாய்ப்பினை வேளாண்மைத் தொழிலினால் வழங்க முடியும்.





ஒருங்கிணைந்த வேளாண்மை வணிக மையங்களின் மூலம் அதிக அளவில் வருமானம் பெறமுடியும். மகாராஷ்டிராவில் இதுபோன்று இயங்கிவரும் மையங்கள் ஒவ்வொன்றும் 100 பணியாளர்களுக்கு வேலை வாய்ப்பினை வழங்கி வருகின்றது.

வேளாண் ஆலோசனை மையங்கள் அமைக்க வேளாண்மைப் பட்டதாரிகள் மட்டுமே தகுதியானவர்கள் என நிர்ணயிக்கப் பட்ட விதி தளர்த்தப்பட்டு, இம்மையங் களுக்கான உதவிகள் மேலும் விரிவுபடுத்தப் பட்டுள்ளது. அரசு தற்போது நிர்ணயித்துள்ள விதிமுறைகளின்படி, வேளாண்மை அல்லது அதன் தொடர்பான கல்வியில் பட்டம் பெற்ற மற்றும் பட்டயப் படிப்புத் தகுதி உள்ளவர்கள், இவ்வேளாண் வணிக மையங்களை அமைக்க முன்வரலாம். மேலும், ஓய்வுபெற்ற விஞ்ஞானிகள், பல்கலைக்கழகப் பேராசிரியர் கள் மற்றும் வேளாண்மைத்துறை தொழில்நுட்ப அலுவலர்களும் இம்மையங்களைத் தொடங்கத் தகுதியானவர்கள். தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுச் சங்கங்களும் இம்மையங்களைத் தொடங்கலாம்.

திட்ட வரைமுறைகளின்படி, வேளாண் ஆலோசனை மையங்கள் அமைக்கப்பட்டபின், அம்மையத்தை அமைத்தவரின் விண்ணப் பத்தின் அடிப்படையில் அரசு மானியமாக ரூ.3 இலட்சம் வழங்குகிறது. டிராக்டர், பவர் டில்லர், லேசர் மூலம் நிலம் சமப்படுத்தும் இயந்திரம், உழிக்கலப்பை, விதை விதைக்கும் இயந்திரம், அனைத்துப் பயிர்களுக்கும் பயன்படுத்தும் கதிரடிக்கும் இயந்திரம் போன்ற பண்ணை இயந்திரங்களை வாங்குவதற்கு குறைந்தபட்சம் ரூ. 16 இலட்சம் முதலீடு செய்தவர்களுக்கு அரசு மானியமாக ரூ.4 இலட்சம் வழங்கும். மேலும் விதை சுத்திகரிப்பு இயந்திரம் மற்றும் விதை நேர்த்தி மையம் அமைக்க குறைந்தபட்சம் ரூ.21.50 இலட்சம் முதலீடு செய்தால், அரசு மானியமாக ரூ. 7.5 இலட்சம் வழங்கும்.

### விலை

ஏழை மக்களிடம் தான் பெரும்பாலான வியாபாரம் நடக்கிறது. அப்படி வியாபாரம் நடக்க வேண்டுமானால், அவர்களுடைய கைகளுக்கு எட்டும் விதத்தில் விலை இருக்கவேண்டும். அவர்களது கைகளுக்கு எட்டுகிற விலை என்பது என்ன? அவர்களுடைய வருமானத்திற்கு ஏற்ற முறையில் விலை இருக்க வேண்டும்.

**– அறிஞர் அண்ணா**

இம் மூன்று மையங்களையும் அமைக்கும் தனி நபருக்கு அல்லது முகமைக்கு நுண்ணீர்ப் பாசனக் கருவிகள், உரங்கள், பூச்சிக்கொல்லி மருந்துகள், சான்று விதைகள் போன்ற இடுபொருட்களையும் விற்பனை செய்யத் தகுதியானவர்களாகக் கருதி அனைத்து உரிமங்களும் வழங்கப்படும். இடுபொருட்களை உற்பத்தி செய்யும் நிறுவனங்கள் இத்தகைய வேளாண் வணிக மையங்களை தங்கள் இடுபொருட்களை விற்பனை செய்யும் நிலையங்களாக நியமிக்க அறிவுறுத்தப் படுவார்கள். மண் பரிசோதனை முதல், கதிரடிக்கும் இயந்திரம் வாடகைக்கு பெறுதல்வரை, விவசாயிகளின் அனைத்து தேவைகளையும் இவ்வேளாண் வணிக மையங்களில் விவசாயிகளுக்கு கிடைப்பதை உறுதி செய்வதே தமிழக அரசின் நோக்கம். *

# அனைத்துத் துப்புரவுத் தொழிலாளர்களுக்கும் மறுவாழ்வு அளித்திட அரசு தீவிர நடவடிக்கை

தமிழ்நாட்டிலுள்ள மனிதக்கழிவுகளை அள்ளும் பணியில் ஈடுபட்டுள்ள 30 ஆயிரத்துக்கும் மேற்பட்ட தொழிலாளர்களை அந்தத் தொழிலிலிருந்து மீட்டு மறுவாழ்வு அளிக்கப்பட்டுள்ளது என்றும், இந்த நிதி ஆண்டு இறுதிக்குள் எஞ்சியிருக்கும் அடையாளம் காணப்பட்ட இத்துறைத் துப்புரவுத் தொழிலாளர்கள் அனைவருக்கும் மறுவாழ்வு அளிக்க மாநில அரசு தீவிர நடவடிக்கை எடுத்து வருகிறது என்றும் அவர்களது மறுவாழ்வுக்கான மாநில சட்டக் கண்காணிப்புக் குழுவுக்குத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

1993ஆம் ஆண்டு, முதல் கணக்கெடுப்பு நடைபெற்றபோது மாநிலத்தில் இத்தகையத் துப்புரவுத் தொழிலாளர்கள் (மற்றும் அவர்களைச் சார்ந்தவர்கள்) 35,561 பேர் இருப்பதாக அடையாளம் காணப்பட்டது என்று அரசு தலைமைச் செயலாளர் திரு கே. எஸ். ஸ்ரீபதி, இ.ஆ.ப., தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் இந்தப் புள்ளி விவரம் அளிக்கப்பட்டது.

இவர்களில் 2007–2008ஆம் ஆண்டு இறுதி வரை 30,688 துப்புரவுத் தொழிலாளர்களும், அவர்களைச் சார்ந்தவர்களும் விடுவிக்கப்பட்டு அவர்களுக்கு மறுவாழ்வு அளிக்கப்பட்டது. 2008–2009ஆம் ஆண்டில் மேலும் இரண்டாயிரம் பேருக்கு மறுவாழ்வு அளிக்கப்படும்.

1993ஆம் ஆண்டு புள்ளி விவரம் காலாவதியானது என்பதாலும், துப்புரவுத் தொழிலாளர் மற்றும் அவர்களைச் சார்ந்தோருக்கான மீட்பு மற்றும் மறுவாழ்வு தேசியத் திட்டத்தின்படி மேலும் சரியான புள்ளி விவரம் தேவை என்பதாலும், துப்புரவுத் தொழிலாளர்களை அடையாளம் காண இந்த ஆண்டு ஆரம்பத்தில் விழிப்புணர்வு உருவாக்கப்பட்டது. இதன் விளைவாக 22,811 துப்புரவுத் தொழிலாளர்களும் அவர்களைச் சார்ந்தவர்களும் சேர்க்கப்பட்டனர்.

இவர்களில் 11,896 பேர் கைகளால் மனிதக் கழிவுகளை அள்ளும் துப்புரவுத் தொழிலாளர்கள் மறுவாழ்வுக்கான சுயவேலைவாய்ப்புத் திட்டத்திற்கு தகுதி பெற்றவர்களாக இருந்தனர். எஞ்சியவர்களில், 5,963 பேர் ஏற்கெனவே உள்ளாட்சி அமைப்புகளில் பணிபுரிந்து வருகின்றனர். 4,952 பேர் 17 வயதுக்கும் குறைவானவர்கள்.

அவர்களது மறுவாழ்வுக்கான ஒருங்கிணைப்பு அமைப்பான தாட்கோ நிறுவனம், 2009ஆம் ஆண்டு மார்ச் இறுதிக்குள் அடையாளம் காணப்பட்ட 11,895 துப்புரவுத் தொழிலாளர்கள் அனைவருக்கும் மறுவாழ்வு அளிக்கப்படும் என்று உறுதி அளித்துள்ளது. அவர்களது திறமைகளை உயர்த்தி தொழில் நடத்த வங்கிக் கடன் கொடுக்கப்படும். இந்தக் கடன் மத்திய அரசின் திட்டமான கைமூலம் மனிதக் கழிவுகளை அள்ளும் துப்புரவுத் தொழிலாளர் மறுவாழ்வுக்கான சுயவேலைவாய்ப்புத் திட்டமாகும்.

தகுதியான 11,896 பேரில் தாட்கோ நிறுவனம் ஏற்கெனவே பயனாளிகளின் வாரிசுகளுக்கு 2,623 கடன் விண்ணப்பங்கள் அனுப்ப உதவியுள்ளது. அவற்றைச் சரிபார்த்து வங்கிகள் 627 பேருக்கு கடன்களை வழங்கியுள்ளன.

அதுபோலவே, தேசியத் துப்புரவுத் தொழிலாளர் நிதி மற்றும் அபிவிருத்திக் கடனும் அங்கீகரித்துள்ள பயிற்சி நிறுவனங்களில் 5,183 பேர் பயிற்சி பெற்று வருகின்றனர்.

❖ ❖ ❖

## அண்ணாவின் பொன்மொழி



## அறிவாயுதம் வேண்டும்

தயை, தர்மம், அன்பு, நேசம் முதலிய பண்புகள் நாட்டு மக்களிடம் வளரவேண்டும். அதுதான் அவர்கள் நாகரிக வாழ்வு வாழ்கிறார்கள் என்பதற்கு அடையாளம் என்றெல்லாம் அறிஞர்கள் கூறக் கேட்டு அகமகிழ்கிறோம். விவேகானந்தரின் உபதேசத்தைப் புகழ்கிறோம். வடலூர் இராமலிங்கரின் சமரச சுத்த சன்மார்க்கத்தை வாழ்த்துகிறோம். ராஜாராம் மோகன்ராய், தயானந்தர் ஆகியோருக்கு விழா நடத்துகிறோம். நம்முடைய நாட்களிலேயே அரிஜன் நிதிக்குப் பணம் கூடத் தருகிறோம். ஆனால் தீண்டாமையை அறவே ஒழிக்கவேண்டும் வாரீர் என்று அழைத்தால், தர்மம், தயை, அன்பு, நட்பு முதலிய குணங்களெல்லாம் ஓட்டுக்குள் மறைந்து கொள்ளும் ஆமைகளாகிவிடுகின்றன. எங்கிருந்தோ கிளம்பி வைதிகம் என்னும் நாகம் சீறுகிறது. அதை அடக்க அறிவாயுதம் வேண்டும்.



# வளரிளம் பெண்கள் மற்றும் கர்ப்பிணிகள் இரத்த சோகை தடுப்புத் திட்டம்



தமிழ்நாட்டில் வளரிளம் பெண்கள் மற்றும் கர்ப்பிணிகளுக்கு இரத்த சோகை என்பது குறிப்பிடத்தகுந்த நலவாழ்வுப் பிரச்சனையாக உள்ளது. கிராம மக்கள் பெரும்பாலும் இரத்தசோகை நோயினால் பாதிக்கப்பட்டுள்ளனர். சமுதாயச் சூழல் மற்றும் பொருளாதார ரீதியாக கர்ப்பிணிகளிடம் ஏற்படும் இரத்த சோகை நோயைக் கட்டுப்படுத்துவதில் பல்வேறு வகையான முறைகள் கையாளப்பட வேண்டும்.

தாய்மார்கள், முக்கியமாக வறுமைக் கோட்டிற்குக்கீழ் உள்ள கர்ப்பிணிகள் பிரசவிக்கும்போது, இரத்தசோகையின் காரணமாக மருத்துவ ரீதியான பிரச்சனைகளைச் சந்திக்க நேரிடுகிறது. இதனால் பிரசவத்தின்போது தாய்க்கும், குழந்தைக்கும் ஆபத்தை உருவாக்கக்கூடிய நிலைமை ஏற்படுகிறது. சில நேரங்களில் பிரசவத்தின்போது தாயும், குழந்தையும் இறந்துவிடக்கூடிய நிலைமைகூட இதனால் ஏற்பட்டுவிடுகிறது.

2003–2004 ஆம் ஆண்டு எடுக்கப்பட்ட மாவட்ட அளவிலான குடும்ப கணக்கெடுப்பில், தமிழ்நாட்டில் கர்ப்பகால இரத்த சோகை நோய் அதிகமாக உள்ளது எனவும் கர்ப்பிணிகளில் 94.1 சதவீதம் பேர் கர்ப்ப கால இரத்த சோகையால் பாதிக்கப்பட்டுள்ளார்கள் எனவும் கண்டறியப்பட்டுள்ளது. இதில் 64.1 சதவீதம் பேர் மிதமான இரத்த சோகையாலும், 28.1 சதவீதம் பேர் சுமாரான இரத்த சோகையாலும் 1.9 சதவீதம் பேர் தீவிரமாகவும் பாதிக்கப்பட்டுள்ளனர். இதனை நிவர்த்தி செய்ய கர்ப்பிணிகள் மற்றும் வளரிளம் பெண்களின் எச்.பி. ரத்த அளவை உயர்த்துவதாக தமிழக அரசு உறுதியளித்துள்ளது.

தீவிரக் கண்காணிப்பு மற்றும் சிறப்புத் திட்டமாக வளரிளம் பெண்கள் மற்றும் கர்ப்பிணிகள் இரத்த சோகை தடுப்புத் திட்டத்தை தமிழ்நாட்டில் செயல்படுத்துவதற்கு ஆய்வு ரீதியாக தானம் அறக்கட்டளை (DHANAM FOUNDATION) தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தை 2 ஆண்டுகளில் நிறைவேற்ற திட்டமிடப்பட்டுள்ளது. இந்த நிறுவனம் திண்டுக்கல் மாவட்டத்தில் சாணார்பட்டி, மதுரை மாவட்டத்தில் கொட்டாம்பட்டி, இராமநாதபுரம் மாவட்டத்தில் முதுகுளத்தூர், தஞ்சாவூர் மாவட்டத்தில் திருவிடை மருதூர், தேனி மாவட்டத்தில் போடிநாயக்கனூர் ஆகிய ஒன்றியங்களைத் தத்தெடுத்துக்கொண்டு இத்திட்டத்தைச் செயல்படுத்த ஆவன செய்யப் பட்டுள்ளது. பின்வரும் முறைகளில் இத்திட்டம் செயலாக்கப்பட உள்ளது.

✶ இரத்த சோகையின் ஆதார கணக்கெடுப்புப் பணி

✶ கிராம நல வாழ்வு மற்றும் துப்புரவுக் குழுக்கள் மூலமாக மக்களிடையே சுகாதாரப் பழக்க வழக்கங்களில் நடத்தை மாற்றத்தை ஏற்படுத்துவது.

✶ தகவல், கல்வி மற்றும் தொடர்பு

✶ செயல்பாடுகளின் மதிப்பீடு மற்றும் விரிவாக்கம்

மேலும் இதன் மூலம் வளரிளம் பெண்கள் மற்றும் கர்ப்பிணிப் பெண்களின் இரத்தத்தில் உள்ள ஹீமோகுளோபின் தற்போதைய அளவை விட 20 சதவீதம் அதிகரிக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படுகிறது. மேற்கண்ட பணிக்காக தானம் அறக்கட்டளைக்கு (DHANAM FOUNDATION) ரூ.82.12 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. ✶

# தொழில் முனைவோர்களை ஊக்குவிக்கும் தமிழக அரசின் புதிய ஆன்லைன் பதிவுத் திட்டம்



**“தமிழகத்தின் எந்தப் பகுதியிலும் ஆன்லைன் வழியாக தொழிலினைப் பதிவு செய்யும் தமிழக அரசின் திட்டம் எளிமையாக இருப்பதோடு, வீண் அலைச்சலைக் குறைத்து தொழில் முனைவோர்களை ஊக்குவிக்கிறது”**

**மா**ண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் கலைஞர் அவர்கள், 11ஆவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் பத்துலட்சம் பேருக்கு நேரடி மற்றும் மறைமுக வேலை வாய்ப்புகளை உருவாக்குவதற்காக குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில்களுக்காகவே தமிழகத்தில் முதன் முறையாக ஒரு புதிய தொழில் கொள்கையை 22.2.2008 அன்று வெளியிட்டார்கள். இந்தக் கொள்கையின்படி தமிழகத்தில் புதிய தொழில் தொடங்க விரும்பும் தொழில் முனைவோர்கள் எந்தவித தயக்கமும் இல்லாமல் ஆர்வத்துடன் தொழிலில் ஈடுபடும் வகையில், மாவட்ட தொழில் மையங்களுக்கு நேரில் செல்லாமலேயே, தாங்கள் இருக்கும் இடத்திலிருந்தே இணையத்தின் மூலம் தொழில் தொடங்குவதைப் பதிவு செய்யும் இணைய தள திட்டத்தை மாண்புமிகு ஊரகத் தொழில்துறை அமைச்சர் திரு. பொங்கலூர் நா. பழனிச்சாமி அவர்கள் 08.08.2008 அன்று தூத்துக்குடியில் தொடங்கி வைத்தார்.

இதன்படி தமிழ்நாட்டில் 9.10.2008 வரை 3,562 தொழில் முனைவோர்கள் தங்களது தொழிலை ஆன்லைன் (Online Registration) முறையில் இணைய தளத்தில் ஆர்வத்துடன் பதிவு செய்துள்ளனர். மேலும், தமிழகத்தின் பல்வேறு பகுதிகளிலிருந்தும் இந்தப் பதிவு தொடர்கிறது. இணைய தளம் மூலம் புதிய தொழிலினைப் பதிவு செய்த தொழில் முனைவோர்கள் சிலரின் அனுபவங்கள், தொழில் வணிக இயக்குநர் அலுவலகம் மூலம் சேகரிக்கப்பட்டது.

**இதன் விவரம் பின்வருமாறு:**

சென்னை நீலாங்கரை, ஸ்ரீ கபாலீஸ்வரர் நகர், தெற்கு முதன்மைச் சாலையைச் சார்ந்த 45 வயதுடைய திரு. என்.எஸ். சித்தார்த்தன் என்பவர் B.A., மற்றும் D.A.E., படித்தவர். தனியார் நிறுவனங்களிலும், பின்னர் துபாய் நாட்டின் கப்பல் கட்டும் நிறுவனத்திலும் ஏற்கெனவே பணியாற்றிய இவர், தமிழகத்தில் சிறு தொழிலுக்கென தனிக் கொள்கை ஏற்படுத்தப்பட்டு செயல்படுவதைப் பத்திரிகை வாயிலாக அறிந்தார். இவர் சென்னையில் இருந்தாலும்



தனது தொழிலை நாகப்பட்டினம் மாவட்டம் சீர்காழி ஒன்றியத்திலுள்ள புதுப்பட்டினம், தர்காஸ் பகுதியில் தொடங்கவே விரும்பினார். இவர் சிறிய படகு / கப்பல் கட்டுதல், பழுது பார்த்தல் மற்றும் சரக்கு கையாளுதல் என, தான் ஏற்கெனவே பணிபுரிந்து அனுபவம் பெற்ற துறையில் ஈடுபட விரும்பி அவரது நண்பர்களிடத்தில் ஆலோசனை செய்தார். இந்நிலையில், இருந்த இடத்திலிருந்தே ஆன்லைன் மூலம் பதிவு செய்யும் வசதியை அறிந்த இவர், சென்னையில் இருந்தபடியே சீர்காழியில் ‘Hindusthan Marine Engineering Works’ என்ற பெயரில் நாகப்பட்டினம் மாவட்டத் தொழில் மையத்திற்கு இணைய தளம் மூலம் பதிவு செய்தார். இது குறித்து, அவரிடம் கருத்துக் கேட்டபோது, 6.10.2008 அன்று ஆன்லைன் மூலம் தனது தொழிலைப் பதிவு செய்துள்ளதாகவும், புதிய படகு கட்டுதல் மற்றும் பழுது பார்த்தல் தொழிலினை ரூ. 6 கோடி மதிப்பீட்டில் தொடங்குவதற்காகப் புதுப்பட்டினத்தில் 7.31 ஏக்கர் பட்டா நிலத்தை ஒதுக்கியிருப்பதாகவும், இத்தொழில் மூலம் 150 முதல் 200 பேருக்கு நேரடியாகவும், மறை முகமாகவும் வேலை வாய்ப்பு வழங்கத் திட்டமிட்டிருப்பதாகவும் தெரிவித்தார். ஏற்கெனவே சென்னை, விசாகப்பட்டினம், கிருஷ்ணப்பட்டினம், கோவா மற்றும் துபாய் நாட்டில் பணியாற்றிய அனுபவம் தனக்கு முன்னேற்றத்தைக் கொடுக்கும் என்றும், தான் சென்னையில் இருந்தாலும் தமிழகத்தின் எந்தப் பகுதியிலும் ஆன்லைன் வழியாக தொழிலினைப் பதிவு செய்யும் தமிழக அரசின் திட்டம் எளிமையாக இருப்பதோடு, வீண் அலைச்சலைக் குறைத்து தொழில் முனைவோர்களை ஊக்குவிக்கிறது எனவும் தெரிவித்தார்.

வேதாரண்யம் வட்டம், தெற்கு மருதூரைச் சார்ந்த காகாதேவன் காடு கிராமத்தைச் சேர்ந்தவர் திருமதி. டி. பாமா. பிற்படுத்தப்பட்ட வகுப்பைச் சேர்ந்த இவர், சிங்கன்புத்தகை என்ற பகுதியில் ‘Thirumalai Coir Industries’ என்ற பெயரில் தென்னை மட்டையிலிருந்து கயிறு தயாரிக்கும் தொழிலைத் தொடங்குவதற்காக மாவட்டத் தொழில் மையத்திற்கு இணைய தளம் மூலம் ஆன்லைனில் பதிவு செய்தார். ரூ.1.8 இலட்சம் மதிப்பில் தொடங்கவுள்ள கயிறு திரித்தல் தொழிலில் குறைந்தது பத்து நபர்களுக்கு வேலை வழங்கவுள்ளதாகவும், ஆண்டுக்கு 10,000 டன் கயிறு உற்பத்தி செய்யவுள்ளதாகவும் தெரிவித்தார். தொழில் தொடங்க ஆன்லைனில் பதிவு செய்த பின்னர் உடனடியாகத் தொழில் தொடங்க உரிய சான்றிதழ் வழங்கப்பட்டதையும் மகிழ்ச்சியோடு பகிர்ந்து கொண்டார்.

காஞ்சிபுரம் மாவட்டம், செங்கல்பட்டு அழகேசன் நகரைச் சேர்ந்த திரு. மன்னார் கிருஷ்ணன் என்பவரின் மனைவி திருமதி. மகாலஷ்மி. எட்டாம் வகுப்பு வரை படித்த 42 வயதான இவர், உத்திரமேரூர் வட்டம், கலியம்பூண்டி கிராமத்தில் ‘Sri Mahalakshmi Industries’ என்ற பெயரில் எரிசாம்பலை (Fly Ash) கொண்டு செங்கல், ஹாலோ பிளாக், சிமெண்ட் கான்கிரிட் ப்ளாக் போன்றவை தயாரிக்க காஞ்சிபுரம் மாவட்டத் தொழில் மையத்திற்கு ஆன்லைன் மூலம் பதிவு செய்து, தொடக்கப் பணிகளில் ஆர்வமாக ஈடுபட்டுள்ளார். சுற்றுச்சூழலுக்கு மாசு ஏற்படுத்தாத வகையில் இவர் கட்டுமானப் பொருட்கள் தயாரிக்க உள்ளதாகவும், செங்கல் ஒன்றின் விலை ரூ.3 முதல் 4 வரை விற்கும் இன்றைய நிலையில், தான் உற்பத்தி செய்யும் செங்கல் ரூ.1 முதல் ரூ.1.50 வரை விற்க உள்ளதாகவும், நான்கு ஏக்கர் நிலத்தை தற்போது இந்தத் தொழிலுக்குப் பயன்படுத்த உள்ளதாகவும் தெரிவித்தார். மேலும், மூலப்பொருட்களான எரிசாம்பல், மணல், சுண்ணாம்புக்கல் போன்றவை பெற ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதோடு, தனது உற்பத்திப் பொருளின் தரமும், நிறுவனம் அமையவுள்ள இடத்தின் சாலை வசதியும் விற்பனைக்குக் கூடுதல் வாய்ப்புகளாக அமையும் என்றும், தொழில் பதிவினை செய்ய மாவட்டத் தொழில் மையங்களுக்கு நேரில் சென்று காலத்தை கடத்துவதைவிட இணைய தளத்தின் மூலம் விரைவாகப் பெற முடிகிறது எனவும் தெரிவித்தார்.

திருவள்ளூர் மாவட்டம், திருத்தணி, இலுப்பூர் கிராமத்தில் ‘Surya Mineral Water’ என்ற தூய்மைப்படுத்தப்பட்ட குடிநீர் தயாரித்து வழங்கும் நிறுவனத்தை பங்குதாரர் முறையில் திரு. சலோனா மற்றும் திரு. எஸ். பழனி ஆகியோர் கூட்டாகத் தொடங்க விரும்பினார்கள். தாங்கள் தொடங்க விரும்பிய தொழிலை இணைய தளம் வழியாக திருவள்ளூர் மாவட்ட தொழில் மையத்தில் பதிவு செய்துள்ளனர். இந்த நிறுவனத்தை ரூ.20 இலட்சம் மதிப்பீட்டில் சுமார் 2,000 சதுர அடியில் தொடங்க உள்ளதாகவும், தேவையான இயந்திரங்களைப் பொருத்த நடவடிக்கை எடுத்துள்ளதாகவும், சுமார் 15 முதல் 20 நபர்களுக்கு வேலை வாய்ப்பை வழங்கும் வகையில் செயல்படுவதாகவும் தெரிவித்தனர். பணியாளர் செலவினம் போக, மாதத்திற்கு ரூ.50,000 வருமானம் பெற இயலும் என்றும், சந்தைப் படுத்துவதற்கு உரிய ஏற்பாடுகள் செய்துள்ளதாகவும், அலைச்சல் இல்லாமல் ஆன்லைன் மூலம் உடனடியாகப் புதிய தொழிலினைப் பதிவு செய்தது, எளிமையான நடைமுறையாகவும், வியப்பாகவும் இருப்பதாகக் கூறியுள்ளார்.

தமிழகத்தின் மற்ற மாவட்டங்களிலும் புதிய தொழில் முனைவோர்கள் ஆன்லைனில் பதிவு செய்வது அதிகரித்து வருகிறது. சேலம், ஈரோடு, கோவை ஆகிய மாவட்டங்களைத் தொடர்ந்து கிருஷ்ணகிரி, மதுரை, வேலூர், காஞ்சிபுரம் மாவட்டங்களிலும், புதிய தொழில் முனைவோர் ஆன்லைனில் தொழிலினைப் பதிவு செய்யும் விழிப்புணர்வு கூடியுள்ளது. இதர மாவட்டங்களிலும் மாவட்டத் தொழில் மைய அலுவலகங்கள் மூலம் தொடர் நடவடிக்கை எடுக்க மாவட்டத் தொழில் மைய பொது மேலாளர்களை, தொழில் ஆணையர் மற்றும் தொழில் வணிக இயக்குநர் திரு. கோ. சந்தானம், இ.ஆ.ப., அவர்கள் அறிவுறுத்தியுள்ளார். ✶



## வாடிக்கையாளர்களைக் கவரும்

# கோ-ஆப்டெக்ஸ்

## நடமாடும் விற்பனை நிலையம்



**கோ**-ஆப்டெக்ஸின் தரமான எழில்மிகு கைத்தறித் துணிகள் மற்றும் ஆடைகள், அனைத்துத் தரப்பினரையும் சென்றடைய வேண்டும் என்ற சீரிய நோக்கத்தோடும் கோ-ஆப்டெக்ஸ் விற்பனை நிலையம் இல்லாத பகுதியில் வாழும் வாடிக்கையாளர்களின் தேவையைப் பூர்த்தி செய்திடும் வகையில் நடமாடும் கோ- ஆப்டெக்ஸ் விற்பனை நிலையம் அமைக்கப்பட்டுள்ளது.

ஒரு விற்பனை நிலையத்தில் உள்ள அனைத்து விதமான துணிகளும், சேலைகளும், ஆயத்த ஆடைகளும் இந்த நடமாடும் விற்பனை நிலையத்தில் இடம் பெறும். முதல் கட்டமாக சென்னை நகரில் உள்ள கல்லூரிகள், பள்ளிகள் அரசு அலுவலகங்கள், தனியார் நிறுவனங்கள் மென்பொருள் பூங்காக்கள், குடியிருப்புகள், கண்காட்சிகள், அர்சுப் பொருட் காட்சிகள் ஆகிய இடங்களுக்குச் சென்று விற்பனை செய்யத் திட்டமிடப்பட்டுள்ளது.

அனைத்துப் பொருட்களுமே வாடிக்கையாளர் களை சென்றடையும் தத்துவம் பெரிதாகப் போற்றப்படும் இந்நாளில் கோ-ஆப்டெக்ஸ் அந்த தத்துவத்தைப் பயன்படுத்தி தங்களது விற்பனையைப் பெருக்க திட்டமிடப்பட்டுள்ளது.

மேலும் நடமாடும் கோ-ஆப்டெக்ஸ் ஒரு விளம்பரமாகவும் பயன்படுகிறது. கைத்தறியின் பெருமையைப் பரைசாற்ற இந்த நடமாடும் கோ-ஆப்டெக்ஸ் ஒரு முக்கியமான ஊடகமாக இருக்கிறது.

ஒரு இடத்திற்குச் சென்றுவருவது என்பது, கடைகளுக்குச் சென்று கூட்ட நெரிசலில் பொருட்களைப் பார்த்து வாங்குவது என்பது இந்நாளில் யாவரும் விரும்பாத ஒன்று. எனவே வாடிக்கையாளரின் நாடியைப் புரிந்து கொண்டு அவர்களுக்குச் சேவை செய்யும் மனப்பாங்குடன் செயல்படும் இந்த நடமாடும் கோ-ஆப்டெக்ஸால் ஏழை நெசவாளரும் பயன்பெறுவர் என்பது உறுதி. எனவே வாடிக்கையாளர், கோ-ஆப்டெக்ஸ் (விற்பனையாளர்), நெசவாளர் (உற்பத்தியாளர்) ஆகிய மூவரும் பயன்பெறும் வண்ணம் இந்த நடமாடும் கோ-ஆப்டெக்ஸ் இயங்கும்.

இத்தகைய சிறப்பு வாய்ந்த கோ-ஆப்டெக்ஸ் நடமாடும் விற்பனை நிலையத்தை 14.10.2008 அன்று மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை மற்றும் கைத்தறித்துறை அமைச்சர் திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன் அவர்கள் சென்னை, கோ-ஆப்டெக்ஸ் வளாக மையத்தில் தொடங்கி வைத்தார். □



# அறியாமை இருள் அகற்றி பொது அறிவை வளர்க்கும் இலவச வண்ணத் தொலைகாட்சிப் பெட்டிகள் வழங்கும் திட்டம்



**ஏ**ழை எளிய மக்கள் நாட்டு நடப்புகளை உடனுக்குடன் அறிந்து பொது அறிவினைப் பெற்று பயன்பெறும் வகையில் இந்தியாவிலேயே முதன்முதலாக மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் கலைஞர் அவர்களால் அறிவிக்கப்பட்ட இலவச வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகள் வழங்கும் திட்டம், தமிழகம் முழுவதும் சிறப்பாகச் செயல்படுத்தப் பட்டு வருகிறது. தேர்தல் அறிக்கையிலும், அதனைத் தொடர்ந்து 2006-2007ஆம் ஆண்டின் நிதிநிலை அறிக்கையிலும் அறிவித்தபடி மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் 15.09.2006 அன்று அண்ணா பிறந்த பொன்னாளில் காஞ்சிபுரம் மாவட்டம் படப்பை அருகில் கரசங்கால் கிராமத்தில் உள்ள தந்தை பெரியார் நினைவு சமத்துவபுரத்தில் வாழும் பயனாளிகளுக்கு முதற்கட்டமாக இலவச வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகள் வழங்கி திட்டத்தைத் தொடங்கி வைத்தார்.

கன்னியாகுமரி மாவட்டத்தில் 16.09.2006 அன்று மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் திருமதி. ஆ. தமிழரசி அவர்கள் முதற்கட்டமாக கலிங்கராஜபுரம், செண்பகராமன்புதூர் ஆகிய பகுதிகளிலுள்ள பெரியார் நினைவு சமத்துவபுரங்களில் வாழும் 196 பயனாளிகளுக்கு இலவச வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகளை வழங்கினார்.

கன்னியாகுமரி மாவட்டத்தில் இலவச வண்ணத்தொலைக்காட்சிப் பெட்டிகள் திட்ட செயலாக்கம் குறித்து மாண்புமிகு சுற்றுலா மற்றும் பதிவுத்துறை அமைச்சர் திரு. என். சுரேஷ்ராஜன் அவர்கள் தெரிவிக்கையில், "மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் கலைஞர் அவர்களால் அறிவிக்கப்பட்டு செயல்படுத்தப்பட்டுவரும் சிறப்புத்திட்டங்களில் ஒன்றான இலவச வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகள் வழங்கும் திட்டத்தின்கீழ் கன்னியாகுமரி மாவட்டத்தில் முதற்கட்டமாக பெரியார் நினைவு சமத்துவபுரங்களில் வாழும் 196 பயனாளிகளுக்கு இலவச வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகள் வழங்கப்பட்டுள்ளது. இரண்டாம் கட்டமாக (2007-ஆம் ஆண்டில்) 75 ஆயிரத்து 710 இலவச வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகள் வழங்கப்பட்டுள்ளது. மூன்றாம் கட்டமாக நடப்பு ஆண்டில் 1 இலட்சத்து

1,500 இலவச வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகள் வழங்கத் திட்டமிடப்பட்டு இதுவரை 75 ஆயிரத்து 349 இலவச வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகள் வழங்கப்பட்டுள்ளது. கன்னியாகுமரி மாவட்டத்தில் இதுவரை 1 இலட்சத்து 51 ஆயிரத்து 255 இலவச வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகள் வழங்கப்பட்டுள்ளது. கன்னியாகுமரி மாவட்டத்தில் இலவச வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகள் வழங்கும் திட்டத்தில் 5,116 பயனாளிகளின் இல்லங்களுக்கு இலவச மின் இணைப்புகள் வழங்கப்பட்டுள்ளது" என்றார்.

நடப்பாண்டில் இத்திட்ட செயல்பாடு குறித்து மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி. பி. ஜோதி நிர்மலா இ.ஆ.ப., அவர்கள் தெரிவிக்கையில்,

"கன்னியாகுமரி மாவட்டத்தில் இலவச வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகள் வழங்கும் திட்டத்தின்கீழ் மின் இணைப்பு இல்லா பயனாளிகளின் இல்லங்களுக்கு உடனடியாக இலவச மின் இணைப்புகள் வழங்கப்பட்டு வருவது மக்களுக்கு இரட்டிப்பு மகிழ்ச்சியை ஏற்படுத்தியுள்ளது" என்றார்.

இலவச வண்ணத்தொலைக்காட்சிப் பெட்டியுடன் மின்னிணைப்பும் பெற்ற தோவாளை ஊராட்சி ஒன்றியம் தெள்ளாந்தி ஊராட்சி தெள்ளாந்திகுளம் மறுகால் பகுதியைச் சார்ந்த பயனாளி திரு. ஞானசிகாமணி (வயது–84) மற்றும் அவரது மனைவி திருமதி. ஞானபிரகாசி (வயது–80) ஆகியோர் கூறுகையில்,

"எனக்கு 3 பெண் குழந்தைகளும், 3ஆண் குழந்தைகளும் உள்ளனர். 1976ஆம் ஆண்டு தமிழ்நாடு முதலமைச்சர் கலைஞர் அவர்களின் நல்லாட்சியில் எங்களுக்கு இலவசமாக 50 சென்ட் நிலம் கிடைத்தது. நிலத்தில் விவசாயம் செய்து கிடைக்கப்பெற்ற வருமானத்தின் மூலம்தான் எனது 6 குழந்தைகளையும் நல்ல முறையில் வளர்க்க முடிந்தது. 1989ஆம் ஆண்டு மீண்டும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் கலைஞர் அவர்களின் ஆட்சியில்தான் நான் பெற்ற நிலத்தில் வீடுகட்டுவதற்கான அனுமதி எனக்குக் கிடைத்தது. எனது வீட்டிற்கு 37 வருடங்களாக மின் இணைப்பு கிடையாது. தற்போது மீண்டும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் கலைஞர் அவர்களின் ஆட்சியில்தான் 2007ஆம் ஆண்டு இலவச டி.வியுடன் எனது வீட்டிற்கு 37 வருடங்களாக கிடைக்காத மின் இணைப்பும் கிடைத்தது. எனது வீட்டிற்கு மின் இணைப்பு வழங்க 19 மின்கம்பங்கள் அமைத்து மின்சாரம் அளித்தது பெரும் மகிழ்ச்சியாக உள்ளது. வயதான ஓய்வு எடுக்கும் காலத்தில் எங்களுக்கு மின்வசதியோடு டி.வி. வழங்கிய மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் கலைஞர் அவர்களுக்கு என்றும் நன்றியுள்ளவர்களாக இருப்போம்" எனக்கூறினார்.

இலவச வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டியுடன் மின்னிணைப்பும் பெற்ற தெள்ளாந்தி ஊராட்சி காமராஜர் நகரைச் சார்ந்த பயனாளி திரு. தர்மராஜ் (வயது–35) மற்றும் அவரது மனைவி திருமதி. கிறிஸ்டிபாய் (வயது–31) ஆகியோர் கூறும்போது,

"காமராஜர் நகரில் 19 குடும்பங்கள் கடந்த 7 வருடமாக குடிசைகளில் வசித்துவருகிறோம். எங்கள் பகுதிக்கு மின் இணைப்பு கிடையாது. இலவச வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகள் கிடைத்த பிறகுதான் எங்கள் பகுதிக்கு மின்சார வசதியும் கிடைத்தது. இதன் மூலம் நாட்டு நடப்புகளையும், உலக நிகழ்வுகளையும் நாங்கள் அறிந்து கொள்கின்றோம். மேலும் இந்தப் பகுதியிலுள்ள 19 குடிசை வீடுகளையும் காங்கீரிட் வீடுகளாக மாற்ற தலா ரூ.55 ஆயிரம் வீதம் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் கலைஞர் அவர்களால் எங்களுக்கு கிடைத்தது மேலும் மகிழ்ச்சியளிக்கிறது. எங்களது குழந்தைகளுக்கும், குடும்பத்தாருக்கும் மாலைவேளைகளில் நல்ல பொழுதுபோக்கிற்கு டி.வி. பயன்படுகிறது. பகல் பொழுதில் பீடி சுற்றும் தொழிலில் ஈடுபட்டு வரும் எனக்கு வேலைசெய்வதே தெரியவில்லை. ரேசன் அரிசி கிலோ 2 ரூபாய்க்கு தரும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் இலவச வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டியுடன் மின்னிணைப்பும் தந்துள்ளார். எங்கள் கிராமத்திற்கே வெளிச்சம் போட்டுத் தந்த மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் கலைஞர் அவர்களுக்கும், அரசிற்கும் எங்களது நன்றியைத் தெரிவித்துக் கொள்வதோடு எங்களது கிராமத்தின் இருளை அகற்றிய மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் தமிழக மக்களின் முன்னேற்றத்திற்காக நீடுழி வாழவேண்டும்" எனக்கூறினார்கள்.

**– த. ஹரிராம்,**
செய்தி–மக்கள் தொடர்பு அலுவலர்,
கன்னியாகுமரி மாவட்டம்.



# தாய் - சேய் நலம் காக்கும் அரசு குழந்தைகள் நல மருத்துவமனை



**பி**றந்த ஓர் ஆண்டுக்குள் உயிரிழக்கும் குழந்தைகள் விகிதத்தினை (Infant Mortality Rate) குறைப்பதில் தமிழகம், இந்தியாவிலேயே 3 ஆவது இடத்தில் உள்ளது. தமிழகத்தில் ஒரு வயதிற்குட்பட்ட குழந்தைகள் இறப்பு விகிதம் 35 மட்டுமே. எடை குறைந்த பச்சிளம் குழந்தைகள் (Low Birth Weight) இறக்கும் விகிதத்தில் தமிழ்நாட்டில் 12-15% சதவிகிதம் மட்டுமே, மற்ற இந்திய மாநிலங்களில் எடை குறைந்த பச்சிளங்குழந்தைகள் பிறப்பு விகிதம் 30% க்கும் மேல் உள்ளது.

சென்னையில் "பேபி ஹாஸ்பிட்டல்" என்று பிரபலமாக அழைக்கப்படும் அரசு குழந்தைகள் நல மருத்துவமனை மற்றும் ஆராய்ச்சி நிலையம், 1968ஆம் ஆண்டு நவம்பர்த் திங்கள் பதினைந்தாம் நாளன்று தொடங்கப்பட்டது. அங்கு நாள்தோறும் சுமார் 2,200 புறநோயாளிகள் சிகிச்சை பெற்று வருகின்றனர். 537 படுக்கை வசதிகள் கொண்ட இம் மருத்துவமனையில் தினமும் தோராயமாக 630 உள்நோயாளிகள் பயன்பெற்று வருகின்றனர். புறநோயாளிகள் பிரிவில் அனுபவமிக்க குழந்தை மருத்துவர்கள் தலைமையில் ஒரு குழு எந்நேரமும் பணிபுரிந்து வருகிறது. புறநோயாளிகள் பிரிவில் குழந்தைகள் எந்த நோய்க்காக கொண்டுவரப்பட்டாலும், அதற்கான மருத்துவ கவனிப்புடன் பெற்றோர்களுக்கு சத்துணவு, குழந்தை வளர்ப்பு, தடுப்பு ஊசிகள், சுகாதாரம் ஆகிய அனைத்து நல்வாழ்வு முறைகளைப் பற்றியும் விழிப்புணர்வுச் செய்திகள் அளிக்கப்படுகின்றன.

உள்நோயாளிகளைக் கவனிக்க 24 மணி நேரமும் தகுதிபெற்ற குழந்தை மருத்துவர்கள் மருத்துவ மனையிலேயே தங்கி பணிபுரிகிறார்கள். புறநோயாளிகள் மற்றும் உள்நோயாளிகளுக்கான எல்லாவித மருத்துவ வசதிகளும் இலவசமாக அரசினால் வழங்கப்படுகின்றன.

பலவிதமான சமுதாயக் குழந்தை நல கவனிப்பிலும் அரசு குழந்தை நல மருத்துவமனையின் மருத்துவர்கள் ஈடுபடுத்தப் படுகிறார்கள். புதியதாக மேம்படுத்தப் பட்டுள்ள மேடவாக்கம், நந்திவரம் போன்ற ஆரம்ப சுகாதார நிலையங்களில் தங்கியிருந்து பிறந்த குழந்தை பராமரிப்பு, குழந்தைகளின் தொடர் பராமரிப்பு ஆகியவற்றை கவனிக்கிறார்கள்.

இங்கு உள்ள குழந்தைகள் இருதய நோய் மற்றும் இருதய அறுவைச் சிகிச்சைப் பிரிவில் பச்சிளங் குழந்தைகள் முதல் அனைத்து வயது குழந்தைகளுக்கும் அறுவைச் சிகிச்சை செய்ய வல்ல திறமையான கைதேர்ந்த மருத்துவர்கள் உள்ளனர் என்பது சிறப்பு. இதில் மயக்கவியல் மருத்துவர்கள் மற்றும் செவிலியர்களின் பங்கு குறிப்பிடத்தக்கது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் இளஞ்சிறார் இருதய பாதுகாப்புத் திட்டத்தின்படி அரசு மற்றும் தனியார் நிறுவனங்களுக்கு இடையிலான ஒப்பந்தப்படி மிகவும் நுட்பமான அறுவைச் சிகிச்சைகளுக்கு குழந்தைகள் இங்கு தேர்வு செய்யப்பட்டு தனியார் மருத்துவ மனைகளுக்கு அனுப்பப்படுகின்றனர்.

நரம்பியல் அறுவைச் சிகிச்சை தவிர மற்ற அனைத்து அறுவைச் சிகிச்சைகளும் இங்கு கைதேர்ந்த அறுவைச் சிகிச்சை மருத்துவர்களால் 24 மணி நேரமும் செய்யப் படுகின்றன. இதன் வெற்றிக்கு மயக்கவியல் துறை மருத்துவர்களின் பங்களிப்பு மிகவும் முக்கியமானது. பச்சிளங்குழந்தைகளுக்கு அறுவைச் சிகிச்சை புரியும் ஒரே மருத்துவமனை என்ற பெருமையும் இம் மருத்துவமனைக்கு உண்டு. செயற்கை சுவாசக் கருவி மற்றும் இதர தீவிர சிகிச்சை சாதனங்களைப் பயன்படுத்தி தீவிர சிகிச்சைப் பிரிவில் பயிற்சி பெற்ற மருத்துவர்கள் 24 மணி நேரமும் சிறப்பான சிகிச்சையளித்து வருகின்றனர். தினமும் நூற்றுக்கணக்கான நோயாளிகளுக்குச் சிகிச்சையளிக்கும் நரம்பியல் துறைக்கு, அண்டை மாநிலங்களிலிருந்தும் குழந்தைகள் சிறப்பு ஆலோசனை பெறுவதற்காக வருகின்றனர் என்பது, இம்மருத்துவமனையின் பாராட்டத்தக்க பணிக்குச் சான்றாகும். இங்கு குழந்தைகள் வழிகாட்டு மையமும், மனவளர்ச்சி குன்றிய குழந்தைகள், உளவியல் ரீதியாக பாதிக்கப்பட்ட குழந்தைகள், பள்ளியில் செயல்திறன் குன்றிய குழந்தைகள் ஆகியோரின் நலனுக்காகவும் செயல்பட்டு வருகின்றது.

பச்சிளங்குழந்தைகள் குழந்தைகள் பிரிவு பல நிலைகளிலும் முன்னோடியாகத் திகழ்கின்றது. மிகவும் நவீன தொழில் நுட்பத்தைப் பயன்படுத்தி பச்சிளங் குழந்தைகளுக்கு உட்பிரிவு மற்றும் வெளிப் பிரிவுகளின் மூலம் சிறப்பு சிகிச்சைகள் அனைத்தும் வழங்கப்படுகின்றன. இங்குள்ள மருத்துவர்கள் மற்றும் செவிலியர்கள் இந்தத் துறையில் பயிற்சிபெற்றவர்கள். இங்கு மிகவும் எடைகுறைவான மற்றும் குறைமாத குழந்தைக்கு தீவிர சிகிச்சை அளிக்கப்படுகிறது. இங்கிருந்து வீட்டிற்கு அனுப்பப்படும் குழந்தைகள் தொடர்ந்து ஒரு வயது வரை குழந்தைகள் நல மையத்தில் கவனிக்கப்பட்டு வருகின்றனர். அவர்களது வளர்ச்சி குழந்தைகள் வளர்ச்சி மையத்தில் கண்காணிக்கப்படுகிறது. குறைமாத குழந்தைகள் மற்றும் மூச்சுத்திணறல் உள்ள குழந்தைகளுக்கு வெண்டிலேட்டர் கருவி மூலம் மூச்சு விடும்படி செய்யப்படுகிறது. இதற்கான ஒரு நாள் செலவு ரூ. 7,000 முதல் ரூ.10,000 வரை ஆகும். 10 முதல் 15 நாட்கள் வரை இந்த சிகிச்சையைத் தொடர்ந்து மூச்சுதிணறலால் பாதிக்கப்படும் பச்சிளம் குழந்தைகளுக்கு இலவசமாக தமிழக அரசு அளிக்கிறது. இரைப்பை குடல் கல்லீரல் நோய் சிகிச்சைப் பிரிவில் உள்நோக்கிக் கருவிகளின் உதவியோடு நோய் கண்டறிதல் மற்றும் சிகிச்சை முறைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

நுரையீரல் மற்றும் காது- மூக்கு-தொண்டை பிரிவிலும் சிறப்பு உள்நோக்கி கருவிகள் பயன்படுத்தப்படுகின்றன. பட்டாணி, கடலை, பிளாஸ்டிக் பொருட்கள் போன்றவை குழந்தைகள் வாயில் வைத்து விளையாடும்பொழுது தற்செயலாக மூச்சுக்குழாயில் சென்று சிக்கி மூச்சுத்திணறல் ஏற்படும். காது, மூக்கு, தொண்டை பிரிவில் உள்நோக்கி கருவிகள் மூலம் அப்பொருட்களை வெளியில் எடுத்து குழந்தைகளை ஆபத்திலிருந்து காப்பாற்றுகின்றனர். இச்சேவை 24 மணி நேரமும் அளிக்கப்படுகிறது.

* * *





வெ.ஆ.எண்.219/வரைகலை/விளம்பரம்/2008 நாள் : 6.2.2008


R.N.I. No.21446/70-Regn.No.TN/AR
TN/PMG(CCR) WPP-31
டிசம்பர் 2008
விலை ரூ.10/-
TAMIL SANGAM
முப்பெரும் விழா



புதுடெல்லியில், மாண்புமிகு இந்தியப் பிரதமர் டாக்டர் மன்மோகன் சிங் அவர்களை
மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் சந்தித்து
வெள்ள நிவாரண உதவி குறித்துப் பேசினார். (4.12.2008)




மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் கலைஞர் மு. கருணாநிதி அவர்கள்,
தொலைதூர கிராமப்புற மக்களுக்கு தரமான மருத்துவ வசதிகள் அளித்திட
100 நடமாடும் மருத்துவக்குழு ஊர்திகளை கொடியசைத்துத் தொடங்கிவைத்தார். (24.12.2008)

# தமிழரசு

செய்தி-மக்கள்தொடர்புத் துறையின் வெளியீடு

திருவள்ளுவர் ஆண்டு 2039
கார்த்திகை - மார்கழி
டிசம்பர் 2008
மலர் : 41 இதழ் : 6

**ஆசிரியர் குழு**

ஆசிரியர் மற்றும் வெளியிடுபவர் :
முனைவர் **ஆ.சி.மோகன்தாஸ், இ.ஆ.ப.,**
இயக்குநர் மற்றும்
அலுவலால் அரசு கூடுதல் செயலாளர்
செய்தி-மக்கள் தொடர்புத்துறை

நிருவாக ஆசிரியர்
**துரை. தாமரைச்செல்வம்**
துணை இயக்குநர் (வெளியீடுகள்)

முதன்மை பொறுப்பாசிரியர்
**மு. ஸ்ரீநாகேஷ்**
உதவி இயக்குநர்

பொறுப்பாசிரியர்களான
செய்தி-மக்கள் தொடர்பு அலுவலர்கள்
**க. குமாரவேலு**
**டி.ஆர். ஜெயஸ்ரீ**
**ஆர்.சேகர்**

உதவி ஆசிரியர்கள்
**க. இராஜராஜேஸ்வரி**
**இரா. சுரேஷ்**
**வீ.இரா. நவநீதகிருஷ்ணகுமார்**
**இரா.இளவரசி**

நிருபர்கள்
**கோ. சண்முகம்**
**மாய குமரேசன்**

இதழ் உதவியாளர்கள்
**தி.பெரியார் சாக்ரடீசு**
**ஜெ. ஜெயசிம்ஹன்**

புகைப்படக்காரர்
**வி.இராதாகிருஷ்ணன்**

கணினி வடிவமைப்பு
**அ. மதன், உதவி ஒளியச்சுக்கோர்வையாளர்**
**ஆர். பாலாஜி**
(ஒப்பந்த தொகுப்பூதிய கணினி இயக்குபவர்)

சென்னை - தமிழரசு அச்சகத்தில்
அச்சிடப்பட்டது.

தமிழரசு அலுவலகம்,
110,அண்ணாசாலை, சென்னை-600 002.
தொலைபேசி : 28520407/28520408
தொலைநகல் : 28520407
மின் அஞ்சல் : tamilarasu@tn.gov.in
இணையதளம் : www.tn.gov.in



**எல்லா விளக்கும் விளக்கல்ல சான்றோர்க்குப்**
**பொய்யா விளக்கே விளக்கு**

புறத்தின் இருளைப் போக்கும் விளக்குகளைவிட
அகத்தின் இருளைப் போக்கும் பொய்யாமை எனும்
விளக்கே ஒருவனை உயர்ந்தோன் எனக்காட்டும்
ஒளிமிக்க விளக்காகும்.

**கலைஞர்** திருக்குறள் உரையிலிருந்து...



## இந்த இதழில்...

**மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்**
**கலைஞர் மு. கருணாநிதி அவர்களின் நிகழ்ச்சிகள்**

※ அறிவுக மேதை ஒப்பற்ற ஞானி திருவள்ளுவர் ........ 2
※ புயலால் ஏற்பட்ட சேதத்தை சீர்செய்ய தேசிய பேரழிவு நிவாரண நிதியிலிருந்து உடனடியாக நிதி வழங்க வேண்டும்! ........ 6
※ வெள்ள நிவாரணப் பணிகளுக்கு மேலும் 500 கோடி ரூபாய் ........ 10
※ போக்குவரத்துத் துறையில் விரைவூக்க அட்டை (ஸ்மார்ட் கார்டு) மூலம் ஓட்டுநர் உரிமம் மற்றும் வாகனப் பதிவுச் சான்றிதழ் வழங்கும் திட்டம் ........ 33
※ மாநகராட்சி, நகராட்சி, ஊராட்சி மன்றங்களுக்கு உரிமைகளும் சுதந்திரங்களும் வழங்கப்பட்டுள்ளன ........ 44

**மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை அமைச்சர்**
**திரு. மு.க.ஸ்டாலின் அவர்களின் நிகழ்ச்சிகள்**

※ சென்னை மாநகரில் மழைநீர் வடிகால் வசதிகளை மேம்படுத்த ரூ.1,538 கோடி மதிப்பீட்டில் மாபெரும் திட்டம் ........ 50
※ தமிழக அரசு பெண்களின் முன்னேற்றத்திற்காக எண்ணற்ற திட்டங்களைத் தீட்டி வருகிறது. ........ 63

முதலாம் அட்டை

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் கலைஞர் மு. கருணாநிதி அவர்கள், புதுடெல்லியில் உள்ள தில்லி தமிழ்ச் சங்க வளாகத்தில் நடைபெற்ற முப்பெரும் விழாவில் திருவள்ளுவர் சிலையினை நாட்டினார். (4.12.2008)

நான்காம் அட்டை

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் கலைஞர் மு. கருணாநிதி அவர்கள், 15 கிராம ஊராட்சிகளின் தலைவர்களுக்கு உத்தமர் காந்தி ஊராட்சி விருதுகளை வழங்கினார். (19.12.2008)

# அறிவுலக மேதை ஒப்பற்ற ஞானி திருவள்ளுவர்

### புதுடெல்லியில் நடைபெற்ற முப்பெரும் விழாவில்

### மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் **கலைஞர்** அவர்கள் உரை

**தி**ல்லி தமிழ்ச் சங்க வளாகத்தில் 4.12.2008 அன்று நடைபெற்ற முப்பெரும் விழாவில், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் கலைஞர் அவர்கள், திருவள்ளுவர் சிலையினை நாட்டி, முத்தமிழ்த் தோரண வாயிலுக்கு அடிக்கல் நாட்டி, தில்லி தமிழ்ச் சங்கம் சார்பில் வழங்கப்பட்ட செம்மொழிச் செம்மல் விருதினைப் பெற்றுக்கொண்டு ஆற்றிய விழாப் பேருரை:–



இன்று மிக மகிழ்ச்சிகரமாக – உணர்ச்சிமிக்க நிலையில் நடைபெற்று நிறைவேறியிருக்கின்ற இந்த விழாவில் கலந்துகொண்டு உங்கள் அனைவரையும் சந்திக்கின்ற நல்ல வாய்ப்பினைப் பெற்றமைக்காக பெரு மகிழ்ச்சியடைகிறேன். நீண்ட காலமாக நான் டெல்லிக்கு வரும்போதெல்லாம் அல்லது டெல்லி தமிழ்ச் சங்கத்துநண்பர்கள் சென்னைக்கு வரும்போதெல்லாம் ஒரு கவலையைப் பரிமாறிக் கொள்வதுண்டு. திருவள்ளுவருடைய சிலை அமைந்திருக்கின்ற இடம் – அமைந்த இடம் – மிக மிக வருந்தத்தக்க கவலைப் படத்தக்க இடமாகக் கண்ணீர் விடத்தக்க இடமாக மாறிவிட்டது. எனவே வள்ளுவருடைய சிலையை இடம் மாற்றி அமைக்க வேண்டும், நாங்கள் மாண்புமிகு டெல்லி முதலமைச்சர் திருமதி. ஷீலா தீட்சித் அவர்களிடத்திலே இதைப்பற்றி சொல்லி அவருடைய ஒப்புதலைப் பெற்றிருக்கிறோம், இதைத் திறந்து வைக்க நீங்கள் வர வேண்டுமென்று அவர்கள் கேட்பதும், நானும் – நான் டெல்லிக்கு வருகிற நேரத்தில் நிச்சயமாக இந்த விழாவில் கலந்துகொள்கிறேன் என்று வாக்குறுதி





அளிப்பதும் மாறி மாறி நடைபெற்று – இன்றைக்கு அந்த வாய்ப்பு எனக்குக் கிடைத்து – நாம் மகிழத்தக்க வண்ணம் நிகழ்ச்சி நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது.

#### மத்திய அரசுக்குப் பாராட்டு

இந்த நிகழ்ச்சியிலே "செம்மொழிச் செம்மல்" என்ற ஒரு விருதினையும் இந்த டெல்லி தமிழ்ச் சங்கத்தின் சார்பில் நீங்கள் வழங்கியிருக்கிறீர்கள். செம்மொழித் தகுதியை வழங்கியவர்கள் யார் என்ற ஆய்விலே ஈடுபட்டால் நம்முடைய மாண்புமிகு உள்துறை அமைச்சர் திரு. ப.சிதம்பரம் அவர்கள் உள்ளிட்ட மத்திய அரசிலே உள்ளவர்கள்தான் தமிழுக்கு செம்மொழி என்ற தகுதி இருக்கவேண்டுமென்று தமிழ் அறிஞர்கள் பலரும் கேட்டபோது, தட்டாமல் அதனைத் தந்து – நம்மை மகிழ்வித்திருக்கிறார்கள். எனவே இதைப் பெறுவதற்காக வாதிட்ட என்னை நீங்கள் பாராட்டுவதற்குப் பதிலாக – இதை வழங்கிய மத்திய அரசுக்கு உங்களுடைய பாராட்டுதலை, வாழ்த்துக்களை வழங்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

ஏனென்றால் இந்தச் செம்மொழி என்ற தகுதி தமிழுக்கு வரவேண்டுமென்று நூறாண்டுகளுக்கு முன்பு குரல் கொடுத்தவர் சூரியநாராயண சாஸ்திரி என்கிற பரிதிமாற்கலைஞர். பரிதிமாற்கலைஞர் தொடங்கியதை – இந்தக் கலைஞன் வந்து நிறைவேற்றவேண்டும் என்று இருந்திருக்கிறது போலும். ஆனால் அந்தப் பரிதிமாற் கலைஞருடைய வாழ்க்கையை, அவருடைய குடும்பத்தை, அவர் வாழ்ந்த விளாச்சேரி என்ற ஊரை இவைகளையெல்லாம் நினைவுகொள்ள வேண்டுமென்று கடந்த ஆண்டு மதுரைக்கு அருகிலே உள்ள விளாச்சேரி கிராமத்திற்கே சென்று அவருடைய வீட்டையும் அரசுடைமையாக ஆக்கி – அவர் எழுதிய நூல்களையெல்லாம் அரசுடைமையாக ஆக்கி அவருக்கு மேலும் புகழ் சேர்க்கின்ற பணியிலே நான் ஈடுபட்டேன் என்றாலுங்கூட – இவற்றையெல்லாம்விட என்றென்றும் வைத்து பாதுகாக்கத்தக்க ஒரு பதக்கமாக ஒரு கடிதம் டெல்லியிலேயிருந்து எனக்கு அனுப்பப்பட்டது.

#### செம்மொழிச் செம்மல்

அந்தக் கடிதத்தில் செம்மொழித் தமிழுக்காக – அந்தத் தகுதியைப்பெற பல பேர் பாடுபட்டார்கள் என்றாலுங்கூட, அதற்காகப் போராடி வெற்றி பெற்றவர் யாரென்றால், அதற்கு வரலாற்றில் உன்னுடைய பெயர்தான் இடம் பெறும் என்று எனக்குக் கடிதம் எழுதினார் ஒருவர் – அவர் வேறு யாரும் அல்ல – நம்முடைய திருமதி. சோனியா காந்தி அம்மையார் அவர்கள்தான் அந்தக் கடிதத்தை எனக்கு எழுதியிருந்தார்கள். அதை நான் இப்போது நீங்கள்

அளித்த செம்மொழிச் செம்மல் என்ற பட்டயத்தைப் போல – அப்படிப்பட்ட ஒரு கடிதம் அது என்பதை நான் இங்கே தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

வள்ளுவருடைய சிலை திறப்பு விழா என்று இங்கே அச்சியற்றி அறிவிப்புத் தராமல் – சிலை நாட்டு விழா என்று அச்சியற்றப்பட்டிருக்கிறது. காரணம் என்னவென்றால் சிலை அமைப்பு விழா வேறு – சிலை நாட்டு விழா வேறு – இந்தப் பெயரை இந்தச் சொல்லைப் பயன்படுத்தியது நம்முடைய தம்பி கவிப்பேரரசு வைரமுத்து அவர்கள்தான். வேறு ஒரு இடத்தில் இருந்த சிலையை உரிய இடத்திலே கொண்டுவந்து வைப்பதில் இதை சிலை திறப்பு விழா என்று சொல்வதற்குப் பதிலாக – சிலை நாட்டு விழா என்று சொல்வதே பொருத்தம் என்று அவர் இந்தச் சொற்றொடரைப் பயன்படுத்தச் சொல்லி, டெல்லி தமிழ்ச் சங்கத்தினரும் அதை நிறைவேற்றியிருக்கின்றார்கள்.

இந்த நேரத்தில் நான் ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். வைரமுத்து பேசும்போது சொன்னார். நாங்கள் காளிதாசனைப் பாராட்டுகிறோம், நீங்கள் கம்பரை மறந்து விட்டீர்களே என்று இந்தியாவிலே தெற்கு – வடக்கு என்பதைச் சுட்டிக்காட்டி தெற்கே திருவள்ளுவர் பாராட்டப்படுகிறார், ஆனால் வடக்கே திருவள்ளுவர் பாராட்டப்படவில்லை என்பதை ஆதங்கத்தோடு இங்கே குறிப்பிட்டார். நம்முடைய உள்துறை அமைச்சர் இங்கே இருக்கிற நேரத்தில் அவருக்கும் தெரியும், இருந்தாலும் நினைவுபடுத்த வேண்டும் என்பதற்காகச் சொல்கிறேன். டெல்லியில் உள்ள தமிழர்கள் – தமிழ்ச் சங்கத்தின் சார்பாக வள்ளுவருடைய சிலையை இங்கே நாட்டியிருக்கிறீர்கள். நன்றி. ஆயிரம் வணக்கம், பாராட்டுக்கள்.

அதே நேரத்தில் பெங்களூரிலே ஒரு திருவள்ளுவருடைய சிலை. கிட்டத்தட்ட இருபதாண்டுக் காலமாகிறது, அந்தச் சிலை அமைக்கப்பட்டு. இந்தச் சிலை எங்கேயோ குப்பையிலே இருந்தது என்று சொன்னார்களே, அது குப்பையிலே கூடக் கிடக்கவில்லை. அது பீடத்திலே அமர்த்தப்பட்டு அது யாருடைய சிலை என்று தெரியாமலே – துணி சுற்றப்பட்டு இருபதாண்டுக் காலமாக – பெங்களூர் தமிழ்ச் சங்கத்தின் வாயிற்புறத்திலே அய்யன் திருவள்ளுவருடைய சிலை நின்று கொண்டிருக்கின்றது.

**குமரியிலிருந்து டெல்லிவரை**

இந்த அய்யன் திருவள்ளுவர் என்கின்ற அந்தச் சொற்றொடர் கூட, அவருடைய சிலையை குமரி முனையிலே திறக்கின்ற – 133 அடி உயரமுள்ள சிலையைத் திறந்து அந்த விழாவிலேதான் நான் சொன்னேன் – இனிமேல் நான் வள்ளுவர் சிலை, திருவள்ளுவர் என்றெல்லாம் அழைக்கமாட்டேன், என்னோடு சேர்ந்து நீங்களும் நான் அழைப்பதைப்போல அழைக்க வேண்டும், நம்முடைய அய்யன் இவர்தான் – எனவே அய்யன் திருவள்ளுவர் என்று நான் அன்றைக்குத்தான் சொன்னேன். அந்த அய்யன் கன்னியாகுமரியோடு நிற்காமல், டெல்லி வரையில் வந்திருப்பதை இங்கே பேசிய நம்முடைய நண்பர்கள் எல்லாம், அய்யன் திருவள்ளுவர், அய்யன் திருவள்ளுவர் என்று சொன்னதிலிருந்து நான் மிகுந்த அக மகிழ்ச்சி கொள்கிறேன்.

அந்தச் சிலை பெங்களூரிலே தமிழ்ச் சங்கத்தின் வாசலில் வைக்கப்பட்டு – இருபதாண்டுக் காலத்திற்கு மேல் ஆகிறது. அந்தச் சிலையைத் திறந்தால், கலவரம் வரும், திறக்க முடியாது என்று ஒரு சாரார் இன்னமும் கூச்சல் போட்டுக் கொண்டிருக்கிறார்கள், இன்னமும் கலவரத்திலே ஈடுபட்டுக் கொண்டிருக்கிறார்கள். ஒருவேளை அங்கே நம்முடைய முதலமைச்சர் ஷீலா தீட்சித் போன்ற ஒருவர் பொறுப்புக்கு வராத காரணத்தாலோ என்னவோ அங்கே திருவள்ளுவருடைய சிலை மூடப்பட்டே கிடக்கிறது. பார்த்தால் வயிறு எரிகிறது. மனம் கூசும். நாம் எல்லாம் – அவருக்கு வழித் தோன்றல்கள்.

நம்மை வழி நடத்திய வள்ளுவர் பெருந்தகை உலகம் முழுவதும் உள்ள பெரும் புலவர்களால் பலமொழி வல்லுநர்களால் – மொழிபெயர்க்கப்பட்ட நூலுக்குச் சொந்தக்காரர் – அறிவுலக மேதை – ஒப்பற்ற ஞானி – அவருடைய சிலை பெங்களூரில் தமிழ்ச் சங்கத்தின் வாயிற் புறத்தில் மூடப்பட்ட நிலையில் துணி சுற்றப்பட்ட நிலையில் அனாதையாக நின்று கொண்டிருக்கிறது என்பதை நீங்கள் மறந்து விடக்கூடாது. நான் உங்களுக்குச் சொல்கிறேன். இருபதாண்டுக் காலமாக பெங்களூரிலே எந்த விழாவிற்கும் என்னுடைய கட்சி சார்பிலே உள்ளவர்களே அழைத்தாலும் கூட, நான் அங்கே சூளுரைத்திருக்கிறேன். இந்தச் சிலை இங்கே திறந்து வைக்கப்படுகிற வரையில் நான் பெங்களூருக்கு வந்து எந்த விழாவிலும் கலந்து கொள்ள மாட்டேன் என்று சூளுரைத்திருக்கிறேன்.

இது பெங்களூரிலே இருக்கின்ற அரசுகளுக்கும் தெரியும். மத்திய அரசுக்கும் தெரியும். இதுவரை தெரியாமல் இருந்தால் இன்றைக்கு நான் பக்கத்தில்



அமர்ந்திருக்கின்ற நம்முடைய அருமை நண்பர் சிதம்பரம் அவர்களிடமும் சொல்லியிருக்கிறேன். நண்பர் சிதம்பரம் அவர்கள் இந்த உணர்வைப் புரிந்து கொள்ளாதவர் அல்ல. எனவே உள்துறை அமைச்சருடைய முதல் பணியாக வேறு எந்தப் பணி இருந்தாலும் – அவைகளையும் பார்க்கட்டும் – முதல் பணியிலே முதலாவது பணி பெங்களூர் தமிழ்ச் சங்கத்து வாயிலிலே நிற்கின்ற திருவள்ளுவருடைய சிலையைத் திறந்து வைப்பதுதான் – திறந்து வைக்காவிட்டாலும் பரவாயில்லை, அந்த அழுக்குத் துணியை அகற்றினால் போதும் – என் அய்யன் வள்ளுவருடைய சிறப்பை அவருடைய சிரிப்பை உலகம் உணர்ந்து கொள்ள அந்தப் பெருமையை உருவாக்க வேண்டும். இதை நான் நாடு தழுவிய அளவிலே அல்ல – நட்பு தழுவிய அளவிலே – நான் தமிழ் மீது கொண்டிருக்கின்ற காதலின் அளவிலே நான் தமிழ் நெஞ்சங்களின்பால் வைத்திருக்கிற பாசத்தின் அளவிலே, அன்பின் அளவிலே, யாரிடம் சொன்னால், மறக்காமல் நடக்குமோ அப்படிப்பட்ட நண்பரிடத்தில் – அவர் இந்தியாவிலே இன்றைக்கு உள்துறை அமைச்சர் – மக்களைப் பாதுகாக்கும் அமைச்சர் – நீங்கள் தமிழர்களுடைய நாகரிகத்தை – வள்ளுவருக்கு ஏற்பட்ட அந்த அப கீர்த்தியை துடைப்பதற்கு அதைப் பாதுகாத்திடுங்கள் என்று இந்த விழாவிலே – இது அமைச்சர்கள் நாங்கள் மூன்றுபேர் கலந்து கொண்டிருக்கின்ற காரணத்தால் நீங்கள் யாரும் கோரிக்கை வைக்கவில்லை, நீங்கள் வைக்காத கோரிக்கையை நான் கோரிக்கையாக வைத்து – வள்ளுவரை வாழவிடுங்கள் பெங்களூரில் என்று நம்முடைய உள்துறை அமைச்சரைக் கேட்டுக்கொண்டு – அதற்கு டெல்லியிலே இருக்கின்ற தமிழ்ச் சங்கத்தினர் – இங்கே நீங்கள் சிலையை நாட்டியது பெரிதல்ல – சிதம்பரம் அவர்களுக்கு இதை நினைவூட்டி, அந்தப் பணியினை திறம்படச் செய்து தமிழ் மக்களின் பாராட்டுக்களைப் பெறவேண்டும். அப்படி பாராட்டுகிற முதல் ஆளாக நான் இருப்பேன் என்பதையும் தெரிவித்து – இந்தச் சிலையைத் திறந்து வைக்க நீங்கள் என்னைப் பணித்தமைக்காக டெல்லி தமிழ்ச் சங்கத்தாருக்கு என்னுடைய அன்பை, வணக்கத்தை தெரிவித்து இந்த அளவோடு விடைபெறுகிறேன்.

❖ ❖ ❖

## இந்தியாவிலேயே மின்னணுவியல் நிர்வாகத்தில் தமிழகம் முதலிடத்தில் உள்ளது

நடப்பு ஆண்டுக்கு இந்தியா முழுவதும் நடத்தப்பட்ட ஆய்வின்படி (சர்வே), மின்னணுவியல் நடைமுறைகளிலும், குடிமக்களின் மனநிறைவிலும் தமிழ்நாடு மிகச் சிறந்த மாநிலமாக விளங்குகிறது.

தொழில் வடிவமைப்பு மையம் 'டேட்டாக்வெஸ்ட்' இதழ் ஆகியவற்றால் நடத்தப்பட்ட ஆய்வு அறிக்கையில், மாநிலத்தின் மின்னணுவியல் நிருவாகத் தொலைநோக்கு, ஒதுக்கீடு மற்றும் அமலாக்கம், குடிமக்கள் மற்றும் தொழில் நிறுவனங்களின் கருத்துகள் ஆகியவற்றைக் கணக்கில் எடுத்துக்கொண்டால், மிகச்சிறந்த மாநிலமாகத் தமிழ்நாடு முதல் இடத்திலும், அடுத்த நான்கு இடங்களில் இமாச்சலப்பிரதேசம், டெல்லி, அரியானா, ஆக்ரா ஆகியவைகளும் இடம்பெற்றுள்ளன. இந்த முழு அறிக்கையும் 'டேட்டாக்வெஸ்ட்' டிசம்பர் 15 இதழில் வெளியிடப்படும்.

முதல் ஐந்து மாநிலங்களில்தான் குடிமக்கள் மனநிறைவும் மிக அதிக அளவில் உள்ளது. மின்னணுவியல் நிருவாகம் நல்ல முறையில் செயல்பட்டால் சாதாரணமான இந்தியர்களாலும் பாராட்டப்படுகிறது.

இந்த ஆய்வின் முக்கியமான அம்சம் என்னவென்றால், தகவல் தொழில்நுட்பத் தொழில் முன்னணியில் உள்ள கர்நாடகா மாநிலம் இத்தகைய உயர்தொழில்நுட்ப சுற்றுச்சூழலின் பயன்களை அதன் குடிமக்களுக்கு அளிப்பதில் பின் தங்கியுள்ளது. கடந்த ஆண்டு 9வது இடத்திலிருந்து இந்த ஆண்டு 15வது இடத்துக்குப் பின் தங்கிவிட்டது. கர்நாடகா, கோவா போன்ற மாநிலங்களில் அரசியல் மாற்றங்கள் மிகவேகமாக நடப்பது அம்மாநிலங்களின் செயல்பாட்டைப் பாதிக்கிறது என்று அந்த அறிக்கை கூறுகிறது.

பலவிதமான அளவுகோள்களில் குடிமக்கள் மனநிறைவைப் பொறுத்தமட்டில் கடந்த ஆண்டிலிருந்து வீழ்ச்சியடைந்து கேரள மாநிலம் 18வது இடத்தில் உள்ளது. பட்டியலிடப்பட்டுள்ள 21 மாநிலங்களில் கடைசியில் உள்ள மூன்று மாநிலங்கள் மேற்குவங்கம், ஜார்கண்ட், பீகார் ஆகியவையாகும்.

அரசுத்துறைகளில் நல்ல வேலைகள் இரண்டு முறை செய்யப்படுவது மிக அதிகமாக உள்ளது என்று கூறுகிறார் 'டேட்டாக்வெஸ்ட்' இதழின் தலைமை ஆசிரியர் திரு. கே. ராய், மக்கள் தொகைக் கணக்கெடுப்பு, வாக்காளர் அடையாள அட்டை, வருமான வரிக்கான 'பேன்' (PAN) அட்டைகள், ரேஷன் அட்டைகள் என்று குடிமக்களைப் பற்றிய விவரங்கள் பலமுறை எடுக்கப்பட்டு கோடிக் கணக்கான ரூபாய் செலவிடப்படுகிறது. மாநிலங்கள் அவரவர்களுடைய விவரங்களைத் திரட்டிக் கொண்டு மத்திய அரசுடன் தகவல்களைப் பகிர்ந்து கொள்வதை நம்புவதில்லை. "இந்தியாவில் மின் அணுவியல் நிர்வாகம் இன்னும் நீண்ட தொலைவு போக வேண்டியுள்ளது" என்று அவர் கூறுகிறார். ❖

# புயலால் ஏற்பட்ட சேதத்தை சீர்செய்ய தேசிய பேரழிவு நிவாரண நிதியிலிருந்து உடனடியாக நிதி வழங்க வேண்டும் !

புதுடெல்லியில் மாண்புமிகு பிரதமர் அவர்களிடம்
தமிழக திட்டங்கள் குறித்து
மாண்புமிகு முதலமைச்சர் **கலைஞர்** அவர்கள் கோரிக்கை



புதுடெல்லி சென்ற மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் 4.12.2008 அன்று மாண்புமிகு இந்தியப் பிரதமர் டாக்டர். மன்மோகன் சிங் அவர்களிடம் தமிழக திட்டங்கள் குறித்த கோரிக்கை மனுவினை அளித்தார். அதில் தமிழகத்தில் 8 புதிய இரயில்வே திட்டங்களை மாநில அரசின் பங்களிப்பின்றி நிறைவேற்ற மாண்புமிகு இந்தியப் பிரதமர் டாக்டர் மன்மோகன் சிங் அவர்கள் நடவடிக்கை எடுக்கவேண்டும் என்றும், மாநிலத்தில் நதிகள் இணைப்புத் திட்டத்திற்கான செலவில் 90 சதவிகிதத்தை மத்திய அரசு ஏற்கவேண்டும் என்பன உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தினார்.

மாண்புமிகு இந்தியப் பிரதமர் டாக்டர் மன்மோகன் சிங் அவர்களிடம் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் அளித்த திட்ட அறிக்கை விவரம் வருமாறு :-

**'நிஷா' புயலால் ஏற்பட்ட மிகப்பெரும் சேதங்களை தற்காலிகமாக, நிரந்தரமாக சீர்செய்ய தேசிய பேரழிவு நிவாரண நிதியிலிருந்து உடனடி நிதியுதவி அளிக்க வேண்டுகோள்:**

கடந்த நவம்பர் மாதம் நிஷா புயல் காற்றால் தமிழ்நாடு பெரும் மழையைச் சந்தித்தது. இந்தப் புயல் மாநிலம் முழுவதும் உயிர்களுக்கும், உடைமைகளுக்கும் பெரும் சேதத்தை ஏற்படுத்தியது. குறிப்பாக



கடலோர மாவட்டங்களான தஞ்சாவூர், திருவாரூர், நாகப்பட்டினம், கடலூர் ஆகியவற்றில் புயலால் ஏற்பட்ட சேதம் மிகக்கடுமையாக உள்ளது. தற்காலிக மீட்புப் பணிகளுக்காக ரூ.658 கோடி மற்றும் நிரந்தர மீட்புப் பணிகளுக்காக ரூ.1,305 கோடி என மொத்தம் ரூ.1,963 கோடி உதவியை மத்திய அரசிடமிருந்து கோரி ஒரு ஆரம்ப கட்ட மனு அளிக்கப்பட்டுள்ளது. மாவட்ட ஆட்சித் தலைவர்களும், அரசுத்துறைகளும் மேற் கொண்ட ஆரம்ப கணிப்பின் அடிப்படையில் அந்த மனு தயாரிக்கப்பட்டது. சேதமடைந்த வீடுகளின் எண்ணிக்கையும், பயிர்கள் சேதமடைந்த நிலப்பரப்பும் மிக அதிகமாக இருப்பதால், மாவட்ட ஆட்சியர்களும், அரசுத்துறைகளும் தற்போது சேதங்களை மறுகணிப்பு செய்து தற்காலிக மீட்புப் பணிகளுக்கு தேவையான நிதி உதவி அதிகமாக இருக்கும் என்று கணித்துள்ளனர். எனவே நிவாரணத்துக்கும், தற்காலிக மீட்புப் பணிகளுக்கும் ரூ.1,500 கோடி வரை தேவைப்படும். மறுகணிப்பு செய்யப்பட்டவற்றை சேர்த்து விரைவில் மத்திய அரசிற்கு துணை மனு ஒன்று அனுப்பப்படும்.

பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு நிவாரணம் வழங்க வேண்டிய அவசரத் தேவை இருப்பதால் இடைக்கால ஏற்பாடாக தமிழக அரசுக்கு தேசிய பேரழிவு நிவாரண நிதியிலிருந்து ரூ.1,000 கோடி அளிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்ளப்படுகிறது.

**தமிழக அரசுக்கு மத்திய அரசின் வேளாண் கடன் தள்ளுபடி திட்டத்தின்படி ஈடு செய்ய கோரிக்கை:**

மத்திய அரசு 2008–09ஆம் ஆண்டு பட்ஜெட்டில் வேளாண் கடன் தள்ளுபடி திட்டத்தை அறிவித்தது. அதன் விதிகளின்படி 1.4.1997 முதல் 31.3.2007 வரையிலான வேளாண் கடன்கள் தள்ளுபடி செய்யப்படத் தகுதியானவையாகும். தமிழக அரசு 31.3.2008 அன்று வரையிலான கூட்டுறவு வங்கிகளால் வழங்கப்பட்ட வேளாண் கடன்கள் முழுவதையும் நிலுவையிலுள்ள வட்டியுடன் தள்ளுபடி செய்தது. இதையடுத்து கூட்டுறவு வங்கிகளுக்கு வரவேண்டிய தொகை தமிழக அரசால் ஐந்து தவணைகளில் ஈடு செய்யப்பட்டது. அதன்படி தமிழக அரசு இதுவரை ஈடாக ரூ.4,082 கோடி அளித்துள்ளது.

தமிழக அரசு ஏற்கெனவே 31.3.2006 வரையிலான வேளாண் கடன்களை தள்ளுபடி செய்து விட்டதால் தமிழகத்தால் மத்திய அரசின் தள்ளுபடியை முழுமையாகப்பெற முடியவில்லை. 31.3.2006–க்குப் பிறகு நிலுவையான ரூ.159.60 கோடி என்ற குறைவான தொகைதான் தகுதி பெற்றது. தமிழக அரசு வேளாண் கடன்களைத் தள்ளுபடி செய்யாமல் இருந்திருந்தால் மாநிலம் மத்திய அரசின் திட்டத்திற்குத் தகுதி பெற்று கூடுதலாக ரூ.3,027.88 கோடி தொகையைப் பெற்றிருக்கும். இந்த நிலையில் மத்திய அரசு தமிழக அரசுக்கு ஈட்டுத்தொகையாக ரூ.3027.80 கோடி வழங்கவேண்டும் என்று கேட்டுக் கொள்ளப்படுகிறது.

(இது தொடர்பாக மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் கலைஞர், மாண்புமிகு பிரதமருக்கு 18.11.2008 அன்று எழுதிய கடிதத்தின் நகல் இணைக்கப்பட்டுள்ளது)

**மதிப்புக் கூட்டுவரி அமலாக்கத்தால் ஏற்பட்டுள்ள வருவாய் இழப்பிற்கு ஈடு:**

தமிழ்நாடு மதிப்புக் கூட்டுவரியை 01.01.2007 முதல் அமலாக்கியுள்ளது. இதனால் இதர அனைத்து மாநிலங்களுக்கும் மூன்று ஆண்டுகளுக்கு 100/75/50 சதவீத அளவில் வழங்கப்பட்ட ஈட்டுத்தொகைக்கு மாறாக தமிழ்நாட்டுக்கு மதிப்புக்கூட்டுவரி இழப்பிற்காக 2007 ஆம் ஆண்டுக்கு 75 சதவீதம், 2008 ஆம் ஆண்டுக்கு 50 சதவீதம் என்ற அளவிலேயே ஈடு செய்யப்பட்டுள்ளது. இந்த 2009 ஆம் ஆண்டுக்கு 50 சதவீத ஈட்டுத்தொகை வழங்கப்படவேண்டும் என்று தமிழக அரசு கோரியுள்ளது.

இந்த ஈட்டுத்தொகை தவிர, 1.1.2007 முதல் ஆகஸ்ட் 2008 வரை மத்திய அரசுக்கு மத்திய விற்பனை வரி முறையாக அனுப்பப்பட்டுள்ளது. இந்த நிதிக் கோரிக்கைகள் வரையறுக்கப்பட்ட வடிவத்தில் அனுப்பப்பட்டு, நிதி அமைச்சகம் கோரிய இதர விவரங்களும் அளிக்கப்பட்டுள்ளன. ஆனால் வரவேண்டிய பெரும் தொகைகள் இன்னமும் மாநிலத்தில் பெறப்படவில்லை. தற்போது மத்திய அரசிடம் நிலுவையிலுள்ள வரவேண்டிய தொகைகள் வருமாறு:

(அ) ஏற்கெனவே அனுப்பப்பட்டுள்ள மதிப்புக் கூட்டுவரியில் இழப்புத் தொகை 2007ஆம் ஆண்டுக்கு ரூ.4,611 கோடியும், 2008 ஆகஸ்ட் வரை ரூ.3,160 கோடியும் ஆகும். அனுமதிக்கப்பட்டுள்ள விதிகளின்படியே 2007ஆம் ஆண்டு 75 சதவீதம், 2008ஆம் ஆண்டு 50 சதவீதம் என்ற அளவிலேயே தகுதியான இழப்பீடு முறையே ரூ.3,383 கோடி மற்றும் ரூ.1,575 கோடியாகும். இந்த மொத்த தகுதியான இழப்பீடான ரூ.4,958–இல் இதுவரை ரூ.2,318 கோடி மட்டும் அளிக்கப்பட்டு இந்த வகையில் ரூ.2,318 கோடி நிலுவையில் உள்ளது.

(ஆ) மாநிலத்தின் மொத்த மத்திய விற்பனை வரி ஈட்டுத்தொகையாக கோரப்பட்டுள்ளது. 1.4.2007 முதல்

31.7.2008 வரை –ரூ.1,429 கோடியாகும். இதில் இதுவரை ரூ.647 கோடிதான் அளிக்கப்பட்டு நிலுவையாக ரூ.782 கோடி உள்ளது.

இவ்வாறு இன்னமும் மொத்தமாக நிலுவையிலுள்ள இழப்பீடுத் தொகை ரூ.3,100 கோடியாகும். இதை விரைவில் அளிக்க வேண்டும்.

**மத்திய அரசின் முழு நிதியுதவியுடன் திட்டமிடப்பட்டுள்ள சென்னை கிழக்கு கடற்கரைச் சாலை நெம்மேலியில் 100 எம்.எல்.டி கொள்திறன் கொண்ட கடல் நீரைக் குடிநீராக்கும் திட்டம்:–**

சென்னை மாநகருக்குக் குடிநீர் விநியோகம் பருவமழையைச் சார்ந்து இருப்பதால் அடிக்கடி குடிநீர் தட்டுப்பாடு ஏற்படுகிறது. குடிநீர்ப் பாதுகாப்பை உறுதி செய்யவும், வறட்சி நிலைமையிலும் சென்னை மாநகரின் வளர்ந்துவரும் குடிநீர்த் தேவையைச் சமாளிக்கவும் மத்திய நிதியமைச்சர் 2004– 05ஆம் ஆண்டு மத்திய பட்ஜெட்டில் ரூ.1,000 கோடி செலவில் சென்னையில் கடல்நீரைக் குடிநீராக்கும் திட்டம் நிறுவப்படும் என்று அறிவித்தார். மீண்டும் 2008–09ஆம் ஆண்டு பட்ஜெட்டில் இதற்காக 2008–09ஆம் ஆண்டில் ரூ.300 கோடி ஒதுக்கப்படும் என்று அறிவித்தார்.

இதன் அடிப்படையில், சென்னைக்கு அருகிலுள்ள நெம்மேலியில் 100 எம்.எல்.டி. கொள்திறன் கொண்ட திட்டம் அமைக்கப்பட திட்டமிடப்பட்டது. இதற்கான விரிவான திட்ட அறிக்கை தயாரிக்கப்பட்டு அதை 27.01.2008 அன்று மத்திய அரசிடமிருந்து மொத்த செலவிற்கு முழுமையான நிதியுதவி வழங்கக்கோரி மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் கலைஞர், மத்திய நிதியமைச்சரிடம் வழங்கினார்.

இந்த அறிக்கையைப் பரிசீலித்து சென்னைப் பெருநகர் குடிநீர் வாரிய அதிகாரிகள் மற்றும் வல்லுநர்களுடன் கலந்தாலோசித்து 04.04.2008 அன்று மத்திய பொது சுகாதாரம் மற்றும் சுற்றுச் சூழல் பொறியியல் அமைப்பின் ஆலோசகர் ரூ.908.28 கோடி மதிப்பிற்கு தொழில்நுட்ப அனுமதி வழங்கினார். இப்பிரச்சினை 17.7.2008 அன்று புதுடெல்லியில் செலவின நிதிக் குழுக் கூட்டத்தில் விவாதிக்கப்பட்டு இத்திட்டத்துக்கு ரூ. 871.24 கோடி நிதி உதவி பரிந்துரைக்கப்பட்டது. இதற்கிடையில், தேசிய கடற்கரை மண்டல நிருவாகக் குழுமம் அதன் 26.11.2008 கூட்டத்தில் அனுமதி அளித்துள்ளது.

இந்தத் திட்டம் பொருளாதார விவகாரங்களுக்கான அமைச்சரவைக் குழுவின் முன் அதன் அனுமதிக்காக வைக்கப்பட வேண்டியுள்ளதை விரைவுபடுத்த வேண்டப்படுகிறது.

**மாநிலத்துக்குள் நதிகள் இணைப்பு – நிதி உதவி**

நாட்டில் தமிழ்நாடு நீர்ப் பற்றாக்குறை மாநிலங்களில் ஒன்றாகும். போதுமான பாசன வசதியை உறுதிப்படுத்துவதன் மூலம் மட்டுமே மாநிலத்தில் வேளாண்துறையில் நீடித்த வளர்ச்சியை உறுதி செய்யும் எந்த முயற்சியும் வெற்றி பெறும். இது தொடர்பாகத்தான், நாட்டில் தண்ணீர் உபரியாக உள்ள நீர்ப் படுகைகளிலிருந்து வீணாகப் போகும் நீர் ஆதாரங்களை நீர்த்தேவை உள்ள வறண்ட பகுதிகளுக்கும் கிடைப்பதை உறுதி செய்ய நதிகளை இணைக்கவேண்டும் என்று தமிழகம் வலியுறுத்தி வருகிறது.

கடந்த தேசிய வளர்ச்சிக் கவுன்சில் கூட்டத்தில், நதிகளை இணைக்க வேண்டிய அவசரத் தேவை வலியுறுத்தப்பட்டது. இதை நிறைவேற்றுவதற்கான திட்டத்தையும் 11ஆவது ஐந்தாண்டுத் திட்டம் வகுத்துள்ளது. இதற்கிடையில், மாநிலத்துக்குள் கிடைக்கும் நீரை விரயமாகாமல் பயன்படுத்தும் வகையில் மாநிலத்துக்குள் உள்ள நதிகளை இணைக்கும் திட்டங்களை உடனடியாக மேற்கொள்ள வேண்டிய தேவை உள்ளது.

துரிதப்படுத்தப்பட்ட பாசனப் பயன் திட்டத்திற்கு தற்போதுள்ள வழிகாட்டும் நெறிமுறைகள் பெரிய மற்றும் நடுத்தரப் பாசனத் திட்டங்களையும் அவற்றை நிறைவேற்றுவதற்கும் வழிவகுக்கிறதே தவிர மாநிலங்களுக்குள்ளான நதிகளை இணைக்கும் திட்டங்களுக்கு நிதி வழங்க வழிவகை செய்யவில்லை.

எனவே, தேசிய நதிகளை இணைக்கும் அடுத்த பெரிய இலட்சியத்தை நோக்கி இத்தகைய திட்டங்கள் சிறந்த படிக்கல்லாக அமையும் என்பதால் இதற்காக நிதி ஒதுக்கீடு செய்யப்படும் வகையில் மேற்கூறிய வழிகாட்டும் நெறிமுறைகள் மாற்றப்படவேண்டும்.

இதற்கிடையில், பிரதானமாக வெள்ளநீரைக் கொண்டு செல்லவும், வெள்ளத்தைத் தடுக்கும் நடவடிக்கைக்காகவும், நீரை விரயமாகாமல் வறட்சிப் பாதிப்புக்குள்ளாகும் பகுதிகளுக்கு கொண்டு செல்லும் வகையில் மாநிலத்துக்குள் உள்ள நதிகளை இணைக்க தமிழ்நாடு அரசு முன் முயற்சி எடுத்துள்ளது. அதன்படி கடந்த ஜூன் மாதம் தமிழக அரசு கீழ்க்கண்ட இரண்டு திட்டங்களை 90 சதவீத நிதி உதவி கோரி மத்திய அரசின் நீர் ஆதாரங்கள் அமைச்சரவைக்கு அனுப்பியுள்ளது.



(அ) கீழ்க்கண்ட கட்டங்களின் அடிப்படையில் காவிரி (கட்டளை) அக்னியாறு, கோரலாறு, பம்பாறு, வைகை, குண்டாறு (255 கி.மீ.) இணைப்புத் திட்டத்தை மேற்கொள்ள உத்தேசிக்கப்பட்டுள்ளது.

- தற்போதுள்ள கட்டளை மதகை காவிரி நதியின் குறுக்கே தடுப்பணையாக உயர்த்துதல்,
- மணிமுத்தாறு வரை அக்னியாறு, தெற்கு வெள்ளாறு, பம்பாறு ஆகியவற்றை (169 கி.மீ.) இணைப்பது,
- மணிமுத்தாறு, வைகை, குண்டாறு (86 கி.மீ.) இணைப்பு மற்றும்

(ஆ) தாமிரபரணி, கருபேணியாறு, நம்பியாறு ஆகியவற்றை இணைத்து (ரூ.369 கோடி செலவு) கன்னடியான் கால்வாயிலிருந்து வறட்சிப் பகுதிகளான திசையன்விளை, சாத்தான்குளம் ஆகியவற்றிற்கு வெள்ளநீர் கொண்டு செல்லும் வாய்க்கால் அமைப்பது.

தற்போது இந்த இரண்டு திட்டங்களும் மத்திய தண்ணீர் ஆணையம், நீர் ஆதார அமைச்சகம் ஆகியவற்றில் நிலுவையிலுள்ளது. இத்திட்டங்களுக்கு மத்திய அரசின் அனுமதியை விரைவில் வழங்கி, திட்டச் செலவின் 90 சதவீதத்தை வழங்கக் கோருகிறோம்.

**தமிழ்நாட்டில் இரயில்வே திட்டங்கள் – முழுச் செலவையும் மேற்கொள்ள வேண்டுகோள் :**

தமிழ்நாட்டில் கீழ்க்கண்ட எட்டு புதிய இரயில் தடங்களை அமைக்க உத்தேசித்து மாண்புமிகு மத்திய ரயில்வே இணை அமைச்சர், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு கடிதம் எழுதியுள்ளார்.

1) ரூ. 288.87 கோடி செலவில் ஈரோடு – பழனி (91.05 கி.மீ.) புதிய தடம்,

2) ரூ. 622.52 கோடி செலவில் சென்னை (பெருங்குடி) யிலிருந்து மாமல்லபுரம், புதுச்சேரி வழியாக கடலூர் வரை புதிய தடம்,

3) ரூ. 210 கோடி செலவில் நீடாமங்கலத்திலிருந்து மன்னார்குடி வழியாக (70 கி.மீ.) பட்டுக்கோட்டை வரை புதிய தடம்,

4) ரூ. 160 கோடி செலவில் தஞ்சாவூர் – பட்டுக்கோட்டை (50 கி.மீ.) புதிய தடம்,

5) ரூ. 108 கோடி செலவில் மொரப்பூர் – தருமபுரி (36 கி.மீ.) புதிய தடம்,

6) ரூ. 330 கோடி செலவில் திண்டுக்கல் – குமுளி (110 கி.மீ.) புதிய தடம்,

7) ரூ. 281.20 கோடி செலவில் அரியலூர் – தஞ்சாவூர் (97.78 கி.மீ.) புதிய தடம்,

8) ரூ. 198.27 கோடி செலவில் அரியலூர் – தஞ்சாவூர் புதிய தடம்.

இந்தத் திட்டங்கள் பொருளாதார ரீதியில் இலாபகரமானவை அல்ல என்ற போதிலும், இந்தத் தடங்கள் செல்லும் பகுதிகளின் சமூகப் பொருளாதார வளர்ச்சியை ஊக்குவிக்க இவை தேவை என்றும் அவர் எழுதியுள்ளார். புதிய திட்டங்களுக்கு ரெயில்வே துறையிடம் நிதியிருப்புக் குறைவாக இருப்பதால் மேற்கூறிய திட்டங்களின் செலவின் 50 சதவீதத்தைப் பகிர்ந்து கொள்ள தமிழக அரசின் விருப்பத்தை பரிசீலிக்கும்படியும் கேட்டுக்கொள்ளப் பட்டுள்ளது.

போடி வழியாகத் திண்டுக்கல் – குமுளி, திருவண்ணாமலை – ஜோலார்பேட்டை, மன்னார்குடி வழியாக பட்டுக்கோட்டை மன்னார்குடி புதிய திட்டங்களுக்கு கொள்கை அளவில் அனுமதி கேட்டு திட்டக் கமிஷனிடம் கோரியபோது, இவற்றின் செலவைப் பகிர்ந்து கொள்வது பற்றி மாநில அரசின் ஒப்புதலைப் பெற்ற பிறகு கொள்கை அளவில் இந்தத் திட்டங்களைப் பரிசீலிக்கும்படி திட்டக் கமிஷன் கூறியுள்ளதாக 24.9.2008 அன்று இரயில்வே வாரியத்தின் பொறியியல் உறுப்பினர் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக இரயில்வே வாரியம் மேற்கூறிய புதிய திட்டங்களுக்காக எடுத்த முயற்சிகளைப் பாராட்டி தமிழக அரசின் தலைமைச் செயலாளர் கடிதம் எழுதினார். ஏற்கெனவே வேளச்சேரி முதல் பரங்கிமலை வரை பறக்கும் இரயில் மூன்றாவது கட்டத்தை நிறைவேற்ற மாநில அரசு பெரும் செலவை ஏற்றுக் கொண்டுள்ளதால் இந்தப் புதிய திட்டங்களின் செலவில் 50 சதவீதத்தை மேற்கொள்வது பெரும் சுமையாக அமையும் என்று எழுதியுள்ளார். சமீப ஆண்டுகளாக இரயில்வேதுறை நல்ல இலாபம் ஈட்டி வருவதால், இந்தத் திட்டங்களை இரயில்வேதுறை முழுச் செலவில் மேற்கொள்வதை பரிசீலிக்கும்படி கேட்டுக் கொள்ளப்படுகிறது.

மாநில அரசின் பங்களிப்பை வலியுறுத்தாமல் இரயில்வே நிருவாகமே மேற்கூறிய இரயில்வே திட்டங்களை மேற்கொள்ள மாண்புமிகு பிரதமர் அவர்களின் தலையீடு கேட்டுக்கொள்ளப்படுகிறது.

இவ்வாறு அந்த மனுவில் கூறப்பட்டுள்ளது. ❖

# வெள்ள நிவாரணப் பணிகளுக்கு மேலும் 500 கோடி ரூபாய்

## மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் அறிவிப்பு

வெள்ள நிவாரணப் பணிகள் குறித்து மாண்புமிகு முதலமைச்சர் **கலைஞர்** அவர்களின் அறிவிப்பு வருமாறு :

4.12.2008 அன்று டெல்லி சென்றிருந்தபோது – மாண்புமிகு இந்தியப் பிரதமர் டாக்டர். மன்மோகன் சிங், ஐக்கிய முற்போக்குக் கூட்டணியின் வழிகாட்டும் தலைவர் திருமதி. சோனியா காந்தி, மாண்புமிகு உள்துறை அமைச்சர் திரு. ப. சிதம்பரம் ஆகியோரை நேரில் சந்தித்து – அண்மையில் தமிழகத்தில் ஏற்பட்டுள்ள மழை, வெள்ள சேதாரம் பற்றியும் – உயிரிழப்பு மற்றும் பயிரிழப்புகளைப் பற்றியும் விரிவாக எடுத்துரைத்ததோடு – முதற்கட்டமாக ஆயிரம் கோடி ரூபாய் உதவி நிதி வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டிருக்கிறேன்.

அதற்கிடையே பாதிக்கப்பட்ட மாவட்டங்களில் – ஒவ்வொரு மாவட்டத்திற்கும் அமைச்சர்களின் குழுக்களை அனுப்பி, சேத விவரங்களை நேரில் அறிந்து வரச் சொன்னதின் பேரில் – அவர்களும் அவற்றையெல்லாம் அறிந்து வந்து இன்றைய தினம் என்னிடத்தில் விரிவாக எடுத்துக் கூறியிருக்கிறார்கள்.

விவசாயிகளின் பயிர் பாழானது மாத்திரமல்லாமல், அவர்களுடைய உடைமைகள், கால்நடைகள், வாழ்வாதார தேவைகளான பல்வேறு தானியங்களும் பாழடைந்து போயிருக்கின்ற செய்தியையும், பெருமளவுக்கு சாலைகள் பழுதடைந்திருக்கின்ற நிலையையும் அவர்கள் விளக்கிக் கூறிருக்கிறார்கள். இதற்கெல்லாம் – முழுவதும் பாதிக்கப்பட்ட, ஓரளவு பாதிக்கப்பட்ட, குறைவாகப் பாதிக்கப்பட்ட – என்ற மூன்று நிலை பாதிப்புகளையும் கணக்கெடுக்கவும், அதற்கேற்ற வாறு நிவாரணப் பணிகளை மேற்கொள்ளவும் – ஆலோசித்து செயல்படுவதற்கு வருகிற 8ஆம் தேதி பாதிக்கப்பட்ட மாவட்டகளான கடலூர் நாகப்பட்டினம், திருவாரூர், தஞ்சை, புதுக்கோட்டை, அரியலூர், பெரம்பலூர், திருச்சி, இராமனாதபுரம், திருவள்ளூர், காஞ்சிபுரம், சென்னை ஆகிய மாவட்டங்களின் ஆட்சித் தலைவர்களின் கூட்டத்தைத் தலைமைச் செயலகத்தில் கூட்டியிருக்கிறேன்.

அதற்கிடையே ஆங்காங்கு மாவட்ட ஆட்சியர் மூலமாக நிவாரணங்கள் வழங்கப்பட்டதையும், அந்தந்த மாவட்ட ஆட்சித் தலைவர்களிடம் தொலைபேசியில் தொடர்பு கொண்டு இன்றையதினம் அறிந்து கொண்டிருக்கிறேன். மாவட்ட ஆட்சித் தலைவர்களுடைய 8ஆம் தேதி கூட்டத்தில் விரிவாக ஆய்வு செய்து முடிவெடுத்து செயல்படுவதற்கு முன்பு பாதிக்கப்பட்ட பகுதிகளில் விவசாயிகளும், ஏழையெளிய மக்களும், குடிசை வாசிகளும், வீடிழந்தோரும் நிவாரணம் பெறுகின்ற அளவிற்கு அவசர அவசியம் கருதி மொத்தமாக 500 கோடி ரூபாய் மேலும் உதவி நிதியாக ஒதுக்கீடு செய்யப்படுகிறது. மத்திய அரசு நம்முடைய கோரிக்கையையேற்று நிறைவேற்றும் என்ற எதிர்பார்ப்போடும் நம்பிக்கையோடும் இந்த நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

8.12.2008 அன்று நடைபெறும் கூட்டத்தில் பாதிக்கப்பட்ட பகுதிகளில் இதுவரையில் நடைபெற்றுள்ள நிவாரணப் பணிகளையும் இனி நடைபெறவேண்டிய நிவாரணப் பணிகளையும், சீரமைப்புப் பணிகளையும் ஆய்ந்து தொடர்ந்து ஆவன செய்யப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

❖ ❖ ❖

### அண்ணாவின் பொன்மொழிகள்



**பழஞ் சிறப்பைப் பெறும் பணி**

இன்று நமக்குள்ள பணி தூய காற்றையும், உதயசூரியனின் ஒளியையும் அனுமதித்து நமது உண்மையான பழைய உருவையும் பொலிவையும் அடைய வேண்டும். அத்தகைய பொலிவு மிக்க உருவம்தான் உலகின் நெடுந்தூர நாடுகளிலும் நிலப் பரப்புகளிலும் நமது புகழைப் பரப்பியது.



# பெருமழையினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கும், விவசாயிகளுக்கும் தமிழக அரசு செய்து வரும் வெள்ள நிவாரணப் பணிகள்

## மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் கலைஞர் மு.கருணாநிதி அவர்களின் விளக்கம்

கடந்த நவம்பர்த் திங்கள் இறுதியில் தமிழகம் முழுவதும் சில நாட்கள் தொடர்ந்து பலத்த மழை பெய்து, அதன் காரணமாக மக்களின் இயல்பு வாழ்க்கை பாதிக்கப்படுகிறது என்று தெரிந்தவுடன் 26–11–2008 அன்றே தலைமைச் செயலாளரை அழைத்து மாவட்ட ஆட்சித் தலைவர்களோடு தொடர்பு கொண்டு, உடனடியாக நிவாரணப் பணிகளிலே ஈடுபட வேண்டுமென்றும், பள்ளி, கல்லூரிகளுக்கு விடுமுறை விடப்பட வேண்டுமென்றும் கூறினேன். பல்வேறு பல்கலைக்கழகங்களின் சார்பில் நடைபெறவிருந்த



தேர்வுகள் எல்லாம் இரத்து செய்யப்பட்டன. மீனவர்களுக்கு எச்சரிக்கை விடப்பட்டது. அன்றைய தினம் நான் விடுத்த அறிக்கையில் மாவட்ட அமைச்சர்களும், நாடாளுமன்ற சட்டமன்ற உறுப்பினர்களும், மாவட்ட ஆட்சித் தலைவர்களும், வெள்ள நிவாரணப் பணிகளிலே உடனடியாக ஈடுபட வேண்டுமென்று கேட்டுக்கொண்டேன்.

நிவாரணப் பணிகளை ஒருங்கிணைத்து விரைவுபடுத்திட, சென்னை மாநகரத்தில் மண்டலந்தோறும் ஐ.ஏ.எஸ். அதிகாரிகள் நியமனம் செய்யப்பட்டதோடு, பாதிக்கப்பட்ட மாவட்டங்களுக்கு முதுநிலை ஐ.ஏ.எஸ். அதிகாரிகள் நியமனம் செய்யப்பட்டு அன்றே அனுப்பப்பட்டனர். 27ஆம் தேதியன்று நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்திலும் – வெள்ள நிவாரணப் பணிகள்தான் அவசரப் பொருளாகச் சேர்க்கப்பட்டு, அது குறித்து நீண்ட நேரம் விவாதிக்கப்பட்டது.

அமைச்சரவைக் கூட்டத்தில் – நிவாரணப் பணிகளை மேற்கொள்ள முதற்கட்டமாக நூறு கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்தும் – மழையினால் உயிரிழந்தோரின் குடும்பத்திற்குத் தலா ஒரு இலட்சம் ரூபாய் நிதி உதவி அளிக்கவும் – பகுதியாகவோ முழுவதுமாகவோ பாதிக்கப்பட்ட குடிசைகளுக்கு தலா இரண்டாயிரம் ரூபாய் நிதி உதவி வழங்கவும் முடிவெடுக்கப்பட்டதோடு, அதற்கடுத்த நாளே மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் அவர்கள் கடலூர், திருவாரூர், நாகப்பட்டினம் மாவட்டங்களிலும், மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் திரு. துரைமுருகன் அவர்கள் திருச்சி, தஞ்சை மாவட்டங்களிலும், மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் திரு. ஐ. பெரியசாமி அவர்கள் திருவள்ளூர், காஞ்சிபுரம் மாவட்டங்களிலும்; வெள்ளப் பகுதிகளுக்கு விரைந்து சென்று நிவாரணப் பணிகளை மேற்பார்வையிட வேண்டுமென்றும் முடிவு செய்யப்பட்டு, அவர்களும் அவ்வாறே அந்தப் பகுதிகளுக்கு விரைந்து பணிகளை மேற்கொண்டனர்.

28.11.2008 அன்று விடியற்காலை 4 மணி அளவில், மழையினால் பெரிதும் பாதிக்கப்பட்ட மாவட்டங்களைச்

சேர்ந்த மாவட்ட ஆட்சித் தலைவர்களுடன் எல்லாம் நானே நேரடியாகத் தொலைபேசியிலே தொடர்பு கொண்டு, அவர்களையெல்லாம் நிவாரணப் பணிகளிலே விரைந்து ஈடுபட வேண்டுமென்று கேட்டுக்கொண்டேன். நான் அவ்வாறு 4 மணி அளவில் தொலைபேசியில் தொடர்பு கொண்ட காரணத்தினால், திருவாரூர் மாவட்ட ஆட்சியருடன் மீண்டும் 6 மணி அளவிலே பேச முற்பட்டபோது, அவர் அம்மையப்பன் என்ற ஊரிலே வெள்ளப் பகுதிகளிலே பணியாற்றிக் கொண்டிருப்பதாக எனக்குச் செய்தி கிடைத்தது.

தொலைபேசியிலே பேசியதோடு விட்டு விடாமல், அதே நாள் காலையில் சென்னை மாநகரிலே பெரு மழையினால் பாதிக்கப்பட்ட கோட்டூர்புரம், காந்தி மண்டபம், சைதாப்பேட்டை, கீழ்ப்பாக்கம், பெரம்பூர் பகுதிகளுக்கு நானே நேரில் சென்று பாதிக்கப்பட்ட மக்களுக்கு ஆறுதல் கூறியதுடன் நிவாரணப் பணிகளில்



விரைந்து ஈடுபட வேண்டுமென்று அதிகாரிகளை அறிவுறுத்தி ஊக்கப்படுத்தினேன். என்னைப் போலவே வட சென்னையில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளை நிதியமைச்சர் பேராசிரியர் அவர்களும், தென் சென்னையில் கோடம்பாக்கம், வேளச்சேரி, கிண்டி பகுதிகளில் மாண்புமிகு மின்துறை அமைச்சர் திரு. ஆர்க்காடு வீராசாமி அவர்களும், மத்திய சென்னையில் மாண்புமிகு செய்தித்துறை அமைச்சர் திரு. பரிதி இளம்வழுதி அவர்களும் சென்று நிவாரணப் பணிகளிலே ஈடுபட்டனர். அதைப்போலவே மற்ற மாவட்ட அமைச்சர்கள் எல்லாம் தங்கள் தங்கள் மாவட்டங்களிலே இத்தகைய பணிகளிலே ஈடுபட்டுள்ளார்கள்.

வெள்ள நிவாரணப் பணிகளின் முன்னேற்றம் குறித்து தொடர்ந்து ஆய்வு செய்து விரைந்து நடவடிக்கை எடுத்திட அமைச்சரவை துணைக் குழு ஒன்றும் உள்ளாட்சித்துறை அமைச்சர் தலைமையில் அமைத்து, அதன் முதல் கூட்டமும் 3.12.2008 அன்று நடைபெற்று, அந்தக் குழுவினரும் என்னிடம் உடனடியாக வந்து விவாதித்துள்ளார்கள்.

29.11.2008 அன்று மீண்டும் தலைமைச் செயலகத்தில் தலைமைச் செயலாளர், நிதித்துறைச் செயலாளர், வருவாய்த்துறைச் செயலாளர் ஆகியோரிடம் நிவாரணப் பணிகள் குறித்து நீண்ட நேரம் விவாதித்தேன். அதன் விளைவாக, பகுதியாகவோ, முழுமையாகவோ பாதிக்கப்பட்ட வீடுகளுக்குத் தலா 2,000 ரூபாய் கொடுப்பதன்னியில், பத்து கிலோ அரிசியும் வழங்க வேண்டுமென்று முடிவெடுத்து, அந்த அறிவிப்பும் செய்யப்பட்டு அவ்வாறே வழங்கவும் முடிவு செய்யப்பட்டுள்ளது.

பகுதியாகவோ முழுமையாகவோ பாதிக்கப்பட்டுள்ள குடிசைகளுக்கு மட்டும்தான் நிவாரணம் வழங்கவேண்டுமென்ற மத்திய அரசின் வழிகாட்டு நெறிமுறைகளுக்கு கூடுதலாக – ஊரகப் பகுதிகளில் வெள்ளத்தால் சூழ்ந்த அனைத்து வீடுகளுக்கும் பாகுபாடின்றி தலா ஆயிரம் ரூபாய் வழங்க வேண்டுமென்ற கோரிக்கையையும் ஏற்றுக்கொண்டு– அவ்வாறே அவர்களுக்கு ஆயிரம் ரூபாய் வீதம் வழங்கிடவும்; நகர்ப்புற பகுதிகளிலும் மழை நீர் – வெள்ளம் புகுந்த அனைத்து வீடுகளுக்கும் வேறுபாடு கருதாமல் ஆயிரம் ரூபாய் வீதம் வழங்கிடவும்; சென்னை மற்றும் சென்னை புறநகர் பகுதிகளிலேயும் மழை நீர் – வெள்ளம் புகுந்த அனைத்து வீடுகளுக்கும் தலா இரண்டாயிரம் ரூபாய் வீதம் வழங்கிடவும் அரசு ஆணை பிறப்பித்துள்ளது.

இதுபோல மழை வெள்ளம் ஏற்படும்போது எந்த அளவிற்கு நிதி உதவி செய்ய வேண்டுமென்று மத்திய அரசு வரையறை செய்து ஆணையாகவே பிறப்பித்துள்ளது. நமது மாநிலத்தில் மத்திய அரசின் அறிவுரைக்கு மேலாகவே கூடுதலாக நிதி உதவிகள் செய்யப்படுகின்றன. உதாரணத்திற்குச் சொல்ல வேண்டுமென்றால் –





**“சிறு குறு விவசாயிகளுக்குப் பாசன வசதியுள்ள இடங்களில் எக்டேர் ஒன்றுக்கு 4,000 ரூபாய் நஷ்ட ஈடு வழங்க வேண்டுமென்று மத்திய அரசு கூறியுள்ளது. ஆனால் தமிழகத்தில் கடந்தமுறை எக்டேர் ஒன்றுக்கு 7,500 ரூபாய் அளவிற்கு நஷ்டஈடு வழங்கியிருக்கிறோம்.”**

இதே சலுகையை தற்போது ஏற்பட்டுள்ள மழை வெள்ளத்தால் பயிர் பாதிப்புக்கு உள்ளான விவசாயிகளுக்கும் நீடித்திட முடிவு செய்யப்பட்டுள்ளது. இந்தச் சலுகையைக்கூட மத்திய அரசின் விதிமுறையில் இரண்டு எக்டேர் அளவிற்கு மட்டுமே வழங்கப்பட வேண்டுமென்று குறிப்பிட்டுள்ளதற்கு மாறாக, விவசாயிகள் எத்தனை எக்டேர் இழப்புக்கு ஆளானாலும், அத்தனை எக்டேர் நிலத்திற்கும் இழப்பீடு வழங்கப்பட்டு வருகிறது.

இது மட்டுமல்லாது, தி.மு.க. ஆட்சியில்தான் முதல்முறையாக விவசாயிகளுக்கு பயிர்க்காப்பீடு பிரிமியம் தொகையில் ஐம்பது சதவிகிதத்தை மாநில அரசே ஏற்றுக்கொண்டு செலுத்தி வருகிறது. 2005–06ஆம் ஆண்டில் அ.தி.மு.க ஆட்சியில் 1 இலட்சத்து 19 ஆயிரத்து 967 விவசாயிகளே பயிர்க்காப்பீட்டுத் திட்டத்தில் சேர்க்கப்பட்டிருந்தனர் என்பதற்கு மாறாக; 2006–07ஆம் ஆண்டில் தி.மு.கழக ஆட்சியில் 3 இலட்சத்து 15 ஆயிரத்து 444 விவசாயிகளும்– கடந்த 2007–08ஆம் ஆண்டில் 5 இலட்சத்து 57 ஆயிரத்து 481 விவசாயிகளும் பயிர்க்காப்பீட்டுத் திட்டத்தில் சேர்க்கப்பட்டுள்ளார்கள். தமிழக வரலாற்றிலேயே முதல் முறையாக 2007–08ஆம் ஆண்டுக்கு 279.32 கோடி ரூபாய் இழப்பீட்டுத் தொகையாக விவசாயிகளுக்கு இந்தப் பயிர்ப் பாதுகாப்புத் திட்டத்தின்கீழ் வழங்கப்பட்டுள்ளது.

எனவே பாதிக்கப்பட்ட மக்களுக்கோ, விவசாயிகளுக்கோ உதவி செய்வதில் தி.மு.கழக அரசு எந்த அளவிற்கு முடியுமோ அந்த அளவிற்கு உதவிகளைச் செய்து கொண்டுதான் இருக்கிறது. ❖

# போர்க்கால அடிப்படையில் தமிழகத்தில் வெள்ள நிவாரணப் பணிகள்

## சேதாரத்தை தடுத்திட நீண்ட கால நிரந்தரத் திட்டம்

பல்வேறு துறைகளால் எடுக்கப்படும் நிவாரணப் பணிகளை கண்காணிக்கவும், ஒருங்கிணைக்கவும், துரிதப்படுத்தவும் அமைச்சரவை துணைக் குழு ஒன்றினை அமைத்து மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் கலைஞர் மு. கருணாநிதி அவர்கள் ஆணையிட்டுள்ளார். இக்குழுவிற்கு மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் அவர்கள் தலைவராகவும், மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர், மாண்புமிகு போக்குவரத்து மற்றும் மாண்புமிகு வேளாண்துறை அமைச்சர், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர், மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர், மாண்புமிகு நெடுஞ்சாலைத்துறை அமைச்சர் ஆகியோர் உறுப்பினர்களாகவும் உள்ளனர். இத்துணைக் குழுவின் முதல் கூட்டம் 2.12.2008 அன்று சென்னை, தலைமைச் செயலகத்தில் நடைபெற்றது.

நிவாரணப் பணிகளை துரிதப்படுத்த இக்குழு பல்வேறு துறைகளின் பணிகளை ஆய்வு செய்தது.

19.11.2008 முதல் 2.12.2008 அன்று வரை பெய்த பெரு மழையால் 177 நபர்கள் உயிரிழந்துள்ளதாகவும், 2,782 கால்நடைகள் உயிரிழந்துள்ளதாகவும், 61,216 குடிசைகள் முழுமையாகவும் 1,57,960 குடிசைகள் பகுதியாகவும் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் இக் கூட்டத்தில் தெரிவிக்கப்பட்டது. மாண்புமிகு அமைச்சர்கள், பாதிக்கப்பட்ட அனைவருக்கும் நிவாரணத் தொகைகள் உடனடியாக வழங்கப்பட வேண்டும் என்று ஆணையிட்டார்கள். மேலும் பாதிக்கப்பட்ட வீடுகளுக்கு வழங்கப்படும் நிவாரணத் தொகை குறித்து புதிதாக அரசால் வெளியிடப்பட்டுள்ள நெறிமுறைகளைப் பின்பற்றி பாதிக்கப்பட்ட வீடுகள் பற்றிய கணக்கெடுப்பை உடனடியாக இறுதி செய்ய வேண்டும் என்றும் வெள்ளம் சூழ்ந்த குடியிருப்புகளில் உள்ள அனைத்து வீடுகளுக்கும் ரூபாய் ஆயிரம் நிவாரணத் தொகையாக வழங்கப்பட வேண்டும் என்றும் சென்னை மற்றும் அதைச் சார்ந்த பகுதிகளில் வெள்ள நீர் புகுந்த வீடுகள் அனைத்திற்கும் ரூபாய்





இரண்டாயிரம் நிவாரணமாக உடனடியாக வழங்கப்பட வேண்டும் என்றும் தெரிவித்தார்கள்.

வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்கள் தங்குவதற்கு 1,327 நிவாரண முகாம்கள் நடைபெற்று வருவதாகவும் அவற்றில் 8,80,897 நபர்கள் தங்கியுள்ளதாகவும், இதுவரையில் 14,87,911 உணவுப் பொட்டலங்கள் வினியோகிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது. மாண்புமிகு அமைச்சர்கள், இந்த நிவாரண முகாம்களில் தங்கியுள்ளவர்களுக்கு அனைத்து வசதிகளையும் செய்து கொடுக்கவேண்டும் என்றும், அவர்கள் மீண்டும் தங்களது வீடுகளுக்கு செல்லும்வரையிலும் தேவையான உணவுகளை வழங்க வேண்டும் என்றும், மேலும் இந்த முகாம்கள் சரியாகப் பராமரிக்கப்பட வேண்டும் என்றும் அறிவுறுத்தினார்கள்.

வெள்ளத்தால் பாதிப்புக்குள்ளான அனைத்துக் குடிசை வீடுகளுக்கும் அரசு உத்தரவின்படி ரூ.2,000 நிவாரணத்தொகையாகவும், அதோடு 10 கிலோ அரிசியும் உடனடியாக வழங்கிட மாவட்ட ஆட்சியர்கள் நடவடிக்கை எடுக்கவேண்டும் எனவும் அமைச்சரவைத் துணைக்குழு கேட்டுக்கொண்டது.

பாதிக்கப்பட்ட மாவட்டங்களில் 7,72,327 ஹெக்டேர் பரப்பளவில் பயிர்கள் நீரில் மூழ்கியுள்ளதால், இது பற்றிய கணக்கெடுப்பை விரைவுபடுத்தி நிவாரணத்தொகை வழங்கத் தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ள அனைத்து மாவட்ட ஆட்சித் தலைவர்கள் அறிவுறுத்தப்பட வேண்டும் என்று தெரிவித்தார்கள்.

பெருமழையின் காரணமாக ஆங்காங்கே சேதமடைந்த சாலைகள் உடனடியாக செப்பனிடப்பட்டு போக்குவரத்து சீராக நடைபெற உடனடியாக நடவடிக்கை மேற்கொள்ள நெடுஞ்சாலைத் துறையை அமைச்சர்கள் அறிவுறுத்தினார்கள். மேலும் பொதுப்பணித்துறை மற்றும் உள்ளாட்சி அமைப்பு மூலமாக பராமரிக்கப்பட்டுவரும் குளங்கள் மற்றும் கண்மாய்களில் ஏற்பட்டுள்ள உடைப்புகளையும் சேதங்களையும் உடனடியாகச் சீர் செய்யவேண்டும் என்றும், குளங்கள் மற்றும் கண்மாய்களில் உள்ள தண்ணீர் மேலும் வீணாகாதபடி உடனடியாக நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும் எனவும் தெரிவித்தார்கள்.

வெள்ள நிவாரணப் பணிகள் அனைத்தையும் போர்க்கால அடிப்படையில் நிறைவேற்ற வேண்டும் என்றும், ஒவ்வொரு துறையும் இப்பணிகளை விரைவில் நிறைவேற்றி அவற்றை 6.12.2008 அன்று நடைபெறவிருக்கும் அமைச்சரவை துணைக்குழுவின் இரண்டாவது கூட்டத்தில் தெரிவிக்கவேண்டும் என்று அறிவுறுத்தினார்கள். மேலும் ஒவ்வொரு பகுதியிலும் வெள்ளம் வரும்பொழுதெல்லாம் ஏற்பட்டுள்ள சேதாரங்களைக் கருத்தில் கொண்டு, இச் சேதாரங்களை நிரந்தரமாகத் தவிர்த்திட ஒவ்வொரு துறையும் ஒரு நீண்டகாலத் திட்டத்தை ஒருமாத காலத்திற்குள் இறுதி செய்து இக்குழுவிற்கு அளிக்கவேண்டும் என்று அறிவுறுத்தினார்கள்.

இக்கூட்டத்தில், மாண்புமிகு பொதுப்பணி மற்றும் சட்டத்துறை அமைச்சர் திரு. துரைமுருகன், மாண்புமிகு போக்குவரத்து மற்றும் வேளாண்மைத்துறை அமைச்சர் திரு. கே. என். நேரு, மாண்புமிகு வருவாய் மற்றும் வீட்டு வசதித்துறை அமைச்சர் திரு. ஐ. பெரியசாமி, மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் திரு. எம். ஆர். கே. பன்னீர்செல்வம், மாண்புமிகு நெடுஞ்சாலைத்துறை அமைச்சர் திரு. வெள்ளக்கோவில் மு.பெ. சாமிநாதன் மற்றும் தலைமைச் செயலாளர் திரு. கே. எஸ். ஸ்ரீபதி, இ.ஆ.ப., விழிப்புப் பணி மற்றும் நிருவாக சீர்திருத்தத்துறை ஆணையர் திருமதி. தங்கம் சங்கரநாராயணன், இ.ஆ.ப., வருவாய்த்துறை செயலாளர் திரு. கே. தீனபந்து, இ.ஆ.ப., பொதுத்துறை செயலாளர் திரு. தேவ ஜோதி ஜெகராஜன், இ.ஆ.ப., நிதித்துறை செயலாளர் திரு. கு. ஞானதேசிகன், இ.ஆ.ப., நெடுஞ்சாலைத்துறை செயலாளர் திரு. கா. அலாவுதீன், இ.ஆ.ப., வீட்டுவசதித்துறை செயலாளர் திரு. அரங்க. செல்லமுத்து , இ.ஆ.ப., ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை செயலாளர் திரு. அஷோக்வர்தன் ஷெட்டி, இ.ஆ.ப., கால்நடை பராமரிப்பு, பால்வளம் மற்றும் மீன்வளத்துறை செயலாளர் செல்வி. லீனா நாயர், இ.ஆ.ப., பொதுப்பணித்துறை செயலாளர் திரு. ஆதிசேஷைய்யா, இ.ஆ.ப., நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல்துறை செயலாளர் டாக்டர். நிரஞ்சன் மார்டி, இ.ஆ.ப., மக்கள் நல்வாழ்வுத்துறை செயலாளர் திரு. வி.கு. சுப்புராஜ், இ.ஆ.ப., வேளாண்மைத்துறை செயலாளர் திரு. சுர்ஜித். கே. சௌத்ரி, இ.ஆ.ப., வருவாய் நிருவாக ஆணையாளர் டாக்டர். என். சுந்தரதேவன், இ.ஆ.ப., நகராட்சி நிருவாக இயக்குநர் டாக்டர். செந்தில்குமார், இ.ஆ.ப., வேளாண்மைத்துறை இயக்குநர் திரு. கே. கோசலராமன், இ.ஆ.ப., சென்னை மாநகராட்சி ஆணையாளர் திரு. ராஜேஷ் லக்கானி, இ.ஆ.ப., பேரூராட்சிகள் இயக்குநர் முனைவர். கோபால், இ.ஆ.ப., வருவாய் நிருவாக இணை ஆணையர் திரு. அ. இராமலிங்கம், இ.ஆ.ப., செய்தி மக்கள் தொடர்பு இயக்குநர் முனைவர். ஆ. சி. மோகன்தாஸ், இ.ஆ.ப., தோட்டக்கலை மற்றும் மலைப்பயிர்கள்துறை ஆணையாளர் டாக்டர். சந்திரமோகன் இ.ஆ.ப., மற்றும் உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

❖ ❖ ❖

# வெள்ள நிவாரணப் பணிகளை துரிதப்படுத்திட அமைச்சரவை துணைக் குழு அறிவுரை



வெள்ள நிவாரணப் பணிகள் குறித்து மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை அமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையில் அமைச்சரவை துணைக்குழுவின் இரண்டாம் கூட்டம் 6.12.2008 அன்று நடைபெற்றது.

கூட்டத்தில் மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் திரு. துரைமுருகன், மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் திரு. கே.என். நேரு, மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் திரு.எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம், மாண்புமிகு நெடுஞ்சாலைத்துறை அமைச்சர் திரு. வெள்ளக்கோவில். மு.பெ.சுவாமிநாதன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

கூட்டத்தில் 5.12.2008 வரை மேற்கொள்ளப்பட்ட நிவாரணப் பணிகள் குறித்த தகவல்கள் குழுவின் முன் வைக்கப்பட்டன. இதன்படி, இதுவரை வெள்ளத்தால் 189 பேர் இறந்துள்ளதாகவும், 4,997 கால்நடைகள் உயிர் இழந்துள்ளதாகவும், 5,06,675 குடிசைகள் முழுமையாக பாதிக்கப்பட்டு உள்ளதாகவும், 4,93,970 குடிசைகள் பகுதியாக சேதமடைந்துள்ளதாகவும் தெரிவிக்கப் பட்டது.

மேலும், 1,597 கிராமங்கள் வெள்ளத்தால் சூழப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

மேலும், மரணமடைந்த 189 நபர்களில், 139 குடும்பங்களுக்கு நிவாரணத் தொகை வழங்கப்பட்டுள்ளதாகவும், 9 குடும்பங்கள் நிவாரணத் தொகையை வாங்க மறுப்பு தெரிவித்ததாகவும், மீதமுள்ள 41 குடும்பங்களுக்கு நிவாரணத் தொகை வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் தெரிவிக்கப்பட்டது.

உயிரிழந்த 4,997 கால்நடைகளில், 150 கால்நடைகளின் உரிமையாளர்களுக்கு நிவாரணத் தொகை வழங்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டது.

இதுவரை 94,367 முழுவதும் சேதமடைந்த குடிசைகளுக்கு நிவாரணத் தொகை வழங்கப்பட்டுள்ளது. இதேபோன்று 47,548 பகுதியாக சேதமடைந்த குடிசைகளுக்கு நிவாரணம் வழங்கப்பட்டது.

மேலும், தற்போது 595 வெள்ள நிவாரண முகாம்கள் நடத்தப்பட்டு வருவதாகவும், இவைகளில் 43 முகாம்



காஞ்சிபுரம் மாவட்டத்திலும், 47 முகாம் நாகப்பட்டினம் மாவட்டத்திலும், தஞ்சாவூர், திருவள்ளூர், விழுப்புரம் ஆகிய மாவட்டங்களில் தலா ஒரு முகாம் மற்றும் திருவாரூர் மாவட்டத்தில் 502 முகாம்கள் தொடர்ந்து நடந்து வருவதாகவும் தெரிவிக்கப்பட்டது. இம்முகாம்களில், 3,23,615 நபர்கள் தற்போது தங்கியுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது.

இதுவரை, பாதிக்கப்பட்டோருக்கு 29.57 கோடி ரூபாய் நிவாரணத்தொகையாக வழங்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. வெள்ளம் சூழ்ந்த கிராமங்களில் உள்ள வீடுகளுக்கு ரூபாய் ஆயிரம் வழங்கவேண்டும் என்ற அரசாணையின்படி இதுவரை சுமார் 10,87,712 வீடுகளுக்கு நிவாரணத்தொகை வழங்க கணக்கிடப்பட்டுள்ளது. இந்தக் கணக்கீடு செய்யும் பணி தொடர்ந்து நடைபெற்று வருவதாகவும் தெரிவிக்கப்பட்டது.

நெடுஞ்சாலைகளைப் பொறுத்தவரை, மாநில நெடுஞ்சாலைகளில் 2,062 கிலோ மீட்டர் சாலைகள் வெகுவாகப் பாதிப்புக்குள்ளாகி உள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது. இவற்றில், 932 கி.மீ. சாலைகள் செப்பனிடப்பட்டு உள்ளதாகவும், மேலும் பெரிய மாவட்டச் சாலைகள் 2,224 கி.மீ. பழுதடைந்து உள்ளதாகவும், அவற்றில் 796 கி.மீ. சாலைகள் செப்பனிடப்பட்டுள்ளது.

இதுபோல், இதர மாவட்டச் சாலைகளில் 4,998 கி.மீ. பாதிப்புக்குள்ளாகி உள்ளதாகவும், அவற்றில் 992 கி.மீ. சாலைகள் இதுவரை பழுது நீக்கப்பட்டதாக தெரிவிக்கப்பட்டது. மேலும், தேசிய நெடுஞ்சாலைகள் 383 கி.மீ. தூரம் பழுதடைந்துள்ளதாகவும், அவற்றில் 326 கி.மீ. டபிள்யு.பி.எம். அளவுக்கு சரிசெய்யப்பட்டுள்ளன. மேலும், இந்திய தேசிய நெடுஞ்சாலை ஆணையத்தின் மூலம் பராமரிக்கப்படும் சாலைகளில் 945 கி.மீ. சாலைகள் பழுதடைந்துள்ளதாகவும், அவற்றில் 30 கி.மீ. டபிள்யு.பி.எம். அளவுக்கு சரிசெய்யப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது.

பொதுப்பணித்துறை மூலம் பராமரிப்பிலுள்ள கண்மாய்களைப் பொறுத்தவரையில் 1,957 சேதமடைந்துள்ள கண்மாய்களில், 1,149 கண்மாய்கள் சரிசெய்யப்பட்டுள்ளதாகவும், மீதமுள்ள கண்மாய்களை 15.12.2008க்குள் சரிசெய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

மின்சார இணைப்பு துண்டிக்கப்பட்டுள்ள 2,439 கிராமங்களில், 93 கிராமங்களைத் தவிர மீதமுள்ள கிராமங்கள் அனைத்திற்கும் மின்சார விநியோகம் சரி செய்யப்பட்டுள்ளதாகவும், மீதமுள்ள 93 கிராமங்களுக்கு மின் விநியோகம் செய்ய விரைவில் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப் பட்டது.

நிவாரணப் பணிகளை மேலும் துரிதப்படுத்தப்பட வேண்டுமென்று அமைச்சரவை துணைக்குழு அறிவுரை வழங்கியது.

பழுதடைந்துள்ள நெடுஞ்சாலைகளைப் பொறுத்தவரை தலைமைச் செயலாளர் அவர்கள் ஏற்கெனவே ஒரு கூட்டத்தைக் கூட்டி, சாலைகளை செப்பனிட வேண்டும் என்று கேட்டுக்கொண்டுள்ளார். அதனடிப்படையில், பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக தெரிவிக்கப்பட்டது.

பாதிப்படைந்த வீடுகளுக்கு, நிவாரணத்தொகை வழங்கும் பணி விரைவுபடுத்தவும், பாதிப்புக்குள்ளான பயிர்களை கணக்கெடுக்கவும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

கடந்த கூட்டத்தில் அமைச்சரவை துணைக்குழு அறிவுறுத்தியவாறு மத்திய அரசுக்கு அனுப்பப்பட வேண்டிய வெள்ளச் சேதார அறிக்கையைத் திருத்தி, திருத்திய அறிக்கையின்படி தற்காலிக சீரமைப்புப் பணிகளுக்கான நிதி ரூ.658 கோடியிலிருந்து ரூ.1,893 கோடியாக உயர்த்தப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப் பட்டது.

மேலும், வெள்ள நிலைமையை கண்காணிக்க மத்தியக்குழுத் தலைவரை நியமித்து, மத்திய அரசு ஆணைகள் வெளியிட்டதாகவும், இந்தக் குழு விரைவில் தமிழகத்திற்கு வந்து வருகை தந்து, வெள்ளம் பாதிக்கப்பட்ட பகுதிகளைப் பார்வையிட உள்ளதாக தெரிகிறது.

மேலும், தற்போது தமிழ்நாடு கடலோரப் பகுதியிலிருந்து 900 கி.மீ. தூரத்தில் உள்ள காற்றழுத்த மண்டலம் மேலும் வலுப்பெற்று புயலாக மாறும் சாத்தியக்கூறுகள் உள்ளது என்பதால் முன்னெச்சரிக்கை நடவடிக்கை எடுக்கவேண்டு மென்றும் அமைச்சரவை துணைக்குழு கேட்டுக்கொண்டது.

கூட்டத்தில் தலைமைச் செயலாளர் உள்ளிட்ட உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர். ☐

# புயல் – பெருமழையால் உயிரிழந்தோர் குடும்பங்களுக்கு தலா 2 இலட்சம் ரூபாயாக உயர்த்தி உடனடியாக வழங்கப்படும்

## மழை வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மாவட்டங்களின் ஆட்சித்தலைவர்கள் கூட்டத்தில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் **கலைஞர்** அவர்கள் அறிவிப்பு

**வெ**ள்ள நிவாரணப் பணிகளை மேற்கொள்ளவும், அதுகுறித்து ஆலோசித்து செயல்படுவதற்காகவும் – பாதிக்கப்பட்ட மாவட்டங்களின் ஆட்சித் தலைவர்கள் கூட்டம் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் தலைமையில் 7.12.2008 அன்று நடைபெற்றது.

இக்கூட்டத்தில் மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் ஆற்றிய உரை வருமாறு:–

வெள்ள நிவாரணப் பணிகளை முன்னிட்டு மாவட்ட ஆட்சியர்கள் இதுவரையில் செய்திருக்கும் துயர் துடைப்புப் பணிகளை நான் பாராட்டுகின்றேன். வருவாய்த்துறை, காவல்துறை, தீயணைப்புத்துறை, மின்சார வாரியம், மக்கள் நல்வாழ்வுத்துறை, பொதுப் பணித்துறை, நெடுஞ்சாலைத்துறை ஆகிய துறைகள் ஆற்றிய பணிகளையும் நான் பாராட்டுகிறேன். எனினும் இன்னும் வேகமாகவும், நல்ல முறையிலும் அவர்கள் தங்களுடைய பணிகளை மேற்கொண்டால்தான் இதுபோன்ற இயற்கை இடர்களிலிருந்து எதிர்காலத்திலே மக்களைக் காப்பாற்றவும், பயிர்களைக் காப்பாற்றவும் முடியும் என்பதை வலியுறுத்திக்கூறக் கடமைப் பட்டிருக்கிறேன். இந்த வேகமும் ஊக்கமும் தொடர்ந்து நீங்கள் செய்யும் பணிகளின் மூலமாக வெளிப்பட வேண்டுமென்று விரும்புகிறேன். சீரமைப்புப் பணிகள் சிறப்பாகவும், தரத்தோடும் நிறைவேற்றப்பட வேண்டும் என்றும் கேட்டுக் கொள்கிறேன்.

பாதிக்கப்பட்ட மக்களுக்கு உடனடியாக ஆறுதலும் நம்பிக்கையும் தரத்தக்க வகையில் உங்கள் பணிகளை வகுத்துக் கொண்டு நிறைவேற்றிட வேண்டும். புயல் – பெருமழை காரணமாக உயிரிழந்த ஒவ்வொரு குடும்பங்களுக்கும்; கால்நடைகளை இழந்தோர்க்கும் நிவாரண உதவியை உடனடியாக அதாவது இப்போது நாங்கள் நிர்ணயித்த 10–12–2008 க்குள் வழங்கி முடிக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.





வெள்ளம் சூழ்ந்த வீடுகளுக்கும் – வெள்ளம் நுழைந்த வீடுகளுக்கும் – பகுதியாகவோ அல்லது முழுமையாகவோ சேதமடைந்த வீடுகளுக்கும் – வழங்க வேண்டிய நிவாரண உதவிகளை; ஒளிவு மறைவின்றி வெளிப்படையாக வழங்க வேண்டும். இதைச் சொல்வதற்குக் காரணம், டிராப்ட் ஆகவோ, காசோலையாகவோ வழங்கலாமா என்ற கருத்துக் கூட பேசப்பட்டாலும், நம்முடைய மாநிலத்தைப் பொறுத்தவரை பணமாகவே நேரில் ஒவ்வொருவரிடமும் வழங்குவதில் தான் பாதிக்கப்பட்டவர்களுக்கு திருப்தி அளிக்கும். அந்த நிதி உதவிகளை 15–12–2008க்குள் வழங்கி முடித்திட காலக்கெடு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

பயிர்கள் சேதம் பற்றிய கணக்கெடுப்பை நடத்தி முடித்திடவும்; அவற்றிற்கு நிவாரண நிதி உதவி வழங்கிடவும்; 31–12–2008க்குள் முடித்திட அதற்கு காலக்கெடு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. நிவாரண உதவிகளை, பாதிக்கப்படாதோர் தட்டிச் சென்று விடாமல் மிகுந்த முன்னெச்சரிக்கையோடு இருக்கவேண்டும். பாதிக்கப்படாதோர் ஒரிருவர் நிவாரண உதவிகளைத் தட்டிச் செல்ல முயன்றாலும்; பாதிக்கப்பட்டோர் எவரும் நிவாரண அந்த உதவிகளைப் பெறுவதிலிருந்து விடுபட்டு விடாமல்; கண்ணும் கருத்துமாகப் பார்த்துக் கொள்ளவேண்டும் என்றும் கேட்டுக் கொள்கிறேன்.

பொதுவாக வெள்ளம் – வறட்சி ஏற்படும்போது நிலவிடும் சூழல்களை; அந்த நிலைமைகள் மாறியதற்குப் பிறகு – அவற்றை முற்றிலும் நாம் மறந்து விடுகிறோம். அரசிலே உள்ள நாங்கள் மாத்திரமல்ல, அதிகார வர்க்கத்திலே உள்ளவர்களும் மறந்து விடுவது இயல்பாக ஆகிவிட்ட ஒன்றாக உள்ளது. இந்தமுறை அப்படி இல்லாமல்; வெள்ளத்தால் ஏற்பட்டுள்ள அனுபவங்களின் அடிப்படையில் நிரந்தரமான தீர்வுகளைப் பற்றி தொடர்புடைய துறைகளோடு கலந்தாலோசனை செய்து; தேவையான திட்டங்களை உருவாக்கி செயல்படுத்துவதற்கான முயற்சிகளை மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அந்தப் பணிகளைத் தொடங்கிச் செய்யத்தான் இப்போது அமைச்சர்களைக் கொண்ட ஒரு துணைக் குழு, உள்ளாட்சித்துறை அமைச்சர் தம்பி ஸ்டாலின் தலைமையிலே அமைக்கப்பட்டு, அதன் பணிகளை ஆற்றி வருகிறது. அதை இன்னும் தீவிரப்படுத்தி, ஆழ்ந்து யோசித்து நம்முடைய அரசின் சார்பில் செய்ய வேண்டியவைகளை கூடுமானவரையில் பட்ஜெட் வெளியிடுவதற்கு முன்பாகவோ அல்லது சிலவற்றை பட்ஜெட் வந்த பிறகோ நாட்டிற்கு அறிவிக்கும் வகையில் ஆவண செய்திட வேண்டுமென்று அந்தக் குழுவினரைக் கேட்டுக் கொள்கிறேன்.

கால்நடை இழப்புக்கு நிவாரண உதவி வழங்கும் அதிகாரத்தை மாவட்ட ஆட்சியரிடமிருந்து கோட்ட வருவாய் அலுவலர்களுக்கு மாற்றிக் கொடுக்க இன்றைய கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டுள்ளது.

ஆறுகள், குளங்கள், ஏரிகள் ஆகியவற்றில் தூர்வாரும் பணிகளை மாவட்ட ஆட்சியர்களே மேற்பார்வையிட்டு தரத்தை உறுதி செய்திட வேண்டும் என்றும் இன்றைய கூட்டத்தில் முடிவெடுக்கப்பட்டுள்ளது. இந்த முடிவை நல்ல முறையிலே நிறைவேற்ற வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

உடைமைகள் முழுவதையும் இழந்துவிட்ட குடும்பங்களுக்கு அந்தக் குடும்பங்களிலே எத்தனை பேர் இருந்தாலும் அத்தனை பேருக்கும் தலா ஒரு வேட்டி, ஒரு சேலை என்ற முறையில் வழங்க வேண்டும். பொங்கல் நேரத்திலே வழங்குவது என்பது ஒருபுறம் இருந்தாலுங்கூட, நான் முதலிலே கூறியதைப் போல, இந்தப் பாதிப்பை ஈடுகட்ட அவர்களுக்கு இந்த இலவச வேட்டி சேலைகளை உடனடியாக நாளைக்கே தொடங்கி வழங்கிட வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அம்மாதிரியான குடும்பங்களில் பள்ளிக்குச் செல்லும் மாணவ, மாணவியருக்கு இலவசமாகப் பாடப் புத்தகங்கள், சீருடைகள் வழங்கவும் முடிவு செய்திருக்கிறோம். அவைகள் நேர்மையான முறையில் அவர்களுக்குச் சென்று கிடைத்திட பணியாற்றவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இந்தப் பெருமழை காரணமாக உயிரிழந்தோருக்கு தலா ஒரு இலட்சம் ரூபாய் வீதம் வழங்குவதென்று அறிவித்திருக்கிறோம். அது போதுமானதல்ல என்று எதிர்க்கட்சிகளின் சார்பில் – பொதுவான சில கட்சிகளின் சார்பில் குரல் இன்றைக்கு ஓங்கி ஒலித்துக் கொண்டிருக்கின்றது. எனவே இந்தக் கூட்டத்தில் எடுக்கின்ற முடிவாக அந்தத் தொகையை – இறந்தோர் குடும்பம் ஒவ்வொன்றுக்கும் தலா ஒரு இலட்சம் ரூபாய் உதவித்தொகை என்பதை – இரண்டு இலட்சம் ரூபாய் என்று உயர்த்தி அறிவிக்கப்படுகிறது. அந்தத் தொகையும் அவர்களுக்கு உடனடியாகப் போய்ச் சேர முயற்சிகளை மேற்கொள்ள வேண்டுமென்று உங்களையெல்லாம் கேட்டுக்கொண்டு – ஏற்கெனவே ஒரு இலட்சம் ரூபாய் கொடுக்கப்பட்டவர்களுக்கு மேலும் ஒரு இலட்சம் ரூபாய் வழங்கப்படும் என்று அறிவிக்கின்றேன்.

இன்றையதினம் மாலையிலே டெல்லியிலிருந்து வெள்ளப் பாதிப்புகளையும், நிவாரணப் பணிகளையும் பார்வையிட மத்தியக் குழு



வருகிறது. அந்தக் குழு வருகிற நேரத்தில் அவர்கள் பார்ப்பதற்காக மாத்திரமல்ல, பாதிக்கப்பட்ட மக்கள் கண்டு, ஆறுதல் அடைவதற்காக நம்முடைய ஒவ்வொரு மாவட்டத்திலும் – அதிலும் குறிப்பாக பாதிக்கப்பட்ட மாவட்டங்களில், மாவட்ட ஆட்சித் தலைவர்கள் முன்னின்றும், எல்லா அதிகாரிகளையும் வயல்களில் – எந்தெந்த இடங்கள் பாதிக்கப்பட்டிருக்கிறதோ அந்த இடங்களில் – ஆற்றுப் பகுதிகளில், வாய்க்கால் பகுதிகளில், சாலையோரங்களில் – அங்கெல்லாம் நின்று பணியாற்ற வேண்டும். ஒருமுறை நம்முடைய மதுராந்தகம் ஏரி தூர்வாரும் பணி நடைபெற்றுக் கொண்டிருந்தபோது, அப்போது பிரதமராக இருந்த இந்திரா காந்தி அம்மையார் அவர்களை அழைத்து வந்து பார்வையிடச் செய்தபோது, அவர்கள் பிரமித்துப் போய்விட்டார்கள். அந்த ஏரி முழுவதும் – ஏதோ பூச்சிகள் பறப்பதைப் போல – பக்கத்திலே உள்ள வேடந்தாங்கலில் உள்ள பறவைகள் பறப்பதைப்போல அத்தனை மக்கள் அங்கே வேலை செய்து கொண்டிருந்த காட்சியைப் பார்த்து நாம் கேட்ட பணத்தை உடனடியாகக் கொடுத்தார்கள், இவ்வளவு பேர் வேலை செய்கிறார்களே என்று. அந்த அளவிற்கு இதை டெல்லியிலே உள்ளவர்களை நம்ப வைப்பதற்காக அல்ல, நம்முடைய மக்களை ஆற்றுப்படுத்துவதற்காக, அமைதிப்படுத்துவதற்காக, அவர்களுடைய கண்ணீரைத் துடைப்பதற்கு, கவலைகளை மறப்பதற்கு – பரவாயில்லை, நம்முடைய அரசும், அதிகாரிகளும் நமக்காக இந்த அளவிற்குக் கஷ்டப்படுகிறார்கள் – என்கின்ற அந்த உணர்வை அவர்களுடைய உள்ளத்திலே பதியவைக்க நம்முடைய அதிகாரிகள் பாடுபடவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

நாம் நம்முடைய கடமைகளைச் செய்கின்ற நேரத்தில் இயற்கையின் இதுபோன்ற தொல்லைகள் அடிக்கடி ஏற்படுகின்றன. கடந்த மாதம் வயல்வெளிகளைப் பார்த்தபோது பயிர் பச்சைகள் எல்லாம் செழித்துக் குலுங்கி நாம் ஒருவரையொருவர் பார்த்து மகிழ்ச்சியடைகின்ற அளவிற்கு இருந்ததும் – திடீரென்று ஏற்பட்ட இயற்கை சூழலின் மாற்றத்தால் இப்படி ஒரு நிலை ஏற்பட்டதும் – எதிர்பார்க்கவில்லை – இருந்தாலும் எதிர்பாராதது நடந்தாலுங்கூட, அவைகளை எதிர்கொள்கின்ற திறன் நம்முடைய அரசுக்கு உண்டு. அரசு என்றால் அமைச்சர்கள் மாத்திரமல்ல, உங்களைப் போன்ற அதிகாரிகளையும் கொண்டதுதான் அரசு. எனவே அப்படிப்பட்ட இந்த அரசுக்கு மேலும் மேலும் நல்ல பெயரும், திறமையான அரசு, மக்களிடம் அன்பும் அரவணைப்பும் உள்ள அரசு, ஏழைகளுக்காக இரக்கம் காட்டுகின்ற அரசு என்ற நிலைப்பாட்டை உறுதிப்படுத்துகின்ற ஒரு பொறுப்பினை நீங்கள் ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று கூறி இந்த மாநாட்டிலே கலந்து கொண்டு அரிய பல கருத்துக்களையெல்லாம் எடுத்துச் சொன்ன உங்களுக்கு நன்றியைத் தெரிவித்து இந்த அளவில் நான் என் உரையை நிறைவு செய்கிறேன். ❖



# 15 கிராம ஊராட்சிகளுக்கு உத்தமர் காந்தி ஊராட்சி விருதுகள்

## மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் வழங்கினார்



தமிழகத்திலுள்ள கிராம ஊராட்சிகள் அனைத்தும் அடிப்படை வசதிகளை விரைந்து பெறவேண்டும் என்னும் விழைவோடு, அவற்றின் செயல்பாடுகளில் போட்டியுணர்வை ஏற்படுத்தி, திட்டப் பணிகளை விரைவுபடுத்திடும் நோக்கத்துடனும், ஊராட்சிகள் மேலும் சிறப்பாகச் செயல்பட ஊக்கமளித்திட வேண்டும் என்பதற்காகவும், கிராம ஊராட்சிகளின் சிறப்பான செயல்பாடுகளின் அடிப்படையில், அவை மேற்கொண்டுள்ள புதுமையான முயற்சிகளைப் பாராட்டி சிறப்பிக்கும் வகையில், "ஆண்டுதோறும் 15 கிராம ஊராட்சிகளுக்கு தலா 5 இலட்சம் ரூபாய் பரிசுத் தொகையுடன் கேடயமும், அந்த ஊராட்சிகளின் தலைவர்களுக்கு அவர்களின் செயல்திறன்களைப் பாராட்டி பதக்கம் மற்றும் சான்றிதழும் வழங்கப்படும்" என்று 11.8.2006 அன்று சட்டப் பேரவையில் மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை அமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் அவர்கள் அறிவித்தார். அந்த அறிவிப்பினைத் தொடர்ந்து வழங்கப்படும் விருதுக்கு "உத்தமர் காந்தி ஊராட்சி விருது" என மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் பெயர் சூட்டினார்.

மாநில அளவில் முன்மாதிரியாக அரசின் திட்டங்களைச் சிறப்பான முறையில் செயல்படுத்திச் சாதனைகள் நிகழ்த்தியுள்ள 84 கிராம ஊராட்சிகள்

குறித்து மாவட்ட ஆட்சியர்கள் மூலம் பரிந்துரைகள் பெறப்பட்டன. அவற்றிலிருந்து 43 கிராம ஊராட்சிகளை 4 பேர் கொண்ட குழு தேர்வு செய்தது. இந்த 43 கிராம ஊராட்சிகளிலும், கூடுதல் இயக்குநர் நிலையிலான 3 குழுவினர் நேரடியாக ஆய்வு செய்து, அதற்கான அறிக்கையை அரசுக்கு அனுப்பி வைத்தனர். அந்த அறிக்கையின் அடிப்படையில், 2007–2008ஆம் ஆண்டிற்கான உத்தமர் காந்தி ஊராட்சி விருது பெறுவதற்குத் தகுதியுடைய 15 கிராம ஊராட்சிகள் தேர்வு செய்யப்பட்டன.

அதன்படி, விருதுக்குத் தேர்வு செய்யப்பட்டுள்ள,

1. திருவாரூர், பள்ளிவர்த்தி ஊராட்சிமன்றத் தலைவர் திரு. ஜெ. ஜெயராமன்.
2. இராமநாதபுரம், திருவரங்கம் ஊராட்சி மன்றத் தலைவர் திரு. ச.இ. மரியராஜ்.
3. நாமக்கல், முதலைப்பட்டி ஊராட்சி மன்றத் தலைவர் திரு. கா. பழனிவேல்.
4. ஈரோடு, மைலம்பாடி ஊராட்சி மன்றத் தலைவர் திரு. மை.அ. திருஞானசம்பந்தம்.
5. சிவகங்கை, காட்டேந்தல் சுக்கானூரணி ஊராட்சி மன்றத் தலைவர் திருமதி.சூ. அருள்மேரி.
6. திருநெல்வேலி, கீழவெள்ளகால் ஊராட்சிமன்றத் தலைவர், திருமதி. மு. இராமாத்தாள்.
7. விருதுநகர், பெத்துரெட்டியப்பட்டி ஊராட்சி மன்றத் தலைவர் திரு. சா. க. கு. இராஜேந்திரன்.
8. இராமநாதபுரம், தாமரைக்குளம் ஊராட்சி மன்றத் தலைவர் திருமதி. சி.கிருஷ்ணவேணி.
9. நாகப்பட்டினம், விழுந்தமாவடி ஊராட்சி மன்றத் தலைவர் திருமதி. ம. இராதாமணி.
10. திருநெல்வேலி, இடையன்குடி ஊராட்சி மன்றத் தலைவர் திரு. ஜெ. சேகர்.
11. தஞ்சாவூர், சீனிவாசநல்லூர் ஊராட்சி மன்றத் தலைவர் திருமதி. ரா. யசோதா.
12. கரூர், ஈசநத்தம் ஊராட்சி மன்றத் தலைவர் திரு. நா. இராமசாமி.
13. நீலகிரி, தும்மனட்டி ஊராட்சி மன்றத் தலைவர் திரு. போ. விஸ்வநாதன்.
14. தேனி, இராமசாமி நாயக்கன்பட்டி ஊராட்சி மன்றத் தலைவர் திருமதி. மா.மணிமேகலை.
15. திண்டுக்கல், ம.மு. கோவிலூர் ஊராட்சி மன்றத் தலைவர் திரு. மு.அ. சாகுல் ஹமீது.

ஆகிய 15 கிராம ஊராட்சிகளின் தலைவர்களுக்கும் 19.12.2008 அன்று மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் கலைஞர் "உத்தமர் காந்தி ஊராட்சி விருது" நல்கி, தலா 5 இலட்சம் ரூபாய்க்கான காசோலை, கேடயம், பதக்கம், சான்றிதழ் ஆகியவைகளை வழங்கி வாழ்த்துகள் கூறினார்.

விருது பெற்ற 15 ஊராட்சிகளுள் முதல் 5 ஊராட்சிகளில் கடந்த முறை ஊராட்சிமன்றத் தலைவர்களாக இருந்தவர்களே தற்போதும் தலைவர்களாக உள்ளனர்; எஞ்சிய 10 கிராம ஊராட்சிகளில் ஏற்கெனவே தலைவர்களாக இருந்த,

1. திருநெல்வேலி, கீழவெள்ளகால் ஊராட்சி, திரு. தி. பூமாரியப்பன்.
2. இராமநாதபுரம், தாமரைக்குளம் ஊராட்சி, திரு.சே. சிவலிங்கம்.
3. நாகப்பட்டினம், விழுந்தமாவடி ஊராட்சி, திருமதி. கி. முத்துலெட்சுமி.
4. திருநெல்வேலி, இடையன்குடி ஊராட்சி, திருமதி. பா.ஜெயாகனி
5. நீலகிரி, தும்மனட்டி ஊராட்சி, திருமதி. பெ. ருக்குமணி.
6. தேனி, இராமசாமிநாயக்கன்பட்டி ஊராட்சி, திரு. பா. இராசாராம்.
7. திண்டுக்கல், ம.மு. கோவிலூர் ஊராட்சி, திரு. சா. ஹ. நைனா முகமது

ஆகிய முன்னாள் தலைவர்களையும் மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் இன்றைய நிகழ்ச்சியில் சிறப்பித்தார்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் கலைஞர் அவர்களால் "உத்தமர் காந்தி ஊராட்சி விருது" வழங்கிப் பாராட்டி சிறப்பிக்கப்பட்ட இந்த 15 கிராம ஊராட்சி மன்றங்களின் முன்னாள், இந்நாள் தலைவர்கள் 22 பேருக்கும் மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் தனது வாழ்த்துகளையும், பாராட்டுகளையும் தெரிவித்தார். இந்நிகழ்ச்சியில் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறை முதன்மைச் செயலர் திரு. க. அசோக் வர்தன் ஷெட்டி, இ.ஆ.ப., ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை ஆணையர் திரு. ககன்தீப் சிங் பேடி, இ.ஆ.ப., ஆகியோர் உடனிருந்தனர். விருது பெற்ற கிராம ஊராட்சித் தலைவர்களுக்கு அமைச்சர் மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை அமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் அவர்களால் தேநீர் விருந்து அளிக்கப்பட்டது.

★ ★ ★





மாண்புமிகு தமிழக முதலமைச்சர் **கலைஞர் மு. கருணாநிதி** அவர்கள், குழந்தைகளுக்கு போலியோ சொட்டு மருந்து அளித்து போலியோ நோய் தடுப்புத் திட்டத்தின் கீழ், தமிழகத்தில் போலியோ சொட்டு மருந்து சிறப்பு முகாமினை, தொடங்கி வைத்தார். இந்நிகழ்வின் போது, மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் திரு. எம்.ஆர்.கே. பன்னீர் செல்வம், முதல்வரின் துணைவியார் திருமதி. தயாளுஅம்மாள், சென்னை மாநகர மேயர் திரு. மா. சுப்பிரமணியன், உள்ளிட்டோர் உடனிருந்தனர். (21.12.2008)



மாண்புமிகு தமிழக முதலமைச்சர் **கலைஞர் மு. கருணாநிதி** அவர்கள் 7.12.2008 அன்று கொடிநாள் நிதி வசூலை நிதி அளித்து துவக்கி வைத்தார். உடன் மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை அமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின், செய்தி மக்கள் தொடர்புத் துறை இயக்குநர் திரு. ஆ.சி.மோகன்தாஸ், இ.ஆ.ப., சென்னை மாவட்ட ஆட்சியர் திருமதி. மைதிலி கே. ராஜேந்திரன் இ.ஆ.ப., ஆகியோர் உள்ளனர்.

# வலவன் ஏவா வான ஊர்தி

**– கலைஞர்**

**வி**ஞ்ஞானம் வளர்ந்ததாலே விண்ணூர்ந்து; இற்றைநாளில்
வியத்தகு புதுமைகளை விளைக்கின்றார் அறிவுடையார்! - முற்றிலும்

அஞ்ஞானம் நிறைந்த காலமல்ல பழங்காலம்;
அன்றைக்கும் வானத்துக் கோள்களை ஆராய்ந்து

காலமாறுதலைக் கணக்கிட்டு, கோள்களின் சுழற்சிக்
கோலமதைத் தீட்டிக்காட்டி; குமிழ் மின்னல் சிரிப்புக்

கொட்டுகின்ற விண்மீன்கள்; தாங்களிருக்குமிடம்
விட்டுப் பெயர்கின்ற நிலையறிந்து நாழிபார்த்துக் கூறி;

கதிரவனைச் சந்திரனைப் பூமியின் நிழல் சூழ்ந்து – நம்
கண்ணுக்கு ஒருநாள் மறைக்கின்ற ‘கிரகணம்’ வருகின்ற





நாளைக்கூட நமது முன்னோர் வானநூல் இயற்றித்தந்து
வேளைதவறாமல் விரித்துரைத்தார் எனல் வேடிக்கையல்ல!

ஒளிபெற்று வாழ்ந்த நாமோ; திடுமென இருட்டில் வீழ்ந்தோம்!
வெளிநாட்டு விஞ்ஞான வளமோ; விரிந்தது வான் முகட்டில்!

தேய்ந்து வளரும் திங்களை நாம் தெய்வமென்றோம்
தினம் வந்து கடமையாற்றும் சூரியனை தேவனென்றோம்

ஓய்ந்திருக்கும் வேளையிலே உப்பில்லாக் கற்பனையில்
சாய்ந்து சயனித்துக் கிடந்தோமன்றி – முன்னோர்

ஆய்ந்தறிந்து வகுத்திட்ட வானநூற் புதுமைகளை; வறட்சியினால்
காய்ந்த பயிர் ஆக்கிவிட்டு மடமைக் கதைகளிலே மாய்ந்துபோனோம்!

இலக்கியத் தமிழ் இன்பம் பருகுதற்கு முற்பட்டு
இனிய சங்கப் பாடல் ஒன்றில் கண்புதைத்தபோது;

இதயத்தைப் பூரிப்பால் நனைக்கின்ற ஒரு செய்தி! அதனை
எடுத்தெழுதி உம்மையெலாம், “நான் பெற்ற இன்பம்;

பெறுக நீவிர்!” என உவகையுடன் அழைக்கின்றேன்.
பெருமை மிகு தமிழகத்தின் பழஞ்சிறப்பு காண வாரீர்!

முடியுடைச் சோழன் நலங்கிள்ளியின் கீர்த்திபாடும்
முதுகண்ணன் சாத்தனார் எனும் உறையூர்ப்புலவர்;

வளர்தலும், தேய்தலும், பிறத்தலும், இறத்தலும்
வாடிக்கையாய்க் கொண்டதிவ் வுலகமென்றும்,

வருந்தி வந்தோர்க்கு வழங்கிடும் வள்ளலாய்
வாழ்வதே மண்ணாளும் அரசுக்கு மாண்பென்றும்,

போற்றுதற்கிடையே பொன்மொழி புகன்று
ஊற்றுப் பெருக்காய் உதவிடுக வறியோர்க்கென்றார்!

**மற்றும்**
வழிவழியாக இவ்வையகம் தனிலே
வாழ்ந்து மறைந்தோர்; எண்ணிலடங்கார்!



சேற்றில் முளைத்திடும் செந்தாமரையின்
செழிப்புறு இதழ்கள் பலவே ஆயினும்

வேற்றுமை காண இயலா அளவில்
விளங்கும் எழிலைக் காணுதல் எளிது!

சாற்றுவேன் ஒன்று, சரியெனத் தோன்றியதை; இந்த
செகத்தினில் உதித்தோர் பலரில் சிலரே – உண்மைப்

புலவர் பாடிடும் புகழுக்குரியோர் – மற்றும்
பலரோ தாமரையிலை எனப் பொலிவிழந்து போயினர்!

இதழின் அழகுக்கும் இலையின் பயனிலாத் தன்மைக்கும்
இப்படியோர் உவமையைப் பொருத்திய புலவர்;

பாவலர் ஏத்திடும் பாராட்டுக்குரிய மன்னர் – இந்தப்
பாரில் எய்திடும் புகழின் உயர்வைக் காட்டுவார்; கவிதையில்!

**அதாவது,**
வலவன் எனும் ஓட்டுபவன் இல்லாமலே
வானில் பறந்திடும் ஊர்தியில் செல்லும்

வாய்ப்பினை எய்திடும் வகை கிடைத்தோர்க்கு;
வாழ்வின் உயர்வு – அந்த வானின் உயர்வாம்!

வைரமென ஒளிபொழியும் இப்புறப்பாட்டில்;
‘வலவன் ஏவா வான ஊர்தி’ என வருதலாலே

வலவன் ஏவுகின்ற வான ஊர்தியும் அக்காலம்
வழக்கத்தில் இருந்ததெனக் கொள்ளலாம் அன்றோ ?

ஆதியிலே அறிவியலில் அக்கறை காட்டியதால்; வான
வீதியிலே வலவரென்போர் ஊர்தியினைச் செலுத்தியிருக்கவும்

பாதியிலே படையெடுத்த பத்தாம்பசலி எண்ணத்தினால்
பகுத்தறிவுக்கு வேலையின்றிப் பாழ்பட்டுப் போனதம்மா இந்த

பாவாணர் முதுகண்ணன் சாத்தனார்; சோழனைப்
பாராட்டி எடுத்து வைத்த அறிவுரையில் – என்



பார்வையினை இந்தச் செய்தி ஈர்த்ததினால் – நீவிரும்
படித்தாய்ந்து உரைத்திடுக எனப் படைத்திட்டேன்;
பிழையெனில் திருத்திடுவீர்!
ஏற்றுக்கொள்வேன்!

* * * * *

**“சேற்றுவளர் தாமரை பயந்த, ஒண் கேழ்,**
**நூற்றிதழ் அலரின் நிறைகண் டன்ன,**
**வேற்றுமை இல்லா விழுத்திணைப் பிறந்து,**
**வீற்றிருந் தோரை எண்ணுங் காலை,**
**உரையும் பாட்டும் உடையோர் சிலரே;**
**மரைஇலை போல மாய்ந்திசினோர் பலரே;**
**புலவர் பாடும் புகழுடையோர் விசும்பின்**
**வலவன் ஏவா வான ஊர்தி**
**எய்துப, என்ப, தம் செய்வினை முடித்து எனக்**
**கேட்பல்; எந்தை! சேட்சென்னி! நலங்கிள்ளி!**
**தேய்தல் உண்மையும், பெருகல் உண்மையும்,**
**மாய்தல் உண்மையும், பிறத்தல் உண்மையும்,**
**அறியா தோரையும், அறியக் காட்டித்,**
**திங்கட் புத்தேள் திரிதரும் உலகத்து**
**வல்லார் ஆயினும், வல்லுநர் ஆயினும்,**
**வருந்தி வந்தோர் மருங்கு நோக்கி,**
**அருள் வல்லை ஆகுமதி; அருளிலர்**
**கொடா அமை வல்லர் ஆகுக;**
**கெடாஅத் துப்பின்நின் பகைஎதிர்ந் தோரே.”**

புறநானூறு: பாடல்: 27
பாடியவர்: உறையூர் முதுகண்ணன் சாத்தனார்)

**பொருள் விளக்கம் :**

பயந்த = பூத்த. ஒண்கேழ் = ஒளிபொருந்திய நிறம்.
விழுத்திணை = உயர்குடி. மரை இலை = தாமரையிலை.
விசும்பு = ஆகாயம். வலவன் = செலுத்துபவன், ஓட்டுபவன்.
பாகன், திங்கள் புத்தேள் திரிதரும் உலகம் = திங்களெனும்
புதுமை இயங்குகின்ற உலகம்.

– *“கலைஞரின் சங்கத்தமிழ்*
*நூலிலிருந்து*



# தொலைதூர கிராமப்புற மக்களுக்குத் தரமான மருத்துவ வசதிகள் அளித்திட மேலும் 100 நடமாடும் மருத்துவக் குழுக்கள்

மாண்புமிகு

தமிழ்நாடு முதலமைச்சர்

**கலைஞர்** அவர்கள்

தொடங்கி வைத்தார்

---

தமிழகத்தின் பல்வேறு பகுதிகளிலும் உள்ள மலைப்பகுதி கிராமப்புற மக்களுக்கும், போதுமான வாகன வசதி இல்லாத தொலைதூர கிராமங்களில் வாழும் மக்களுக்கும் அவர்கள் வாழும் இடங்களிலேயே தரமான மருத்துவ உதவிகளை அளித்திட ஒவ்வொரு வட்டாரத்திலும் ஒரு மருத்துவர், ஒரு செவிலியர், ஒரு துப்புரவுப் பணியாளர் மற்றும் ஓர் ஓட்டுநர் ஆகியோர் அடங்கிய ஒரு 'நடமாடும் மருத்துவக் குழு' வீதம் மாநிலத்திலுள்ள 385 ஊராட்சி ஒன்றியங்களிலும் 385 நடமாடும் மருத்துவக் குழுக்களை அமைத்திட இந்த அரசு முடிவு செய்தது.

ஒவ்வொரு நடமாடும் மருத்துவக் குழுவும், வட்டார ஆரம்ப சுகாதார நிலையத்தின் பயனாளிகள் நல்வாழ்வு சங்கத்துடன் இணைக்கப்பட்டு, மாவட்ட நல வாழ்வு சங்கத்தின் நிருவாகச் செயலாளர், துணை இயக்குநர் சுகாதாரப் பணிகள் ஆகியோரின் நேரடிக் கட்டுப்பாட்டிலும், கண்காணிப்பிலும் இயங்கும்.

இக்குழு தனது வட்டாரத்தில் எந்த ஊருக்கு எந்த நாளில் சென்று மருத்துவ சிகிச்சைகளை அளிக்கும் என்பதை முன்னரே திட்டமிட்டு, அதற்கேற்றவாறு அனைத்து சாதனங்களுடனும் சென்று அடிப்படை மருத்துவ உதவிகளை மக்களுக்கு அளிக்கும். இந்த நடமாடும் மருத்துவக் குழுக்களின் மூலம் கிராமங்களில் வாழும் மக்களுக்கு நோய்களைக் கண்டறிந்து, அவர்களின் இருப்பிடத்திலேயே மருத்துவச் சிகிச்சைகளை அளித்தல், நோய் வருமுன் காத்தல், தடுப்பூசி போடுதல், கர்ப்பிணிப் பெண்கள் பராமரிப்பு, பிரசவித்த தாய்மார்கள் மற்றும் இளம்சிசு பராமரிப்பு போன்ற பணிகளைத் திட்டமிட்டு நிறைவேற்றிட வழிவகை செய்யப்பட்டுள்ளது.

மகத்தான இந்தத் திட்டத்தின் முதற்கட்டமாக, 2006–2007ஆம் ஆண்டில் 146 ஊராட்சி ஒன்றியங்களில் நடமாடும் மருத்துவக் குழுக்கள் ஏற்கெனவே தொடங்கப்பட்டு, மக்களுக்கு மருத்துவ உதவிகள் அளிக்கப்படுகின்றன. இரண்டாம் கட்டமாக, தற்போது மேலும் 100 ஊராட்சி ஒன்றியங்களில் 6 கோடி ரூபாய்



செலவில் 100 ஆம்புலன்ஸ் வாகனங்களில் அடிப்படை மருத்துவ சிகிச்சைக்குத் தேவையான அனைத்துச் சாதனங்களும் பொருத்தப்பட்டு, மருத்துவப் பணியாளர்களுடன் கூடிய 100 நடமாடும் மருத்துவக் குழுக்களின் பணிகளை, வாகனங்கள் அணிவகுத்துச் செல்ல மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் கலைஞர் மு. கருணாநிதி அவர்கள் 24.12.2008 அன்று கொடியசைத்துத் தொடங்கி வைத்தார்.

அதனைத் தொடர்ந்து மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்துறை சார்பில் இலங்கைத் தமிழர் நிவாரண நிதிக்காக 2 கோடியே 4 இலட்சத்து 55 ஆயிரத்து 775 ரூபாய்க்கான காசோலையை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் கலைஞர் அவர்களிடம் மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் திரு எம். ஆர். கே. பன்னீர்செல்வம் அவர்கள் வழங்கினார்.

எஞ்சிய 139 ஒன்றியங்களில் நடமாடும் மருத்துவக் குழுக்கள் நடப்பு நிதி ஆண்டிலேயே அமைக்கப்பட்டு, 2009ஆம் ஆண்டு மார்ச்சு மாதத்திற்குள் தமிழகத்திலுள்ள 385 வட்டாரங்களிலும் நடமாடும் மருத்துவக் குழுக்கள் செயல்படத் தொடங்கும். இத்திட்டத்தின் மூலம் அனைத்துக் கிராமப்புறப் பகுதிகளும் அடிப்படை வசதிகளை உடனுக்குடன் பெறும் வாய்ப்பு உருவாக்கப்படுகிறது என்பது குறிப்பிடத்தக்கது.

இந்நிகழ்வின்போது, மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், அவர்கள் மக்கள் நல்வாழ்வுத்துறை முதன்மைச் செயலாளர் திரு. வி.கு. சுப்புராஜ், இ.ஆ.ப., மாநில ஊரக நலவாழ்வு இயக்ககத்தின் இயக்குநர் திருமதி. கிரிஜாவைத்தியநாதன், இ.ஆ.ப., மாநில பொது சுகாதார இயக்குநர் டாக்டர் எஸ். இளங்கோவன் மற்றும் உயர் அதிகாரிகள் கலந்துகொண்டனர். ★

## அறிஞர் அண்ணா பொன்மொழிகள்

## அந்த உணர்ச்சிதான்

நமது நாடு தொழில் துறையில், பிற நாடுகளுடன் ஒப்பிடுகையில் பின்னணியில் நிற்கிறது எனினும். வளம் குறைந்த நாடா இது? இல்லை! பெட்ரோலியம் இல்லாத நாடுகள் உண்டு; இரும்பு இல்லாத நாடுகள் உண்டு; நிலக்கரி இல்லாத நாடுகள் உண்டு; மற்ற கனிவளங்கள் இல்லாத நாடுகள் உண்டு; ஆனால் நம் நாட்டிலோ எல்லாவகைக் கனி வளங்களும் உண்டு தோண்ட வேண்டிய கனிச்சுரங்கங்கள்; கட்டவேண்டிய கப்பல் துறைகள் இன்னும் இருக்கின்றன; ஆகவே, ஏராளமான வளத்தை நாம் பெற்றிருக்கிறோம்.



"நாம் முன்னேறியிருக்கிறோம் என்றாலும்– நமது வளத்திற் கேற்ப முன்னேறவில்லை! நமது தேவைக்கேற்பவும் முன்னேறவில்லை! ஆகவே, எக்கட்சியைச் சேர்ந்தவராக இருந்தாலும், எந்த அரசியல் கொள்கையை உடையவராக இருந்தாலும் நமது திறமையை உழைப்பை ஒன்றுபடுத்தி ஆக்கப்பணியில் செலுத்தினால் நாம் நிச்சயம் வெற்றி பெறுவோம். இரண்டாம் உலகப் போரில் அழிந்த ஜப்பான் நாட்டினர் பெரும் சேதத்திற்கு ஆளானபோதும், பத்துப் பதினைந்தே ஆண்டுகளில் கடுமையான உழைப்பினால் பழைய நிலையை அடைந்தார்கள். அதுமட்டுமல்ல நம்மைப் போன்றவர்களுக்கும் உதவ முன்வருகிறார்கள். அந்த உணர்ச்சிதான். எழுச்சிதான் நமக்குத் தேவை".

# தமிழகத்தில் அமெரிக்காவை சேர்ந்த கேட்டர் பில்லர் இந்தியா நிறுவனம் ரூ.800 கோடியில் விரிவாக்கத் திட்டங்கள்

## மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் முன்னிலையில் புரிந்துணர்வு ஒப்பந்தம்



ஏறத்தாழ 600 பேருக்கு நேரடி வேலை வாய்ப்பும், 1,900 பேருக்கு மறைமுக வேலை வாய்ப்பும் வழங்கக் கூடிய இப்புதிய விரிவாக்கத் திட்டத்தைச் செயல்படுத்துவதற்கான புரிந்துணர்வு ஒப்பந்தம் மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் முன்னிலையில் 18.12.2008 அன்று நடைபெற்றது.

அமெரிக்காவைச் சேர்ந்த கேட்டர்பில்லர் நிறுவனம் கட்டுமானம் மற்றும் சுரங்க இயந்திரங்கள் தயாரிப்பில் உலக அளவில் சிறந்து விளங்கும் ஒரு மிகப் பெரிய நிறுவனமாகும். இதுவரை 50க்கும் மேற்பட்ட நாடுகளில் 100க்கும் அதிகமான தொழிற்சாலைகளைக் கொண்டுள்ள இந்நிறுவனம் 1 இலட்சத்திற்கும் மேற்பட்ட தொழிலாளர்களுக்கு வேலைவாய்ப்புகளை வழங்கியுள்ளது.

இந்தியாவில், பெருமளவில் முதலீடுகள் செய்துள்ள கேடர்பில்லர் நிறுவனத்தின் கட்டுமான இயந்திரங்கள், டீசல் மின்உற்பத்தி இயந்திரங்கள் மற்றும் இஞ்சின் தயாரிப்புப் பிரிவுகள் தமிழகத்தில் திருவள்ளூரிலும், ஒசூரிலும் ஏற்கெனவே அமைந்துள்ளன. அவற்றுள் 2 ஆயிரத்து 400 பேர் நேரடியாகவும், 7 ஆயிரத்து 500 பேர் மறைமுகமாகவும் வேலைவாய்ப்புகளைப் பெற்றுள்ளனர்.

இந்நிறுவனம் தற்போது 800 கோடி ரூபாய் முதலீட்டில் கட்டுமானம் மற்றும் சுரங்கத் தொழில்களுக்குப் பயன்படும் கனரகப் பொறியியல் இயந்திரங்களைத் தயாரிப்பதற்கான விரிவாக்கத் திட்டங்களைச் செயல்படுத்திட முடிவு செய்துள்ளது.

அதன்படி, திருவள்ளூர் மற்றும் ஒசூர் ஆகிய இடங்களில் உள்ள இந்நிறுவனத்தின் தொழிற்சாலைகளை விரிவாக்குவதுடன், சென்னைக்கருகில் மற்றுமொரு புதிய இடத்திலும் ஒரு தொழில் பிரிவைத் தொடங்கிட இந்நிறுவனம் திட்டமிட்டுள்ளது.

இப்புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் தமிழக அரசின் சார்பாக தொழில்துறை முதன்மைச் செயலாளர் திரு. எம்.எஃப். பாரூக்கி, இ.ஆ.ப., கேடர்பில்லர் இந்தியா நிறுவனம் சார்பாக அந்நிறுவனத்தின் தலைவர் கெவின் ஆர்.தீனமேன் ஆகியோர் கையெழுத்திட்டனர்.

இந்நிகழ்வின்போது தலைமைச் செயலாளர் திரு. கே.எஸ்.ஸ்ரீபதி, இ.ஆ.ப., நிதித்துறை முதன்மைச் செயலாளர் திரு. கு.ஞானதேசிகன், இ.ஆ.ப., ஆகியோரும், கேடர்பில்லர் இந்தியா நிறுவனத்தின் மூத்த அலுவலர்களும் உடனிருந்தனர். ❖



# சுனாமி சீற்றத்தால் பாதிக்கப்பட்டோருக்கான மறுவாழ்வுப் பணிகள்

## மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்களின் விளக்கம்



தமிழகத்தில் ஆழிப் பேரலையின் சுனாமிப் சீற்றத்தால் பாதிக்கப்பட்டோருக்கான மறுவாழ்வுப் பணிகளைப் பற்றி மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் மு. கருணாநிதி அவர்கள் அளித்த விளக்கம் வருமாறு :–.

சுனாமிப் பேரலை ஏற்பட்ட 26.12.2004இல் இருந்து 12.5.2006 வரை கடந்த ஆட்சியில், பாதிக்கப்பட்டோருக்கென மேற்கொள்ளப்பட்ட 8 ஆயிரத்து 406 வீடுகளின் கட்டடப்பணிகள் முடிவடையாத நிலையில் இருந்ததால்; 13.5.2006 அன்று பொறுப்பேற்ற கழக ஆட்சி, சுனாமி பாதித்த பகுதிகளின் மாவட்ட ஆட்சியர் மாநாட்டைக் கூட்டி, ஆய்வு நடத்தி, அதன் விளைவாக, அவற்றைக் கட்டி முடித்ததுடன்; 30.11.2008 வரை மேலும் 29 ஆயிரத்து 567 வீடுகளைக் கட்டி பயனாளிகளுக்கு வழங்கி உள்ளது.

சுனாமி பாதித்த பகுதிகளில் வீடுகளைக் கட்டுவதற்கு நடைமுறையில் உள்ள விதிகள் தடையாக இருந்ததால், சுற்றுச்சூழல் பாதுகாப்பு மற்றும் நகரமைப்புத் திட்டங்களின் அனுமதிகளை வழங்குவதற்கேற்ப அரசின் விதிகள் தளர்த்தப்பட்டு, கட்டுமானப் பணிகள் விரைவுபடுத்தப்பட்டன.

மேலும், கடலோரத்தில் குடியிருக்கும் பழங்குடி சமுதாயத்தைச் சேர்ந்த இருளர்கள், விவசாயத் தொழிலாளர்கள், இதர சமுதாயத்தினர் ஆகியோரின் 5 ஆயிரத்து 954 வீடுகள் புதுப்பிக்கப்பட்டு கட்டி முடிக்கப்பட்டுள்ளன.

இராஜீவ் காந்தி மறுவாழ்வு தொகுப்புத் திட்டத்தின்கீழ் சுனாமி பாதித்த மாவட்டங்களில் பாலங்கள் கட்டுவதற்கும், சாலைகள் அமைப்பதற்கும் 362 கோடியே 67 இலட்ச ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டு; கடந்த இரண்டாண்டுகளில் 19 பாலங்கள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன; 1,387 கிலோமீட்டர் நீளச் சாலை மேம்பாட்டுப் பணிகள் முடிவடைந்துள்ளன.

சுனாமி பாதித்த விவசாய மற்றும் தோட்டக்கலைத் துறை சார்ந்த 8 ஆயிரத்து 800 எக்டேர் நிலங்களின் சீரமைப்புப் பணிகள் 13 கோடியே 50 இலட்சம் ரூபாய் செலவில் நிறைவடைந்துள்ளன.

கடலோர மாவட்டங்களில் சுனாமியால் பாதிக்கப்பட்ட 4 ஆயிரத்து 778 எக்டேர் நிலப்பரப்பில் கடலோரக் காடுகளும்; 2 ஆயிரத்து 162 எக்டேர் நிலப்பரப்பில் மாங்குரோவ் காடுகளும்; உலக வங்கி உதவியுடன் 29 கோடியே 99 இலட்சம் ரூபாய் செலவில் மேம்படுத்தப்பட்டுள்ளன.

> "சுனாமியால் பாதிக்கப்பட்ட பகுதிகளில், கடந்த இரண்டாண்டுகளில் கழக அரசு 220 கோடியே 3 இலட்சம் ரூபாய் செலவில் மின் இணைப்பு வழங்குதல், தெருவிளக்கு அமைத்தல், குடிநீர் வசதி ஏற்படுத்துதல், உட்புறச் சாலைகள் அமைத்தல், கழிவுநீர் வசதிகளை ஏற்படுத்துதல் ஆகிய அடிப்படை வசதிகளையும் நிறைவேற்றியுள்ளது"

சுனாமி பாதித்த 13 கடலோர மாவட்டங்களில் உள்ள 591 மீனவக் குடியிருப்புகளில், 151 கோடியே 95 இலட்சம் ரூபாய் செலவில், 42 ஆயிரம் மீனவர்களுக்கு எந்திரப் படகுகள், கட்டுமரங்கள், வள்ளங்கள், வலைகள் முதலியவை வழங்கப்பட்டுள்ளன.

110 கோடியே 36 இலட்சம் ரூபாய் செலவில் 2 ஆயிரம் மெட்ரிக் டன் எடையுள்ள வலைகள், உயிர்காக்கும் ரப்பர் ஆடைகள், பேட்டரி பொருத்திய கைவிளக்குள், குளிரூட்டும் ஐஸ்பெட்டிகள் முதலியவை வழங்கப்பட்டுள்ளன.

5 ஆயிரத்து 635 மீனவர்கள் – மீனவக் கூட்டுறவுச் சங்கங்களில் வாங்கியிருந்த 19 கோடியே 56 இலட்சம் ரூபாய் கடன் இரத்து செய்யப்பட்டுள்ளது.

61 ஆயிரத்து 995 மீனவர் சுயஉதவிக் குழுக்கள் உருவாக்கப்பட்டு; 102 கோடியே 42 இலட்சம் ரூபாய் சுழல்நிதியும், 39 கோடியே 77 இலட்சம் ரூபாய் பொருளாதார உதவியும் வழங்கப்பட்டுள்ளன.

35 ஆயிரத்து 732 ஊனமுற்றவர்களுக்கு ஒவ்வொருவருக்கும் 10 ஆயிரம் ரூபாய் வீதம் – 35 கோடியே 73 இலட்சம் ரூபாய்ச் செலவில் பொருளாதார மேம்பாட்டு உதவிகள் வழங்கப்பட்டுள்ளன.

சுனாமியில் தாய் அல்லது தந்தை இழந்த 1,713 குழந்தைகளுக்கு தலா 51 ஆயிரம் ரூபாய் வீதம், மொத்தம் 8 கோடியே 74 இலட்சம் ரூபாய் வங்கிகளில் இருப்பு வைக்கப்பட்டு, அதிலிருந்து மாதந்தோறும் கிடைக்கும் வட்டித்தொகை மூலம் அவர்களது கல்விச் செலவுகளுக்கு பயன்படுத்தப்படுகிறது.

சுனாமியால் பாதிக்கப்பட்ட குடும்பங்களைச் சேர்ந்த 1 முதல் 10ஆம் வகுப்பு வரை படிக்கும் குழந்தைகளின் பள்ளிப்படிப்பு தடைபடாத வகையில் மாதந்தோறும் 300 ரூபாய் நிதிஉதவி வழங்கும் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

❖ ❖ ❖

# நியாய விலைக்கடைகளில் பாமாயில் லிட்டருக்கு 5 ரூபாய் விலை குறைப்பு

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் **கலைஞர்** அவர்கள் உத்தரவு

**வி**லைவாசியைக் கட்டுப்படுத்த செயல்படுத்தப் படும் சிறப்புப் பொது விநியோகத் திட்டத்தின்கீழ், தமிழக அரசால் பாமாயில் லிட்டர் ரூ.35க்கு தற்போது நியாய விலைக் கடைகள் மூலமாக விற்பனை செய்யப்பட்டு வருகிறது. தற்போது நிலவி வரும் விலை நிலவரத்தைக் கருத்தில் கொண்டு 15.12.2008 முதல் நியாய விலைக் கடைகளில் விற்கப்படும் பாமாயில் விலையை லிட்டருக்கு ரூ.5 குறைத்து ரூ.30க்கு விற்பதற்கு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் ஆணையிட்டுள்ளார்.

எனவே 15.12.2008 முதல் நியாய விலைக் கடைகளில் பாமாயில் லிட்டருக்கு ரூ.30க்கு விற்பனை செய்யப்படும் என மாண்புமிகு உணவுத்துறை அமைச்சர் திரு. எ.வ. வேலு அவர்கள் தெரிவித்துள்ளார். ❖

## அண்ணா பொன்மொழிகள்

**சட்டம்** – உயிர், உடைமை, உரிமை, அமைதி ஆகியவைகளுக்கு ஊறு நேரிடாதபடி பார்த்துக் கொள்ள விழிப்புடன் இருக்கிறது!

**சட்டத்துக்கு** அடங்கி நடப்பது கேவலப்போக்கு என்றோ கோழைத்தனம் என்றோ கூறுபவர் எங்கும் இரார் – ஏனெனில், சட்டம் ஒரு சமுதாய ஏற்பாடு!



# போக்குவரத்துத் துறையில் விரைவூக்க அட்டை (ஸ்மார்ட் கார்டு) மூலம் ஓட்டுநர் உரிமம் மற்றும் வாகனப் பதிவுச் சான்றிதழ் வழங்கும் திட்டம்

## மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் தொடங்கி வைத்தார்



**த**மிழகத்தில் வாகனங்கள் அதிக எண்ணிக்கையில் நாளுக்குநாள் பெருகி வருவதைக் கருத்தில் கொண்டு அனைத்து வட்டாரப் போக்குவரத்து அலுவலகங்களையும் கணினி மூலம் இணைத்து வாகனப் பதிவுச் சான்றிதழ்களையும் (R.C. Book), ஓட்டுநர் உரிமங்களையும் வழங்கும் பணிகள் எளிமைப்படுத்திட கணினி மயமாக்கும் திட்டத்தை 1999ஆம் ஆண்டில் அன்றைய தி.மு.க. அரசு அறிமுகப்படுத்தியது.

அதன் தொடர்ச்சியாக வாகனப் பதிவுகளிலும், ஓட்டுநர் உரிமங்களிலும் மேலும் எளிய முறைகளைப் பின்பற்றும் நோக்கத்துடன் தமிழக அரசு போக்குவரத்துத் துறையில் விரைவூக்க அட்டை (ஸ்மார்ட் கார்டு) முறையை நடைமுறைப்படுத்திட திட்டமிட்டுள்ளது.

இத்திட்டத்தின்படி, இரண்டு பகுதிகளைக் கொண்டுள்ள இந்த விரைவூக்க அட்டையில் முதல் பகுதி கண்ணால் பார்த்து படித்து அறியக் கூடியது. இரண்டாவது பகுதி கணினியால் மட்டும் கண்டறியக்கூடியது.

- இந்த விரைவூக்க அட்டையைப் பயன்படுத்துவதன் மூலம் போலி ஓட்டுநர் உரிமங்கள் மற்றும் போலி வாகனப் பதிவுச் சான்றிதழ்கள் பயன்படுத்துவதை முற்றிலும் தடுக்கமுடியும்.
- விரைவூக்க அட்டையில் பதிவு செய்யப்பட்ட தகவல்களை அழிக்கமுடியாது. ஆனால் கூடுதல் தகவல்களைச் சேர்க்க முடியும்.
- மாற்றவோ, திருத்தவோ இயலாத அடையாள அட்டையை விண்ணப்பதாரர்களுக்கு வழங்க இயலும்.

* பொதுமக்களுக்கு விரைவாக சேவை அளிக்க முடியும்.
* கணினிமயமாக்கப்பட்ட அடிப்படைத் தகவல் தொகுப்பிலிருந்து தகவல்களைப் பெற இயலுவதால், தேவையான விவரங்களை மிகக் குறுகிய காலத்திலேயே சரிபார்க்க இயலும்.
* வாகன மற்றும் வாகன ஓட்டுநரின் அனைத்து குற்றங்களும் பதிவு செய்யப்படுவதால் வாகன ஓட்டுநர்கள் சோதனை அலுவலர்களிடமிருந்து உண்மையை மறைக்க இயலாது.
* விரைவூக்க அட்டையில் பதிவு செய்யப்பட்ட தகவல்கள் மின்னணு மூலம் பாதுகாப்பு அணுகு முறையுடன் பதிவு செய்யப்பட்டுள்ளதால், இத்தகவல்களை அங்கீகரிக்கப்பட்ட நபர்களைத் தவிர மற்றவர்கள் பார்க்க இயலாது.
* விரைவூக்க அட்டையில் தகவல்கள் பதிவு செய்யப்படுவதால் அதிக தகவல்களைப் பதிவு செய்ய இயலும்.
* தற்பொழுது பயன்பாட்டிலுள்ள வாகனப் பதிவுச் சான்றிதழைவிட இந்த விரைவூக்க அட்டையை எடுத்துச் செல்வது மிக எளிது.
* விரைவூக்க அட்டை முறையைச் செயல்படுத்துவதன் மூலம் பொதுமக்களுக்குச் சீரிய முறையில் சேவை செய்யவும் தகவல்களைப் பாதுகாக்கவும் இயலும்.

இத்தகைய பல்வேறு பயன்களை அளிக்கக்கூடிய இந்த விரைவூக்க அட்டையில் உள்ள தகவல்களைப் படிக்க ஏதுவாக அனைத்து அமலாக்கப் பிரிவு அதிகாரிகளுக்கும் கூடிய விரைவில் ரீடர் கருவி வழங்கப்பட உள்ளது. தற்போது அமலாக்க அதிகாரிகள் சோதனை செய்யும் அனைத்து ஆவணங்களும் சம்பந்தப்பட்ட வட்டாரப் போக்குவரத்து அலுவலகத்திற்கு அனுப்பப்பட்டு அங்கு உரிய பதிவுகள் விரைவூக்க அட்டையில் மேற்கொள்ளப்படும்.

ஓட்டுநர் உரிமம் வழங்குவதிலும், வாகனப் பதிவுச் சான்றிதழ் வழங்குவதிலும் ஒரு முக்கிய திருப்புமுனையை ஏற்படுத்தக்கூடிய இந்த விரைவூக்க அட்டை வழங்கும் முறை தென்னிந்தியாவிலேயே தமிழகத்தில்தான் முதல் முறையாக அறிமுகப்படுத்தப்படுகிறது.

இத்திட்டத்தை மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் 10.11.2008 அன்று தலைமைச் செயலகத்தில் தொடங்கி வைத்தார். இதன்பயனாக சென்னை (தெற்கு), திருவான்மியூர் வட்டாரப் போக்குவரத்து அலுவலகத்தில் 10.11.2008 அன்று முதல் புதியதாக வழங்கப்படும் அனைத்து ஓட்டுநர் உரிமங்களும், வாகனப் பதிவுச் சான்றிதழ்களும் விரைவூக்க அட்டை மூலமே வழங்கப்படுகிறது. இம்முறை படிப்படியாக தமிழகத்தில் உள்ள அனைத்து வட்டாரப் போக்குவரத்து அலுவலகங்களிலும் பின்பற்றப்பட உள்ளது.

இந்நிகழ்வின்போது, மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் திரு. கே. என். நேரு, உள்துறைச் செயலாளர் திருமதி. எஸ். மாலதி, இ.ஆ.ப., போக்குவரத்து ஆணையர் திரு. சி.பி. சிங், இ.ஆ.ப., போக்குவரத்து இணை ஆணையர்கள் திரு. நாராயணமூர்த்தி, திரு. சிவஞானம், திரு. பிராங்க்ஸ்டீபன்லூயிஸ் ஆகியோர் உடனிருந்தனர்.

❖ ❖ ❖



### பெண் கல்வி

பெண் கல்வி நாட்டில் எந்த அளவுக்கு உயருகிறதோ, அந்த அளவு நாடு மேம்பாடு அடைகிறது என்று பொருள். படித்த ஆண்கள் தவறான வழியில் செல்லும் போது படிப்பு வாசனையற்ற பெண்கள் அவர்களைச் சரியான வழிக்குத் திருப்பி விடுகிறார்கள். இந்தக் குடும்ப அறிவை எந்தப் பள்ளியிலும் பயிலாமலே அவர்கள் கற்றுக் கொண்டிருக்கிறார்கள். அவர்களுக்கு முறையான கல்வி அறிவும் கிடைத்தால் சமுதாயம் உயர்வதற்கும் சந்ததிகள் வாழ்க்கை சீர் பெறுவதற்கும் மெத்தப் பயனுடையதாக இருக்கும்.



# மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் உடனடி நடவடிக்கையால் மனநோயாளிகள் காப்பாற்றப்பட்டனர்



மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் கலைஞர் மு. கருணாநிதி அவர்களின் உடனடி நடவடிக்கையால், சென்னை கீழ்ப்பாக்கம் மனநல மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டிருந்த பெண் நோயாளிகளில் மேலும் பலர் தேங்கிய தண்ணீரைக் குடித்து உடல்நலம் பாதிக்கப்படாமல் காப்பாற்றப்பட்டனர் என 'இந்து' (The Hindu) ஆங்கில ஏட்டில் செய்தி விமர்சனக் கட்டுரை வெளிவந்துள்ளது.

1.12.2008 தேதியிட்ட 'இந்து' ஆங்கில ஏட்டில் திரு. ஆர்.கே. இராதாகிருஷ்ணன் எழுதியுள்ள செய்தி விமர்சனம் வருமாறு:–

கடந்த நவம்பர் 28ஆம் தேதியன்று இந்த மனநல மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டிருந்த மனநோயாளிகள் பலர் வயிற்றுப்போக்கு, வாந்தி காரணமாக தண்டையார்பேட்டையில் உள்ள தொற்றுநோய் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டனர். மனநல மருத்துவமனையில் மழைநீர் தேங்கியிருப்பதாலும், கூரைகள் ஒழுகுவதாலும் அங்கிருந்து மனநோயாளிகளை அகற்றவேண்டும் என்ற ஆலோசனை அன்றிரவு மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு தெரிவிக்கப்பட்டவுடனேயே அவர் நடவடிக்கை எடுத்தார்.

மனநல மருத்துவமனையில் நான்கு நோயாளிகள் அத்தகைய தண்ணீரைக் குடித்து நோயுற்று இறந்தனர். அவர்கள் வைக்கப்பட்டிருந்த நூற்றாண்டுக் கட்டடம் ஒழுகுகிறது. அவர்கள் பூட்டி வைக்கப்படும் அந்தக் கட்டடத்தில் மாலை 5 மணியிலிருந்து மறுநாள் காலை சிற்றுண்டி அளிக்கப்படும் வரை அவர்கள் அந்தத் தேங்கிக் கலங்கிய அசுத்த நீரைக் குடித்துள்ளனர்.

மருத்துவமனையில் பொதுப்பணித்துறை புதிய கட்டடம் ஒன்றைக் கட்டியிருந்தாலும், அதற்கு இன்னமும் மின் இணைப்பு தரப்படவில்லை என்று மருத்துவர்கள் தெரிவிக்கின்றனர். மழை நிற்கும் வரை அந்தக் கட்டடத்தைத் தற்காலிகமாகப் பயன்படுத்திக் கொள்ளலாம் என்று மாண்புமிகு முதலமைச்சரிடம் ஆலோசனை தெரிவிக்கப்பட்டது.

### ஒரே நாளில் பல பணிகளை மேற்கொண்ட மாண்புமிகு முதலமைச்சர்

வழக்கமாகவே ஒரு நாளில் பணியாற்றும் நேரம் மிக அதிகமாகவும், ஓய்வு நேரம் மிகக் குறைவாகவும் பழகிவிட்ட மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு 29.11.2008 அன்று மேலும் நீண்ட நாளாக அமைந்தது. அதிகாலை 4 மணிக்குப் பணியாற்றத் துவங்கிய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் மாவட்டங்களிலிருந்து அவர் இல்லத்துக்கு அதிகாலையில் வந்திருந்த 'பேக்ஸ்' செய்திகளைப் படித்தார். மழையால் மிகவும் பாதிக்கப்பட்ட மாவட்டங்களின் மாவட்ட ஆட்சியர்கள் மற்றும் நிவாரண நடவடிக்கைகளுக்கு பொறுப்பு அளிக்கப்பட்ட அமைச்சர்களிடமும் தொலைபேசியில் பேசினார். சென்னையில் மழையின் பாதிப்பை நேரடியாக அறிந்துகொள்ள மூன்று மணி நேரத்துக்கும்மேல் நகரின் பல பகுதிகளில் பயணம் மேற்கொண்டார். மும்பையில் தீவிரவாதிகள் தாக்குதலை அடுத்து பாதுகாப்பு நடவடிக்கைகள் குறித்த ஆலோசனைக் கூட்டம் உள்ளிட்ட ஒரு டஜனுக்கும் மேற்பட்ட கூட்டங்களுக்குத் தலைமை வகித்தார். உடனடி கட்சிப் பணிகளையும் கவனித்தார்.

அப்பல்லோ மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டிருந்த மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் திரு. வீரபாண்டி ஆறுமுகம் அவர்களைப் பார்த்துமருத்துவர்களிடம் அவரது உடல்நிலை மற்றும் சிகிச்சைபற்றி மாண்புமிகு

முதலமைச்சர் அவர்கள் கேட்டறிந்தார். வெள்ள நிலைமை பற்றியும், தீவிரவாதிகள் தாக்குதல் பற்றியும் . ஆலோசிக்க மாண்புமிகு மத்திய அமைச்சர்கள் திரு. டி.ஆர். பாலு, திரு. ஆ. இராசா ஆகியோரை புதுடெல்லியிலிருந்து வரவழைத்தார்.

அவர்களிடம் ஆலோசனைகளை முடித்து, மத்திய அரசுக்கு வெள்ளச்சேதம் பற்றிய அறிக்கை அனுப்ப ஏற்பாடு செய்த பிறகு, அவர் மாண்புமிகு மின்சாரத்துறை அமைச்சர் திரு. ஆர்க்காடு வீராசாமி அவர்களை வரவழைத்து, மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம் அவர்களிடம் பேசுமாறு கூறினார். முந்தைய அமைச்சரவையில் மக்கள் நல்வாழ்வுத்துறையை கவனித்த மாண்புமிகு மின்சாரத்துறை அமைச்சர் திரு. ஆர்க்காடு வீராசாமி அவர்கள் மனநல மருத்துவமனையில் அவசரமாக எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகள் குறித்து, அப்போது கடலூரில் வெள்ள நிவாரணப் பணிகளை மேற்கொண்டிருந்த மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம் அவர்களிடம் விளக்கினார்.

மறுநாள் காலை மனநல மருத்துவமனைக்கு விரைந்த மாண்புமிகு அமைச்சர் பன்னீர்செல்வம் அவர்கள் பொதுப்பணித்துறை கட்டடம் பற்றி விசாரித்தார். மின் இணைப்பு இல்லாவிட்டாலும் தற்போதுள்ள வசதிகளைவிட இந்தக் கட்டடம் பெருமளவில் நன்றாக இருப்பதாக அவர் மாண்புமிகு அமைச்சர் திரு. வீராசாமி அவர்களிடம் தெரிவித்தார். கட்டடத்தை உடனடியாக மருத்துவமனை நிருவாகத்திடம் ஒப்படைக்க வேண்டிய தேவை குறித்து மாண்புமிகு அமைச்சர் திரு. ஆர்க்காடு வீராசாமி, அவர்கள் மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் திரு. துரைமுருகன் அவர்களிடம் பேச அவரும் ஏற்றுக்கொண்டார். சில மணி நேரத்தில் அந்தக் கட்டடத்தின் சாவிகள் மருத்துவமனை நிருவாகத்திடம் ஒப்படைக்கப்பட்டு அன்றே நோயாளிகள் இடம் மாற்றப்பட்டனர்.

# மக்கள் தொகைக் கணக்கெடுப்பு

இந்திய மக்கள் தொகைக் கணக்கெடுப்பு ஆணையர் மற்றும் பதிவுத் தலைவர் (Registrar General and Commissioner. Census, Delhi) உள்துறை, மைய அரசு தமிழ்நாடு மக்கள் தொகை கணக்கு 2001 விவரங்களை மென்வட்டுப் படிவமாக (CD) வெளியிட்டுள்ளது. தமிழ்நாட்டின் 2001 ஆம் ஆண்டு நிலவரப்படியான மக்கள் தொகை விவரம்

**மாநிலத்தின் மொத்த மக்கள் தொகை – 6,24,05,679**

**ஆண் – 3,14,00,909**

**பெண் – 3,10,04,770**

(2001 நிலவரப்படி)

அதிகப்படியான மக்கள் தொகை உள்ள மாவட்டம் சென்னை 43,43,645

குறைந்தபடியான மக்கள் தொகை உள்ள மாவட்டம் பெரம்பலூர் 4,93,646.

தமிழ்நாட்டில் உள்ள மக்கள் தொகை விவரம் மாவட்டம் வாரியாக கணக்கிடப்பட்டுள்ளது. மக்கள் தொகை குறித்த புள்ளி விவரங்கள் கீழ்க்கண்ட வலைதளத்தில் கணினியில் காணலாம்.

**http:/census.tn.nic.in**

நகல் வேண்டுவோர் அதனை எந்தக் கணினி மையத்திலும் அணுகிப் பெறலாம் (by browsing) மேலும் விவரங்களை சம்மந்தப்பட்ட மாவட்ட ஆட்சித் தலைவர் (மாவட்ட முதன்மை மக்கள் தொகை கணக்கு அலுவலர்) மற்றும் மாநகர ஆணையர் (மாநகர முதன்மை மக்கள் தொகை கணக்கு அலுவலர்) அலுவலகத்தில் பெறலாம்.

❖ ❖ ❖



# மின் ஆளுமையை அமலாக்கி மக்களுக்கு மிகச் சிறப்பாகச் சேவை செய்யும் மாநிலங்களில் தமிழகம் முதல் மாநிலமாகத் திகழ மாண்புமிகு தமிழக முதலமைச்சர் கலைஞர் அவர்கள்தான் காரணம்

– **முனைவர் மு. அனந்தகிருஷ்ணன்,** முன்னாள் துணைவேந்தர், அண்ணா பல்கலைக்கழகம்

'E Governance' எனப்படும் மின் ஆளுமையில் ஒட்டு மொத்த இந்தியாவிலும் முதல் மாநிலமாகத் தமிழகம் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது. டேட்டாக்வெஸ்ட் என்ற ஐ.டி. துறை பத்திரிகையும், ஐ.டி.சி. எனப்படும் இண்டர்நேசனல் டேட்டா கார்ப்பரேஷன் என்ற அமைப்பும் சேர்ந்து ஒரு ஆய்வு நடத்தின.

இதில் மின் ஆளுமையை அமலாக்கி மக்களுக்கு மிக சிறப்பாகச் சேவை செய்யும் மாநிலங்களில் முதல் மாநிலம் என தமிழகம் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது. ஆண்டு தோறும் நடக்கும் இந்த ஆய்வில் கடந்த ஆண்டு முன்னணியில் இருந்த டெல்லியை பின்னுக்குத் தள்ளி 2008–2009ஆம் ஆண்டுக்கான விருதை நமது மாநிலம் (தமிழகம்) வென்றுள்ளது.

இதுகுறித்து அண்ணா பல்கலைக்கழக முன்னாள் துணைவேந்தர் முனைவர் மு. அனந்தகிருஷ்ணன் அவர்கள் கூறியதாவது:–

1995–1996ஆம் ஆண்டில் இந்தியாவில் தகவல் தொழில் நுட்ப புரட்சி மிக வேகமாக வளர்ந்து வந்த ஒரு கால கட்டம், அந்தக் காலத்தில் இந்தியாவில் தமிழகம், கர்நாடகா உள்பட பல்வேறு மாநிலங்களில் பல நிறுவனங்கள் ஈடுபட்டன. அதே மாதிரி அந்த நிறுவனங்களுக்கு ஆதரவு அளிப்பதில் தமிழ்நாடு மிகவும் முன்னிலையில் இருந்தது. முதன் முதலாக 1997ஆம் ஆண்டு தமிழ்நாட்டில் தகவல் தொழில் நுட்பக் கொள்கை முதன் முதலில் மத்திய அரசிடம் கூட இல்லாத கால கட்டத்தில் தமிழ்நாட்டில்தான் முதன்முதலில் கலைஞர் ஆட்சிக் காலத்தில் கொண்டுவரப்பட்டது.

அந்தத் தகவல் தொழில் நுட்பக் கொள்கை வந்த உடனே தமிழகத்தில் எந்த வேகத்தில், எந்தெந்த துறைகளில் அதனை வளர்க்கவேண்டும் என வழிவகுக்கப்பட்டது.

அதில் ஒரு முக்கியமான கொள்கை 'E' Governance's என்றால் மின் ஆளுமை என்று சொல்வார்கள் – அதாவது இந்தக் கணிப்பொறி துறையில் – தகவல் தொழில் நுட்பத்துறையில் மிக வேகமாக, புரட்சிகரமான வளர்ச்சிகள் ஏற்படும்போதும், அந்த வளர்ச்சிகள் எப்படி சாதாரண மக்களுக்கு போய்ச்சேர வேண்டும் என்பதுதான் இந்த மின் ஆளுமை – அந்த தகவல் தொழில் நுட்பத்தின் சக்தியை, அதனுடைய வல்லமைகளையெல்லாம் பொதுமக்களுக்கு கொண்டு போய்ச் சேர்ப்பதற்காக, இந்த ஆட்சி முறையில் எத்தகைய வழிமுறைகள் வகுக்கப்பட வேண்டும் என்ற கொள்கையிலேதான் நிறுவப்பட்டது.

1999–2000ஆம் ஆண்டு முதன்முதலாக ஐ.டி. டாஸ்க் போர்ஸ் என்று ஒன்று மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் தலைமையில் இருந்தது. அந்த டாஸ்க் போர்ஸில் இந்த ஆளுமை செய்வதற்காக என்னென்ன வழிகளெல்லாம் செய்யலாம் என்று முடிவு எடுக்கப்பட்டது.

அதன்மூலமாக சென்னை, மதுரை உள்ளிட்ட பெரிய நகரங்களில் மட்டுமல்லாமல் சிறிய சிறிய கிராமங்களில் கூட ஒரு சிறிய கணிப்பொறி மூலமாக எப்படி அவர்களுக்கு வேண்டிய தகவல்களைத் தரமுடியும். அவர்களுக்கு வேண்டிய சான்றிதழ்களைத் தரமுடியும். இதே மாதிரி அவர்களுக்கு வேண்டிய வசதிகளை செய்து தருவதற்காக 16 விதமான சேவைகள் மக்கள் சேவைக்காக முதலில் திட்டங்கள் தீட்டி அவை அமல்படுத்தப்பட்டது.

இவை இந்தியாவில் முதன்முதலாக தமிழகத்தில்தான் கணிப்பொறி தகவல் தொழில்நுட்பம் மக்களுக்குப் போய் முழுமையாக சேவைத் துறையாக செயல்படவேண்டும் என்ற குறிக்கோளோடு செயல்படுத்தப்பட்டது.

அதற்குப் பிறகுதான் ஆந்திரா, கர்நாடகா என்று இந்தியாவில் பிற மாநிலங்கள் சிறிது, சிறிதாக 10,15 ஆண்டுகளாக செயல்படுத்திக் கொண்டு வருகின்றன. இப்படிச் செய்யும்போது முதல் நடவடிக்கையாக என்ன செய்தார்கள் என்றால் மக்களுக்கு எந்தெந்த சேவைகளில் மிக அதிகமான அலைச்சல், மிகவும் கஷ்டப்படுகிறார்கள் என்பதை தேர்ந்தெடுத்து அந்த சேவைகளுக்கு முன்னுரிமை தரப்பட்டது. அடிப்படையாக இந்த செய்திகளெல்லாம் தமிழில் வர வேண்டும்.

குறிப்பாக கிராமங்களில் சிறிது அளவு படித்தவர்களுக்கு இந்த சேவை போய்ச் சேர வேண்டும் என்றால் இவையெல்லாம் ஆங்கிலத்தில் மட்டுமின்றி தமிழில் போய்ச் சேர வேண்டும். 1999ஆம் ஆண்டு கலைஞர் ஆட்சியில் தமிழ் இணைய மாநாடு ஒன்று நடந்தது – உலகத் தமிழ் இணைய மாநாடு. அந்த மாநாட்டில் தமிழை எப்படி கணிப் பொறியில் மிக எளிதாகப் பயன்படுத்திட என்னென்ன வழிமுறைகள் வகுக்கவேண்டும் என்று முடிவுகள் எடுக்கப்பட்டது. அதற்கு அன்றைய கலைஞர் அரசும் ஒப்புக்கொண்டு, அதற்கு அரசாணைகள் எல்லாம் வெளியிடப்பட்டது.

மின் ஆளுமை – ஐ.டி. டேட்டா பேஸில் எடுக்கப்பட்டு நமது கொள்கையில் அதனைப் புகுத்தி செயல்படுத்திட என்ன வழி முறைகள் பயன்படுத்த வேண்டும் என்று பயிற்சிகள் கொடுத்து அந்தப் பயிற்சிகளுக்குப் பிறகு தமிழில் கொண்டுவருவதற்கு என்ன செய்யவேண்டும் என்று யோசிக்கப்பட்டது.

டேட்டா பேஸ் முறையில் நிலப் பட்டா, சாதிச் சான்றிதழ், பிறப்பு, இறப்பு சான்றிதழ் இவைகளையெல்லாம் கேட்ட உடனேயே–கணிப்பொறியில் டைப் செய்து உடனே சான்றிதழ் கிடைக்கவேண்டும்.

மக்கள் இரண்டு நாள் மூன்று நாள் விண்ணப்பம் கொடுத்த உடனே சான்றிதழ்கள் கிடைக்க வேண்டும். இவை தமிழில் கொண்டு வரப்பட்டு, எல்லோருக்கும் பயிற்சி அளிக்கப்பட்டது.

இவ்வாறு முனைவர் மு.அனந்தகிருஷ்ணன் கூறினார்.

**“கலைஞர் செய்திகள்” தொலைக்காட்சியில் ‘ஈ கவர்னன்ஸ்’ என்ற தலைப்பில் கணினி வல்லுநர்கள் கலந்து கொண்ட நிகழ்ச்சியில் இருந்து... (16.12.2008)**

❖ ❖ ❖

## தமிழகத்தில் நடைமுறைப்படுத்தப்படும் செயல்வழிக் கற்றல் முறை சிறப்பாக செயல்படுகிறது

**இந்தியாவிற்கான இங்கிலாந்து நாட்டின் தூதர் திரு. ரிச்சர்ட் ஸ்டேக் பாராட்டு**

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் கலைஞர் மு. கருணாநிதி அவர்களை இந்தியாவிற்கான இங்கிலாந்து நாட்டின் தூதர் ரிச்சர்ட் ஸ்டேக் சந்தித்துப் பேசினார். முன்னதாக சென்னை மாநகராட்சிப் பள்ளியில் செயல்வழிக்கற்றல் முறை கற்பிக்கப்படும் முறையை அவர் ஆய்வு செய்தார்.

சென்னை தலைமைச் செயலகத்தில் மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்களை இந்தியாவிற்கான இங்கிலாந்து நாட்டின் தூதர் ரிச்சர்ட் ஸ்டேக் 12.12.2008 அன்று மரியாதை நிமித்தமாக சந்தித்துப் பேசினார். அப்போது சென்னையில் உள்ள இங்கிலாந்து நாட்டின் துணைவேந்தர் மைக்கானர், தலைமைச் செயலாளர் திரு. கே. எஸ். ஸ்ரீபதி, இ.ஆ.ப., உள்ளிட்ட உயரதிகாரிகள் உடனிருந்தனர்.

முன்னதாக, சென்னை அமைந்தகரையில் உள்ள மாநகராட்சிப் பள்ளியில் மாணவர்களுக்கு செயல் வழிக்கற்றல் முறையில் பாடம் கற்பிக்கும் முறையை இங்கிலாந்து நாட்டின் தூதர் தலைமையிலான குழுவினர் ஆய்வு செய்தனர். இந்தப் புதிய முறை குறித்து ஆசிரியர்களிடமும் மாணவர்களிடமும் அந்தக் குழுவினர் கேட்டறிந்தனர். பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய இங்கிலாந்து நாட்டின் தூதர் தமிழகத்தில் 5 ஆண்டுகளுக்கு மேலாக நடைமுறைப்படுத்தப்படும் இந்த செயல்வழிக்கற்றல் முறை மிகச்சிறப்பாக செயல்பட்டு வருவதாக கூறினார்.

இங்கிலாந்தில் நடைமுறையில் உள்ள செயல்வழிக் கல்வித் திட்டம் இந்தியாவிலும் வெற்றிகரமாக செயல்படுத்தப்படுவதாகவும் இங்கிலாந்து நாட்டின் தூதர் தெரிவித்தார். இந்த நிகழ்ச்சியில் வணக்கத்திற்குரிய மேயர் மா. சுப்பிரமணியம் அவர்கள் மற்றும் செயல்வழிக் கற்றல் திட்டத்தின் உயரதிகாரிகள் கலந்து கொண்டனர். ❖



## வீரபாண்டிய கட்டபொம்மன், விஜயரகுநாத சேதுபதி, மருதுபாண்டியர் வழித்தோன்றல்களுக்கு மாத ஓய்வூதியம் ரூ.1000ஆக உயர்வு

**மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் உத்தரவு**



நமது நாட்டு விடுதலைப் போரில் பங்குகொண்டு வரலாற்றில் போற்றப்படும் வீரப் பெருமக்களின் தியாகத்தைப் பாராட்டி, அவர்களுடைய வழித்தோன்றல்களுக்குச் சிறப்பு ஓய்வூதியம் மாதந்தோறும் வழங்கப்படுகிறது. அந்த வகையில், வீரபாண்டிய கட்டபொம்மன், மருது பாண்டிய சகோதரர்கள், இராமநாதபுரம் முத்துராமலிங்க விஜயரகுநாத சேதுபதி ஆகியோரின் வழித்தோன்றல்களுக்குத் தற்போது வழங்கப்பட்டு வரும் சிறப்பு ஓய்வூதியம் மாதம் 500 ரூபாய் என்பதை அவர்களுடைய கோரிக்கையை ஏற்று மாதம் 1,000 ரூபாய் என உயர்த்தி மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் 16.12.2008 அன்று ஆணையிட்டுள்ளார்.

இந்த ஆணையின்படி, வீரபாண்டிய கட்டபொம்மனின் வழித்தோன்றல்கள் 7 பேரும், மருதுபாண்டிய சகோதரர்களின் வழித்தோன்றல்கள் 132 பேரும், முத்துராமலிங்க விஜயரகுநாத சேதுபதியின் வழித்தோன்றல்கள் 80 பேரும் இனி மாதம் 1,000 ரூபாய் வீதம் சிறப்பு ஓய்வூதியம் பெறுவர்.

## தமிழ்நாடு மாநில நிலப்பயன்பாட்டு வாரியத்தின் செய்தி ஏடு வெளியீடு

புவிப்பரப்பு அறிவியலில் இந்தியா ஒரு முதன்மையான நாடாக உருவாகி வருகிறது. தகவல் தொழில் நுட்பத்தின் உதவியால் வரைபடம் உருவாக்குதல், ஆராய்ச்சி, தகவல்களை அளித்தல் ஆகியவற்றில் வளர்ச்சி ஏற்பட்டுள்ளது. எனவே, இத்தகைய தொழில்நுட்ப வளர்ச்சியைப் பயன்படுத்தி நம் நாட்டில் புவியியல் தகவல் அளிப்பதில் காணப்படும் இடைவெளிகளை நீக்க வேண்டும்.

மாநிலத் திட்டக்குழுவின்கீழ் இயங்கிவரும் தமிழ்நாடு மாநில நிலப்பயன்பாட்டு வாரியம், சிறந்த முறையில் நிலவள, நீர்வள ஆதாரங்களை மேலாண்மை செய்ய நீர் மறுசெறிவூட்டும் ஆய்வுகள் வண்டல் அகற்றும் ஆய்வுகள், நீர்நிலைகள் மீட்கும் ஆய்வுகள் போன்ற புவியியல் தகவல் அமைப்பு மற்றும் தொலையுணர்வு சார்ந்த ஆராய்ச்சிகள் மேற்கொள்வதற்கு, கல்வி மற்றும் ஆராய்ச்சி நிறுவனங்களுக்கு நிதியுதவி அளித்து வருகிறது.

தமிழ்நாடு மாநில நிலப்பயபாட்டு வாரியத்தின் தலைவரான மாநிலத் திட்டக்குழுவின் துணைத் தலைவர் பேராசிரியர் மு. நாகநாதன், அவர்கள், செய்தி ஏட்டின் முதல் பிரதியை, 19.11.2008 அன்று மாநிலத் திட்டக்குழுவின் உறுப்பினர்–செயலர் அவர்கள் முன்னிலையில் நடைபெற்ற விழாவில் வெளியிட்டார். இந்நாள் (19.11.2008) புவியியல் தகவல் அமைப்பு நாள் என்று கொண்டாடப்படுகிறது.

ESRI அமைப்பைச் சேர்ந்த திரு. கிருஷ்ணா ராவ் அவர்கள், மாநிலத் திட்டக்குழுவின் அலுவலர்கள், ஊழியர்களிடையே ‘புவியியல் தகவல் அமைப்பின் அடிப்படைக் கோட்பாடுகள்’ என்ற பொருளில் உரை நிகழ்த்தினார். ❖



# சுற்றுலாவை மேலும், மேலும் வளர்க்க வேண்டிய கடமை நமக்கெல்லாம் இருக்கின்றது.

**சென்னை தீவுத்திடலில் 35ஆம் இந்திய சுற்றுலா - அண்ணா நூற்றாண்டு தொழில் பொருட்காட்சியை துவக்கிவைத்து மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் உரை**

சென்னை தீவுத் திடலில் 24.12.2008 அன்று நடைபெற்ற 35 ஆம் இந்திய சுற்றுலா–அண்ணா நூற்றாண்டு தொழில் பொருட்காட்சியைத் தொடங்கி வைத்து விழாவில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் ஆற்றிய உரை வருமாறு :

சென்னை மாநகரத்தில் 1971 ஆம் ஆண்டு கழக அரசினால் உருவாக்கப்பட்ட சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் சார்பில் தொடர்ந்து நடைபெற்று வருகின்ற இந்தப் பொருட்காட்சி இன்றைக்கு நண்பர்கள் சுட்டிக்காட்டியவாறு, 35ஆவது பொருட்காட்சியாக தொடங்கி வைக்கப்படுகின்றது. இந்த அரியவாய்ப்பினைப் பெற்றமைக்கு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தாருக்கும், அலுவலர்களுக்கும் என்னுடைய நன்றியையும், வாழ்த்துகளையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

இதை இன்று தொடங்கி வைப்பதன் மூலம், கடந்த ஆண்டு வருமானமாகக் கிடைத்த தொகையைவிட, அதிகத் தொகை கிடைக்குமென்று அமைச்சர் தம்பி சுரேஷ் ராஜன் குறிப்பிட்டார். எவ்வளவு தொகை கிடைத்தது என்பதைவிட, எவ்வளவு பேர் இந்தப் பொருட்காட்சியைக் கண்டார்கள், களித்தார்கள், அறிய வேண்டியவற்றை அறிந்தார்கள் என்பதுதான் மிக முக்கியமான ஒன்றாகும். அதற்கேற்ப ஏறத்தாழ 40–க்கும் மேற்பட்ட அரங்குகள் இந்த மைதானத்திலே பொருட்காட்சிக்காக அமைக்கப்பட்டு, நம்முடைய மத்திய சர்க்கார், மாநில சர்க்கார் அரங்குகள் எல்லாம் இவற்றில் இடம்பெற்று, பல கருத்துக்களைப் போதிக்கக்கூடிய வகையிலே விளங்குகின்றன என்பதை எண்ணி நான் பெருமையடைகின்றேன்.

சுற்றுலா என்பது நாம் ஒரு அமைப்பாக, அதற்கென ஒரு வளர்ச்சிக் கழகத்தைத் தொடங்கி ஆண்டுதோறும் நடத்திக்கொண்டிருக்கிறோம் என்றாலும்கூட, ஒவ்வொரு மாநிலத்திலும் ஆங்காங்கு பொருத்தமான இடங்களிலே அமைத்து, கொண்டாடி வருகின்றோம் என்றாலும்கூட, பழங்காலத்திலேயே நம்முடைய பெரியவர்கள், புலவர்கள், ஆன்றோர்கள், சான்றோர்கள், இந்தச் சுற்றுலாவை அவர்கள் அறிந்தோ, அறியாமலோ, அரவணைத்து, ஆதரித்து வளர்த்திருக்கிறார்கள் என்பதற்குப் பல சான்றுகள் உண்டு.

**இராமயணம் – சிலப்பதிகாரம்**

இராமாயணத்தை எடுத்துக் கொண்டரல் கூட அதுவொரு புராணக் கதைதான். ஆனால், இராமாயணம் முழுக்க முழுக்க ஒரு சுற்றுலாக் கதை. அயோத்தியிலே தொடங்கி, தண்டகாருண்யத்திற்கு வந்து, கிஷ்கிந்தைக்குச் சென்று, இலங்கை வரையிலே வந்து போர் நடத்தி, இப்படி பல நாடுகளை, பகுதிகளை, இந்தியாவிலே இணைக்கின்ற ஒரு நிலையினை இராமாயணம் கொண்டிருக்கிறது. அதைப்போலவே சிலப்பதிகாரத்தை எடுத்துக்கொண்டால் இன்னும் சொல்லப்போனால், அதை திட்டமிட்டே, சுற்றுலா வளர்ச்சிக்காகவே இளங்கோவடிகள் எழுதினாரோ என்று எண்ணுகின்ற அளவிற்கு அமைந்த ஒரு இலக்கியம், சிலப்பதிகார இலக்கியம். காவிரிப்பூம் பட்டினத்திலே அறிமுகப்படுத்தி, அங்கே வந்து இறங்குகின்ற, அங்கிருந்து ஏற்றுமதியாகின்ற பொருள்களையெல்லாம் விளக்கி, அவைகள் எந்தெந்த நாட்டிற்குச் சென்றன, எந்தெந்த நாட்டிலிருந்து வந்து இறங்கின என்பவைகளை யெல்லாம் எடுத்துச்சொல்லி, காவிரிப்பூம்பட்டினம் எவ்வளவு பெரிய துறைமுகம் என்பதை எடுத்துக்கூறி, அங்கே வாழ்ந்த கண்ணகியும், கோவலனும், இல்வாழ்க்கையிலே எவ்வளவு இன்பமாக இருந்தார்கள் என்பதையெல்லாம் புலப்படுத்தி, அதற்குப்பிறகு அவர்களுக்கிடையிலே ஏற்பட்ட சிறு ஊடல் காரணமாக மாதவியோடு சென்ற கோவலன் வீடு திரும்புகின்ற நிலை ஏற்பட்டு, பிறகு கண்ணகியும், கோவலனும் பூம்புகாரிலேயே தங்கி, வேறுவிதமான நிலையிலே வாழ்க்கையை அமைத்து, இழந்த பணத்தை, இழந்ததாகச் சொல்லப்படுகிற பணத்தைச் சம்பாதித்திருக்கக்கூடும். அப்படிச் செய்யாமல், அவர்கள் மதுரை வரையிலே சென்றதற்குக் காரணம், அவர்களை மதுரைக்கு அனுப்புகின்ற முயற்சியிலே இளங்கோவடிகள் ஈடுபட்டார். அவர்கள் பூம்புகாரிலே இருந்தால், பாண்டிய நாட்டைப்பற்றி எடுத்துச் சொல்லமுடியாமல் போய்விடும் என்பதற்காக, அவர்களைப் பாண்டிய நாட்டிற்கு அனுப்பி, மதுரை மாநகரத்திலே கோவலன் கண்ணகியினுடைய சிலம்பை விற்பதற்குச் சென்றபோது, அவன் 'கள்வன்' என்று குற்றஞ்சாட்டப்பட்டு, தண்டிக்கப்பட்டு, உயிர்ப் பலி கொடுக்கப்பட்டு, அதிலே ஆவேசம் கொண்ட கண்ணகி, மதுரை மாநகரத்தையே சபித்து, அதற்குப் பிறகு அவள் சிலையாக நின்றாள்.



**சுற்றுலாக்கதை**

அப்படிச் சிலையாக நின்ற கண்ணகிக்கு, உண்மையிலேயே ஒரு சிலை வடிக்கவேண்டுமென்று சேரன் செங்குட்டுவன் புறப்பட்டு, அந்தச் சிலை வடிக்கக்கூட பக்கத்து ஊரிலே உள்ள கல்லை எடுத்தால், எங்கே சுற்றுலா வர்ணனை சுருங்கி விடுமோ என்ற காரணத்தால், இளங்கோவடிகள், சேரன் செங்குட்டுவனை இமயமலை வரையிலே அனுப்புகிறார். அப்போதுதான் சுற்றுலா முழுமையடைகிறது. அவன் இமய மலைக்குச் சென்று கனக விசயன் என்கின்ற ஆரிய மன்னர்களைத் தோற்கடித்து, குயிலாலுவம் என்ற இடத்திலே அவர்களை அடிமைகளாகப் பிடித்து, அவர்களுடைய தலையிலே கல்லை ஏற்றி, அந்தக் கல்லைக் கொண்டுவந்து வஞ்சிமூதூரில் கண்ணகிக்குச் சிலை வைத்தான் என்கின்ற வரையிலே அந்தக் கதை சென்று முடிகிறதென்றால், எவ்வளவு பெரிய சுற்றுலாக் கதை அது என்பதை நீங்கள் புரிந்துகொள்ளமுடியும்.

ஆகவே, இராமாயணம் என்ற இதிகாசப் புராணக் கதையானாலும் சுற்றுலாவைத்தான் விளக்குகிறது; சிலப்பதிகாரம் என்ற இலக்கிய வரலாறானாலும்

**"இராமாயணம் என்ற இதிகாசப் புராணக் கதையானாலும் சுற்றுலாவைத்தான் விளக்குகிறது; சிலப்பதிகாரம் என்ற இலக்கிய வரலாறானாலும் சுற்றுலாவிற்குத்தான் முக்கியத்துவம் தருகிறது. இப்படி இன்று நேற்றல்ல; இலக்கியக் காலத்தில், புராணக் காலத்தில், சங்க காலத்திலேகூட சுற்றுலாவிற்கு ஒரு தனி இடம் இருந்தது"**

சுற்றுலாவிற்குத்தான் முக்கியத்துவம் தருகிறது. இப்படி இன்று நேற்றல்ல; இலக்கியக் காலத்தில், புராணக் காலத்தில், சங்க காலத்திலேகூட சுற்றுலாவிற்கு ஒரு தனி இடம் இருந்தது. சங்க காலப் பாட்டு ஒன்று; சுற்றுலாவிற்குக் கணவன், மனைவி, குழந்தைகள் இவர்கள் சென்று ஒரு ஊரிலே தங்குகின்ற அந்தக் காட்சியைச் சங்ககாலப் புலவன் மிக அழகாக வர்ணிக்கிறான். அதை அவர்களுடைய சுற்றுலாப் பயணம் என்றே எடுத்துக்காட்டுகின்றான். இப்படி சங்ககாலம் தொட்டு இதுவரையிலே சுற்றுலாத் தன்மை வேறுபட்டிருக்கக் கூடும், மாறுபட்டிருக்கக் கூடும். அதனுடைய நோக்கம் அன்று முதல், இன்று வரை ஒரே மாதிரியாகத்தான் இருந்திருக்கிறது. அந்த வகையிலே சுற்றுலாவை மேலும், மேலும் வளர்க்க வேண்டிய கடமை நமக்கெல்லாம் இருக்கின்றது.

இங்கே நம்முடைய அமைச்சர் அவர்கள் எடுத்துக் காட்டினார்கள். சென்ற ஆண்டு 15 இலட்சம் பேர் இந்தச் சுற்றுலா பொருட்காட்சியைக் கண்டார்கள்; இந்த ஆண்டு 20 இலட்சம் பேர் காண்பார்கள் என்று சொன்னார்களென்றால், அப்படி ஆர்வத்தை வளர்க்கின்ற அளவிற்கு, அப்படி அவர்களுக்கு ஆவலைத் தூண்டுகின்ற அளவிற்குப் பல அதிசயங்களை அவர்கள் காண வாய்ப்பை வழங்கவேண்டும். நாம் நமது ஊரிலே இருக்கின்ற பொருட்களைக் காட்டி இதுதான் பொருட்காட்சி என்று சொன்னால் பயனில்லை. வெளியூர்களிலே, வெளி மாநிலங்களிலே, வெளிநாடுகளிலே இருக்கின்ற பொருட்களை, அதிசயங்களைப் படங்களாகத் தீட்டி, ஓவியங்களாக வரைந்து, சிலைகளாக வடித்து, சிற்பங்களாகச் சமைத்து, நம்முடைய பொருட்காட்சியிலே அவைகளையெல்லாம் வைத்து, பார்க்க வருகின்றவர்களுக்கு அதன்மூலமாகப் பாடம் பயிற்றுவிக்க வேண்டும்; அந்த நிலையையும் நீங்கள் மேற்கொள்ளவேண்டும். ஏதோ 40 கடைகள் வந்தன; 40 ஸ்டால்கள் இருந்தன; அதிலே அரசாங்கத்தினுடைய ஸ்டால் எத்தனை ? வெளி மாநில ஸ்டால் எத்தனை ? தனியாருடைய ஸ்டால் எத்தனை என்ற கணக்கைப் பார்த்தால் மாத்திரம் போதாது. வந்தவைகள் எப்படியெல்லாம் பயன்பட்டன, எப்படி மக்கள் அதைப் பார்த்து ரசித்தார்கள், சுவைத்தார்கள் என்பதற்கேற்ப அவைகள் அமைய வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கின்றேன்.

சென்னை மாநகரத்தைப் பொறுத்தவரை, இங்குள்ள அதிகாரிகளும், அலுவலாளர்களும், நிருவாகப் பொறுப்புக்கு வருகின்ற நம்முடைய வணக்கத்திற்குரிய மேயர் போன்றவர்களும் இன்னும் கொஞ்சம் முயற்சி எடுத்துப் பாடுபட்டால், வெளியூரிலேயிருந்து வருகின்றவர்களுக்குத் தனியாக ஒரு பொருட்காட்சியிலிருந்து, இவைகளையெல்லாம் பார்த்து ரசிக்க வேண்டுமென்றில்லை.

ஒரு காலத்திலே சென்னை மாநகரம் ஏறத்தாழ ஒரு கிராமத்தைப் போலவே இருந்தது. நான் ஊட்டிக்குச் சென்றபோது, உதகையிலே ஆளுநர் மாளிகையைக் காண நேரிட்டது. அங்கே மாட்டப்பட்டிருந்த படங்களையெல்லாம் காணுகின்ற வாய்ப்பு கிடைத்தது. அப்போது அந்தப் படங்களையெல்லாம் இங்கே கொண்டு வந்து, நம்முடைய ஆளுநர் மாளிகையில் அமைக்க வேண்டுமென்று எண்ணியதுண்டு; அவற்றை நிறைவேற்றியதும் உண்டு. ஏனென்றால், பழைய சென்னை எப்படியிருந்தது என்பதற்கு அந்தப் புகைப்படங்கள் எல்லாம் சான்று. பழைய சென்னையில் இன்றைக்கு ஓடுவதைப்போல பேருந்துகள் ஓடிக்கொண்டிருக்காது. பழைய சென்னையில் கைரிக்ஷாக்கள் ஓடும். இப்பொழுது புதிய சென்னையில் சைக்கிள் ரிக்ஷாக்கள் ஓடுகின்றன; ஆட்டோ ரிக்ஷாக்கள் ஓடுகின்றன; வண்ண வண்ணப் பேருந்துகள், சீருந்துகள் ஓடுகின்றன. இது புதிய சென்னை. பழைய சென்னை நம்மைவிட்டு இன்னும் அகல மறுத்துக் கொண்டிருக்கிறது; அதை நாம் மாற்றியாக வேண்டும்.

கூவத்தை அழகுபடுத்துவதற்காக எடுத்த முயற்சிகளெல்லாம் இதுவரையிலே வீணாகத்தான்





ஆகியிருக்கிறது. அந்த முயற்சியிலே வெற்றி பெறுவதற்கு என்னென்ன மாற்றுத் திட்டங்களைக் கொண்டுவர வேண்டுமோ, அவற்றைச் சிந்தித்துக் கொண்டுவந்து, கூவத்தைத் தமிழகத்தினுடைய தேம்ஸ் நதிபோல ஆக்குகின்ற அந்த முயற்சியிலே நாம் வெற்றி பெற வேண்டும். அப்பொழுதுதான் சென்னை மாநகரத்தை அழகுபடுத்துவதிலே நாம் வெற்றி பெற்றோம் என்று மார்தட்டிக் கொள்ளமுடியும்.

சென்னை மாநகரத்தை ஒரு பத்தாண்டுகளுக்கு முன் பார்த்தவர்கள் இன்றைக்குப் பார்த்தால், அதனுடைய உருவம் மாறியிருப்பதைக் காணமுடியும். ஏன், இரண்டு ஆண்டுகளுக்கு முன்னர் பார்த்தவர்கள்கூட மன்னிக்கவேண்டும்; பார்த்தவர்கள் என்று சொன்னேன்; அப்போது பார்க்கமுடியாது; எங்கு பார்த்தாலும் பெரிய பெரிய விளம்பரப் பலகைகள் (Hoardings). இவைகள் இருந்து சென்னையின் அழகைப் பார்க்கமுடியாத அளவிற்கு மறைத்துக் கொண்டிருந்தன. அவைகளையெல்லாம் அங்கிருந்து எடுக்க வேண்டுமென்பதற்காக நாம் பட்ட பாடு இருக்கிறதே, முதலமைச்சராக வரவேண்டும் என்பதற்காகப் பட்டபாட்டைவிட, அந்த "ஹோர்டிங்சை" அகற்றுவதிலே நான் வெற்றி பெறுவதற்காகப்பட்ட பாடு அவ்வளவு பாடு. இங்குள்ள சாதாரண நீதிமன்றத்திலேயிருந்து, உச்சநீதிமன்றம் வரையிலே சென்று போராடி, வாதாடி, எப்படி சேரன் செங்குட்டுவன் இமய மலை வரையிலே சென்று, கண்ணகிக்குச் சிலை கொண்டு வந்தானோ, அதைப்போல சென்னைக்கு அழகு கொண்டுவர, உச்சநீதிமன்றம் வரையிலே நாம் செல்ல நேரிட்டது. அதற்குப்பிறகு கிடைத்த வெற்றிதான், இன்றைக்கு நீங்கள் சென்னை மாநகரத்தை இவ்வளவு அழகு குலுங்கப் பார்க்க முடிகிறது.

நான் அந்த எண்ணம் கொண்டதற்கு என்ன காரணம் ? அந்த ஹோர்டிங்ஸ் எல்லாம் எடுக்கப்பட வேண்டும் என்று அந்த ஹோர்டிங்ஸ்மீது ஆத்திரமா ? அல்ல. பெங்களூரைப் பார்த்தேன்; டெல்லியைப் பார்த்தேன்; மும்பையைப் பார்த்தேன். அந்தப் பெரு நகரங்களெல்லாம் அழகுற விளங்குவதற்கு இன்னும் சொல்லப்போனால் பெங்களூர், 'கார்டன் சிட்டி' என்று சொல்லுகின்ற அளவிற்குப் புகழ் பெற்று விளங்குவதற்கு என்ன காரணம் என்பதையெல்லாம் பார்த்தபோது, 'ஏன் அதைப்போல சென்னையை ஆக்கக்கூடாது' என்று எடுத்த சபதம்தான், எத்தனையோ இன்னல்களுக்கிடையே, எவ்வளவோ பேருடைய தடைகளுக்கிடையே, நீதிமன்றத்திலே வாதாடி, போராடி, நாம் பெற்ற வெற்றிதான், இன்றைக்குச் சென்னை மாநகரத்திலே இவ்வளவு "ஹோர்டிங்சை" எடுத்தும், ஆங்காங்கு தழைத்த மரங்கள், செடி, கொடிகள், இவைகளைக் காணவுமான ஒரு அற்புதமான நிலை இன்றைக்கு ஏற்பட்டிருக்கிறது. இதை யாராவது பாராட்டுகிறார்களா என்றால், மாட்டார்கள். ஏன் ? கிலோ அரிசி ஒரு ரூபாய்க்குக் கொடுக்கிறோமே,

**"ஏழை ஆத்மாக்கள் எளிய ஆத்மாக்கள், சாதாரண, சாமானிய ஆத்மாக்கள், நம்மைப் பாராட்டுகின்ற அளவிற்கு நம்முடைய பணி தொடரவேண்டும்"**

அதையே யார் பாராட்டுகிறார்கள் ? பாராட்டமாட்டார்கள். இங்கே நம்முடைய மேயர் பேசும்போது ஆதங்கத்தோடு சொன்னாரே, அதைப்போல நாம் செய்கின்ற காரியங்களுக்குப் பாராட்டு கிடைக்காது. இதற்காகத்தான் அந்தக் காலத்திலே சொன்னார்கள் பெரியவர்கள், 'ஆத்ம திருப்தி' என்று. யார் பாராட்டினாலும், பாராட்டா விட்டாலும், அவர்களுடைய ஆத்மாவிற்கு ஒரு திருப்தி. 'அப்பா, இந்தக் காரியத்தைச் செய்துமுடித்தோம்' என்கின்ற ஒரு ஆர்வம். அதற்குப் பெயர்தான் 'ஆத்ம திருப்தி' என்பது. அந்த ஆத்ம திருப்தி நமக்கு ஏற்படுகிறதல்லவா ? நமக்கு அதுபோதும். இந்த ஆத்மாவிற்குத் திருப்தி ஏற்பட்டால், மற்ற ஆத்மாக்கள் நம்மைப் பாராட்டினால் என்ன, பாராட்டாவிட்டால் என்ன ? அது பாராட்ட மறுக்கின்ற ஆத்மா; மகாத்மாவாக இருந்தாலும்கூட நான் கவலைப்படமாட்டேன். ஏழை ஆத்மாக்கள், ஏழை ஆத்மாக்கள் எளிய ஆத்மாக்கள், சாதாரண, சாமானிய ஆத்மாக்கள், நம்மைப் பாராட்டுகின்ற அளவிற்கு நம்முடைய பணி தொடரவேண்டும். அப்படிப்பட்ட பணி தொடர, அதற்கெல்லாம் ஊக்கமளிக்க, உற்சாகம் அளிக்க, உத்வேகம் அளிக்க, தூண்டுதலாக இருக்கக்கூடிய முயற்சிகளிலே ஒன்றுதான் இந்தச் சுற்றுலா பொருட்காட்சி முயற்சியாகும்.

இதை இன்றைக்குத் திறம்பட நடத்தியிருக்கின்ற அருமைத் தம்பி அமைச்சர் சுரேஷ் ராஜனை நான் பாராட்டுகிறேன். அவருக்கு உதவியாக இருந்து செயல்படுகின்ற நம்முடைய சுற்றுலாத்துறைச் செயலாளர் நண்பர் இறையன்பு, ஐ.ஏ.எஸ். அவர்களைப் பாராட்டுகின்றேன். நல்ல கலை ஆர்வமும், இலக்கிய ஆர்வமும் படைத்தவர் இறையன்பு. இறைவனிடத்திலே அன்பு கொண்டவரோ அல்லவோ, அவர் இலக்கியத்திலே காதல் கொண்டவர் என்ற முறையிலே இந்தச் சுற்றுலாப் பொருட்காட்சி திறம்பட உருவாக பணியாற்றியிருக்கின்றார். அவருக்கு நான் என்னுடைய பாராட்டுக்களைத் தெரிவித்துக் கொள்கின்றேன். இந்தச் சுற்றுலாப் பொருட்காட்சி இந்த ஆண்டு பெறுகின்ற வெற்றியிலேயிருந்து, அடுத்தடுத்த ஆண்டுகளிலே பெறவேண்டிய வெற்றிகளுக்கு இவை அச்சாரமாக ஆகட்டும் என்று கூறி, இதைத் திறந்து வைப்பதிலே பெருமையும், இந்த வாய்ப்பை அளித்த நண்பர்களுக்கு நன்றியும் கூறி விடைபெறுகிறேன்.

★

# மாநகராட்சி, நகராட்சி, ஊராட்சி மன்றங்களுக்கு உரிமைகளும் சுதந்திரங்களும் வழங்கப்பட்டுள்ளன!

சென்னையில் 29.12.2008 அன்று

கோபதி நாராயணா சாலை - திருமலைச் சாலை சந்திப்பு மேம்பாலத்தை திறந்துவைத்து,

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் **கலைஞர் மு.கருணாநிதி** அவர்கள் ஆற்றிய உரை.



இன்றைய தினம் இங்கே நடைபெறுகின்ற மேம்பாலத் திறப்புவிழா நிகழ்ச்சியிலே கலந்து கொண்டு வெள்ளம்போல் கூடியிருக்கின்ற உங்களையெல்லாம் சந்திப்பதில் மிகுந்த மகிழ்ச்சியும், பெருமையும் அடைவதோடு, பெருமிதமும் கொள்கின்றேன். ஏனென்றால், சென்னை மாநகரத்தைக் காண்போர் அனைவருமே கவலையோடு தெரிவித்துக் கொண்டிருக்கின்ற ஒரு செய்தி போக்குவரத்து நெரிசல். 'என்ன, காலையிலே பத்து மணிக்கு வருவதாகச் சொன்னீர்கள்; 12–00 மணி வரையிலே வரவில்லையே' என்று கேட்டால், 'என்ன செய்ய, போக்குவரத்தில் நெரிசல் அப்படி' என்று சமாதானம் சொல்லுகின்ற நிலை இன்னமும் சென்னை மாநகரத்திலே இருப்பதை நம்மால் காண முடிகின்றது.

**பாலங்கள்**

அந்த நெரிசலைப் போக்குவதற்கு வழி என்ன என்று சிந்திக்கின்ற ஒரு ஆட்சி, சிந்திக்கின்ற ஒரு மாநகராட்சி மன்றம் சென்னையிலே இருக்கின்ற காரணத்தால், அந்த ஆட்சியை நடத்துகின்ற இயக்கம், திராவிட முன்னேற்றக் கழகமாக இருக்கின்ற காரணத்தால், அந்த இயக்கத்திற்குத் துணையாக காங்கிரஸ் போன்ற இயக்கங்கள் விளங்குகிற காரணத்தால், அவர்களுடைய துணையோடும், நேர்மையான, நாணயமான, ஊக்கம் மிகுந்த, உற்சாகம் மிகுந்த அதிகாரிகளுடைய துணையாலும், நாம் பாலங்களை, மேம்பாலங்களை சென்னை மாநகரத்திலே அதிகமாக உருவாக்கினால், போக்குவரத்து நெரிசலை ஓரளவிற்குச் சமாளிக்க முடியும் என்ற முடிவிற்கு வந்து, அந்த முடிவின்படிதான்





இன்றைக்கு இதுவரையிலே இங்கே எடுத்துச் சொல்லப்பட்டதே 76 பாலங்கள் என்றும், அவற்றிலே சிறிய பாலங்களுடைய கணக்கு 26 என்றும், மேம்பாலங்களுடைய கணக்கு 10–க்கும் மேற்பட்டவை என்றும் எடுத்துக்காட்டப்பட்டது. அந்தப் பாலங்கள் எல்லாம், கழகம் ஆட்சிப் பொறுப்புக்கு வந்தபிறகு உருவானவை என்பதை யாரும் மறந்திருக்கமுடியாது.

அப்படி உருவான பாலங்களைப் பாராட்டுவதற்குப் பதிலாக, இந்தப் பாலங்களெல்லாம் ஊழல் நிறைந்தவை என்று சொல்லி, பாலங்களைக் கட்டிமுடித்த மறுநாளே அதைக் கட்டுவதற்கு முற்பட்ட தம்பி ஸ்டாலினையும், அதற்குத் துணைபுரிந்த அரசின் தலைவராக அன்றைக்கு முதலமைச்சராக இருந்த என்னையும், என்னைச் சார்ந்தவர்களையும் கைது செய்து – 'ஏன் இப்படி கைது செய்கிறீர்கள்' என்று கேட்டபோது; 'இவர்கள் கட்டிய பாலங்களிலே ஊழல்' என்று சொல்லி, 'அதற்கு என்ன ஆதாரம்' என்று கேட்டபோது, 'ஆதாரம் பிறகு தரப்படும்'; 'அரெஸ்ட் இப்போது செய்யப்படும்' என்ற நிலையிலே முடிவெடுத்து, அதை நடைமுறைப்படுத்தி ஒரு வார காலம் எங்களைச் சிறையிலே வைத்து, வதைத்து, எங்களைத் தெருவிலே உட்கார வைத்து, எந்தச் சிறைச்சாலைக்கு அனுப்புவது என்பதையே விவாதப் பொருளாக ஆக்கி, பட்டிமன்றம் நடத்தி, அதற்குப்பிறகு ஆறு நாட்கள் கழித்து மத்திய அரசு தலையிட்டு, மக்கள் எழுச்சி பொங்கி உயர்ந்தபிறகு, எங்களை விடுவித்த கதையெல்லாம் உங்களுக்குத் தெரியும்.

ஆக, நாம் பாலம் கட்டினோம் என்றால், அதைப் பலரும் தங்கள் வசதி வாய்ப்புகளுக்காகக் கடந்து செல்ல, நடந்து செல்லப் பயன்படுத்தியிருக்கிறார்கள். ஆனால், நாம் கட்டிய பாலத்திற்குப் பழுது சொல்லத்தான் எதிர்க்கட்சிக்காரர்கள் தமிழகத்திலே இருந்தார்கள்; இருக்கிறார்கள். நான் இந்த வழியாகப் பாலங்களைக் கடந்து செல்லும் போதெல்லாம், இப்பொழுதல்ல; நாம் மீண்டும் ஆட்சிக்கு, இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு வந்தோமே அதற்கு முன்பு, உட்லண்ட்ஸ் ஹோட்டலுக்கு எதிரேயிருக்கின்ற பாலத்தைக் கடந்து என்னுடைய கார் செல்லும்போதெல்லாம், இரண்டு போலீஸ் அதிகாரிகள் உட்கார்ந்து, கடப்பாரையை வைத்து அங்கே இடித்துக் கொண்டிருப்பார்கள்.

ஒருநாள் தெரிந்த அதிகாரி ஒருவரிடம்– 'என்னய்யா இடித்துக் கொண்டிருக்கிறீர்கள்; போகும் போதெல்லாம் பார்க்கிறேன்' என்று கேட்டால், 'ஊழல் எங்கேயாவது இருக்கிறதா என்று நாங்கள் தேடிப் பார்க்கிறோம்' என்று சொல்வார்கள். அதல்ல, நான் விளையாட்டாக ஒருமுறை சொன்னேன். 'ஒரு தங்க நாணயத்தை இந்தப் பாலத்திலே, ஒரு பக்கத்திலே புதைத்திருக்கிறேன்' என்று நான் சொன்னேன். இது எப்படியோ, எந்த போலீஸ் அதிகாரியின் காதிலே விழுந்து, தெரிந்து, அது எங்கேயிருக்கிறது என்று தேடிப் பார்ப்பதற்காக அந்தப் பாலத்தையே பல இடங்களில் புண் ஆக்கிய காட்சியை நான் கண்டேன்.

> **“எங்கு பார்த்தாலும் வெளிநாட்டிலே இருப்பதைப்போல சாலைகள், தெருக்கள், சந்து பொந்துகள்கூட வெளிநாட்டை நினைவுபடுத்துகிற அளவிற்கு அமைந்திருக்கின்றன' என்று சொன்னால், அது மிகையாகாது”**

இப்படி ஊழலைத் தேடித் தேடி அலைந்து, பாலங்களை ஆங்காங்கு புள்ளி வைத்து, கெடுத்து, குட்டிச் சுவராக்குவதற்கு ஒரு ஆட்சி, ஒரு ஐந்தாண்டுக் காலம் இடையிலே நடைபெற்றது. மீண்டும் நாம் மக்களுடைய ஆதரவைப் பெற்று ஆட்சிக்கு வந்தவுடன், நம்முடைய தம்பி ஸ்டாலின் அப்பொழுது மேயராக இருந்தபோது கட்டிய பாலத்தைவிட அதிகமாக, அந்தத் துறைக்கே அமைச்சராக ஆனபிறகு, இன்னும் அதிகமாகப் பாலங்களை சென்னை மாநகரத்திலே கட்டுகிற நிலைமை ஏற்பட்டு, அந்தப் பாலங்களைக் கட்டிக் கொண்டிருக்கின்றார். அவை மிகச் சிறந்த பாலங்களாக இன்றைக்கு அமைந்திருக்கின்றன.

இங்கே நம்முடைய தலைமைச் செயலாளர் பேசும்போது குறிப்பிட்டதைப்போல, 'ஜகஜோதியாக இருக்கின்ற நிலை சென்னை மாநகரத்திலே நாம் காணுகின்றோம். அப்படிப்பட்ட முன்னேற்றம் நம்முடைய சென்னை மாநகரத்திற்கு இன்றைக்கு ஏற்பட்டிருக்கிறது என்றால், திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய ஆட்சி உரிய தோழமைக் கட்சிகளுடைய உறவோடு, அவர்களுடைய ஒத்துழைப் போடு நடைபெற்றுக் கொண்டிருக்கின்ற காரணத்தால், இந்த வாய்ப்புக்களை, வசதிகளை சென்னை மாநகரத்து மக்கள் பெறமுடிகிறது; பெற முடிந்திருக்கிறது; தொடர்ந்து பெறமுடியும் என்பதை நான் தெரிவித்துக் கொள்கின்றேன்.

முதலிலே, திராவிட முன்னேற்றக் கழகம் 1967 ஆம் ஆண்டு ஆட்சிக்கு வந்தபோது, தமிழகத்திலே ஒரேயொரு மாநகராட்சி மன்றம்; சென்னை மாநகராட்சி மன்றம். அந்த சென்னை மாநகராட்சி மன்றத்திலே நம்முடைய தோழர்கள் போட்டியிட்டு, ஒருவர் மேயராகத் தேர்ந்தெடுக்கப்பட்டு, அப்படித் தேர்ந்தெடுக்கப்பட்ட மேயரை ஊர் ஊராக அழைத்துச் சென்று, 'பாருங்கள் எங்கள் மேயரை; பாருங்கள் எங்கள் மேயரை' என்று காட்டிக்கொண்டிருந்தோம். அது நமக்கெல்லாம் மிகப் பெருமையாக இருந்தது. ஓராண்டு காலத்திற்குத்தான் அப்போது ஒரு மேயர்.

**ஒரேயொரு மேயர்**

யாரை மேயராகத் தேர்ந்தெடுப்பது என்று அண்ணா அவர்களும், மற்றவர்களும் அன்றைக்கு ஆராய்ச்சி செய்தோம். அ.பொ. அரசு, தோழர் முனுசாமி என்று ஒரு ஐந்தாறு பேர், 'நாங்கள் இந்த ஓராண்டு மேயர் பதவியை அனுபவிக்கிறோம்' என்று அவர்கள் சொன்னபோது, முனுசாமியைப் பார்த்து, வேறு நண்பர்களைப் பார்த்து அண்ணா சொன்னார்; 'நீங்களெல்லாம் கவுன்சிலர்களாகப் பல நாள் இந்த கார்ப்பரேஷனிலே இருந்திருக்கிறீர்கள். ஆகவே, இந்த ஓராண்டு காலத்திற்கு மேயராக ஒருவர் புதிய ஆளாக வரட்டுமே; யார் வரலாம் என்பதை நீங்களே உட்கார்ந்து முடிவு செய்து, நாளை காலையிலே எனக்கு வந்து சொல்லுங்கள்' என்று சொன்னார்கள்.

கோபாலபுரத்தில், வீட்டு முன் தாழ்வாரத்தில் அமர்ந்து பேசிக்கொண்டிருந்தோம். அப்போது என்னுடைய தாயார் அஞ்சுகம் அம்மையார்–ஸ்டாலினுடைய பாட்டி; ஏன் தயாநிதி மாறனுக்கும் பாட்டிதான்–அந்த பாட்டி வெளியே வந்தார்கள். 'என்ன தம்பி பேசிக் கொண்டிருக்கிறீர்கள்' என்று அண்ணாவைப் பார்த்துக் கேட்டார்கள். அண்ணா சொன்னார்; 'நீங்கள் சொல்லுங்கள் அம்மா, நாங்கள் ரொம்ப நேரமாகத் தலையைப் போட்டு உடைத்துக் கொண்டிருக்கிறோம்; யாரை முதல் மேயராகப் போடலாம்' என்று அண்ணா கேட்டார்கள். அஞ்சுகத்து அம்மையார் சொன்னார்கள்; 'யாரைப் போடப் போகிறீர்கள் ? அரசைப் போடுங்கள், அப்போதுதான் நமக்கு அரசே வரும்' என்று அம்மா சொன்னார்கள். அது ஏதோ ஒரு ஆசிர்வாதம் போல, ஒரு அசரீரி போல 'அரசைப் போடுங்கள், அப்போதுதான் அரசே வரும்' என்று அவர்கள் சொன்னார்கள்; அதைத் தட்டாமல் அண்ணா அவர்கள் அ.பொ. அரசை மேயராக ஆக்கினார். அப்போது நமக்கிருந்தது ஒரேயொரு மேயர்.

**அண்ணா அணிவித்த கணையாழி**

ரொம்ப காலத்திற்குப்பிறகு ஏழைகளுடைய கட்சிக்கு, ஏழைக் குடும்பத்திலே பிறந்து, அச்சுக் கோப்பாளராக இருந்து, அந்தத் தொழிலை நடத்திக் கொண்டிருந்த அ.பொ. அரசு–சிந்தாதிரிப்பேட்டை அ.பொ. அரசு–நம்முடைய சென்னை மாநகரத்தினுடைய மேயராக ஆனார். அவருக்கு அங்கி அணிவித்து, அவருக்கு அழகான உடைகளை அணிவித்து அழகு பார்த்தோம். அவரை ஊர் ஊராக அழைத்துச் சென்றோம். நமக்கு ஒரு மேயர் அதிசயமாகக் கிடைத்தார். அந்த மேயர் கிடைப்பாரா, மாட்டாரா, தகுந்த வாக்குகள் நமக்குக் கிடைக்குமா என்ற பொழுதுதான், 'நான் நிச்சயமாக நம்முடைய மேயர்தான் வரப்போகிறார்' என்றபோது, அண்ணா மறுத்தார்.

'நீ இப்படித்தான் சொல்வாய்' என்று அண்ணா சொன்னார். பந்தயம் கட்டினார். 'என்ன பந்தயம்; எதற்கும்



நான் தயார்' என்று நான் அண்ணாவிடம் சொன்னேன். அண்ணா சொன்னார், 'நீ சொல்கிறபடி, கார்ப்பரேஷனிலே நாம் ஜெயித்து நம்முடைய மேயர் வந்தால், என்னுடைய கையால் உனக்கொரு கணையாழி அணிவிக்கிறேன்' என்று சொன்னார். அ.பொ. அரசு மேயராக வந்தவுடன், என்னுடைய அடுத்த வார்த்தை அண்ணாவைப் பார்த்து, 'அண்ணா, எப்போது கணையாழி அணிவிக்கிறீர்கள்; நான் பந்தயத்திலே ஜெயித்து விட்டேன்' என்று சொன்னேன்.

கடற்கரையிலே கூட்டம். அந்தக் கூட்டத்திலே சொன்னார் அண்ணா; 'என்னுடைய மனைவிக்குக்கூட ஒரு நகை வாங்க நான் கடைகளுக்குச் சென்றதில்லை. இந்தக் குறும்புக்கார கருணாநிதிக்காக கடை கடையாக ஏறி என் காலெல்லாம் வலிக்கிறது' என்று சொல்லி, இந்தக் கணையாழியை (கணையாழி அணிவிக்கப்பட்ட தன்னுடைய விரலைக் காட்டி) என்னுடைய விரலில் அணிவித்தார்.

**தியாகராயர் சிலைக்கு மாலை**

இந்தக் கணையாழியைப் பார்க்கும்போதெல்லாம், சென்னையிலே நம்முடைய மாநகராட்சியை உருவாக்க நாமெல்லாம் சேர்ந்து பட்டபாடு நினைவுக்கு வருகிறது. அதிலே பெற்ற வெற்றி நினைவுக்கு வருகிறது. அதைக் கண்டு களித்த அண்ணா முகத்திலே தெரிந்த மின்னல் சிரிப்பு நினைவுக்கு வருகிறது. அப்படிப்பட்ட நினைவுகளை யெல்லாம் பெறக்கூடிய அளவிற்கு இந்தக் கணையாழியும் நம்முடைய முதல் கார்ப்பரேஷன்– நாம் வெற்றி பெற்ற முதல் கார்ப்பரேஷன்– சென்னை மாநகரத்துக் கார்ப்பரேஷன் கிடைத்தபோது, நன்றி மறவாமல் அண்ணா அவர்கள் ஒன்றைச் சொன்னார்; 'நீங்கள் வெற்றி பெற்று விட்டதாகக் கருதாதீர்கள்; திராவிட இயக்கம் வெற்றி பெற்றிருக்கிறது. இந்த திராவிட இயக்கத்தைத் தோற்றுவித்த தியாகராயர் சென்னை மாநகராட்சி மன்ற முகப்பில் சிலையாக நின்று கொண்டிருக்கின்றார். நாளைக்குக் காலையிலே நீங்கள் மேயர் பொறுப்பை ஏற்றுக் கொள்ளச் செல்லும்போது, ஆளுக்கொரு மாலை எடுத்துச் சென்று, அவருடைய கழுத்திலேயிருந்து கால் வரையில், ஆளுயர ஒரு மாலையைத் தியாகராயர் சிலைக்கு அணிவித்துவிட்டு, உங்களுடைய ஆசிர்வாதத்தால்தான், உங்களுடைய உழைப்பால்தான், உங்களுடைய அறிவாற்றலால் அல்லவா, இந்த இயக்கம் வந்தது; நாங்கள் இன்றைக்கு இந்த உயர்வைப் பெற்றிருக்கிறோம் என்று தழைய தழைய அவருடைய' உருவத்திற்கு ஆளுயர மாலையை அணிவியுங்கள்' என்று அண்ணா அன்றைக்கு வழியனுப்பி வைத்தார்.

> **“நம்முடைய நகராட்சி நிருவாகத்திலே ஒவ்வொரு நகரமும், ஒவ்வொரு பகுதியும், தூய்மையாக இருக்கவேண்டும்; எடுப்பாக இருக்கவேண்டும்; கவர்ச்சியாக இருக்கவேண்டும்; சுற்றுலாப் பயணிகளைச் சுண்டியிழுக்க வேண்டும். அப்படிப்பட்ட முறையில் நம்முடைய நகரங்களும், நம்முடைய சாலைகளும், நம்முடைய ஊர்களும், நம்முடைய ஊர் நிருவாகமும் இருக்கவேண்டும் என்பதற்காகத்தான், நாம் பணியாற்றி வருகின்றோம்.”**

**அருமையான திட்டங்கள்**

அண்ணாவினுடைய கனவும் வீணாகவில்லை. தொடர்ந்து இடையிடையே சில சறுக்கல்கள்; இடையிடையே சில தொய்வுகள் ஏற்பட்டால்கூட, சென்னை மாநகராட்சி மன்றத்தை இன்றைக்கு இயக்கிக் கொண்டிருக்கின்ற இயக்கமாக திராவிட முன்னேற்றக் கழகமும், அதற்குத் துணையாக காங்கிரஸ் போன்ற பேரியக்கங்களும், தோழமைக் கட்சிகளும் நமக்கிருக்கின்ற காரணத்தால், இன்றைக்கு எடுத்துச் சொல்லப்பட்ட இவ்வளவு நற்பணிகளும், இந்த மாநகரத்திலே நடை பெற்றிருக்கின்றன.

சென்னையிலே முதன்முதல் மாநகராட்சி மன்றம். நாம் அரசு பெற்ற காரணத்தால், அரசோச்சுகின்ற வாய்ப்பும் மக்கள் நமக்களித்த காரணத்தால், திருச்சி, கோவை, சேலம், மதுரை, நெல்லை, திருப்பூர், ஈரோடு, வேலூர், தூத்துக்குடி என்று இத்தனை மாநகராட்சி மன்ற மேயர்களை நாம் காணுகின்றோம். அன்றைக்கு ஒண்ணே ஒண்ணு; கண்ணே கண்ணு; அ.பொ. அரசு. அரசு நமக்கு வந்து விட்ட காரணத்தால், இன்றைக்குப் பத்து மேயர்கள் இருக்கின்றார்கள். அந்த மேயர்கள் ஆட்சி நடத்துகின்ற ஒவ்வொரு மாநகரத்திலும் எவ்வளவு அருமையான திட்டங்களை நிறைவேற்றுகிறார்கள் என்பதைப் பார்க்கின்றோம்.

**மாற்றாரின் பாராட்டு**

இன்றைக்குக் காலையில் நம்முடைய தம்பி ஸ்டாலின் ஒரு காலண்டர் தயாரித்து, அதில் 10–15 படங்கள் நிறைந்த ஒரு தொகுப்பைக் காட்டினார். அந்தத் தொகுப்பில் என்னை மிக மிகக் கவர்ந்த ஒரு படம், அதிலே பல படங்கள் இருந்தன. மிக மிகக் கவர்ந்த ஒரு படம்; ஒரு கோபுரம், அந்தக் கோபுரத்தைச் சுற்றி மதில்சுவர். அந்த மதில் சுவருக்கு அப்பால் ஒரு அருமையான பளிங்கு கற்கள் பதிக்கப்பட்ட சாலை. ‘இது எந்த ஊர்’ என்று கேட்டேன். ‘இது மதுரை மீனாட்சி அம்மன் கோவில்’ என்று ஸ்டாலின் சொன்னார். ‘மதுரை மீனாட்சி அம்மன் கோவில் பிரகாரத்தை முன்பு சுற்றும்போது, சாலையெல்லாம் வெறும் மண் சாலையாக அல்லவா இருக்கும். இப்போது வந்துள்ள நம்முடைய மாநகராட்சி மேயருடைய பணி இது’ என்று சொன்னார். கண்ணாடியைப் போல இருக்கிறது; கோவிலைச் சுற்றியுள்ள அந்தச் சாலை. நம்முடைய கொள்கைகள் வேறு என்றாலும் கூட, கிராமங்கள் நகரங்களாகவும், நகரங்கள் மாநகரங் களாகவும் மாறினால்தான், நாம் ஆட்சி நடத்துகிறோம் என்பதற்குப் பொருள். இல்லாவிட்டால், எல்லோரையும்போல நாமும் வந்தோம்; அவர்களைப் போல நாமும் முடிந்தவரையிலே ஆட்சி நடத்தினோம்; அதிகாரிகள் சொன்னதைக் கேட்டோம்; நாம் நினைத்து எந்தத் திட்டத்தையும் நிறைவேற்றவில்லை; மக்களுக்கென்று எந்தக் காரியத்தையும் நாம் செய்யவில்லை; மாற்றார் பார்த்துப் பாராட்டுகின்ற அளவிற்கு, மற்ற நாட்டுக்காரர்கள் பார்த்து வியக்கின்ற அளவிற்கு, எந்தக் காரியத்தையும் செய்யவில்லை யென்றால், நாம் பதவிக்கு வருவதற்கும், ஏற்கெனவே இருந்தவர்கள் பதவியிலே இருந்ததற்கும், எந்தவித வேறுபாடும் கிடையாது.

அந்த வேறுபாட்டை உணர்த்துகின்ற வகையிலேதான், இன்றைக்குச் சென்னை மாநகராட்சியிலே என்னுடைய அருமை தம்பிமார்கள் மேயராகவும், பல்வேறு குழுக்களிலே தலைவர்களாகவும் இருந்தும், அவர்களுக்கெல்லாம் அமைச்சராக தம்பி ஸ்டாலினைப் போன்றவர்கள் இருந்தும், அவர்களுக்கெல்லாம் அறிவுரை கூறுகின்றவர்களாக, அவர்களோடு விவாதித்து நல்லவைகளைச் செய்பவர்களாக மத்திய அரசிலே இருக்கின்ற நம்முடைய தம்பி பாலுவைப் போன்றவர்கள் இருந்தும், நாடாளுமன்ற உறுப்பினர்களாகத் தம்பி தயாநிதி மாறனைப் போன்றவர்கள் இருந்தும், அத்தகைய யோசனைகளை இன்றைக்குச் சொல்லுகின்ற காரணத்தால்தான், நாம் நம்முடைய வழியிலே மேலும் மேலும் சிறந்து விளங்க வழி ஏற்பட்டிருக்கிறது; பாதை அமைக்கப்பட்டிருக்கின்றது.

நீங்கள் எண்ணிப் பார்க்கவேண்டும்; நம்முடைய சென்னை ஒரு பத்து ஆண்டுகளுக்கு முன்பு எப்படி யிருந்தது? பதினைந்து ஆண்டுகளுக்கு முன்பு எப்படியிருந்தது? சாலைகள் உண்டா? சாலைகள் ஒழுங்காக இருந்ததுண்டா? இல்லை. இன்றைக்கு எவ்வளவு நேர்த்தியாக சென்னை மாறியிருக்கின்றது. ஆனால், என்னைப் பொறுத்தவரையில் இந்த மாற்றம் போதாது. இன்னும் நிறைய மாற்றங்கள் தேவை. அதைத்தான் தம்பி ஸ்டாலின் பேசும்போது குறிப்பிட்டார்.

**“கூவம் திருந்துகிற வரையில்**
**எனக்குத் திருப்தி இருக்காது.**
**கூவத்திலே தெளிந்த**
**நீரோடைபோல, பளிங்குபோல**
**தண்ணீர் செல்கிற வரையில்,**
**அங்கே நம்முடைய வீட்டுப்**
**பிள்ளைகள் குதித்து, நீந்தி**
**விளையாடுவதைப்**
**பார்க்கிறவரையில், எனக்கு**
**நிச்சயமாக நிம்மதி இருக்காது;**
**மகிழ்ச்சி இருக்காது”**



இன்னமும் என் தந்தைக்குப் பூரண திருப்தியில்லை என்று சொன்னார், உண்மைதான்.

ஏனென்றால், நான் கேள்விப்பட்டிருக்கிறேன்; நான் பார்த்ததில்லை. நம்முடைய தந்தையர் காலத்திலே சொல்லியிருக்கிறார்கள்.– ‘பச்சையப்ப முதலியார் கூவத்திற்கு வந்து குளித்துவிட்டுச் செல்லுவார்; கூவத்திலே பச்சையப்ப முதலியார் இறங்கிக் குளிப்பதை நாங்கள் பார்த்திருக்கிறோம்’ என்று. ஆனால், நீங்கள் பச்சையப்பர்களாக ஆகமுடியாவிட்டாலும், தமிழின் பால், அறிவின் பால், கல்வியின்பால், இச்சையப்பர்களாக ஆகவேண்டும் என்பதை நான் இந்த நேரத்திலே உங்களுக்கெல்லாம் எடுத்துக்கூறக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

வெவ்வேறு மாநகராட்சி மன்றங்கள்; நான் மதுரையைச் சொன்னேனே, அதைப்போல எல்லா மாநகராட்சி மன்றங்களும், ஏதாவது ஒரு முனைப்பான காரியத்தைச் செய்யவேண்டும் என்கின்ற எண்ணம் ஏற்பட்டு, அதற்குத் தங்களை ஒப்படைத்துக் கொண்டிருக்கின்ற காட்சி இன்றைக்குத் தமிழகத்திலே எல்லா இடங்களிலும் காணுகின்றோம். அது எந்த மாநகராட்சியாக இருந்தாலும் சரி, எந்தக் கட்சியினுடைய ஆதிக்கம் இருக்கின்ற மாநகராட்சியாக இருந்தாலும் சரி, இந்த ஆட்சியில் நகராட்சி மன்றங்களுக்கு, ஊராட்சி மன்றங்களுக்கு, ஒன்றியத்திலே உள்ளவர்களுக்குச் சுதந்திரம் அளிக்கப் பட்டிருக்கிறது; உரிமைகள் அளிக்கப்பட்டிருக்கின்றன. நகராட்சிகளுடைய செலவிற்குப் போதுமான அளவிற்கு நிதி அவ்வப்போது ஒதுக்கப்படுகிறது.

நிதிப் பற்றாக்குறை எந்த ஊராட்சி மன்றத்திற்கும், எந்த நகராட்சி மன்றத்திற்கும், எந்த மாநகராட்சி மன்றத்திற்கும் இல்லையென்கின்ற அளவிற்கு நிதியும் அவர்களுக்கு வழங்கப்படுகிறது. அவர்களோடு பணி செய்கின்ற, அவர்களுக்கெல்லாம் தலைவராக, அமைச்சராக இல்லாமல், அவர்களைப்போலவே ஒரு ஊழியராக நம்முடைய தம்பி ஸ்டாலின், அவர்களோடு சேர்ந்து இன்றைக்குப் பணியாற்றுகின்ற காரணத்தினாலேதான், அவர்களும் ஆர்வத்தோடு தங்களுடைய பணிகளிலே வெற்றி பெற முடிகிறது. தங்களுடைய ஊர்களை, கிராமங்களை, நகரங்களை, மாநகரங்களை மற்றவர்களெல்லாம் வியப்படைகின்ற அளவிற்கு எடுத்துக்காட்ட முடிகின்றது. அந்த முன்னேற்றம் நான் விரும்பிய ஒன்று. ஆனால், எனக்கு முழு திருப்தியை அளிக்காத ஒன்று. மேலும் மேலும் முன்னேற வேண்டும்; மேலும் மேலும் கவர்ச்சிகரமாக வெளிநாட்டுக்காரர்கள் பார்த்து வியப்படைகின்ற அளவிற்கு, இந்த ஊர்களும், கிராமங்களும், பேரூர்களும், சிற்றூர்களும், நகரங்களும், மாநகரங்களும் விளங்கிட வேண்டும் என்று கேட்டுக்கொண்டு, அதற்கான உழைப்பை நல்கிட ‘வாரீர், வாரீர்’ என்று இளைஞர்களை, இதுபோன்ற பணிகளில் ஆர்வம் படைத்தவர்களை அழைக்கின்றேன்.

**“இன்றையதினம் இங்கே திறந்து**
**வைக்கப்பட்டிருக்கின்ற இந்தப்**
**பாலத்திற்கு என்ன பெயர்**
**வைக்கலாம் என்று யோசித்தேன்.**
**அருகில் அண்ணா மேம்பாலம்**
**இருக்கிறது. கலைவாணர்**
**என்.எஸ்.கே.–வினுடைய சிலையை**
**இங்கே அமைத்தவர் அண்ணா.**
**சிறப்பாக அந்த நினைவாகவும், என்**
**தலைமையிலே நடைபெற்ற அந்த**
**விழாவில், அண்ணா அவர்களுடைய**
**வாழ்க்கையில் கடைசி நிகழ்ச்சியாக**
**கலைவாணருடைய சிலையை இந்தச்**
**சாலையிலேதான் திறந்துவைத்தார்**
**என்பதற்காகவும், அந்தச் சாலையை**
**இணைக்கின்ற இந்தப் பாலத்திற்கு**
**“கலைவாணர் மேம்பாலம்” என்ற**
**பெயரைச்சூட்டிடுகிறேன்”**

★ ★ ★

# ரூ.2,256 கோடி மதிப்பில் 13 திட்டங்கள் மத்திய அரசின் ஒப்புதலுக்குப் பரிந்துரை! சென்னை மாநகரில் மழைநீர் வடிகால் வசதிகளை மேம்படுத்த ரூ.1,538 கோடி மதிப்பீட்டில் மாபெரும் திட்டம்

மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும்
உள்ளாட்சித்துறை அமைச்சர்
திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள் தகவல்



**ஜ**வஹர்லால் நேரு தேசிய நகர்ப்புற புதுப்பித்தல் திட்டத்தின் மாநில அளவிலான எட்டாவது ஒப்பளிப்புக் கூட்டம் மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை அமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்களின் தலைமையில் 4.12.2008 அன்று நடைபெற்றது.

இக்கூட்டத்தில் ரூ.2,256 கோடி மதிப்பீட்டிலான 13 திட்டங்கள் பரிசீலிக்கப்பட்டு மத்திய அரசின் ஒப்புதலுக்கு பரிந்துரைக்க முடிவு செய்யப்பட்டது.

**சென்னை மாநகரங்களில் மழைநீர் வடிகால் வசதியை மேம்படுத்த திட்டம்**

சென்னை மாநகரத்தில் ஏற்படும் வெள்ள அபாயத்தைக் கட்டுப்படுத்த ரூ.1,538.04 கோடிகளில் சென்னை மாநகராட்சி மற்றும் பொதுப் பணித்துறை, திட்டம் சமர்ப்பித்திருந்தது.

5வது மாநில அளவிலான ஒப்பளிப்புக் குழு சென்னை மாநகராட்சி முழுவதற்கும் முழுமையான ஒரு திட்டத்தை மத்திய அரசிற்கு அனுப்பி இருந்தது. இதில் மத்திய அரசு சில மாறுதல்கள் கோரியிருந்தது. அதன்படி ரூ.1,538.04 கோடிகளில் திட்டம் கலந்தறிதற்குரியவர்களால் தயாரிக்கப்பட்டு மீண்டும் இக்குழுவின் முன் சமர்பிக்கப்பட்டது. இதனை மத்திய அரசுக்கு இக்குழு பரிந்துரைத்திட முடிவு செய்யப்பட்டது. இத்திட்டத்தின்படி ரூ.838.02 கோடியில் சென்னை மாநகராட்சியால் அனைத்துப் பகுதிகளிலும் வடிகால் வசதிகளை ஏற்படுத்த திட்டமிடப்பட்டுள்ளது. பொதுப்பணித்துறையால் ரூ.415.47 கோடியில் திட்டங்களை செயல்படுத்தி நீர் நிலைகளில் வடிகால் வசதியை மேம்படுத்த திட்டமிடப்பட்டுள்ளது.

**குடிநீர்த் திட்டங்கள்**

**ஆலந்தூர் நகராட்சியில் குடிநீர்த் திட்டம்**

சென்னைப் பெருநகர குடிநீர் மற்றும் கழிவு நீர் அகற்றல் வாரியத்தால் ஆலந்தூர் நகராட்சியில் குடிநீர்த் திட்டம் ஏற்படுத்த ரூ.47.50 கோடியில் திட்டம். இத்திட்டத்தின் மூலம் 3 இலட்சம் மக்கள் பயன் பெறுவார்கள்.



**அம்பத்தூர் நகராட்சியில் குடிநீர்த் திட்டம்**

சென்னைப் பெருநகர குடிநீர் மற்றும் கழிவு நீர் அகற்றல் வாரியத்தால் அம்பத்தூர் நகராட்சியில் குடிநீர்த் திட்டம் ஏற்படுத்த ரூ.193.50 கோடியில் திட்டம். இத்திட்டத்தின் மூலம் 16.5 இலட்சம் மக்கள் பயன் பெறுவார்கள்.

**கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம் அமைத்தல்–நெசப்பாக்கம் பகுதி**

சென்னைப் பெருநகர குடிநீர் மற்றும் கழிவு நீர் அகற்றல் வாரியம் நெசப்பாக்கம் பகுதியில் நாளொன்றுக்கு 54 மில்லியன் லிட்டர் கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம் ஏற்படுத்த ரூ.51.48 கோடியில் திட்டம்.

**தாம்பரம் நகராட்சியில் பாதாளச் சாக்கடைத் திட்டம்**

சென்னைப் பெருநகர குடிநீர் மற்றும் கழிவு நீர் அகற்றல் வாரியத்தால் தாம்பரம் நகராட்சியில் பாதாளச் சாக்கடைத் திட்டம் ஏற்படுத்த ரூ.148.90 கோடியில் திட்டம். இத்திட்டத்தின் மூலம் 3.6 இலட்சம் மக்கள் பயன்பெறுவார்கள்.

**சிட்லப்பாக்கம் பேரூராட்சியில் பாதாளச் சாக்கடைத் திட்டம்**

சென்னைப் பெருநகர குடிநீர் மற்றும் கழிவு நீர் அகற்றல் வாரியத்தால் சிட்லப்பாக்கம் பேரூராட்சியில் பாதாளச் சாக்கடைத் திட்டம் ஏற்படுத்த ரூ.24.96 கோடியில் திட்டம். இத்திட்டத்தின் மூலம் 66 ஆயிரம் மக்கள் பயன் பெறுவார்கள்.

**பள்ளிக்கரணை பேரூராட்சியில் பாதாளச் சாக்கடைத் திட்டம்**

சென்னைப் பெருநகர குடிநீர் மற்றும் கழிவு நீர் அகற்றல் வாரியத்தால் பள்ளிக்கரணை பேரூராட்சியில் பாதாளச் சாக்கடைத் திட்டம் ஏற்படுத்த ரூ.50.55 கோடியில் திட்டம். இத்திட்டத்தின் மூலம் 2.14 இலட்சம் மக்கள் பயன்பெறுவார்கள்.

**பீர்க்கங்கரணை பேரூராட்சியில் பாதாளச் சாக்கடைத் திட்டம்**

சென்னைப் பெருநகர குடிநீர் மற்றும் கழிவு நீர் அகற்றல் வாரியத்தால் பீர்க்கங்கரணை பேரூராட்சியில் பாதாளச் சாக்கடைத் திட்டம் ஏற்படுத்த ரூ.19.55 கோடியில் திட்டம். இத்திட்டத்தின் மூலம் 37 ஆயிரம் மக்கள் பயன்பெறுவார்கள்.

**பெருங்குடி பேரூராட்சியில் பாதாளச் சாக்கடைத் திட்டம்**

சென்னைப் பெருநகர குடிநீர் மற்றும் கழிவு நீர் அகற்றல் வாரியத்தால் பெருங்குடி பேரூராட்சியில் பாதாளச் சாக்கடைத் திட்டம் ஏற்படுத்த ரூ.18.17 கோடியில் திட்டம். இத்திட்டத்தின் மூலம் 1.6 இலட்சம் மக்கள் பயன்பெறுவார்கள்.

**செம்பாக்கம் பேரூராட்சியில் பாதாளச் சாக்கடைத் திட்டம்**

சென்னைப் பெருநகர குடிநீர் மற்றும் கழிவு நீர் அகற்றல் வாரியத்தால் செம்பாக்கம் பேரூராட்சியில் பாதாளச் சாக்கடைத் திட்டம் ஏற்படுத்த ரூ.50.55 கோடியில் திட்டம். இத்திட்டத்தின் மூலம் 2.14 இலட்சம் மக்கள் பயன்பெறுவார்கள்.

**திருமழிசை பேரூராட்சியில் பாதாளச் சாக்கடைத் திட்டம்**

சென்னைப் பெருநகர குடிநீர் மற்றும் கழிவு நீர் அகற்றல் வாரியத்தால் திருமழிசை பேரூராட்சியில் பாதாளச் சாக்கடைத் திட்டம் ஏற்படுத்த ரூ.20.40 கோடியில் திட்டம். இத்திட்டத்தின் மூலம் 37 ஆயிரம் மக்கள் பயன்பெறுவார்கள்.

**பெருங்களத்தூர் பேரூராட்சியில் பாதாளச் சாக்கடைத் திட்டம்**

சென்னைப் பெருநகர குடிநீர் மற்றும் கழிவு நீர் அகற்றல் வாரியத்தால் பெருங்களத்தூர் பேரூராட்சியில் பாதாளச் சாக்கடைத் திட்டம் ஏற்படுத்த ரூ.42.63 கோடியில் திட்டம். இத்திட்டத்தின் மூலம் 1.90 இலட்சம் மக்கள் பயன்பெறுவார்கள்.

**பெருங்குடி பேரூராட்சியில் பாதாளச் சாக்கடைத் திட்டம்**

சென்னைப் பெருநகர குடிநீர் மற்றும் கழிவு நீர் அகற்றல் வாரியத்தால் பெருங்குடி பேரூராட்சியில் பாதாளச் சாக்கடைத் திட்டம் ஏற்படுத்த ரூ.49.75 கோடியில் திட்டம். இத்திட்டத்தின் மூலம் 3.42 இலட்சம் மக்கள் பயன் பெறுவார்கள்.

மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை அமைச்சர் அவர்களின் தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் டுபிட்கோ தலைவர் மற்றும் நிருவாக இயக்குநர் திரு. எம்.ஏ. கௌரிசங்கர், இ.ஆ.ப., பொதுப்பணித்துறை முதன்மைச் செயலர் திரு. ஆதிசேஷய்யா, இ.ஆ.ப., நெடுஞ்சாலைத்துறை முதன்மைச் செயலர் திரு. கே.அலாவுதீன், இ.ஆ.ப., திட்டம் மற்றும் வளர்ச்சித்துறைச் செயலர் திரு. சந்திர மௌலி, இ.ஆ.ப., நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல்துறைச் செயலர் டாக்டர் நிரஞ்சன் மார்டி, இ.ஆ.ப., தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குநர் திரு. சுவரன்சிங், இ.ஆ.ப., நிதித்துறை சிறப்புச் செயலர் திரு. பிரவீன்குமார், இ.ஆ.ப., பேரூராட்சிகள்துறை ஆணையர் டாக்டர் கே.கோபால், இ.ஆ.ப., சென்னை மாநகராட்சி ஆணையர் திரு. ராஜேஷ் லக்கானி, இ.ஆ.ப., சென்னைக் குடிநீர் வடிகால் வாரிய மேலாண்மை இயக்குநர் திரு. சுனில்பாலிவால், இ.ஆ.ப., நகராட்சி நிருவாகத்துறை இயக்குநர் திரு. கே.செந்தில் குமார், இ.ஆ.ப., ஆகியோர் பங்கேற்றனர்.

❖ ❖ ❖



மாண்புமிகு தமிழக முதலமைச்சர் கலைஞர் மு. கருணாநிதி அவர்களை 12.12.2008 அன்று தலைமைச் செயலகத்தில் இங்கிலாந்து நாட்டின் தூதர் சர் ரிச்சர்ட் ஸ்டாக் அவர்கள் மரியாதை நிமித்தம் சந்தித்துப் பேசினார். உடன் சென்னையில் உள்ள இங்கிலாந்து நாட்டின் துணைத் தூதர் திரு. மைக் கானர், தலைமைச் செயலாளர் திரு.கே. எஸ். ஸ்ரீபதி இ.ஆ.ப., நிதித்துறை முதன்மைச் செயலாளர் திரு. கு. ஞானதேசிகன், இ.ஆ.ப., பொதுத்துறை செயலாளர் திரு. தேவஜோதி ஜெகராஜன் இ.ஆ.ப., ஆகியோர் உள்ளனர்.




தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றத்தின் சார்பில் சென்னை தியாகராயர் அரங்கில், பேரறிஞர் அண்ணா நூற்றாண்டு விழா நடந்தது. இவ்விழாவில் அண்ணா பற்றிய நூலை மாண்புமிகு நிதியமைச்சர் பேராசிரியர் க. அன்பழகன் அவர்கள் வெளியிட, நாடாளுமன்ற உறுப்பினர் கவிஞர் கனிமொழி பெற்றுக் கொண்டார். உடன் சுற்றுலாத்துறை இயக்குநர் முனைவர் மு. இராஜாராம் இ.ஆ.ப., தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றத் தலைவர் இராம. நாராயணன், செயலாளர் கவிஞர் இளையபாரதி ஆகியோர் உள்ளனர். (6.12.2008)





மூதறிஞர் இராஜாஜி அவர்களின் 130ஆவது பிறந்தநாளை முன்னிட்டு 10.12.2008 அன்று, சென்னையில் அமைந்துள்ள அன்னாரின் திருவுருவச் சிலைக்கு அருகில் வைக்கப்பட்டிருந்த அவரது திருவுருவப்படத்திற்கு மாண்புமிகு மின்துறை அமைச்சர் திரு. ஆர்க்காடு நா. வீராசாமி, மாண்புமிகு செய்தித்துறை அமைச்சர் திரு. பரிதி இளம்வழுதி, மாண்புமிகு மீன்வளத்துறை அமைச்சர் திரு. கே.பி.பி. சாமி ஆகியோர் மலர் தூவி மரியாதை செலுத்தினர். உடன் செய்தி மக்கள் தொடர்புத்துறை இயக்குநர் முனைவர் ஆ.சி. மோகன்தாஸ், இ.ஆ.ப., உள்ளிட்டோர் உள்ளனர்.



மகாகவி பாரதியார் அவர்களின் 127ஆவது பிறந்தநாளை முன்னிட்டு சென்னையில் அமைந்துள்ள அன்னாரின் திருவுருவச்சிலைக்கு அருகில் வைக்கப்பட்டிருந்த அவரது திருவுருவப்படத்திற்கு மாண்புமிகு சட்டப் பேரவைத் தலைவர் திரு. இரா. ஆவுடையப்பன், மாண்புமிகு செய்தித்துறை அமைச்சர் திரு. பரிதி இளம்வழுதி, மாண்புமிகு சமூக நலத்துறை அமைச்சர் திருமதி. கீதா ஜீவன், மாண்புமிகு கதர் துறை அமைச்சர் திரு. கா. இராமச்சந்திரன், ஆகியோர் மலர் தூவி மரியாதை செலுத்தினார்கள். உடன் செய்தி மக்கள் தொடர்புத்துறை இயக்குநர் முனைவர் ஆ.சி.மோகன்தாஸ், இ.ஆ.ப., உள்ளிட்டோர் உள்ளனர். (11.12.2008)

# ரூ.22 கோடி மதிப்பீட்டில் மதுரை எல்லீஸ் நகரில் மேம்பாலம்

**மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை அமைச்சர்**

**திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் திறந்துவைத்தார்**

மதுரை பெரியார் பேருந்து நிலையம் அருகில் ரூ.22 கோடி மதிப்பீட்டில் புதிதாகக் கட்டப்பட்டுள்ள எல்லீஸ்நகர் மேம்பாலத்தை மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை அமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் அவர்கள் 18.08.2008 அன்று திறந்து வைத்தார்.

எல்லீஸ்நகர் புதிய மேம்பாலத்தை திறந்து வைத்து மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் அதனை மாற்றி அமைத்து புதிய மேம்பாலம் அமைக்கத் திட்டமிடப்பட்டு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் ஆணையிடப்பட்டு ரூ.22 கோடி மதிப்பீட்டில் புதிய பாலம் கட்டப்பட்டது.

இந்த மேம்பாலம் பெரியார் பேருந்து நிலையம் அருகில் உள்ள கட்டபொம்மன் சிலையில் இருந்து டி.பி.சாலை வழியாக அரசரடி செல்லும் வகையில் ஒரு பிரிவாகவும், பெரியார் பேருந்து நிலையத்தில் இருந்து



உள்ளாட்சித்துறை அமைச்சர் அவர்கள் பேசியபோது, மதுரையின் மையப்பகுதியான பெரியார் பேருந்து நிலையம் அருகே ஏற்கெனவே ஒரு இரயில்வே மேம்பாலம் இருந்தது. அந்தப் பாலம் மிகவும் குறுகலாக இருந்ததால் வாகனப் போக்குவரத்துக்கு இடையூறு ஏற்பட்டது. அதனால் எல்லீஸ்நகர் பகுதிக்குச் செல்லும் வகையில் மற்றொரு பிரிவாகவும், இரயில்வே மேற்கு நுழைவு வாயில் செல்வதற்கு இன்னொரு பிரிவாகவும் மொத்தம் 5 பிரிவாக பிரமாண்டமாக அமைக்கப்பட்டு உள்ளது.

கட்டபொம்மன் சிலை பகுதியிலிருந்து செல்லும் பகுதி 233.95 மீட்டர் நீளமும், பெரியார் பேருந்து





நிலையத்தில் இருந்து செல்லக்கூடிய பகுதி 118 மீட்டர் நீளமும், அரசரடி பக்கம் செல்லக்கூடிய பகுதி 290.6 மீட்டர் நீளமும், இரயில்வே மேற்கு நுழைவு வாயில் பகுதி செல்லக்கூடிய பகுதி 308.80 மீட்டர் நீளமும் கொண்டுள்ளதாக இப்பாலம் கட்டப்பட்டுள்ளது.

மதுரை மாநகரின் போக்குவரத்து நெரிசலைப் பெருமளவில் குறைக்கும் வகையில் இந்த மேம்பாலம் ஏற்படுத்தப்பட்டு பாலத்தில் இரவைப் பகலாக்கும் மின்விளக்குகள் அமைக்கப்பட்டுள்ளன, என்று தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில் மாண்புமிகு நெடுஞ்சாலைத்துறை அமைச்சர் வெள்ளகோவில் திரு. மு.பெ. சாமிநாதன், மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் திருமதி. ஆ. தமிழரசி, மாண்புமிகு கைத்தறித்துறை மற்றும் பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர் திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன், மாண்புமிகு குடிசைமாற்று வாரியத்துறை அமைச்சர் திரு. சுப. தங்கவேலன், நெடுஞ்சாலை மற்றும் சிறுதுறைமுகங்கள்துறை அரசு முதன்மைச் செயலாளர் திரு. அலாவுதீன், இ.ஆ.ப., தென்னக இரயில்வே தலைமை நிருவாக அதிகாரி திரு. இ. ராமநாதன், மாவட்ட ஆட்சித் தலைவர் திரு. எஸ்.எஸ். ஜவஹர், இ.ஆ.ப., வணக்கத்திற்குரிய மதுரை மாநகராட்சி மேயர் திருமதி. தேன்மொழி கோபிநாதன், சட்டமன்ற உறுப்பினர்கள் திரு. கே.எஸ்.கே. இராஜேந்திரன், திரு. என். நன்மாறன், திரு.எஸ்.எஸ். கௌஸ்பாட்சா, திரு. பி. மூர்த்தி, மதுரை மாநகராட்சி துணை மேயர் திரு. பி.எம். மன்னன், பிற்படுத்தப்பட்டோர் நல ஆணையக்குழு உறுப்பினர் திரு. வ. வேலுச்சாமி, நெடுஞ்சாலைத்துறை தலைமைப் பொறியாளர் திரு. அரிராஜ் ஆகியோர் கலந்து கொண்டனர்.

❖ ❖ ❖



**அண்ணாவின் பொன்மொழிகள்**

## அடிப்படை உண்மை

பகுத்தறிவு வாதம் என்பது அடிப்படை உண்மைகளை,
நெறிகளை மறுப்பதாகாது; எதையும் காரணங்கண்டு
ஆராய்ந்து உண்மை காண்பதாகும். போலித்தனமான
எண்ணங்களை, செயல்களை அழித்தொழிப்பதுதான்
ஆகும். முனைப்புடனும் உறுதியுடனும்
நீங்கள் உழைக்க வேண்டும்.

# மதுரை மாவட்டத்தில் தன்னிறைவு பெற்ற பேரூராட்சிகள்

**ம**துரை மாவட்டத்தில் உள்ள 12 பேரூராட்சிகளில் அனைத்து அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தின்கீழ் கடந்த ஆண்டில் வெள்ளாப்பட்டி, எழுமலை பேரூராட்சிகளில் தலா ரூ.5 இலட்சம் மதிப்பில் ஊருணி அமைக்கப் பட்டுள்ளது. 2008–09ஆம் ஆண்டிற்கு அலங்காநல்லூர் பேரூராட்சி எல்லைக்குட்பட்ட குறவன்குளம் பகுதியில் இராஜகணபதி ஊருணியினை ரூ.6 இலட்சம் மதிப்பீட்டில் சிறப்பாகப் புனரமைக்கப்பட்டு குளத்தினைச் சுற்றிலும் வேலி அமைத்து அழகிய மரக்கன்றுகள் நடப்பட்டு தெருவிளக்கு வசதிகள் செய்யப்பட்டு அமரும் இருக்கைகள் அமைக்கப் பட்டுள்ளது. தற்போது பெய்த கனமழையினால் நீர் அதிகரித்துள்ளது. இதன் காரணமாக இப்பகுதியில் நிலத்தடிநீர் உயர்ந்துள்ளது. வருகிற ஆண்டிற்கு பேரையூர், சோழவந்தான். விளாங்குடி, கல்லுப்பட்டி, பரவை, வாடிப்பட்டி போன்ற ஊர்களின் குளங்களும் புனரமைக்கப் படவுள்ளது.

இது குறித்து மாவட்ட ஆட்சித் தலைவர் திரு. சோ.சு. ஜவஹர், இ.ஆ.ப., அவர்கள் கூறும்போது, மாவட்டம் முழுவதும் உள்ள 431 கிராமப் பஞ்சாயத்துகளில் கடந்த மூன்று ஆண்டுகளில் 240 கிராமங்களில் அனைத்துக் கிராம அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தின்கீழ் ரூ.12 கோடி மதிப்பில் ஊருணி அமைக்கப்பட்டு நிலத்தடி நீர் அதிகரிக்கப்பட்டுள்ளது. தொடர்ந்து மீதமுள்ள கிராம பஞ்சாயத்துகளுக்கு வருகிற ஆண்டில் ஊருணிகள் அமைக்கப் படவுள்ளது. உள்ளாட்சியின் மூலம் கிராமக் குளங்கள் மேம்படுத்தப்பட்டு விவசாயிகளுக்குப் பயனுள்ளதாக்கப்பட்டு வருகின்றது. தமிழ்நாட்டில் மதுரை மாவட்டத்தில் மட்டும்தான் அதிகமான குளங்கள் அமைக்கப்பட்டு மாநிலத்தில் முன்னோடியாகத் திகழ்கிறது, என்றார்.

மேலும் அவர் கூறும் போது மிகவும் நிதிவசதியில் நலிவுள்ள அ.வல்லாளப்பட்டி, ஹார்விபட்டி, எழுமலை பேரூராட்சிகளில் 38 பணிகள் ரூ.158.10 இலட்சம் மதிப்பீட்டில் எடுக்கப்பட்டு பேரூராட்சிக்குத் தேவையான அடிப்படை வசதிகள் முழுமையாகச் செய்யப்பட்டு பேரூராட்சி தன்னிறைவு பெற்றுள்ளது. பிறதுறை ஒருங்கிணைப்பு செய்து 123 பணிகள் ரூ.571 இலட்சம் மதிப்பீட்டில் செய்து முடிக்கப்பட்டுள்ளது. அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தின் மூலம் கிராமத் தூய்மை, பசுமை, சுகாதாரம் போன்ற விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டு அதை நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டு வருகின்றது. அ.வல்லாளப்பட்டி, ஹார்விபட்டி பேரூராட்சியில் தலா ரூ.20 இலட்சம் மதிப்பீட்டில் குளிர்சாதன வசதி கொண்ட சமுதாயக்கூடம் அமைக்கப்பட்டு ஏழை, எளிய கிராம மக்களின் வீடுகளில் நடைபெறும் குடும்ப நிகழ்ச்சிகளுக்கு குறைந்த கட்டணத்தில் விடப்பட்டு பேரூராட்சியின் வருவாயினைப் பெருக்கிட வழிவகை செய்யப்பட்டுள்ளது. மாவட்டத்திலுள்ள பேரூராட்சிகள் அனைத்தும் தன்னிறைவு பெற்று சிறப்பாகத் திகழ்கிறது" என்றார்.

* * *

### அண்ணாவின் பொன்மொழிகள்

**தன்னலம்**
**கருதாத்தன்மை**

முகத்தில் புன்னகையும் – அகத்தில் நம்பிக்கையும், செய்கையில் சுத்தமும், சிந்தனையில் தன்னலம் கருதாத் தன்மையுமிருந்தால் போதுமானது!



# கோ-ஆப்டெக்சின் நவீன வடிவமைப்புகளில் புதிய ரக பட்டுச் சேலைகள்



டிசைனர் பட்டுச் சேலைகளில் ஜர்துசி, குந்தன், ஜமிக்கி போன்ற வேலைப்பாடுகளுடன் உயர்தர நூலிழைகள் கொண்டு வடிவமைப்பு வேலைகள் கண்கவரும் விதத்தில் செய்யப் பட்டுள்ளன. இந்தப் பட்டுச் சேலையின் மதிப்பு ரூ.9,000இலிருந்து வேலைப் பாடுகளின் அடிப்படையில் சேலையின் விலை நிர்ணயிக்கப் பட்டுள்ளது. இவ்வகை பட்டுச் சேலைகள் வாடிக்கையாளர் களிடையே அதிக வரவேற்பைப் பெற்று வருகின்றது.

மகளிரைக் கவரும் வண்ணம் உருவாக்கப்பட்டுள்ள பட்டுச்சேலையில் "ஒலியும்–ஒளியும்" கலந்து புதியதொரு பட்டுச்சேலையை கோ–ஆப்டெக்ஸ் உருவாக்கியுள்ளது. புடவையின் முந்தானைப் பகுதியில் அணிகலன் வேலைப்பாடுகள் செய்யப்பட்டுள்ளதுடன், அதன் வடிவமைப்பில் சிறிய பல்புகள் பொருத்தப்பட்டு சிறிய பாட்டரி (வெளியே தெரியாத வண்ணம்) உதவியுடன் பல்புகள் மிளிர்வதும், அவ்வப்போது ஓசை எழுப்புவதும் இதன் சிறப்பம்சமாகும்.

**ம**துரை, தேனி, திண்டுக்கல், சிவகங்கை, இராமநாதபுரம் மற்றும் விருதுநகர் ஆகிய 6 மாவட்டங்களில் 20 கோ–ஆப்டெக்ஸ் விற்பனை நிலையங்களின் மூலம் இலட்சக்கணக்கான வாடிக்கையாளர்களின் அமோக ஆதரவைப் பெற்று 2007–2008ஆம் ஆண்டில் விற்பனைக் குறியீடு ரூ.1,140 இலட்சத்தை தாண்டி ரூ.1,221.87 இலட்சம் விற்பனை செய்து சாதனை படைத்துள்ளது. விற்பனையின் சாதனையை பாராட்டி மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை அமைச்சர் அவர்களால் முதல் பரிசு மதுரை மாவட்டத்திற்கு வழங்கப்பட்டது.

மதுரை மாவட்டத்திலுள்ள கோ–ஆப்டெக்ஸ் விற்பனை நிலையங்களில் 2007–ஆம் ஆண்டு தீபாவளி விற்பனைக் குறியீடு ரூ.640 இலட்சம் ஆகும். ஆனால், அதையும் தாண்டி 774 இலட்சம் ரூபாய்க்கு விற்பனை செய்யப்பட்டுள்ளது. அதுபோல் 2008ஆம் ஆண்டில் தீபாவளி விற்பனை ரூ.835 இலட்சம் ஆகும்.

கோ–ஆப்டெக்ஸ் புதிய வடிவமைப்புகளையும், புதிய ரகங்களையும் உருவாக்குவதில் தொடர்ந்து முனைப்புடன் செயல்பட்டு சாதனை படைத்து வருகின்றது. இந்த முயற்சியின் தொடர்ச்சியாக வாடிக்கையாளர்களின் நவநாகரிக விருப்பத்திற்கு ஏற்ப தீபாவளி விழாக்கால விற்பனைக்குப் பல புதிய ரகங்களை பட்டுச்சேலைகளிலும், பருத்தி நூல் சேலைகளிலும் அறிமுகப்படுத்தியது.

சேலையை அணிந்திருப்பவர் அவரது விருப்பத்திற்கேற்ப ஒலியையும், ஒளியையும் தனித்தனியே இயங்கச் செய்யும் வசதி செய்யப்பட்டுள்ளது. சலவையின்போது பேட்டரியை எடுத்துக்கொள்ளவும், தேவைப்படும்போது பொருத்திக் கொள்ளவும் வசதி செய்யப்பட்டுள்ளது. இந்தப் புதியரக "ஒலியும்–ஒளியும்" பட்டுச்சேலைகள் வாடிக்கையாளர்களிடையே அமோக வரவேற்பைப் பெற்றுள்ளன. இந்தப் புடவைகள் ஆர்டரின்பேரில் செய்து கொடுக்கப்படுகின்றன.

தனியார் மில் துணி வகைகளுக்கு இணையாக உருவாக்கப்பட்டுள்ளது. இது மக்களின் பெரும் வரவேற்பைப் பெற்றுள்ளது. எளிய மற்றும் நடுத்தர மக்களின் நீண்ட நாள் கனவை நனவாக்கும் விதமாக புதிய ரக பட்டுச்சேலைகள் குறைந்த விலையில் வந்துள்ளன. இனி ஏழைப் பெண்களும் பட்டுச்சேலை அணியலாம் என்ற நிலை மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்களின் அரசால் உருவாக்கப்பட்டுள்ளது.

*– சிவ. க.சரவணன்,*
செய்தி – மக்கள் தொடர்பு அலுவலர், மதுரை.

# பெண்களின் முன்னேற்றத்திற்காக செயல்பட்டுவரும் சிறந்த ஆட்சி

இராமநாதபுரம் மாவட்டத்தில்
ரூ.87.75 கோடி மதிப்பீட்டில் பல்வேறு திட்டப் பணிகளைத் தொடங்கிவைத்து
மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை அமைச்சர்
திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள் உரை.

இராமநாதபுரம் மாவட்டம் பின்தங்கிய மாவட்டம் என்பதை மாற்றியமைக்கும் வகையில் பல்வேறு வளர்ச்சித் திட்டப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. குடிநீர்ப் பிரச்சினையை தீர்க்கும் வகையில் ரூ.616 கோடியில் கூட்டுக்குடிநீர்த் திட்டப்பணிகள் துரிதமாக நடைபெற்று வருகிறது. மேலும் மகளிரின் பொருளாதார மேம்பாட்டிற்காக அவர்களுக்கு பல்வேறு திறன் பயிற்சிகள் மற்றும் மானியத்துடன் கூடிய வங்கிக் கடனுதவிகள் வழங்கப்பட்டு வருகின்றன.

அந்த வகையில் இராமநாதபுரத்தில் 12.12.2008 அன்று நடைபெற்ற அரசு விழாவில் ரூ.13.54 கோடி மதிப்பிலான 9 புதிய கட்டடங்கள் மற்றும் 7 புதிய குடிநீர்த் திட்டப் பணிகளுக்கு அடிக்கல் நாட்டி, நிறைவடைந்த ரூ.55.93 கோடி மதிப்பிலான புதிய 480 கட்டடங்களைத் திறந்து வைத்து, ரூ.18.28 கோடி மதிப்பில் 4,558 பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகளையும், மகளிர் சுயஉதவிக் குழுக்களுக்கு சுழல் நிதிகளையும் மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை அமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் அவர்கள் வழங்கிப் பேசும்போது தெரிவித்ததாவது:

இந்த நிகழ்ச்சியின் மூலம் அரசுத் திட்டங்கள் மற்றும் கருத்துக்களை உங்களிடையே பகிர்ந்துகொள்ள வாய்ப்பு கிடைத்துள்ளது. இங்கு கூடியுள்ள மகளிர் குழுக்களிடையே காணப்படுகின்ற பொறுமை, அமைதி, கட்டுப்பாடு போன்றவை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் கலைஞர் அவர்களால் ஏற்படுத்தப்பட்ட சுய உதவிக் குழுக்களின் தன்மையைப் புரிந்துகொள்ள முடிகிறது. இன்றைய தினம் 16 புதிய கட்டடங்கள், திட்டங்கள், குடிநீர்த் திட்டப் பணிகளுக்கு ரூ.13.54 கோடியில் அடிக்கல் நாட்டுதல் நிறைவடைந்த ரூ.55.93 கோடியில் 480 புதிய கட்டடங்கள், சாலைப் பணிகள் போன்றவை திறந்து வைத்தல், 4,558 பயனாளிகளுக்கு ரூ.18.28 கோடி நலத்திட்ட உதவிகள் மற்றும் மகளிர் குழுக்களுக்கு சுழல் நிதி வழங்குதல் போன்றவை இங்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

வழக்கமாக அரசு விழாக்களில் அமைச்சர்கள் மேடையில் ஒரு சில பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகளை வழங்கி, பின்னர் விழா முடிந்து அரசு அலுவலர்கள் அவற்றைத் தொடர்ந்து வழங்குவது வழக்கம். ஆனால் தற்போது உங்களை ஊக்கப்படுத்தி உற்சாகப்படுத்தும் வகையில், வந்திருக்கும் அனைத்து மகளிர் குழுக்களுக்கும் மேடையிலேயே நலத்திட்ட உதவிகளை வழங்குவதை குறிக்கோளாகக் கொண்டு ஒவ்வொரு மாவட்டமாக வழங்கி வருகிறேன். மேலும் ஆதிதிராவிடர் நலத்துறை, பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை, வாழ்ந்து காட்டுவோம் திட்டம் போன்று பல்வேறு அரசுத்துறைகள் சார்பிலும் இன்றைய தினம் நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட உள்ளன. மொத்தமாக ரூ.87.74 கோடியில் திட்டப்பணிகள் துவக்கம் மற்றும் நலத்திட்ட உதவிகள் வழங்கும் வகையில் இந்த விழா அமைந்துள்ளது.

### கூட்டுக் குடிநீர்த்திட்டம்

வறண்ட பூமியாக உள்ள இந்த மாவட்டத்தின் குடிநீர் பிரச்சினையைத் தீர்க்கும் வகையில்ரூ.616கோடியில் கூட்டுக் குடிநீர்த் திட்டப்பணிகள் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இந்த மாவட்டத்திற்கு நான் வருகை தரும்போதெல்லாம் இத்திட்டப் பணிகளைப் பார்வையிட்டு ஆய்வு செய்து வருகிறேன். இத்திட்டத்தைத் துவக்கி வைக்கும் நிகழ்ச்சியின்போது மூன்றாண்டு காலத்தில் திட்டப்பணிகளை முடிக்கவேண்டும் என மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் அறிவித்தார்கள். இருப்பினும் 20 மாதங்களில் முடிக்கின்ற வகையில் பணிகள் விரைவுபடுத்தப்பட்டுள்ளன. இத்திட்டம் 7 பகுதிகளாகப் பிரிக்கப்பட்டு பணிகள் செவ்வனே நடைபெற்று வருகிறது. 95 சதவீதப் பணிகள் முடிவடைந்துள்ளதாக தெரிவித்துள்ளார்கள். அவ்வாறாக இருந்தால் தமிழர் திருநாளாம் தைத்திங்கள் தமிழ் வருடப்பிறப்பு அன்று திட்டத்தை துவக்கி வைக்கும் வகையில் ஏற்பாடுகள் செய்யப்பட உள்ளன. எத்தனையோ பணிகள் எனது துறையில் இருந்தாலும் இம்மாவட்டத்தின் குடிநீர்ப் பிரச்சினையைத் தீர்த்துவைக்கும்



இத்திட்டப்பணிகள்தான் என்னைப் பெருமைப்பட வைக்கிறது

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் ஆட்சிக் காலத்தில் 1989ஆம் ஆண்டு தருமபுரி மாவட்டத்தில் மகளிர் சுயஉதவிக் குழுவை முதன்முறையாக துவக்கி வைத்தார். தன்னம்பிக்கையை உருவாக்கி பொருளாதார மேம்பாடு அடையும் வகையில் வாழ்க்கையை வளப்படுத்திக்கொள்வதை குறிக்கோளாகக்கொண்டு இந்த சுயஉதவிக்குழுக்கள் உருவாக்கப்பட்டன. அந்த வகையில் மகளிர் சுயஉதவிக் குழுக்களுக்கு சுழல் நிதிகளும், வங்கிக் கடனுதவிகளும் வழங்கப்பட்டு வருகின்றன. 99 சதவீத மகளிர் குழுக்களால் வங்கிக் கடன்கள் தவறாது திருப்பிச் செலுத்தப்பட்டு வருகிறது. இது ஒட்டுமொத்த தமிழகத்திற்கு கிடைத்த பெருமையாகும். மகளிர் குழுக்களுக்கு கடனுதவி வழங்கும் வகையில் இந்தியன் வங்கி இந்தியாவில் 16 இடங்களில் தனி மையங்களை ஏற்படுத்த நடவடிக்கை எடுத்துள்ளது. அதில் 10 இடங்கள் தமிழ்நாட்டில் அமையவுள்ளன.

### மகளிர் நலத்திட்டங்கள்

துவக்கத்தில் ஊரகப் பகுதிகளைச் சேர்ந்த மகளிர் குழுக்களுக்கு அளிக்கப்பட்டு வந்த பயிற்சிகள் தற்போது நகர்புறங்களைச் சேர்ந்தவர்களுக்கும் அளிக்கப்பட்டு வருகிறது. பயிற்சிக்கான கட்டணத்தொகையும் உயர்த்தப்பட்டு தற்போது ரூ.45 வழங்கப்பட்டு வருகிறது. தமிழகத்தில் 1.5 இலட்சம் மகளிர் சுயஉதவிக் குழுக்களுக்கு சுழல்நிதி வழங்கவேண்டும் என்பதைக் கருத்தில்கொண்டு ரூ.150 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு தற்போது ஒவ்வொரு மாவட்டமாக வழங்கப்பட்டு வருகிறது. தமிழ்நாட்டில் தற்போது செயல்படுத்தப்பட்டு வரும் திருமண உதவித் திட்டம் வேறு எந்த மாநிலத்திலும் இல்லாத திட்டமாகும். இத்திட்டத்தின்கீழ் 1989ஆம் ஆண்டு ரூ.5,000/- நிதி உதவி வழங்கப்பட்டது. பின்னர் இந்த ஆட்சிக் காலத்தில் ரூ.10,000/-ஆக உயர்த்தப்பட்டது. 2006ஆம் ஆண்டு ஆட்சிப்பொறுப்பேற்றால் ரூ.15,000/-ஆக வழங்கப்படும் என்று அறிவிக்கப்பட்டு தற்போது ரூ.20,000/- வழங்கப்பட்டு வருகிறது. இதுவரை தமிழகத்தில் 42,784 பெண்களுக்கு ரூ.64.57 கோடி இத்திட்டத்தின்கீழ் உதவித்தொகை வழங்கப்பட்டுள்ளது. இராமநாதபுரம்

**"எத்தனையோ பணிகள் எனது துறையில் இருந்தாலும் இம்மாவட்டத்தின் குடிநீர்ப் பிரச்சினையைத் தீர்த்துவைக்கும் இத்திட்டப்பணிகள்தான் என்னைப் பெருமைப்பட வைக்கிறது"**

மாவட்டத்தில் மட்டும் 568 பெண்களுக்கு ரூ.85.30 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது. கர்ப்பிணிப் பெண்களுக்கான மகப்பேறு நிதி உதவித்திட்டத்தின்கீழ் 9.66 இலட்சம் பெண்களுக்கு ரூ.425 கோடி வழங்கப்பட்டுள்ளது. இராமநாதபுரம் மாவட்டத்தில் மட்டும் 1,395 பெண்களுக்கு ரூ.83.20 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது. 50 வயதைக் கடந்த திருமணமாகாத பெண்களுக்கு உதவித்தொகை வழங்கும் திட்டத்தின்கீழ் தமிழ்நாட்டில் இதுவரை 9,100 மகளிருக்கு ரூ.36.40 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது. இராமநாதபுரம் மாவட்டத்தில் மட்டும் 220 பெண்களுக்கு ரூ.88,000 வழங்கப்பட்டுள்ளது. அதேபோன்று இலவச எரிவாயு இணைப்பு மற்றும் அடுப்பு வழங்கும் திட்டத்தின்கீழ் தமிழ்நாட்டில் 6.84 இலட்சம் பயனாளிகளுக்கு 6.84 இலட்சம் இலவச எரிவாயு இணைப்பு மற்றும் அடுப்பு வழங்கப்பட்டுள்ளது. இராமநாதபுரம் மாவட்டத்தில் மட்டும் 15,611 பயனாளிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் டாக்டர் கலைஞர் அவர்கள் ஆட்சிப் பொறுப்பேற்றபின் 2 ரூபாய்க்கு ஒரு கிலோ அரிசி வழங்கும் திட்டத்தில் முதல் கையெழுத்திட்டார். அண்ணா நூற்றாண்டு விழாவை முன்னிட்டு அவரது குறிக்கோளை நிறைவேற்றும் பொருட்டு தற்போது செப்டம்பர் 15ஆம் தேதி முதல் 1 ரூபாய்க்கு 1 கிலோ அரிசி வழங்கும் திட்டத்தை மாண்புமிகு தமிழக முதலமைச்சர் கலைஞர் அவர்கள் அறிவித்து செயல்படுத்தி வருகிறார். அத்துடன் 10 மளிகைப் பொருட்கள் மானிய விலையில் ரூ.50க்கு வழங்கும் திட்டம் அண்ணல் காந்தியடிகள் பிறந்த நாளான அக்டோபர் 2ஆம் தேதி முதல் செயல்படுத்தப்பட்டு வருகிறது. பெண்களின் முன்னேற்றத்திற்காக செயல்பட்டுவரும் இந்த ஆட்சிதான் சிறந்த ஆட்சி. இதற்கு நீங்கள் துணைநிற்க வேண்டும்.

**"99 சதவீத மகளிர் குழுக்களால் வங்கிக் கடன்கள் தவறாது திருப்பிச் செலுத்தப்பட்டு வருகிறது. இது ஒட்டுமொத்த தமிழகத்திற்கு கிடைத்த பெருமையாகும். மகளிர் குழுக்களுக்கு கடனுதவி வழங்கும் வகையில் இந்தியன் வங்கி இந்தியாவில் 16 இடங்களில் தனி மையங்களை ஏற்படுத்த நடவடிக்கை எடுத்துள்ளது. அதில் 10 இடங்கள் தமிழ்நாட்டில் அமையவுள்ளன"**

இன்றைய தினம் நலத்திட்ட உதவிகளைப் பெற வருகை தந்துள்ள அனைவருக்கும் மற்றும் பொதுமக்களுக்கு எனது நன்றியையும், பாராட்டுதலையும் தெரிவித்துக் கொள்கிறேன், இவ்வாறு மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.

இராமநாதபுரம் மாவட்டத்தில் சிறந்த செயல்பாடுகளுக்காக இராமநாதபுரம் மாவட்ட மத்தியக் கூட்டுறவு வங்கி, இந்தியன் ஓவர்சீஸ் வங்கி, பாரத ஸ்டேட் வங்கி, கனரா வங்கி, பாண்டியன் கிராம வங்கி, இந்தியன் வங்கி ஆகிய வங்கியாளர்களுக்கு மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை அமைச்சர் அவர்கள் கேடயங்களை வழங்கினார்.

விழாவில் மாண்புமிகு குடிசைமாற்று மற்றும் இடவசதிக் கட்டுப்பாட்டுத்துறை அமைச்சர் திரு. சுப. தங்கவேலன் அவர்கள் தலைமையுரையாற்றினார். மாவட்ட ஆட்சித் தலைவர் திரு. இரா. கிர்லோஷ்குமார், இ.ஆ.ப., அவர்கள் வரவேற்புரையாற்றினார்.

விழாவில் மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர் திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன் மாண்புமிகு இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் திரு. கே.ஆர். பெரியகருப்பன், கூடுதல் ஆட்சியர் (வளர்ச்சி) திருமதி. பூஜா குல்கர்னி, இ.ஆ.ப., உள்ளிட்டோர் கலந்துகொண்டனர்.

## அண்ணாவின் பொன்மொழிகள்

### ஒருபோதும் மாறமாட்டேன்

"நான் நெஞ்சில் உள்ளதைக் கூறுகிறேன். கள்ளங்கபடமில்லாமல் கூறுகிறேன். பேச்சுக்குக் கூறவில்லை. எந்தப் பலனையும் எதிர்பார்த்துக் கூறவில்லை. மற்ற கட்சியிலுள்ள எல்லோரையும் மதிக்கிறேன். மரியாதைக் குறைவான எண்ணம் எனக்கு ஒரு துளியும் கிடையாது".

"நான் எளிய ஏழைக் குடியில் பிறந்தவன். கல்லூரியில் நான் படிப்பேனா என்று ஜோஸ்யம் பார்க்க வேண்டிய நிலையில் இருந்தவன். அதையெல்லாம் மறந்து விட்டு இன்று வந்த பதவியினால் தலைகனத்துப் போய் 50 வருடமாக நான் பயின்ற பண்பாட்டை இழக்கச் சம்மதிக்கமாட்டேன்".

"பதவி இன்று வரலாம், நாளை போகலாம். ஆனால் பண்பாட்டைப் பெறுவது கடினம். பெறமுடியாத பண்பாட்டைப் பெற்று–அந்தப் பண்பாட்டை இழக்கும் போதையாக ஒருபோதும் மாறமாட்டேன்".

### மரியாதை இல்லையென்றால் தமிழகம் பொறுக்காது!

"தமிழ்ப் பண்பாடு, உலகத்தில் எல்லா மனிதர்களையும் சகோதரர்களாகவும், தோழர்களாகவும், ஏற்றுக் கொள்ளும். தன்னிடம் வருபவர்களை வாழ்த்தி வரவேற்கும். எந்த மொழியையும் உரிய முறையில் மதிக்கும். அறிவுச் செல்வம் உலகின் எந்தக் கோடியில் இருந்தாலும் தேடிச் சென்று எடுத்து வரும். ஆனால்... தமிழர்கள் தமக்கென்று உள்ளதை ஒருக்காலும் இழக்கச் சம்மதிக்க மாட்டார்கள்".

இங்கிலாந்திலிருந்தும் பிற நாடுகளிலிருந்தும் வருகிற நிபுணர்கள் தமிழ்மொழி அருமையான மொழி என்று கூறுகிற நேரத்தில் அந்த மொழிக்குச் சொந்தக்காரர் நாம் என்று நினைக்கும்போது அந்த மொழி மீது நமக்குப் பற்றுப் பாசம் ஏற்படாமலா இருக்கும்? அத்தகைய மொழிக்கு எந்தக் காலத்திலாவது – எந்த நோக்குடனாவது – எப்படிப்பட்டவர்களிடமிருந்தாயினும் தனி மரியாதை கிடைக்கவில்லையென்றால் அதைத் தமிழகம் பொறுத்துக் கொள்ளாது.

ஆழ்கடல் கொந்தளித்துக் கொண்டுதான் இருக்கிறது. பக்குவமாகக் கடக்க வேண்டுமானால் நல்ல நாவாயின் – கப்பலின் மூலம் கடக்கலாம். அதுபோல தமிழர்களை அணைத்துக்கொண்டு சென்றால் அவர்களைவிடச் சிறந்தவர்கள் யாரும் இருக்க முடியாது. ❖



## இராமநாதபுரம் மாவட்டத்தில்

# நரிக்குறவர் குழந்தைகளுக்கான உண்டு உறைவிடப் பள்ளி



தமிழ்நாட்டில் உள்ள குழந்தைகளுக்கு தரமான கல்வி அளிக்கப்பட வேண்டும், அனைவருக்கும் கல்வி அளிக்கப்பட வேண்டும்; இதில் எவ்வித ஏற்றத் தாழ்வும் இருத்தல் கூடாது என்பன போன்ற பல்வேறு நோக்கங்களைக் கொண்டு கல்வித்துறையின் வளர்ச்சிக்காக மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் அதிக அளவிலான நிதி ஒதுக்கீடு செய்து, அதன்மூலம் பணிகள் நிறைவேற்றப்பட்டு வருகின்றன.

அதனடிப்படையில் நரிக்குறவர்களின் குழந்தைகளுக்கு இராமநாதபுரம் மாவட்டம், பண்ணவயல் ஊராட்சியில் உண்டு உறைவிடப்பள்ளி உருவாக்கப்பட்டுள்ளது. திருவாடானை ஊராட்சி ஒன்றியத்தில் அமைந்துள்ள பண்ணவயல் ஊராட்சியில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் உருவாக்கப்பட்ட பெரியார் நினைவு சமத்துவபுரத்தில் 36 வீடுகள் நரிக்குறவர்களுக்காக ஒதுக்கப்பட்டுள்ளன. இவற்றில் 58 குடும்பங்கள் குடியிருந்து வருகின்றன. பிழைப்புக்காக இவர்கள் வெளியூர்களுக்கும், திருவிழாக்கள் நடைபெறும் இடங்களுக்கும் சென்று பல நாட்களுக்குப் பின்னர் வீடுகளுக்குத் திரும்புகின்றனர்.

ஆதிதிராவிட மக்கள் பெரும்பான்மையாக வாழ்ந்து வரும் பண்ணவயல் ஊராட்சியில் ஊராட்சிஒன்றியத் துவக்கப்பள்ளி 1992 முதல் செயல்பட்டு வருகிறது. இப்பள்ளியில் 106 குழந்தைகள் கல்வி கற்கிறார்கள். அனைவரும் ஆதிதிராவிடர்களாவர். அதன் அங்கமாக நரிக்குறவர்களின் குழந்தைகளுக்கு கல்வியறிவு புகட்டவேண்டும்என்பதற்காக இப்பள்ளியுடன் இணைந்து, அனைவருக்கும் கல்வி இயக்கம் சார்பாக மாவட்ட ஆட்சித் தலைவரின் ஆலோசனை மற்றும் அறிவுரைகளின்படி, உண்டு உறைவிடப்பள்ளி கடந்த 2006–07ஆம் ஆண்டு துவங்கப்பட்டது. இந்தச் செயல்வழிக் கற்றல் பள்ளியில் நரிக்குறவர் குடும்பங்களைச் சேர்ந்த 16 ஆண் குழந்தைகளும், 21 பெண் குழந்தைகளும் கல்வி கற்கின்றனர்.

தமிழ்மொழி தெரியாத இக்குழந்தைகள், (ABL) செயல்வழிக்கற்றல் (அட்டை) மூலம் சிறப்பாகப் பாடம் கற்கிறார்கள். இக்குழந்தைகளுக்கு தங்குமிடம், மூன்று வேளை உணவு, புத்தகங்கள், சீருடைகள், எழுது பொருட்கள் ஆகியன அனைவருக்கும் கல்வி மூலம் இலவசமாக வழங்கப்படுகிறது. நரிக்குறவர்களின் குடும்பங்களைச் சேர்ந்த ஒரு குழந்தைகூட விடுபடாமல்

**குழந்தைகளிடையே தன்னம்பிக்கை, சுயமரியாதை, ஒழுக்கம், கட்டுப்பாடு, ஆளுமை உணர்வு போன்றவை வளரும் வகையில் அவர்களுக்குப் பயிற்சிகள் அளிக்கப்பட்டு வருகின்றன.**

அனைவரும் இந்தப் பள்ளியில் சேர்க்கப்பட்டுள்ளனர். இந்தப் பள்ளியினை நிர்வகிக்க அனைவருக்கும் கல்வி இயக்கம் சார்பில் ஆர். சசிகலா, ஐ. ஆர்த்தி, எஸ். ஜெகதீஸ்வரி ஆகியோர் பாதுகாவலர்களாகப் பணியாற்றி வருகின்றனர்.

இங்கு பயிலும் குழந்தைகள் தனியார் மெட்ரிக் பள்ளி குழந்தைககளைப் போன்று சீருடை, அடையாள அட்டை அணிந்து பள்ளிக்கு வருகின்றனர். ஆங்கிலப் பாடங்கள், பாடல்கள் போன்றவற்றை தெளிவாகக் கூறுகின்றனர். தேவாரம், திருவாசகப் பாடல்களைக் கற்று கோவில்களில் பாடி பரிசுகள் பெற்றுள்ளனர்.

இந்தப் பள்ளியின் தலைமையாசிரியராக திரு. பா. உதயகுமார் கடந்த 10 ஆண்டுகளாகப் பணியாற்றி வருகிறார். நரிக்குறவர்களின் வக்ரபோலி மொழியைக் கற்று அவர்களுடன் ஒருங்கிணைந்து பழகி, கல்வியின் அவசியம் குறித்து அவர்களின் மொழியிலேயே எடுத்துரைத்து, அவர்களிடையே நம்பிக்கையை வளர்த்து குழந்தைகளைப் பள்ளியில் இவர் சேர்க்க அரும்பாடுபட்டுள்ளார்.

கழிவு நீர் ஊருணியாக இருந்த இடம் செப்பனிடப்பட்டு ஊராட்சி ஒன்றியத் தொடக்கப்பள்ளியாக உருவெடுத்துள்ள இந்தப் பள்ளி வளாகத்தில் பழக்கன்றுகள், வேம்பு, அரிய மூலிகைச் செடிகள் பயிரிட்டுள்ளனர். இந்த மூலிகைச் செடிகளால் பலர் பல்வேறு நோய்களிலிருந்து குணமடைந்து உள்ளார்கள். திருவாடானை பகுதிகளில் இந்திய சுதந்திரப் போராட்டக் காலத்தில் ஈடுபட்டு உயிர்நீத்த தியாகிகளை நினைவு கூறும் வகையில் பள்ளி வளாகத்தில் உள்ள மரக்கன்றுகளுக்கு அவர்களின் பெயர்கள் சூட்டப்பட்டுள்ளன.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் சீரிய திட்டங்களுள் ஒன்றான இளம் சிறார் இருதயப் பாதுகாப்புத் திட்டத்தின்கீழ் இப்பள்ளியில் பயிலும் புனிதா என்ற 7 வயது நரிக்குறவர் குழந்தைக்கு மதுரை அரசு இராஜாஜி தலைமை மருத்துவமனையில் இருதய அறுவைச் சிகிச்சை செய்யப்பட்டுள்ளது.

நரிக்குறவர் பெற்றோர்களான விஜயன், விஜி ஆகியோர் இப்பள்ளியின் பணி குறித்துக் கூறுகையில், "எங்கள் குழந்தைகள் இங்கு படிக்கின்றனர். முன்பைவிட சுத்தமாக உள்ளனர். தினமும் பல்தேய்த்துக் குளிக்கின்றனர். அவர்கள் பள்ளியில் படிப்பதைப் பார்க்கும்போது மிகவும் மகிழ்ச்சியாக உள்ளது. எங்கள் குழந்தைகளும் பள்ளியில் படிக்கும் என்பதை நினைத்துக்கூடப் பார்க்கவில்லை. நாகரீகமற்ற வாழ்க்கை எங்களுடன் போகட்டும். எங்கள் குழந்தைகளின் எதிர்காலம் சிறப்பாக அமையட்டும்," என்றனர். இத்தகைய முயற்சிகள் மூலம் பெற்றோர்களிடம் விழிப்புணர்வு ஏற்பட்டதுடன், தங்கள் குழந்தைகள் அனைவருக்கும் கல்வி கற்பிக்க வேண்டும் என்ற மனப்பான்மையை ஏற்படுத்தியுள்ளது.

ஏழையின் சிரிப்பில் இறைவனைக் காண்போம் என்ற அறிஞர் அண்ணாவின் வாக்கிற்கிணங்கவும், சமச்சீர் கல்வி அளிக்கப்பட வேண்டும் என்ற மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் கனவை நனவாக்கும் வகையிலும் இத்தகைய உண்டு உறைவிடப்பள்ளிகள் செம்மையாகச் செயல்பட்டு வருகின்றன.

**– சி. செல்வராஜ்,**
செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்,
இராமநாதபுரம்



**அண்ணாவின் பொன்மொழி**

**கல்வியின் துணை**

போட்டியும், பொறாமையும், பொச்சரிப்பும் நிறைந்த இவ்வுலகில் நமது பாதையில் நாம் நேராக நடந்து செல்ல நமக்குத் துணையாக இருக்கக் கூடியது கல்விபோல் வேறொன்றுமில்லை.



# தமிழக அரசு பெண்களின் முன்னேற்றத்திற்காக எண்ணற்ற திட்டங்களைத் தீட்டி வருகிறது

## தமிழகத்தில் 4 இலட்சத்திற்கும் மேற்பட்ட சுயஉதவிக் குழுக்களுக்கு வங்கிகள் மூலம் ரூ.3,811 கோடி கடனுதவி

விருதுநகர் மாவட்டம், ஆர்.ஆர். நகரில் 5.12.2008 அன்று
மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை அமைச்சர்
திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள் ஆற்றிய உரை:–

விருதுநகர் மாவட்டத்தில் மகளிர் சுயஉதவிக் குழுக்களுக்கு சுழல்நிதி வழங்கும் சிறப்பான நிகழ்ச்சியை பெரிய வகையில் இல்லாது எழுச்சியோடு ஏற்பாடு செய்யப்பட்டு இதில் நானும் அமைச்சர் பெருமக்களும் உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகளும் கலந்து கொள்ளும் வகையில் ஏற்பாடு செய்த மாவட்ட ஆட்சித் தலைவருக்கு நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன்.



மகளிர் சுயஉதவிக் குழுக்களுடைய தற்போதைய நிலைமை அவர்களுக்கு அரசு அளித்து வரும் சலுகைகள் உதவிகள் குறித்து மாவட்ட ஆட்சித் தலைவர் சுட்டிக்காட்டினார். விருது நகர் மாவட்டத்தை பொறுத்த வரையில் கடந்த 11.9.2008 அன்று நடைபெற்ற சுழல்நிதி வழங்கும் விழாவில் 1,500 மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு சுழல்நிதி மானியமாக ரூ.1 கோடியே 50 இலட்சமும், வங்கிக் கடனாக ரூ.4 கோடியே 50 இலட்சமும் ஆக மொத்தம் ரூ.6 கோடி வழங்கப்பட்டது. இன்றைய தினம் நடைபெறும் விழாவில் 500 மகளிர் சுயஉதவிக் குழுக்களுக்கு மானியம் மற்றும் கடனாக ரூ.3 கோடி வழங்கப்படுகிறது. விருதுநகர் மாவட்டத்தில் மட்டும் நடப்பாண்டு இதுவரை 2,000 மகளிர் சுயஉதவிக் குழுக்களுக்கு ரூ.9 கோடி வழங்கப்பட்டுள்ளது.

**புதிய குழுக்கள் உருவாக்கம்**

மகளிர் சுயஉதவிக் குழுக்கள் முதல் முதலாக தலைவர் கலைஞர் அவர்கள் 1989ஆம் ஆண்டு தமிழக முதலமைச்சராக இருந்தபோதுதான் தருமபுரி மாவட்டத்தில் சிறிய அளவில் துவங்கப்பட்டது. இன்றைய தினம் மிகப் பெரிய அளவில் மகளிர் சுயஉதவிக் குழுக்கள் வளர்ச்சி அடைந்துள்ளன. தமிழ்நாட்டில் 3 இலட்சத்து 78 ஆயிரத்து 564 மகளிர் சுயஉதவிக் குழுக்கள் உள்ளன. இதில் 60 இலட்சத்து 63 ஆயிரம் பேர் உறுப்பினர்களாக உள்ளனர். மே 2006ல் கழக அரசு பொறுப்பேற்ற பின்னர் கடந்த இரண்டரை ஆண்டுகளில் மட்டும் 60,826 மகளிர் சுயஉதவிக் குழுக்கள் புதிதாக அமைக்கப்பட்டு உள்ளன. விருதுநகர் மாவட்டத்தை பொறுத்த வரையில் 11,089 மகளிர் சுயஉதவிக் குழுக்களில் 1,65,789 பேர் உறுப்பினர்களாக உள்ளனர். ஊரகப் பகுதிகளில் உள்ள குழுக்களுக்கு மட்டுமே சுழல்நிதி மானியம் வழங்கப்பட்டது. தற்போது நகர்ப்புற குழுக்களுக்கும் சுழல்நிதி மானியம் வழங்க அரசு உத்தரவிட்டுள்ளது.

**போட்டி போட்டு கடன் வழங்குகின்றன**

மகளிர் சுயஉதவிக் குழுக்கள் அமைக்கப்பட்டு பல ஆண்டுகள் ஆன நிலையிலும் சுழல்நிதி மானியம் வாங்கத் தகுதி இருந்தும் அவ்வாறு மானியம் பெறாமல் 1,50,000 குழுக்களுக்கு சுழல்நிதி மானியம் வழங்குவதற்காக ரூ.150 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டு வழங்கப்பட்டு வருகிறது. தமிழகத்தில் 4 இலட்சத்திற்கும் மேற்பட்ட சுயஉதவிக் குழுக்களுக்கு ரூ.3,811 கோடி வங்கிகள் மூலம் கடனுதவி வழங்கப்பட்டுள்ளது. கடனாகப் பெறும் மகளிர் சுயஉதவிக் குழுக்கள், வட்டியுடன் திரும்ப கடனை 99 சதவீதம் செலுத்தி வருகின்றனர். இது ஒட்டுமொத்த தமிழ்நாட்டிற்கு கிடைத்த பெருமை. வங்கிகளைப் பொறுத்த வரையில்

மகளிர் சுயஉதவிக் குழுக்களுக்கு போட்டி போட்டுக் கொண்டு கடனுதவி வழங்கி வருகின்றன.

இதற்கெனவே இந்தியன் வங்கி 16 புதிய வங்கி கிளைகளை இந்திய அளவில் துவக்கப்பட உள்ளது. அதில் தமிழ்நாட்டில் மட்டும் தருமபுரி, திண்டிவனம், தஞ்சாவூர், பல்லாவரம், திருவள்ளூர், திருச்சி, மதுரை, கோயம்புத்தூர், சேலம் மற்றும் வேலூர் ஆகிய 10 இடங்களில் புதிய உதவிக் குழு வங்கிக்கிளைகள் துவக்கப்பட உள்ளது. இந்த அரசு பெண்களின் முன்னேற்றத்திற்காக எண்ணற்ற திட்டங்களை செயல்படுத்தி வருகின்றது. பெண்களின் திருமணத்திற்காக 89ஆம் ஆண்டு ரூ.5 ஆயிரம் நிதியுதவி வழங்கப்பட்டது. 1996ஆம் ஆண்டு ரூ.10 ஆயிரம் ஆகவும், 2006ஆம் ஆண்டு 15 ஆயிரம் ஆகவும் நடப்பாண்டு ரூ.20 ஆயிரமாகவும் உயர்த்தி வழங்கி வருகிறது. மாநில அளவில் 42,787 பெண்களுக்கு ரூ.64 கோடியே 57 இலட்சத்து 45 ஆயிரம் வழங்கப்பட்டு உள்ளது.

விருதுநகர் மாவட்டத்தில் மட்டும் 611 பெண்களுக்கு ரூ.92 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது. மகப்பேறு நிதியுதவி திட்டத்தின்கீழ் மாநில அளவில் 9,66,199 பெண்களுக்கு ரூ.425 கோடி நிதிஉதவி வழங்கப்பட்டுள்ளது. விருதுநகர் மாவட்டத்தில் மட்டும் 3,025 பெண்களுக்கு ரூ.1 கோடியே 68 இலட்சத்து 97 ஆயிரம் நிதியுதவி வழங்கப்பட்டுள்ளது.

50 வயதைக் கடந்த திருமணம் ஆகாத மகளிருக்கு நிதியுதவி வழங்கும் திட்டத்தின்கீழ் மாநில அளவில் 9,100 மகளிருக்கு ரூ.36 இலட்சத்து 40 ஆயிரம் நிதியுதவி வழங்கப்பட்டுள்ளது. விருதுநகர் மாவட்டத்தில் மட்டும் 174 மகளிருக்கு ரூ.69 ஆயிரத்து 600 நிதியுதவி வழங்கப்பட்டு உள்ளது.

நியாயவிலைக் கடைகளில் 10 வகையான சமையல் பொருட்கள் ரூ.50 மானிய விலையில் வழங்கப்படுகிறது. இந்த அரசு சொன்னதை மட்டும் செய்யாமல் சொல்லாததையும் செய்து வருகின்றது. தேர்தல் நேரத்தில் 1 கிலோ அரிசி ரூ.2க்கு வழங்குவோம் என்று சொன்னோம். ஆனால் தற்போது 1 கிலோ அரிசி ரூ.1க்கு வழங்கி வருகிறோம். பெண்கள் திருமண உதவி ரூ.15 ஆயிரம் வழங்குவோம் என்று சொன்னோம். தற்போது ரூ.20 ஆயிரம் வழங்கி வருகின்றோம். பள்ளிக் குழந்தைகளுக்கு வாரம் இருமுறை முட்டை வழங்குவோம் என்று சொன்னோம். தற்போது வாரம் மூன்று முறை முட்டை வழங்கி வருகிறோம். மகளிர் நலனுக்காக இதுபோன்று அருமையான திட்டங்களை செயல்படுத்தி வரும் இந்த அரசுக்கு நீங்கள் தொடர்ந்து துணை நிற்க வேண்டும் என்று மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை அமைச்சர் மு.க.ஸ்டாலின் குறிப்பிட்டார்.

❖ ❖ ❖

# மத்திய கப்பல் மற்றும் சாலைப் போக்குவரத்துத்துறை மூலம் தமிழகத்தில் ரூ.50,594 கோடியில் பணிகள்

திருச்சிராப்பள்ளி மாவட்டம் சமயபுரத்தில் நடைபெற்ற விழாவில், ரூ.110 கோடி செலவில் பாடாலூர்–சமயபுரம் இடையே அமைக்கப்பட்ட 21 கி.மீ நான்கு வழிச் சாலையை திறந்து வைத்து மாண்புமிகு மத்திய கப்பல் மற்றும் சாலைப் போக்குவரத்துத்துறை அமைச்சர் திரு. டி.ஆர். பாலு அவர்கள் பேசியபோது, “தமிழகத்தில் 4,675 கி.மீ.க்கு புதிய நெடுஞ்சாலைகளுக்கான பணிகள் நடைபெற்று வருகின்றன.

தமிழகத்துக்கு நான்குவழிச் சாலை மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் ரூ.33,000 கோடியிலும், சிறப்புத் திட்டங்களின் மூலமாக ரூ.2,023 கோடியிலும், துறைமுகங்கள் வளர்ச்சி, மத்திய கடல்சார் பல்கலைக்கழகம், கடல்சார் வளாகம் என ரூ.15,571 கோடி என மத்திய அரசு மூலமாக ரூ.50,594 கோடிக்குத் திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன”, என்று தெரிவித்தார்.



# கடந்த இரண்டரை ஆண்டுகளில் அரசுத்துறைகளில் 2 இலட்சத்து 78 ஆயிரத்து 294 பேர் பணி நியமனம்

தமிழக அரசு வழங்கியுள்ள பணி நியமனங்கள் பற்றிய துறைவாரியான விவரங்கள் பின்வருமாறு:–

1. ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை 1,213 பேர் .
2. வேளாண்மைத்துறை 2,028 பேர்.
3. கால்நடைப் பராமரிப்பு, பால்வளம் மற்றும் மீன்வளத்துறை 2,019 பேர்.
4. பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நலத்துறை 853 பேர்.
5. கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை 953 பேர்.
6. வணிகவரி மற்றும் பதிவுத்துறை 445 பேர்.
7. சுற்றுச்சூழல் மற்றும் வனத்துறை 1,162 பேர்.
8. எரிசக்தித்துறை 20,860 பேர்.
9. நிதித்துறை 460 பேர்.
10. மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்துறை 19,693 பேர்.
11. உயர்கல்வித்துறை 4,471 பேர்.
12. வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை 197 பேர்.
13. கைத்தறி, கைவினை மற்றும் துணிநூல்துறை 65 பேர்.
14. நெடுஞ்சாலைத்துறை 760 பேர்.
15. உள்துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத்துறை 13,939 பேர்.
16. தொழில்துறை 92 பேர்.
17. தகவல் தொழில்நுட்பவியல்துறை 23 பேர்.
18. தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை 438 பேர்.
19. சட்டமன்றப் பேரவைச் செயலகம் 5 பேர்.
20. சட்டத்துறை 129 பேர்.
21. நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல்துறை 18,364 பேர்.
22. பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை 111 பேர்.
23. திட்டம் மற்றும் வளர்ச்சித்துறை 52 பேர்.
24. பொதுத்துறை 82 பேர்.
25. பொதுப்பணித்துறை 1,990 பேர்.
26. ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறை 30,614 பேர்.
27. வருவாய்த்துறை 5,926 பேர்.
28. பள்ளிக் கல்வித்துறை 82,479 பேர்.
29. சிறுதொழில்துறை 108 பேர்.
30. சமூக நலம் மற்றும் சத்துணவுத்துறை 28,800 பேர்.
31. சுற்றுலா மற்றும் பண்பாட்டுத்துறை 135 பேர்.
32. தமிழ் வளர்ச்சி, அறநிலையங்கள் மற்றும் செய்தித்துறை 285 பேர்.
33. போக்குவரத்துத்துறை 39,487 பேர்.
34. இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை 56 பேர்.

ஆக மொத்தம், இதுவரை தமிழ்நாடு அரசில், அரசுத் துறைகளின் மூலம் 2 இலட்சத்து 78 ஆயிரத்து 294 நிரப்பப்படாத பணியிடங்கள் நிரப்பப்பட்டுள்ளன. ★

# நகராட்சி நிருவாகத்துறையில் பணிபுரியும் 84 பேருக்கு பதவி உயர்வு மூலம் துப்புரவு ஆய்வாளர் பணி நியமன ஆணை

முந்தைய ஆட்சியில் அரசு மற்றும் உள்ளாட்சி நிறுவனங்களில் நேரடி நியமனங்களுக்கு 29.11.2001 முதல் ஒட்டு மொத்த தடை விதிக்கப்பட்டிருந்தது. அரசு பணியின்போது இயற்கை எய்திய அரசுப் பணியாளர்களின் பணியிடங்களில் வாரிசு தாரர்களைக் கருணை அடிப்படையில் நியமனம் செய்வதும் தடை செய்யப்பட்டது. இதன் காரணமாக பணியிடைக் காலத்தில் இயற்கை எய்திய பணியாளர்களின் வாரிசுதாரர்களுக்குகூட பணி நியமனம் கிடைக்காமல் துன்புற்றனர்.

திராவிட முன்னேற்றக் கழக அரசு மீண்டும் பதவியேற்று பின்னர் அரசுப் பணியில் நேரடி நியமனத்திற்கு இருந்த தடை நீக்கப்பட்டது. கருணை அடிப்படையில் நியமனம் செய்வதற்கு இருந்த தடையும் நீக்கப்பட்டது.

உள்ளாட்சி அமைப்புகளில் காலியாக இருந்து வந்த அனைத்துப் பணியிடங்களையும் நிரப்புவதற்கு தொடர்ந்து நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

இதன் அடிப்படையில் நகராட்சி நிருவாகத் துறையில் 15 மருத்துவர் பணியிடங்களும், 48 உதவிப் பொறியாளர் பணியிடங்களும், 3 நகரமைப்பு அலுவலர் பணியிடங்களும், 128 துப்புரவு ஆய்வாளர்கள் பணியிடங்களுக்கும் தேர்வு பெற்றவர்களுக்கான நியமன உத்தரவுகள் மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை அமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் அவர்களால் ஏற்கெனவே வழங்கப்பட்டுள்ளது.

கருணை அடிப்படையில் நியமனம் செய்ய அரசு உத்தரவிட்டதற்கிணங்க, நிலுவையில் இருந்த மனுக்கள் பரிசீலனை செய்யப்பட்டு 334 பணியிடங்களுக்கு நியமனம் பெற்றவர்களுக்கான பணிநியமன உத்தரவுகள் வழங்கப்பட்டன.

மேலும் நேரடி நியமனத்தின் மூலம் தேர்வுசெய்யப்பட்ட 11 இரண்டாம் நிலை நகராட்சி ஆணையர்களுக்கு 30.9.2008 அன்று பணிநியமன ஆணை வழங்கப்பட்டது.

இதனைத் தொடர்ந்து பொதுசுகாதாரம் மற்றும் நோய்த் தடுப்பு இயக்குநரால் நடத்தப்படும் 6 மாத பயிற்சியில் தேர்ச்சி பெற்ற நகராட்சிகளில் பணிபுரியும் 84 துப்புரவுப் பணி மேற்பார்வையாளர்கள் மற்றும் களப்பணி உதவியாளர்கள் பணி உயர்வு மூலம் துப்புரவு ஆய்வாளர்களாக பணி நியமனம் செய்யப்பட்டுள்ளனர். இதற்கான உத்தரவு 13.11.2008 அன்று மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை அமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் அவர்களால் தலைமைச் செயலகத்தில் வழங்கப்பட்டது.

இந்த நிகழ்ச்சியின்போது நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல்துறை அரசு முதன்மைச் செயலர் திரு. தீனபந்து, இ.ஆ.ப., நகராட்சி நிருவாக ஆணையர் டாக்டர் நிரஞ்சன் மார்டி, இ.ஆ.ப., நகராட்சி நிருவாக கூடுதல் ஆணையர் முனைவர். ப. செந்தில்குமார், இ.ஆ.ப., தமிழ்நாடு நகர்மன்றத் தலைவர்களின் பேரவைத் தலைவரும் ஆலந்தூர் நகர் மன்றத் தலைவருமான திரு. ஆர். எஸ். பாரதி மற்றும் நகராட்சி நிருவாகத்துறை உயர் அலுவலர்கள் உடன் இருந்தனர்.

★ ★ ★

## அண்ணாவின் பொன்மொழிகள்

### ஒட்டை வேண்டாம்



நீங்கள் கடினமாக உழைத்தால் மட்டும் போதாது. துணிவுடன் நீங்கள் செயலாற்றினால் மட்டும் போதாது. பல நூற்றாண்டு காலமாக உங்கள் உள்ளங்களிலே புகுந்து கொண்டுள்ள "ஒட்டைகளை அகற்ற முன்வரவேண்டும். பகுத்தறிவு தங்கு தடையின்றி அங்கு ஆட்சி செலுத்த வேண்டும்."



# ஏழை எளிய, நடுத்தர மக்கள் நோயற்ற வாழ்வு பெற தமிழ்நாடு அரசின் பல்வேறு நலத்திட்டங்கள் தமிழகத்தில் மருத்துவத் துறைக்காக மட்டும் கடந்த 3 ஆண்டில் 21,500 பேர் நியமனம்

மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை அமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் ஆற்றிய உரை

இன்றைக்கு இந்தியாவிலேயே தமிழகம் மருத்துவத் துறையில் சிறந்து விளங்குகிறது. இந்தியாவின் பல்வேறு மாநிலங்களில் இருந்தும் உலகின் பல நாடுகளில் இருந்தும் சிகிச்சை பெறு வதற்காக தமிழகத்திற்கு இன்றைக்கு பலர் வந்து செல்கின்றனர்.

அந்த அளவிற்கு தமிழகத்தில் மருத்துவத்துறை சிறந்து விளங்குகிறது. தமிழகத்தில் அண்மையில் ஒரு செய்தி, ஹெல்மெட் அணியாமல் இருசக்கர வாகனத்தில் சென்ற ஒரு மாணவன் கடும் விபத்துக்குள்ளாகி அவனது மூளை செயலிழந்து விட்டது. இதை அறிந்த அவர் தந்தை அவரும் ஒரு டாக்டர் என்பதால் மூளை செயலற்றுவிட்டபோதிலும் இருதயம் நன்கு செயல்பட்டிருந்த காரணத்தால் அதை வேறு ஒருவருக்கு வழங்கி அதன்மூலம் இருதயம் கெட்டுப்போன ஒருவருக்கு வாழ்வளிக்க முன்வந்தார். அதுபோன்ற மனிதாபிமான செயல்கள் தொடர்ந்து தமிழகத்தில் செயல்பட்டுக் கொண்டிருக்கின்றன.

இருதய மாற்று அறுவைச் சிகிச்சையில் தமிழகம் சிறந்து விளங்குகின்ற காரணத்தால்தான் இது சாத்தியமாயிற்று.

நடுத்தர ஏழை எளிய மக்கள் சிறந்த சிகிச்சைப் பெற இந்த அரசு பல்வேறு நலத் திட்டங்களை சிறப்பாக செயல்படுத்தி வருகின்றது. சென்னை மாநகராட்சி மேயராக நான் இருந்த போது சென்னையில் வளர்ச்சியின் ஒரு பங்காக பத்து மேம்பாலங்களை கட்ட திட்டமிட்டு அதில் ஒன்பதை கட்டிமுடித்தோம். இந்த மருத்துவமனையின் முன்னால் கட்டப்பட்டுள்ள மேம்பாலத்தை பராமரிக்க பொதுமக்களின் ஒத்துழைப்பு எதிர்பார்த்த நிலையில், இம்மருத்துவமனையின் தலைவர் டாக்டர். ராமமூர்த்தி அவர்கள்தான் மேற்கொள்ள முன்வந்தார்.

இப்படி அரசின் திட்டங்களுக்கு பொதுமக்களும் ஒத்துழைப்பு தர வேண்டும். மனித சமுதாயம் திறம்பட விளங்க பல்வேறு நலத்திட்டங்கள் அவசியம். தமிழக அரசு வருமுன் காப்போம் திட்டத்தின் மூலம் தமிழகத்தில் பல்வேறு சேவைகளை செய்து வருகிறது.

மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்களால் ஏற்கெனவே அறிமுகம் செய்து, இடையில் நிறுத்தப்பட்டு, பின்னர் மீண்டும் ஆட்சிக்கு வந்தபின்னர் வருமுன் காப்போம் திட்டம் நல்ல முறையில் தமிழகத்தில் செயல்பட்டு அதனால் ஏராளமானோர் பலன் பெற்று வருகின்றனர்.

அனைத்துத் துறைகளுக்கும் முக்கியத்துவம் கொடுத்து அதற்கான நிதியை தமிழக அரசு ஒதுக் கினாலும், மருத்துவத் துறைக்கு அதிக முக்கியத்துவம் அளித்து நிதியை ஒதுக்கி வருகிறது. 2006 – 07ஆம் நிதியாண்டினை பொறுத்த வரையில் 1,951 கோடி ரூபாயும், 2007 – 08ஆம் நிதியாண்டில் 2,286 கோடி ரூபாயும், 2008 – 09ஆம் நிதியாண்டில் 2,741 கோடி ரூபாய் என மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் மருத்துவத்துறைக்கு மட்டும் ஒதுக்கியுள்ளார்.

அதுமட்டுமின்றி கடந்த மூன்றாண்டுகளில் மட்டும் புதியதாக 4,102 மருத்துவர்களும், 5,124 செவிலியர்களும், 12,332 பணியாளர்களும் ஆக 21,558 பேரை மருத்துவத் துறைக்கு இந்த அரசு நிய மித்துள்ளது குறிப்பிடத்தக்கது. அதுமட்டுமின்றி புதியதாக 756 மருத்துவர்களுக்கும் தற்போது நியமன ஆணை வழங்கியுள்ளது.

அந்த வகையில் மருத்துவத்துறை சிறப்புடன் விளங்க தமிழக அரசு தொடர்ந்து சீரிய முறையில் செயல்பட்டு வருகிறது. அதற்கு பொதுமக்களும் இதுபோன்ற தனியார் மருத்துவமனைகளும் ஒத்துழைப்பு நல்கி தமிழகம் மருத்துவத்துறையில் சிறந்து விளங்க உதவிடுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

அவ்வாறு செயல்பட்டால் இந்த மருத்துவத்துறை நிச்சயம் பொதுமக்களுக்கு தொண்டாற்றுவதில் பெரும் வெற்றி பெறும் என்பதோடு, பொதுமக்களும் அரசின் நலத்திட்டங்களை உரிய முறையில் பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என கேட்டுக் கொள்கிறேன். ❖

### கல்வியின் துணை



அண்ணாவின் பொன்மொழி

போட்டியும், பொறாமையும்,
பொச்சரிப்பும் நிறைந்த
இவ்வுலகில் நமது பாதையில்
நாம் நேராக நடந்து செல்ல
நமக்குத் துணையாக
இருக்கக் கூடியது
கல்விபோல்
வேறொன்றுமில்லை.

# பேரூராட்சிகள்துறை தொடர்பான அரசாணைகள் மற்றும் சுற்றறிக்கைகள் அடங்கிய நூல் தொகுப்பு வெளியீடு



பேரூராட்சிகள்துறை தொடர்புடைய அரசாணைகள் மற்றும் முக்கிய சுற்றறிக்கைகள் அடங்கிய நூல் தொகுப்பினை மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை அமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் அவர்கள் 17.11.2008 அன்று வெளியிட்டார்.

பேரூராட்சிகள்துறை 7.5.1981 அன்று துவக்கப்பட்டு நகர்ப்புற மக்களின் அடிப்படை வசதிகளை மேம்படுத்தும் பணியில் ஈடுபட்டு வருகிறது. இத்துறை அரசின், நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல்துறை நிருவாகத்தின்கீழ் இயங்கி வருகிறது. பேரூராட்சிகள் துறையின் செயல்பாட்டிற்கென அரசாணைகள் மற்றும் வழிகாட்டு · சுற்றறிக்கைகள் அவ்வப்போது வெளியிடப்பட்டு வருகின்றன. பேரூராட்சிகள்துறை அலுவலர்களின் நிருவாகம் மற்றும் திட்டச் செயலாக்கத்தினை எளிதாக்கிடவும், மேம்படுத்தவும், அவற்றைத் தொகுத்து வெளியிட பேரூராட்சிகளின் ஆணையரால் முடிவெடுக்கப்பட்டது.

அதன்படி, 183 முக்கிய அரசாணைகள் அடங்கிய முதன்மைத் தொகுப்பு ஒன்றும், 35 சுற்றறிக்கைகள் அடங்கிய உபதொகுப்பு ஒன்றும் என இரண்டு தொகுப்புகளை மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை அமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் அவர்கள் வெளியிட்டார். இத்தொகுப்பு அரசு வலைதளத்திலும் மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை அமைச்சர் அவர்களால் வெளியிடப்பட்டது. இத்தொகுப்புகள் பேரூராட்சிகளில் அடிப்படை வசதிகளை மேம்படுத்தக் கூடிய குடிநீர் வழங்கல், கட்டட அனுமதி, வரியினங்கள், மனைப்பிரிவுகளை முறைப்படுத்துதல், இதர முக்கிய திட்டப்பணிகள் மற்றும் நிருவாக மேம்பாடு குறித்த அரசாணைகளை உள்ளடக்கியதாக அமைந்துள்ளது. இத்தொகுப்புக்களை அரசு முதன்மைச் செயலர், நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல்துறை திரு. கே. தீனபந்து, இ.ஆ.ப., அவர்கள் பெற்றுக்கொண்டார்.

வெளியிடப்பட்ட தொகுப்புகள் மாவட்ட ஆட்சித் தலைவர்கள், பேரூராட்சிகளின் உதவி இயக்குநர்கள் மற்றும் செயல் அலுவலர்களின் நிருவாகச் செயல்பாடுகளுக்கும், மேம்பட்ட திட்டச் செயலாக்கத்திற்கும் மற்றும் மக்கள் பிரதிநிதிகளின் பயன்பாட்டிற்கும் பயனுள்ளதாக அமையும் வகையில் தொகுக்கப்பட்டுள்ளது.

இந்நிகழ்ச்சியின்போது பேரூராட்சிகளின் ஆணையர் டாக்டர். கே. கோபால், இ.ஆ.ப., மற்றும் பேரூராட்சிகளின்துறை அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

இத்தொகுப்பிலுள்ள விபரங்களை வலைதளம் மூலமும் பெற்றுக்கொள்ளலாம். வலைதள முகவரி www.tn.gov.in/dtp ❖



ஜவஹர்லால் நேரு தேசிய நகர்ப்புற புனரமைப்பு இயக்கத்தின்கீழ் செயல்படுத்தப்படும் ஒருங்கிணைந்த வீட்டு வசதி மற்றும் குடிசைப்பகுதி மேம்பாட்டுத் திட்டம் மற்றும் நகர்ப்புற ஏழைகளுக்கான அடிப்படை வசதிகளுக்கான திட்டம், தமிழகத்தில் உள்ள நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளால் செயல்படுத்தப்படுகிறது. இத்திட்டத்தின்கீழ் நகர்ப்புறங்களில் உள்ள குடிசைப் பகுதிகளில் வாழ்வோரின் வாழ்க்கைத் தரத்தினை உயர்த்த புதிய வீடுகள் கட்டுதல், மற்ற உட்கட்டமைப்பு வசதிகளான சாலை, குடிநீர், பாதாளச் சாக்கடை, மழைநீர் வடிகால், தெருவிளக்குகள், பல்நோக்கு வளாகங்கள் ஆகியவற்றை ஒருங்கிணைந்த வீட்டு வசதி மற்றும் குடிசைப் பகுதி மேம்பாட்டுத் திட்டம் / நகர்ப்புற ஏழைகளுக்கான அடிப்படை வசதி திட்டத்தின் மூலம் ஏற்படுத்தி தரப்படுகிறது.

ஒருங்கிணைந்த வீட்டு வசதி மற்றும் குடிசைப்பகுதி திட்டத்தில், மத்திய அரசு 80 சதவீதம் மானிய நிதியும் 10 சதவீதம் மாநில அரசு மானிய நிதியும் 10 சதவீதம் பயனாளிகளின் பங்குத் தொகையாகவும் இருக்கும்.

நகர்ப்புற ஏழைகளுக்கான அடிப்படை வசதித் திட்டத்தில் 50 சதவீத மத்திய அரசும் 40 சதவீத மாநில அரசும், 10 சதவீத பயனாளிகளின் பங்குத்தொகையாகவும் இருக்கும்.

தமிழகத்தில் இதுவரை நகர்ப்புற ஏழைகளுக்கான அடிப்படை வசதி திட்டத்தின்கீழ் 24 திட்டங்களுக்கு ரூ.2134.10 கோடியில் 85,607 வீடுகள் மற்றும் உட்கட்டமைப்பு வசதிகள் ஏற்படுத்திட அனுமதிக்கப்பட்டுள்ளது.

ஒருங்கிணைந்த வீட்டு வசதி மற்றும் குடிசைப் பகுதி மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் 30 உள்ளாட்சி அமைப்புகளுக்கு 19,766 வீடுகள் கட்டவும் உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தவும் ரூ.225.66 கோடி ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. இப்பணிகள் பல்வேறு நிலையில் முன்னேற்றத்தில் உள்ளன.

21.11.2008 அன்று மாநில அளவிலான வழிகாட்டும், ஒருங்கிணைப்பு மற்றும் கண்காணிப்புக் குழுவின் கூட்டம் மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை அமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் அவர்கள் தலைமையில் நடத்தப்பட்டது.

**நகராட்சி மற்றும் பேரூராட்சிகளில் வீட்டு வசதி மற்றும் அடிப்படை வசதிகளை மேம்படுத்த திட்டம்**

தேனி நகராட்சிக்கான ரூ.3.85 கோடிக்கான திட்ட அறிக்கை, திண்டுக்கல் நகராட்சிக்கான ரூபாய் 9 கோடியே 24 இலட்சத்திற்கான திட்ட அறிக்கையையும் பரிசீலனை செய்து ஹட்கோ நிறுவனத்தின் மூலமாக மத்திய அரசின் ஒப்புதலுக்கு அனுப்ப கண்காணிப்புக் குழு பரிந்துரை செய்துள்ளது.

சேலம் மாவட்டத்தைச் சேர்ந்த பேரூராட்சிகளுக்கு ரூ.19 கோடியிலும், நாமக்கல் மாவட்டத்தைச் சேர்ந்த 7 பேரூராட்சிகளுக்கு ரூ.11.75 கோடியிலும், திருநெல்வேலி மாவட்டத்தைச் சேர்ந்த 5 பேரூராட்சிகளுக்கு ரூ.4.23 கோடியிலும், ஈரோடு மாவட்டத்தைச் சார்ந்த 19 பேரூராட்சிகளுக்கு ரூ.21.93 கோடியிலும் திட்டங்களை ஹட்கோ மூலமாக மத்திய அரசின் ஒப்புதலுக்கு அனுப்ப மாநில கண்காணிப்புக் குழு பரிந்துரை செய்துள்ளது.

தமிழ்நாடு குடிசை மாற்று வாரியத்தின் மூலம் செயல்படுத்தப்படும் சென்னையில் உள்ள எழில்நகர், பெரும்பாக்கம் நிலை 1 மற்றும் பெரும்பாக்கம் நிலை 2, மதுரையில் உள்ள பெரியார் நகர், கோவையில் உள்ள உக்கடம் மற்றும் அம்மன் குளம் ஆகிய திட்டங்களில் இடமாற்றம், வடிவமைப்பு மாற்றம் மற்றும் 2008–2009 விலை விகிதத்தில் திருத்திய மதிப்பீடு சமர்ப்பித்துள்ளது. இதனால் ஏற்படும் கூடுதல் செலவினமாக ரூ.401.80 கோடியினை தமிழக அரசு வழங்கவும் இக்குழு பரிந்துரை செய்தது.

இக்கூட்டத்தில், மாண்புமிகு குடிசை மாற்று மற்றும் இடவசதி கட்டுப்பாட்டுத்துறை அமைச்சர் திரு. சுப. தங்கவேலன், டுபிட்கோ தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குநர் திரு. கௌரிசங்கர், இ.ஆ.ப., வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை வளர்ச்சி ஆணையர் மற்றும் அரசு முதன்மைச் செயலர் திரு. ஆர். செல்லமுத்து, இ.ஆ.ப., நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல்துறை அரசு முதன்மைச் செயலர், திரு.கே. தீனபந்து, இ.ஆ.ப., நிதித்துறை அரசு முதன்மைச் செயலர் திரு. கு. ஞானதேசிகன். இ.ஆ.ப., திட்டம் மற்றும் வளர்ச்சித்துறை அரசு முதன்மைச் செயலர், முனைவர் சி. சந்திரமௌலி, இ.ஆ.ப., நகராட்சி நிருவாக ஆணையர் டாக்டர். நிரஞ்சன் மார்டி, இ.ஆ.ப., தமிழ்நாடு குடிசை மாற்று வாரியம் மேலாண்மை இயக்குநர், திரு. டி.கே. இராமச்சந்திரன், இ.ஆ.ப., சென்னை மாநகராட்சி ஆணையர் திரு. ராஜேஷ் லக்கானி, இ.ஆ.ப., சென்னை பெருநகர குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்று வாரியத்தின் மேலாண்மை இயக்குநர் திரு. சுனில் பாலிவால், இ.ஆ.ப., நகராட்சி நிருவாகக் கூடுதல் ஆணையர் முனைவர் பி. செந்தில்குமார், இ.ஆ.ப., மற்றும் இதர அலுவலர்கள் மேற்படி கூட்டத்தில் கலந்து கொண்டார்கள். ❖

# தமிழகத்தில் 9 ஆயிரம் முகாம்கள் மூலம் கண்டுபிடிக்கப்பட்ட 764 சிறுவர்களுக்கு இலவச இருதய அறுவைச் சிகிச்சை

நகர மக்கள் அதிநவீன மருத்துவச் சிகிச்சை முறைகளை பெறுகின்றனர். அதற்கான வாய்ப்பும் வசதியும் அவர்களுக்கு கிடைக்கின்றன, அதே வாய்ப்பை கிராம மக்களும் பெறுவதற்காக தமிழக அரசு வருமுன் காப்போம் திட்டத்தை அறிமுகம் செய்துள்ளது

நகர மக்களுக்கு இணையாக கிராம மக்களும் சிகிச்சை பெறுவதற்காக மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் வருமுன் காப்போம் திட்டத்தை அறிமுகம் செய்து, இதுவரை 9 ஆயிரம் முகாம்கள் மூலம் கிராமப் பகுதியில் உள்ளவர்கள் சிறந்த சிகிச்சை பெற வழி வகுக்கப்பட்டுள்ளது. அவ்வாறான முகாம்கள் மூலம் 764 சிறுவர்களுக்கு இலவசமாக இருதய அறுவைச் சிகிச்சை செய்யப்பட்டுள்ளது என்று மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் திரு. எம்.ஆர்.கே பன்னீர்செல்வம் அவர்கள் தெரிவித்தார்.

சென்னை மலர் மருத்துவமனையில் 17.12.2008 அன்று மலர் இருதய அறுவைச் சிகிச்சை மையத் துவக்க விழாவில் மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம் அவர்கள் பேசியதாவது:

தமிழகத்தில் மருத்துவத்துறை சிறந்த முறையில் விளங்குவதற்கு அரசின் நலத்திட்டங்கள் முழு முதல் காரணமாக விளங்குகின்றன. அத்துடன் அரசின் திட்டங்களுக்கு தனியாரும் ஒத்துழைப்பு நல்கினால் இன்னும் சிறப்பாகத் தமிழகத்தில் சுகாதாரம் சிறந்து விளங்கும்.

தமிழகம் முழுவதும் இதுவரை ஒன்பதாயிரத்துக்கும் அதிகமான வருமுன் காப்போம் திட்ட முகாம்களை இந்த அரசு நடத்தி அதன்மூலம் கிராமத்தில் உள்ள மக்களும், எவ்வாறு எல்லாம் பாதிக்கின்றனர் என்பதை அறிந்து அதற்கேற்ற சிகிச்சைகளை அளித்து உதவுகின்றன.

காலப்போக்கில் உடல் உழைப்பு என்பது குறைந்துவிட்ட காரணத்தால் பல்வேறு நோய்களுக்கு ஆளாக நேரிடுகிறது. இருதயம் தொடர்பான பிரச்சினைகளும் தற்போது கிராமப்பகுதியிலே அதிக அளவில் இருப்பதும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. அதற்கு இந்த வருமுன் காப்போம் திட்ட மருத்துவ முகாம்கள்தான் உதவி புரிகின்றன.

இன்றைக்குத் தமிழகம் மருத்துவச் சுற்றுலாத் தலமாக விளங்குகிறது. அமெரிக்கா, லண்டன் போன்ற வெளிநாடுகளுக்கு சிகிச்சை பெறுவதற்காக இங்கிருந்து சென்ற காலம்போய் இப்பொழுது தமிழகத்திற்கு அங்கிருந்து – அதாவது வெளிநாடுகளில் இருந்து சிகிச்சை பெறுவதற்காக வருவதை காண்கின்றோம்.

அந்த அளவிற்கு இன்றைக்கு தமிழகம் மருத்துவத்துறையில் சிறந்து விளங்குகின்றது. சிறுவர்களும் குறிப்பாக 12 வயதிற்குட்பட்டவர்கள் இருதயத் தொடர்பான நோய்களுக்கு ஆளாவதை அறிந்து அவர்களுக்கு சிறப்புச் சிகிச்சை அளிக்க சுமார் 10 கோடி ரூபாய் வரை தமிழக அரசு நிதியுதவி அளித்துள்ளது.

இதுவரை வருமுன் காப்போம் திட்ட முகாம்கள் மூலம் கண்டெடுக்கப்பட்ட 764 சிறுவர்களுக்கு அரசின் உதவியால் இருதய அறுவைச் சிகிச்சை மேற்கொள்ளப்பட்டு அவர்கள் நலமுடன் இருந்து வருகின்றனர். குறைந்த செலவில் அல்லது செலவில்லாமல் நிறைவான சேவை தமிழக அரசு மருத்துவமனைகளில் வழங்கப்படுகின்றது என்பது நமக்கெல்லாம் ஒரு வரப்பிரசாதமாகும்.

குறைந்த அளவில் சிறந்த சிகிச்சை வழங்கும் அரசின் திட்டங்களைப் பொதுமக்களும் நல்ல முறையில் பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என்று மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்.

**அண்ணாவின் பொன்மொழி**

**நாட்டுடைமை**

அரசின் புதிய முயற்சிகள் யாரையும்
எந்தத் தொழிலில் உள்ளவர்களையும்
நிலை குலையச் செய்வதற்காக அல்ல,
அடிப்படைத் தொழில்கள்
நாட்டுடைமையாக இருக்க வேண்டும்
என்ற பொதுக் கருத்துக்கு ஒப்பவே
இவை செய்யப்படுகின்றன.



# ஈரோடு மாவட்டத்தில், அனைத்துப் பேரூராட்சி அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தின்கீழ் அடிப்படை வசதிகள் நிறைவேற்றம்



ஈரோடு மாவட்டத்தில் உள்ள 53 பேரூராட்சிகளில் 2007–08ஆம் ஆண்டு முதல் 2010–11ஆம் ஆண்டு முடிய நான்கு கட்டங்களாக அனைத்துப் பேரூராட்சி அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தை செயல்படுத்திட அரசு ஆணையிட்டுள்ளது. 2007–08 – ஆம் ஆண்டில் 14 – பேரூராட்சிகளிலும், 2008–09 –ஆம் ஆண்டில் 13 –பேரூராட்சிகளிலும், 2009–10 மற்றும் 2010–11ஆம் ஆண்டுகளில் தலா 13 – பேரூராட் சிகளிலும் இத்திட்டம் செயல்படுத்தப்பட உள்ளன. ஒவ்வொரு பேரூராட்சிக்கும் அரசு மானியமாக ரூ. 50 இலட்சம் வழங்கப்படுகிறது. பேரூராட்சிக்குட்பட்ட பகுதிகளில் இந்நிதியைக் கொண்டு சாலைகள் மேம்பாடு, சமுதாயக்கூடம், குளம் மேம்பாடு, குடிசைப்பகுதியில் சிமெண்ட் தளம் அமைத்தல், சந்தை மேம்பாடு, கடைகள் கட்டுதல், மயானம் புதிதாக அமைத்தல், குடிநீர் விநியோகம், மின் விளக்குகள் அமைத்தல், பூங்கா அமைத்தல் போன்ற பல்வேறு பணிகள் நிறைவேற்றப்பட்டு வருகிறது.

2007–08ஆம் ஆண்டு அனைத்துப் பேரூராட்சி அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தின்கீழ் வடுகபட்டி, பள்ளபாளையம், ஒலகடம், ஜம்பை, நல்லாம்பட்டி, பி. மேட்டுப்பாளையம், கொல்லன்கோவில், பெத்தாம்பாளையம், கெம்பநாயக்கன்பாளையம், வெள்ளோட்டாம்பரப்பு, அரச்சலூர், வெங்கம்பூர், மொடக்குறிச்சி மற்றும் ஊஞ்சலூர் ஆகிய 14 பேரூராட்சிகளில் ஒவ்வொரு பேரூராட்சியிலும் தலா ரூ. 1கோடிக்குமேல் சாலை மேம்பாட்டுப் பணிகள் சமுதாய நலக்கூடம், குளம் மேம்பாட்டுப் பணிகள், சிமெண்ட் கான்கிரீட் சாலை, புதிய மயானம், குடிநீர் விநியோகம், கழிப்பிட வசதிகள் மற்றும் பாலங்கள் போன்ற 153 பணிகள் ரூ. 7 கோடியே 22 இலட்சம் மதிப்பீட்டில் நிறைவேற்றப்பட்டுள்ளன.

**தண்ணீர் வசதி**

காஞ்சிக்கோயில் பேரூராட்சியைச் சார்ந்த முத்துக்கவுண்டன் பாளையத்தில் ரூ.5 இலட்சம் மதிப்பீட்டில் 7 ஏக்கர் பரப்பளவில் புதிதாகக் குளம் ஒன்று அமைத்து தடுப்பணை கட்டப்பட்டுள்ளது. இதற்கு முன்பு கீழ் பவானி வாய்க்காலில் இருந்து தண்ணீர் இங்கு வந்துகொண்டிருந்தது. ஆனால் இதன் மூலம் பாசனவசதி ஏற்படவில்லை. பாசனவசதி இருந்தும் போதிய அளவிற்குத் தண்ணீர் வசதி இல்லை. எனவே கிராம மக்கள் இங்கு பெரிய குளம் வெட்டி நீரைச் சேமித்து பாசன வசதி செய்ய எண்ணினார்கள். அண்ணா

மறுமலர்ச்சித் திட்டம் இவர்களின் கோரிக்கைக்கு உதவியது. இத்திட்டத்தின் மூலம் தற்போது உருவாக்கப்பட்டுள்ள இந்தக் குளத்தில் கீழ் பவானி வாய்க்கால் நீர் பெருமளவில் இருப்பு வைக்கப்பட்டு தண்ணீர் பாசனத்திற்காக கொடுக்கப்பட்டு வருகிறது. இதன் மூலம் இப்பகுதியில் உள்ள வாழை, தென்னை, மஞ்சள், கரும்பு, நெல் சாகுபடி செய்யப்பட்டுவரும் சுமார் 200 ஏக்கர் நிலம் பாசனவசதி பெற்று வருகிறது. இது குறித்து காஞ்சிக்கோவில் பேரூராட்சித் தலைவர் திரு. எஸ். ஈஸ்வரமூர்த்தி, துணைத் தலைவர் திரு. சசிகுமார் ஆகியோரை நேரில் கேட்டபோது அவர்கள் தெரிவித்ததாவது:– "இக்குளம் அமைப்பதற்கு முன்னர் இப்பகுதி மக்கள் தண்ணீருக்காக மிகவும் சிரமப்பட்டு வந்தனர். பாசனம் செய்ய முடியவில்லை. தற்போது இக்குளம் உருவாக்கப்பட்டதன் மூலம் நிலத்தடி நீர் உயர்ந்து உள்ளது. அருகாமையில் உள்ள விவசாய நிலங்களுக்குப் போதுமான தண்ணீர் கிடைத்து வருகிறது. இதனால் விவசாயிகள் பெருமகிழ்ச்சி அடைந்து உள்ளனர். குடிதண்ணீருக்கும் பிரச்சினை இல்லை. மேலும் குளத்தில் மீன் குஞ்சுகள் விடப்பட்டு மீன் குத்தகை விடப்பட்டுள்ளதால் இதன் மூலம் பேரூராட்சிக்கு வருமானமும் கிடைத்துள்ளது. இதனைக் கொண்டு மக்களுக்குத் தேவையான அடிப்படை வசதிகள் செய்து கொடுக்க முடியும் என்றனர்".

**சாலை வசதி**

இப்பேரூராட்சிக்குட்பட்ட அவினாசிலிங்கபுரம் ஆதிதிராவிடர் குடியிருப்பில் ரூ. 5 இலட்சம் மதிப்பீட்டில் கான்கிரீட் சாலை மற்றும் வடிகால் வசதி செய்யப்பட்டுள்ளது. இந்தக் குடியிருப்பை சார்ந்த திருமதி. பாப்பாத்தி என்பவர் தெரிவித்ததாவது : – "எங்களுக்கு நல்ல சாலை கிடைத்துள்ளது. இதற்கு முன்னர் சாலைவசதி இல்லை. இவ்விடம் மேடு பள்ளமாக இருந்தது. மழைக்காலத்தில் நடக்க முடியாது. தற்போது வடிகால் வசதியும் அமைத்து தரப்பட்டுள்ளது. தண்ணீர் தேங்குவதில்லை. சாலைவசதிகள் போன்ற அடிப்படை வசதிகளை உருவாக்கி பொதுமக்களின் சிரமங்களைப் போக்கிய அரசுக்கு நன்றி என்று கூறினார்".

காஞ்சிக் கோவிலில் ரூ.10 இலட்சம் மதிப்பில் 8 கடைகள் கட்டும் பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இங்கு ரூ.3.60 இலட்சம் மதிப்பில் 3 கடைகள் கட்டும் பணி நிறைவடைந்து உள்ளது. மேலும் 15 அடி அகலம் கொண்ட தேர்வீதி தார்ச்சாலை தற்போது 25 அடி அகலத்தில் 1 கி. மீட்டர் நீளத்திற்கு ரூ.10 லட்சம் மதிப்பில் புதுப்பிக்கப்பட்டு மின்விளக்குகளும் அமைக்கப் பட்டுள்ளன.

**சமுதாயக் கூடம்**

பள்ளபாளையம் பேரூராட்சியில் தம்பிக்கலை அய்யன்கோவில் அருகில் ரூ. 10 இலட்சம் மதிப்பில் இரண்டாயிரம் சதுரஅடியில் சமுதாயக்கூடம் கட்டப்பட்டுள்ளது. இதுகுறித்து ஈஸ்வரமூர்த்தி என்பவர்

> **பெண்கள் தங்கள் சொந்த இடத்திலேயே தையலகம் அமைத்து தொழில் செய்ய முடியும். குடும்ப வேலையுடன் கைத்தொழிலையும் செய்யமுடியும். இந்த பயிற்சிக்குப் பின்னர் வங்கிகள் மூலம் கடன்பெற்று தொழில் தொடங்க முடியும். இதனால் நிரந்தர வருமானமும் கிடைக்கும். இதனால் ஒவ்வொரு குடும்பத்தின் பொருளாதார நிலையும் உயரும்**

தெரிவித்ததாவது. "இப்பகுதியில் உள்ள பொதுமக்கள் சுபகாரியங்கள் நடத்த மண்டபம் இல்லாததால் சிரமப்பட்டு வந்தனர். 3 கி.மீ அப்பால் உள்ள காஞ்சிக் கோவிலுக்குச் சென்று வந்தனர். இதனால் பொருட்செலவும், நேரமும் செலவாயின. இந்த நிலை மாறாதா என எண்ணியிருந்தபோது அனைத்து பேரூராட்சி அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தின் மூலம் சமுதாயக்கூடம் கட்டப்பட உள்ள செய்தியை அதிகாரிகள் சொன்னபோது நாங்கள் கொண்ட மகிழ்ச்சிக்கு அளவே இல்லை. தற்போது சமுதாயக் கூடம் கட்டப்பட்டுள்ளதால் நாங்கள் சுபகாரியங்கள் செய்ய வெளியே செல்லவேண்டுமென்ற அவசியம் இல்லாமல் போய்விட்டது. எங்களின் உணர்வுகளைப் புரிந்து கொண்டு சமுதாயக்கூடம் கட்டிக்கொடுத்த அரசிற்கு நன்றி என்று கூறினார்".

**மகளிருக்குத் தொழிற்பயிற்சி**

மகளிர் சுயஉதவிக் குழுக்கள் சுயதொழில் தொடங்கி தங்கள் வாழ்க்கையில் வளத்தை ஏற்படுத்திக் கொள்ளவும், வருமானம் ஈட்டவும் இவர்களுக்கு அரசின் சார்பில் பல்வேறு தொழில் பயிற்சிகள் வழங்கப்பட்டு வருகிறது. லக்கம்பட்டி பேரூராட்சியில் சுவர்ண ஜெயந்தி சகாரி ரோஜ்கார் யோஜனா திட்டத்தின்கீழ் மகளிர் சுயஉதவிக் குழுக்களுக்கு தையல் கலை, எம்ப்ராய்டரிங், கூடை பின்னுதல் மற்றும் அலங்காரவேலை குறித்து பயிற்சிகள் அளிக்கப்பட்டு வருகிறது. இப்பயிற்சியில் அரியப்பம்பாளையம், வாணிப்புத்தூர், லக்கம்பட்டி பேரூராட்சிகளை சேர்ந்த 50 மகளிர் சுயஉதவிக் குழு உறுப்பினர்கள் பங்கேற்று





பயிற்சி பெற்று வருகின்றனர். இதற்காக 40 நாட்கள் இவர்களுக்குப் பயிற்சி அளிக்கப்படுகிறது. இவர்களுக்கு உதவித் தொகையாக ரூ.600–ம், பயிற்சி கொடுப்போருக்கு ரூ.1,400–ம் வழங்கப்படுகிறது. பயிற்சிக்குப் பின்னர் இவர்கள் தொழில் தொடங்க ரூ. 50 ஆயிரம் கடனுதவியும், குழுவிற்கு ரூ. 2 இலட்சத்து 50 ஆயிரமும் கடனுதவியும் அளிக்கப்படும். மகளிர்க்குப் பயிற்சி அளித்துவரும் பயிற்சியாளர் திருமதி. ஸ்ரீதேவி தெரிவித்ததாவது, "மகளிர் சுயதொழில் செய்ய இப்பயிற்சி அளிக்கப்படுகிறது. நாளுக்குநாள் ஆடைகளின் தேவை அதிகரித்து வருகிறது". பெண்கள் தங்கள் சொந்த இடத்திலேயே தையலகம் அமைத்து தொழில் செய்ய முடியும். குடும்ப வேலையுடன் கைத்தொழிலையும் செய்யமுடியும். இந்த பயிற்சிக்குப் பின்னர் வங்கிகள் மூலம் கடன்பெற்று தொழில் தொடங்க முடியும். இதனால் நிரந்தர வருமானமும் கிடைக்கும். இதனால் ஒவ்வொரு குடும்பத்தின் பொருளாதார நிலையும் உயரும்.

**குடிநீர் வசதி**

காசிபாளையம் (கோபி) பேரூராட்சியில் காந்தி நகரில் 60 ஆயிரம் லிட்டர் கொள்ளளவு கொண்ட மேல்நிலை நீர்த்தேக்கத்தொட்டி ரூ.4.75 இலட்சம் மதிப்பில் கட்டப்பட்டு குடிநீர்க் குழாய் விஸ்தரிப்பு செய்து குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது. இப்பேரூராட்சியில் ரூ.10 இலட்சம் மதிப்பில் வாரச்சந்தையில் சமுதாயக்கூடமும், சத்தி, கோபி மெயின்ரோட்டிலிருந்து மணியக்காரன் பாளையம், கரட்டுப்பாளையம் செல்லும் சாலையில் சிறு பாலம் அமைத்து தார்ச்சாலை அமைக்கும் பணியும், மணியக்காரன் பாளையத்தில் ரூ. 5 இலட்சம் மதிப்பில் மயானம் மேம்பாடு செய்து, தங்கும் கொட்டகை, முன்புற சுற்றுச்சுவர், முட்கம்பி வேலி, குடிநீர் வசதிமற்றும் மின்விளக்கு வசதி ஆகியவைகள் அமைக்கப்பட்டுள்ளன.

அரியப்பம்பாளையம் பேரூராட்சியில் பழைய கழையனூரில் ரூ.2.50 இலட்சம் மதிப்பில் மயானம் மேம்பாடு செய்யப்பட்டுள்ளது. பேரூராட்சி சொசைட்டி வீதியில் ரூ.8.20 இலட்சம் மதிப்பில் தார்ச்சாலை அமைக்கும்பணி நிறைவேற்றப்பட்டு உள்ளது. மேலும் அரியப்பம்பாளையம் அலுவலக வளாகத்தில் கூடுதல் கட்டடம் கட்டுவதற்காக ரூ.10 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு அடித்தள கான்கிரீட் பணிகள் நிறைவு பெற்றுள்ளன.

**திடக்கழிவு மேலாண்மை**

அரியப்பம்பாளயம் பேரூராட்சியில் திடக்கழிவு மேலாண்மைத் திட்டத்தின்கீழ் பேரூராட்சிகளில் சேகரிக்கப்படும் குப்பைகளை உரமாகத் தயாரிக்கும் பணிகள் அஞ்சுகம் ஆடவர் சுயஉதவிக் குழுக்கள் மூலம் நிறைவேற்றப்பட்டு வருகிறது. நாள்தோறும் இரண்டு டிராக்டரில் பேரூராட்சிப் பகுதிகளில் குப்பைகள் சேகரிக்கப்பட்டு இவைகள் கம்போஸ்ட் மையத்தில் மக்கும் குப்பை, மக்கா குப்பை எனத் தரம் பிரித்து உரம் தயாரிக்கப்படுகிறது. இந்த உர உற்பத்தி விவசாயிகளிடையே பெரும் வரவேற்பினைப் பெற்றுள்ளதால் இப்பணி தீவிரமாக நடைபெற்று வருகிறது. விவசாயிகளுக்கு உரங்கள் விற்பனை செய்வதன் மூலம் ஆண்டிற்கு ஒரு இலட்சம் ரூபாய் பேரூராட்சிக்கு வருமானம் கிடைக்கிறது. திடக்கழிவு மேலாண்மை திட்டத்திற்கு இந்த ஆண்டு அரசு ரூ.3.53 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்துள்ளது. அனைத்துப் பேரூராட்சி அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தினால் பல்வேறு திட்டப்பணிகள் இம்மாவட்டத்தில் மேற்கொள்ளப்பட்டு பொதுமக்களின் அடிப்படை வசதிகள் நிறைவேற்றப்பட்டு வருகிறது என்று சொன்னால் அது மிகையாகாது.

* * *

# வளர்ச்சிப் பாதையை நோக்கிச் செல்லும் மயிலம்பாடி ஊராட்சிக்கு உத்தமர் காந்தி ஊராட்சி விருது

**ஊ**ராட்சியில் ஒட்டுமொத்த முன்னேற்றத்திற்காக மேற்கொள்ளப்படும் அனைத்துச் சிறப்பான நடவடிக்கைகளையும் அங்கீகரிக்கும் வகையில் "உத்தமர் காந்தி ஊராட்சி விருது" தமிழக அரசால் வழங்கப்பட்டு வருகிறது.

இவ்விருதிற்குத் தேர்வு பெறும் ஊராட்சிக்கு நற்சான்றிதழும், கேடயமும் மற்றும் ரூ.5 இலட்சம் பரிசாக வழங்கப்படுகிறது. மேலும் ஊராட்சித் தலைவர்களுக்கு நற்சான்றிதழ் மற்றும் பதக்கம் வழங்கப்படுகிறது.

இவ்விருதிற்கான அனைத்து அம்சங்களையும் நல்ல முறையில் மேற்கொண்ட ஈரோடு மாவட்டம், பவானி ஊராட்சி ஒன்றியத்தைச் சார்ந்த மயிலம்பாடி ஊராட்சிக்கு இவ்விருது கிடைத்துள்ளது. மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் 19.12.2008 அன்று சென்னையில் ஊராட்சியின் தலைவர் திரு. எம்.ஏ.திருஞானசம்பந்தம் அவர்களிடம் இவ்விருதினை வழங்கினார்.

மயிலம்பாடி ஊராட்சியில் 74 கைப்பம்புகளும், 36 விசைப் பம்புகளும், 21 மேல்நிலைத் தொட்டிகளும், 22 தரைமட்டத் தொட்டிகளும் அமைக்கப்பட்டு பொது மக்களுக்கு தண்ணீர் சீரான முறையில் வழங்கப்பட்டு வருகிறது. மேலும் இந்த ஊராட்சியிலுள்ள 53 குடியிருப்புகளிலும் ஆழ்குழாய்க் கிணறுகளில் மினி பம்பு, மேல்நிலைத் தொட்டி, தரைமட்ட தொட்டி ஆகியவற்றை மாவட்ட ஆட்சியர் விருப்பு நிதி மற்றும் சட்டமன்ற உறுப்பினர் மேம்பாட்டு நிதி ஆகியவற்றின் மூலம் நிதி உதவி பெற்று குடிநீர் வசதிகள் செய்துகொடுத்து, குடிநீர் வசதி இல்லாத வீடுகளே இல்லை என்ற நிலை உருவாக்கப்பட்டுள்ளது.

இந்த ஊராட்சியில் 260 குழல் விளக்குகளும், 22 சோடியம் ஆவி விளக்குகளும் அமைக்கப்பட்டு, இரவு நேரங்களிலும் சாலைகளில் பொதுமக்கள் சென்றுவர வசதிகள் செய்து கொடுக்கப்பட்டுள்ளது. இந்த ஊராட்சியில் உள்ள கிராமங்களில் 15 வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகள் அமைக்கப்பட்டுள்ளன. மருத்துவ வசதிக்கென மயிலம்பாடியில் ஆரம்ப சுகாதார நிலையம் ஒன்றும், கன்னடிய பாளையம், மயிலம்பாடியில் துணை ஆரம்ப சுகாதார நிலையமும், 1 கால்நடை மருத்துவமனையும் இயங்கி வருகிறது.

பூமி வெப்பமாதலை தடுக்கவும், இயற்கையைப் பாதுகாக்கவும், கன்னடியபாளையம் முதல் அந்தியூர் பவானி மெயின்ரோடு வரை 600 மீட்டர் தூரத்திற்கு சாலையில் இருபுறமும் 100 மரக்கன்றுகளை நட்டு பராமரிப்பு செய்யப்பட்டு வருகிறது. தற்போது இவைகள் நிழல்தரும் மரங்களாக காட்சியளிக்கின்றது. சுற்றுப்புற சுகாதாரத்தை பாதுகாக்க தெரு ஓரங்களில் கிடக்கும் பிளாஸ்டிக் பை, பிளாஸ்டிக் பொருட்களை துப்புரவுப் பணியாளர்கள், தொண்டு நிறுவன பிரதிநிதிகள் மற்றும் மகளிர் குழுக்கள் மூலம் உடனுக்குடன் அகற்றப்பட்டு வருகிறது.

பொதுமக்கள் பயன்பெற இலவச சட்ட விழிப்புணர்வு முகாம்கள் மற்றும் காவல்துறை முகாம்கள் நடத்தப்பட்டுள்ளன. ஒவ்வொரு கிராமசபைக் கூட்டங்களிலும் பள்ளிக்குச் செல்லும் வயதுள்ள குழந்தைகளைப் பணியில் அமர்த்தக் கூடாது எனவும், அவ்வாறு பணியில் அமர்த்தினால் அவர்கள் மீது கடுமையான நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்றும் அறிவுறுத்தப்பட்டதனால், இவ்வூராட்சியில் குழந்தைத் தொழிலாளர் எவரும் இல்லை என்ற நிலை உருவாக்கப்பட்டுள்ளது.

இலவச கண்சிகிச்சை முகாமினை அரிமா சங்கம், ரோட்டரி சங்கம் ஆகியவற்றுடன் இணைந்து ஊராட்சித் தலைவர் பொதுமக்களிடம் விளம்பரம் செய்து விழிப்புணர்வை ஏற்படுத்தி கண் சிகிச்சை முகாம்களையும் சுகாதாரத் துறையினருடன் இணைந்து எய்ட்ஸ் நோய் குறித்து பொதுமக்களிடம் விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் பேரணி மற்றும் பிரச்சார முகாம்களையும் நடத்தியுள்ளார்.

அரசின் இலவச வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டி, இலவச எரிவாயு அடுப்பு, இலவச வீட்டுமனைப் பட்டா, முதியோர் ஓய்வூதியம் வழங்குதல் போன்ற அரசின் பல்வேறு திட்டங்களைப் பொதுமக்கள் அறியும் வகையில் விழாக்கள் வாயிலாகவும், துண்டுப் பிரசுரங்கள் வாயிலாகவும் விளம்பரப்படுத்தி பலருக்கும் நலத்திட்டங்கள் கிடைக்க உதவி புரிந்துள்ளார்.

ஒவ்வொரு ஆண்டும் இந்த ஊராட்சியில் கிராமசபை சிறப்பாக நடத்தப்பட்டுள்ளது. இக்கூட்டத்தின் வாயிலாகப் பொதுமக்களுக்குத் தேவையான அடிப்படை வசதிகளைக் கேட்டறிந்து செயல்படுத்தி இருக்கின்றார். இவரது சீரிய முயற்சியால் நமக்கு நாமே திட்டத்தின் மூலம் பொதுமக்களின் பங்களிப்பினைப் பெற்று மயிலம்பாடி அரசினர் மேல்நிலைப்பள்ளிக்கு ரூ.5 இலட்சம் மதிப்பில் சுற்றுச்சுவரும், கன்னடியபாளையம் ஊராட்சி ஒன்றிய துவக்கப்பள்ளிக்கு ரூ 45 ஆயிரம் மதிப்பில் சுற்றுச்சுவரும் கட்டி முடிக்கப்பட்டுள்ளது.



நபார்டு திட்டத்தின் மூலம் மயிலம்பாடி வாரச்சந்தையில் அடிப்படை வசதிகளான நிரந்தரக் கடைகள், குடிநீர், கழிப்பிடம் போன்ற வசதிகள் செய்து கொடுக்கப் பட்டுள்ளது. இச்சந்தை ஏலம் விடப்பட்டு அதன் வாயிலாக மூன்றில் ஒரு பங்கு ஊராட்சிக்கு வருமானமாகக் கிடைக்கிறது.

செலவினங்களைக் குறைக்க அனைத்து மின் இணைப்புகளுக்கும் மீட்டர் பொருத்தப்பட்டு, வெள்ளை அட்டை வைக்கப்பட்டு, அதன்படி மின் கட்டணம் செலுத்தப்படுகிறது. தானியங்கி சுவிட்ச் பொருத்தப்பட்டு மோட்டார்கள், தெருவிளக்குகளின் பயன்பாடு கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவரப்பட்டுள்ளது. தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் வழங்கும் குடிநீரின் அளவைக் கண்காணிக்க மீட்டர் பொருத்தப்பட்டு பெறப்படும் குடிநீரின் அளவிற்கு மட்டுமே கட்டணம் செலுத்தப்படுகிறது. குடியிருப்புப் பகுதிகளில் உள்ள சாக்கடைகள் தூர்வாரும் பணிகளை அப்பகுதி மக்களும், மகளிர் சுய உதவிக் குழுக்களும் இணைந்து செயல்படுத்தி வருவதால், ஊராட்சி மூலம் சாக்கடைகள் தூர்வாரும் பணிகள் செய்யப்படாமல் செலவினம் கட்டுப்படுத்தப்பட்டுள்ளது.

மேற்கண்ட பணிகளைப் பாராட்டி இந்த ஊராட்சிக்கு அரசு உத்தமர் காந்தி ஊராட்சி விருதினை வழங்கி உள்ளது. இந்த ஊராட்சியின் தலைவர் திரு. எம். ஏ. திருஞானசம்பந்தம் அவர்கள் பி.எஸ் ஸி., (வேளாண்மை) பட்டதாரி ஆவார். வேளாண் துறையில் பணியாற்றியவர். தொடர்ந்து நான்கு முறை இந்த ஊராட்சித் தலைவராக தேர்ந்தெடுக்கப்பட்டு உள்ளார். ஊராட்சிக்கு நிதியிழப்பு ஏதும் ஏற்படுத்தாமலும், அரசு நலத் திட்டங்கள் அனைத்தும் அத்திட்டப் பயன்கள் பொதுமக்களை சென்றடையும் வகையில் சிறப்பாகச் செயல்படுத்தியுள்ளார்.

விருது குறித்து ஊராட்சி மன்றத் தலைவர் திரு. எம். ஏ. திருஞானசம்பந்தம் அவர்களை நேரில் சந்தித்து கேட்டபோது அவர் தெரிவித்ததாவது :–

"மயிலம்பாடி ஊராட்சியில் கடந்த 5 ஆண்டுகளில் வீட்டுவரி மற்றும் தொழில்வரிகள் 17 இலட்சத்து 66 ஆயிரத்து 356 வசூல் செய்யப்பட்டுள்ளது. இத்தொகையிலிருந்து பொதுமக்களின் தேவைகளை அறிந்து புதிய சாலைகள் அமைத்தல், தெரு விளக்குகள் விரிவுபடுத்துதல், சிறுபாலங்கள் அமைத்தல், குடிநீர்க் குழாய் விரிவாக்கம், குடிநீர் ஆதார விரிவாக்கம், வடிகால் வசதி உருவாக்கம், மயான எரிமேடை அமைத்தல், சுற்றுச்சுவர் அமைத்தல் போன்ற பணிகள் ரூ.11 இலட்சத்து 92 ஆயிரத்து 326 மதிப்பில் மேற்கொள்ளப்பட்டுள்ளன. நடப்பாண்டு அரசு ஒதுக்கிய ஊரக கட்டமைப்பு நிதியான ரூ.2 இலட்சத்து 63 ஆயிரம் மற்றும் ஊராட்சி நிதி ரூ.2 இலட்சமும் சேர்த்து சிறு பாலங்கள், சிமெண்ட் கான்கிரீட் சாலைகள் போடப்பட்டுள்ளன. மயிலம்பாடியில் உள்ள அரசினர் ஆரம்ப சுகாதார நிலையம் மேம்படுத்தப்பட்ட மருத்துவமனையாக மாற்றுவதற்கு முயற்சி மேற்கொண்டதன் பலனாக அரசு அனுமதி அளித்துள்ளது. ஊராட்சியைப் பொருத்தவரை வரி வசூல் நிலுவை ஏதுமில்லை. தணிக்கைக் குறிப்பும் நடத்தப்பட்டு வருகிறது. ஐந்து ஆண்டுகளில் ஆதிதிராவிடர்களுக்கு இங்கு 134 வீடுகள் கட்டிக் கொடுக்கப் பட்டுள்ளன. கிராம மக்களின் தேவைகளை அறிந்து பல அடிப்படை வசதிகளை மேற்கொண்டு வருகிறோம்".

தமிழ்நாட்டில் 15 ஊராட்சிகள் உத்தமர் காந்தி ஊராட்சி விருதிற்கு தேர்வு செய்யப்பட்டன. இதில் பவானி ஒன்றியம், மயிலம்பாடி ஊராட்சியும் தேர்வு செய்யப்பட்டு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் கலைஞர் அவர்களிடம் விருது பெற்று ஈரோடு மாவட்டத்திற்கு பெருமை சேர்த்துள்ளமை அனைவராலும் பாராட்டப்பட்டு வருகிறது.

– என். பாலையா,
செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்,
ஈரோடு.

## அண்ணாவின் பொன்மொழிகள்

### தங்கம்

"ஆப்பிரிக்க நாட்டில் ஏராளமான தங்கம் கிடைத்துக்கொண்டிருந்தது. இப்போதும் கிடைத்து வருகிறது. ஆனால், அந்தத் தங்கம் விளையும் நிலத்தை, ஆப்பிரிக்கர்கள் வெள்ளையரிடம் குறைந்த விலைக்கு விற்றார்கள்.

இன்று அந்தத் தங்கதத்தை ஆப்பிரிக்காவில் உள்ளவர்கள் வாங்குவதில்லை–அது எங்கோ செல்கிறது. காரணம், தங்கம் வாங்குகிற அளவுக்கு ஆப்பிரிக்க மக்கள், பொருளாதார வசதி பெற்றிருக்கவில்லை.

அவர்கள் தங்கத்தின்மீது தான் நடக்கிறார்கள், ஆனால் தரித்திரத்தோடு நடக்கிறார்கள்.

ஆகவே, நமது மக்களுடைய பொருளாதாரம் முதலில் பலப்படுத்தப்பட வேண்டும். மக்களுக்கு வருவாய் இருந்தால்தான், வியாபாரம் நடக்கும். வியாபாரம் நடந்தால் தான் லாபம்; பிறகுதான், லாப விகிதம் ஐந்தா ஆறா என்பதெல்லாம்".

# வளர்ச்சிப் பாதையை நோக்கிச் செல்லும் மயிலம்பாடி ஊராட்சிக்கு உத்தமர் காந்தி ஊராட்சி விருது

ஊராட்சியில் ஒட்டுமொத்த முன்னேற்றத்திற்காக மேற்கொள்ளப்படும் அனைத்துச் சிறப்பான நடவடிக்கைகளையும் அங்கீகரிக்கும் வகையில் “உத்தமர் காந்தி ஊராட்சி விருது” தமிழக அரசால் வழங்கப்பட்டு வருகிறது.

இவ்விருதிற்குத் தேர்வு பெறும் ஊராட்சிக்கு நற்சான்றிதழும், கேடயமும் மற்றும் ரூ.5 இலட்சம் பரிசாக வழங்கப்படுகிறது. மேலும் ஊராட்சித் தலைவர்களுக்கு நற்சான்றிதழ் மற்றும் பதக்கம் வழங்கப்படுகிறது.

இவ்விருதிற்கான அனைத்து அம்சங்களையும் நல்ல முறையில் மேற்கொண்ட ஈரோடு மாவட்டம், பவானி ஊராட்சி ஒன்றியத்தைச் சார்ந்த மயிலம்பாடி ஊராட்சிக்கு இவ்விருது கிடைத்துள்ளது. மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் 19.12.2008 அன்று சென்னையில் ஊராட்சியின் தலைவர் திரு. எம்.ஏ.திருஞானசம்பந்தம் அவர்களிடம் இவ்விருதினை வழங்கினார்.

மயிலம்பாடி ஊராட்சியில் 74 கைப்பம்புகளும், 36 விசைப் பம்புகளும், 21 மேல்நிலைத் தொட்டிகளும், 22 தரைமட்டத் தொட்டிகளும் அமைக்கப்பட்டு பொது மக்களுக்கு தண்ணீர் சீரான முறையில் வழங்கப்பட்டு வருகிறது. மேலும் இந்த ஊராட்சியிலுள்ள 53 குடியிருப்புகளிலும் ஆழ்குழாய்க் கிணறுகளில் மினி பம்பு, மேல்நிலைத் தொட்டி, தரைமட்ட தொட்டி ஆகியவற்றை மாவட்ட ஆட்சியர் விருப்பு நிதி மற்றும் சட்டமன்ற உறுப்பினர் மேம்பாட்டு நிதி ஆகியவற்றின் மூலம் நிதி உதவி பெற்று குடிநீர் வசதிகள் செய்துகொடுத்து, குடிநீர் வசதி இல்லாத வீடுகளே இல்லை என்ற நிலை உருவாக்கப்பட்டுள்ளது.

இந்த ஊராட்சியில் 260 குழல் விளக்குகளும், 22 சோடியம் ஆவி விளக்குகளும் அமைக்கப்பட்டு, இரவு நேரங்களிலும் சாலைகளில் பொதுமக்கள் சென்றுவர வசதிகள் செய்து கொடுக்கப்பட்டுள்ளது. இந்த ஊராட்சியில் உள்ள கிராமங்களில் 15 வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகள் அமைக்கப்பட்டுள்ளன. மருத்துவ வசதிக்கென மயிலம்பாடியில் ஆரம்ப சுகாதார நிலையம் ஒன்றும், கன்னடிய பாளையம், மயிலம்பாடியில் துணை ஆரம்ப சுகாதார நிலையமும், 1 கால்நடை மருத்துவமனையும் இயங்கி வருகிறது.

பூமி வெப்பமாதலை தடுக்கவும், இயற்கையைப் பாதுகாக்கவும், கன்னடியபாளையம் முதல் அந்தியூர் பவானி மெயின்ரோடு வரை 600 மீட்டர் தூரத்திற்கு சாலையில் இருபுறமும் 100 மரக்கன்றுகளை நட்டு பராமரிப்பு செய்யப்பட்டு வருகிறது. தற்போது இவைகள் நிழல்தரும் மரங்களாக காட்சியளிக்கின்றது. சுற்றுப்புற சுகாதாரத்தை பாதுகாக்க தெரு ஓரங்களில் கிடக்கும் பிளாஸ்டிக் பை, பிளாஸ்டிக் பொருட்களை துப்புரவுப் பணியாளர்கள், தொண்டு நிறுவன பிரநிதிகள் மற்றும் மகளிர் குழுக்கள் மூலம் உடனுக்குடன் அகற்றப்பட்டு வருகிறது.

பொதுமக்கள் பயன்பெற இலவச சட்ட விழிப்புணர்வு முகாம்கள் மற்றும் காவல்துறை முகாம்கள் நடத்தப்பட்டுள்ளன. ஒவ்வொரு கிராமசபைக் கூட்டங்களிலும் பள்ளிக்குச் செல்லும் வயதுள்ள குழந்தைகளைப் பணியில் அமர்த்தக் கூடாது எனவும், அவ்வாறு பணியில் அமர்த்தினால் அவர்கள் மீது கடுமையான நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்றும் அறிவுறுத்தப்பட்டதனால், இவ்வூராட்சியில் குழந்தைத் தொழிலாளர் எவரும் இல்லை என்ற நிலை உருவாக்கப்பட்டுள்ளது.

இலவச கண்சிகிச்சை முகாமினை அரிமா சங்கம், ரோட்டரி சங்கம் ஆகியவற்றுடன் இணைந்து ஊராட்சித் தலைவர் பொதுமக்களிடம் விளம்பரம் செய்து விழிப்புணர்வை ஏற்படுத்தி கண் சிகிச்சை முகாம்களையும் சுகாதாரத் துறையினருடன் இணைந்து எய்ட்ஸ் நோய் குறித்து பொதுமக்களிடம் விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் பேரணி மற்றும் பிரச்சார முகாம்களையும் நடத்தியுள்ளார்.

அரசின் இலவச வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டி, இலவச எரிவாயு அடுப்பு, இலவச வீட்டுமனைப் பட்டா, முதியோர் ஒய்வூதியம் வழங்குதல் போன்ற அரசின் பல்வேறு திட்டங்களைப் பொதுமக்கள் அறியும் வகையில் விழாக்கள் வாயிலாகவும், துண்டுப் பிரசுரங்கள் வாயிலாகவும் விளம்பரப்படுத்தி பலருக்கும் நலத்திட்டங்கள் கிடைக்க உதவி புரிந்துள்ளார்.

ஒவ்வொரு ஆண்டும் இந்த ஊராட்சியில் கிராமசபை சிறப்பாக நடத்தப்பட்டுள்ளது. இக்கூட்டத்தின் வாயிலாகப் பொதுமக்களுக்குத் தேவையான அடிப்படை வசதிகளைக் கேட்டறிந்து செயல்படுத்தி இருக்கின்றார். இவரது சீரிய முயற்சியால் நமக்கு நாமே திட்டத்தின் மூலம் பொதுமக்களின் பங்களிப்பினைப் பெற்று மயிலம்பாடி அரசினர் மேல்நிலைப்பள்ளிக்கு ரூ.5 இலட்சம் மதிப்பில் சுற்றுச்சுவரும், கன்னடியபாளையம் ஊராட்சி ஒன்றிய துவக்கப்பள்ளிக்கு ரூ 45 ஆயிரம் மதிப்பில் சுற்றுச்சுவரும் கட்டி முடிக்கப்பட்டுள்ளது.



நபார்டு திட்டத்தின் மூலம் மயிலம்பாடி வாரச்சந்தையில் அடிப்படை வசதிகளான நிரந்தரக் கடைகள், குடிநீர், கழிப்பிடம் போன்ற வசதிகள் செய்து கொடுக்கப் பட்டுள்ளது. இச்சந்தை ஏலம் விடப்பட்டு அதன் வாயிலாக மூன்றில் ஒரு பங்கு ஊராட்சிக்கு வருமானமாகக் கிடைக்கிறது.

செலவினங்களைக் குறைக்க அனைத்து மின் இணைப்புகளுக்கும் மீட்டர் பொருத்தப்பட்டு, வெள்ளை அட்டை வைக்கப்பட்டு, அதன்படி மின் கட்டணம் செலுத்தப்படுகிறது. தானியங்கி சுவிட்ச் பொருத்தப்பட்டு மோட்டார்கள், தெருவிளக்குகளின் பயன்பாடு கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவரப்பட்டுள்ளது. தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் வழங்கும் குடிநீரின் அளவைக் கண்காணிக்க மீட்டர் பொருத்தப்பட்டு பெறப்படும் குடிநீரின் அளவிற்கு மட்டுமே கட்டணம் செலுத்தப்படுகிறது. குடியிருப்புப் பகுதிகளில் உள்ள சாக்கடைகள் தூர்வாரும் பணிகளை அப்பகுதி மக்களும், மகளிர் சுய உதவிக் குழுக்களும் இணைந்து செயல்படுத்தி வருவதால், ஊராட்சி மூலம் சாக்கடைகள் தூர்வாரும் பணிகள் செய்யப்படாமல் செலவினம் கட்டுப்படுத்தப்பட்டுள்ளது.

மேற்கண்ட பணிகளைப் பாராட்டி இந்த ஊராட்சிக்கு அரசு உத்தமர் காந்தி ஊராட்சி விருதினை வழங்கி உள்ளது. இந்த ஊராட்சியின் தலைவர் திரு. எம். ஏ. திருஞானசம்பந்தம் அவர்கள் பி.எஸ் ஸி., (வேளாண்மை) பட்டதாரி ஆவார். வேளாண் துறையில் பணியாற்றியவர். தொடர்ந்து நான்கு முறை இந்த ஊராட்சித் தலைவராக தேர்ந்தெடுக்கப்பட்டு உள்ளார். ஊராட்சிக்கு நிதியிழப்பு ஏதும் ஏற்படுத்தாமலும், அரசு நலத் திட்டங்கள் அனைத்தும் அத்திட்டப் பயன்கள் பொதுமக்களை சென்றடையும் வகையில் சிறப்பாகச் செயல்படுத்தியுள்ளார்.

விருது குறித்து ஊராட்சி மன்றத் தலைவர் திரு. எம். ஏ. திருஞானசம்பந்தம் அவர்களை நேரில் சந்தித்து கேட்டபோது அவர் தெரிவித்ததாவது :—

“மயிலம்பாடி ஊராட்சியில் கடந்த 5 ஆண்டுகளில் வீட்டுவரி மற்றும் தொழில்வரிகள் 17 இலட்சத்து 66 ஆயிரத்து 356 வசூல் செய்யப்பட்டுள்ளது. இத்தொகையிலிருந்து பொதுமக்களின் தேவைகளை அறிந்து புதிய சாலைகள் அமைத்தல், தெரு விளக்குகள் விரிவுபடுத்துதல், சிறுபாலங்கள் அமைத்தல், குடிநீர்க் குழாய் விரிவாக்கம், குடிநீர் ஆதார விரிவாக்கம், வடிகால் வசதி உருவாக்கம், மயான எரிமேடை அமைத்தல், சுற்றுச்சுவர் அமைத்தல் போன்ற பணிகள் ரூ.11 இலட்சத்து 92 ஆயிரத்து 326 மதிப்பில் மேற்கொள்ளப்பட்டுள்ளன. நடப்பாண்டு அரசு ஒதுக்கிய ஊரக கட்டமைப்பு நிதியான ரூ.2 இலட்சத்து 63 ஆயிரம் மற்றும் ஊராட்சி நிதி ரூ.2 இலட்சமும் சேர்த்து சிறு பாலங்கள், சிமெண்ட் கான்கிரீட் சாலைகள் போடப்பட்டுள்ளன. மயிலம்பாடியில் உள்ள அரசினர் ஆரம்ப சுகாதார நிலையம் மேம்படுத்தப்பட்ட மருத்துவமனையாக மாற்றுவதற்கு முயற்சி மேற்கொண்டதன் பலனாக அரசு அனுமதி அளித்துள்ளது. ஊராட்சியைப் பொருத்தவரை வரி வசூல் நிலுவை ஏதுமில்லை. தணிக்கைக் குறிப்பும் நடத்தப்பட்டு வருகிறது. ஐந்து ஆண்டுகளில் ஆதிதிராவிடர்களுக்கு இங்கு 134 வீடுகள் கட்டிக் கொடுக்கப் பட்டுள்ளன. கிராம மக்களின் தேவைகளை அறிந்து பல அடிப்படை வசதிகளை மேற்கொண்டு வருகிறோம்”.

தமிழ்நாட்டில் 15 ஊராட்சிகள் உத்தமர் காந்தி ஊராட்சி விருதிற்கு தேர்வு செய்யப்பட்டன. இதில் பவானி ஒன்றியம், மயிலம்பாடி ஊராட்சியும் தேர்வு செய்யப்பட்டு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் கலைஞர் அவர்களிடம் விருது பெற்று ஈரோடு மாவட்டத்திற்கு பெருமை சேர்த்துள்ளமை அனைவராலும் பாராட்டப்பட்டு வருகிறது.

— என். பாலையா,
செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்,
ஈரோடு.

## அண்ணாவின் பொன்மொழிகள்

### தங்கம்

“ஆப்பிரிக்க நாட்டில் ஏராளமான தங்கம் கிடைத்துக்கொண்டிருந்தது. இப்போதும் கிடைத்து வருகிறது. ஆனால், அந்தத் தங்கம் விளையும் நிலத்தை, ஆப்பிரிக்கர்கள் வெள்ளையரிடம் குறைந்த விலைக்கு விற்றார்கள்.

இன்று அந்தத் தங்கதத்தை ஆப்பிரிக்காவில் உள்ளவர்கள் வாங்குவதில்லை— அது எங்கோ செல்கிறது. காரணம், தங்கம் வாங்குகிற அளவுக்கு ஆப்பிரிக்க மக்கள், பொருளாதார வசதி பெற்றிருக்கவில்லை.

அவர்கள் தங்கத்தின்மீது தான் நடக்கிறார்கள், ஆனால் தரித்திரத்தோடு நடக்கிறார்கள்.

ஆகவே, நமது மக்களுடைய பொருளாதாரம் முதலில் பலப்படுத்தப்பட வேண்டும். மக்களுக்கு வருவாய் இருந்தால்தான், வியாபாரம் நடக்கும். வியாபாரம் நடந்தால் தான் லாபம்; பிறகுதான், லாப விகிதம் ஐந்தா ஆறா என்பதெல்லாம்”.

## திண்டுக்கல் மாவட்டத்தில்

# முனைப்புடன் செயல்படுத்தப்படும் அரசின் திட்டங்கள்

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் அறிவிக்கின்ற அனைத்து அரசு நலத்திட்டங்களும் திண்டுக்கல் மாவட்டத்தில் முனைப்புடன் செயல்படுத்தப்பட்டு வருகிறது. அரசுத் திட்டங்கள் சிறப்பான முறையில் செயல்படுத்திட உரிய நடவடிக்கைகளை மாவட்ட நிருவாகம் மேற்கொண்டு வருகிறது. குறிப்பாக, இலவச வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டி, இலவச வீட்டுமனைப் பட்டா, மாணவ, மாணவிகளுக்கு இலவச சைக்கிள், புதிய மகளிர் சுயஉதவிக் குழுக்கள் உருவாக்கம், மலைப்பகுதி மக்கள் மேம்பாடு, போலி குடும்ப அட்டைகள் கண்டறிதல், போன்ற மக்கள் நலத்திட்டங்கள் திண்டுக்கல் மாவட்டத்தில் சிறப்பாகச் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

**இலவச வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டி**

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் இலவச வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டி இல்லாத அனைவருக்கும் இலவச வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டி வழங்கப்படும் என அறிவித்ததின் பேரில் இம்மாவட்டத்தில் மொத்தம் 306 ஊராட்சிகள் உள்ளன. அதில் இதுவரை 186 ஊராட்சிகளில் 1,67,672 வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகள் வழங்கப்பட்டுள்ளன. இதேபோல வருகிற நிதியாண்டில் அனைத்துப் பகுதிகளுக்கும் இலவச வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகள் வழங்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

**இலவச எரிவாயு அடுப்பு**

திண்டுக்கல் மாவட்டத்தில் 2006–07 மற்றும் 2007–08 நிதியாண்டுகளில் 34,397 நபர்களுக்கு இலவச எரிவாயு இணைப்பு கொடுக்கப்பட்டுள்ளது. தொடர்ந்து அனைத்துப் பகுதிகளுக்கும் கொடுப்பதற்கான நடவடிக்கை மாவட்ட நிருவாகத்தின் மூலம் எடுக்கப்பட்டு வருகிறது.

**இலவச சைக்கிள்**

இம்மாவட்டத்தில் உள்ள ஆதிதிராவிடர்கள், பழங்குடியினர், பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்ட மாணவ, மாணவிகளுக்கு இலவச சைக்கிள் வழங்கும் திட்டத்தின்கீழ் இதுவரை 24,362 மாணவ, மாணவிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது. மாணவ, மாணவிகளின் சமூகக் கல்வி மற்றும் பொருளாதார முன்னேற்றத்திற்காக கல்வி உதவித்தொகை, இலவச பாடப்புத்தகங்கள், சீருடை ஆகியவை உரிய காலத்தில் வழங்கப்பட்டு வருகிறது. ஆதிதிராவிடர் மற்றும் பிற்படுத்தப்பட்ட 1,03,236 நபர்களுக்கு ரூ.7 கோடியே 88 இலட்சத்து 83 ஆயிரம் மதிப்பில் கல்வி உதவித்தொகை வழங்கப்பட்டுள்ளது.

**பட்டா மாறுதல் முகாம்**

பட்டா மாறுதல், நில உடைமைச் சான்று ஆகியவை வழங்குவதை துரிதப்படுத்தும் வகையில் ஒவ்வொரு பிர்க்கா அளவில் தனி மையங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. இந்த மையங்களில் இதுவரை 15,000 மனுக்களுக்கு உடனுக்குடன் தீர்வு காணப்பட்டுள்ளது. இம்மாவட்டத்தில் இதுவரை 18,564 நபர்களுக்கு இலவச வீட்டுமனைப் பட்டா வழங்கப்பட்டுள்ளது.

**மகளிர் சுய உதவிக் குழுக்கள்**

பெண்களுக்கு முன்னுரிமை அளிக்கும் வகையில் திண்டுக்கல் மாவட்டத்தில் தற்போது 10,971 மகளிர் சுய உதவிக் குழுக்கள் செயல்பட்டு வருகின்றன. இதில் 1,77,209 பெண்கள் உறுப்பினர்களாக உள்ளனர். இவர்களில் 27,719 உறுப்பினர்கள் தாழ்த்தப்பட்ட பெண்கள் ஆவார்கள். மகளிர் சுயஉதவிக் குழுக்களை உருவாக்க 22 தொண்டு நிறுவனங்கள் அங்கீகரிக்கப்பட்டுள்ளன. நடப்பாண்டு 260 மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு ரூ.2 கோடியே 71 இலட்சம் கடன் உதவி அளிக்கப்பட்டுள்ளது. 2008–09ஆம் நிதியாண்டில் நகர்ப்புறங்களில் 400 மகளிர் சுய உதவிக் குழுக்கள் அமைக்க மாவட்ட நிருவாகம் நடவடிக்கை எடுத்துள்ளது. அதேபோன்று கிராமப்புறங்களில் அதிகளவில் குழுக்கள் அமைக்க திட்டமிடப்பட்டுள்ளது.

**மலைப்பகுதி மக்களின்
அடிப்படைத் தேவைகளைப் பூர்த்தி செய்தல்**

கொடைக்கானல் மலைப்பகுதியில் உள்ள மலைப்பகுதி மக்களுக்குப் புதிதாகச் சாலைகள் அமைத்துத் தருதல், மலைப்பகுதி மக்களுக்கு மருத்துவ வசதி, கல்வி வசதி, குடிநீர் வசதி ஆகியவற்றிற்கு முன்னுரிமை அளித்து மாவட்ட நிருவாகம் செயல்பட்டு வருகிறது. கொடைக்கானல் மலைப்பகுதியில் மட்டும் சுமார் 800 பழங்குடியினர் குடும்பங்கள் வசித்து வருகின்றன. இதில் 167 குடும்பத்தினருக்கு இதுவரை சாதிச் சான்றிதழ் வழங்கப்பட்டுள்ளது. மேலும் மலைப்பகுதி மக்கள் உற்பத்தி செய்கின்ற பொருட்களுக்குத் தேவையான மார்க்கெட் வசதி ஏற்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. மலைவாழ் மக்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்த பல்வேறு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளது.

**போலி குடும்ப அட்டைகள்**

ஏழை எளிய மக்களுக்கு தங்கு தடையின்றி அத்தியாவசிய பொருட்கள் கிடைக்கின்ற முனைப்பான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. குறிப்பாக, போலி குடும்ப அட்டைகளை ஒழிப்பதற்கு மாவட்ட அளவில் கமிட்டி அமைக்கப்பட்டுள்ளது. திண்டுக்கல் மாவட்டத்தில் இதுவரை 1,490 போலி குடும்ப அட்டைகள் கண்டறியப்பட்டு இரத்து செய்யப்பட்டுள்ளன. இதன் மூலமாக அரசுக்கு ரூ.17.88 இலட்சம் சேமிக்கப்பட்டுள்ளது. சந்தேகத்திற்கு உரிய 3,723 குடும்ப அட்டைகளுக்கு பொருட்கள் வழங்குவது தற்போது நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது. அத்தியாவசிய பொருட்கள் கடத்துபவர்கள், பதுக்கி வைப்பவர்கள் மீது குண்டர் தடுப்புச் சட்டத்தின்கீழ் கைது செய்யப்பட்டு தண்டனை வழங்கவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

**செம்மை நெல் சாகுபடி – உழவர் சந்தை**

திண்டுக்கல் மாவட்டத்தில் பழநி, திண்டுக்கல், சின்னாளப்பட்டி ஆகிய 3 இடங்களில் உழவர் சந்தைகள் செயல்பட்டு வருகின்றன. கடந்த 2007–08ஆம் நிதியாண்டில் ரூ.8 கோடியே 6 இலட்சத்து 31 ஆயிரம் மதிப்பில் விற்பனை நடந்திருக்கிறது. 8 இலட்சத்து 433 மெட்ரிக் டன் காய்கறிகள் 53,683 விவசாயிகளால் விற்பனை செய்யப்பட்டு 20,35,804 பொதுமக்கள் பயனடைந்திருக்கிறார்கள். மேலும் இம்மாவட்டத்தில் வத்தலக்குண்டு, கொடைக்கானல் ஆகிய 2 இடங்களில் புதிதாக உழவர் சந்தை அமைப்பதற்கு இடம் தேர்வு செய்யப்பட்டுள்ளது. செம்மை நெல் சாகுபடியைப் பொருத்த வரையில் கடந்த ஆண்டு 16,483 ஹெக்டேர் பரப்பளவில் 63 மெட்ரிக் டன் அரிசி உற்பத்தி செய்யப்பட்டுள்ளது. 2007–2008ஆம் ஆண்டில் ஒரு ஹெக்டேருக்கு 3,739 கிலோ அரிசி உற்பத்தி செய்யப்பட்டது. வரும் ஆண்டில் இந்த உற்பத்தி 10 சதவீதம் அதிகரித்து ஒரு ஹெக்டேருக்கு 5,500 கிலோ அரிசி உற்பத்தி செய்யத் திட்டமிடப்பட்டுள்ளது.

**பெரியார் நினைவு சமத்துவபுரம்**

திண்டுக்கல் மாவட்டத்தில் திண்டுக்கல், ஆத்தூர், ரெட்டியார் சத்திரம், வத்தலக்குண்டு, பழநி, ஒட்டன்சத்திரம் ஆகிய இடங்களில் பெரியார் நினைவு சமத்துவபுரங்கள் உள்ளன. தற்போது வேடசந்தூர் வட்டம் கல்வார்பட்டி கிராமத்தில் புதிதாக சமத்துவபுரம் அமைப்பதற்கு இடம் தேர்வு செய்யப்பட்டுள்ளது. இதற்காக அரசிடமிருந்து 1 கோடியே 29 இலட்சத்து 31 ஆயிரத்து 34 ரூபாய் முதற்கட்டமாக கிடைத்திருக்கிறது அந்தப் பணி விரைவில் துவங்க இருக்கிறது.

இதுபோன்று அரசு அறிவிக்கின்ற எந்தத் திட்டமாக இருந்தாலும் உடனுக்குடன் அதைச் செயல்படுத்துவதில் அதிக கவனம் செலுத்தப்பட்டிருக்கிறது. இந்த மாவட்டத்தைப் பொருத்தவரையில் ஆட்சியரை முகாம் ள அலுவலகத்திலோ அல்லது ஆட்சியர் அலுவலகத்திலோ சந்தித்து குறைகளைத் தெரிவிக்கலாம். அவ்வாறு பொதுமக்களிடமிருந்து வரப்பெறுகின்ற குறைகள் தொடர்பான மனுக்களை ஆராய்ந்து நிவர்த்தி செய்வதில் திண்டுக்கல் மாவட்ட ஆட்சியர் தனிக்கவனம் மேற்கொண்டு செயல்பட்டு வருகிறார் என்றால் அது மிகையாகாது. ❖

**அண்ணாவின் பொன்மொழி**

**சென்றிடுவீர் வென்றிடுவீர்**

தமிழ் உமது முரசாகட்டும்! பண்பாடு உமது கவசமாகட்டும்! அறிவு உமது படைக்கலனாகட்டும்! அறநெறி உமது வழித் துணையாகட்டும்! உறுதியுடன் செல்வீர்! ஊக்கமுடன் பணிபுரிவீர்! ஏற்றமிகு வெற்றியினை ஈட்டுவீர்! பாட்டு மொழியுடைய நமது தாயகம் வாழ–தரணிக்குத் துணை நின்றிடும் தகுதிபெறச் சென்றிடுவீர்! வென்றிடுவீர்!

# பெண்களுக்கான 100 நாட்கள் எழுத்தறிவுத் திட்டம் – கல்வியறிவு இல்லாத அனைத்துப் பெண்களுக்கும் எழுத்தறிவு பெறச் செய்ய முனைப்பான நடவடிக்கை

**நா**ட்டின் சமுதாய முன்னேற்றத்திற்கு பெண்கள் கல்வி பெறுவது அவசியமாகும். ஒரு பெண் கற்கும் கல்வியானது ஒரு குடும்பமே கற்கும் கல்வி ஆகும். பெண் கல்விக்கு இத்தனை முக்கியத்துவம் அளித்து அரசு பல்வேறு திட்டங்களை செயல்படுத்தி வருகிறது. படிப்பறிவு இல்லாதவர்களுக்கு கல்வியைக் கொடுக்க அறிவொளி வளர்கல்வித் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. ஆயினும் படிப்பறிவு இல்லாதவர்கள் அதிகம் உள்ளனர். இதில், பெரும்பாலானவர்கள் பெண்களே ஆவார்கள்.

படிப்பறிவு இல்லாத பெண்களுக்கு 100 நாட்களில் எழுத, படிக்க கற்றுக்கொடுக்கும் புதிய திட்டம் தமிழக அரசால் செயல்படுத்தப்பட்டுள்ளது. இந்த திட்டத்தினை 15.11.2008 அன்று திண்டுக்கல் மாவட்டத்தில், மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களால் தொடங்கி வைக்கப்பட்டது. படிப்பறிவு இல்லாத பெண்களைக் கண்டறிந்து அவர்களை



ஒருங்கிணைத்து பயிற்சி அளிக்கப்படும். 100 நாட்களின் முடிவில் அந்தப் பெண்களுக்கு முழுமையாக எழுத, படிக்கத் தெரிய வைப்பதே இதன் நோக்கமாகும்.

இந்தத் திட்டத்தில் முதல்கட்டமாக இம்மாவட்டத்தில் 14 ஊராட்சி ஒன்றியங்களிலும் தலா ஒரு கிராமங்கள் என கீழ்க்கண்ட கிராமங்களான செட்டிநாயக்கன்பட்டி, வக்கம்பட்டி, பூசாரிபட்டி, கருங்கல், காமனூர், வீலிநாயக்கன்பட்டி, லிங்கவாடி, தங்கச்சியம்மாபட்டி, கலிக்கநாயக்கன்பட்டி, புதுப்பட்டி, அஞ்சுகுழிப்பட்டி, மொல்லம்பட்டி, பாகாநத்தம், நாகையன்கோட்டை ஆகிய 14 கிராமங்கள் தேர்வு செய்யப்பட்டு இத்திட்டம் சிறப்பாகச் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

இந்தக் கிராமங்களில் உள்ள படிப்பறிவு இல்லாத பெண்கள் கணக்கெடுக்கப்பட்டது. அதன்படி 14 கிராமங்களிலும் மொத்தம் 4,345 பெண்கள் கல்வி அறிவு பெறாதவர்கள் என்பது தெரியவந்துள்ளது. இவர்களுக்கு கல்வி அறிவைப் போதிக்க அந்தந்த கிராமங்களில் உள்ள அரசு பள்ளிகளில் மையங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளது. இதில் பெண்களுக்கு செயல்வழி கற்றல்முறை மூலம் எழுத, படிக்க கற்றுக்கொடுக்கப்படும். இதற்காக செயல்வழி கற்றல் அட்டைகள் தயார் செய்யப்பட்டுள்ளது. தினமும் ஒரு கலைநிகழ்ச்சி நடத்தி சமூக விழிப்புணர்வு ஏற்படுத்தப்படும். எழுத்தறிவு என்று இல்லாமல் அவர்கள் மனதில் நினைப்பதை எழுதிப் படைப்புகளாக மாற்றுவது



மற்றும் சில தொழில் பயிற்சிகளும் அளிக்கப்படுகிறது. குழந்தைத் தொழிலாளர் ஒழிப்பின் முக்கியத்துவம், பெண் சிசுக்கொலை எதிர்ப்பு, வளர்இளம் பெண்களுக்கு ஏற்படும் பிரச்சினைகளுக்குத் தீர்வு காணுதல், உடல்நலம் பேணுதல், இரத்ததானம் செய்தலின் அவசியம், நோயற்ற வாழ்வு, சுற்றுப்புற சுகாதாரம், சாலை விதிகள் கடைபிடித்தல், தேச ஒற்றுமை, மழைநீர் சேகரிப்பு, மரம் வளர்ப்பு என ஒவ்வொரு நாளும் விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் வகுப்புகள் நடத்தப்படுகிறது. இந்த வகுப்புகள் மாலை 6.00 மணி முதல் இரவு 8.00 மணி வரை நடைபெறும்.

கல்வி கற்கும் மையத்துக்கு தொடக்கத்தில் ஆர்வமாக வரும் பெண்கள் சில நாட்கள் வருகை தந்து இடையில் நின்று விடுவார்கள். இவர்களைக் கண்டறிந்து மீண்டும் மையத்திற்கு அழைத்துவரும் பொறுப்பு ஊராட்சி தலைவர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது. பெண்களுக்கு 100 நாட்களின் முடிவில் நன்றாக எழுத, படிக்க கற்றுக் கொடுத்து இருக்கவேண்டும். இதனை அந்தந்த பள்ளித் தலைமை ஆசிரியர்கள், வட்டார வளர்ச்சி அலுவலர்கள் நேரடியாக ஆய்வு செய்வதோடு மாவட்ட ஆட்சியர் அவ்வப்போது நேரில் ஆய்வு செய்து இந்தப் பணியை துரிதப்படுத்தி வருகிறார்.

இந்தத் திட்டம் விரைவில் மாவட்டத்தின் பிற பகுதிகளிலும் செயல்படுத்தப்பட இருக்கிறது. இந்தத் திட்டம் முழுமையாக செயல்படுத்தப்பட்டால்

**"13,308 பெண்களுக்கு எழுத்தறிவு கற்றுத் தரப்பட்டுள்ளது. அதோடு அங்கு பணிபுரியும் பெண்களுக்கு சுகாதாரத் திட்டம் குறித்து மாலை நேரங்களில் கற்றுக் கொடுக்கும் முன்மாதிரி திட்டத்தையும் திண்டுக்கல் மாவட்டத்தில் அறிமுகம் செய்யப்பட்டுள்ளது"**

இம்மாவட்டத்தில் எழுத, படிக்கத் தெரியாத பெண்களே இல்லை என்ற நிலை உருவாகிவிடும். இதற்கான முயற்சியில் வளர்கல்வித் திட்ட பணியாளர்கள் தீவிரமாக இறங்கி உள்ளனர். அவர்கள் முயற்சி வெற்றி பெற நமது ஒத்துழைப்பும் அவசியமாகிறது. நமக்குத் தெரிந்து படிக்கத் தெரியாதவர்களுக்கு, நாம் கல்வியைக் கற்றுக் கொடுக்க வேண்டும். மேலும் இந்தத் திட்டம் செயல்படுத்தப்படும் கிராமங்களைச் சேர்ந்த பெண்கள் வாய்ப்பை சரியாகப் பயன்படுத்திக் கொள்ளவேண்டும். கல்வியைத் தேடி நாம் சென்ற காலம் மாறிவிட்டது. காலம் கடந்த பின்னரும் கல்வி நம்மைத் தேடி வருகிறது.

100 நாட்கள் எழுத்தறிவுத் திட்டம் வருவதற்கு முன்பாகவே இம்மாவட்டத்தில் மிகச் சிறப்பான முறையில் நடைபெற்று வரும் தேசிய ஊரக வேலை உறுதித் திட்டப் பணிகளை மாவட்ட ஆட்சித் தலைவர் ஆய்வு செய்யும்போது பணி புரியும் பெண்களில் சிலர் கையெழுத்து போடத்தெரியாமல் இருந்த நிலையை அறிந்த மாவட்ட ஆட்சியர் எடுத்த முழு முயற்சியின் காரணமாக தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தில் பணிபுரியும் பெண்களுக்கு எழுத்தறிவு கற்றுதரவேண்டும் என்ற உயர்ந்த நோக்கத்தோடு மதிய உணவு இடைவேளைகளில் வளர்கல்வித் திட்டப் பணியாளர்கள் மூலம் எழுத, படிக்க கற்றுக் கொடுக்க நடவடிக்கை எடுத்தார். அதன்படி

இதுபோன்ற சமுதாய நலனில் அக்கறை கொண்டு பல்வேறு சமுதாயத் திட்டங்களை திண்டுக்கல் மாவட்டத்தில் நடைமுறைப்படுத்துவதற்கு மாவட்ட ஆட்சித் தலைவர் பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறார் என்றால் அது மிகையாகாது.

**– டி.எஸ். சுப்பிரமணியம்,**
செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்
திண்டுக்கல்

★ ★ ★

## அண்ணாவின் பொன்மொழி

### உயர் தனிச் செம்மொழி



**ந**மது தாய் மொழியான தமிழ், உயர் தனிச் செம்மொழி. இது உலகில் வேறு எந்த இனத்துக்காவது தாய் மொழியாக இருந்திருந்தால் இத்தனை காலத்துக்குள் உலகப் பொது மொழியாகி இருக்கும்.

# தமிழகத்தில் ஆண்டுக்கு சராசரியாக 17 முதல் 20 இலட்சம் மெ.டன்கள் யூரியா, டி.ஏ.பி. பொட்டாஷ் மற்றும் காம்ப்ளக்ஸ் உரங்கள் பயன்படுத்தப்படுகின்றன

**கா**ரீப் பருவத்தில் ஏப்ரல் முதல் செப்டம்பர் வரையிலான உரத்தேவை பல்வேறு பயிர்களின் சாகுபடி பரப்பினை அடிப்படையாகக் கொண்டு யூரியா 4,35,000 மெ.டன், டி.ஏ.பி 2,00,000 மெ.டன், பொட்டாஷ் 2,10,000 மெ.டன், காம்ப்ளக்ஸ் 1,58,000 மெ.டன் எனக் கணக்கிடப் பட்டது. அதன் அடிப்படையில் காரீப் 2008 பருவத்தில் யூரியா 4,49,305 மெ.டன்னும், டி.ஏ.பி 1,86,255 மெ.டன்னும், பொட்டாஷ், 2,68,661 மெ.டன்னும், காம்ப்ளக்ஸ் 1,21,403 மெ.டன்னும் விநியோகம் செய்யப்பட்டுள்ளது. மேலும் கடந்த 3 ஆண்டுகளில் காரீப் பருவ சராசரி விநியோகம், யூரியா 3,50,542 மெ.டன்னும், டி.ஏ.பி 1,71,542 மெ.டன்னும் பொட்டாஷ் 1,83,198 மெ.டன்னும், காம்ப்ளக்ஸ் 1,84,233 மெ.டன்னும் ஆகும். எனவே பல்வேறு உரங்களின் மொத்த விநியோகத்தை ஒப்பிடுகையில் காரீப் 2008 பருவத்தில் அதிக அளவில் உரம் தமிழகத்தில் விநியோகம் செய்யப்பட்டுள்ளது.



மேலும் ராபி பருவத்தில், அக்டோபர் மற்றும் நவம்பர் மாதத்திற்கு யூரியா 2,53,370 மெ.டன்னும், டி.ஏ.பி 1,05,460 மெ.டன்னும் பொட்டாஷ் 1,13,470 மெ. டன்னும், காம்ப்ளக்ஸ் 60,930 மெ.டன்னும் எனக் கணக்கிடப்பட்டு 2,84,240 மெ.டன் யூரியாவும், 1,18,016 மெ.டன் டி.ஏ.பியும் 1,31,147 மெ.டன் பொட்டாஷ் உரமும், 74,251 மெ.டன் காம்ப்ளக்ஸ் உரமும் விநியோகம் செய்யப்பட்டுள்ளது.

டிசம்பர் மாதத்திற்கு யூரியா 1,09,350 மெ.டன், டி.ஏ.பி 29,070 மெ.டன்னும், பொட்டாஷ் 40,180 மெ.டன், காம்ப்ளக்ஸ் 30,880 மெ.டன் எனக் கணக்கிடப்பட்டுள்ளது. 8.12.2008 வரை யூரியா 47,141 மெ.டன்னும், பொட்டாஷ் 13,466 மெ.டன்னும், காம்ப்ளக்ஸ் 11,360 மெ.டன்னும் விநியோகம் செய்யப்பட்டுள்ளது. தற்சமயம் கையிருப்பாக யூரியா 45,200 மெ.டன்னும், டான்பெட் நிறுவனத்தில் டி.ஏ.பி 48,989 மெ.டன்னும் பொட்டாஷ் 99,700 மெ.டன்னும், காம்ப்ளக்ஸ் 381 மெ.டன்னும் நிறுவனங்களில் உள்ளது. மேலும் தமிழகத்திலுள்ள கூட்டுறவுச் சங்கங்கள் மற்றும் தனியார் உரக் கடைகளில் யூரியா 61,141 மெ.டன்னும் பொட்டாஷ் 29,481 மெ.டன்னும் காம்ப்ளக்ஸ் 11,412 மெ.டன்னும் இருப்பு உள்ளது.

எனவே தமிழகத்தில் பல்வேறு வகையான உரங்கள் தேவையான அளவுக்கு இருப்பு உள்ளது. எனினும் தனியார் உரநிலையங்களில் காம்ப்ளக்ஸ் உரங்கள் அரசு நிர்ணயம் செய்த விலையைவிடக் கூடுதலான விலைக்கு விற்பனை செய்வதாக புகார்கள் வரப்பெற்றவுடன் வேளாண்மை ஆணையர் அலுவலகத்திலிருந்து 29.11.2008 அன்று எல்லா மாவட்ட வேளாண்மை இணை இயக்குநர்களுக்கும் கடிதம் அனுப்பி அரசு நிர்ணயம் செய்த விலையைவிட அதிகமான விலையில் விற்பனை செய்யும் உர விற்பனையாளர்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்க வலியுறுத்தப்பட்டுள்ளது. தற்பொழுது ஸ்பிக் நிறுவனம் உற்பத்தி செய்து விநியோகம் செய்துள்ள 20:20:20 காம்ப்ளக்ஸ் உரங்கள் அரசு நிர்ணயம் செய்த விலையைவிடக் கூடுதலான விலைக்கு விற்பனை செய்வதாக தெரியவந்தால் வேளாண்மைத் துறையினரால் உரிமம் வழங்கப்பட்ட உர விற்பனை நிலையங்களின் உரிமங்கள் இரத்து செய்யப்படுவதுடன், சட்டபூர்வ நடவடிக்கையும் மேற்கொள்ளப்படும் எனத் தெரிவிக்கப் படுகிறது.

❖ ❖ ❖

தமிழ்நாடு ஆவணக் காப்பகம்
228767
சென்னை-600 008
நூலகம்





தமிழரசு

R.N.I. No.21446/70-Regn.No.TN/AR
TN/PMC (CCR) WPP-318/08

